www.padippakam.com

நிறப்பிரிகை

திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் தமிழர்கள்

பெரியாரியம்

பெரியாரியம்-தத்துவத்தை அடையாளப்படுத்துதலும், நடைபெறவேண்டிய விவாதமும்

வேதாரண்யம் சாதி மோதல் பற்றிய களஆய்வு

பன்னாட்டு நிறுவனங்களும், நாம் புரிந்துகொண்டிருக்கும் மார்க்சியமும்

மாற்றுச் சிந்தனை, மாற்று இதழ்கள், மாற்றுக் கல்வி

மாற்றுக் கலாச்சாரம் - விவாதத்துக்காகச் சில குறிப்புகள்

தகவல் தொடர்பு - கூட்டுக் கட்டுரை

பெண்ணியம் - இரண்டு எதிர்வினைகள்

பெரியார், பூலே வழியில் பெண்ணுரிமை

அறிவியலும், அதிகாரமும்

அறிவியலும், தொன்மமும்

அரசியல் கண்காணிப்பும், கண்காணிப்பின் அரசியலும்

பெரியார் பார்வையில் மொழி

கடிதங்கள், கூட்டுவிவாத அறிவிப்பு, பதிவுகள்

ஏப்ரல் 6 1993

படிப்பகம்

www.padippakam.com

சுமார் நான்கைந்து ஆண்டுகளுக்குமுன் குமுதம் இதழில் ஆர். எம். வீரப்பன் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். திராவிட இயக்கத்தில் வந்த எம். ஜி. ஆர். மூகாம்பிகை கோயிலுக்குப்போவது பற்றி அவர் பதில்சொல்லியிருந்தார். "திராவிட இயக்கத்தை நாத்திகப் பாரம்பரியம் என்று ஏன் பார்க்கிறீர்கள், இந்தப் பாரம்பரியத்தில் பெரியார் மட்டும்தான் நாத்திகர், அவருக்கு முன்னும்பின்னும் யாரும் கடவுள் மறுப்புப் பேசியதில்லையே" என்று கூறியிருந்தார். அவரது வாதத்தில் நியாயம் இருக்கிறது. நாத்திகம் மட்டுமல்ல பல்வேறு அம்சங்களில் பெரியார் திராவிடப் பாரம்பரியத்தில் தனித்து நிற்கிறார். சாதி ஒழிப்பு, தமிழ் மொழி, பண்பாடு, பெண் விடுதலை, பார்ப்பன எதிர்ப்பு எனப் பல்வேறு அம்சங்களில் பெரியாரின் கருத்துக்களை அவரது இயக்கத்தின் நேரடி வழித்தோன்றல்களை மட்டுமல்ல, ஒரு சரியான திராவிட இயக்கத்தைக் கூட்டப்போவதாகச் சொல்கிற பலரும் இன்று ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதுதான் உண்மை. பெரியாரின் கருத்துக்கள் மட்டுமின்றி அவரது அரசியற் செயற்பாடுகள் பலவும் எதிர்க்கலாச்சார (Counter Culture) நடவடிக்கைகளுக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாக அமைய முடியும். இந்த வகையில் பெரியார் சிந்தனைகள் மற்றும் செயற்பாடுகள் மீது இந்த இதழ் கவனம் குவிக்கிறது சுமார் 50 ஆண்டுகால பெரியாரின் நடவடிக்கைகளில் பல முரண்கள் இருப்பதுபோல தோன்றியபோதிலும் சாதி ஒழிப்பு என்கிற அவரது பிரதான குறிக்கோளில் வியக்கத் தக்கத் தொடர்ச்சி இருந்தது என்பதை ராஜன்குறை தொகுத்துக் காட்டுகிறார். பெரியாரியத்தின் பல்வேறு பங்களிப்புகளை ஏற்கும் கோ. கேசவனது கட்டுரையோ பெரியாரியத்தின் மையமாக, "நிலவுகிற அரசுக் கட்டமைப்பின்கீழ் தமிழ்ப்பிர தேசத்தின் திராவிடர் முதலாளிகளின் நலன்களுக்காக வடவர் பார்ப்பன முதலாளி களோடு மோதல் என்பதை" அடையாளப் படுத்துத்துகிறது. சாதிப்பிரச்சனை இனப்பிரச்சனை ஆகியவை பற்றிய விவாதங்களும், செயற்பாடுகளும் முனைப்பு பெற்றிருக்கும் இன்றைய சூழலில் நாம் தொகுத்து முன்னிலைப்படுத்தும் பெரியார் எப்படியிருக்கவேண்டும் என்பது ஒரு முக்கியமான பிரச்சனை. அதற்கும் இந்த விவாதங்கள் உதவக்கூடும் இதன் தொடர்ச்சியாகவும் அ. மாவின் "தமிழர்கள் யார்" என்பது பற்றிய கட்டுரையை வாசிக்கலாம். தமிழக வரலாறு பற்றி நிறப்பிரிகை தொடர்ந்து காட்டிவரும் கவனிப்பின் பகுதியாகவும் அ. மா. வின் கட்டுரை அமைகிறது ஓரிரு ஆண்டுகளுக்குமுன் "இனப்பிரச்சனை" குறித்து நிகழ்த்தப்பட்ட சொல்லாடல் களில் மார்க்சியம் எழுப்பிய கேள்விகளுக்கு இருந்த இடம் படிப்படியாக குறைந்து வருவதும், அறிவியல் பூர்வமான அணுகுமுறை கைவிடப்பட்டு வரலாறு தன்னை "கேலிக்கூத்தாக" மறுபடியும் அரங்கேற்றிக் கொள்ள வாய்ப்புகள் அதிகம் உண்டாகி இருப்பதையும் கவனிக்கும்போது தேசிய இனப்பிரச்சனை குறித்து நிறப்பிரிகை முதல் இதழ் தொடங்கி எழுப்பிவரும் கேள்விகளும், பிரச்சனைப்பாடுகளும் எவ்வளவு முக்கியவமானவை என்பது புரியலாம்.

மாற்றுக் கலாச்சாரம், மாற்றுக்கல்வி போன்ற அம்சங்களில் நாம் விவாதித்துவருவதன் தொடர்ச்சியாக; மாற்றுக்கல்வி தொடர்பான பல்வேறு இதழிய நடவடிக்கைகள் வெளிநாடுகளில் எப்படி இருந்தன என்பது பற்றிய கட்டுரையொன்றும் அதனடிப் படையில் இன்று தமிழ்ச் சூழலில் பேசத் தொடங்கியிருக்கும் மாற்றுக்கலாச்சாரம் பற்றிய குறிப்புகளும் இங்கு வெளியிடப்படுகின்றன.

குடிதாங்கியிலுள்ள சாதிப்பிரச்சனைப் பற்றி சென்ற இதழில் வெளியானகள ஆய்வைத் தொடர்ந்து இந்த இதழில் வேதாரண்யத்தில் நடைபெற்ற சாதிக் கலவரம் குறித்த கள ஆய்வொன்று வெளியிடப்படுகிறது. தலித் மக்களுக்கு எதிரான சாதிக் கொடுமை களுக்கு நேரடியாகக் காரணமாய் இருப்பவர்கள் அவ்வப்பகுதிகளில் ஆதிக்க சாதியாய் இருக்கும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர். ஓரிடத்தில் இது வன்னியராக இருக்கலாம் இன்னொரு இடத்தில் இது தேவராகவோ, நாயுடுவாகவோ, கவுண்டராகவோ இருக்கலாம். சென்ற இதழிலும், இந்த இதழிலும் வெளிவந்துள்ள களஆய்வுகள்

படிப்பகம்

www.padippakam.com

திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் "தமிழர்கள்"; கவனத்தில் கொள்ளவேண்டிய சில வரலாற்று உண்மைகள்

அ. மா.

1. "வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளும் சரி, முக்கிய நாயகர்களும் சரி இரண்டு முறை அரங் கேறுகின்றனர் என்றார் ஹெகல். இத்துடன் அவர் ஒன்றைச் சேர்த்துச் சொல்ல மறந்து விட்டார். முதல் முறை அவலமாகவும் இரண் டாம் முறை கேலிக்கூத்தாகவும் இவ் அரங் கேற்றங்கள் நிகழ்கின்றன என்பதுதான் அது" என்றார் **கார்ல் மார்க்ஸ்** (லூயி போனபார்ட்டின் பதினெட்டாவது புரூமேர்). "இன்றைய புரட்சி என்பது இறந்த காலத்திலிருந்து அல்ல, எதிர் காலத்திலிருந்துதான் தனது முழக்கங்களைப் பெறவேண்டி இருக்கும். பழையதோடு தொடர் புடைய மூடநம்பிக்கைகளனைத்தையும் துடைத் தெறிந்து விட்டுதான் அது தன் பயணத்தைத் தொடங்க வேண்டியிருக்கும். தங்களது சொந்த உள்ளடக்கங்களின் பிற்போக்குத் தன்மையை மறந்து போவதற்காகவே பழைய புரட்சிகள் பழைய வரலாற்று நிகழ்வுகளை நினைவூட்டிக் கொண்டன. தனது புரட்சிகரமான உள்ளடக் கத்தைப்பெற வேண்டுமெனில் இன்றைய புரட்சி இந்தப் பழைய அடையாளங்களைப் புதைத்துத் தான் ஆக வேண்டும்" என்கிற பொருள்பட்வும் தனது எச்சரிக்கையை வலிமையாக முன் வைப் பார் மார்க்ஸ் (அதே கட்டுரை) பாட்டாளி வர்க் கப் புரட்சிக்காகவும் தமிழின உணர்வை முன்னி றுத்தியும் செயல்படும் இயக்கங்களின் நடை முறைகளைக் கூர்ந்து கவனிக்கும் போது அவர் கள் யாரும் மார்க்சின் இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்துவதாகத்தெரியவில்லை. பொருட் படுத்தாததோடு இந்த எச்சரிக்கையை நினை வூட்டுபவர்களைக் கண்டு எரிச்சலும் ஆத்திரமும் அடைகின்றனர். புரட்சிக்குப் பிந்திய சமூகங் களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், தேசிய இன இயக்கங்கள் பலவும், தேசிய விடுதலைக்குப் பிந்திய அரசுகள் பலவும் பாசிசமாய் வடிவெடுத் துள்ள அவலங்கள்—இவை எவற்றிலிருந்தும் எந்தப் பாடமும் கற்றுக் கொள்ளத் தேவையில் லை, அதிகாரத்தைக் கைப்பற்றினால் போதும் என்கிற நோக்கோடு இயக்கங்கள் பலவும் செயல்படுவதை நாம் காணமுடிகிறது.

2. (அ): தமிழ் இன விழிப்புணர்வில் ஏற்பட் டுள்ள புத்தெழுச்சியை வரவேற்று நாம் வைத்த விமரிசனங்களில் ஒன்று "தமிழர்கள்" என்றால் யார் என்கிற வரையறை நமக்குத் தேவை என் பது. தமிழர்கள் என்னும் போது ஒரு குறிப்பிட்ட புவியியற் பகுதியைச் சேர்ந்த மக்கட் பிரிவினர் என்று பொருள் கொள்கிறோமா? அப்படியா னால் அந்த எல்லை எது? அது வட வேங்கடம் முதல் குமரிவரையிலான-கேரளத்தைத் தவிர்த்த இன்றைய தமிழ் மாநில எல்லையைக் குறிக்கிற தா? இந்த எல்லைக்குட்பட்ட அனைவரையும் தமிழக மக்கள் அல்லது தமிழர் என்கிறோமா? இவர்களில் 63சதத்தினரே தமிழைத்தாய்மொழி யாகக்கெண்டோர் எனும்போது இதர 37 சதத் தினரையும் 'தமிழர்' என்கிற வரையறையில் உள்ளடக்குகிறோமா? ஆரியர் — திராவிடர் என்கிற கருத்தியல்களின் அடிப்படையில் பார்ப் பனரை ஒதுக்குகிறோமா?

2 ஆ: இந்தக் கேள்விகளுக்கு இப்போது என்ன முக்கியத்துவம்? இந்தப் பொதுவுடைமையாளர் எப்போதுமே இப்படித்தான். ஒன்று தேசிய இனப் பிரச்சினையையே மறுப்பார்கள் அல்லது அதனை ஏற்றுக்கொண்டு இப்படிக்கேள்விகளை உருவாக்கிக் குட்டை குழப்புவார்கள்; பாசிசபூதம் காட்டுவார்கள் என்கிற முணுமுணுப்புகள் காதில் விழுகின்றன. இவர்கள் நாம் சற்று முன் இடை யிட்டுச் சொன்ன எச்சரிக்கைகள் தவிர இன் னொன்றையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது முக்கியம். இதுவரை மேற்குறித்த கேள்விகள் இவ்வாறு வெளிப்படையாக முன் வைக்கப் படாவிட்டாலும் கூட இங்கே திராவி டம்/தமிழ்த் தேசியம், பேசிய/பேசுகிற பலரும் வெளிப்படையாகவும் உள்ளுறையாகவும் சில வரையறைகளை மனதிற் கொண்டே வந்திருக் கின்றனர். சில எடுத்துக்காட்டுக்கள்:

2 (ஆ) (i): தமிழ்/திராவிட மீட்பு வாதங்களின் **தொடக்க கால முன்னோடிகளில்** ஒருவராக மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையைக் குறிப் பிடுவர். அவர் தனது இறுதிக்காலத்தில் எழுத இயலாமற் போன குறிப்புகளைத் தான் எழுது வதாக முன்னுரைத்து அவரது முக்கிய சீடரான **வெ. ப. சுப்பிரமணிய முதலியார்** எழுதியுள்ள "இராமாயண உள்ளுறையும் ஆரிய-திராவிடப் போராட்டமும்" என்கிற நூலில் குறிப்பிடப்படு கிற கீழ்க் கண்ட வரையறையைத் தொடக்க கால முன்னோடிகளின் வரையறையாகவே கொள்ளலாம். முதலியார் குறிப்பிடுவார்:

"இந்து தேசத்தவர்களை, ஹிந்துக்கள், முகமதி யர், கிறிஸ்தவரென்று மதம் பிரிப்பது போல தென்னிந்தியர்களைச் சாதிபற்றி ஆரியர் தமிழர்

படிப்பகம்

www.padippakam.com

என்று பாகுபாடு செய்யலாம். அப்படிப்பாகுபாடு செய்வதில் பெரும்பான்மை காரணமாகத் தமிழர் என்ற பெயர்ப் பொருளில் தெலுங்கர், கன்னடர்,மலையாளிகள் என்ற பெயர்ப் பொருள்களும் அடங்கும். ஹிந்துக்களும், மகமதியர்களும் வாழும் சென்னப் பட்டணத்திலே ஹிந்துக்கள் மகமதியர் என்று கூறவேண்டிய சமயங்களில் ''தமிழான்'' ''துலுக்கான்'' என்று சாதாரண சனங்கள் சொல்வதுண்டு. இந்த வெகுஜன வழக்குச் சொற்றொடரில் 'தமிழான்' என்பது 'தெலுங்கானை' உள்ளிட்டது கவனிக்கத் தக்கது''.

தொடக்க கால மீட்பு வாதிகள் ஆரியரல்லாத அதாவது பார்ப்பனரல்லாத மக்கட் பிரிவினரை தமிழர்/திராவிடர் எனக் குறிப்பிட்டனர். இதில் தெலுங்கர்/கன்னடர்/மலையாளிகள் உள்ளடங்குகின்றனர். வெ.ப.சு. முதலியார் ''துலுக்கானை'' விலக்குகிறார். இவர் வரையறையில் தாழ்த்தப்பட்டவர் உள்ளடக்கப் படுகின்றனரா? தெரியவில்லை. இவர் சொல்லுகிற வெகுஜன வரையறையை ஏற்றுக்கொண்டால் குடியானவர்/பிராமணர்/துலுக்கர்/பள்ளுபறையர் என்றாகிறது. இதில் 'குடியானவர்கள்' எனப்படும் வேளாண் மக்களையே முதலியார் தமிழானாக ஏற்றுக் கொள்வது புலப்படுகிறது. தவிரவும் மேற்குறிப்பிட்ட அதே நூலில்பிறிதோரிடத்தில், ''ஆரியரல்லாராயினும் இந்து மதத்தராய் **மாட்டு மாமிசம் தின்னாராயுள்ள** ஜாதி ஜனங்களோடிருந்து இன்னும் பொம்பாய் போன்ற வடதேசத்துப் பிராமணர் போசனஞ் செய்கின்றனர். (அழுத்தம் நம்முடையது) என்று குறிப்பிடுவதிலிருந்து இவர் மாட்டு மாமிசம் தின்பாராயுள்ள ஜாதி ஜனங்களை வரையறையிலிருந்து விலக்குவது குறித்து கவலைப்படாதவர் என்பது புரிகிறது.

2 ஆ (ii): **நீதிக் கட்சி:** தெலுங்கு/கன்னட/தமிழ் வேளாளர்கள்,மலையாள நாயா முதலானோர் முன்னின்று தொடங்கிய நீதிக் கட்சியின் 'திராவிட' வரையறை முதலியாரது வரையறையிலிருந்து பெரிதும் வேறுபட்டதில்லையாயினும் போகப் போக இக்கட்சி தேர்தல் சார்ந்த கட்சியாய் மாறிய போது, பார்ப்பனரல்லாதவரைத் திராவிடர் என வரையறுத்து வந்த இக்கட்சி பார்ப்பனரையும் உறுப்பினராக்கிக் கொள்ளத் தீர்மானித்தது. '' நாங்கள் பார்ப்பனீயத்தைத் தான் ஒழிக்க விரும்புகிறோமேயொழிய பார்ப்பனரை அல்ல'' என்கிற குரலை முதன் முதலாக ஒலித்தார் குஞ்சிதம் குருசாமி. கடைசிவரைத் தேர்தலைச் சாராது அரசியல் நடத்திய பெரியார் சமரசமல்லாமல் பார்ப்பனரை விலக்கி வந்ததையும் தேர்தல் பாதையைத் தேர்ந்தெடுத்த கட்சிகள் பார்ப்பனரையும்/பார்ப்பனீயத்தையும் பல்வேறு மட்டங்களில் உள்ளடக்க நேர்ந்ததும் கவனிக்கத்தக்கது.

2 ஆ (iii): பெரியார்: அரசியற் சூழலுக்கு ஏற்ப கற்பிதம் செய்யப்படுகிற தேசியத்தின் வரையறையும் மாறும் என்பதற்கு பெரியாரின் கருத்துகளும் செயல்பாடுகளும் சிறந்த சான்று. 1950-க்கு முன்பு வரை 'திராவிடர்' என்ற கருத்தாக்கத்திற்கு அழுத்தம் தந்து வந்த பெரியார் அதன் மூலம் ஆரியர் அதாவது பார்ப்பனர் தவிர்த்த ஏனைய மக்களை—முஸ்லிம்—கிறிஸ்தவர், சிறுபான்மை மொழியினரை உள்ளடக்கி—பொருள் கொண்டு வந்தார். ஆனால் 1950 க்குப் பின்பு 'சுதந்திரத் தமிழ் நாடு' என்ற முழக்கத்தை முன் வைத்து இந்திய தேசியப் படத்தை எதிர்த்தார். தமிழக எல்லைக்குட்பட்ட 'சுதந்திர' அரசே அவர் கோரியது. பார்ப்பனர் உள்ளிட்ட மாநில எல்லைக்குட்பட்ட மக்கள் அனைவருக்குமான அரசு. வடவர் ஆதிக்கத்திலிருந்து விடுபடுதலே பிரதானம். ஆனால் அது திராவிடக் கூட்டாட்சியாக இருக்கக் கூடாது. அப்போது தமிழர் சிறுபான்மையாகி விடலாம் என்கிற எச்சரிக்கையை அவர் முன் வைத்தார்.

''நம் நாட்டு ஆதிக்கம் நமக்கு வரவேண்டும் என்று கேட்கிறோம் என்றால், ஆட்சி நம் கைக்கு வரவேண்டும் என்கிற அவசியம் கூட இல்லை. நம் நாடு பிரிந்து அதிகாரம் பார்ப்பான் கையில் இருந்தால் கூடப் பரவாயில்லை. டெல்லி ஆதிககம் போச்சு என்று தெரிந்தால் அப்புறம் பார்ப்பனர்களெல்லாம் நாம் சொன்னபடி கேட்க ஆரம்பித்து விடுவார்கள்.''

''முன்பு திராவிடநாடு கேட்டார். இப்போது அதை விட்டுவிட்டார். தமிழ்நாடு கேட்கிறார் என்று சிலர் சொல்லுவார்கள். இது பெரும்பாலும் குறும்புக்காகக் கேட்கப்படுகிற கேள்வியாகும். தமிழ்நாடு என்பதும் திராவிட நாடு தான். முன்பு தெலுங்கன், மலையாளி, கன்னடன் எல்லாம் நம்முடன் சேர்ந்து இருந்தான். அவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படி நாம் திராவிடநாடு என்று சொன்னோம். இப்போது அவனவன் பிரிந்து அவனவன் தனித் தனி நாடு பெற்று இருக்கிறான். 'தமிழ்நாடு' என்று சொல்லும்படியாக இப்போது இருக்கிறது. ஆகவே தமிழ்நாடு என்று சொல்கிறோம்''.

''இப்போது திராவிட நாடுதான், மற்ற நாடுகளுடன் சேர்ந்ததுதான் வேண்டும் என்ற உணர்ச்சி உண்டா? ஏற்பட்டிருக்கிறதா? என்பது ஒரு புறம் இருக்கட்டும். அப்படியே திராவிட நாடு பிரிந்தால் நமக்கு என்ன லாபம்? இன்று எப்படி தமிழ்நாடு பார்லிபெண்டில் மற்ற 14 நாட்டுக்கும் அடிமையாக இருக்கிறதோ அதே போல நாளை மற்ற மூன்று நாடுகளுக்கும் அடிமையாகத்தான் இருக்கவேண்டிவரும்.''

இவை பெரியார் மொழிகள். தவிரவும் திராவிட இயக்கத்தின் மூலம், தான் பார்ப்பனரைத் தவிர்த்த பிற்பட்ட இனத்தவரின் நலனைத்

படிப்பகம்

www.padippakam.com

தான் மனத்தில் கொண்டுள்ளதாகவும் ஆதித் திராவிடரை விலக்கிப் பொருள் தருமாறும் பெரியார் பேசியுள்ளதைக் கோ. கேசவன் சுட்டிக் காட்டியுள்ளார்.

2. ஆ. (iv) ம. பொ. சிவஞானம்: காங்கிரசி லிருந்து ராசாசி விலகியிருந்த 1944-'45-ல் அவரது சீடரான ம.பொ.சி. யால் 'தமிழரசுக் கழகம்' தோற்றுவிக்கப்பட்டது. இந்திய யூனிய னுக்குள் தமிழ்க் குடியரசு என்பது நோக்கம். ''திராவிடர் கழகம் வர்ணத் தத்துவத்தை அடிப் படையாகக் கொண்டு இயங்குகிறது. தமிழரசுக் கழகம் தமிழ் மக்களின் தேசிய உணர்ச்சியை ஆதாரமாகக் கொண்டு இயங்குகிறது'' என்பன ம.பொ.சி.யின் வாசகங்கள். பார்ப்பனரை உள் ளடக்கி ஆனால் தெலுங்கர், கன்னடர், மலை யாளிகள் போன்ற சிறுபான்மையினரை விலக்கி இவ்வரையறை முன் வைக்கப்படுவது குறிப் பிடத்தக்கது. காங்கிரஸ் ஆதரவு; தி.க. எதிர்ப்பு ராசாசி ஆதரவு; காமராசர் எதிர்ப்பு ஆகிய ம. பொ.சி.யின் அரசியலோடு இவ் வரையறை இணைத்து நோக்கத் தக்கது.

2. ஆ. (v) தி.மு.க. (சி. என். அண்ணாத்துரை): திராவிட என்கிற புவியியற் எல்லைப் பரப்பின் அடிப்படையில் பார்ப்பனர் சிறுபான்மை மொழி யினர் எல்லோரையும் உள்ளடக்கி திராவிட முன்னேற்றக்கழகத்தின் வரையறை அமைந்தது ''திராவிட உள்ளுணர்வுள்ள அனைவரும், அம் மண்ணுக்கு நன்றியுள்ள யாரும்'' என வரை யறை செய்யப்பட்டது.

2. ஆ (vi) குணா: தாழ்த்தப்பட்டவர்களின் தலைமை என்பதை வற்புறுத்தும் வகையில் மற்றவர்களிடமிருந்து வேறுபடும் குணா, தமிழ் நாட்டிலுள்ள சிறு பான்மை மொழியினரை நாயுடு, ரெட்டி போன்ற தெலுங்கு வேளாளச் சாதிகளை மட்டுமின்றி லம்பாடிகள், ஒட்டர்கள், சக்கிலியர் போன்ற அடி நிலையிலுள்ள உழைக் கும் வர்க்கங்களையும் தேசிய இன வரையறை யிலிருந்து விலக்க வேண்டும் என்கிறார். தமிழ் நாட்டிலுள்ள இவர்களுக்கு நிலமில்லாத அடிப் படையில் 'பட்டா' அளிப்பது, இட ஒதுக்கீடு அளிப்பது போன்ற வற்றையும் இவர் எதிர்க் கிறார்.

2. ஆ. (vii): ஈழத் தேசிய இயக்கங்கள்: ஈழத் தேசிய இயக்கங்கள் வேளாளர், கரையாளர் போன்ற உயர்சாதி சைவ வேளாள மரபினா லேயே தலைமை தாங்கப் படுகின்றன என்கிற விமர்சனத்தையும், கே. டானியல் போன்ற தாழ்த் தப்பட்ட மக்களின் தலைவர்கள் இறுதிவரை தேசிய இயக்க நீரோட்டத்தில் கலந்து கொள்வ தில் தயக்கம் காட்டி வந்தமையையும் அனை வரும் அறிவர். தொடக்ககால ஈழத்தேசிய இயக் கங்கள் குறித்து கா. சிவத்தம்பி அவர்களின் கீழ்க்கண்ட ஆய்வுரைகள் கவனிக்கத் தக்கன.

''தமிழ் என்ற சொல் அம்மொழியையும் அத னைப் பயன்படுத்துபவரையும் குறிக்கிறது. தென்னிந்தியாவில் இச் சொல்லின் பயன்பாடு முஸ்லிம்களையும் குறிக்கிறது (பெரும்பாலும் அவர்கள் தமிழ் முஸ்லிம்கள் எனக் குறிக்கப் படுவதுண்டு). ஆனால் இலங்கையில் முஸ்லிம் கள் வேறான தனித்துவத்தைக் கொண்டுள்ள னர். எனவே 'சமஸ்டிக் கட்சி', ''தமிழ்பேசும் மக்கள்'' என்ற சொற்றொடரைப் பிரபலப் படுத்த முயற்சி செய்தது. ஆனால் அது மிகச் சிறிய அளவே வெற்றி பெற்றது. இலங்கையின் சமய கலாச்சாரப் பாரம்பரியங்களும் வரலாற்று நிலைமைகளும் முஸ்லிம்களுக்கு ஒரு தனியான அரசியல் தனித்துவத்தை அளித்தன. எனவே இங்கு நாம் தமிழர் என்ற சொல்லின் மூலம் தமிழர்களை மட்டுமே கருத வேண்டியுள்ளது.''

''யாழ்ப்பாணத்தில் எல்லாம் தமிழ் என்பது அவ் வளவு சரியானதல்ல. **ஆதிக்கமுடைய வெள் ளாளச் சாதியினர்** (அவர்களுடைய குறித்த சில வர்க்கப் பண்புகளோடு) **தமது தேவைகளையும் கோரிக்கைகளையும் தமிழர்களுடைய கொள்கை களாக வெளிப்படுத்தினர் என்பதையே காலம் மறுபடியும் நிரூபித்துள்ளது.** காராள சிங்கம் இதனை 'வெள்ளாள மேலாதிக்கம்' என்று குறிப்பிடுகிறார்'' (அழுத்தம் நம்முடையது)

''தமிழர் விடுதலைக் கூட்டணி தோன்றும் வரையிலான காலகட்டப் பகுதி வரை இருந்த தமிழ்த் தலைவர்களின் சமூகப் பின்னணியை நோக்கும்போது அவர்கள் அனைவருமே வெள் ளாள சாதியினர் என்பது தெரிய வரும். அத் துடன் அவர்களில் சிலர் சாதிப் பிரச்சினையில் இரட்டைவேடமிடுபவராகவுமிருந்தனர். இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக இருந்தவர் சேர். பொன்னம்பலம், இராமனாதன். அவர் வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதை, அது தாழ்ந்த சாதியினருக்கும் வாக்குரிமை வழங்கிவிடும் என்பதற்காக எதிர்த்தார். யாழ்ப் பாணப் பாடசாலைகளில் சகலசாதி மாணவர் களும் ஒன்றாக ஆசனம் பெறுவதையும் ஒன்றா கப் போசனம் செய்வதையும் கூட அவர் எதிர்த் தார்'' (அழுத்தம் நம்முடையது).

3. ஒரு இடையீடு: நமது சூழலிலிருந்து சில எடுத்துக் காட்டுக்கள் இங்கே தரப்பட்டுள் ளன. உலகில் வேறு பல எடுத்துக்காட்டுக் களையும் சொல்லமுடியும். **'தேசம் என்பது ஒரு கற்பிதம் செய்யப்பட்ட சமூகம்'** என்கிற கருத்திற்கு இவை அரண் சேர்க்கின்றன. இக் கருத்தாக்கம அ. மாவின் 'மார்க்சியம், தேசியம், கற்றுக்கொள்ள வேண்டிய சில படிப்பினைகள்' (நிறப்பிரிகை-1) என்கிற கட்டுரையில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. மேலும் சில செய்தி கள்:

3. அ: ஒருதேசிய அரசு நிறுவப்படுதலுக்குத் தேவையான **'எதார்த்தப்படைப்பாக்கம்'** குறித்து

படிப்பகம்

www.padippakam.com

டொனால்டு ஹார்னே குடுப்பிடுவது சிந்தனைக் குரியது. ஒரு புதிய தேசிய அரசு கொண்டுள் ளதாகப் பல பண்புகள் சொல்லப்படும். அவற் றில் சிலவே நிலவும். புதிய தேசிய அரசு உரு வாக்கத்திற்கு முன்பாக நிகழும் நிகழ்வுகளில் மிகப்பெரிய கற்பனை உருவாக்க நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றிலி ருந்து புதிய தேசம் பிறக்கிறது. இத்தகைய நடைமுறையினூடாகச் செயல்படுகிற சமூகச் சக்திகளின் சமநிலையைப் பொறுத்து தேசியக் கருத்தியல் வேறுபடுகிறது. தேசியப் பண்புகள் என்பன இந்தப் பின்னணியிலேயே வரையறுக் கப்படுகின்றன. ஒரு தேசிய அரசைப் படைத்து ஆளுகிற ஆற்றல் படைத்தவர்கள் தேசியப் பண்பை வரையறுப்பதில் மிகுந்த செல்வாக்கு வகிப்பவர்களாக இருக்கிறார்கள். மேற்குறித்த 'எதாத்த உருவாக்கம்' என்பது உலகப் பொருளாதார / அரசியல் நடவடிக்கைகளோடு இணைந்து வருகிறது.

எதார்த்தப் படைப்பாக்கம் என்பது புதிய தேசத் தின் தொடக்கத்தில் ஒரே ஒருமுறை உருவாகிற ஒன்றல்ல. மாறாக தேசிய அடையாளம் தொடர்ந்து உறுதிசெய்யப்படுகிறது; கேள்வி கேட்கப்படுகிறது; மறுவரையறை செய்யப் படுகிறது. சில எடுத்துக் காட்டுக்கள்:

3. அ. (i): **பெரியார்** அரசியற் சூழலுக் கேற்ப திராவிட நாட்டுப் பிரிவினை என்பதைத் தமிழ்நாட்டுப் பிரிவினையாக யாற்றிக்கொண் டதை முன்பே குறிப்பிட்டோம்.

3. அ. (ii): **ஆஸ்திரேலியாவிலிருந்து** ஒரு எடுத்துக்காட்டு 'பிரிட்டிஷ் தீவுகளிலிருந்து வந்த வீரசாகசமிக்க, ஆண்மை பொருந்திய வெள்ளை இனத்தவனாக, ஒரு ஆஸ்திரேலி யனை அந்நாட்டு ஆளும் வர்க்கம் அடையாளம் காட்டி வந்தது. மாறிவரும் அரசியல்/பொருளா தாரச் சூழல்களில் தொடர்ந்து இந்த வரையறை செல்லுபடியாகவில்லை. உலக முதலாளியத் தேக்கம், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், இனம், மரபினம், பால் அடிப்படையில் சமூகப் பிரிவாக்கங்கள் தோன்றியமை, அடித்தட்டு மக் களிடம் இக் கருத்தியல் போகாமை ஆகியவற் றின் விளைவாக மேற்படி வரையறை / பண் பாட்டு அடையாளம் காப்பாற்றப்பட இயலாத போது-புதியஎதார்த்தங்களுக்கேற்ப - இருக்கிற தேசம் பற்றிய கருத்தியலைப் புதுப்பிக்க, **''கலாச்சாரப் பன்மை''** என்கிற கருத்தாக்கம் முன்வைக்கப்பட்டது. இதன் மூலம் சிறுபான் மையினரின் தனித்துவங்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டன; இருக்கிற வேற்றுமைகள் சீர் திருத்தப்படாமலேயே அப்படியே நிலவட்டும் என்கிற 'neo conservatism' மனப்பான் மைக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதற்கு எதிராகப் 'புதிய வலதுகள்' கலாச்சார ஒருமை வாதத்தை உயர்த்திப் பிடிக்கும் 'ஆங்கில மை யக் கருத்தியலை' மீண்டும் உயர்த்திப் பிடித்து வருகின்றனர்.

3. அ. (iii) **இந்தியாவில்** ஆங்கில ஏகாதிபத் திய எதிர்ப்புக் காலகட்டத்தில் அகில இந்தியத் தேசியம் கற்பிதம் செய்யப்பட்டு முன் வைக்கப் பட்டது. பல்வேறு பண்பாடு, மொழித், மதத் தனித்துவங்கள் மிகுந்த மக்களை ஒன்றிணைக்க 'இந்துமதம்' எனகிற ஒற்றுமைக்காரணி கண்டு பிடிக்கப்பட்டது. **'வேற்றுமையில் ஒற்றுமை'** என்கிற முழக்கம் முன் வைக்கப்பட்டது. சாதி அடிப்படையிலான இந்து மதத்தில் இந்து மதக் கருத்தியல் மூலம் ஆதிக்க சாதியினரே பயன் பெறக்கூடிய சூழலில் இத்தகைய ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது பெரும்பாலும் ஆதிக்க சாதியி னராலேயே தலைமை தாங்கப்பட்டது. ஒடுக் கப்பட்ட சாதியினர் விலகி நின்றது தவிர முஸ் லீம்களும் தொடர்ந்து விலக்கப்பட்டே வந்தனர் இது எந்த அளவிற்கு இன்று வளர்ந்து நிற்கிற தென்றால்''மத அடிப்படையில் தேச மக்களைப் பிரிப்பது சரிதான்; மதம் சாராத காரணிகளின் அடிப்படையில் மக்களைப் பிரிப்பதை அனுமதி யோம் என மண்டல் குழுவை எதிர்க்கும் உயர் சாதியினர் (எச் எம். சீர்வை போன்றோர்) பேசு கிற அளவிற்குப் போயுள்ளது.

3. ஆ: தேசியம் என்பது அரசியல் நியாயப் பாட்டிற்கான ஒரு கோட்பாடு. அரசியலதிகா ரத்தை நிலை நிறுத்தவும், புதிய அரசியலதிகா ரத்தைப் பெறவும் இது முன் வைக்கப்படுகிறது. அதிகாரத்தை வைத்திருப்பவர்களுக்கும் மக்க ளுக்குமிடையேயான இடைவெளியைக் கருத்தி யல் ரீதியாக நிரப்புகிற ஒன்றாகத் தேசியம் அர சியலதிகாரத்தை நிலை நிறுத்தப் பயன்படு கிறது. தங்களது அரசியல் (அதிகார) எல்லை யை இன அடிப்படையிலான எல்லை சிதைத்து விடக்கூடாது. என்கிற அடிப்படையில் அகிலத் தேசியத்திற்கான புதிய வரையறைகளை இது மேற்கொள்ளும் அகில இந்தியத்தேசியம் இந்து மத அடிப்படையில் உருவாக்கப்பட்டதைச் சற்று முன் சொன்னோம். இன எல்லையை அங்கீ கரித்து ஓரினத்தின் மேன்மையை வலியுறுத்தி மற்றதை அதற்குட்படக் கோரியும் ஒரு இன வாத அரசு தனது அரசியலதிகாரத்தை நிலை நிறுத்த தேசியத்தைப் பயன்படுத்தும் எ.டு: இஸ்ரேல்-பாலஸ்தீனம். ஆக ஒரு ஆளும் குழு மத்தின் நலனுக்கான நோக்கில் இதர மக்களை ஒன்றிணைக்கும் நோக்குடன் தேசியம் கற்பி தம் செய்யப்படுகிறது. வரலாறு அதற்குரிய வகையில் எழுதப்படுகிறது. தேசிய வீரர்கள் உருவாக்கப்படுகின்றனர். பாலஸ்தீனியர் களின் உரிமைகளை மறுத்து இஸ்ரேலிய ஆளும் வர்க்கத்தால் உருவாக்கப்படும் வரலாறு (பார்க்க: நிறப்பிரிகை. 3ல் எட்வர்ட் சேத் தின் கட்டுரை), ஆஸ்திரேலிய இரு நூற்றாண்டுக் கொண்டாட்டத்தின் போது முன் வைக்கப்பட்ட 'இரு நூற்றாண்டு' வரலாற்றை உள்நாட்டு

படிப்பகம்

www.padippakam.com

ஆதிகுடிகள் எதிர்த்தமை;1988ல் ரசிய வரலாறு மாறிய சூழலுக்கு ஏற்பத் திருத்தி எழுத வேண்டும் என்பதற்காக ஓராண்டு காலம் சீன மாணவர்களை ரசிய வரலாற்றுவகுப்பில் சேர்க்காதது போன்றவற்றை இதற்கு எடுத்துக்காட்டுகளாய்ச் சொல்லலாம்.

3. இ: ஆக தேசியப் போராட்டந்தான் தேசத்தை உருவாக்குகிறதேயொழிய தேசம் தேசியப் போராட்டத்தை உருவாக்குவதில்லை. இந்தத் தேசியப் போராட்டம் என்பது சமூக சக்திகளின் சமநிலையால் அவற்றில் செல்வாக்கு வகிக்கும் சக்தியின் நலன் நோக்கில் தீர்மானிக்கப்படுகிறது. தேசியம் என்பது ஒரு அரசியல் கோட்பாடு. அரசியல் ரீதியாக, வர்க்க ரீதியாக அது வரையறுக்கப்படுகிறது.

3. ஈ: ஒரு சனநாயகக் குடியரசு என்கிற வடிவிலான நவீன தேசிய அரசு பேரரசின் மீதான விசுவாசத்தின் அடிப்படையிலமைய முடியாது. அதிகாரம் என்பது மக்களுக்குச் சொந்தமாக இருக்கிறது; அரசிடம் அது கையளிக்கப்படுகிறது என்கிற சொல்லில் ஏதேனும் பொருளிருக்குமானால் அரசின் மீதான விசுவாசத்தின்அடிப்படையில் அரசின் நியாயப்பாடு அமைய வேண்டியதில்லை. நியாயப்பாடு என்பது மக்களின் விருப்பத்தினபடிப்படையிலானது என்கிறபோது தவிர்க்க இயலாமல் மார்க்சியம் எழுப்புகிற எந்த மக்கள்? என்கிற கேள்வியை நாம் எதிர்கொண்டே ஆக வேண்டியிருக்கிறது.

சில வர்க்கங்கள் உள்ளடக்கப்படுகின்றன; சில வெளியேற்றப்படுகின்றன. இது பிரெஞ்சுப் புரட்சி போல வெளிப்படையாக இருக்கலாம். அல்லது தமிழர் தேசிய எழுச்சி போல மறைமுகமாகவும் இருக்கலாம். மறைமுகமாக இருந்த போதிலும் தமிழ்த் தேசிய உணர்வின் தோற்றத்தைப் பகுத்தாய்ந்து பார்த்தால் தமிழ்த் தேசியத்தின் வர்க்க/சாதியப் பின்புலத்தை உணர்ந்து கொள்ளமுடியும்.

4. **தமிழ்த் தேசிய உணர்வின் தோற்றம்:** தமிழக வரலாறு முழுமையும் பார்ப்பனவேளாள எழுச்சி என்பதோடு **விவசாய மயமாக்கலும்** (peasantisation) அதற்கு எதிராக மேல் **நில மக்கள் மற்றும் இனக்குடி மக்களின்** (Upland and Tribal People) எதிர்ப்பும் இருந்து வந்திருப்பதைப் பார்க்க முடியும். பல்லவர் காலம் தொடங்கி இத்தகைய விவசாய மயமாக்கல் பெரிய அளவில் நடைபெற்று சோழர் காலத்தில் உச்சத்தை அடைகிறது. மதத்தளத்தில் இப்போராட்டங்கள் பக்தி இயக்கமாகவும் சைவ எழுச்சியாகவும் சமண/பௌத்த சமய ஒழிப்பாகவும் வெளிப்படுகிறது. விவசாயமயமாக்கல் அதிகமாக அதுவரை சுதந்திரமாக ஆனால் சற்றே பிற்போக்கான உற்பத்தி முறையுடன் வாழ்ந்திருந்த மேல்நில/இனக்குழு மக்கள் விவசாயச் சமூகத்திற்குள் சுரண்டப்பட்ட விவசாய உழைப்பாளிகளாகவும் சாதிய அமைப்பில் ஒடுக்கப்பட்ட மக்களாகவும் உள்வாங்கப் பட்டனர். சோழர் காலத்தில் பார்ப்பன வேளாளர் ஆதிக்கம் உச்சம் பெற்றது என்றோம். பிரம்மதேயங்களாக நிலங்கள் பெற்றது. தவிர அரசு நிர்வாகமும் அவர்களிடமே இருந்தது. பார்ப்பனர்கள் வெறும் தெய்வீகத் தலைமையாக மட்டுமில்லை அமைச்சர்களாகவும் இதர அதிகாரிகளாகவும் வேளாளருடன் அரசதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொண்டனர். எனினும் பிற்சோழர் காலத்தில் நிலத்தில் தனியுடைமையும் சமூக-அரசியல் அதிகாரம் என்பன 'நாடு', 'பெரிய நாடு' என்கிற நிர்வாக அலகு மட்டத்தில் மேலும் மேலும் வேளாளர் கரங்களில் குவிவதும் நிகழ்ந்தது. தாழ்த்தப்பட்டவர்களும் இதர ஒடுக்கப்பட்ட சாதியினருமே இவ்வமைப்பில் கொடுமையாகச் சுரண்டப் பட்டவர்களாகத் திகழ்ந்தனர். தமக்குள் அதிக முரண்பாடுகள் இல்லாமல் இணைந்து ஆதிக்கம் செலுத்துபவர்களாக பார்ப்பனரும் வேளாளரும் இருந்தனர். ஆதிக்கச் சாதிகள் தமது சுரண்டலுக்குத் தேவையான போது மட்டும் ஒடுக்கப்பட்டவர்களைக் கருத்தியல் தளத்தில் ஒன்றிணைக்க ''சேரவாரும் செகத்தீரே!'' எனவும் ''ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே'' எனவும் இழுத்து அணைத்துக் கொண்டனர். அதிலும் கூட 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்' என்பதை வெ.ப.சு. முதலியார் 'மாட்டுக்கறி தின்னாராகவுள்ள' எனச் சொல்வதோடு இணைத்துப் பார்க்கலாம்.

4. (அ) தெலுங்கர் ஆட்சியில் நாயுடு, ரெட்டியார் போன்ற தெலுங்க வேளாளர்களும் ஆதிக்கத்தில் பங்குபெற்றனர். தெலுங்க மன்னர்களோடு வந்து குடியேறிய சக்கலியர், தோட்டி போன்ற ஒடுக்கப்பட்ட சாதியினர் இழிந்த தொழில்களுக்கு ஆளாகினர். தெலுங்க ஆட்சியில் மீண்டும் பார்ப்பனர் ஒரு குறிப்பிட்ட அளவு கோட்டை அதிகாரிகள் (துர்க்கா தண்டநாயகர்கள்) போன்ற அரசதிகாரப் பணிகளைப் பெற்றனர். வேளாளர் தம் ஆதிக்கத்தை கருத்தியலளவில் பார்ப்பனர்களுக்குச் சமமாக நிலைநாட்ட சைவ மடங்களையும் சைவ சித்தாந்தத்தையும் உருவாக்கினர்.

4. (ஆ) பார்ப்பனர் - வேளாளருக் கிடையேயான போட்டி என்பது தொடக்கத்திலிருந்து இன்று வரை ஆதிக்க சாதிகளுக்கு இடையேயான போட்டியாகவே இருந்து வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. யார் ஆதிக்கம் செய்வது என்கிற போட்டி அவ்வப்போது வெளிப்பட்டாலும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிராக ஒன்றிணைவது என்பதும் கூடவே இருந்து வந்தது. கருத்தியல் தளத்தில் நடைபெற்ற போட்டி என்பதும் இத்தகைய சமரசக் கூறுகளை உள்ளடக்கியதாகவே இருந்து வந்தது.

படிப்பகம்

www.padippakam.com

சைவசமயம் சைவ சித்தாந்தம், தமிழ் மேன்மை என்பன ஆரிய சமயம் ஆரிய வேதம் ஆரிய மொழி ஆகியவற்றிற்கு எதிராக உயர்த்திப் பிடிக்கப்பட்ட தெனினும் ஆரியத்திற்குச் சமமாகவே தமிழைப் போற்றும் பாரம்பரியத்தையும் இணையாகவே பார்க்கலாம். ஆரியத்திற்கு முன்பான தமிழ்த் தொன்மை, ஆரிய வேதங்களுக்கு முன்பான தமிழ் வேதம் (பக்தி இலக்கியங்கள்)—ஆரிய மதத்திற்கு முன்பான தமிழ்ச் சைவம் முதலியவற்றை உயர்த்திப் பிடிக்கும் கருத்துக்கள் 17ம் நூற்றாண்டு தொடங்கி [காஞ்சிப்புராணம் (சிவஞானமுனிவர்) நால்வர் நான்மணிமாலை (தாரமங்கலம் சிவப்பிரகாசர்)] தொடங்கி வெளிப்படுகிற தெனினும் பார்ப்பன வெறுப்பு அதிகமின்றி ஆரியத்திற்குச் சமமாகத் தமிழை ஏற்று அதே சமயத்தில் சங்க, சமண, பௌத்த இலக்கியங்களைத் தவிர்த்து பக்தி இலக்கியத்திலிருந்து தமிழின் வரலாற்றைப் பார்ப்பவர்களாகவே மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சிவஞான சுவாமிகள் (சோமேசர் முதுமொழி) சுவாமிநாத தேசிகர் (இலக்கணக் கொத்து) முதலியோரைப் பார்க்க முடிகிறது. எனினும் ஆங்கில ஆட்சியில் முரண்பாடுகள் கூர்மையடைந்தன.

4. (இ) ஆங்கில ஆட்சி பல்வேறு விதமான அரசியல், பொருளாதார பண்பாட்டு மாற்றங்களை இங்கே உருவாக்கியது. வரி வசூல், பரவலான அரசு எந்திரம், ஓரளவு சனநாயகமான கல்வி முறை, ஆங்கிலக் கல்வி, கிறிஸ்தவ சமயம் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியது. நீதிமுறை மையப்படுத்தப்பட்டு தல பஞ்சாயத்து, சாதி மன்றங்கள் புறக்கணிக்கப்பட்டன. நீதி வழங்குவதில் தல மதத் தலைவர்களிடம் விளக்கம் கேட்பது நிறுத்தப்பட்டு பார்ப்பனிய வேத அடிப்படையிலான. வருணப் பிரிவினைக்கு அங்கீகாரம் அளிக்கிற 'இந்து-லா' உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து அனைத்துச் சாதியினரும் உயர் வருண அங்கீகாரம் கோரி நின்றனர்; நூல்கள் எழுதினர். வேளாளர் மட்டுமின்றி வன்னியர், நாடார், யாதவர் போன்றோரும் சத்திரிய நிலை கோரினர்.

4. (ஈ) பரந்த அளவிலும் (Macro Level) நுண்ணிய அளவிலும் (Micro Level) ஆதிக்க முறையில் பல்வேறு விதமான மாற்றங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு சாதியினரும் பல்வேறு அமைப்புக்களை உருவாக்கி தத்தம் நலனுக்காக அரசுடன் பேரம்பேசின. அவற்றில் சில:

1852—Madras Native Association
Madras Mahajana Sabha
1887—Indian National Congress.

பெரும்பாலும் பார்ப்பனரைப் பிரதிநிதித்துவப் படுத்தின.

1916—தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்—பார்ப்பனரல்லாத தெலுங்கு, தமிழ், கன்னட வேளாளர் நிலவுடைமையாளர் நலன் நோக்கில் உருவாக்கப்பட்டது.

1857—ஆதி திராவிட மகாஜன சபா - தாழ்த்தப்பட்டோர் நலன் நோக்கில் பி.வி. சுப்பிரமணியப் பிள்ளையால் உருவாக்கப்பட்டது. M.C. ராஜாவின் தந்தை M.C. சின்னத்தம்பிப் பிள்ளை முதல் பொதுச் செயலர்.

1930—களுக்குப்பின் தேர்தல் அரசியல் அறிமுகமாகியபோது இவை அனைத்தும் தேர்தல் அரசியலையும் தமக்குச் சாதகமாய்ப் பயன்படுத்த முனைந்தன. பார்ப்பன— பனியா —சத்திரிய மற்றும் சார்பு முதலாளிய சக்திகள் இந்திய தேசிய காங்கிரசிலும் வெள்ளாளர் (தமிழ், தெலுங்கு, கன்னட) மற்றும் செட்டியார் மூலதனச் சக்திகள் நீதிக் கட்சியிலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின.

4. (உ) காலனிய மற்றும் ஆங்கில கிறிஸ்தவ மிஷனரி நடவடிக்கைகள் மேல் நட்டினரிடையே உருவாக்கிய பண்பாட்டு எதிர்வினைகளை இரு வகைப் படுத்துவர். அவை:

4. உ (1) **சீர்திருத்தவாதம்:** ராஜாராம் மோகன் ராயால் உருவாக்கப்பட்ட பிரம்ம சமாஜத்தை இதற்கு எடுத்துக்காட்டாய்ச் சொல்லலாம். அறிமுகமான சனநாயகச் சிந்தனைகளின் அடிப்படையில் சில மாற்றங்களை இவை கோரின.

4. (2) **மீட்பு வாதம்:** தயானந்த சரசுவதியால் உருவாக்கப்பட்ட ஆரிய சமாஜம், மறைமலை அடிகள் (நாகை வேதாசலம் பிள்ளை) போன்றோரால் உருவாக்கப்பட்ட தனித்தமிழ் இயக்கம் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுக்கள் தற்கால வீழ்ச்சிக்கு சமகால மாற்றங்களைக் காரணம் காட்டி மாற்றங்களுக்கு முற்பட்டப் பொற்காலத்தைச் சுட்டிக் காட்டிப் பழைமைக் குத் திரும்பக் கோரும் தூய்மை வாதமாக இவை அமைந்தன. தமிழக வரலாற்றுப் பின்னணியில் தமிழ் மீட்பு வாதத்தின் தலைமையை வேளாளர் கைப்பற்றிக் கொண்டதும் அவர்கள் நலன்களுக்காகவே அது அமைந்ததும் எளிதில் விளங்கிக் கொள்ளத் தக்கன. வகை இனங்கள் எதுவுமே கறாராக இருக்க முடியாது என்கிற எச்சரிக்கையோடு இதனைப்பார்ப்பது அவசியம். பாரதி போன்ற சிலரிடம் இருகூறுகளுமே குறிப்பிட்ட அளவுக்கு நிலவின.

4. (ஊ): தமிழ் மீட்பு வாதமே பின்னர் தமிழ்த் தேசிய வாதமாகப் பரிணமித்தது. 1930களுக்குப் பின்பே இது தனிநாடு கோரிக்கை என்கிற அளவில் உருப்பெற்றது. தமிழ் மீட்பு வாதத்

படிப்பகம்

www.padippakam.com

தில் வேளாள ஆதிக்கத்தை விரிவாய்ப் பார்ப்பது அவசியம். அதிலும் குறிப்பாக தொடக்க கால மீட்பு வாதத்தில் ஈழச் சைவ வேளாளரின் ஆதிக்கம் குறிப்பிடத் தக்கது. சி.வை.தாமோதரம் பிள்ளை பற்றிக் குறிப்பிட வரும்போது ஏ.வி. சுப்பிரமணிய அய்யர் ''யாழ்ப்பாணக் குழாம்'' எனக் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. யாழ்ப்பாணத்திலும், தமிழ்நாட்டிலும் தமிழ் / சைவ மீட்பு நடவடிக்கைகளில் இணைவான போக்கொன்றைக் காணமுடியும். தமிழரின் நவீன மொழியுணர்வின் வெளிப்பாடாக இரண்டைச் சொல்வர், ஒன்று சு ந் த ர ம் பி ள் ளை யி ன் மனோன்மணியத் தமிழ் வாழ்த்துப் பாடல் மற்றது: சி.வை.தாமோதரம் பிள்ளை தாம் பதிப்பித்த 'கலித்தொகை', 'வீரசோழியம்' ஆகிய வற்றிற்கு எழுதிய முன்னுரையில் முன் வைத்த 'திராவிடம்', 'தமிழ்' குறித்த உறுதியான கருத்துக்கள். சிவை. தா ஒரு யார்ழ்ப்பாண வேளாளர். த.கைலாசப் பிள்ளை யாழ்ப்பாணத்தில் தொடங்கிய தமிழ்ச் சங்கத்தின் மாதிரியிலேயே பாலவநத்தம் சமீன்தார் பாண்டித்துரைத் தேவரால் மதுரைத் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப் பட்டது. நாவலரின் சீடரான ஜே. எம். நல்லசாமிப் பிள்ளையால் தொடங்கப்பட்ட 'சித்தாந்த தீபிகை' இதழில் கட்டுரை எழுதிய சில ஈழச் சைவ வேளாளர்கள்: பொன். அருணாசலம், பொன். இராமநாதன், எஸ். டபிள்யூ குமாரசாமி, முத்துத்தம்பிப் பிள்ளை, வி.ஜே. தம்பிப் பிள்ளை, ரி. பொன்னம்பலப் பிள்ளை முதலானோர்.

4. (எ) தமிழ் மீட்பு வாதத்துடன் இணைந்த இதர பண்பாட்டு நடவடிக்கைகளில் மிகமுக்கியமானது சைவ சித்தாந்தப் புத்துயிர்ப்பு. இதன் முன்னோடியான ஈழத்து ஆறுமுக நாவலர் குறித்துக் க.கைலாசபதி குறிப்பிடும் கீழ்க்கண்ட கருத்துக்கள் முக்கியமானவை.

''இவ்வாறு நாவலர் சமயத்துறையில் தமக்கிகிருந்த ஆர்வங்களுடன் சமூகத்திற்கு அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட நடைமுறைச் செயற்பாடுகளை ஒன்றிணைத்தார். அவர் சமூக அரசியலையும் சமயத்தையும் ஒன்று கலந்தார். தமிழர் மத்தியில் ஏற்பட்ட கலாச்சார எழுச்சிக்கு மகத்தான பங்களிப்பாக இருந்தது''.

''ஆறுமுக நாவலரால் தலைமை தாங்கப்பட்ட 'மறுமலர்ச்சி' இபக்கம் உண்மையில் பிரிட்டிஷ் விசுவாசத்தின் விளைவாக ஏற்பட்ட சமூக கலாச்சார மாற்றங்களை நன்கு அரண் செய்யப்பட்ட யாழ்ப்பாண இ ந் து சமுதாய அமைப்பிற்குள் மட்டும் எல்லைப்படுத்திய முயற்சியாகும். இதனால் நலம் பெற்றவர்கள் உயர்சாதி இந்துக்கள் மட்டுமே யாவர்''.

தமிழ் மீட்பு வாதத்தின் அடையாளமாகக் குறிப்பிடப்படும் இரு சஞ்சிகைகளுள் ஒன்று சைவ சித்தாந்தம் பற்றியதேயாகும். ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியான ஜே.எம் நல்லசாமிப்பிள்ளையை ஆசிரியராகக் கொண்ட 'சித்தாந்த தீபிகை'யே அது. மற்றது சூசையப்பர் கல்லூரிப் பேராசிரியராகவிருந்த டி. சவரிராயப் பிள்ளையை ஆசிரியராகக் கொ ண் ட **'Tamilian Antiquary'**

1992ல் யாழ்ப்பாண 'ரிட்ஜ்வே' மண்டபத்தில் செ. கனகசபைப் பிள்ளையின் தலைமையில் நடத்தப்பட்ட இலக்கிய மாநாட்டில் ''தமிழ் மொழியின் வளர்ச்சியைப் போன்ற சமாந்தரப் போக்கு தமிழரின் தேசிய சமயத் தத்துவமாகக் கொள்ளப்பட்ட சைவ சிந்தாந்தத்திலும் காணப்படுகிறது'' என்கிற கருத்து முன்மொழியப் பட்டது.

ஆக தமிழ் மீட்பு வாதத்துடன் சைவ சிந்தாந்தமும் வேளாளர்களால் கூடவே புனர் நிர்மாணம் செய்யப்பட்டது. நாவலர் 'யாழ்ப்பாண சைவ பரிபாலன சபை'யை உருவாக்கினார். 1905ல் தமிழ்நாட்டில் நல்லசாமிப் பிள்ளையின் முயற்சியால் 'நசா சித்தாந்த சமாஜம்' உருவாக்கப் பட்டது.

தமிழகத்தில் நாகை. வேதாசலம்பிள்ளை (மறைமலை அடிகள்) வேளாளர் நாகரிகமே பழந்தமிழர் நாகரிகம் எனவும் சைவ சமயமே தமிழர் சமயம் எனவும் நூற்கள் எழுதினார். கா.சு. பிள்ளையும் தமிழர் மதம் குறித்து எழுதினார். தமிழாய்வுகள் பதிப்புகள் என்பன பெரும்பாலும் வெள்ளாளரிடத்திலும் (கனகசபைப் பிள்ளை, கே. என். சிவராஜப் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார்) ஓரளவு பார்ப்பனடரித்திலும் (பி. டி. சீனிவாச அய்யங்கார், சேஷ அய்யர், சுவாமிநாத அய்யர்) சிறிதளவு இதர சாதியாரிடமும் (சோமசுந்தர நாயகர்) சிறைப் பட்டன.

4 (எ) தமிழ் மீட்பு வாதத்துடன் இணைந்த இதர பண்பாட்டு நடவடிக்கைகளாக பார்ப்பனருக்குப் போட்டியாக தமிழ் சஞ்சிகைகள் தொடங்குதல் (தமிழ்நாடு, குமுதம்), தமிழிசை முயற்சி முதலியவற்றைத் தொடங்கலாம். இவற்றில் செட்டியார் மூலதனத்தில் பங்கு குறிப்பிடத்தக்கது. இதனைப் பின்னர் விரியாகப் பார்க்கலாம் 1960 வரை நாட்டுப் புறக்கலைகள் இவர்களால் புறக்கணிக்கப்பட்டு வந்தது என்பதையும் முதன் முதலில் ப. ஜீவானந்தம் போன்ற பொதுவுடைமையாளரே இவற்றை முன்னிலைப் படுத்தினர் என்பதையும் இத்துடன் இணைத்துப் பார்க்க வேண்டும்.

5. அரசியல் தளத்தில் பார்ப்பன எதிர்ப்பு / திராவிட தேசியம் என்பனவற்றை நீதிக்கட்சியில் தொடங்கிப் பார்க்கவேண்டும். அரசுப்

படிப்பகம்

www.padippakam.com

பணிகளில் பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிராக அதனுடன் போட்டியிடத்தக்க அளவிற்கு ஆதிக்க சாதிகளாக இருந்த தெலுங்கு/கன்னட/தமிழ் வேளாள சாதியினரின் அரசியல் இயக்கமாக தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் தோற்றமெடுத்ததைப் பற்றி முன்பே குறிப்பிட்டோம். 1851 முதலே வெள்ளை அரசும் இட ஒதுக்கீடு பற்றிப் பேசத் தொடங்கியது. தாசில்தார்களில் பார்ப்பனரல்லாதோருக்கு இடஒதுக்கீடு அளிப்பது குறித்த வருவாய்த்துறை ஆணை பிறப்பிக்கப்பட்டது. இங்கு கவனிக்கவேண்டியது: நீதிக்கட்சி கேட்டது பார்ப்பனரல்லாதாருக்கான இட ஒதுக்கீடே. சாதி வாரி இட ஒதுக்கீடு அல்ல. இதனால் பயனடைந்தது பார்ப்பனரல்லாத உயர் சாதியினரே. பிற்பட்ட சாதியினருக்கு இட ஒதுக்கீடு என்கிற கோரிக்கை 1940க்குப் பின்னரே எழுப்பப்பட்டு 1947ல் தான் முதன் முதலில் பிற்பட்ட சாதியினருக்கு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டது.

5 (அ) பார்ப்பனரல்லாதோருக்கு இடஒதுக்கீடு தவிர நீதிக்கட்சி சைவ சமயத்தையும் நிலவுடைமையாளர் நலன்களையுமே முன் நிலைப்படுத்தியது. சட்டமன்றத்தில் பேசும்போது சி. நடேச முதலியார், ''திராவிடர்களது வரலாற்றுக்கு முந்திய சமயமாகிய சைவம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு இருந்தது போலவே இன்று தனித்துவமாகத் திகழ்கிறது'' என்று குறிப்பிட்டார். பி. டி. தியாகராயர், ''இந்த நாட்டில் நிலவுடைமையாளர்களாக இருந்ததெல்லாம் தமிழர்கள்தான். பார்ப்பனரல்லாதவர்களுக்கே எல்லா நிலங்களும் சொந்தமாக இருந்தன. பார்ப்பனரின் எழுச்சிக்குப் பின்பு வக்கீல்கள், பொது ஊழியர், ஆசிரியர் என்கிற புதிய வர்க்கம் உருவாக்கப்பட்டது''என்றார் (1920). நிலவுடைமையாளராக இல்லாத தமிழர்கள் பிரச்சினை குறித்து அவர்களுக்குக் கவலை இல்லை.

5 (ஆ) நீதிக்கட்சி காங்கிரசுக்கு மாற்றான பார்ப்பனரல்லாதோரின் நலனை முன்னிலைப் படுத்துகிற ஒரு அரசியல் சக்தியாக வடிவெடுத்த பின்னர் அன்றைய தமிழகத் தொழில் துறையிலும் பர்மா-இலங்கை போன்ற வெளி நாடுகளில் வட்டித் தொழிலிலும் முக்கிய சக்திகளாக விளங்கிய மூலதன பலன் மிகுந்த நாட்டுக் கோட்டைச் ✽செட்டியார்களும் பிரிட்டிஷார் வருகையைப் பயன்படுத்தி கடந்த இருநூறாண்களில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து சாதிப் படி நிலையிலும் மேலேறிய விருதுநகர் வணிக நாடார் சாதியின் முக்கிய பிரமுகர்களும் நீதிக் கட்சியில் இணைந்து ஆதிக்க சக்திகளாக மாறினர். நீதிக்கட்சியில் ஆதிக்கம் செலுத்திய தலைவர்களின் பட்டியல் பார்த்தால் அதன் சாதியப் பின்புலம் விளங்கும்.

ஏ.வி. முத்தையா முதலியார், எல். மீனாட்சி சுந்தர முதலியார், பி.சி. மாணிக்கவாசக முதலியார், சி.என். அண்ணாதுரை (செங்குந்த முதலியார்கள்) பி. சிதம்பரம்(நாஞ்சில் நாட்டு வேளாளர்) எஸ். குருசாமி (தொண்டை மண்டல வேளாளர்) சி.ஏ. அய்யாமுத்து (வெள்ளாள கவுண்டர்) பெரியார் ஈ.வே. ராமசாமி-எம்.கே.ரெட்டி ஜெயராம் நாயுடு, ஜே. எஸ். கண்ணப்பர் (பலிஜாநாயுடு) டபிள்யூ. ஏ. சௌந்திரபாண்டிய நாடார் (ராமநாதபுரம் எஸ்டேட் சொந்தக்காரர்) V. V. ராமசாமி நாடார், S.A. முத்து நாடார்.

ஒரு சிலர் மட்டுமே இங்கு குறிப்பிடப்பட்டாலும் இதர பலரும் இத்தகைய வகைப்பாட்டிற்குள்ளேயே அடங்குவர். பெரியார் தலைமையில் நீதிக்கட்சி சோசலிஷம் பேசத் தொடங்கிய போதும், நீதிக்கட்சி படிப்படியாகப் பலமிழந்து காங்கிரஸ் வலுப்பெற்றபோதும், அகில இந்திய அளவிலான சந்தையைத் தமிழ் முதலாளிகள் பயன்படுத்தத் தொடங்கிய போதும், ஏகாதிபத்தியங்களின் நலன்களைச் சார்ந்து நின்ற முதலாளிகளின் நலனை முன் நிலைப்படுத்தி வெள்ளையரிடம் பேரம் பேசும் சக்தியாக காங்கிரஸ் வளர்ந்த போதும், தேர்தல் சார்ந்து அகில இந்திய நீரோட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இணைந்து மைய நீரோட்ட அரசியலில் கலந்தபோதும் தொழிலதிபர்கள் முதலானோர் படிப்படியாகப் பெரியாரிடமிருந்து விலகி காங்கிரஸ், தி.மு.க. கட்சிகளைச் சரணடைந்தனர்.

✽ செட்டியார் மூலதனம் குறித்துச் சில தரவுகள்: முத்தையா செட்டியார்—ஹார்விமில், பாண்டியன் பாங்க், இன்சூரன்ஸ். முத்தையாசெட்டியார்+சங்கரலிங்கஅய்யர்—இந்தியா சிமெண்ட் எம்.சி.டி. சிதம்பரம் செட்டியார்+சி. ஆர். சீனிவாச அய்யர்—ஈஸ்ட் இந்தியா சுகர். பாங்க் ஆப் மதராஸ், இந்தியன் வங்கி (செட்டியார்கள்) இந்தியன் ஓவர்சிஸ் வங்கி—செட்டியார்+வி. எஸ். தியாகராச முதலியார்—பிரிமியர் இன்சூரன்ஸ், யுனைட்டட் இந்தியா இன்சூரன்ஸ் (செட்டியார்) முருகப்பச் செட்டி—T.I. சைக்கிள் கம்பெனி, கருமுத்து தியாகராச செட்டி—மீனாட்சி மில் / ராஜேந்திரா மில், ஏ. வி. மெய்யப்பச் செட்டி—சினிமா, அண்ணாமலை பல்கலைக் கழகம்—முத்தையா செட்டி. கிண்டி/காரைக்குடி கல்லூரிகள்—அழகப்பச் செட்டி. குமுதம்—அழகப்பச் செட்டி. தமிழ்நாடு (தினசரி)-தியாகராச செட்டி, பாரததேவி-ட்ரோஜன் அண்ணாமலைச் செட்டி, குமரன்—சொ. முருகப்பா, (சஞ்சிகைகள்) இவை தவிர தமிழிசை இயக்கத்திற்குச் செட்டியார்கள் அளித்த ஊக்கம்.

படிப்பகம்

www.padippakam.com

தூத்துக்குடி சுயமரியாதைக் கூட்டத்தில் இயற்றப்பட்ட சோசலிசத் தீர்மானத்தை ஜே.எஸ். கண்ணப்பர் ஆதரித்தபோதும் பகத்சிங் ஆதரவுத் தீர்மானத்தை ஏற்கவில்லை. ''கராச்சி காங்கிரஸ் சுய மரியாதைக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டதால் எல்லோரும் காங்கிரசில் சேர வேண்டும்'' என்று அறிவித்தார்.

விருதுநகர் சுயமரியாதைக் கூட்டத்திற்குப் பின்னர்(1931) டபிள்யூ .ஏ. சௌந்திரபாண்டிய நாடார், ''கட்சிக்குள் நிறைய கருத்து வேறுபாடுகள் உள்ளன. காங்கிரசின் மத நடுநிலைக் கருத்துக்கள் சுய மரியாதை இயக்கத்துக்கு ஒரு அடியைக் கொடுத்துவிட்டது''என்றார். 1931ல் பெரியார் அய்ரோப்பா சென்றதைத் தொடர்ந்து பணக்காரர்கள் அளித்து வந்த பொருளாதார ஆதரவு குறைந்தது. வி.வி. ராமசாமி, டபிள்யூ ஏ.சௌந்திரபாண்டிய நாடார், எஸ். முருகப்பா டி.வி. சோமசுந்தரம், கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோர் விலக விருப்பம் தெரிவித்தனர்.

1934—பொதுவுடைமைக் கட்சி தடை செய்யப்படுகிறது. கடும் அடக்குமுறை.

1934—நீதிக் கட்சி பார்ப்பனரை அனுமதிக்கிறது.

1935—தேர்தலில் வருணாசிரம சுயராஜ்ய சங்கத்தலைவர் S. கிருஷ்ணமாச்சாரியாரை சுயமரியாதைக் கட்சி ஆதரிக்கிறது.

1935—திருத்துறைப்பூண்டி சுயமரியாதை மாநாட்டில் பெரியார் சோசலிச கருத்துக்களைக் கைவிடுகிறார்.

1944—சேலம் நீதிக் கட்சி மாநாடு 'திராவிடர் கழகம்' எனப் பெயர் மாற்றம். பகிரங்கமாய் ஏகாதிபத்தியத்தை ஆதரித்ததே தோல்விக்குக் காரணம் என சி. என். அண்ணாத்துரை பேசுகிறார். பி. டி. ராசன், நெடும்பலம் சாமியப்பா முதலானோர் விலகல்.

1947—'சுதந்திர'த்தைப் பெரியார் துக்க நாளாய் அறிவிப்பு.

1948—சமீன் ஒழிப்பை திராவிடர் கழகம் வெளிப்படையாக ஆதரிக்கவில்லை. இனாம் ஒழிப்பை மட்டுமே ஆதரித்தது.

மொத்தத்தில் ஆதிக்க சாதியினரும் ஆதிக்க சக்திகளும் தலைமை தாங்கும் எந்த ஒரு இயக்கமும் இறுதிவரை மக்களுக்கானதாக இருக்க முடியாது என்பதற்கு தமிழ்த் தேசிய இயக்கத்தின் தொடக்க கால வரலாறு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

5. (இ) ஒப்பீட்டளவில் நீதிக் கட்சியைக் காட்டிலும் சனநாயகப்படுத்தப்பட்ட திராவிட இயக்கங்களும்கூடப் பின்னாளில் பார்ப்பனர் அல்லாத உயர் சாதியினரைத் தவிர இடைநிலை பிற்பட்ட வகுப்பினரையே அதிகம் ஈர்க்க முடிந்தது. தாழ்த்தப்பட்டவர்கள் முழுமையாக இவற்றுடன் அடையாளம்காண இயலவில்லை.

6. தமிழ் திராவிட மீட்பு வாதம் மற்றும் அதன் அரசியல் வெளிப்பாடாகிய நீதிக்கட்சியின் உயர் சாதி ஆதிக்கம் என்பது தாழ்த்தப்பட்ட தமிழர்களின் மத்தியில் எத்தகைய எதிர்வினையை ஏற்படுத்தியதென்பதற்கு ராவ் பகதூர் எம். சி. ராஜா அவர்களின் கீழ்க்கண்ட கருத்துக்கள் விளக்கம் பகரும்: (ராஜாவின் சொற்கள் சில இடங்களில் சுருக்கித் தரப்பட்டுள்ளன.)

''சூத்திரன் எனக் கூறிக்கொள்ளப் பிடிக்காத பிராமணரல்லாத சாதி இந்துக்கள் தங்களை 'திராவிடர்கள்' என்று அழைத்துக் கொண்டார்கள். 1895ல் தங்கள் இனத்துக்கு ஒரு பெயர் சூட்டிக் கொள்ள விரும்பிய இம்மக்கள் (தாழ்த்தப்பட்டோர்) 'திராவிடர்' எனப்பெயர் மாற்றிக்கொண்ட சூத்திரர்களிடமிருந்து தாங்கள் தனிப்பட்டவர்கள் என்பதை விளக்கும் வகையில் 'ஆதிதிராவிடர்' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.''

''ஆங்கிலேயரின் வருகையோடு ஆதிதிராவிடர் அடிமைத்தளை அறுபட ஆரம்பித்தது. இந்த மக்கள் அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டாமா? அதை விடுத்து சாதிவெறி தன்னலம் கொண்ட சாதி இந்து, ஓட்டிற்காக ஒரே மரபு இனம் என்று கூறிக்கொண்டு நப்பாசையும் பேராசையும் கொண்டு தாழ்த்தப்பட்டோரின் உழைப்பை உறிஞ்சி, உழைப்புக்கேற்ற ஊதியம் தராத சாதி இந்து மக்கள் எப்படிக்கடமைப் பட்டவர்களாக இருக்க முடியும்?''

''புறம் போக்கு நிலங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை. கணக்குப் பிள்ளை, மணியகாரர், அதிகாரிகள் எல்லோரும் சாதி இந்துக்கள் என்பதால்''

ஒரு எடுத்துக்காட்டு ஒன்றையும் ராஜா இங்கு குறிப்பிடுகிறார். சிதம்பரத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்காக நந்தனார் இலவசப்பள்ளி ஒன்றை தொடங்குவதற்காக சகஜாநந்தர், தரிசு நிலம் ஒன்றை ஒதுக்கக் கோரி அதிகாரிகளுக்கு விண்ணப்பம் அளித்தார். சாதி இந்து அதிகாரிகள் மறுத்ததைத் தொடர்ந்து சகஜாநந்தர் பி. எல். குப்பி என்ற வெள்ளை கலெக்டரிடம் மனு கொடுத்தார். 3—9—20 அன்று நேரடி விசாரணை செய்த குப்பி, வி. வேலாயுதம் பிள்ளை என்ற நிலச்சுவான்தாரே நிலம் வழங்கப்படாமைக்குக் காரணம் எனக்கூறி மறுப்பைத் தள்ளு

படிப்பகம்

www.padippakam.com

படி செய்து பட்டா வழங்கினார். தொடர்ந்து பேசுகிறார் எம்.சி. ராஜா;

''நீதிக்கட்சி மூலம் சாதி இந்துக்கள் அதிகாரத்திற்கு வந்த பின்னர் தாழ்த்தப்பட்டோர் நலத்துறைகள் புறக்கணிக்கப்படுகின்றன. துறைகளே மூடப்படும் பீதியும் உள்ளது''

''சென்ற ஆண்டு இறுதியில் தாழ்த்தப்பட்ட மாணவருக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் ஒன்றை மேலவையில் வழங்கினேன். ஆண்டுக்கு 67 இலட்சம் செலவாகும் எனக்கூறி மறுக்கப்பட்டது''

''சிதம்பரம் தாலுகா போர்டில் ஏன் ஆதிதிராவிடர் நியமிக்கப்படவில்லை என்று ஸ்தல ஸ்தாபன அமைச்சரைக் கேட்டேன். சாதி இந்து ஒருவரின் வீட்டில் அலுவலகம் செயல்படுவதால் தாழ்த்தப்பட்டவரை நியமிக்க முடியவில்லை எனப் பதில் வந்தது''

''நீதிக்கட்சி பதவி ஏற்ற ஓராண்டுக்குள் தாழ்த்தப்பட்டோருக்கான நல மானியத்தில் ஒரு இலட்சத்தை வெட்டியது. தொடர்ந்து தாழ்த்தப்பட்டோர் நலத்துறைகள் மூடப்படுகின்றன. முக்கிய அதிகாரிகள் நீக்கப்படுகின்றனர்''

''நல்ல காலமாக நீதிக்கட்சியின் பதவிக் காலம் இரண்டாண்டுகளோடு முடிந்துவிட்டது. கடவுள் நம்மைக் காப்பாற்றினார்''

7. அ. மேற்கண்ட கூற்றுக்கள் அனைத்தும் எம்,சி. ராஜாவின் பேச்சுக்களிலிருந்து தொகுக்கப்பட்டவை. தாழ்த்தப்பட்டோர் எதிர்வினையின் ஆபத்தான அம்சங்களைக் கீழ்வருமாறு தொகுக்கலாம்.

7. அ. 1: தேசிய உணர்விலிருந்து அந்நியப்படல்

7. அ. 2: ஏகாதிபத்திய ஆதரவு

7. அ. 3: பின்னாளில் காங்கிரஸ் ஆதரவு

7. அ. 4: அம்பேத்கரின் சீரிய சிந்தனைகளுக்கு மாறாக பார்ப்பனருக்கு ஆதரவு.

8. தொகுத்து நோக்கும்போது கவனத்திற்கு வருவன; தமிழக மக்கள் விடுதலை என்பது தமிழ் பேசுகிற ஒருசில உயர் ஆதிக்க சக்திகளுக்கான அரசை உருவாக்குவது என்பதாக இல்லாமல் பெரும்பான்மை அடித்தட்டுத் தமிழர்களின் விடுதலையாக அமைவதற்கும், பாசிசக் கூறுகளைத் தவிர்ப்பதற்கும் **யார் தமிழர்? எத்தகைய விடுதலை?** என்கிற இரு கேள்விகளுக்குமான சரியான பதிலைப் பெற்றாக வேண்டும். விடுதலையை நோக்கிய செயற்பாடுகளினூடாக இதற்குரிய விவாதங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். வரையறையை உருவாக்க வேண்டும். அதற்குரிய முழக்கங்களை முன் வைத்து இது காறும் புறக்கணித்து வந்த அடித்தட்டு மக்களை ஒன்றிணைக்க வேண்டும்.

8. 1: **ஒரு பின் குறிப்பு:** கா.மார்க்சின் எச்சரிக்கையோடு தொடங்கினோம். பெரியாரை நினைவுகூர்ந்து இதனை முடித்துக்கொள்வோம் பெரியாரின் பல எச்சரிக்கைகளை இன்றைய திராவிட இயக்கங்களில் பல பிரிவுகள் மட்டுமல்ல, தமிழின விடுதலை இயக்கங்கள் பலவும் கூட புறக்கணித்துள்ளன என்பதுதான்உண்மை. பெரியாரின் பெயரை முன்னிறுத்தி அரசியல் லாபம் அடைவது மட்டுமே குறிக்கோளாக அமைந்துவிடக்கூடாது. தமிழ் மொழி, தமிழ்க் கலாச்சாரம் ஆகியவை குறித்த அவரது கருத்துக்கள் கவனமாய்ப் பரிசீலிக்கப்பட வேண்டும். பல தவறுகளிலிருந்து நம்மை மீட்டுக்கொள்ள அது பயன்படும்.

—பிப்ரவரி 91ல் திண்டிவனத்தில் நடந்த கலந்துரையாடலொன்றில் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள்.

○ ○ ○ ○

படிப்பகம்

www.padippakam.com

பெரியாரியம்

—கோ. கேசவன்

இக்கட்டுரையை இயம் (ism) குறித்த வரையறையோடு தொடங்குதலே இங்கு பொருத்தம். இயம் குறித்த புரிதல்களைப் பருண்மையாகப் பொருத்தும் பொழுதேபெரியாரியத்தை விளங்க இயலும். இது எந்த இயத்துக்கும் பொருந்தும்.

ஒரு குறிப்பிட்ட போக்கின் அல்லது மனிதரின் சில தனித்த பண்புகளைக் கொண்ட அல்லது அவ்வாறு கொண்டதாக உரிமை பூண்ட ஒரு கோட்பாடு நடைமுறை, இயம் என்று பொதுவாகக் குறிக்கப்படுகிறது. சமயம், தத்துவம், அரசியல் சமூகம், கலாச்சாரம், பொருளாதாரம் என்பன போன்ற பல வாழ்வியல் துறைகளில் அமைந்த கோட்பாடு நடைமுறை என இது விரியும். இது ஒரு குறிப்பிட்ட போக்கை அல்லது மனிதரை முதன்மைப்படுத்திப் பெயரிடப் படுகிறது.

இயம் என்பது இயற்கை நிகழ்வுகளையும் சமூக நிகழ்வுகளையும் விளங்கவும் விளக்கவும் மற்றும் அவற்றின் மீதான குறுக்கீடுகளை நிகழ்த்தவும் ஆவதற்கென்பதால் இதற்குள் உலகக் கண்ணோட்டம் ஒன்று உள்ளார்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது.

இயத்துக்குள் இயங்கும் உலகக் கண்ணோட்டத்தை விளக்குவதே இயத்தை விவரிப்பதுஎன்பதாகிவிடாது. இயம், ஒரு குறிப்பான காலத்திய சமூக நிலையை எங்கனம் விளங்குவது என்பதிலிருந்து தோன்றுகின்றது. இத்தகைய விளங்குதலுக்கான புற நிலைத்தேவை இல்லையெனில் ஓர் இயம் உருவாகித் திடப்பட இயலாது என்று குறிப்பிடலாம். இத்தகைய சமூக அவசியத்தின் தேவைக்கும் தன்மைக்கும் ஏற்ப அல்லது அவற்றில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப இயத்தின் அம்சங்கள் பலவற்றில் மாற்றங்கள் ஏற்படும் சாத்தியம் உண்டு. இத்தகைய மாற்றங்கள், இயத்தின் தனித்த பண்புகளில் அடிப்படையான மாற்றங்களைக் கோருமானால் அங்கு வேறோர் இயம் சூல் கொள்ளத் தொடங்கி விட்டது என்று பொருளாகும். எனவே குறிப்பான சமூக நிலைமைகளை ஓர் உலகக் கண்ணோட்டத்தின் வழி விளங்கிக்கொள்ளத் துணைசெய்யும் இயம், ஒரு கால ஒழுங்குக்கும் வரம்புக்கும் உட்பட்டதாக அமைதல் தவிர்க்க இயலாததாகும்.

ஒரு குறிப்பான காலத்திய சமூகத்தின் புறவயத் தேவைகளை நிறைவு செய்தலோடு தொடர்பு கொண்ட இயம், அந்த சமூகத்தின் ஒட்டு மொத்தத் தேவைகளையும் நிறைவு செய்ய முனையும் எனக் குறிப்பிட முடியாது. எந்தவொரு கால சமூகத்திலும் தத்தமக்குள் இயைந்தும் முரண்பட்டும் இயங்கிக் கொண்டிருக்கும் சமூக வர்க்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொண்டால் சமூக வாழ்வியல் துறைகளின் மீதான தம் நிலைபாடுகளை வெளிப்படுத்தும் இயங்களின் அம்சங்களில் இத்தகைய வர்க்கங்கள் தம் விருப்பங்களை, உணர்வுகளை, எதிர்பார்ப்புகளை, நம்பிக்கைகளை, நலன்களை அடையாளம் கண்டு கொள்கின்றன என்பதை மறுக்கஇயலாது. இத்தகைய சமூக வர்க்கங்கள் அல்லது ஏதேனும் ஒரு வர்க்கம் அல்லது ஒரு வர்கத்தில் உள்ள ஏதேனும் ஒரு குழு தமக்குறிய இயங்களைத் தாமே முன்னின்று தோற்றுவிக்கின்றன, அல்லது முன்னிலைப் படுத்துகின்றன என ஒரு நேர்க்கோட்டு வீதத்தில் எப்பொழுதுமே கணிப்பதற்குரிய தடயங்கள் நமக்கு கிடைக்கா விடினும் சூல் கொள்ளும் இயங்களில் தமக்குரிய கோட்பாடும் நடைமுறையும் வெளிப்படுமானால் அத்தகைய இயங்களை திடப்படுத்தவும் செழுமைப்படுத்தவும் உரிய பணிகளைத் தம் ஆற்றலுக்கும் சமூகக் கட்டமைப்பில் தம் நிலைமைக்கு ஏற்பவும் ஆற்றுவதில் இவை தவறுவதில்லை என்பதைக் குறிப்பிடலாம். இந்தவிதத்தில் இயங்கள் சமூகவர்க்க ஒழுங்கமைப்புக்கு உட்பட்டவை ஆகும்; அதாவது வர்க்கக் கண்ணோட்டம் கொண்டதாகும்.

பன்முகச் சமூக அமைப்பில் ஓர் இயம் பல்வேறு வர்க்கங்களோடு கொண்டுள்ள உறவின் ஊடாகத் திடப்பட்டு, ஒரு குறிப்பிட்ட காலப் பரப்பில் விரிவடைகிறது. ஓர் இயத்துக்குள் இயங்கும் பல்வேறு கருத்தாக்கங்கள் அனைத்தும் சமகன முடையனவாக இருப்பதில்லை; மேலும் அவை சம தளங்களில் ஒன்றுக்கு ஒன்று, இணையாகவும் ஒன்றோடொன்று தொடர்பு இன்றியும் பல அடுக்குகளில் இயங்குபவையாகவும் இருப்பதில்லை. ஓர் இயத்துக்குள் இயங்கும் பல கருத்தாக்கங்கள் பரஸ்பரம் தொடர்பும் பாதிப்பும் கொண்டனவாக இயங்குகின்றன. இவற்றுள் அடிப்படையான வற்றை சாராம்சமாகக் காணவும் பொதுவான வற்றை தோற்ற எல்லையில் காணவும் வேண்டியுள்ளது. இன்னொரு விதத்தில் சொன்னால் மையக் கருத்தாக்கமாகவும் சுற்றெல்லைக் கருத்தாக்கங்களாகவும்

படிப்பகம்

www.padippakam.com

காணவேண்டியுள்ளது. சுற்றெல்லையில் அல்லது மேல் தோற்றத்தில் இயங்கும் கருத்தாக்கங்களை ஊடுருவி மைய அல்லது சாரம்சமாக இயங்கும் கருத்தாக்கங்களைக் கண்டறிய வேண்டும் ஓர் இயத்தின் முழு அம்சங்களையும் மற்றும் அதன் செல்நெறியையும் தீர்மானிக்கக் கூடிய உள்ளார்ந்த அம்சங்கள், அவற்றுக்கு இடையிலான இணைப்புகள், அவற்றுள் செயல்படும் விதிகள் ஆகியவற்றைக் கண்டறிவதன் மூலம் மையக் கருத்தாக்கத்தை அடையாளம் காண இயலும். மையக் கருத்தாக்கமும் சுற்றெல்லையில் இயங்கும் கருத்தாக்கங்களும் பொதுவாக முரணின்றி செயல்படு மெனினும் எப்பொழுதுமே அப்படி இருக்கும் எனச்சொல்லக் இயலாத வகையில் மையக் கருத்தாக்கத்துக்கும் சுற்றெல்லை கருத்தாக்கங்களுக்கும் இடையில் முரணிய நிலையும் அமைவது உண்டு. இந்த முரண் தற்காலிக இயல் புடையது; நிபந்தனைக்கு உட்பட்டது. இத்தகு முரண்கள் இருப்பதனால் ஓர் இயத்தில் பல குரல்கள் ஒரே நேரத்தில் ஒலிப்பதைப் போலத் தோன்றுகின்றன. இத்தகைய குரல்களில் பல மாறுபட்டும் தொடர்பின்றியும் காலப்போக்கில் சிதைந்தும் போகிற இயக்கப் போக்கில் ஏதேனும் அடிப்படையில் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். ஒரு சமூக நிகழ்வுப் போக்கில் தோன்றி, அதில் குறுக்கீடு நிகழ்த்தும் இயக்கத்தில் உள்ள ஓர் இயம் தொடர்ந்து அந்த இயமாகவே இயங்கிக் கொண்டிருக்கிறதா இல்லையா என்பதற்கு இதுவே ஆதாரம். இது ஓர் இயத்தின் இருத்தலுக்கான சாராம்சமாகும். இவ்வாறு ஓர் இயத்தின் மையத்தை அல்லது சாராம்சத்தை அழுத்தமாகக் குறிப்பிடுவதனாலே சுற்றெல்லையில் அல்லது மேல் தோற்றத்தில் வினையாற்றும் கருத்தாக்கங்களுக்கு உரிய மதிப்பை நாம் அளிக்க மறுப்பதாகாது. ஓர் இயம் இயங்கக் கூடிய குறிப்பான காலம் என்பது பல துணைக் கட்டங்களை உள்ளடக்கிய தாகும். இந்த துணைக் கட்டத்துக்கு ஏற்ப சுற்றெல்லையில் உள்ள கருத்தாக்கங்கள் விசேட கவனத்தை ஈர்க்கக் கூடிய விதத்தில் செயல்படுகின்றன. இயத்துக்குள் ஈர்க்கப்பட்ட வர்க்கங்களில் எந்த வர்க்கத்தின் எந்தக் கோரிக்கையைப் பிரதானப் படுத்துவது, எதுவரை பிரதானப் படுத்துவது, எந்தெந்த வழிகளில் பிரதானப் படுத்துவது என்பன போன்றவற்றில் சுற்றெல்லைக் கருத்தாக்கங்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க பங்கு இருக்கின்றது.

இறுதியாக, ஓர் இயத்தின் நடைமுறைப் படுத்துதலுக்கான வடிவம் காணத்தக்கது. நடைமுறைப் படுத்தலுக்கான இயக்கம், இயக்கத்தின் வடிவம், இயக்கம் முன்வைக்கும் கோரிக்கைகள், எந்த வர்க்கத்தின் கோரிக்கைகளை முன்வைக்கிறதோ அந்த வர்க்கத்தின் இயல்பு, எந்த வர்க்கத்திடம் முன்வைக்கிறதோ அதன் இயல்பு என இன்னோரன்ன பல அம்சங்களை இதில் குறிப்பிடலாம்.

மேலே சொன்னவை அனைத்தும் இயம் குறித்த வரையறையே. இங்கு இரண்டு விசயங்களைத் தொகுத்துக் கொண்டு மேலே செல்வோம்.

1. எந்தவோர் இயத்துக்கும் ஒரு வரையறை உண்டு என்பதைக் கோட்பாடு ரீதியில் ஒப்புக் கொள்கிறோம்.

2. ஒரு குறிப்பான கால எல்லை, ஓர் உலகக் கண்ணோட்டம், வர்க்க நிலைபாடு. மையம்—சுற்றெல்லைக் கருத்தாக்கங்கள், நடைமுறைப் படுத்தும் வடிவங்கள் ஆகியன வற்றைத் தவிர்த்து ஓர் இயத்தை அடையாளப் படுத்த இயலாது.

ஓர் இயத்துக்கான வரையறை என்பதைக் கோட்பாட்டு ரீதியில் மறுக்கிற சூழலிலும் ஓர் இயத்தின் வரலாற்றுவாத, வர்க்கவாத, சாராம்சவாத நிலைபாடுகளைப் புறக்கணிக்க முயல்கிற சூழலிலும் இதைச் சற்று அழுத்தமாகக் குறிப்பிட வேண்டியுள்ளது. ஓர் இயத்தைப் பற்றிய கூடுதலான மற்றும் அடிப்படையான உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்கு இந்த முறையியலே பயன்படுகிறது என்பதே என் கருத்து. மாறுபட்ட கருத்தாளர்கள் இது குறித்து விவாதிக்கலாம்.

2

தமிழ் பேசும் பகுதிகளில் பெரியாரைப் போல நீண்ட காலமாகவும் தொடர்ந்தும் (1920-1973) ஏதேனும் ஓர் இயக்கத்தின் தலைமையில் இருந்த தலைவர் எவரும் இல்லை. காங்கிரசு, சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சி, திராவிடர் கழகம் என்ற அமைப்புகளில் தலைமையில் இருந்ததோடு பொதுவுடைமைக் கருத்துப் பரப்புநராகவும் (1934-1935) பொதுவுடைமையரின் அனுதாபியாகவும் (1949-1951) இருந்துள்ளார். இத்தகைய நெடியதும் கலவையானதுமான குணங்களைக் கொண்ட பெரியாரின் உலகக் கண்ணோட்டத்தைக் காணலாம்.

இது குறித்த முறையான ஆய்வைத் தோழர் குணாவின் நூலிலும் (தமிழர் மெய்யியல் 1980) கட்டுரையிலும் (பரிமாணம் மே (1981) காணலாம். பெரியாரின் உலகக் கண்ணோட்டம் இறைபொருள் முதலிய பார்வை என்றும் அது இயந்திரவகைப்பட்ட பொருள்முதலியப் பார்வையாக உள்ளதென்றும் சாராம்சத்தில் கருத்து முதல்வாதமாக உள்ளதென்றும் கூறும் குணாவின் அடிப்படை முடிவுகள் ஏற்கத் தக்கவை.

படிப்பகம்

www.padippakam.com

அறிதலின் வளர்நிலைகளை புலனறிவு, பகுத்தறிவு, சமூக நடைமுறைஅறிவு எனப்பிரிக்கின்றனர். சமூகத்தோடு நடைமுறை உறவு வைத்துக் கொண்டிருக்கும் பொழுதே இந்த 3 கட்டங்களையும் காண இயலும். ஒரு பொருளை அல்லது நிகழ்வைக் காணும் பொழுது அதன் தனித்தனி அம்சங்களை மட்டுமே கண்டு அவற்றைப் புற உறவுகளில் வைத்து மட்டுமே காண்பதால் அவை குறித்த எண்ணற்ற தோற்றங்கள் உதயமாகின்றன. இவற்றை ஏற்றுக்கொள்தல் புலன் அறிதல் என்பர். புலன் அறிதலின் மூலம் பெற்ற எண்ணற்ற தோற்றங்களை மனிதசமூகம் தன்னிடத்தில் உள்ள அறிவுக்கருத்துக்களுடன் இணைக்கிறது. பொருளின்/நிகழ்வின் சாராம்சத்தையும் மொத்தத் தன்மையையும் உள் உறவுகளையும் ஆராய்ந்தும் பொருள்களின் மற்றும் நிகழ்வுகளின் பொதுத் தன்மைகளையும் குறிப்பான தன்மைகளையும் பிரித்தறிந்து கோட்பாடுகளை உருவாக்கத் துணைசெய்வதே பகுத்தறிவு எனப்படும். பகுத்தறிவு மூலம் உருவாக்கிக் கொண்ட கோட்பாடுகளை மீண்டும் சமூக நடைமுறைக்குப் பயன்படுத்தி அவற்றின் சரி/சரியற்ற தன்மையைக் கண்டு மனித சமூகம் நடைமுறை அறிவுக்குச் செல்கிறது.

பெரியாரியத்தின் கருத்து முதலியப் பார்வையும் வரையறுக்கப்பட்ட இயங்கியல் பார்வையும் அறிதல் போக்கில் எங்கனம் செயல் படுகின்றன எனக் காணவேண்டும். பெரியார் என்றாலே நாத்திகம், பகுத்தறிவு ஆகியன உடனடியாக நம் புலனறிவிற்குப் படுகின்றன. பெரியாரிய நாத்திகத்தையும் பெரியாரிய பகுத்றிவையும் நாம் காண வேண்டும். பகுத்தறிவுமனிதனுக்கு ஜீவநாடி (விடுதலை 20-6-73); பகுத்தறிவை மனிதன் மட்டுமே பயன் படுத்த முடியும் (சிந்தனை பக்.8-9)எனப்பெரியார் குறிப்பிடுகின்றார். இருப்பினும் பகுத்தறிவே மனிதர்களிடத்தில் கெட்ட குணங்களை உருவாக்கப் பயன்படுகின்றது, பகுத்தறிவுள்ள மனிதன் பலவிதத்திலும் தாழ்ந்தவன் என்றும் குறிப்பிட்டுள்ளார். இது போன்ற விளக்கங்கள் தத்துவ விளக்கம் (பக்.25) நூலிலும் காணப்படுகின்றது. இங்கு பெரியாரிடத்தில் செயல்படுவது,பொருள்கள்/நிகழ்வுகள் ஆகியவற்றின் பொருண்மை நிலையைச் சிறுமைப்படுத்தி அல்லது அவற்றின் சுற்றெல்லை அம்சங்களை மட்டுமே கணக்கிலெடுத்து, அல்லது பொருண்மை நிலையைக் கணக்கிலெடுக்காமல் வெறும் கருத்துகள் அடிப்படையில் கருத்தாக்கங்களை உருவாக்கும் பகுத்தறிவு ஆகும். இந்த விதத்தில் இது சாராம்சத்தில் கருத்து முதலியப் பகுத்தறிவு ஆகும். இத்தகைய பகுத்தறிவின் மூலமே, ஒரு மனிதனின் பிறவிக்கும் அவனது உடலமைப்புக்கும் ஏற்பவே அவனது குணம் அமைகின்றது என்ற கருத்துக்கும் பெரியார் வருகின்றார் (தத்துவ விளக்கம் பக். 27,28). இங்கு உயிர் மரபியல் (Genetic Aspects) கூறுகளுக்கும், குணத்துக்கும் உள்ள தொடர்பைப் பெரியார் ஒத்துக்கொள்வதால் பிறவி வழி குண நிர்ணயிப்பைக் குறிப்பிடுகின்றார்.

பெரியாரிய நாத்திகத்தைக் காண்போம். அவர் நாத்திகக் கருத்துகளைப் பல்வேறு கால கட்டங்களில் உருவாக்கித் தொகுத்துக் கொண்டார். மதத்தை வெறும் கருத்துகளின் இயக்கமாக மட்டும் காணாயல் அது சமூக நடைமுறையில் விளைவிக்கும் கேடுகளைக்கண்டறிந்த பெரியார் மதத்தை எதிர்த்த போராட்டத்தைத் தொடர்கையில் மதத்தினால் பயன்படும் பொருளியல் சக்திகளை முழுவதும் காணாமல் மதத்தின் பொருண்மையைச் சுருக்கிப் பார்த்து, தோற்றங்களையும், குறியீடுகளையும் முதன்மைப்படுத்தினார். இங்கு பெயர் உருக்கோட்பாடு எனும் கருத்து முதல் வாதப் பார்வையே பெரியாரிய நாத்திகத்தின் நடுவமாக உள்ளது என்ற குணாவின் கூற்று சரியே. இதனால் புரோகிதர் எதிர்ப்பு, மதக் குறியீடுகள் எதிர்ப்பு என்ற எல்லைகளுக்குள் இது சுருங்கிவிடுகிறது. மேலும் புரோகிதர் எதிர்ப்பும் பார்ப்பன புரோகிதர் எதிர்ப்பாக மட்டுமே அமைவதால் பார்ப்பனரல்லாதார் ஆத்திகத்தைப் பெரியாரியம் பகைமையாகவும் கருதுவது இல்லை. பெரியாரின் சகா கைவல்யம் பொன்னுசாமி சுயமரியாதை இயக்கத்துக்கே ஆத்திகவிளக்கம் கொடுப்பதற்கு இதுவே காரணம் ஆகும்(சு.ம. இயக்கப் பொன் விழா மலர், பக். 115-117).

இத்தகைய உலகக் கண்ணோட்டம் கொண்ட பெரியாரியம் எத்தகைய குறிப்பான கால சமூக நிலைமையை விளங்கிக் கொள்ளவும் செயல்படவும் உருவாகிப் பயன்பட்டது / பயன்பட்டுக் கொண்டு வருகின்றது எனக் காணவேண்டும். பெரியாரின் சமூக ஈடுபாட்டுக் காலம் (1920—1973) ஏகாதிபத்தியத்தின் ஆளுகைக்கு உட்பட்டும் அரைநிலவுடைமைச் செல்வாக்குக்கு உட்பட்டும் இருந்த காலம் ஆகும்.

சென்னை மாகாணத்தில் ஏனைய பகுதிகளை விட தமிழ்பேசும் பகுதிகளில் தொழிலும், வர்த்தகமும் பணப்பயிர் விளைச்சலும் குறிப்பிடத்தக்க அளவு மேம்பட்டிருந்தன. இங்கு முதல் உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட பல்வேறு பொருளாதார, அரசியல், கலாச்சார நிகழ்வுகளைத் தொகுத்துக் காணலாம்.

1) தமிழ்பேசும் பகுதிகளின் தொழிலிலும் வர்த்தகத்திலும் பிரிட்டன் மூலதனமும் இந்திய மூலதனமும் இருந்தனவெனினும் இந்திய மூலதனம் மிகமிகக் குறைவு. இந்திய மூலதனத்தையும் வடஇந்திய மூலதனம் (**பார்சி, பனியா**) என்றும் பிரதேச மூலதனம் (**செட்டியார், பிராமணர், நாயுடு, பேரி செட்டியார்**) எனப் பிரிக்கலாம். இவற்றுள் பிரிட்டன் மூலதனத்துக்கு இந்திய தேசிய அடையாளமும் பார்சி, பனியா மூலதனத்

படிப்பகம்

www.padippakam.com

துக்கு பிரதேச அடையாளமும் இல்லை. இவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு பிரிட்டன் மூலதனமும் வடஇந்திய பார்சி பனியா மூலதனமும், பிரதேச செட்டியார், பிராமணர் மூலதனமும் ஒன்றோடொன்று கலந்தே தொழிலில் ஈடுபட்டிருந்தன; தனித்தனியாகவும் இயங்கின. இந்திய மூலதனங்களில் பார்சி மற்றும் பனியா மூலதனம் அதிகத் திரட்சி கொண்டதாகவும் அடுத்த திரட்சி நிலையில் செட்டியார் மூலதனமும் பிராமணர் மூலதனமும் இருந்தன. அதே நேரத்தில் இரண்டாம் உலகப் போரை ஒட்டியும் பின்னரும் பார்சி, பனியா மூலதனப் பெருக்கம் விரிவடைந்து வங்கித் தொழிலிலும் காப்பீட்டுத் தொழிலிலும் செட்டியார் மூலதனத்தைவிட முன்னேறி நிலையில் உருமாறியது. அதோடு மட்டுமின்றி பார்சி, பனியா மூலதனத்துடன் பிராமண மூலதனம் இணைந்து இயங்குதல் பார்சி-பனியா மூலதனத்துடன் செட்டியார் மூலதனம் இணைந்து இயங்குதலை விட அதிகமாயிற்று. இத்தகு சூழலில் எல்லாவற்றுக்கும் மேலாதிக்க நிலையில் பிரிட்டன் மூலதனம் தங்குதடையின்றி இயங்கவும் செட்டியார் மூலதனம் தனக்குமேல் நிலையில் உள்ள பார்சி-பனியா மூலதனத்துடனும் தனக்கு கீழ்நிலையில் உள்ள பிராமண மூலதனத்துடனும் மோதிக் கொண்டும் ஒன்றுபட்டுக் கொண்டும் இயங்க வேண்டி இருந்தது.

2) தமிழ் பேசும் பகுதிகளில் ஜமீன்தாரி முறை (ஒரே பிராமணர் ஜமீன்தாரர் மட்டுமே இருந்தார்) 1930களில் ஏற்பட்ட சர்வதேச நிதித் தேக்கத்தினால் தன் பொருளாதார நியாயத்தை முற்றாக இழந்து போயிருந்தது. அரசுக்குக் குத்தகை செலுத்த இயலாமல் பல ஜமீன்கள் விலைக்கு விற்கப்பட்டன. இனாம் தாரிமுறையில் (90 சதவீதம் பிராமண நிலவுடைமை) நிலங்களை விற்பதற்குரிய அதிகாரத்தை வழங்கியவுடன் பிராமண நிலவுடைமையாளர்கள் காலப்போக்கில் தொழில்களை மாற்றிக் கொண்டு அறிவு ஜீவித்துறையினராகவும் அதிகாரச் சேவையினராயும் நகர்ப்புறத்துக்கு மாறியிருந்தனர். நிலவுரிமை, குத்தகையாளர்களுக்குச் (கள்ளர், மூப்பனார், யாதவர், வன்னியர்) சென்றது. இங்கு ரயத்துவாரி முறையிலான நிலவுடைமையே நான்கில் மூன்று பங்கு. மடங்கள் (வேளாளர், பிராமணர் கட்டுப்பாட்டில் உள்ளவை), கோயில்கள் (முதலில் வேளாளர்-பிராமணர் கூட்டுக்கட்டுப்பாடு, பின்னர் பிராமணரின் தர்ம ரட்சண சபாக் கட்டுப்பாடு, இறுதியில் இந்து அறநிலையச் சட்டத்தின் மூலம் அரசு அதிகாரத்துவக் கட்டுப்பாடு) ஆகியவற்றுக்கு சொந்தமான நிலவுடைமை மிக அதிகம். தமிழ் பேசும் பகுதிகளில் பாலாறு, காவேரி, தாமிரவருணி. வைகை ஆகிய நதிகளின் வளமான பகுதிகளில் பிராமண நிலவுடைமை கனிசமானது. இவர்களுள்ளும் நெல்லையிலும் தஞ்சையிலும் மிக அதிகம். இவர்கள் தமிழ், தெலுங்கு, மராத்தி, கன்னடம் பேசும் பிராமணர்கள், இவர்களுக்கு இணையாக நில வுடைமை பெற்றிருந்த வேளாளர்கள், இவர்களிடத்தில் குத்தகையாளராகவும் ஓரளவு நில வுடைமையாளராகவும் இருந்த கள்ளர், மூப்பனார் (தஞ்சை மாவட்டம்), அகமுடையார் (மதுரை மாவட்டம்) வன்னியர் (ஆர்க்காட்டுப்பகுதி), மறவர் (நெல்லை) ஆகிய சாதிகளிலிருந்து அந்தந்தப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க நில வுடைமையாளர்கள் உருவாயினர். இவை மிகச் சிறிதளவு சமூக அசைவு ஆகும். பணப்பயிர் விளைச்சல் பகுதிகளில் பேரளவு சமூக அசைவு ஏற்பட்டது. கரும்பு, நிலக்கடலை, மஞ்சள், பருத்தி, மிளகாய் ஆகியனவற்றை ஏகாதிபத்தியத்தின் தேவைக்கு விளைவித்த கவுண்டர், நாயுடு (கொங்குப் பகுதி) ரெட்டியார், நாயுடு, மறவர் (தென் மாவட்டங்கள்) வன்னியர் ஆகிய சாதிகளிலிருந்து பேரளவு பணப் புழக்கம் கொண்ட முதலாளிய விவசாயிகள் தோன்றினர். நாடார் (தென் பகுதி) பலிஜா நாயுடு (கொங்கு நாயுடு), பிராமணர் (ஆர்க்காட்டுப்பகுதி, தாமிரவருணிப் பகுதி) ஆகிய சாதிகளிலிருந்து தரகு வணிகர்கள் பெருத்தனர்.

3) முதல் உலகப்போர் தொடங்கி 1947 வரையுள்ள புள்ளி விவரங்களைக் கண்டால் உயர்நிலைப்பள்ளிக் கல்வியிலும், கல்லூரிக் கல்வியிலும் பிராமணர்களே குறிப்பிடத்தக்க அளவு இருப்பினும் கல்வி கற்றோரில் பிராமணா அல்லாதோர் சதவீதம் முன்னேறிக் கொண்டு இருந்தது; இவர்களுள் பலிஜா நாயுடு, வேளாளர், செட்டியார், நாடார், கவுண்டர் என்ற வரிசையில் அமைந்திருந்தனர். இன்னும் பார்த்தால், இந்த சாதிகளில் மற்ற அதிகாரிகள், சிறு அதிகாரிகள், வணிகர்கள், நிலவுடைமையாளர்கள் ஆகியோர் குடும்பங்களிலிருந்து வந்தவர்களே பெரிதும் கல்வி அறிவு பெற்றனர். கைவினைச் சாதிகள், சேவை சாதிகள், தாழ்த்தப்பட்ட சாதிகள் ஆகியவற்றைச் சேர்ந்த குடும்பத்தினர் கல்வி அறிவு பெறுதல் மிகமிகக் குறைவாகவே இருந்தது.

4) 1860கள் முதற்கொண்டு இந்தியர்களுக்கு உள்ளூர் நிர்வாகத்தில் பங்கு கிடைத்தது. சென்னை மகாணத்தைப் பொறுத்து 1860கள் முதற்கொண்டு விவரங்களைக்காணும் பொழுது நகரசபைகளிலும் மாவட்டக் கழகங்களிலும் பார்ப்பனர் அல்லாதோரே பெரும்பான்மையாக இருந்தனர். பார்ப்பனர்கள் தங்கள் மக்கள் தொகை எண்ணிக்கையோடு ஒப்பிடும் பொழுது அவர்களின் பிரதிநிதித்துவம் கனிசமாக இருந்தது. 1937 வரை சொத்து உடையவர்களும் வருமானவரி கட்டுபவர்களும் மட்டுமே வாக்குரிமையும் பிரதிநிதித்துவ உரிமையும் இருந்தன. அதாவது 1937க்கு முன்னர் 3 சதவீத மக்களே இப்படி அமைந்து இருந்தனர். இந்த 3 சதவீதத்துக்குள்ளும் பார்ப்பனரல்லாதாரே பெரும் பான்மையாக இருந்தனரெனினும் அந்த

படிப்பகம்

www.padippakam.com

விகிதாச்சாரத்துக்கு ஏற்ப இவர்களுக்கு பிரதிநிதித்துவம் அமையவில்லை. தாழ்த்தப்பட்டோர் நியமனப்பதவிகளில் மட்டுமே இருந்தனர். எனவே பிரிட்டன் ஏகாதிபத்தியத்தின் வழி நடத்துதலிலான ஜனநாயகத்தில் (Guided Democracy) கீழ் அமைப்புகளிலிருந்து மாகாண அமைப்புகள் வரை பார்ப்பனர்க்கு ஒரு மேல் நோக்கிய ஆதிக்கமும் பார்ப்பனரல்லாதார்க்கு அத்தகைய ஆதிக்கமின்மையும் இருந்தது.

5) இந்த நூற்றாண்டின் முதல் 50 ஆண்டுகளில் அரசு அதிகாரத்துவத்தில் இந்தியருக்கான உயர் பதவி முதல் அடிநிலைப்பதவி வரையிலான புள்ளி விவரங்களைக் கண்டால் சென்னை மாகாணத்தைப் பொறுத்து பதவிகளின் எல்லா நிலைகளிலும் பார்ப்பனரே எப்போதும் தனித்த பெரும்பான்மையில் இருந்தனர். எனினும் காலவரிசையில் காணும் பொழுது பார்ப்பனர் அல்லாதார் பங்கு எல்லாப் பதவிகளிலும் வளர்ந்து கொண்டே வந்தது. எனவே பார்ப்பனரின் மிகு நிலையும் பார்ப்பனர் அல்லாதாரின் வளர்நிலையும் இருந்தன.

6) ஏகாதிபத்தியத்தின் பொருளாதார மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களினால் இங்கு பல சாதியினரிடையே புதிய மேல்நிலை வர்க்க உருவாக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கும் பொழுதே, அதன் உடன் நிகழ்வாகவே அடிநிலை வர்க்க உருவாக்கம் நிகழ்ந்தேறியது. ஏகாதிபத்தியத்துக்கும் அதன் மேல்நிலை வர்க்கங்களுக்கும நெருக்கடிகள் ஏற்படும் பொழுது அவற்றின் சுமைகளைத் தாங்கும் சக்திகளாகவும் பயன்பட்டன. ரயத்வாரி, ஜமீன்தாரி நிலவுடைமை உறவில் கூலி விவசாயிகள், சிறு விவசாயிகள், குத்தகையாளர் எனப்பல அடுக்குகள் உருவாயின. ஜமீன் நிலங்களில் உள்ள குத்தகையாளர்கள், பொருளாதாரத் தேக்க காலத்தில் மிகவும் துயரத்துக்கு உள்ளாயினர். விவசாய அடிநிலை அடுக்கில் சிறு விவசாயிகளே எண்ணிக்கையில் அதிகமாக இருப்பினும் ஒவ்வொரு பத்தாண்டிற்குப் பிறகு சிறு விவசாயிகள் எண்ணிக்கை குறைந்து விவசாயக் கூலிகள் தொகை அதிகமாகிக் கொண்டே இருந்தது. மரபுப் பயிர்ப் பகுதியாயினும் பணப்பயிர் பகுதியாயினும் வேளாண்மை, ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரத்தோடு கட்டப்பட்டிருந்ததனால் 20லட்சம் விவசாயக் கூலிகளின் குடும்பங்களும் 50 லட்சம் சிறு விவசாயிகள் மற்றும் குத்தகையாளர் குடும்பங்களும் சொல்லொணாத் துயரத்துக்கு உள்ளாகி நின்றன. விவசாயத்துக்கு அடுத்த நிலையில் மக்கள் பங்கெடுத்த நெசவுத் தொழில், ஏகாதிபத்தியத்தின் கட்டுப்படுத்தப்பட்ட பணப்பயிர் விளைச்சலாலும் இயந்திரமயமாதலாலும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். சென்னை மாகாணத்திலேயே தமிழ்ப் பகுதியே அதிகம் தொழில்மயம் அடைந்ததாகும். ஏகாதிபத்தியத்தினாலும் ஏகாதிபத்தியத்தின் நிதி மூலதனத் துணைகொண்டும் ஏகாதிபத்தியத்தோடு கொண்ட உறவினால் உருவான மூலதனத்திரட்சியோடும் இங்கு தொடங்கப்பட்ட ஆலைகளில் தொழிலாளர் வர்க்கம் தோன்றியது. குறிப்பாக பஞ்சாலையில் 1 லட்சத்துக்கும் அதிகமானோரும் புகைவண்டித் தொழிற்சாலையில் 40 ஆயிரம் பேர்களும் சிமெண்ட்டு, பேப்பர் ஆலை கரும்பாலை, மோட்டார் ஆலை, சைக்கிள் ஆலை என்பன போன்றவற்றில் 50 ஆயிரம் பேர்களும் கொண்ட ஒரு கணிசமான தொழிலாளர் வர்க்கம் உருவாயிற்று. அதே நேரத்தில் இயந்திரமயமாகாத பல தொழில்களில்— தீப்பெட்டி ஆலை, சுருட்டுத் தொழில், தோல் பதனிடல் ஆகியவற்றில் இலட்சக்கணக்கானோர் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இவற்றின் வணிகத்தை ஏகாதிபத்தியம் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தது. இப்படி பாதிக்கப்பட்ட நெசவாளர்கள், ஆலைத் தொழிலாளர், இயந்திரமயமாகாத தொழில்களில் ஈடுபடுவோர் ஆகியோர் பெரும்பாலும் பிற்பட்ட சாதிகளையும் தாழ்த்தப்பட்ட சாதிகளையும் சார்ந்தவர்களாகவே இருந்தனர்.

7) அன்றைய சமூகம் பல அடுக்குகளாகப் பிரிந்திருந்தது. சாதி ரீதியிலும், மத ரீதியிலும் மக்கள் அடையாளப்படுத்தப்பட்டனர். சென்னை மாகாணத்தில் 89 சதவீதம் இந்துக்கள், 7 சதவீதம் முசுலீம்கள், 4 சதவீதம் கிறிஸ்துவர்கள் இருந்தனர். 89சதவீத இந்துக்களில் 3 சதவீதம் பார்ப்பனர்களும் 19 சதவீதம் முன்னேறிய பார்ப்பனரல்லாதாரும் 50 சதவீதம் பிற்படுத்தப்பட்ட பார்ப்பனரல்லாதாரும் 17 சதவீதம் தாழ்த்தப்பட்டோரும் இருந்தனர். உள்கலாச்சார மற்றும் வர்க்க வேறுபாடுகள் பார்ப்பனர்களிடையே இருந்த பொழுதினும் இரண்டு நிலைகளில் பார்ப்பனர்களின் மேலாதிக்கம் நிலைநின்றது. ஒன்று, சாதிய சமூக அமைப்பில் பார்ப்பனரே உச்சத்தில் இருந்தனர். இரண்டாவது, சமய ரீதியில் இந்துசமயமும் இந்து சமயத்தில் வேதாகம நெறிப்பட்ட வழிமுறையும் அதில் பார்ப்பனரின் உச்சநிலையும் இருந்தது. எனவே அன்றைய சமூகத்தில் பார்ப்பனரின் மேலாதிக்கம் இரண்டு வகைகளில் இருந்தது. பார்ப்பனர்களிடமிருந்து உருவான வட்டி முதலாளிகள், ஆலை முதலாளிகள், அரசு அதிகாரிகள் ஆகியோர் பார்ப்பனரல்லாதாரிடமிருந்து தோன்றிய இத்தகைய சமூகப் பிரிவுகளோடு முரண்பாடும் ஒற்றுமையும் கொண்டிருந்தனர். இத்தகைய இரண்டு சமூகப் பிரிவுகள் மக்களை ஒடுக்கும் பொழுது இரண்டின் ஒற்றுமையைக் காணலாம். அதே நேரத்தில் அதிகமாக யார் ஒடுக்குவது என்பதில் இரண்டின் முரண்பாட்டையும் காணலாம். இதை இன்னும் நுணுகிக் கண்டால் 19 சதவீதம் முன்னேறிய பார்ப்பனரல்லாத சாதிகளில் தமிழ் பேசும் பகுதிகளில் நாட்டுக்கோட்டை செட்டியார், வேளாளர்

படிப்பகம்

www.padippakam.com

பலிஜா நாயுடு, கவுண்டர், ரெட்டியார், கள்ளர், நாடார் ஆகிய சாதிகளில் உருவான மேல்தட்டு வர்க்கங்களுக்கும் 3 சதவீதம் பார்ப்பனரில் உருவான மேல்தட்டு வர்க்கங்களுக்கும் இடையிலான முரண்பாடும் ஒற்றுமையும் ஆகும். இது ஒருவித மேலாதிக்கம். இது பொருளாதார தளத்தில் செயல்பட்டது. இரண்டாவது மேலாதிக்கம், சாதியத்திலும், சமயத்திலும் உச்ச நிலை வழங்கப்பட்டவர்கள் என்ற விதத்தில் பார்ப்பனர்கள், பார்ப்பனர் அல்லாதாரைவிட சமூக மேலோங்கு நிலையில் பெருமையுற இருந்தனர் என்பதாகும். இது சமூக வாழ்வியல் மேலாதிக்கமாகும்.

இங்குகூட பார்ப்பனர் அல்லாதார் (முன்னேறியோர் 19+பிற்பட்டோர் 50 - 69 சதவீதம்) என்ற மக்கட் பிரிவில் பிற்பட்டோரான 50 சதவீதத்தையும் தாழ்த்தப்பட்டோரான 17சதவீதத்தையும் தனித்துக் காணவேண்டியுள்ளது. இவர்களே பெரும்பகுதி கூலி விவசாயிகள், சிறு விவசாயிகள், குத்தகையாளர், நெசவாளர்கள், ஆலைத் தொழிலாளர், பீடி, சுருட்டுத் தொழில் சுகாதாரப் பணியாளர்கள் என இருந்தனர். அது மட்டுமின்றி இவர்களிடமிருந்து மேல்நிலை வர்க்க உருவாக்கம் மிக மிகக் குறைவு. இங்கு இன்னொன்றை அழுத்தமாகக் கூறவேண்டும். இந்துக்களில் தாழ்த்தப்பட்டோரை இணைத்துப் புள்ளி விவரம் குறிப்பிடுதல் ஒரு மோசடி ஆகும். சமூக வாழ்வியல் ரீதியில் சாதி இந்துக்கள் (பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாதார்கள் 3 + 69 = 72 சதவீதம்) தாழ்த்தப்பட்டவர்களை (17 சதவீதம்) முற்றாகவே எவ்வித விதிவிலக்குமின்றி புறந்தள்ளி இருந்தனர். இப்படி தீண்டாமை, தனித்த குடியிருப்பு, தனித்த வாழ்க்கை முறை, பொது இடங்களைப் பயன்படுத்த மறுப்பு என்பன போன்ற இழிவாக்கங்களின் மூலம் சாதி இந்துக்கள் (72 சதவீதம்) தாழ்த்தப்பட்டோரை (17 சதவீதம்) தொலை தூரப் படுத்தி இருந்தனர். பார்ப்பனர்க்குள்ளும் வேறுபாடு உண்டு; பார்ப்பனரல்லாதார்க்குள்ளும் வேறுபாடு உண்டு. எனினும் சாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்டோர்க்கும் இடையில் மட்டுமே தீண்டாமை உண்டு. இது சாதி ரீதியிலும் இந்து சமய ரீதியிலும் ஏற்புடைமை பெற்றிருந்தது. இந்து சமயத்திலிருந்து கிறிஸ்துவ சமயத்துக்கு மாறிய பின்னும் இத்தகைய மனிதத்துவ மறுப்புகள் தொடர்ந்தும் இறுக்கமாகவும் நிலவின. மத வழியிலான தீண்டாமையைப் போலவே மூட நம்பிக்கையும் பகுத்தறிவு அற்ற போக்கும் பெண்ணடிமைத் தனமும் சமூக வாழ்வியற் சிந்தனைப் போக்குகளாகவே இருந்தன.

இத்தகைய குறிப்பான பொருளாதார-அரசியல் கலாச்சார நிகழ்வுகளில் இயங்கிய பெரியார், இவற்றை விளங்கிய / விளக்கிய விதத்தையும் கண்டறிவதன் ஊடே பெரியாரியத்தின் பயன்பாட்டுத்தனத்தை நாம் அறிந்து கொள்ள இயலும். காங்கிரசில் காணப்பட்ட இந்து சனாதனவாதம், வகுப்புவாரி இட ஒதுக்கீடு எதிர்ப்பு என்பன போன்ற ஜனநாயக விரோத அம்சங்களை எதிர்த்து வெளியேறிய (1925) பெரியார் பல்வேறு தொடர்ச்சி மற்றும் தொடர்பறுந்த நிலைபாடுகளின் வழியாகக் கடந்து வந்தார்.

1) பெரியாருக்கும் அரசுக் கட்டமைப்புக்கும் இடையிலான உறவைத்தெரிந்து கொள்வோம். பிரிட்டிசு இந்திய அரசுக் கட்டமைப்போடு பெரியார் நல்லுறவு கொண்டிருந்தார். பெரியாரின் தலைமையில் நீதிக்கட்சி இருந்தபொழுது சென்னை ஆளுநர் அதை அரசாங்கம் அமைக்க அழைத்த பொழுது மறுத்த காலங்களிலும் (1939—1946) பெரியார் இத்தகைய நிலைபாடு மேற்கொண்டிருந்தார். திராவிட நாடு பிரிவினை கேட்கும் பொழுதும் ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு உட்பட்ட தன்மையதாகவே கேட்டுள்ளார். ஏகாதிபத்தியக்கட்டமைப்பின்கீழ் சென்னை மாகாணத்தில் ஏற்பட்ட அரசாங்கங்களில் இராசாசி இராசாங்கத்தைத் தவிர (1937-1939) ஏனையவற்றை ஆதரித்தார். அதே போன்று இந்திய அரசுக்கட்டமைப்பின் கீழ் இங்கு அமைக்கப்பட்ட காங்கிரசு அரசாங்கம் (1950—1967) தி.மு க. அரசாங்கம் (1967—1973) ஆகியவற்றை ஆதரித்தார். இப்போதும் விதி விலக்கு இராசாசி காங்கிரசு அரசாங்கம் (1952—1954) இதிலும் இராசாசியின் பல நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்து 1953இல் கொணர்ந்த குலக்கல்வித் திட்டத்துக்குப் பின்னரே எதிர்ப்பு நிலைபாடு இருந்தது. இவையெல்லாவற்றையும் செறிவாக்கிக்காணும் பொழுது ஐம்பது ஆண்டுகளில் நான்கே ஆண்டுகள் அரசாங்கத்தை எதிர்த்துள்ளார். இராசாசி ஒரு பார்ப்பனர் என்பதோடு கண்டால் பார்ப்பனர் தலைமையிலான அரசாங்கத்தைப் பெரியார் எதிர்த்துள்ளார் எனத் தெரியலாம். பெரியாருக்கும் அரசுக் கட்டமைப்புக்கும் இடையிலான இந்த உறவு குறிப்பிடத்தக்கது. பெரியாரியத்தின் முன்னெல்லையும், பின்னெல்லையும் இந்தக் கட்டமைப்புக்குள்ளே அடங்கியுள்ளது.

2) 1925இல் காங்கிரசைவிட்டு வெளியேறிய பின், சுயமரியாதை இயக்கம் என்ற அமைப்பின் கீழ் வருணாசிரம எதிர்ப்பு, மூட நம்பிக்கை எதிர்ப்பு, புரோகித எதிர்ப்பு, பெண்ணடிமைத்தன எதிர்ப்பு என்பன போன்ற கருத்தாக்கங்களைப் பிரச்சாரம் செய்து கொண்டு திரட்டப்பட்ட ஒருகூட்டத்தை நீதிக்கட்சிக்குரிய ஆதரவு சக்தியாக உருமாற்றிக் கொண்டே இருந்தார். சென்னை மாகாணத்தில் உள்ள பார்ப்பனரல்லாத முதலாளிகள், வட்டி முதலாளிகள், நிலவுடைமையாளர்கள் (குறிப்பாக ஜமீன்தாரர்கள்) ஆகியோர் நலன்களை மையப்படுத்தி படித்த அறிவாளிகளின் வேலை வாய்ப்பு, சட்ட

படிப்பகம்

www.padippakam.com

மன்ற வாய்ப்பு ஆகியவற்றை முன்னிலைப் படுத்தி இயங்கிய நீதிக்கட்சியின் ஆதரவு சக்தி யாக விளங்கினார். இன்னும் குறிப்பாகச் சொன்னால் ஏகாதிபத்தியப் பொருளாதாரக் கட்டமைப்பில் அதைச் சார்ந்திருந்த முதலாளி கள், ஜமீன்தாரர்கள், தரகு வணிகர்கள் (குறிப் பாக நாட்டுக்கோட்டை செட்டியார்கள், பலிஜா நாயுடு, கவுண்டர், நாடார், ரெட்டியார், நாயுடு சாதிகளை சார்ந்தவர்கள்) ஆகியோரின் நலன் களை மையப்படுத்தினர். இதன் திடப்படுத் திய வெளிப்பாடு 1930களுக்குப்பின்னரே காண லாம். அப்போது வடஇந்தியா பார்சி, பனியா மூலதனக்குவியல் இங்கு வங்கித் தொழிலிலும் இன்சூரன்சு தொழிலிலும் அதிகமானதோடு இவர்களுடன் பார்ப்பன மூலதனக் கூட்டுத் தொழிலும் அதிகமாகத் தொடங்கின. இக்கால கட்டத்தில் வடவர், பார்ப்பனர் ஆகிய இரண்டு தொடர்களையும் உள்ளடக்கி **ஆரியர்** என்ற கருத்தாக்கம் அழுத்தம் பெறலாயிற்று. இதற்கு முன்னர் பார்ப்பனர் அல்லாதார் என்ற தொடர் இந்த இடத்தில் **திராவிடர்** என்ற கருத்தாக்கம் அழுத்தம் பெறலாயிற்று. 1930களுக்குப் பின் னர் உருவான சூழலில் இதைக்காண இயலும். தமிழ் பேசும் பகுதிகளில் உள்ள பார்ப்பனரல் லாத தமிழ் மற்றும் தெலுங்கு முதலாளிகளை யும் நிலவுடைமையாளர்களையும் அறிவாளி களையும் குறிக்க திராவிடர் என்பதே அழுத்தம் பெறவேண்டி வந்தது. இந்தக்கட்டத்தில் ஏகாதி பத்தியத்தின் நேரடி ஆட்சியின்கீழ் திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கை என்பது ஏகாதி பத்தியப் பொருளாதாரக் கட்டமைப் போடு தொடர்பு கொண்ட தமிழ்ப் பிரதேச முதலாளி களின் மூலதனப்பாதுகாப்புக்கும் சந்தை உத்திர வாதத்துக்கும் உரியதாகக் காண இயலும். தமிழ்ப் பிரதேச செட்டியார், நாயுடு. பலிஜா நாயுடு சாதிகளின் முதலாளிகட்கும் பார்சி, பனியா, தமிழ்ப்பிரதேசப் பார்ப்பனர் சாதிகளின் முதலாளிகட்கும் இடையிலான முரண்பாட்டில் இக்கோரிக்கையின் மையம் அடங்கி இருந்த தைக் காணலாம். தமிழ்ப் பிரதேச திராவிடர் முதலாளிகளின் மூலதன விரிவாக்கத்துக்கும் சந்தைப்பெருக்கத்துக்கும் உரிய வகைகள் வேறு வழிகளில் பின்பற்றப்படுமானால் இத்தகைய முரண்பாடு மென்மையடைந்த பின்னர் இந்தியக் கட்டமைப்பின்கீழ் இயங்கும் காலங்களில் இத் தகைய பிரிவினைக் கோரிக்கை மெல்லமெல்ல இல்லாமற் போயிற்று. பின்னாளில் **தட்சிணப் பிரதேச திட்டத்தைப்** (இது இந்திய அரசின் கீழுள்ள திராவிட மாகாணம்) பெரியார் எதிர்த் தார். **தமிழ்நாடு தமிழருக்கே** என்று வைக்கப் பட்ட அரசியல் முழக்கம் கூட காலப் போக்கில் தேய்வடைந்து போனது. பிரதேசத் தரகு முத லாளிகளின் சார்பில் இவற்றுக்கான பொருண் மைத் தேவை அற்றுப்போய்விட்டது. இன்னும் குறிப்பாகச் சொன்னால் பிரதேசத் தரகு முத லாளிகளின் மூலதனத்தோடு அதாவது திராவி டர் மூலதனத்தோடு பார்சி, பனியா, பார்ப்பனர் மூலதனம் அதாவது ஆரியர் மூலதனம் இணைந்து கூட்டுத் தொழில்கள் 1950க்குப் பிறகு பெருத்தன என்பதும் பிரதேசத் தரகு முதலாளிகட்கு இந்தியச்சந்தை கிடைத்தது என் பதும் இங்கு கவனிக்கத்தக்கவை. நீதிக்கட்சி அரசாங்க ஆதரவு முதற்கொண்டு ஏகாதிபத்தி யத்தின்கீழ் திராவிட நாடு, இந்திய அரசுக்கட்ட மைப்பின்கீழ் தட்சிணப் பிரதேச எதிர்ப்பு, தனித் தமிழ்நாடு, பின்னர் காங்கிரசு அரசாங்க ஆதரவு வரையிலான பெரியாரின் அரசியல் கோரிக்கை களில் ஏற்ற இறக்கங்கள், சுய முரண்பாடுகள், தொடர்ச்சியின்மை ஆகியவை இருப்பினும் தமிழ்ப் பிரதேச திராவிடத் தரகு முதலாளிகளின் கோரிக்கை அதில் தொடர்ந்து இருந்தது. வட வர், தமிழ்ப் பிரதேசபார்ப்பனர் முதலாளி களோடு திராவிட முதலாளிகளின் மோதலை வெளிப்படுத்தும் அரசியல் நிகழ்வுப் போக்கு களாக பெரியாரின் நடைமுறை அமைந்திருந் தது. ஆனால் இவர்களுக்கு இடையே ஒற்றுமை அம்சமும் இருந்ததனால் அதுவே **வளரும் போக்காக** இருந்ததனால் பெரியார் தன் அரசி யல் கோரிக்கைகளை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் கொண்டுசெல்ல இயலவில்லை. அதாவது **அவரது அரசியல் எல்லைகளை தமிழ்ப் பிரதேச திராவிடத் தரகு முதலாளியம் வரையறை செய்தது**.

3) 1920 நெல்லை காங்கிரசு மாநாட்டிலிருந்து வகுப்புவாரி இட ஒதுக்கீட்டுக்கான கோரிக்கை யைப் பெரியாரிடத்தில் காணலாம். பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், தீண்டத்தகார் ஆகிய மூன்று பிரிவினர்க்கும் மக்கள் தொகை அடிப் படையில் சட்டசபைகளிலும் பதவிப் பொறுப்பு களிலும் ஒதுக்கீடு அமைய வேண்டுமெனப் பெரி யார் வலியுறுத்தி வந்தார். இது ஏகாதிபத்திய அரசுக்கட்டமைப்பின்கீழ் சட்டமன்ற மற்றும் அதிகாரத்துவ பிரதிநிதித்துவமாக இருப்பினும் அவற்றில் உள்ள பாரதூரமான சமனற்ற நிலை யை—குறிப்பாக பார்ப்பனரின் மிதமிஞ்சிய மேலாதிக்கத்தை எதிர்த்த ஜனநாயகப் போக் காகும். பெரியாரிடத்தில் நாம் காணலாகும் தொடர்ச்சியான போக்காகும். இந்திய அரசி யல் சட்டத்தில் பிற்பட்ட மக்களுக்கு இடஒதுக் கீட்டு உரிமைகள் மறுக்கப்பட்டபொழுது பெரி யாரின் போராட்டத்தின் விளைவாகவே முதல் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதன் விளைவாக **பெரியாருக்கு பார்ப்பனரல்லா தாருக்கு ஒரு பரந்துபட்ட நடுத்தரவர்க்க அடித் தளம் கிடைத்தது**. இங்கும் ஓர் அம்சத்தை ஊன் றிக் கவனிக்க வேண்டும். வகுப்புவாரி இட ஒதுக்கீடு உண்மையில் செயலுக்கு வந்த 1927க் குப்பின் (இதில் பார்ப்பனர் அல்லாதார்க்கு 5/12பங்கு) பத்தாண்டுக்குள்ளேயே அதுகுறித்த பரிசீலனை தேவைப்பட்டது. பார்ப்பனரல்லா தார்க்குள் முன்னேறிய சாதியினர் மிகப்பெரும் பங்கை (22 சதவீத மக்கள் 27 சதவீதம் பதவி கள்) அடைந்தனர் என்றும் பின்னடைந்த சாதி

படிப்பகம்

www.padippakam.com

யினர் மிகக்குறைந்தபங்கை (50சதவீதம் மக்கள் 2 சதவீதம் பதவிகள்) அடைந்தனர் என்றும் 1935 இல் பிற்பட்ட சாதிகள் எழுப்பிய குரலில் சமூக நீதிக்கான தேவை இருந்தது. பெரியாரைப் பொறுத்து 'நம்மவர்க்குள்ளேயும் சாதியின்படியே வேண்டுமென்றால் எடுத்துக் கொள்ளட்டும்' எனப்பின்னாளில் (விடுதலை 9.4.50) சில இடங்களில் குறிப்பிட்டாலும்கூட, பார்ப்பனரல்லாதாரில் துணைப் பிரிவுகள் உருவாக்குவதை அவர் பெரிதும் விரும்பவில்லை. 1947 இல் பார்ப்பனரல்லாத பிற்பட்ட மக்களுக்கென ஒதுக்கீடு வழங்கப்பட்டபொழுது அதை ஆதரித்துள்ளார். 1950 அரசியல் சட்டத்தில் இது மறுக்கப்பட்ட பொழுது இதற்காகப் போராடி சட்டத் திருத்தத்துக்கு வகை செய்தார். இதன் மூலம் **படித்த பிற்பட்ட சாதி இளைஞர்களின் ஆதரவு வளையத்தை நீடித்துப் பெற்றுக் கொண்டே வந்தார்.**

4) தமிழர்களில் பெரும்பான்மையாகவும் பிற்பட்ட/தாழ்த்தப்பட்ட சாதிகளில் ஆகப் பெரும்பான்மையாகவும் உள்ள தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், கூலி விவசாயிகள்,நெசவாளர்கள் என இன்னோரன்ன அடிப்படை மக்களுக்கும் பொருளாதார மேலாதிக்க சக்திகள் மற்றும் அரசுக் கட்டமைப்பு ஆகியவற்றுக்கும் இடையிலான முரண்பாட்டில் பெரியாரின் ஈடுபாடு கருத்தக்கது. ஓரிரு சந்தர்ப்பங்களைத் தவிர அனைத்திலும் தொழிலாளர்கள் பக்கம் நிற்பதாகவே பெரியார் நமக்குத்தோற்றமளிக்கிறார். ஆனால் இத்தகைய முரண்பாடுகளுக்கான காரணங்களை முன்வைக்கும் பொழுதும் இவற்றுக்கான சமூக சக்திகளைக் கண்டறியும் பொழுதும் இரண்டாவது, மூன்றாவது தளங்களில் செயல்பட்டுக் கொண்டிருப்பனவற்றை முன்னிலைப்படுத்துகின்றார். 1933—35 காலத்தில் வெளிப்படையான பொதுவுடைமைப் பிரச்சாரம் செய்து அதன்பின் சட்ட ரீதியான தடையினால் பின்னடைந்து பிரச்சாரத்தைக் கைவிட்டாலும், பொதுவுடைமைக்கு எதிராக எப்போதும் இறுதிவரை பிரச்சாரம் செய்யவில்லை. இன்னும் சொன்னால் 1949—51 கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டு, கட்சியினர் மீது கடும்தாக்குதல் தொடுக்கும் காலங்களில் கம்யூனிஸ்டுகள்மீதான ஒடுக்குதலைக் கண்டித்தும் கம்யூனிஸ்டுகளின் ''பலாத்கார வழியைக்'' கண்டித்தும் பெரியாரின் பிரச்சாரம் அமைந்தது. இதன் மூலம் தாங்களே உண்மையான பொதுவுடைமைக் கட்சி என்றும்கூட பிரச்சாரம் அமைந்தது. அடிப்படை மக்களின் போராட்டங்களின் பொழுது **அனுதாபம் தோய்ந்த வாயுபசாரம்** இருந்தாலும் இத்தகைய பிரச்சனைகளுக்கெல்லாம் காரணங்கள் சமூக ஜாதி பேத முறையில் இருக்கிறதென்றும் கடவுள், கர்மம் போன்றவற்றின் மீதான நம்பிக்கையில் இருக்கிறதென்றும் பிறவியின் பெயரால் கற்பிக்கப்பட்ட பேதங்களில் இருக்கிறதென்றும் குறிப்பிட்டார்; இவற்றுக்கெல்லாம் ஆதாரமான பார்ப்பன சாஸ்திரங்களில் உள்ள தென்றும் குறிப்பிட்டார். பார்ப்பனர்களின் இனாம் நிலவுடைமை ஒழிப்பை (1949) வெகுவாக ஆதரித்தாரெனினும் பார்ப்பனரல்லாத ஜமீன் நிலவுடைமை ஒழிப்பைபற்றி மௌனமாக இருந்த பெரியார், ஜமீன்குத்தகை மற்றும் கூலி விவசாயிகளின் கலவரங்களின் பொழுது ஜமீன் தாரர்களையும் வட்டி முதலாளிகளையும் மேடையில் அமர்த்திக்கொண்டு இரு தரப்பினரின் சிக்கல்களைப் பேசியுள்ளார். கைத்தறி நெசவாளர்களின் போராட்டத்தின் பொழுது (1949), தமிழ்ப் பிரதேச செட்டியார், நாயுடு நூற்பாலைகளின் நூல், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிக் கொள்ளை இலாபம் சம்பாதித்துக் கொண்டிருப்பதை புறக்கணித்துவிட்டு, வடநாட்டுத் துணிகளின் இறக்குமதி மட்டுமே காரணம் எனக்கூறி வடநாட்டுத் துணிகளை எரிக்கும் போராட்டத்தில் இறங்கினார்; செட்டியார், வடவர் ஆகியோரின் கூட்டுக் கொள்ளை இலாபத்தை எதிர்க்கும் பொதுவுடைமையரின் போராட்டத்தைக் கடுமையாக எதிர்க்கின்றார். இவை எல்லாவற்றின் மீதான அரசு இயந்திரத்தின் தன்மையைப் புறக்கணிக்கிறார்.

இங்கு பெரியார் குறிப்பிடும் ஜாதிபேதம், கடவுள், கர்மம் மீதான நம்பிக்கை, பிறவிப் பேதங்கள், பார்ப்பன சாஸ்திரம் என இவை எல்லாவற்றையும் நாம் காரணிகளாக அங்கீகரிக்கிற அதே நேரத்தில் இவையெல்லாவற்றையும் விட பொருளாதார சுரண்டலை முன்னிலைப் படுத்தாமல் பார்ப்பனர்—வடவர் சுரண்டலை முன்னிலைப் படுத்தி அவற்றோடு பிரதேச முதலாளிகளின் சுரண்டலையும் இணைக்காமல் பெரியார் பிரச்சாரம் செய்தல் கவனிக்கத்தக்கது அதோடு மட்டுமின்றி இந்த வர்க்கங்களின் சுரண்டல் தன்மையைப் பாதுகாக்கும் அரசு இயந்திரத்தின் தன்மையைப் பெரியார் அம்பலப்படுத்த வில்லை. இவை எல்லாவற்றோடும் பெரியாரின் அனுதாபம் தோய்ந்த வாயுபசாரத்தைக் காணவேண்டும். பொதுவுடைமைக் கட்சி வெளிப்படையாக இயங்கி மக்கள் திரள் அமைப்புகளைக் கட்டத்தொடங்கிய காலத்தில் (1952) பெரியார் கட்டிய திராவிடர் உழவர், தொழிலாளர் சங்கங்கள், தொழிற்சங்க இயக்கத்தில் புதிய வகைப்பட்ட சித்தாந்தத்தில் அமைக்கப்பட்டன. திராவிட முதலாளிகள், தொழிலாளர்கள், திராவிட மிராசுதாரர்கள், பண்ணையாள்கள் கொண்ட **இன ஒருமை மற்றும் வர்க்க முரண்கொண்ட சங்கங்களை** உருவாக்க முனைந்தார். பெரியாரால் **பங்காளி நிலை** என வருணிக்கப்பட்ட இது **வர்க்க சமரச சித்தாந்தம்** ஆகும், பிற்பட்ட / தாழ்த்தப்பட்ட மக்களில் உள்ள பெரும்பான்மையான அடிப்படை மக்களின்பால் அனுதாபம் தோய்ந்த வார்த்தைகளைப் பிரச்சாரம் செய்து கொண்டே அவர்களின் கொடுமைகளுக்கான முதன்மைக்

படிப்பகம்

www.padippakam.com

காரணங்களை முன்னிலைப் படுத்தாமலும் காரணஸ்தர்களில் பார்ப்பனரல்லாதாரை முன்னிலைப்படுத்தாமலும் செயலளவில் மூடி மறைத்து விடுவதற்கு உரிய பரந்துபட்ட செயல் தந்திரம் கொண்ட ஓர் அணுகுமுறை இதன் ஊடே படர்ந்துள்ளது.

5) பெரியாரியம் தேசிய இனச் சிக்கலைப் பல்வேறு காலகட்டங்களின் ஊடே கையாண்டது. குடியேற்ற ஆதிக்கக் காலத்தில் ஏகாதிபத்தியத்தின் பாதுகாப்பின் கீழ் திராவிடநாடு கோரியது இதுகுறித்து நீதிகட்சியின் ஆந்திரபிரிவுநேர்மையாக இல்லை. திராவிடநாடு எனும் வரையறை பல தேசிய இனங்களை உள்ளடக்கியதாகவும் இன ரீதியிலான சித்தாந்தத்தை முன்வைப்பதாகவும் வடவர் எதிர்ப்பு நோக்கிலானதாகவும் இருந்தது. அன்றைய சூழலில் ஒரு தேசிய இனப் பிரதேச, மொழி அடிப்படையில் அமைந்திருக்க இயலுமா என்பது ஐயமே. ஆனால் அடுத்த பத்தாண்டுகளில் மொழிவாரி மாநிலங்களை நோக்கிப் புறநிலை அரசியல் யதார்த்தம் முன்னேறிச் செல்லும் பொழுது பெரியார் அது 'திராவிடக் கலாச்சாரத்துக்கும் திராவிட சமுதாயத்துக்கும் தேய்வு ஏற்பட்டு விடுமென்று' கருதினார். (விடுதலை 1—8—48) அதோடு மொழி அடிப்படையில் ஒரு நாடு தனியாகப் பிரிவதற்கு அவர் அப்போது உடன்படவும் இல்லை (விடுதலை 7—1—1953). இக்காலத்தில் (1956) சவகர்லால்நேரு விடுத்த தட்சிணப் பிரதேசத் திட்டத்தையும் பெரியார் எதிர்த்தார். இது, அன்றைய சென்னை மாகாணத்தை உள்ளடக்கி திருவிதாங்கூர், கொச்சி, மைசூர், ஐதராபாத் ஆகியவற்றைக் கொண்ட பெரு மாநிலமாகும். இது சமஸ்தானப் பகுதிகளையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான **திராவிடம்** ஆகும். அதாவது இந்திய அரசுக் கட்டமைப்பின் கீழான திராவிட நாடு. இதில் பார்ப்பனரின் அடிப்படை நலன்கள் அடங்கியிருப்பதாகவும் (விடுதலை 1—3—55), இதில் வடவருக்கும் மலையாளிகளுக்கும் பார்ப்பனருக்கும் முழு அதிகாரம் சென்றுவிடும் என்பதாகவும் (விடுதலை 14—6—56) குறிப்பிட்டு பெரியார் இதை மறுக்கிறபொழுது **அன்றைய முதல்வர் காமராசர் மீதான ஆதரவு நிலைபாடு** என்பதாக மட்டுமே இதைக் காணாமல் தமிழ்பேசும் பகுதிகளில் உள்ள மலையாளர் அல்லாத திராவிடரை மனதிற் கொண்டுள்ளதை வெளிப்படுத்துகிறது. மொழிவாரி மாநிலத்துக்குப் பின்னரும் தனித்தமிழ்நாடு கோரும் பொழுதும் திராவிடர் என்ற பெயரிடலைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருந்தமைக்குக் காரணம், அவர் கூறுவது போன்று **பார்ப்பனரைத் தவிர்க்க வேண்டும் என்பது மட்டுமல்ல;** அது ஒரு பக்கம். இன்னொரு பக்கம், தமிழ் **நாட்டில் உள்ள தமிழர், தெலுங்கர், கன்னடர் ஆகியோரை ஒருங்கிணைக்கும் தொடரும் ஆகும்.** தமிழ்நாடு பிரிவினை கிடைத்தபின் வடவரை விரட்ட வெள்ளையருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் (விடுதலை 29—8—56) என்பது, வடவரை விரட்டுவது மட்டுமல்ல, வெள்ளையரோடு உறவைப் புதுப்பித்துக் கொள்தலாகும்.

இங்கு மொழிவகைப்பட்ட தேசிய இனக் கருத்தாக்கத்தை விட பிரதேச வகைப்பட்ட இனக் **கருத்தாக்கமே மேலோங்கியும் ஏகாதிபத்தியத்துக்கு உட்பட்ட தீர்வும்** காணப்படுகின்றன. தேசிய இனச்சிக்கலின் வெளிப்பாட்டு வடிவமான மொழிச்சிக்கலிலும் பெரியார் ஆங்கில ஆதரவு, கட்டாய இந்தி எதிர்ப்பு என்பன வற்றில் உறுதியாக இருந்தாரே தவிர தமிழ் ஆதரவில் உறுதியாக இல்லை. கட்டாய இந்தியை தேசிய இனங்களுக்கு இடையிலான சமத்துவக் குலைப்பாகக் காணாமல் ஆரியர் சதியாகவும் வடவர் சூழ்ச்சியாகவும் மட்டுமே வெளிப்படுத்துகின்றார். மேலும் மொழிப் போராட்டங்கள் அனைத்தும் அரசுக் கட்டமைப்பின் மீதான நம்பிக்கையோடே முடித்து வைக்கப்பட்டன. பெரியாரின் **திராவிட இனக்கருத்தாக்கம் தமிழ்த் தேசிய இன உந்துதலுக்குத் தடை.** அது மட்டுமின்றி அரசுக் கட்டமைப்புக்கு விசுவாசமாகத் தொடர்ந்து இருந்து கொண்டே அவ்வப்போதைய அரசாங்கங்களுடன் **தொடக்கத்தில் முரண்பாடு இறுதியில் ஐக்கியம்** என்ற செயல் தந்திரத்தோடு கூடிய ஓர் அணுகுமுறை இதில் உள்ளது.

6) பெரியாரியத்தின் பார்ப்பனிய எதிர்ப்பு குறிப்பிடத்தக்கது. பார்ப்பனியம் குறித்த பரவலான, அழுத்தமான மற்றும் தொடர்ச்சியான சமூக உணர்வை ஏற்படுத்தியதில் பெரியாரின் பங்கு ஈடு இணையற்றது. சமூக அளவிலும் கலாச்சார அளவிலும் எல்லா சாதிமக்களுக்கும் சமத்துவத்தையும் ஜனநாயகத்தையும் மறுக்கிற பார்ப்பனியத்தை பெரியாரியம் அம்பலப்படுத்துகிறது. இங்கும் கூட சிலவற்றைக் கவனிக்க வேண்டும். பார்ப்பனியம் என்ற ஒரு கருத்துருவத்துக்குள் மக்களுக்கு எதிரான அனைத்து கருத்துருவங்களையும் பெரியார் இணைக்க முயல்கின்றார். இதன் மூலம் பார்ப்பனியம் மட்டுமே எதிரி எனச்சுருக்கி ஏனைய மக்கள் விரோதக் கருத்துருவங்களை பின்னிலைப் படுத்துகின்றார். இது மட்டுமல்ல பார்ப்பனியத்தின் பொருண்மை இருப்பு பார்ப்பனர்களின் பொருளியல் மேம்பாட்டிலும் இதை உறுதிப் படுத்திய நிலவுடைமைப் பொருளியல் அம்சங்களிலும் உள்ளது. ஆனால் இத்தகைய தொடர் சங்கிலிக் காரணங்களுக்குள்ளும் பொருண்மை அடிப்படைக்குள்ளும் பெரியார் புக விரும்பவில்லை. எனினும் பார்ப்பனியத்தையும் பார்ப்பனர்களின் பொருளியல் மேம்பாட்டையும் தனித்தனி தளங்களாகக் கண்டு, பார்ப்பனரின் பொருளாதார ஆதிக்கத்தை அம்பலப்படுத்துகின்றார். பெரியாரியத்தின் இன ரீதியிலான சித்தாந்தமே இதன் அடிப்படையெனினும் இதற்குக் கூட ஒரு வரையறை இருந்திருக்

படிப்பகம்

www.padippakam.com

கிறது. நீதிக்கட்சிக்கு நெருக்கடி ஏற்பட்ட பொழுது நீதிக்கட்சியின் சட்டமன்றப் பிரிவில் பார்ப்பனர்களை இணைத்துக்கொள்ளலாம் என்பதற்குப் பெரியார் 'சம்மதமும் வாக்குத் தத்தமும்' செய்தார் (குடி அரசு 13—10—29) சுப்பராயனின் முதல்வர் காலத்தில் குளித்தலை மிராசுதாரர் சேதுரத்தின அய்யர் அமைச்சராக இருந்ததை (1928—1930) பெரியார் ஆதரித்துள்ளார். சுயமரியாதை இயக்க மாநாடுகளில் இந்த அய்யர் முன்னிலை வகித்துள்ளார். அரசியல் விசயத்தில் சட்டத்திற்க்கு கட்டுப்பட்டுக் கிளர்ச்சி செய்யும் சமூக விசயத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்க ஒப்புக்கொள்ளும் பார்ப்பனர்களை நீதிக்கட்சியில் உறுப்பினர்களாகச் சேர்க்கலாம் (குடியரசு 15—9—1935) எனப் பெரியார் கருதினார். தேர்தல்களில் பார்ப்பனர்களை ஆதரித்துள்ளார் (1934 முதல் 1967 வரை). வாசன், அனந்தராமகிருஷ்ணன் போன்ற பார்ப்பன முதலாளிகள் அளித்த காணிக்கைகளைப் பெற்றுக்கொண்டார் (வீரமணி அறிக்கை, விடுதலை, 3—10—91) இவர்கள் எல்லோரும் பார்ப்பனியத்தில் ஊறிய பார்ப்பன மிராசுதாரர்களும் முதலாளிகளும் அதிகாரிகளும் ஆவர். எனினும் இவர்களோடு தேவைப்படுகிற நேரத்தில் கை கோர்த்துச் செயல்படக் கூடிய அளவில் பெரியாரிய சமூக நடைமுறை இருந்தது. இது இனவகைப்பட்ட சித்தாந்தத்துக்கு ஒரு வரையறையை ஏற்படுத்தி விடுகிறது. ஆரியர்—திராவிடர் என்று இன ரீதியில் சமூக நிகழ்வுகளை அணுகினாலும் கூட, தேவைப்படும் நேரங்களில் ஆரியரிலும் திராவிடரிலும் மேல்நிலை வர்க்கங்கள் ஒன்றிணைதலுக்கு உறிய வாய்ப்பை இது ஏற்படுத்திக் கொடுக்கிறது.

7) சேரன்மாதேவி குருகுலத் தனியிடச் சிக்கல் பார்ப்பனரல்லாதார்க்குரிய சுயமரியாதையையும் வைக்கம் போராட்டம் தாழ்த்தப் பட்டோர்க்கு சுயமரியாதையையும் வேண்டி நடத்தப்பட்ட ஜனநாயகப் போராட்டங்களாகும். சாதியக் கொடுமைகளையும் பார்ப்பனர் மேலாதிக்கத்தையும் மிகச் சரியாகக் கண்டறிந்த பெரியாரியம் சாதியம் அகமணமுறை போன்ற சமூக நிகழ்வுகளினாலும் அரசியல் சட்ட அந்தஸ்து போன்ற அரசியல் நிகழ்வுகளினாலும் கட்டிக் காக்கப்படுவதாகக் கருதுகிற பொழுது சாதியத்தின் பொருண்மை இருப்பின் முதன்மையைக் கருதவில்லை. இதன் விளைவாக சாதிய எதிர்ப்புப் போராட்டங்களை ஒரு குறிப்பிட்ட கருத்து மட்டத்துக்குமேல் அதனால் உயர்த்த முடியவில்லை சாதிய வேறுபாடுகள் மிக்க ஒரு சமூகத்தில் பல்வேறு பொருண்மை நிலைகளில் இருப்புக் கொண்டுள்ள சாதியத்தின் தன்மைகளைக் கணக்கிலெடுப்பதில் ஒரு குறிப்பிட்ட அளவே செல்ல முயன்றதால் **சாதிய ஒழிப்பு** என்ற நிலைபாடு **சாதிகளுக்கு இடையிலான சமத்துவம்** என்பதாகக் குறுகியது. சாதிய சமத்துவம் என்பது சாதிய ஒழிப்புக்கான இடைகாலத்திய நிகழ்வுப் போக்கு என்பதாக இராமல் அதுவே முழுமை அடைந்த ஒன்றாக உருமாறி விடுகிறது. மேலும், இத்தகைய சாதிய சமத்துவம், **பார்ப்பனரல்லாத சாதிகளின் ஒருங்கிணைந்த பலத்தொகுப்பு** என்ற நிலையில் அதன் சமூகப் பயன்பாட்டுத் தளத்தில் செயல்படுகிறது. பெரியாரின் அகநிலைக் கண்ணோட்டத்தில் சாதிய ஒழிப்பேஇருப்பினும் கூட, பெரியாரியத்தின் செயல்பாட்டுப் புறநிலை விளைவாக **பார்ப்பனரல்லாத சாதிய பலத் தொகுப்பின் அடிப்படையிலான சாதிய சமத்துவம்** ஏற்படுதலுக்குக் காரணங்கள் உண்டு. அவை சாதியத்தின் பொருண்மை நிலையைக் காணத் தவறுதலும் சாதிகளுக்குள் ஏற்பட்டு வரும் வர்க்க மாறுதல்களைக் கணக்கிலெடுக்கத் தவறுதலும் இவற்றை அடிப்படைகளாகக் கொண்டு சாதிய சிக்கல்களை அணுக மறுத்தலும் ஆகும்.

இவற்றோடு மட்டுமல்லாமல், சாதிய சமத்துவம் என்பது கூட, பார்ப்பனர்க்கும் அல்லாதார்க்கும் இடையில் மட்டுமான நிகழ்வா அன்றி தாழ்த்தப்பட்டோர் உள்ளிட்ட எல்லா சாதிகளுக்கும் இடையிலான நிகழ்வா என்பது பற்றிய சிக்கலாகும். தாழ்த்தப்பட்டோரோடு தம்மை முற்றாக ஐக்கியப்படுத்திக் கொள்ளாத நிலையில் தாழ்த்தப்பட்டோருக்கான ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும்கோரி பார்ப்பனரல்லாத சாதிகளிடத்தில் பெரியார் வெகுவாக வழக்குரைத்து நின்ற பொழுதினும் கூட, பார்ப்பனர்க்கும் பார்ப்பனரல்லாதார்க்கும் இடையிலான சாதிய முரண்பாடுகளை அவர் கையாண்ட விதத்துக்கும் பார்ப்பனரல்லாதார்க்கும் தாழ்த்தபட்டோக்கும் இடையிலான சாதிய முரண்பாடுகளைக் கையாண்ட விதத்துக்கும் வேலைபாடுகள் நிரம்ப இருந்தன. முன்னதைப் பகைமை நிலையில் கருதினார்; பின்னதைப் பகைமையற்றதாகக் கருதினார். பார்ப்பனரை எதிர்க்கும் ஒரு பரந்துபட்ட கூட்டணியில் தாழ்த பட்டோரை வென்றெடுக்கப் பெரியாரியம் பயன்பட்டது. இந்த அளவுக்குத் தாழ்த்தப் பட்டோரிடையே சமூக சலனங்கள் ஏற்படுத்தப் பயன்பட்டதே தவிர அதற்கு அடுத்து முன்னோக்கிய பாதையை உள்ளடக்கியதாக இல்லை. ஆதி திராவிடப் பண்ணையாள்களுக்கு திராவிட மிராசுதாரர்களின் தலைமையைத் தக்கவைத்துக் கொண்டேயும் பார்ப்பனரல்லாத ஜமீன் தாரர்களின் கொடூரங்களை எதிர்த்து ஆதி திராவிடக் குடிகளின் பகைக் கொந்தளிப்பைக் கண்டுகொள்ளாமலும் அவர்களிடத்தில் தீண்டாமை ஒழிப்புக்கான பெரியாரின் பிரச்சாரம் களப் பொருத்தமின்றி இருந்தது. **பிராமணாள் கபே** எழுத்துகளை அழிப்பதில் இருந்த நியாயமான முனைப்பு, திராவிட மிராசுகளின் சாணிப்பால் கொடுத்தல், சவுக்கடி அடித்தல் என்பனவற்றைத் தடுப்பதிலோ

படிப்பகம்

www.padippakam.com

தனிக்குவளை, பொது இடப்பயன்பாடு மறுப்பு என்பனவற்றை எதிர்த்து கிளர்ச்சி செய்தலிலோ (ஏன், தீவிரமாகப் பிரச்சாரம் செய்தலிலோ) பெரியார் நியாயமான முனைப்பைக்காட்ட இயலாதபடி அவரது சமூக வரம்பு குறுக்கிட்டது என்பதைப் பதிவுசெய்தலே நேர்மையாகும். அது மட்டுமின்றி பெரியார் கட்டிய பல்வேறு அமைப்பு களிலும் அவரது நியமனப் பொறுப்புகளிலும் அவர் பின்னாளில் உருவாக்கிய பிரச்சார நிதி நிறுவனங்களிலும் தாழ்த்தப்பட்டோர்க்கு உரிய மிகக் குறைவான (அல்லது இல்லாத) பங்கோ டும் இதை அணுகவேண்டும். சாதிய ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு குறித்துப் பெரியாரியத்தின் எல்லைகளைக் காண மறுப்பது சரியாகாது.

8) பெண்கள் விடுதலை பற்றிய பெரியாரின் கருத்துக்கள் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்தன. பெரியாரின் சமகாலத்தில் வாழ்ந்த சிந்தனையாளர்கள் பலரைக் காட்டிலும் அவரது பார்வை முன்னோக்கிய தாகவும் சமத்துவ நோக்கிலாகவும் அமைந்தது. தமிழ்ச் சமுதாயத் தின் தொன்றுதொட்டு உருவாகித் திடப்பட்டு இறுகிப்போன பல கருத்துகளின் மீது பெரியா ரின் சரியான தாக்குதல் வலுவாக அமைந்தது. சிறுவயதுப் பெண் திருமணத்தடை (சார்தா மசோதா) தேவதாசி ஒழிப்புச் சட்டம் ஆகிய சட்டங்கள் நிறைவேறுதலுக்குப் பெரியார் உறு துணையாக நின்றார். விதவை மறுமணம், கலப்பு மணம் ஆகியவற்றைப் பிரச்சாரம் செய் தார். தனியுடைமையின் மீது பெண்ணடிமை ஆதாரம் கொண்டுள்ளது எனக் குறிப்பிட்டார். இவையெல்லாம் பொதுவாக எந்தவொரு சமூக சீர்திருத்தவாதியும் குறிப்பிடலாம். பெரியாரின் சிந்தனைகள் இந்த வரம்பைக் கடந்து நிற் கின்றன. ஒரு வர்க்கத்தின் ஆணினம் அனுப விக்கும் உரிமைகளை அந்த வர்க்கத்தின் பெண் ணினம் சமமாக அனுபவிக்க வேண்டும் என்ற நிலையையும் கூட பெரியார் சிந்தனைகள் தாண்டுகின்றன. ஆண்/பெண் உறவு நிலை களில் எல்லா ஆண்களுக்கும் நிகராக எல்லாப் பெண்களும் சமத்துவமாக மதிக்கப்படவேண்டும் என்பதோடு மட்டுமின்றி உடலியல் சமனற்ற தன்மையை ஒட்டி எழுப்பப்படும் சமூக வியல் சமனற்ற தன்மைகளைக் களையும் நோக்கில் பெரியாரியம் அமைந்துள்ளது. கற்பு, கர்ப்பத் தடை, ஒரு மணம், ஆகியவை குறித்த பெரியா ரியக் கருத்துகள் அதற்கு முந்தைய கற்பிதப் புனிதங்களைப் போட்டு உடைக்கின்றன. பெண் மீதான கற்பின் ஒரு சார்பு அழுத்தம் கண்டிக்கப் படுவதோடு இருதரப்புக்கும் இடையிலான சமமான/சுயேச்சைக் கற்பு வலியுறுத்தப் படு கிறது. இதைக் கூடப் பாரதியார். கற்பெனப் படுவதை இருபாலாருக்கும் பொதுவில் வைப் போம் என்று கூறியுள்ளார், இதில் குடும்ப உறவுகளுக்குள் ஆண் பெண் சேர்க்கை குறித்த கருத்தில் ஜன நாயகமும் சமத்துவமும் உள்ளது இந்த ஜன நாயகத்தையும் சமத்துவத்தையும் மீறி ஆண் சோரம்போகும் பட்சத்தில் பெண்தன் நிர்ப்பந்தக் கற்பையும் அடிமைக் கற்பையும் உதறிவிட்டு விருப்பப்பட்ட வருடன் சேர்க்கை கொள்ளலாம் என்பதே பெரியாரியம். இதை ஆணின் அராஜகத்துக்கான பதிலீடு என்பதாகக் காணாமல் குடும்ப சமத்துவ சீர்குலைவுக்கு எதிரான நியாயமான கலகம் எனக்காணலாம். கர்ப்பத்தடையை, வெறும் பொருளாதாரச் சிக்கன செயலாகவும் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டமாகவும் காணாமல் பெண்கள் விடுதலை அடையவும் சுயேச்சை பெறவும் ஆனதாகவும் பெரியாரியம் காண்கிறது; பெண்கள் பிள்ளைப் பேறே அடைய வேண்டியதில்லை எனவும் காண்கிறது. பிள்ளைப் பேற்றிலும் வளர்ப்பி லும் பெண்களுக்கு உண்டான உடலியல்/சமூக வியல் துன்பங்களைக் குறைத்துக்கொண்டு வர வேண்டிய தேவையை நிறைவேற்றும் போக் கில் துரிதச் செயல்பாடு இன்றியமையாமை. ஆனால் மனிதப் பெருக்கத்துக்கு பெண்ணின் உடலைச் சார்ந்திருக்க வேண்டாத அளவுக்கு அறிவியல் தொழில் நுட்பம் வளரும் காலம் வரை திட்டமிட்ட மனிதப் பெருக்கத்துக்கு இன்றைய முறையின் தொடர்ச்சி என்பது இயற் கையின் தேவை ஆகும். அத்தகு நேரம் வருவ தற்கு முன்னரே பெண்டிர் பிள்ளைப் பேறு மறுப்பு என்பது சமூகக் கட்டங்களைக் கணக்கி லெடுக்காமல் தாண்டிக் குதித்தலாகும். ஆனால் அத்தகைய கட்டத்தை நோக்கி நிகழ்காலத்தை இழுத்துச் செல்லவும் அதற்கான கருத்துப் பரப்பலில் ஈடுபடலும் இன்றைய தேவைகளா கும். அந்த விதத்தில்பெரியாரியத்தின் பங்களிப்பு மகத்தானது. இன்னொன்று ஒரு கணவன் சில நியாயமான காரணங்களினால் ஒரு மனைவிக் கும் மேலாக இன்னொரு பெண்ணை மணந்து அதே குடும்ப அமைப்புக்குள் இருப்பதற்கு சாஸ்திரம் மற்றும் சட்ட ஏற்புடைமைகள் இருக் கும் பொழுது இதே நியாயமான காரணங்களி னால் இந்த உரிமை பெண்ணுக்கும் குடும்ப அமைப்புக்குள்ளே அளிக்கப்படவேண்டும் என்று பெரியார் குறிப்பிடுகின்றார். குடும்ப அமைப் புக்குள் ஆணுக்கு வழங்கப்பட்டுள்ள பாலுறவு நபர் எண்ணிக்கை விரிவாக்கம் பெண்ணுக்கும் வழங்கப்படவேண்டும் என்ற பெரியாரியத்தில் சமூக நியாயம் இருப்பதோடு, குடும்ப அமைப்பு பரிபூரண சமத்துவமாக மாறவேண்டும் என்ப தற்கான போர்க் குரலும் உள்ளது. முழுமை யான ஆண்/பெண் சமத்துவ நிலையை நோக் கிய இத்தகைய கருத்துகளைப் பெரியாரியம் வழங்குவதில் நாம் பெருமைப் படலாம்.

இத்தகைய பொருளாதார, அரசியல், கலாச் சாரத் தளங்களைக் கொண்ட பெரியாரியத்தின் **மையத்தையும் சுற்றெல்லை அம்சங்களையும்** கணக்கிலெடுத்தல் அவசியம். பெரியார் சமூக சீர்திருத்தவாதியாகவும் அரசியல் கிளர்ச்சியாள ராகவும் பொருளாதார நிகழ்வுகளில் குறுக்கிடு பவராகவும் இருந்துள்ளார். இவை எல்லா

படிப்பகம்

www.padippakam.com

வற்றுக்குள்ளும் தீர்மானகரமான உள்ளார்ந்த அம்சங்கள், இவற்றுக்கு இடையிலான இணைப்புகள், இவற்றில் செயல்படும் விதிகள் ஆகியவற்றைக் கண்டறிந்து பருண்மையோடு இணைத்துப் பார்ப்பதன் மூலம் பெரியாரிய மையத்தைக் கண்டறிய இயலும்.

நிலவுகிற முதலாளிய/நிலவுடைமை அரசுக் கட்டமைப்பை ஒத்துக்கொண்டு அரசாங்கங்களுடன் ஐக்கியத்தை நோக்கிய மோதல்களில் ஈடுபடும் பொழுதும், 1930க்குப்பின் தமிழ்ப் பிரதேசத்தின் குறிப்பான வளர்ச்சியான திராவிட முதலாளிகள், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் நலன்களை உள்ளடக்கி வடவர்/பார்ப்பனர் முதலாளிகளுடனான மோதல்களைக் கருத்திற் கொண்ட அரசியல் குறுக்கீடுகளாயினும், அரசதிகாரத்தில் பார்ப்பன அதிகாரத்துவத்துக்கு நிகராக பார்ப்பனரல்லாதார் அதிகாரத்துவத்துக்குக் குரல்கொடுக்கும் பொழுதும், அடிப்படை மக்கள் தம்மீதான பொருளாதார ஒடுக்குதல்களை எதிர்த்த காலங்களில் வர்க்கச் சுரண்டலைக் காரணமாக முன்னிலைப் படுத்தாமல் வடவர்-பார்ப்பன முதலாளிகளின் சுரண்டலை எதிர்க்கும் பரந்துபட்ட இடதுசாரி வாயுபசாரக் காலங்களிலும், தேசிய இனச் சிக்கலின் ஒரு வெளிப்பாடான மொழிச் சிக்கலைக் கையாளும் பொழுதும், சாதியம் மற்றும் தீண்டாமை, ஆகியன பற்றிய வலுவான குறுக்கீடுகளின் பொழுதும் பெரியாரியத்தின் உள்ளார்ந்த இயக்கு விதியாக இன வழிப்பட்ட சித்தாந்தமே அடிப்படையில் செயல் படுகிறதாக இருப்பினும் இதற்குள்ளும் ஒரு வர்க்கக் கண்ணோட்டம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இத்தகைய உள்ளார்ந்த இயக்குவிதி **எந்த சமூகப்பிரிவின் நலன்களை வெளிப்படுத்துவதற்குப் பயன் படுகின்றது** என்பதே முக்கியம் ஆகும். ஒரு சித்தாந்தம் **எத்தகைய மக்கள்திரளை அதிகமாகக் கவர்ந்திழுத்தது என்பதைக் காட்டிலும்** எத்தகைய சமூகப்பிரிவின் நலன்களைப் புற நிலையில் நிறைவு செய்தற்குப் பயன்படுகிறது என்பது முதன்மையாகும். பெரியாரியம், பார்ப்பனரல்லாத நகர்ப்புற—கிராமப்புற சாதிகளில் உள்ள படித்த நடுத்தரவர்க்க இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்திழுத்தது என்பது உண்மையே. இவர்கள் பெரியாரியத்தின் இட ஒதுக்கீட்டில், இடதுசாரிப் பிரச்சாரத்தில், சாதிய எதிர்ப்பில், தேசிய இனச்சிக்கல் போராட்டத்தில் பார்ப்பனிய எதிர்ப்பில் வெகுவாகக் கவர்ந்திழுக்கப்படல் பொருத்தமே. ஆனால் இவர்களைக் காட்டிலும் தமிழ்ப்பிரதேச திராவிட முதலாளிகள் நிலப்பிரபுக்கள் இவர்களில் குறிப்பாக முதலாளிகள் ஆகியோரின் நலன்களைப் புற நிலையில் நிறைவுசெய்ய பெரியாரியம் கேடயமும் வாளுமாக இருந்தது. இது மட்டுமல்ல, பெரியாரியத்தின் செயல் பாட்டுத்தளத்தை இந்த வர்க்கங்களின் நலன்களே இறுதியாகத் தீர்மானித்து விடுகின்றன. மேலும் இன வழிப்பட்ட சித்தாந்தத்தையும் ஓரிரு சமயங்களில் (அல்லது தேவைப்படின்) தாண்டி, பார்ப்பன/வடவர் முதலாளிகளோடு இந்த வர்க்கங்களே உறவு கொள்கின்றன. இந்த விதத்தில் பெரியாரியத்தின் மையத்தை அடையாளம் காண இயலும். **நிலவுகிற அரசுக் கட்டமைப்பின் கீழ் தமிழ்ப் பிரதேசத்தின் திராவிடர் முதலாளிகளின் நலன்களுக்காக வடவர்-பார்ப்பன முதலாளிகளோடு மோதல் என்பதை அடையாளம் காண இயலும்.** இது மட்டுமே பெரியாரியம் அல்ல. இந்த மையத்தைச் சுற்றிச் சுற்றி பல வளையங்கள் இருக்கின்றன. இந்த வளையங்களைக் கணக்கிலெடுக்காமல் இருக்க இயலாது. இவற்றுக்கும் மையத்துக்கும் இடையில் இயைபும் முரணும் இருப்பதுண்டு.

உதாரணமாக **இட ஒதுக்கீடு**. இதில் பெரியாரியத்தின் நீண்டகாலமாகத் தொடர்ந்த மற்றும் ஜனநாயக ரீதியிலான பங்களிப்பை நாம் முற்றாக ஏற்கும் பொழுது அது இந்த மையத்தோடு முரண்பட வில்லை எனவும் கூறியாகவேண்டும். இட ஒதுக்கீடு, அரசுக் கட்டமைப்பின் கீழ் உயர் சாதி ஆதிக்கத்தைத் தளர்த்தி அனைத்து சாதிகளின் பங்கை உறுதி செய்கிறது. முதலாளியத்தின் பொருளியல் நலன்களில் குறுக்கிடுவது இல்லை. பெரியாரிய இட ஒதுக்கீடு, பார்ப்பனரல்லாதார் என்ற பேரினவகையை அல்லது அதன் அப்போதைய வகைப்பாட்டை நியாயமான காரணங்களுக்காகக் கூட மறு பரிசிலனைக்கு உள்ளாக்குவது இல்லை. பெரியாரின் உலகக் கண்ணோட்டக் கூறான இயக்கமறுப்பியல் அம்சத்தோடு இது வெளிப்படலாகிறது. இப்படி மையத்தோடு இயைந்த சுற்றெல்லை அம்சங்களைப் போல முரண்கொண்டவையும் உண்டு.

உதாரணமாக பெண் விடுதலைக் கருத்துகள். இவற்றில் சமூகத்தில் வளர்ந்து வரும் முதலாளிய மாற்றங்கட்கு ஏற்படவும் பெண்கள் கல்விப் பெருக்கத்துக்கு ஏற்பவும் சில கருத்துக்கள் உண்டு. விதவை மறுமணம், இளம்வயது பெண் மணத்தடை, தேவதாசி முறை ஒழிப்பு, கலப்பு மணம் ஆகியவை மையத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் முரண்பாடானவையாக இல்லை. எனினும் கற்பு, கர்ப்பத்தடை, குடும்ப அமைப்புக்குள் பாலுறவு நபர் எண்ணிக்கை விரிவாக்கத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமவுரிமை என இவை போன்றவற்றில் பெரியாரியத்தின் கருத்துகள், மையத்தோடு முரண் கொள்ளக் கூடியவை ஆகும்.

இவற்றோடு, நடைமுறைப் படுத்துதலுக்கான வடிவத்தைக் காணவேண்டும். இது பெரியாரியத்தை நிறைவேற்றும் பகுதி ஆகும். பெரியாரியம், நிலவுகிற சமூக அரசுக் கட்டமைப்பின் கீழ் இயங்குகிறது என்பதன் அடிப்படையில் அதைச சீர் குலைக்கிற எந்தவொரு நடைமுறையையும் ஏற்கவில்லை. பெரியாரியம் எந்த

படிப்பகம்

www.padippakam.com

வொரு காலத்திலும் **மக்களின் எதிர் வன்முறையை ஏற்றுக்கொள்ளவே இல்லை;** சட்ட வரம்பிற்குட்பட்ட கிளர்ச்சி நிலைகளையே மேற்கொள்கிறது. அரசுக்கட்டமைப்புக்கு நெருக்கடி ஏற்படும் பொழுது பெரியார் அதைத்தன் போராட்டத்தில் பயன்படுத்திக் கொள்ளாமல் போராட்டத்தை நிறுத்திக் கொள்வார். 1938இல் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டம் இரண்டாம் உலகப்போர் தொடங்கியவுடன் நிறுத்தப்பட்டது. 1948 இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஹைதராபாத் நிஜாமை அடக்க இந்திய இராணுவம் புகுந்தவுடன் நிறுத்தப்பட்டது. இத்தகைய நிபந்தனையுடனே இது தொடங்கப்பட்டது. (விடுதலை 30—10—48). இத்தகைய போராட்ட காலங்களில் பரபரப்பூட்டும் எழுத்துரை, கிளர்ந்தெழவைக்கும் பேச்சுரை ஆகியவற்றுக்கு ஊடாக பல்வேறு போராட்ட வடிவங்களைப் பெரியாரியம் மேற்கொண்டது. பெயர்ப் பலகைகளில் எழுத்துகள் அழித்தல் (1952-ல் இந்தி எழுத்துகள்; 1957, 1970ல் பிராமணாள் என்ற பெயர்). விநாயகர் பொம்மை உடைப்பு (1953), இராமர் படம் எரிப்பு (1956); இராமர் படம் செருப்படி (1971) இராமாயணம் எரிப்பு (1960), தமிழ்நாடு நீங்கிய இந்திய தேசப்பட எரிப்பு (1960), அரசியல் சட்ட எரிப்பு (1957), தேசியக் கொடி கொளுத்தும் திட்டம் (1955) கர்ப்பக்கிரக நுழைவுக் கிளர்ச்சி திட்டம் (1969) ஆகிய போராட்ட வடிவங்களுக்கு உள்ள கிளர்ச்சி மதிப்புகள், அதிர்ச்சி மதிப்புகள் கருதத்தக்கன. இந்தி ஆதிக்கம், சமய ஆதிக்கம், இன மேம்பாட்டு ஆதிக்கம், தேசிய இனத்தின் மீதான ஆதிக்கம் ஆகியவற்றின் மீதான பெரியாரியத்தின் எதிர்ப்பு வெளிப்பாட்டு வடிவங்கள் சமூக சலனங்களை ஏற்படுத்தின. எழுத்து, பொம்மை, படம், கொடி, புத்தகம் என்பன போன்றனவற்றைக் கற்பிதப் புனிதங்களாக்கி அவற்றின் ஊடே ஆதிக்கம் கால்கொள்ளும் ஒரு சமூக அமைப்பில் இத்தகைய 'புனிதக் குறியீடுகளை' தூக்கிப் போட்டுடைக்கும் வடிவங்கள் மக்களின் தாழ் நிலையிலான உணர்தலுக்கும் அறிதலுக்கும் ஏற்ப சரியான தொடக்கங்களே. இவை எந்தவொரு பிரச்சனையின் விளிம்பை மட்டுமே தொட்டு நிற்கின்றன. மக்களுக்கு உடனடியாக விளங்கத்தக்க அளவிலும் மக்கள் உடனடியாகக் கிளர்ந்தெழத்தக்க விதத்திலும் பெரியாரியக் கிளர்ச்சி வடிவங்கள் இருப்பினும், அடுத்தடுத்த உயர்நிலை வடிவங்களுக்கான தொடக்கங்களாக இல்லாமல், தொடங்கிய வடிவத்திலேயே தொடர்ந்து நிலவின. பெரியாரியத்தின் வர்க்க வரையறை இவற்றுக்கு வரம்பு கட்டிவிடுகிறது; பெரியார் தொடர்ந்து கிளர்ச்சி யாளராகவும் கலகக்காரராகவும் உயிர்ப்போடு இருந்தா ரெனினும், அரசு நிறுவனத்தின் / இந்த சமூக பொருளாதாரக் கட்டமைப்பின் உள் ஒடுங்கிய தன்மையிலேயே அவ்வாறு இருக்க நேரிட்டது.

3

பெரியாரிய நிலைபாடுகள் குறித்த பரிசீலனை தேவை. அவைகுறித்த போதுமான மற்றும் பொருத்தமான முடிவுகளுக்கு வந்தடைதல் தேவை.

ஏகாதிபத்திய சார்பு முதலாளிகளுக்கு இடையிலான உறவில் ஆரிய (வடவர், பார்ப்பனர்) முதலாளிகளுக்கும் திராவிட (தமிழ்ப்பிரதேச செட்டியார், நாயுடு) முதலாளிகளுக்கும் இடையிலான மோதல்—ஐக்கியம் தன்மைகளில் திராவிட முதலாளிகளின் சார்பிலான மோதல் அம்சத்தை அரசியல் பண்பாட்டு அரங்குகளில் வெளிப்படுத்துவதாக பெரியாரியமையம் இருந்தது. இது தமிழக மக்களை ஆதிக்கம் செலுத்தும் ஏகாதிபத்தியத்தை ஆதரிப்பதோடு மட்டுமின்றி, நிலவுகிற முதலாளிய சமூக அமைப்பை அடிப்படையில் ஒத்துக்கொள்வதுடன், சார்பு முதலாளிகளுக்கு இடையிலான மோதலில் **திராவிட முதலாளிகளின் நலன்களுக்கான வர்க்கக் கண்ணோட்டத்துக்கு இன வழிப்பட்ட சித்தாந்த நியாயம்** கற்பிக்கிறது. பிற்பட்ட/தாழ்த்தப்பட்ட மக்களில் ஆகப் பெரும்பான்மையினர் மீதான பொருளாதார அழுத்தங்களின் பொழுதும் அவர்களின் சமூகக் கொந்தளிப்புகளின் பொழுதும் வட இந்திய, பார்ப்பன முதலாளிகளை மட்டுமே எதிரிகளாக முன்வைப்பதன் மூலம் திராவிட முதலாளிகளைக் காப்பாற்றுவதற்கும் இது சித்தாந்த நியாயம் கற்பிக்கிறது. இந்த மையம்—முதலாளிய அரசுக் கட்டமைப்பை ஒத்துக்கொள்ளல், ஏகாதிபத்திய ஆதரவு, ஏகாதிபத்திய சார்பு திராவிட முதலாளிகளுக்கான ஆதரவு என்ற பெரியாரின் மையம்—முற்றாக மறுதலிக்கப்பட வேண்டும். தமிழர்களில் பெரும்பான்மையினராக இருக்கும் பார்ப்பனரல்லாதார் / தாழ்த்தப்பட்டோர் அடிப்படை மக்களுக்கு எதிர்காலம் மறுதலிக்கப் படாமல் இருக்க வேண்டுமெனில் இந்த மையக் கருத்தாக்கங்கள் மறுதலிக்கப் படவேண்டும். பெரியாரியமையம், **ஓர் எதிர்மறை ஆசான்** என்ற விதத்தில் மறுதலிக்கப் படவேண்டிய தாகும்.

ஆனால் பெரியாரியம் இத்தோடு தன்னைச் சுருக்கிக் கொள்ளவில்லை. தமிழகச் சூழலில் **வகுப்புவாரி இட ஒதுக்கீடு; தேசிய இனச்சிக்கல், பார்ப்பனியம், சாதியம், தீண்டாமைக் கொடுமை, பெண் விடுதலை, நாத்திகம், பகுத்தறிவு** என்பன போன்ற அரசியல், சமூக வாழ்வியல், அறிவுத்துறை அம்சங்களின் மீது தொடர்ந்து வினையாற்றிக் கொண்டே வந்தது. இவை எல்லாவற்றிலும் பெரியாரியத்துக்கு உரிய வரலாற்று ரீதியிலான முன்னவைப்புகளையும் சாதகக் கூறுகளையும் நாம் முழுமனதாக ஏற்கும் நேரத்தில், **பெரியாரிய நிலைபாட்டிலிருந்தே இவற்றின் மீது நாம் குறுக்கிடல் இயலாது.** அந்த விதத்தில் பெரியாரியத்தின்

படிப்பகம்

www.padippakam.com

சுற்றல்லை வளையங்கள் கடக்கப்படுவதன் மூலம்—வரலாற்று ரீதியிலான நியாயங்களும் வர்க்க ரீதியிலான தேவைகளும் உட் கிரகிக்கப் படுவதன் மூலம் - பெரியாரியத்தின் சாதகக் கூறுகளைக் கண்டடையவும் கையாளவும் முடியும். இந்த விதத்தில் பெரியாரியம்—**ஒரு பகுதி ஆசானாகவுள்ளது** பெரியாரின் உலகக் கண்ணோட்டமும் இன வழிப்பட்ட சித்தாந்தமும் முதலாளிய சிந்தனை வரையறையும் வழங்கியுள்ள தடைகளைக் கடப்பதன் மூலமே மேற் சொன்ன கருத்தாக்கங்களை வரலாற்று ரீதியில் முற்போக்காக எடுத்துச் செல்ல இயலும்.

தேசிய இனச்சிக்கலைத் தொடர்ந்து கனலோடு பெரியார் வைத்துக் கொண்டிருந்தார். ஆனால் ஏகாதிபத்திய / நிலவுடைமை எதிர்ப்பின்மை, திராவிட இனக் கருத்தாக்கம், அரசாங்கத்தோடு கொண்ட உறவால் நிலைமாறல் என்பன போன்ற பெரியாரிய நிலைபாடுகள் தேசிய இனச் சிக்கலை சரியாக முன்வைக்கத் தடைகளாக இருந்தன. இந்தித் திணிப்பைத் தொடர்ந்து எதிர்த்த பெரியாரிய நிலைபாட்டை ஒப்புக் கொள்ளலாமே தவிர ஆங்கில ஆதரவு, தமிழ் ஆதரவில் ஊசலாட்டம் ஆகியன வற்றை ஒப்புக்கொள்ள இயலாது. இந்தித்திணிப்பை எதிர்க்க ஆங்கில ஆதரவைக் கேடயமாக்கும் பெரியாரிய நடைமுறையால், தமிழ் சவலைப் பிள்ளையாகி விட்டது. இவை **திராவிட இன சார்பு முதலாளியக் கண்ணோட்டத்தில் தமிழ்த் தேசிய இனச் சிக்கலை அணுகியதன் விளைவுகள்.** முரணற்ற ஏகாதிபத்திய / நிலவுடைமை எதிர்ப்பு, தமிழர் தேசிய இனக் கருத்தாக்கம், தமிழ் நாட்டில் உள்ள சிறுபான்மை தேசிய இனங்கள் மீதான சரியான நிலைபாடு, ஒடுக்கப்பட்ட ஆதி தமிழரின் விடுதலையை உள்ளடக்கிய தன்மை என இத்தகைய கண்ணோட்டங்களில் தேசிய இனச்சிக்கல் விரிவடைய வேண்டியுள்ளது.

இதைப்போன்றே பெரியாரியத்தின் பார்ப்பனிய எதிர்ப்பு. தமிழ்ச் சூழலில் பார்ப்பனிய எதிர்ப்பில் தொடர்ந்து இருந்தமைக்கு பெரியாருக்கு நன்றி கூற வேண்டிய தருணத்தில், பெரியாரியம் குறிப்பிடும் பார்ப்பனிய எல்லை**கள் போதுமானவை அல்ல** என்பதைக் குறிப்பிட வேண்டும். இன மேலாண்மை / சாதிய உச்ச நிலைக் கருத்திலும் சாஸ்திர சம்பிரதாயங்களிலும் பார்ப்பன அரசதிகாரப் பங்கிலும் பார்ப்பனியம் இருப்பதாகக் குறிப்பிடும் பெரியாரின் சிந்தனை எல்லையையும் தாண்டி, இவற்றோடு பார்ப்பனரின் முதலாளிய/நில வுடைமைப் பொருண்மை உச்சத்திலும் இது உள்ளது எனக்கண்டு, இதை அங்கீகரிக்கும் முதலாளிய/நிலவுடைமைப் பொருண்மைச் சூழலிலும் உள்ளது எனவும் காண வேண்டியுள்ளது. இங்கு பெரியாரின் கருத்து முதல் வாதச் சிந்தனையும் ஒட்டுமொத்த முதலாளியக் கண்ணோட்டமும் தடைகளாக உள்ளன. திராவிட முதலாளிகள் நலன்களின் அடிப்படையில் பார்ப்பன முதலாளிகளை எதிர்ப்பதற்குப் பெரியாரியம் உடன்படுகிறதே யொழிய, முதலாளியத்தை எதிர்ப்பதற்கு அல்ல. இதன் அடிப்படையில் காணும் பொழுது, பார்ப்பனியத்தை எதிர்க்கிறோமே தவிர பார்ப்பனர்களை அல்ல எனப் பெரியார் சொன்னதையும் அப்படிச் சொல்லியிருந்தாலும் பார்ப்பன நிலவுடைமையாளர்கள், முதலாளிகள், அரசியல் வாதிகள் ஆகியோருடன் உடன்பாடு கொள்வதற்கான சலுகையாக பெரியாரிய நிலைபாடு அமைந்து விடுகிறது. இங்கு பார்ப்பனிய எதிர்ப்பில் பெரியாரியம் போதுயானதாக மட்டுமிராது, பொருந்துவதாகவும் இல்லை. பார்ப்பனியத்தை முழுமையாக எதிர்க்கவேண்டும். அதோடு நாம் எதிர்ப்பது பார்ப்பனர்களை அல்ல என்பது பார்ப்பனரில் ஜனநாயக சக்திகளோடும் முற்போக்கு சக்திகளோடும் அரசியல் பொருளாதார சமூக உறவு வைத்துக் கொள்தலாகும்.

இப்படி எல்லாச் சுற்றெல்லைத் தளங்களையும் விமரிசனக் கண்ணோட்டத்தில் கண்டறிவதன் மூலமே பெரியாரியத்தின் சாதக பாதகங்கள் அறியப்பட்டு இன்றைய சமூக நடைமுறைக்குப் பயன்படுத்த இயலும். பெரியாரியத்தின் செயல் பாடுகளைக் குறித்த ஒரு மதிப்பீடு தேவை. எதிர்மறைக் கூறுகள் களையப்பட்டு பகுதிக் கூறுகள் முழுமையாக்கப்படல் என்ற அடிப்படையில் பெரியாரியம் குறித்த விரிவான, மூட நம்பிக்கை அற்ற, சுதந்திரமான ஆய்வுதேவை. அதற்கு இத்தகைய கருத்துரைகள் மீதான தொடர் விவாதம் தேவை. ○

படிப்பகம்

www.padippakam.com

பெரியாரியம் - தத்துவத்தை அடையாளப் படுத்துதலும், நடைபெறவேண்டிய விவாதமும் - ஆய்விற்கான முன்வரைவுகள்

—ராஜன்குறை

முன்னுரையாகச் சில முக்கியமான குறிப்புகள் :

இக்கட்டுரை ஆய்வு நடந்தபின் எழுதப்படுவதல்ல. ஆய்விற்கான தயாரிப்பாக எழுதப்படுவது. இதில் கூறப்படும் கருத்துகள் ஆய்வின் முடிவுகள் (Findings) அல்ல. ஆய்விற்கான முன் அனுமானங்கள் (Hypothesis).

பெரியாரின் ஐம்பது ஆண்டுகால இயக்கத்தின் களம் மிக விரிவானது. அவருடைய உச்சரிப்புகள் அன்றாடம் தலையங்கங்களாக, கூட்டங்களில் அவர் ஆற்றிய உரைகளின் பதிவுகளாக, சிறு பிரசுரங்களாக வெளியானவை. இவற்றிற்கான எதிர் வினைகளும் பல்வேறு தரப்புகளிலிருந்தும் ஏராளமாகப் பதிவாகியுள்ளவை. இவை மட்டுமின்றி அக் கால கட்டத்தின் பதிவுகள் அனைத்தையும் நுட்பமாகவும், விரிவாகவும் ஆய்வு செய்வதின் மூலமாகவே பெரியாரியம் என நாம் செய்யக்கூடிய வரையறை முற்றிலும் சரியானதா; பெரியாரின் இயக்கம் அவ்வரையறைக்குப் பொருந்துமாறு முற்றிலும் இருந்ததா; பெரியாரியம் அனைத்து மக்களின் விடுதலைக்கு அன்று எவ்வளவு தூரம் உதவக் கூடியதாக இருந்தது; இன்று எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும்; போன்ற கேள்விகளுக்கு உறுதியான விடைகளைப் பெறமுடியும். ஆயின் அத்தகைய விரிவான ஆய்வினை உடனடியாகமேற்கொள்ளும்சாத்தியமில்லாததால் பெரியாரின் உச்சரிப்பு களையும், இயக்கத்தையும் ஓரளவு பரிசீலித்து சிந்தித்துப் பார்த்ததில் உருவாகிய சில முன் அனுமானங்களை மிதக்க விடுவதன் மூலம் ஆய்வினைஒரு கூட்டுச் செயல்பாடாக மாற்ற இக்கட்டுரை விழைகிறது. பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த, இயக்கம் சாராத சிந்னையாளர்கள் பெரியார் பற்றிய அவர்களது சேகரிப்புகளையும், கணிப்பு களையும் வெளியிட இக்கட்டுரை தூண்டுதலாக அமைய முனைகிறது.

இக் கட்டுரையில் தரப்படும் பெரியாரின் மேற்கோள்கள் எதையும் நிருபிப்பதற்காகத் தரப்படுவதல்ல. முன் அனுமானங்களுக்கான தூண்டுதல்களே அவை. எனவே அந்த அனுமானங்களை மறுக்க விரும்புபவர்கள் பதட்டமின்றி, நிதானமாக ஆய் வு நோக்கிலும், விவாத பூர்வமாகவும் கருத்துக்கள் வைக்கலாம். ஆய்வின் போக்கிலும், விவாதங்களினுடாகவும் அனுமானங்கள் உறுதிப்படலாம், மாற்றமடையலாம் அல்லது கைவிடப் படலாம்.

O-1. நான் ஒரு சுதந்திர மனிதன்; எனக்கு சுதந்திர நினைப்பு, சுதந்திர அனுபவம், சுதந்திர உணர்ச்சி உண்டு. அதை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். நீங்கள் என்னைப் போலவே உங்களது சுதந்திர நினைப்பு, அனுபவம், உணர்ச்சி ஆகியவைகளால் பரிசீலனை செய்து, ஒப்பக் கூடியனவகளை ஒப்பி, தள்ளக் கூடியவைகளைத் தள்ளிவிடுங்கள் என்கின்ற நிபந்தனையின் பேரிலேதான் எதையும் தெரிவிக்கிறேன். எப்படிப்பட்ட பழமை விரும்பிகளானாலும் இதற்கு இடம் கொடுக்க வில்லையென்றால் அது நியாயமும், ஒழுங்குமாகாது.

(திருப்பூரில் சொற்பொழிவு—'புரட்சி' 17—12—1933)

பெரியாரியம் - வரையறையும், விளக்கமும் :

வரையறை :

1 சாதிப் படி நிலை அமைப்பை தகர்ப்பதே, சாதி ஒழிப்பே இந்திய சமூகத்தின் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பிரதான அரசியல் நடவடிக்கை.

படிப்பகம்

www.padippakam.com

2. சாதிப் படி நிலை அமைப்பை கருத்தியல் ரீதியாக பல முனைகளிலும் தாக்குவதும், பொதுக் கருத்தியலாக நிலை நிற்கும் சாதியக் கருத்தியலை வெகுஜனச் சொல்லாடல் களத்திலேயே முறியடிப்பதும் சாதி ஒழிப்பிற்கான செயல் முறை. இதற்கு முனைப்புத் தரும்படியாக அமையக் கூடியவை குறியீட்டழிப்புப் போராட்டங்கள்.

3. சாதியப் படிநிலை அமைப்பின் மேல் அடுக்கு மட்டுமல்ல பார்ப்பன சாதி என்பது. அதற்கான சட்டகம் (Frame) பார்ப்பனனின் இருப்பே, பார்ப்பனியத்தின் இருப்பிற்கான பொருளியல் அடிப்படை.

4. பார்ப்பனனைத் தனிமைப் படுத்துவது, பார்ப்பன விலக்கம் ஆகிய முதற்கட்ட நடவடிக்கையில் வெகுஜன ஈடுபாட்டின் மூலமே சாதீய சட்டகத்தைக் குலைப்பது மட்டுமின்றி, சாதீயத்தை வெகுஜன சொல்லாடல் களத்தில் சுலபமாக ஒழிக்கமுடியும்.

[இங்கு பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள் பெரியாரால் பயன்படுத்தப் படாதவையாக இருக்கலாம். ஆனால் சமகால அரசியல் சிந்தனைகளுடன் பரிச்சயம் கொண்ட நாம் இச்சொற்றொடர்கள் மூலமாகவே அவர் சிந்தனை களை அடையாளப்படுத்த இயலும். இதற்கான அடிப்படை அவருடைய சொற் களிலேயே இருப்பது அவரை வாசிப்பவர்களுக்குப் புலப்படும்].

விளக்கம் :

1. சாதிப்படிநிலை தகர்ப்பே, சாதி ஒழிப்பே உடனடி அரசியல் நடவடிக்கை:

சாதிப் படி நிலையைத் தகர்க்க சாதிச் சமத்துவத்தை ஏற்படுத்தும் வகையில் வகுப்புவாரி உரிமைகள், இடஒதுக்கீடு ஆகியவற்றைக் கோருவது, சாதி ஒழிப்பிற்காகக் கடுமையான பிரச்சாரத்தை மேற்கொள்வது ஆகியவை பெரியார் தொடர்ந்து வலியுறுத்திய நடைமுறைகள். இந்திய சமூகத்தை இவ் வகையில் ஜனநாயகப் படுத்தியபிறகே பிற வேலைகளை மேற்கொள்வது பொருத்தம் என்பதைத் தெளிவாக உணர்ந்தும், வெளிப்படுத்தியுமிருக்கிறார். டாக்டர் அம்பேத்கர் அவர் களும் இதே கருத்தினை அவருக்கேயுரிய வழியில் வெளிப்படுத்தியுள்ளார். டாக்டர் அம்பேத்கரின் கூற்றுக்களை முன்வைத்து ஜாதி ஒழிப்பை ஜனநாயகப் புரட்சி என்ற கோணத்தில் விளக்கி அ. மார்க்ஸ் சமீபத்தில் மக்கள் கல்வி இயக்கம் வெளியிட்ட 'டாக்டர் அம்பேத்கரின் போர்க்குரல்' என்ற பிரசுரத்தில் எழுதியுள்ளது இவ் விஷயத்தில் தெளிவைத் தரும்.

இந்தியத் தன்னிலை என்பது, சாதீயத்தன்னிலையாகவே உள்ளது. அதாவது ஒரு மனித உயிரியின் கல்வி, தொழில், உணவு, உடை, மணமுறை இன்னும் சொன்னால் அதன் அசைவுகள், நடவடிக்கைகள் அனைத்துமே சாதியால் நிர்ண யிக்கப்பட்டதாகவே இருக்கின்றன.

இவ்வாறாக தேர்வுகளற்ற, நிர்ணயிக்கப்பட்ட வாழ்வில்; சமூக தளத்தில் இயக்கம் முற்றிலும் குறுக்கப்பட்டுள்ள நிலையில் சுதந்திரம், ஜனநாயகம் போன்ற விஷயங்கள் சாதி உயிரிக்கு முற்றிலும் அந்நியமானவையே. சமத்துவம் என்ற பேச்சிற்கே இடமில்லை மிகக் கொடூரமான, கட்டுறுதி மிக்க சமூக ஒழுங்கமைப்பு சாதீயத்தால் நிலைபெற்றிருப்பதை பல்வேறு சிந்தனையாளர்களும், ஆய்வாளர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர். அதிகாரம் என்பது அரசிடம் மட்டும் குவிந்திருப்பதல்ல, பல்வேறு மட்டங்களில் சமூக, மனித உறவுகளில் விரவியிருப்பது என்பன போன்ற சிந்தனை களைப் பார்க்கும்போது ஒரு குறிப்பிட்ட சாதிச் சமூக மென்பது அதி - நிர்வாக, அதி-அரசாங்க (Super-bueracratic, Super – Governmental Structures) அமைப்பாக செயல் படுவதாகவும் கணிக்க முடியும். இந்நிலையே சாதீயத்தை நமது பிரதான எதிரியாக்குகிறது.

படிப்பகம்

www.padippakam.com

2. பார்ப்பன எதிர்ப்பே, சாதி எதிர்ப்பின் பிரதான அம்சம்:

பார்ப்பன சாதி, சாதிச் சமூகத்தின் மேலடுக்காக இருப்பது மட்டுமெல்லாமல், சாதீயத்திற்கான குறியீட்டு அர்த்தத்தையும், நியாயத்தையும் வழங்குவது. இன்று வரையிலும் பார்ப்பன இருப்பை முன்னிலைப்படுத்தியே எந்த ஒரு சாதியும் தனக்குக் கீழுள்ள சாதியின்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான சொல்லாடலை உருவாக்கிக்கொள்கிறது. சாதீயத்தை நிலைப்படுத்த உதவும் மறுஜென்மம், சாத்திரங்கள், கடவுளர்கள் போன்ற புனைவுகளை தொடர்ந்து மறு உற்பத்தி செய்தும், பிரசாரம் செய்தும் வந்தவர்களும் பார்ப்பனர்கள் தாம். சாதிப்படி நிலை அமைப்பு பார்ப்பன முன் மாதிரியின்றி பெரிதும் பலவீனப் பட்டுவிடும். சாதிச் சின்னங்களை சட்ட விரோதமென அறிவிக்க வேண்டாமா வென்று 1950ல் பெரியார் கேட்பதலிருந்து சமூக உளவியலில் குறியீடுகளின் பங்கினை அவர் கணித்திருப்பது புலனாகும்.

3. பொதுக் கருத்தியலே எதிரி; வெகுஜனச் சொல்லாடல் களமே போர்க் களம்:

சாதீயம் சமூகத்தில் நிலைபெற்றுவிட்ட ஒரு கருத்தியலாகும். மனித உயிரிகள் தன்னை இன்ன சாதியென்றும், இவர்களைவிட உயர்ந்தவன், இவர்களைவிடத் தாழ்ந்தவன் என்றும் இயல்பாகவே ஏற்றுக்கொண்டு நம்புகின்றன. மிகுந்த தாழ்ந்த சாதியென அடையாளமிடப் பட்டவரும் கூட தங்கள் நிலையை நியாயமென ஏற்றுக் கொண்டு நம்பி அனுசரிக்கும் படியாக பொதுகருத்தியல் ஆழமாகவும், அகலமாகவும் நிலை பெற்றுவிட்டது. எனவே பெரியார் மிகப்பரவலான, கடுமையான பிரசாரத்தின் மூலம் இக்கருத்தியலை முறியடிப்பதே தனது யுத்த தந்திரமெனக் கொண்டார். இப்பிரசாரத்திற்கு ஏற்றவாறே தனது அனைத்து அரசியல் நிலைபாடுகளையும் வைத்துக் கொண்டார். அவரது சமரசங்களைப் பற்றிப் பேசும்போது, அவரது இந்த அரசியலடிப் படையை கவனத்தில் கொள்ளவேண்டும். ஆனால் பேச்சுரிமை, எழுத்துரிமை எதையும் அனுமதிக்காத ஒரு பாசிச அரசில், பொதுக் கருத்தியலையே தனது இருப்பிற்காக நம்பியிருக்கிற அரசில் பெரியாரின் போர்முறை பயனற்றது. அவர் வெறுத்த ரகசியமும், பலாத்காரமும் அங்கு இன்றியமையாதவை. அத்தகைய நிலையில் அவர் என்ன செய்திருப்பார் என்பதை அவரது பன்முகப் பிரசாரங்களில், வெளிப்படும் ஆழ்ந்த சிந்தனைகளின் சாயலில் தேடிப் பார்க்கலாம். இக்கட்டுரையின் எல்லைக்குள் அம்முயற்சி அடங்காது.

1. ஆகையால், முதலில் சாதி வித்தியாசம் என்கிற கொடுமைத் தன்மை என்பது இந்த நாட்டை விட்டு ஒழிய வேண்டுமா, வேண்டாமா என்ற முடிவு தெரிந்து விடவேண்டும். இரண்டாவதாக, ஒரு மனிதனுக்குக் கீழோ, மேலோ சாதி என்பது ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்தாக வேண்டும். அதற்குமேல், சாதி வித்யாசத்திற்கு ஆதாரமுள்ளவைகளை அடியோடு அழிக்க முயலவேண்டும். **அப்படிச் செய்யாமல் உயர்வு, தாழ்வைப் போக்கிவிடலாமென்று கருதுதல் நுனிமரத்தில் நின்றுகொண்டு அடி மரத்தை வெட்டுகிற மனிதனின் முட்டாள் செய்கையையே ஒக்கும்.** சாதி ஆசாரம் என்பவை மதம் என்னும் மரத்தைச் சுற்றிக் கொண்டிருக்கின்றன. சாதியை மதத்திலிருந்து பிரித்துக் கவ்வ வேண்டும். இப்படி பிரிப்பதற்கு முடியாத வரையில் சாதியும், மதமும் ஒன்றோடொன்று இறுகப் பின்னிக் கொண்டிருக்குமேயானால் அந்த இரண்டையும் வீழ்த்தியேயாக வேண்டும். முன்னிருந்த அந்த உயர்ந்த சாதிக் கபடர்கள் அவ்வளவு தந்திரமாக ஒன்றை ஒன்று பிரிக்க முடியாத வகையில் சாதியையும், மதத்தையும், பிணைத்துப் பின்னிக் கொண்டிருக்கும்படி இறுகக்கட்டி வைத்திருக்கிறார்கள். ஆகையால், சாதியை அழிக்கத் தலைப்படுகையில் மதமும் வெட்டப்படுகிறதே என்று பயப்படாமல் சாதி மரத்தையும், மத மரத்தையும் சேர்த்து நெருப்புவைத்துச் சாம்பலாக்க வேண்டியது தடுக்கமுடியாத அவசியமாகும். இதிலும் ஒரு சங்கடம் இருக்கிறது. அதாவது, மதமானது வேதம், புராணம் என்பவைகளுடன் கட்டிப் பிணைக்கப் பட்டிருக்கிறது. ஆதலால் வேதம், புராணங்களிலிருந்து மதத்தைப் பிரிக்கவேண்டும். இதிலும் பிரிக்கமுடியாதபடி கட்டு பலமாக இருந்தால், இங்கும் இரண்டையும் சேர்த்து நெருப்பு வைக்க வேண்டியது தான். ஆனால் இந்த வேதம், கடவுளுடன் சேர்த்துக் கட்டி வைக்கப்பட்டுள்ளது. இதிலும் பிரிக்கமுடியாத பிணைப்பு இருந்தால் அந்தக் கடவுள் என்பதன் தலையிலும்

படிப்பகம்

www.padippakam.com

கை வைத்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது. வேதத்தை இழுத்தால் கடவுளுக்கும் அசைவுதான் கொடுக்கும். இதில்தான் பெருத்த சங்கடப்படக்கூடும். கடவுளை அசைப்பதா என்று பயப்படக் கூடாது. எனவே சாதி, மதம், வேதம், கடவுள் எல்லாவற்றையும் ஒழித்துத்தான் ஆகவேண்டும். இவற்றில் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்துவராது. இப்படி நாம் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க முடியாமல் எல்லாவற்றையும் சேர்த்துக் கொளுத்தும்போது உண்மையில் ஏதாவது சத்து இருந்தால் அது அழியாது. இப்படி நாம் சாதி வித்தியாசத்தை ஒழிக்க முற்படுகையில் மதமென்பது ஒழிந்து போகுமேயென்றால் அந்த மதம் நமக்கு வேண்டாம். அது இப்போதே அழிந்து போகட்டும். மதத்தை பொசுக்கும்போது வேதமும் பொசுங்கிப் போவதாயிருந்தால் அந்த வேதம் என்பது இப்போதே வெந்துபோகட்டும். வேதத்தை ஒட்டும்போது கடவுளும் ஓடிவிடுவாரென்றால் அந்தக் கடவுள் என்பது இந்த நிமிஷத்திலேயே ஓடிவிடட்டும். அப்பேர்ப்பட்ட கடவுள் நமக்கு வேண்டவே வேண்டாம். **(திருச்சியில், 29-9-1929ல் சொற்பொழிவு—'திராவிடன்' தினசரி—5-10-1929)**

2. சுதந்திரம் அடைந்த நாட்டிலே பார்ப்பனர்கள் ஏன் இருக்கவேண்டும்? சூத்திரர்கள் ஏன் இருக்கவேண்டும்? பஞ்சமர் ஏன்? என்று கேட்டிருக்கிறீர்களா? அப்படிக்கேட்டால் வகுப்புத் துவேஷமா?கூறுகிறார்களே வகுப்புத் துவேஷம் என்று!

ஜனவரி 26ஆம் தேதி முதற்கொண்டு பார்ப்பான் இருக்கக்கூடாது; இருந்தால் ஆறுமாதம் கடுங் காவல் என்று சட்டம் எழுத வேண்டாமா ? இன்றும் பார்ப்பான் தன்னைப் பார்ப்பான் என்று பூணூல் போட்டுக் கொண்டிருக்கிறான் !

சாதியை ஒழிக்கத் திட்டம் எழுதுகிறார்களே, சர்க்கார்! இனிமேல் சாதியைக் குறிக்கும் சின்னத்தை ஒழிக்கவேண்டும் என்று கூறவேண்டாமா? அதற்கு ஒரு சட்டம் செய்ய வேண்டாமா? இன்னமும் ஏன் பூணூல் இருக்கிறது? ஏன் இன்னமும் பூணூலை ஒப்புக்கொள்ள வேண்டும், இந்த சர்க்கார்?
(செங்கற்பட்டில் 5-11-1950ல் சொற்பொழிவு 'விடுதலை' 12-11-50)

3. ஆகவே, இந்த ஆட்சி சமத்துவ ஆட்சி அல்ல; சுதந்திர ஆட்சி அல்ல; ஒரு சுரண்டல் ஆட்சி என்றுதான் நாங்கள் சொல்கிறோம். எங்கள் நாடு எங்களுக்கு வந்து விடுமேயானால் கட்டாயம் இன்றைய தினம் நாங்கள் சொல்லுகின்ற இந்த உத்தரவைப் போடுவோம். இந்த நாட்டிலே எவனாவது, பிராமணன், சூத்திரன், பஞ்சமன் இருந்தால் ஒரு வருடம் ஜெயில் என்று சட்டம் செய்வோம். **(செங்கற்பட்டில், 5-11-1950ல் சொற்பொழிவு-'விடுதலை' 12-11-1950)**

4. மார்க்ஸ் நினைத்திருப்பாரா, இந்த நாட்டில் பார்ப்பனர்கள் என்கிற சதிகாரர்கள் செய்து வருகிற கொடுமைகளையும், புரிந்து வருகிற ஆதிக்கத்தையும், நடத்துகிற சதித்திட்டங்களையும்- மற்றும் இந்த நாட்டின் சொந்த மக்கள் பிறவிச் சூத்திரர்களாக்கப்பட்டு, வேசி மக்களாய்க் கருதப் படுகிற நிலைமையையும் பற்றி? அதற்கு ஏற்ற மதம், சாஸ்திரம், கடவுள் பற்றி? ஆதலாலேயே, அவர் அந்த நாட்டிற்குத் தகுந்த மாதிரி நிலவி வந்த முதலாளித்துவம், அதன் ஆதிக்க முறைகள், அவைகளுக்கு மதம் அளிக்கும் ஆதரவு பற்றிச் சொல்லிப்போனாரே தவிர, இந்த நாட்டைப் பற்றி -பாவம், அவர் என்ன கண்டார் ?

ரஷியாவில் என்னை அதிசயமாகக் கேட்டார்களே! ரஷியாவில் ஒரு மாணவன் என்னைப் பார்த்து, 'என்ன, உங்கள் நாட்டிலே மகாராஜாக்கள் இருக்கிறார்களாமே! அதுபோலவே பறையர் இருக்கி றார்களாமே! அவர்களெல்லாம் எப்படி இருப்பார்கள்?' என்று அதிசயமாகக்கேட்டான். (அதாவது மகாராஜா, பறையர் இருக்கிறார்களாமே! என்று) நான் சொன்னேன்—'அதோடு மட்டுமல்ல— பார்ப்பானும் அதாவது பிராமணன் என்பவனும் எங்கள் நாட்டில் இருக்கிறான்' என்றேன்.

அவனைப் பற்றியும் சொன்னேன்; அதற்கு அவன் ஆச்சரியப்பட்டுப்போய்விட்டான். எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், அந்த நாட்டிலே இதைப் பற்றித் தெரியாது. அப்படி இருக்கும் போது அதுதான் 'வேதவாக்கு' 'ஞான சூத்திரம்' என்று சொன்னால், என்ன அர்த்தம்?
(பொன்மலையில், 10-9-1952-ல் சொற்பொழிவு- 'விடுதலை' 20-9-1952)

5. நமது நாடு இன்றைக்கும் சாதி அமைப்பின் கீழ் இருந்து வருகிறது. அதுபோலவே, நமது நாடு இன்றும் மத அமைப்பின் கீழ் இருந்து வருகிறது. அது போலவே, நமது நாடு இன்றும் பொருளாதார பேத அமைப்பிலேயே இருந்து வருகிறது.

இவற்றையெல்லாம் விட மோசம், மிகமிகக் கீழ்த்தரமான மூட நம்பிக்கை அமைப்பிலேயே நம்நாடு இருந்து வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com

இந்த நிலையில், மக்களுக்குப் போதிய கல்வி இல்லாத அமைப்பில், கல்வியிலும் பேத நிலை உள்ள கல்வி அமைப்பில் நமது நாடு இருந்து வருகிறது.

இவ்வளவு பேத நிலை அமைப்பு உள்ள நாட்டில்-ஜனநாயகம் என்றால் இதன் பொருள் என்ன? நாட்டில் ஒரு பெரும் சூதாட்டம் நடந்து வருகிறது. சூதில் வலுத்தவன் ஆட்சியாக நடந்து வருகிறது என்றுதானே கொள்ளவேண்டும்?

('விடுதலை'—தலையங்கம்-11-3-1967)

6. இந்திய நாட்டில், பெரும்பாலும் உலகத்தில் வேறு எங்கும் இல்லாததும், மனிதத் தன்மைக்கும் நியாயத்துக்கும் பகுத்தறிவுக்கும் ஒவ்வாததுமான கொடுமைகள் பல இருந்து வந்தாலும்—அவற்றுள் அவசரமாய்த் தீர்க்கப்பட வேண்டியதும், இந்தியர்கள் காட்டுமிராண்டிகள் அல்லரென்பதையும், மனிதத்தன்மையும் நாகரிகமுடையவுமான சமூகம் எனவும் உலகத்தாரால் மதிக்கப்பட வேண்டியதற்குச் செய்ய வேண்டியதும் மற்றும் உலகத்திலுள்ள பெரும்பான்மையான நாட்டார்களைப் போலவே அன்னிய நாட்டினர்களின் உதவியின்றித் தங்கள் நாட்டைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளவும், ஆட்சி நிர்வாகம் செய்யவும் தகுதியுடையவர்கள் என்று சொல்லிக் கொள்ள வேண்டுமானாலும்-முதலாவதாய்ச் செய்யப்படவேண்டிய காரியம் இரண்டு உண்டு என்று உறுதியாய்க் கூறுவோம். அவைகளில் முதலாவது எதுவென்றால், இந்திய மக்களிலேயே பல கோடி ஜனசங்கியை உள்ள பல சமூகங்களைப் பிறவியிலேயே தீண்டாதவர்கள் என்று கற்பித்து, அவர்களைப் பகுத்தறிவற்ற மிருகங்களிலும் கேவலமாகவும், உணர்ச்சியற்ற பூச்சி புழுக்களிலும் இழிவாகவும் நடத்துவதை ஒழிக்க வேண்டியதாகும். இரண்டாவதானது எதுவென்றால், பொதுவாக இந்தியப் பெண்கள் சமூகத்தையே—அடியோடு, பிறவியில் சுதந்திரத்திற்கு அருகதையற்றவர்கள் என்றும், ஆண்களுக்கு அடிமையாக இருக்கக் கடவுளாலேயே சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்றும் கற்பித்து. அவர்களை நகரும் பிணங்களாக நடத்துவதை ஒழிக்க வேண்டியதாகும். ஆகவே, மேற்கண்ட இந்த இரண்டு காரியங்களும்-எந்த காரணத்தை முன்னிட்டும்-இந்தியாவில் இனி அரை நிமிடம் கூட இருக்கவிடக் கூடாதவைகளாகும்.

['பகுத்தறிவு'-கட்டுரை-1938, இதழ் 10, மலர் 3]

நினைவு கொள்ளப்படும் பெரியார் :

பொதுவாக மக்கள் பரப்பில் பெரியார் குறித்த உடனடி நினைவுகளாக உள்ளவை எவையென்று பார்த்தால் நாத்திகமும், பார்ப்பன, புராண எதிர்ப்பாகவுமே இருக்கின்றன. இவற்றை இங்கு சிறிதளவு பரிசீலிக்க வேண்டும்.

1. <u>நாத்திகம்:</u> தீவிரமாக நாத்திகப்பிரசாரம் மேற்கொண்டதில் உலக சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க இடம் பெரியாருக்குண்டு என்று கூறப்படுவது உண்மையே. ஆனால் அவருடைய நாத்திகம், சாதி ஒழிப்பை முன்னிட்டே வலியுறுத்தப்பட்டது என்பதை பலமுறை கூறியுள்ளார். இதன் பொருள் அவர் நாத்திகம் போலித்தனமானதென்பதில்லை. அவர் வாழ்வின் இறுதி நாட்களில் தீவிர நாத்திகப் பிரச்சாரத்துடன் 'அனைத்துச் சாதியினர் அர்ச்சகராதல்' 'கர்ப்பக்கிரகப் பிரவேசம்' போன்றவற்றிற்கான போராட்டத்தை நடத்தியதை சிந்திக்கவேண்டும். நாத்திகத்தை மட்டும் வலியுறுத்துவதானால் ஆலயம் குறித்த போராட்டமெதற்கு? சாதீயக் கருத்தியலை, சுரண்டலை கடவுள் நம்பிக்கை காத்து நிற்பதாலேயே அவர் தீவிர நாத்திகப் பிரசாரம் மேற்கொண்டதை இக்கட்டுரையின் மேற்கோள். 1—ல் காணலாம். இதுபோன்று பல்வேறு சமயங்களில் அவர் தெளிவுபடுத்தியிருப்பதை அவர் உச்சரிப்புகளை படிப்பவர் கவனிக்கலாம். இங்கு பிரச்சினை என்னவெனில் ஒரு சாதி ஒழிப்புப் போராளியை வெறும் நாத்திகப் பிரசாரகராகச் சுருக்கிப் பார்க்கும் வரலாற்றுத் தவறை செய்யக்கூடாது என்பதுதான் மற்றபடி நவீன மேற்கத்திய சிந்தனைகளையொத்த சிந்தனைப் போக்குகள் அவரிடமிருந்ததற்கான தடயங்கள் அவர் உச்சரிப்புகளிலுள்ளன.

உதாரணமாக அவரது இறுதிச் சொற்பொழிவில் ஆத்திகத்துடனான ஒரு உரையாடல் தன்மையினை அங்கீகரித்துப் பேசுகின்ற பாங்கினை கவனிப்பவர்கள் அவர் முரட்டுத்

படிப்பகம்

www.padippakam.com

ஒரு சங்கராச்சாரி சமம்' என்றும் சொல்வதிலிருந்து பார்ப்பனரின் கருத்தியல் மற்றும் குறியீட்டு முக்கியத்துவத்தை அவர் தெளிவாக உணர்ந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. சாதிய ஏற்றத் தாழ்வுகளையும், தீண்டாமையையும், சாதியத்தையும் முற்றாக ஒழிக்க வேண்டுமென்றும், முழுமையான சமத்துவம் நிலவவேண்டும் என்றும் கடும் பிரசாரம் மேற்கொண்ட அவரை 'சாதி எதிர்ப்பை, பார்ப்பன எதிர்ப்பாகக் குறுக்கியவர்' என்பது வரலாற்றுக்குச் செய்யும் துரோகமாகும்.

புராண, கடவுளர் எதிர்ப்பு :

புராணங்களை அவர் அணுகிய விதம் மலினமானது என்றும் அவற்றை இலக்கியங்களாகவும், மானுடவியல் பிரதிகளாகவும் பார்க்கவில்லை என்றெல்லாம் கூறப்படுகிறது. அன்று சமூகத்தில் செயல்படும் பிரதிகளாயிருந்த கதாகால்ட்சேபம், தெருக்கூத்து வில்லுப்பாட்டு, நாடகம், சினிமா என்று அனைத்திலும் ஆக்ரமித்திருந்த புராணங்களைக் கவிழ்த்துப் போட்டு கேலி செய்த அவருடைய செயல் முற்றிலும் கலகபூர்வமானது மட்டுமின்றி, பிரசார ரீதியாக மிகச் சிறந்த யுக்தியுமாகும். அவரது செயல் கரடு முரடானது என்றால், பக்குவமற்ற—கரடுமுரடான மதத்தை, பக்குவமற்ற கரடுமுரடான சமுதாயத்தில் எப்படி எதிர்கொள்வது ? இன்றுவரை தமிழில் பல அறிவு ஜீவிகளுக்குப் பெரியாரைக் கண்டால் இதனால் தான் அருவெறுப்பாக இருக்கிறது. இவர்களால் Crudityஐ சகித்துக்கொள்ளவே முடியாது. ரொம்பவும் Sophisticated ஆனவர்கள். ஆனால் தீண்டாமையை சகித்துக்கொள்ள முடியும். உண்மையில் புராணங்களை நவீனப்படுத்தி, சமகாலத்துக்கு ஏற்றவகையில் தயார் படுத்தி வந்த முயற்சியை எதிர்த்து அவற்றின் மூலவடிங்களின் (Rawness ஐ) கச்சாத் தன்மையை மீட்டவர் என்று வேண்டுமானால் சொல்லலாம். சாதீயமான ஜனநாயகமற்ற இறந்த காலத்திலிருந்து துண்டித்துக் கொள்வதற்கு இறந்த காலத்தின் அடையாளங்களாக, தொடர்ச்சிகளாக உள்ளவற்றை சகட்டுமேனிக்கும், வசதிப்பட்டபடியும் தாக்குவதென்பது மரபு குறித்த விசாரணையை சமூகப் பரப்பில் தூண்டமுடியும் என்பதை பாரபட்சமின்றி சிந்திப்பவர்கள் புரிந்து கொள்வார்கள். அதே சமயம் பார்ப்பன ஒழுக்கவியல் கோட்பாடுகளுக்கும், பார்ப்பன புராணிகங்களுக்கும் உள்ள முரண்களில் அக்கோட்பாடுகளை முன்வைத்து புராணிகங்களை கேலி செய்து நிராகரிப்பதன் தேவை குறியீடுகள், புனைவுகள், மதிப்பீடுகள் இவற்றிற்கு இடையேயான சிக்கலான இணைப்பில் உருவாகிறது.

---

10. கொஞ்ச காலமாக சைவ சமயத்தின் பேரால் சிலர் போடும் கூச்சல் அளவுக்குமேல் போகின்றது

சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாகவேண்டும் என்று அவர்கள் கட்சி சேர்க்கிறார்களாம். அரசியல் பிழைப்புக்காரர்கள் சிலர் அப்படித்தான்-அதாவது 'சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாக வேண்டும்; அதை ஒழிக்காவிட்டால் சுயராஜ்யம் தடைபட்டுப் போகும்! என்று கூச்சல் போட்டார்கள்; கூலிகொடுத்தும் கூச்சல் போடச் சொன்னார்கள். அவ்வளவு கூச்சலையும் அடக்கிக்கொண்டு இப்போதும் நமது இயக்கம் தலை நிமிர்ந்து நிற்கின்றதையும் அரசியல்காரர்களில் பெரும்பாலோரும் இதை ஆதரிப்பதையும் பார்த்து ஒருவாறு அடங்கிவிட்டார்கள். இப்போது சைவ சமயத்தார்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் சிலர் கிளம்பி சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்து வருகின்றார்கள். இந்தச் சைவ சமயத்தார்கள் என்பவர்கள்—சுயமரியாதை இயக்கம் பார்ப்பனீயத்தையும், பார்ப்பனர்களையும் கண்டிக்கும் பொழுதும் வைணவ சமயத்தையும் வைணவர்களையும் கண்டிக்கும் பொழுதும் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டு, நம்மீதும் சுயமரியாதை இயக்கத்தின் மீதும் புகழ் புராணமும், கவியும் பாடிக் கொண்டிருந்தார்கள்.

அதாவது, பார்ப்பன ஆதிக்கத்தைக் கண்டித்து சங்கராச்சாரியாரைத் தாக்கி வரும்போது நமக்கு உதவியும் செய்தார்கள். பிறகு வைணவப் புராணங்களின் வண்டவாளங்களை வெளியாக்கும் போதும் நமக்கு உதவிசெய்து வந்தார்கள். இது மாத்திரமல்லாமல், இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்றும், இந்துமதம் என்று சொல்லப்படுவது பார்ப்பன ஆதிக்கக் கொள்கைகள்

படிப்பகம்

www.padippakam.com

கொண்டது என்றும் சொல்லும் பொழுது அதை ஆதரித்து அதற்கு வேண்டிய ஆதாரங்கள் உதவி வந்தார்கள்.

கடைசியாக, சைவமதப் புராணங்கள் என்பவைகளின் முறையில் அவற்றின் யோக்கியதைகளை வெளியாக்க நேரிட்டபோது மாத்திரம், 'சுயமரியாதை இயக்கம் சமயங்களுக்கு ஆபத்து விளைவிக்கின்றது, மோட்சத்திற்கு தடையாய் நிற்கிறது' என்று சொல்ல வந்துவிட்டார்கள். எனவே, சைவ மதம் என்றால் என்ன? அது பார்ப்பன மதம் அல்லாது வேறு தனி மதம் என்றோ, அல்லது தமிழ் மக்கள் மதம் என்றோ யாராவது சொல்லமுடியுமா என்பதை முதலில் கவனிக்க விரும்புகின்றோம்.

('குடி அரசு'-தலையங்கம்—7-10-1928)

11. சமரச சன்மார்க்கம் என்பது வாயால் சொல்லக்கூடியதே தவிர காரியத்தில் நடக்க முடியாததாகும். ஏனெனில் எதுஎது சமரசசன்மார்க்கம் என்கிறோமோ அவற்றிற்கு நேர் விரோதமாகவே மனித வாழ்க்கை அமைக்கப்பட்டிருக்கிறது. இது நம் நாட்டில் மட்டுமல்ல; உலகம் முழுவதிலுமே இவ்வாறே அமைக்கப்பட்டிருக்கின்றது.

முதலாவது கடவுள், மதம், விதி, சாதி, பணம், தொழில் முதலியவைகள் இயற்கைக்கு மாத்திரமான சமரச சன்மார்க்கமல்லாமல்—நியாயபூர்வமான சமரச சன்மார்க்கத்துக்கும் விரோதமாய் அமைக்கப் பட்டிருக்கின்றது. இந்த நிலையில் ஒருவன் சமரச சன்மார்க்கத்தைப் பற்றி பேச வேண்டுமானால் மேற்கண்ட கட்டுப்பாடுகளை வைத்துக் கொண்டு சமரச சன்மார்க்கம் ஏற்பட வேண்டும் என்கிற முறையில் யோக்கியர்களாலோ, அறிவாளிகளாலோ பேசமுடியாது. ஏனெனில், அவை ஒன்றுக்கொன்று முரண்பட்ட தத்துவத்தில் அமைக்கப்பட்டிருப்பவைகளாகும்; அதோடு மாத்திரமல்லாமல், சமரசமும் சன்மார்க்கமும் கூடாது என்னும் தத்துவத்தின் மீதே அமைக்கப் பட்டுள்ளவைகளாகும்.

மேற்கண்டவை சம்பந்தமான கட்டுப்பாடுகளையெல்லாம் அடியோடு அழிப்பதுதான் சமரச சன்மார்க்கம் என்று சொல்வேன். இது உங்களில் பலருக்கும் உங்கள் பாதிரிமார்கள், எஜமானர்கள், அக்கம் பக்கச் சாமியார்கள், சாமிகள், மதக்காரர்கள் ஆகியவர்களுக்கு வருத்தமாயும் விரோதமானவைகளாகவும் இருக்கும். நான் உண்மையான சமரச சன்மார்க்கம் அடைந்த தேசத்தார்—அடைந்த சமூகத்தார் அடைந்த தனிமனிதர்கள் யார்யாரைக் கருதுகின்றேனோ அவர்கள் எல்லாம் மேற்கண்ட இடையூறானவைகளைத் தகர்த்தெறிந்துதான் சமரச சன்மார்க்கம் அடைந்தார்கள்; இவைகளில் சிறிது தாட்சண்யப் பட்டவர்கள் கூட தோல்வியடைந்துவிட்டார்கள்.

(பெருந்துறை சமீபம் கிரேநகரில், 26-1-1931-ல் சொற்பொழிவு-'குடி அரசு' 19-2-1931)

பெரியாரின் அரசியல் இயக்கம்-தகவல்கள்:

இக் கட்டுரையை படிப்பவர்கள் பெரியாரின் அரசியல் வாழ்க்கை குறித்த தகவல்களை நினைவு படுத்திக்கொள்ளவும், இளைஞர்கள் அறிந்து கொள்ளவும், தெளிவு படுத்திக் கொள்ளவும் இப்பகுதி. மேலோட்டமானதாகவும், துல்லியமின்றியும் அமையும் இப்பகுதி, அடுத்து வரும் விவாதப் பகுதியினைப் படிக்க உதவும் பொருட்டுதான்.

17-9-1879: ஈரோட்டில் பிறந்தார்.

1919—1925: காங்கிரஸ் கட்சியில் பணி புரிந்தார். கள்ளுக் கடை மறியல், ஒத்துழையாமை இயக்கம், கதர் பிரசாரம், நிர்மாணத் திட்டம் முதலியவற்றில் தீவிர பங்கேற்பு. வகுப்புரிமைத் தீர்மானம் கொண்டுவர தொடர்ந்து முயற்சி. 1924– வைக்கம் போராட்டம். 1925ல் வகுப்புரிமைத் தீர்மானத்தை ஏற்காததால் காங்கிரசிலிருந்து வெளியேற்றம். (25-11-1925)

1926—1930: சுயமரியாதை இயக்கம் உருவாக்கம். குடி அரசு, திராவிடன், REVOLT பத்திரிகைகள் வாயிலாகவும், நேரடியாகவும், பரவலான கடும் பிரசாரம், சாதி ஒழிப்பே உடனடி இலட்சியமெனத் தெளிவு.

படிப்பகம்

www.padippakam.com

1931—1937: சமதர்மப் பிரசாரம். பொதுவுடைமைக் கொள்கையின்பால் ஈர்ப்பு 1932ஆம் ஆண்டு 11 மாதங்கள் உலகச் சுற்றுப்பயணம் (13-2-32 முதல் (19-5-32)வரை மூன்று மாதங்கள் ரஷ்யாவில்)1933-34 தீவிர சமதர்மப் பிரச்சாரம். 30-12-33யில் கைது செய்யப்பட்டார். 34யில் அரசின் ஒடுக்குமுறை அதிகரிக்க சமதர்மப் பிரசாரம் தீவிரம் குறைக்கப்படுகிறது '1936 யில் ஜீவா முதலானோர் இதைக்கண்டித்து வெளியேறுகிறார்கள் 1935 முதல் நீதிக்கட்சியை அதிகம் ஆதரிக்கத் தொடங்குகிறார். 1937 தேர்தலில் நீதிக்கட்சி படுதோல்வி அடைகிறது.

1938—1954: 1938யில் இராஜாஜி தலைமையில் நடந்த காங்கிரசு அரசு இந்தியைக் கட்டாயப் பாடமாக்க அதை எதிர்த்து பெரியதொரு கிளர்ச்சியினை நடத்துகிறார். கிளர்ச்சியினிறுதியில் தனி நாடு கோரிக்கையுமெழுகிறது. இரண்டாண்டு சிறைத்தண்டனை பெறுகிறார். (டிசம்பர்'39 விடுதலை) நீதிக்கட்சியின் தலைவராகிறார், தொடர்ந்து திராவிட நாடு கோரிக்கையை வலியுறுத்துகிறார் 1944யில் நீதிக்கட்சி திராவிடர் கழகமாக பெயர் மாற்றம் பெறுகிறது. அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்ட விதத்தைக் கண்டிக்கிறார். 1947— சுதந்திர தினத்தைத் துக்க நாளாக அனுசரிக்கும்படி கோருகிறார். இதில் அண்ணா கருத்துமாறுபாடு கொள்கிறார். 1949யில் தி. மு. க பிரிகிறது பெரியார்—மணியம்மை திருமணத்தைத் தொடர்ந்து (17—9—49) 1950-யில் வகுப்புரிமையை வலியுறுத்தி இயக்கம் 1952— காங்கிரசு சிறுபான்மை மந்திரிசபை அமைத்தது. மீண்டும் இராஜாஜி முதல்வர். அவர் அறிமுகப்படுத்திய குலக்கல்வி திட்டத்தை எதிர்த்து கடுமையான கிளர்ச்சி நடத்துகிறார்—1954யில் இராஜாஜி பதவி விலகுகிறார்.

1954—1967: 1954ல் காமராசர் முதல்வராகிறார். பெரியார் காமராசருக்கும், காங்கிரசுக்கும் ஆதரவு தருகிறார். 1956-மொழிவாரி மாநிலம் உருவாக்கம் தமிழ்நாடே திராவிட நாடு என்கிறார். 1957-அரசியல் நிர்ணய சட்டத்தை எரிக்கும் போராட்டம் நடத்தி சிறைசெல்கிறார். 1960— 'தமிழ்நாடு தமிழருக்கே' —அறிவிப்பு. இந்திய தேசப்படம் எரிக்கும் கிளர்ச்சி நடத்தி கைதாகிறார். இடையே 56 யில் இராமர் பட எரிப்பை நிகழ்த்துகிறார். 66யில் இராமாயண எரிப்பு. 1967 யில் காங்கிரஸ் தோல்வி. தி. மு. க. பெரும் பான்மை இடங்களை கைப்பற்றுகிறது.

1968-1973: தி. மு. க. ஆதரவு—கர்ப்பக்கிரகக் கிளர்ச்சி — அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் கோரிக்கை.

24—12—73: வேலூரில் C. M. C. மருத்துவமனையில் மரணமடைகிறார்.

அவருடைய அரசியல் வாழ்க்கையில் அரசுப் பதவியேற்பது அவருக்குப் பிடிக்காத செயலாகவேயிருந்திருக்கிறது. இத்துணைக்கும் மக்கள் போராட முழுவதும் தயாராகாதபோது, அரசுச் சட்டங்களால் மாற்றங்களைக் கொண்டுவருவது எளிது என்று நம்புகின்றவர். ஆனால் அரசியலதிகாரத்தைத் தான் கைப்பற்றுவதை விரும்பாமல், எப்படியாவது ஏதோவொரு அரசாங்கத்தை மிரட்டி சட்டங்களைப் போட வைக்கலாம் என்றே கருதுகிறார். அதே சமயம் தலைமறைவு இயக்கம், வன்முறை போன்றவற்றையும் அவர் வெறுப்பவராகவே இருக்கிறார். தொடர்ந்த பிரசாரம் என்பதே அவர் தேர்ந்தெடுத்த அரசியல் பணி.

---

12. நான் அடிக்கடி கொள்கையில் மாற்றமடைபவன் என்று சொல்லப்படுகிறது. உண்மையாக இருக்கலாம். நீங்கள் அதை ஏன் கவனிக்கிறீர்கள்? ஒரு மனிதன், அவன் பிறந்தது முதல் இன்று வரை திருடிக்கொண்டே இருக்கிற ஒரே நிலைக்காரன் என்று சொல்லப்பட்டால், அவன் மகா

படிப்பகம்

www.padippakam.com

யோக்கியனா? எந்த மனிதனும் ஒரே நிலையில் இருக்கவேண்டும்' என்று நீங்கள் ஏன் ஆசைப் படுகிறீர்கள்? அதனால் உங்களுக்கு என்ன இலாபம்? மாறுதல் முற்போக்குள்ளதா, பிற்போக்கு ள்ளதா? அதனால் மக்களுக்கு நன்மையா? தீமையா? என்பன போன்றவற்றைக் கவனிகக வேண்டியதுதான் அறிவாளிகளின் கடமையாகும்.

மற்றும், பொது நன்மையை உத்தேசித்து— கஷ்டப்படுகிற மக்கள் நன்மையை உத்தேசித்து மாறினானா? அல்லது சுயநலத்திற்கு — அக்கிரமமான இலாபமடைவதற்கு மாறினானா? என்று பார்க்கவேண்டும். யோக்கியன், அறிவாளி, ஆராய்ச்சியாளி, பொறுப்பாளி, கவலையாளி ஆகியவர் மாறவேண்டியது அவசியமாகலாம். அதை பற்றியகவலை ஏன்? யார் எப்படி மாறினாலும் பார்க்கின்றவர்களுக்கு புத்தியும் கண்ணும் சரியாய் இருந்தால், மாற்றத்தைப் பற்றி ஒன்றும் ஆபத்து வந்துவிடாது.

நான் பல தடவை மாறி இருக்கலாம்; பல குட்டிக் கரணங்கள் போட்டிருக்கலாம்; சுயநலத்திற் காகவும் போட்டிருக்கலாம்; பச்சோந்தியாகவும் இருக்கலாம். அதனால் உங்களுக்கு என்ன கெடுதி? நாடகக் கொட்டகையில் நாடகம் பாரக்கின்ற போது ஒரு மனிதன் எத்தனை வேடம் மாறி மாறிப் போட்டு நடிப்பதை நீங்கள் காசு கொடுத்துப் பார்த்து விட்டு, நடித்தவனையும் புகழ்ந்துகொண்டு போகின்றீர்களா, இல்லையா?

கோயில் கட்டிய மக்கள், கோயிலை இடிக்க வேண்டியவர்களாகி விடுவார்கள். அகிம்சை பேசுபவர்கள் பலாத்காரத்தைப் பேச வேண்டியவர்களாகி விடுவார்கள். இராஜ விசுவாசிகள் இராஜத் துரோகிகள் ஆகிவிடுவார்கள். திருடக்கூடாது என்பவர்கள் கொள்ளையடிக்கச் சொல் வார்கள். இப்படியாக, அபிப்பிராயங்கள் மாறிக்கொண்டு போகலாம். இவற்றையெல்லாம், அபிப்ராயங்கள் மாறியதாலேயே குற்றம் என்று சொல்லிவிட முடியாது. தங்களை 'நல்ல சூத்திரர்கள்' என்று சொல்லிக்கொண்டு பார்ப்பனர் கால்களைக் கழுவிய தண்ணீருக்குப் பவுன் கொடுத்துச் சாப்பிட்டவர்கள் இன்று 'சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு அடி, என்றும் 'பார்ப்பனர்கள் ஜாக்கிரதை' என்றும் ஏன் சொல்லுகிறார்கள்? இந்த மாற்றத்தால் இப்படிச் சொன்னவர்கள் அயோக்கியர்கள் ஆக முடியுமா? தவிர, 'சூத்திரன் பணம் வைத்திருந்தால், பிராமணர்கள் பலாத்காரத்தால் அதைப் பறித்துக் கொள்ளலாம், என்று மனுதர்ம சாஸ்திரத்தில் இருந்தது மாறி இப்போது வெள்ளையர் தர்மத்தில் 'தந்திரங்களாலும் சூழ்ச்சிகளாலும் மாத்திரந்தான் பறித்துக் கொள்ளலாம்' என்கிறதான மாறுதல ஏற்பட்டுவிட்டது. நாளை ஒரு சமயம் சமதர்ம காலத்தில், 'பிராணர்கள் (சரீரத்தால் பாடுபடாதவன்) சொத்து வைத்திருந்தால், மற்றவர்கள் பலாத்காரத்தில் பிடுங்கிக் கொள்ளலாம்' என்று ஏற்பட்டாலும், ஏற்படலாம். இம்மாதிரி மாறுதல்கள் காலத்திற்கும் பகுத்தறிவிற்கும், நாட்டின் முற்போக்கிற்கும் ஏற்றாற் போல நடந்துதான் தீரும். எனவே, நான் மாறுதலடைந்துவிட்டேன் என்று சொல்லப்படுவதில் வெட்கப்படுவதில்லை. நாளை நான் எப்படி மாறப்போகிறேன் என்பது எனக்கே தெரியாது. ஆகையால், நான் சொல்வதைக் கண்மூடித்தனமாய் நம்பாதீர்கள்.

(நாகையில், 3-10-1931-ல் சொற்பொழிவு —'குடி அரசு'...11-10-1931)

13. ஆம்; பரிகாசம் செய்வார்கள்; நமக்கும் அது கொஞ்சம் மானக்கேடாகத்தான் தோன்றும். உண்மையாகவே அது மானக்கேடாகவும் இருக்கலாம். அந்த மானக்கேடு நடத்தை நானோ, நீங்களோ நமது தனிப்பட்ட சுயநலத்துக்காக அல்ல; சமுதாயப் பொதுநலத்துக்காகவே அடை கிறோம். நாம் நமது சமுதாய நலத்துக்காக உயிரைத் தியாகம் செய்வது என்பது எப்படியோ, அப்படித்தான் உயிரிலும் சிறந்தது என்று சொல்லும்படியான மானத்தைத் தியாகம் செய்வது ஆகும்.

('விடுதலை'— அறிக்கை— 20-11-1966)

பெரியார் - அரசியல் இயக்கத்தின் மீதான விமர்சனங்கள்:

1 பொது உடைமை இயக்கப் பாதையை அரசுக்குப் பயந்து கைவிட்டவர்:

சுயமரியாதை இயக்கத்திற்கும் - சமதர்மத்திற்கும் நிகழ்ந்த 'மணமுறிவு' ஏற்படுத்திய கசப்பு இன்றுவரை நீங்காததை கவனிக்க முடிகிறது. பெரியாரின் சிந்தனைகளை ஊன்றிப் பார்த்தால் இதில் பிரச்சினை எதுவுமில்லையென்பது எளிதில் விளங்கும். பெரியார் ஒரு ஜனநாயகப் புரட்சியாளர். இந்திய சமூகங்கள் போன்றவற்றில் ஜனநாயகப் புரட்சி நடைபெறுமுன்பே, சமதர்மப் புரட்சியும் பொதுவுடமையும்

www.padippakam.com

சாத்தியம் என நினைப்பதோ, அல்லது முதலில் எவ்வகையான இயக்கத்தை உருவாக்கவேண்டுமென்பதில் குழம்புவதோ அரசியல் தெளிவின்மையாகும். பாராளுமன்ற ஜனநாயகம் வந்ததை உண்மையான ஜனநாயகம் என்றோ ஜனநாயகப் புரட்சியென்றோ சொல்ல முடியாது என்பது பரவலாக ஒப்புக்கொள்ளப்படுவதே. அப்படியென்றால் உண்மையான ஜனநாயகப் புரட்சி என்றால் என்ன என்று மார்க்சீய—லெனினீய பரிசோதனைக் கூடங்களில் இன்றும் தீவிரமான ஆய்வுகள் நடக்கின்றன. டாக்டர் அம்பேத்கரும், பெரியாரும் தெளிவாக அசலான ஜனநாயகப் புரட்சிக் களங்களில் நின்றவர்கள். பல்வேறு பாதைகளில் இன்று பலரும் அவர்களிடம் வந்து சேர்வதை பார்க்க முடிகிறது. வராமலே போவதற்கு, காலதாமதமாக வந்து சேர்வது நல்லதுதான். அடையாளப் பிரச்சனைகளை விட்டு விட்டால்.

பெரியார் சமதர்மப் பிரசாரத்தை மட்டுப்படுத்திக் கொள்வதையும், அதற்கான காரணங்களையும் பகிரங்கமாக அறிவிக்கிறார். அரசின் நிர்பந்தத்தின் பேரில்தான் இதைச் செய்வதைச் சொல்கிறார். எந்தவித தயக்கமும், ஒளிவு மறைவுமின்றி அப்படி அறிவிக்க முடிந்ததற்குக் காரணம் அவருக்கிருந்த தெளிவு தான். வகுப்புரிமையை ஏற்காத காங்கிரஸ்தான் பிரதான எதிரி. கடும் பிரச்சாரத்தின் மூலமாகவே அதை எதிர்க்க முடியும். அரசை பகைத்துக் கொண்டால் அது சாத்தியமில்லை. பெரியார் அரசியல் வாழ்வின் தொடக்கமுதலே அவரது உடனடி குறிக்கோள்கள் வகுப்புவாரி உரிமைகள்—இட ஒதுக்கீடு போன்றவைதான். இடையில் பொதுவுடமைச் சிந்தனைகளால் கவரப்பட்டு அவற்றையும் பிரச்சாரம் செய்ய முடிவு செய்கிறார். ஆனால் அவை மிகத் தொலைதூர இலட்சியங்கள் என்பது அவருக்குத் தெரியும். பிரச்சினை வந்ததும் அதைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டுத் தன்னுடைய பிரதான, உடனடி இலட்சியமான வகுப்புவாரி உரிமைகளுக்கு வருகிறார். ஆனால் வாழ்நாளின் இறுதிவரை பொதுவுடமை சிந்தனைகளுக்கு எதிராகவோ, முதலாளீயம் காந்தீயம் போன்றவற்றை ஆதரித்தோ அவர் பேசியதில்லை. அவரைப் பிடிக்காதவர்கள் அவர் 1934-36ல் எடுத்த நிலைகளை சந்தர்ப்ப வாதம், பிழைப்பு வாதம் எனலாம்; பிடித்தவர்கள் அதை யுத்த தந்திரம், செயல் தந்திரம் என்று புகழலாம் என்பது தவிர இந்த விவாதத்தில் எந்த ஒரு சத்துமில்லை என்று பெரியார் பாணியிலேயே கூறிவிட்டு மேலே நகர வேண்டியதுதான்.

---

14. ஆங்கிலத்தில் 'கேஸ்ட்' 'கிளாஸ்'(caste/class) என்ற இரண்டு வார்த்தைகள் உள்ளன. அதாவது தமிழில் 'சாதி—வகுப்பு என்று சொல்லப்படுவனவாகும். சாதி—பிறப்பினால் உள்ளது; வகுப்பு— தொழில் அல்லது தன்மையினால் ஏற்படுவது. தொழிலும், தன்மையும் யாருக்கும்ஏற்படலாம். சாதி நிலை, அந்தந்தச் சாதியில் பிறந்தவனுக்குத்தான் உண்டு; பிறக்காதவனுக்குக் கிடையவே கிடையாது. மேல் நாட்டில் சாதி இல்லாததால், அங்கு பொதுவுடைமைக்கு முதலில் வகுப்புச் சண்டை துவக்க வேண்டியதாயிற்று. இங்கு சாதி இருப்பதால் பொதுவுடமைக்கு முதலில் சாதிச் சண்டை துவக்கவேண்டியதாகும்.

பார்ப்பானும், பார்ப்பனீய உணர்ச்சியும் உள்ள மக்கள் பொதுவுடைமை வேஷம் போடுவதால், சாதிச் சங்கதியை மூடிவிட்டு, ஆகாத காரியமான-ஆனாலும் தங்களுக்குக் கேடில்லாத வகுப்பு(class) உணர்ச்சியைப் பற்றிப் பேசி—சாதியை ஒழிக்கப் பாடுபடும் கட்சிகளோடு ஏழைகளை மோதவிடுகிறார்கள்; சாதியை ஒழிக்கச் செய்யப்படும் முயற்சியையும் அழிக்கப் பார்க்கிறார்கள். பார்பனர்களுக்கும் மற்றும் மேல்சாதிக்காரர்களுக்கும் இருக்கும் உயர்வை முதலில் ஒழித்தாகவேண்டும். இதிலேயே அரைப்பாகம் பொதுவுடைமை ஏற்பட்டுவிடும். அதாவது, சாதியினால் அனுபவிக்கும் ஏழ்மைத் தன்மையும், சாதியினால் சுரண்டப்படுபவர்களாக இருக்கும் கொடுமையும் நம் பெரும்பான்மை மக்களிடமிருந்து மறைந்துவிடும்.

பொது உரிமை இல்லாத நாட்டில் ஏற்படும் பொது உடைமை மறுபடியும் அதிக உரிமை இருக்கிறவனிடம்தான் போய்ச் சேர்ந்து கொண்டே இருக்கும் என்பது பொதுவுடைமைத் தத்துவத்திற்குப் பால பாடம் என்பதை மக்கள் உணரவேண்டும்.

('குடி அரசு' -தலையங்கம்—25-3-1944)

15. ஆகவே, கம்யூனிஸ்ட் கட்சி பணக்காரர்களை ஒழிப்பதில் முதல் படியில் நிற்கிறது. திராவிடர் கழகம் பார்ப்பனீயத்தை ஒழிப்பதில் முதல் படியில் நிற்கிறது. என்றாலும், பணக்காரர்களை ஒழிப்பதில் திராவிடர் கழகத்திற்குக் கவலை இல்லை என்று சொல்ல முடியாது. பணக்காரர்களை

படிப்பகம்

www.padippakam.com

ஒழிக்க வேண்டியது அவசியந்தான். ஆனால், பார்ப்பனீயத்தை, மூடநம்பிக்கையை ஒழிக்க வேண்டியது மிக மிக அவசியம் என்று திராவிடர் கழகம் கருதுகிறது. பணக்காரத்தன்மைக்கு பார்ப்பனீயமும், மேல்சாதி-கீழ்சாதித்தன்மையும், கடவுள் தன்மையும்தான் காரணம். இவற்றை ஒழிக்காமல் பணக்காரர்களை ஒழித்தால் மறுபடியும் பணக்காரர்கள் முளைத்துக் கொண்டே இருப் பார்கள். சாக்கடையும், கொசுக்களையும் ஒழித்தால்தான் அழுக்கு தண்ணீரையும் மலேரியாக் காய்ச்சலையும் ஒழிக்க முடியும். ஆகையால்தான், திராவிடர் கழகம் 'பணக்காரத் தன்மையை ஒழிக்க அஸ்திவார வேலை' என்று கருதி, இதைச் செய்கின்றது.

பணக்காரத்தன்மைக்கு எளிதில் எதிர்ப்புக் கிடைக்கும்; பார்பனீயத்திற்கு எதிர்ப்புக் கிடையாது. இந்த நாட்டில் இது ஒரு பெரிய கஷ்டம். ஆதலால் முதலில் சுலபமானதைச் செய்துகொண்டு பிறகு கஷ்டமானதை செய்துகொள்ளலாம் என்று கருதுகிறார்கள்.

ஆகையால், நாம் இந்த கம்யூனிசத்தை ஏற்பதில் தவறு இல்லை. இதுதான் மக்களின் நல்வாழ் விற்கு வழி. என்றைக்காவது உலகம், அங்கு சென்று தான் நிற்கும், அதுவும் சீக்கிரம் சென்று நிற்கும். (சொற்பொழிவு– 'விடுதலை' 4-10-1951)

16. பொதுவாக, சுயமரியாதை என்கின்ற ஒரு இஞ்சினைப் பலப்படுத்தி, சரியாக ஓடத் தகுந்த சக்தியை உண்டாக்கி வைத்துவிட்டால், பிறகு எந்த எந்திரத்தைக் கொண்டுவந்து அதோடு இணைத்துத் தோல் பட்டையை மாட்டிவிட்டாலும் அது தானாகவே ஓடும். அது இன்னவித மான இயந்திரமாகத்தான் இருக்கவேண்டும் என்கின்ற கவலை யாருக்கும் வேண்டியதில்லை என்றே சொல்லுகின்றோம். மற்றபடி, எல்லா உணர்ச்சிகளையும் விட சுயமரியாதை உணர்ச்சியே மேலானதும் மதிக்கத் தக்கதுமாகும் என்பதின் தத்துவத்தை உணர்ந்தவர்களுக்கு இந்த இயக்கத்தில் உண்மையான சந்தேகமே தோன்ற இடமிருக்காது. அது இன்றைய தினம் வேண்டு மானால் ஏதோ ஒரு சிறு வகுப்பாருடன் போராடத் தோன்றியதாக தோன்றலாம். இதுவே அல்ல அதன் இலட்சியம். ஒரு இயந்திரத்தை கழற்றும் போது முதலில் சுற்றும் சிறு வேகம் போல், இன்று ஒரு சிறு வகுப்பார் உணர்ச்சியோடு போராடுவதாகக் காணப்படுவது; மற்றபடி, பின்னால் அது உலகத்தையே ஒன்று படுத்த—உலக மக்களையே ஒரு குடும்ப சகோதரர்களாகச் செய்யும் முயற்சியின் போதுதான் அதன் உண்மை சக்தியும் பெருமையும் வெளியாகும். ('குடி அரசு'—தலையங்கம்—17—2—1929)

17. நம் இயக்கம் (சுயமரியாதை இயக்கம்) சமூகத்துறையிலுள்ள குறைகளை நிவர்த்திப்பதற் கென்றே ஆரம்பிக்கப் பட்டு நடைபெற்று வந்ததும், சர்க்கார் அதிகாரிகள் முதல் அனேக செல்வான்களும் இயக்கத்தில் கலந்து வேலைசெய்து வந்ததும் எவரும் அறியாததல்ல. ஆனால், சிறிது காலம் சென்றபின் மக்களுக்குள்ள சமுதாயக் கொடுமைகள் தீரவேண்டியது எவ்வளவு அவசியமோ அதுபோலவே மக்களுக்குள்ள பொருளாதாரக் கொடுமையும் தீரவேண்டியது அவசியமென்று கருதியதால் பொருளாதார சம்பந்தமாக நாம் சிறிது பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தோம். என்றாலும் அரசாங்கத்தார் தப்பபிப்ராயத்தைக் கொண்டு இயக்கத்தை அடக்க அடக்குமுறைப் பிரயோகம் ஆரம்பித்து விட்டார்கள் என்று உணருகிறேன். இதையேதான் அதிகாரிகள் முன்பும் தெரிவித்துக் கொண்டேன். ஆனால், ஒரு அளவுக்கு சர்க்காருடன் ராஜி ஏற்படுத்திக் கொள்ளலாம் என்கின்ற ஆசையின்மீதே பொருளாதார விஷயத்தில் சமதர்மக் கொள்கையை பிரச்சாரம் செய்வதில் சர்க்காருக்கு ஆட்சேபணை இல்லை என்றும், சாதி மத சம்பந்தமான விஷயங்களில் வேறு சாதி, மதக்காரர்கள் மனம் புண்படும் படியோ, அவமானம் ஏற்படும்படியோ என்று இல்லாமல் சாதி மதக் கண்டனங்கள் செய்து கொள்ளலாம் என்னும் முடிவுக்கு வந்தோம். சர்க்காரோடு இந்த மாதிரியான ஒரு சமாதான முடிவுக்கு வராதபட்சம் சர்க்காருக்கும் நமக்கும் வீண் தொந்திரவும் மனக் கசப்பும் ஏற்பட்டுத் தீரும் என்கின்ற நிலையில் மற்ற ஆதாரங்களும், முயற்சிகளும், நிலைமைகளும் இருந்ததால், நான் இந்தச் சமாதானத்துக்கு வரவேண்டியதாயிற்று. ஆகவே இதன் பலன் என்னவானாலும் அதற்கு நானே பொறுப்பாளி என்றுதான் சொல்லவேண்டும்.

சில இளைஞர்களுக்கு இது கேவலமாகத் தோன்றலாம். என்றாலும், நம் இயக்க சம்பந்தமாக நமது கொள்கைகளிலோ, திட்டங்களிலோ எதையும் விட்டுக் கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டதாக எனக்குப் படவில்லை. ஆதலால், யார் எப்படி நினைத்தாலும் நமக்கு ஒன்றும் முழுகிப் போய் விடாது என்று தைரியமாகச் சொல்லுகிறேன். ('குடி அரசு'—அறிக்கை—31—3—1935)

---

2. தேசிய இன விடுதலை என்பதில் உறுதியான நிலையெடுக்கத் தவறி விட்டவர்;

படிப்பகம்

www.padippakam.com

தேசிய இனத்தைத் தமிழ்மொழி என்ற மொழியடிப்படையில் தீர்மானிப்பதா? அல்லது திராவிட இன அடிப்படையில் தீர்மானிப்பதா ? 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்பதும் 'திராவிட நாடு— திராவிடர்க்கே' என்ற கோஷமும் மாறி மாறியே தொடக்கத்தில் ஒலிக்கின்றன, பின்னர் பெரியார் இன அடிப்படையில் கேட்பதே சரியானது உறுதி எனசெய்து விடுகிறார். அதற்கு அவர் சொல்லும் காரணம்-மொழி யடிப்படையில் 'பார்ப்பான் நானும் தமிழ்தான் பேசுகிறேன் என்று வந்துவிடுவானே, என்பதுதான். பிற மூன்று மாநிலங்களில் யாரும் கோரவில்லையே என்று கேட்டதற்கு அவர்களுக்காகவும் நான்தான் பேச வேண்டும் என்று கூறிவிடுகிறார். பின்னர் மொழிவாரி மாநிலங்கள் 1956யில் பிரிந்தவுடன்—இனி திராவிட நாடு தமிழ்நாடு தான் எனத் தெளிவு படுத்தி விடுகிறார். இதைக் காட்டிலும் மத அடிப்படையில் நாடு கோருவது ஜின்னாவுக்கு எளிதாக இருந்தது. இருவருமே பிரிவினைக் கோரிக்கையை வைத்தது 1940யில் என்றாலும், ஜின்னாவைப்போல் உள்நாட்டுப் போர் நடத்தியாவது தனி நாடு பெறும் தீவிரமும், அதற்கான ஆதரவும் பெரியாருக்கில்லை . அது தவிர பெரியார் பாணியில் தொடர்ந்து பிரசாரம் செய்து, மக்களாதரவை உண்டாக்கி அதன்பின் வன்முறையின்றி நாடு பிரிவினையைப் பெறுவதற்கு நீண்ட கால அவகாசம் வேண்டும். காங்கிரஸ் பிரசாரம், காந்தியின் வெகுஜன செல்வாக்கு மிக்க 'மகாத்மா பிம்பம்' ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். ஆனால் பெரியார் அன்றிலிருந்து இறுதிவரை 'தனித் தமிழ் நாடு' கோரிக்கையை எழுப்பிக் கொண்டு தானிருந்தார். இவை அனைத்தையும் விட இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் தனி நாடு கேட்பதற்கு அவர் காட்டிய ஒரே காரணம் பார்ப்பன ஆதிக்க ஒழிப்புதான். வடநாட்டுடன் இணைந்துள்ள வரையில் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்கமுடியாது என்பதையே அவர் ஒவ்வொரு சொற்பொழிவிலும் வலியுறுத்துகிறார். இந்தித் திணிப்பும்—எதிர்ப்பும் அவரது கோரிக்கைக்கு வலிவு ஏற்படுத்தினாலும், தேசிய இனப் போராட்டத்தை உருவாக்க இந்தச் சொல்லாடல் போதுமா என்பது சந்தேகமே. பெரியார் சுயமரியாதை இயக்க காலத்தில் தேசம், தேசியம், தேசாபிமானம் போன்றவைகளைக் கற்பிதங்களாக வர்ணித்திருக்கிறார் தேசியம் பேசுவதில் அவருக்கொரு உள்ளார்ந்த சிக்கல் இருந்திருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. எனவே அவரது பார்ப்பன எதிர்ப்பே தனிநாடு கோரிக்கையாக உருப் பெற்றது என்பதை மேற்கண்ட விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

---

18. தமிழும், தமிழ் நாடும், தமிழ் மக்களும் இப்படிப் பிரிந்து கிடக்கிற காரணத்தினால்தான் ஒற்றுமைக்குப் பாடுபடும் நாங்கள் திராவிட நாடு என்றும், திராவிட மக்கள் என்றும், திராவிடக் கலாசாரம் என்றும் எடுத்துக் காட்டி புத்துணர்ச்சி ஏற்படுத்தப் பாடுபட்டு வருகிறோம். 'தமிழ்' என்பதும், 'தமிழர் கழகம்' என்பதும் மொழிப்போராட்டத்திற்குதான் பயன்படுமேயொழிய இனப் போராட்டத்திற்கோ, கலாசாரப் போராட்டத்திற்கோ சிறிதும் பயன்படாது. சரி, ஆரியர்கள் முதலில் தம் கலாசாரத்தைப் புகுத்திதான் நம்மை வெற்றி கொண்டார்கள்; நம் கலாசாரத்தைப் தடுத்துதான் நம் மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தார்கள். நாமும் நம் கலாசாரத்தை மறந்து ஆரிய கலாசாரத்தை ஏற்றுக் கொண்டதால்தான் அவர்களுக்குக் கீழான மக்களாக—அவர்களுடைய வைப்பாட்டி மக்களாக, சூத்திரர்களாக. பஞ்சமர்களாக ஆக்கப் பட்டோம். எனவே, அக் கலாசாரத்திலிருந்து விடுபடவேண்டுமென்றால், மொழிப் போராட்டம் ஒன்றினால் மட்டும் வெற்றி பெற்றுவிட முடியாது. கலாசாரத்தின் பேரால்—இனத்தின் பேரால் போராட்டம் நடத்தவேண்டும். அதில் வெற்றிபெற வேண்டும். அப்போதுதான் நாம் விடுதலை பெற்றவர்களாவோம்.

மொழிப் போராட்டம், கலாச்சாரப்போராட்டத்தின் ஒரு பகுதி தானேயொழிய முழுப் போராட்ட மாகவே ஆகிவிடாது. சட்டம், சாஸ்திரம், சமுதாயம், சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள், புராணங்கள், இதிகாசங்கள் இவை எல்லாவற்றிலுமே நம் இழிவு நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இவை எல்லாவற்றிலிருந்துமே நம் இழிவு நீக்கமடைந்தாகவேண்டும். மொழியால் மேம்பாடும் வெற்றியும் பெற்று விடுவதாலேயே நமது இழிவும், இழிவுக்கு ஆதாரமான கலாச் சாரமும் ஒழிந்துவிடமாட்டா; மேலும், இந்த இழிவால் அவதிப்படுபவர்கள் தமிழ்மொழி பேசு கிறவர்கள்—தமிழர்கள் என்பவர்கள் மாத்திரமல்லாமல்— சென்னை மாகாணத்தில் மட்டுமில்லாமல் இந்தியாவின் மற்ற மாகாணங்களிலும், அதாவது, வேறு பல மொழிகள் பேசும் மக்கள் உள்ள வங்காளம், பீகார், பம்பாய், மகாராஷ்டிரம் முதலிய மாகாணங்களிலும் இருக்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

அங்குள்ள தாழ்த்தப்பட்ட தோழர்களும் தம்மைத் திராவிடர்கள் என்றுதான் கூறிக்கொள்கிறார்கள் உண்மையில் அவர்களும் திராவிடர்கள் தாம்.

(சென்னை ராபின்சன் பார்க்கில், 24—1-1950—ல் சொற்பொழிவு, 'விடுதலை' '27—1—50)

19. நிற்க, இந்த பிரிவினை அமைப்பு ஏற்பாட்டில் எனக்கிருக்கும் சகிக்க முடியாத குறை என்ன இருக்கிறது என்றால், நாட்டினுடையவும், மொழியினுடையவும், இனத்தினுடையவும் பெயர் அடியோடு மறைக்கப்பட்டுப் போய் விடுகிறதே என்கிற குறைபாட்டு ஆத்திரந்தான்' நம் நாட்டுக்கு, சமுதாயத்திற்கு, இனத்திற்கு திராவிடம் என்று இருந்த பெயர், அது தமிழல்ல என்பதனாலும், நமக்கு அது ஒரு பொதுக் குறிப்புச் சொல்லும், ஆரிய எதிர்ப்பு உணர்ச்சிச் சொல்லுமாக இருக்கிறதே என்று வலியுறுத்தி வந்தேன், அதை ஆந்திர, கர்நாடக, கேரள நாட்டு மக்களல்லாமல் தமிழ் மக்களில் சிலரும் எதிர்த்தார்கள். பின்னவர்கள் என்ன எண்ணங் கொண்டு எதிர்த்தாலும், அவர்களுக்கு மற்ற மூன்று நாட்டார் ஆதரவு இருந்ததால் அதை வலியுறுத்துவதில் எனக்குச் சிறிது சங்கடமிருந்தது. அவர்கள் மூவரும் ஒழிந்த பிறகு அவர்களையும் சேர்த்துக் குறிப்பிடத் தக்க ஒரு சொல் நமக்குத் தேவை இல்லை என்றாலும், **'திராவிடன்'** என்ற சொல்லை விட்டு விட்டுத் **'தமிழன்'** என்று சொல்லியாவது தமிழ் இனத்தைப் பிரிக்கலாமென்றால், அது வெற்றிகரமாக முடிவதற்கு இல்லாமல் பார்ப்பான் (ஆரியன்) வந்து, 'நானும் தமிழந்தான், என்று கூறிக்கொண்டு உள்ளே புகுந்துவிடுகிறான், **(விடுதலை 'அறிக்கை' 11—10—1955)**

20. திராவிட நாடு எது ? இதற்கு முன்—1956க்கு முன் இருந்த சென்னை மாகாணத்தை நான் 'திராவிட நாடு' என்று சொன்னேன். அப்பொழுது மலையாளம், கன்னடம், ஆந்திரம் பிரிந்திருக்கவில்லை. வெள்ளையன் இந்த நாட்டை விட்டுப் போய்விட்ட பிறகு, வடநாட்டானும், இந்த நாட்டுப் பார்ப்பானும் சேர்ந்து கொண்டு இனிமேல் நமக்கு ஆபத்து என்று கருதி, நான்கு பிரிவுகளாக வெட்டிவிட்டார்கள். இப்பொழுது நம்மோடு ஒட்டிக் கொண்டிருந்த கள்ளிக்கோட்டை மங்களூர் மாவட்டங்களும் மலையாளம், கன்னட நாடுகளுடன் சேரப் போகின்றன. இப்பொழுது நம்முடன் மலையாள, கன்னட நாடுகளின் சம்பந்தமில்லாமல் தனித் தமிழ் நாடாக ஆகிவிட்டோம். ஆகவே இதை இப்பொழுது 'தமிழ்நாடு' என்று சொல்லலாம். முன்பு அவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று சொன்னோம். ஆனால், அவர்கள் பிரிந்து தனியாகப் போவதிலேயே கவனத்தைச் செலுத்திப் பிரிந்து போய்விட்டார்கள், நாம் நிபந்தனையற்ற அடிமைகளாய் உள்ளோம். **(திருவண்ணாமலையில், 19—8—1956-ல் சொற்பொழிவு-'விடுதலை' 29—8—56)**

21. நாம் இந்த நாட்டில் உரிமை உடைய மக்களாயிருந்தும், சமுதாயத்தில் இழிந்தவர்களாகவும் பொருளாதாரத்தில் தாழ்த்தப்பட்டவர்களாகவும் இருந்து வருகிறோம். இதை மாற்ற வேண்டிய முயற்சிகள் பல நடந்தும், நம் நிலையிலே சிறுதும் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. காரணம் என்னவென்று யோசித்தோம், முன்னேற்றம் அடைந்துள்ள நாட்டாரைப் பார்த்தோம். அதன்படி ஒரு நாட்டு மக்களோ அல்லது சமுதாயமோ முன்னேறவேண்டுமானல், அந்த மக்களுக்கு அல்லது அந்த சமுதாயத்தவருக்குப் பொது உணர்ச்சியையும் ஒற்றுமை மனப்பான்மையையும் உண்டாக்கக் கூடிய இலட்சியச் சொல் அல்லது குறிச்சொல் ஒன்று தேவை என்பது விளங்கியது, அதே சமயத்தில் நம் நிலையைச் சிந்தித்துப் பார்த்த போது 'இந்து' 'இந்தியா' என்று நமக்குப் புரியாத சொற்களை—நமக்குச் சம்பந்தமில்லாத மொழிகளைச் சொல்லிக்கொண்டு வந்தோமே தவிர, உண்மையான ஒற்றுமை ஏற்படத்தக்க முறையைக் கையாளவேண்டுமே என்ற சிந்தனை நம் தலைவர்களுக்குள் ஏற்படவே இல்லை.

(லால்குடியில், 23—5—1944ல் சொற்பொழிவு'குடி அரசு'3—6—1944)

22. தமிழர் என்பது மொழிப் பெயர் திராவிடர் என்பது இனப் பெயர். தமிழ் பேசும் மக்கள் யாவரும் தமிழர் என்று தலைப்பில் கூடமுடியும். ஆனால், தமிழ் பேசும் அத்தனை பேரும்' திராவிடர் ஆகிவிடமுடியாது, இனத்தால் திராவிடனான ஒருவன் எந்தச் சமயத்தைச் சார்ந்தவனாயிருந்தாலும், எந்த மொழி பேசுபவனாயிருந்தாலும் அவன் திராவிடர் என்ற தலைப்பில்தான் சேருவான். ஆகையால், திராவிடமொழி தமிழ் என்ற காரணத்திற்காக, தமிழ் பேசும் திராவிடன் அல்லாத ஒருவன்—மொழி காரணமாக மட்டுமே தன்னைத் திராவிடனென்று கூறிக்கொள்ள முடியாது. 'தமிழர்' என்றால் பார்ப்பானும் தன்னைத் தமிழனென்று கூறிக்கொண்டு நம்முடன் கலந்துகொண்டு மேலும் நம்மைக்கெடுக்கப் பார்ப்பான். திராவிடர் என்றால் எந்தப் பார்ப்பானும் தன்னைத் திராவிடன் என்று கூறிக்கொண்டு நம்முடன் சேர முற்பட மாட்டான். அப்படி முன்வந்தாலும் அவனுடைய ஆசார அனுஷ்டானங்களையும், பேத உணர்ச்சியையும் விட்டுத் திராவிடப் பண்பை ஒப்புக்கொண்டு, அதன்படி நடந்தாலொழிய நாம் அவனைத் திராவிடன் என்று ஒப்புக் கொள்ள மாட்டோம்.

(நூல்: 'மொழியாராய்ச்சி' வள்ளுவர் பதிப்பகம், பவானி—1948)

படிப்பகம்

www.padippakam.com

3. தாழ்த்தப் பட்டவர்களை இயக்கமாக்குவதிலும், போராடச் செய்வதிலும் போதிய முனைப்புக் காட்டவில்லை:

பெரியார் மீது வைக்கப்படும் விமர்சனங்களில் ஓரளவு நியாயமானது இதுவே எனத் தோன்றுகிறது. குறைந்தபட்சம் 1954க்குப் பிறகாவது அவர் தாழ்த்தப்பட்டவர் எழுச்சியில் கவனத்தைக் குவித்திருக்கலாமே என்று தோன்றுவது இயல்பு. ஆனுல் இதிலும் அவரது அக்காலத்தில் நடவடிக்கைகளை முழுமையாக ஆய்வு செய்துவிட்டுத் தான் எதையும் கூறமுடியும். இருந்த போதும் ஒன்றைத் தெளிவாகக் காணமுடிகிறது பார்ப்பன கருத்தியல் மேலாதிக்கம் அவர் விரும்பிய அளவு 1973 வரை தகர்க்கப் படவில்லை. என்பது (இன்றைய நிலை குறித்து யோசிப்பது வாசகர் பொறுப்பு) எனவே பிரதான எதிரியை அவர் இறுதிவரை வெல்லவில்லை. தாழ்த்தப்பட்டவரிடம் பேசும்போது அவர் உங்களை கொடுமைப்படுத்தும் பிற மேல் ஜாதியினர் என்றுதான் கூறுகிறார். தான் அத்தகையதொரு மேல் சாதியினன் என்பதையும், தனது இயக்கம் பெரும்பான்மை அத்தகைய மேல்சாதியினர் இயக்கம் என்பதையும் உணர்ந்திருப் பதற்கான தடயங்கள் அவர் பேச்சில் உள்ளன. வேளாளர், செட்டியார், முதலியார் எனப் பெயர் சொல்லித்தாக்காததைத் தவிர வேறு எந்த சமரசமும் அவர் செய்து கொள்ளாததுடன், உண்மை நிலைகளைத் திரித்துக் கூறுவது போன்றவற்றைச் செய்ததாகக் காணமுடியவில்லை. இன்றும் SC–BC ஒற்றுமை குறித்து பேசப் பட்டாலும் நடப்புலகில் அதற்கான அடிப்படைகளை உருவாக்குவது எப்படி என்பது சிக்கலான கேள்வியாகவே இருக்கும்போது பெரியாரிடம் மட்டும் ரொம்பவும் அதிக மாக எதிர்பார்ப்பதற்கில்லை எப்போதுமே தாழ்த்தப்பட்டவர்களுக்கான பிரச்சாரம் அவரது பிரச்சாரத்தின் இன்றியமையாத பகுதியாக இருந்து வந்தது என்பதை மட்டும் இங்கு மீண்டும் சுட்டிக் காட்ட முடியும்.

---

23. நாங்கள் ஆதித் திராவிடர்களைப் பற்றி பேசும்போது, பார்ப்பனர்கள் மனவருத்தம் அடைவதில் அர்த்தம் உண்டு. ஆனால், பார்ப்பனரல்லாதார் மன வருத்தமடைவதில் சிறிதும் அர்த்த மில்லை. அது வெறும் முட்டாள்த்தனமும், மானமற்ற தன்மையுமே ஆகும். ஏனெனில், தமது சமூகத்தில் பார்ப்பனர் என்கின்ற கூட்டத்தாராகிய 100க்கு 3 வீதமுள்ள ஜனத்தொகை நீங்கி, மற்ற ஜனங்களுக்கு இந்த நாட்டில் சூத்திரன் (அடிமை), ஆதித் திராவிடன் என்கின்ற பட்ட மில்லாமல் வேறு எந்தப் பட்டத்தோடாவது யாராவது இருக்க முடியுமா? இருக்கின்றார்களா? என்று கருதியும், அனுபவத்தையும் கொண்டு பாருங்கள்! சூத்திரன் என்கின்ற 'காலத்தில்' நீங்கள் பதியப்பட்டிருப்பதில் உங்களுக்குச் சிறிதளவாவது மானம் இருந்தால், பறையன் என்கிற பட்டம் போகவேண்டுமென்பதில் கடுகளவாவது வருத்தமிருக்குமா?

பறையன் பட்டம் போகாமல், உங்களுடைய சூத்திரப்பட்டம் போய்விடும்' என்று கருதுகின்றீர் களேயானுல், நீங்கள் வடிகட்டின முட்டாள்களேயாவீர்கள்,

(நாகையில், 3-10-1931ல் சொற்பொழிவு—'குடியரசு' 11—10—1931)

24. நம் நாட்டில் திராவிட மக்களுக்குள்ளாகவே திராவிடர் ஆதித்திராவிடர் என்கின்ற ஒரு பிரிவு இருக்கிறது என்பதோடு ஆதித்திராவிட சமூகம் மிகப்பெரிய எண்ணிக்கை கொண்ட சமூக மாக இருந்து வருகிறது. திராவிடநாட்டில் எப்படி வெளியிலிருந்து வந்த ஆரியர்களுக்குத் திராவிட மக்கள் தீண்டப்படாதவர்களாக இருக்கிறார்களோ, அப்படி திராவிடர்களுக்கு ஆதித்திராவிடர்கள் அதைவிட மேம்பட்ட தீண்டப்படாதவர்களாயிருக்கிறார்கள். இந்நிலமை திராவிட சமுதாயத்திற்கே ஒரு பெரும் மானக்கேடான நிலைமையாகும் என்பதோடு, திராவிடர்களை ஆரியர்கள் தீண்டப் படாத மக்களென்று வகுத்திருப்பதையும் நடத்துவதையும் அரண் செய்கிறது. ஆகையால் ஆதித் திராவிடர் என்கின்ற பெயரே மாற்றப்பட்டு, இருவரும் திராவிடர்கள் அல்லது தமிழர்கள் என்கின்ற பெயராலேயே வழங்கப்பட வேண்டுமென்பதும் திராவிடர்களுக்கும் ஆதிதிராவிடருக்கும் சமுதாயத் துறையிலுள்ள எல்லா வித்தியாசங்களும், பேதங்களும் ஒழிந்து ஒரே சமூகமாக ஆகவேண்டும் என்பதும் எனது ஆசை. **திருவாரூரில், 24,25—8—1940ல் ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில் தலைமைச் சொற்பொழிவு—குடியரசு**

25 தவிர, இங்கு செய்யும் பிரசாரத்தை பார்ப்பனர்களுக்கும், அல்லாதவர்களுக்கும் போய்ச் செய்யட்டும் என்று அவர் சொல்லுகின்றார். பார்ப்பனர்கள் நமது பிரசாரத்தினால் புத்தி திருந்தி

படிப்பகம்

www.padippakam.com

விடுவார்கள் என்பது சுத்தப் பைத்தியக்காரத்தனமாகும். அவர்கள் தெரியாதவர்களாயிருந்தால் நியாயம் சொல்லலாம். நன்றாய்த் தெரிந்தே, எங்கு தங்கள் ஆதிக்கமும் சோம்பேறிப் பிழைப்பும் போய் விடுகின்றனவோ என்று சுய நலங்கருதி, குரங்குப் பிடிவாதமாய் இருப்பவர்களை நாம் எந்த பிரச்சாரத்தால் எப்படி மாற்றக்கூடும்? பார்ப்பனரல்லாதவர்களோ-முக்கால்வாசிப்பேர் -பார்ப்பனர்களைப் பின்பற்றுபவர்களாகவும், பாப்பானுக்குத் தாசிமகனாய் இருந்தாலும் சரி, பறையனுக்கு மேலே இருந்தால் போதும் — என்று முட்டாள்தனமாய் கருதிக்கொண்டு இருக்கிறவர்கள் என்றாலும், நம்மால் கூடியதைச் செய்துதான் வருகிறோம், எதற்கும் உங்கள் முயற்சியும், சுயமரியாதை உணர்ச்சியும் இல்லாவிட்டால் ஒரு காரியமும் நடவாது.

[சென்னை நேப்பியர் பார்க்கில், 22-10-1929ல் சொற்பொழிவு 'குடி அரசு' —27-10-1929]

26. தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயமாய் என்னுடைய அபிப்ராயம் நீங்கள் தெரிந்ததேயாகும். தாழ்த்தப்பட்ட மக்களை அவர்களுக்கு, மற்றவர்கள் இழைத்துவரும் கொடுமையிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்பதை உண்மையான கருத்துடன் பார்த்தால் அது புரட்சி வேலையேயாகும் ஏனெனில், தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை பெரிய அஸ்திவாரத்தின்மீதே கட்டப்பட்டிருக்கின்றது எப்படி என்றால், தாழ்த்தப்பட்ட மக்கள் கீழ்ச் சாதி மக்கள், தீண்டப்படாதவர்கள் என்பவர்கள் எல்லாம் பிறவியிலேயே கீழ்மைத் தன்மை அடைந்தவர்கள் என்றும்; அவர்கள் கடவுளாலேயே அந்தப்படி பிறப்புவிக்கப்பட்டவர்கள் என்றும்; அதற்கு மதங்களும், மத சாஸ்திரங்களுமே ஆதாரங்கள் என்றும்; கடவுள் செயலையோ, மதவிதிகளையோ யாரும் மாற்றக்கூடாதென்றும்; அவை மாற்றுதலுக்குக் கட்டுப்பட்டவையல்ல என்றும் சொல்லப்படக்கூடிய ஒரு பலமான அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட்டிருக்கிறது. **(சீர்காழியில், 10-7-1935ல் சொற்பொழிவு—'குடி அரசு' 28-7-1935)**

பெரியாரும், எதிர்க்கலாச்சாரமும்:-

அரசியல் கிளர்ச்சிகளை மக்கள் தயாராக உள்ள அளவு நடத்தவேண்டும் என்று கருதிய பெரியார், மக்கள் ஏற்றுக்கொண்ட கருத்துக்களை மிகக் கடுமையாகத் தாக்கியே பிரசாரம் செய்கிறார். 'கடவுள் என்பது பித்தலாட்டம்' 'கடவுளை நம்புபவன் முட்டாள்' 'அன்பே சிவம், சிவமே வெங்காயம்' என்றெல்லாம் தொடங்கி ஏராளமான விஷயங்களில் அன்று பிரபலமாகும் சிந்தனையோட்டத்திற்கு எதிராக நின்று குரல்கொடுத்தும், இந்திய மரபு, கலாசாரம் போன்றவற்றை காட்டுமிராண்டித்தனம், முட்டாள்தனம் என்று இழித்துரைத்தும், விநாயகர் சிலை உடைத்தும், இராமர் படம் எரித்தும் இயக்கம் நடத்திய அவரை மக்களுக்கு வால் பிடிப்பவர் என்றெல்லாம் சொல்வதற்குமுன் எச்சரிக்கையுணர்வுடன் சிந்திக்க வேண்டும். இதிலெல்லாம் ஒரு கவர்ச்சி உண்டாகும், பரபரப்பூட்டி புகழ் பெறலாம் எனறால் இது அரசியல் புகழ்பெற மிகக் கடினமான வழியென்பதையும், இல்லாவிட்டால் எல்லோருமே இதைச் செய்யலாமே என்றும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். என்றுமே கலகபூர்வமாக பேசுபவர்களும், நடப்பவர்களும் தங்கள் சுய அகந்தையின் பொருட்டும், அதிகப் புகழ் பெறவுமே அவ்விதம் நடந்து கொள்கிறார்கள் என்றே ஆதிக்கம் சார்ந்த சக்திகள் வர்ணித்துக் கொண்டு வந்துள்ளன. இன்றை நிலையில் மீட்புவாதம், மத புனர் நிர்ணயிப்புவாதம், ஏகாதிபத்திய, முதலாளீய மனிதாபினவாதம், நுகர்பொருள் கலாசாரம், உயர் தொழில் நுட்ப ஆதிக்கம், நலசாதியம், ஆணாதிக்கம், பழைய புதிய தீண்டாமை வடிவங்கள், ஆதிக்கப் போட்டியில் உருவாக்கப்படும் சொல்லாடல்கள் ஆகிய அனைத்தையும் சமாளிக்க எதிர் கலாச்சார நடவடிக்கைகள் எதிர்நோக்கியிருக்கவேண்டியநிலையில் பெரியாரிடமிருந்தஇதற்கான கூறுகளைக் கவனமாகப் பரிசீலிக்கவேண்டியுள்ளது. நிலைபெற்றிருந்த நம்பிக்கைகள், மதிப்பீடுகள் போன்றவற்றை அவர் கடுமையாக மறுத்துப்பேசியதை பட்டியலிட்டால் அது நீண்டுகொண்டே போகும். வெகுஜன சொல்லாடல் களத்தில் அவருடைய பல உச்சரிப்புகளுக்கு முன்னோடிகள் யாருமிருந்தார்களென்றும் தோன்றவில்லை. (தமிழைப் பொறுத்தவரையில்) சிலவற்றைப் பார்ப்போம்.

நிலவிய பேச்சு		பெரியார் கூற்று
மனிதப் பிறவி உயர்வானது	X	மனிதப் பிறவி மிருகங்களைவிட இழிவானது,

படிப்பகம்

www.padippakam.com

பகுத்தறிவு மனிதனின் உயர்குணம்	X	பகுத்தறிவு மனிதனின் பலவீனம் அல்லது இழிகுணம். (அதாவது மனிதனை மிருகங்களிடமிருந்து வேறுபடுத்தும் அறிவிப் பண்புகள் என்ற அர்த்தத்தில்.
பாவ, புண்ணியங்களுண்டு	X	பாவ, புண்ணியங்களில்லை.
மனித வாழ்க்கை இலட்சியமுள்ளது	X	மனித வாழ்க்கை இலட்சியமற்றது.
ஆன்மா, மறுபிறவி உண்டு	X	ஆன்மா கிடையாத மனித உடல் பொருண்மைத் தன்மையுடையதே.
மனிதனுக்குக் கட்டுப்பாடுகள் தேவை	X	மனிதனுக்குக் கட்டுப்பாடுகள் தேவையில்லை.
அந்நியராட்சி இழிவு	X	அந்நியராட்சி இழிவில்லை. இந்திய பார்ப்பனக் கலாசாரமே இழிவு.
தொழிற்சங்கம் தொழிலாளர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற வழி வகுப்பது	X	தொழிற்சங்கம் தொழிலாளர் பிரச்சினையை கூலிப்பிரச்சினையாக மாற்றக்கூடியது. தொழிற்சங்கத் தலைமை துரோகத்தன மாவதற்கு வாய்ப்புகள் அதிகம்.
கற்பு உயர் ஒழுக்கம்	X	கற்பு தேவைக்கேற்றபடி, சமூகங்களால் உருவாக்கிக்கொள்ளப்படுவது பெண்ணுக்கு கற்பை நிர்பந்திப்பது மோசடி.
பிள்ளை பெற்று வளர்ப்பது வாழ்வின் இன்றியமையாத பகுதி	X	பிள்ளை பெற்று வளர்ப்பது அவசியமில்லை (பெண் விடுதலைக்கு எதிரானது)

இவை மேலோட்டமாகக் கொடுக்கப்படுபவை. பல விஷயங்களில் அவர் கூற்றுகள் இடத்திற்கிடம் முரண்பட்டிருக்கும் அவருடைய பேச்சுக்களை ஆழமாக வாசிப்பதின் மூலம் பொதுவாக அவரிடம் வெளிப்படும் எதிர்கலாசாரத் தொனியை வெளிக் கொணரலாம். அவ்வாறு செய்வது இக்கட்டுரையை மிகவும் நீண்டதாக்கிவிடும் என்பதுடன், அது வாசகர்களுடன் இணைத்து செய்யும் கூட்டுச் செயல்பாடாக மாறுவதே பொருத்தம்.

இக்கட்டுரையில் கூறப்பட்டதை விட அவருடைய மேற்கொள்கள் அதிகம் உணர்த்த முடியும். 'பூணூல் போடுவதை சட்டப்படி குற்றமானதாக்க வேண்டும்! 'நாற்றுநடும் பாப்பாத்தியை கண்டதுண்டா' போன்றவற்றில் கலாச்சாரப் புரட்சிக்கான, அடித்தளத்தையும், 'திருமணத்தை சட்ட விரோதமானதாக்க வேண்டும்' என்பதில் தீவிர கலகக்குரலையும் அடையாளம் காணுவதாயிருந்தால். பெண்கள், தாழ்த்தப் பட்டோர் பற்றிய அவர் கருத்துக்களின் முக்கியத்துவத்துவம் வலியுறுத்தப்பட வேண்டியிருப்பதல்ல.

---

27. உலகில் கற்பு, காதல் என்பனபோன்ற வார்த்தைகள் எப்படி பெண்மக்களை அடிமைப்படுத்தி அடக்கி ஆளவென்று ஏற்படுத்திப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ, அதுபோலவேதான் ஒழுக்கம் என்னும் வார்த்தையும் எளியோரையும், பாமர மக்களையும் ஏமாற்றி மற்றவர்கள் வாழ பயன்படுத்திவரும் ஒரு சூழ்ச்சி ஆயுதமேயல்லாமல், அதில் உண்மையோ, சத்தோ ஒன்றுமே கிடையாது. கற்பு, காதல், சத்தியம், நீதி, ஒழுக்கம், என்பனவெல்லாம் ஒரே தாயின் பிள்ளைகள் அதாவது குழந்தைகளை பயமுறுத்த பெரியவர்கள் 'பூச்சாண்டி' 'பூச்சாண்டி' என்பதுபோல இவை எளியோரையும் பாமர மக்களையும், வலுத்தவர்களும், தந்திரக்காரர்களும் ஏமாற்றச் செய்து ஒரு பெரும் சூழ்ச்சியாகும்.

படிப்பகம்

www.padippakam.com

எப்படி குழந்தைப் பருவம் உள்ளவரை பூச்சாண்டிக்கு மக்கள் பயப்பட வேண்டியிருக்கிறதோ, அது போலவேதான் அறிவும், சக்தியும் மக்களுக்கு ஏற்படும்வரை மேற்கண்ட ஒழுக்கம் முதலிய பூச்சாண்டிகளுக்கு அவர்கள் பயப்பட்டுத் தீரவேண்டியிருக்கிறது.

28 உண்மையிலேயே ஒழுக்க ஈனம் என்பது ஒன்று உண்டென்றும், அது திருட்டு, பொய், ஏமாற்றம் போன்றதாகிய என்றும் சொல்வதனால் அந்தக் குணங்கள் பெரிதும் நிலையாய் குடி கொண்டிருக்கும் இடங்கள், அரசர்கள், குருமார்கள், வியாபாரிகள், வக்கீல்கள், தேசீயவாதிகள் போன்ற கூட்டத்தார்களிடமே ஆகும்.

(மேற்கோள் 2728 பக்கம் 15 17, பகுத்தறிவு மலர்.3, இதழ் 9, ஜனவரி 1, 1938]

29. மாறன்: இன்னொரு கேள்வி. இப்போ காலத்திலே ஒழுக்கம் குறைஞ்சு வருது, அப்படின்னு எல்லோரும்சொல்றாங்க. அரசாங்கத்தின் தண்டனைக்குப் பயமிருக்கணும்; அல்லது ஒருவிதமான ஆண்டவன் நம்பிக்கையிருந்து பயப்படணும். இந்த ரெண்டும் இல்லாமப் போயிட்டதே இப்போ. இந்த ஒழுக்கம் நல்லா இருக்கிறதுக்கு என்ன வழி ?

பெரியார்: மன்னிக்கணும், அய்யா. இதை ஒன்றும் கட்டுப்படுத்தமுடியாது, இனிமேல் எந்தக் காரணம் சொல்லியும் மக்களைக் கட்டுப்படுத்தவே முடியாது. ஒரு மட்டம் தாராளமாகப் போயி, மறுபடியும் அவங்க ஏதாவது இதுக்கு என்ன பண்றதுன்னு திரும்பினா உண்டே தவிர, இப்ப ஒழுக்கமா, நாணயமா, நேர்மையா மனுசன் யாராவது சிந்திக்க இப்ப வாய்ப்பு இல்லை எல்லோருக்குந்தான். அரசியலில் ஒழுக்கமா இருக்க முடியலே. எவனாயிருந்தாலும் மதத்திற்குக் கூட, காட்டிக்க முடியுதே தவிர, தத்துவப்படி நடக்க எவனாலும் முடியலே. ஒழுக்கம்'னு இன்னொருத்தனுக்குச் சொல்றமே தவிர, அந்த வாய்ப்புக் கிடைச்சா நாமும் அந்தத்தவறு பண்ணத் தயாராயிருக்கோம். அனுபவத்திலே சொல்றேன். நான் அப்படி இருக்கும்போது சும்மா ஒழுக்கம்னு சொல்லி இன்னொருத்தனை ஏமாத்தறதிலே என்ன இலாபம் சொல்லுங்க.

மாறன்: ஒரு சமுதாய நலவாழ்வுக்கு.

பெரியார்: என்ன நல்வாழ்வு ? சமுதாயத்துக்கு என்ன நல்வாழ்வு வரும்'? நீங்க பணக்காரன்! நான் ஏழை. இவங்களுக்கு நல்வாழ்வு எங்கே வரும் ?இதையெல்லாம் காப்பாத்துறதா இருந்தா அதைத்தான் ஒழுக்கம்னு நினைக்கிறோம். உங்ககிட்டே பணம் திருடக்கூடாது நான், நீங்க வியாபாரி, என்னை மோசம்பண்ணி பணம் சேர்த்துடலாம்னு நினைக்கிறீங்க. அப்ப எப்படி ஒழுக்கம் வரும் ?

(5—1—70ல் திருச்சி வானொலி ஒலிபரப்பு)

30. ஒரு பூச்சியின் செய்கைக்கு பாவம், புண்ணியம் உண்டானால்தான் ஒருமனிதனின் செய்கைக் குப் பாவம், புண்ணியம் உண்டாக முடியும். மனிதனுக்குள்ள பகுத்தறிவு என்பது கடவுளால் ஒரு தனிப்பட்ட காரியத்துக்காகக் கொடுக்கப்பட்டது என்றால், ஒரு யானைக்குள்ள தும்பிக்கை, ஒரு நாரைக்குள்ள நீண்டமூக்கு, ஒரு முள்ளம்பன்றிக்குள்ள செதில் முட்கள், தேளுக்குள்ள கொடுக்கும் பாம்புக்குள்ள விஷம் போன்றவைகளெல்லாம் கடவுளால் தனிப்பட்ட காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்டவை என்று தானே சொல்லவேண்டும்? ஆதலால், ஒரு யானைக்குத் தும்பிக்கை விசேஷ உறுப்பாகவும், நீண்ட அவயவமாகவும் இருப்பதுபோலவே, மனிதனுக்கு பகுத்தறிவுக் குள்ள நரம்புக் கூட்டும் மூளையின் பரிணாம அதாவது அதிக சிந்தனா சக்திக்குள்ள உறுப்புகள் என்பவை விசேஷ உறுப்பாகவோ விசேஷ சக்தியாகவோ இருக்கின்றதென்பதேயல்லாமல், அதற்கு மாத்திரம் ஒரு தனி விசேஷத்துவம் இல்லை என்பதே எனது அபிப்ராயம்.

31. இதுபோன்ற எத்தனையோ 'கெட்ட' குணங்கள் மனித ஜீவன் தனது பகுத்தறிவின் பயனாகவே உடையதாயிருக்கிறது. ஆகையால் பகுத்தறிவின் 'மேன்மையால்' மனித ஜீவன் சிறந்தது என்று எப்படிச் சொல்லிக்கொள்ள முடியும் என்பதே நமது கேள்வியாகும். மேலும் மேற் கண்ட காரணங்களாலும் மற்றும் பல காரணங்களாலும் மனித ஜீவன்களில் பெரும்பான்மையான வை, மற்ற ஜீவராசிகளைவிட இழிவுத்தன்மையுடையவை என்பதும் நமது அபிப்பிராயமாகும். சாதியின் பேரால் உயர்வு-தாழ்வு, மதத்தின் பேரால் வேற்றுமை உணர்ச்சி, தேசத்தின் பேரால் குரோதத் தன்மை முதலான இழிகுணங்கள் மனிதனிடமே அதிகமாகக் காண்கிறோம். மற்றும். கடவுளின் பேரால் மேல்-கீழ்நிலை முதலாகிய அயோக்கியத் தன்மைகள் மனித ஜீவனிடம் உண்டு. பகுத்தறிவின் காரணமாக மனித ஜீவன் உயர்ந்தது என்று சொல்லவேண்டுமானால் மேற்கண்ட கெட்ட-தீய-இழிவான, அயோக்கியத்தனமான குணங்கள் என்பவைகள் எல்லாம் மனிதனிடம் இல்லாமல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மற்ற 'பகுத்தறிவில்லா' ஜீவராசிகளைவிட மனிதஜீவன் மூளை விசேஷம் முதலிய அவயவத்தை நன்மைக்காக பிரயோகித்துக்கொண்ட ஜீவன் என்று சொல்லப்படும். அதில்லாத நிலையில், எவ்விதத்திலும் மனித ஜீவன் மற்ற ஜீவ பிராணி களைவிட உயர்ந்ததல்ல என்பதோடு—பலவிதத்திலும் தாழ்ந்தது என்று சொல்லவேண்டும்.

[30, 31 'குடி அரசு' கட்டுரை — 3—9—1933]

படிப்பகம்

www.padippakam.com

32. தந்திரத்திலும் வஞ்சகத்திலும் மக்களின் அறியாமையினாலும், ஆட்சி செய்யும் அரசாங்கத்தைவிட, துப்பாக்கியாலும் பீரங்கியாலும் ஆட்சி செய்யும் அரசாங்கம் மேலானது.

[பகுத்தறிவு-மலர்-4 இதழ் 3—1938 ஜூலை 1 இதழின் உள் அட்டையில் ஈ.வெ.ரா. மேற்கோள்]

33. நம் கடவுள் — சாதி காப்பாற்றும் கடவுள்
நம் மதம் — சாதி காப்பாற்றும் மதம்
நம் அரசாங்கம் — சாதி காப்பாற்றும் அரசாங்கம்
நம் இலக்கியம் — சாதி காப்பாற்றும் இலக்கியம்
நம் மொழி — சாதி காப்பாற்றும் மொழி

[நூல்: 'சாதி ஒழிப்பு'—1961—சென்னையில், 16-9-1961ல் சொற்பொழிவு]

34. ஏனெனில், சமுதாய சீர்திருத்தம் என்றால் ஏதோ இங்கும், அங்கும் ஆடிப்போன, சுவண்டு போன, இடிந்துபோன பாகங்களைச், சுரண்டி, கூறுகுத்தி, மண்ணைக் குழைத்துச் சந்துபொந்துகளை அடைத்துப்பூசி மெழுகுவது என்றுதான் அநேகர் கருதியிருக்கின்றார்கள்.

ஆனால், நம்மைப் பொறுத்தவரை, நாம் அம்மாதிரித் துறையில் உழைக்கும் ஒரு சமுதாய சீர்திருத்தக்காரனல்ல என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறோம். மற்றபடி நாம் யார் என்றால் என்ன காரணத்தினால் மக்கள் சமுதாயம் ஏன் சீர்திருத்தப்பட வேண்டிய நிலைக்கு வந்தது என்பதை உணர்ந்து, உணர்ந்தபடி மறுபடி அந்நிலை ஏற்படாமலிருப்பதற்கு நம்மால் இயன்றதை செய்யும் முறையில், அடியோடு பேர்த்து அஸ்திவாரத்தையே புதுப்பிப்பது என்கின்றதான தொண்டை மேற்கொண்டிருக்கிறபடியால், சமுதாய சீர்திருத்தம் என்பதைப்பற்றி மற்ற மக்கள் அனேகர் நினைத்திருந்ததற்கு நாம் மாறுபட்ட கொள்கையையும், திட்டத்தையும், செய்கையையும், உடையவராய்க் காணப்பட வேண்டிய நிலைமையில் இருக்கின்றோம்.

இதனாலேயேதான், பலவற்றில் உலக மக்கள் உண்டு என்பதை இல்லை என்றும்; சரி என்பதைத் தப்பு என்றும்; தேவை என்பதைத் தேவையில்லை என்றும்; கெட்டது என்பதை நல்லது என்றும்; நல்லது என்பதைக் கெட்டது என்றும்; காப்பாற்றப்படவேண்டும் என்பதை ஒழிக்கவேண்டும் என்றும்; மற்றும் பலவாறாக மாறுபட்ட அபிப்ராயங்களைக் கூறுவோராக, செய்வோராகக் காணப்படவேண்டிய நிலையில் இருக்கின்றோம். ஆனால் நம் போன்ற இப்படிப்பட்டவர்கள் உலகில் நல்ல பெயர் சம்பாதிப்பதும், மதிக்கப்படுவதும் பழிக்கப்படாமல்—குற்றம் சொல்லப்படாமல் இருப்பதும் அருமை என்பது மாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரியும்.

35. என்னைப் பொறுத்தவரை நான் கூறுவேனாகில், மனிதப் பிறவியானது ஒரு இலட்சியமற்ற பிறவி என்றே கூறுவேன். மனிதன் பிறக்கிறான், பற்பல எண்ணங்களை எண்ணுகிறான்; பல வகைகளை இச்சிக்கிறான்; எவ்வளவோ காரியங்களில் விருப்பம் கொண்டு அவைகளை நிறைவேற்ற முற்படுகிறான். ஒருசிலவற்றில் ஆசை நிறைவேறுகிறது; மற்றவைகளில் ஏமாற்றம் அடைகிறான்; இறுதியில் செத்துப்போகிறான். மனிதன் பிறந்தது முதல் செத்துப்போகும் வரை இடையில் நடைபெறுபவைகள் எலலாம் அவனின் சுற்றுச்சார்பு, பழக்கவழக்கம் இவைகளைப் பொறுத்து நடக்கின்றன. எனவே, மனித வாழ்வு இலட்சியமற்ற வாழ்வு என்பது என் கருத்து. இதை அனேக அறிஞர்களும் ஒப்புக்கொண்டிருப்பதைப் பார்க்கிறேன். மேலும், இக்கருத்து யாராலும் மறுக்கமுடியாததும் ஆகும்.

பிறப்பும், இறப்பும் இயற்கையே. மனிதன் ஏன் பிறக்கிறான் என்று யாராவது கூற முடியுமா? பிறந்து எதற்காக வாழ்கிறான், எதற்காக இறந்து போகிறான்-என்று யார் கூறமுடியும்? இதைக் கேட்டால் 'அது கடவுள் செயல்; கடவுள் பிறப்பிக்கிறார்; காப்பாற்றுகிறார்; சாகடிக்கிறார்' என்றுதான் கூறமுடியுமே தவிர, வேறு சரியான காரணம் கூறமுடியுமா? அவன் எந்த குறிப்பிட்ட இலட்சியத்தின்மீது பிள்ளை வேண்டுமென்று பிள்ளையைப் பெறுகிறான் என்றால்—எதற்காக பிள்ளை வேண்டும் என்பதைக் கூறமுடியுமா? அவன் எந்த குறிப்பிட்ட இலட்சியத்தின் மீது தனக்குப் பிள்ளை வேண்டும் என்று முயற்சிக்கிறான் என்று அவனைக் கேட்டால்கூடத் தெரியாது.

[திருச்சி, பெரியார் ஆசிரியப் பயிற்சி பள்ளியில், 17-3-1956ல் சொற்பொழிவு —'விடுதலை' 21-3-1956]

36. பெண்கள் விடுதலை பெறுவதற்கு இப்போது ஆண்களைவிடப் பெண்களே பெரிதும் தடையாயிருக்கிறார்கள். ஏனெனில், இன்னமும் பெண்களுக்கு தாங்கள் முழு விடுதலைக்குரியவர்கள் என்கின்ற எண்ணமே தோன்றவில்லை. தங்களுடைய இயற்கைத் தத்துவங்களின் தன்மையையே தாங்கள் ஆண்களுக்கு அடிமையாகக் கடவுள் படைத்திருப்பதன் அறிகுறிகளாய்க் கருதிக்கொண்டிருக்கிறார்கள். எப்படியெனில், பெண் இல்லாமல் ஆண் வாழ்ந்தாலும் வாழலாம்; ஆனால், ஆண் இல்லாமல் பெண் வாழமுடியாதென்று ஒவ்வொரு பெண்ணும் கருதிக்கொண்டிருக்கிறாள்.

படிப்பகம்

www.padippakam.com

அப்படி அவர்கள் கருதுவதற்கு என்ன காரணம் என்று பார்ப்போமானால், பெண்களுக்குப் பிள்ளைகள் பெறும் தொல்லை ஒன்று இருப்பதால், தாங்கள் ஆண்கள் இல்லாமலேயே வாழ முடியும் என்பதை ருசுப்படுத்திக்கொள்ள முடியாதவர்களாயிருக்கிறார்கள். ஆண்களுக்கு அந்த தொந்திரவு இல்லாததால், தாங்கள் பெண்கள் இல்லாமல் வாழமுடியும் என்று சொல்ல இடமுள்ளவர்களாயிருக்கின்றார்கள். அன்றியும், அப்பிள்ளைபெறும் தொல்லையால் தங்களுக்குப் பிறர் உதவி வேண்டியிருப்பதால்-அங்கு ஆண்கள் ஆதிக்கம் ஏற்பட இடமுண்டாகிவிடுகின்றது. எனவே, உண்மையான பெண்கள் விடுதலைக்குப் பிள்ளை எனும் தொல்லை அடியோடு ஒழிந்துபோக வேண்டும். அது ஒழியாமல் சம்பளம் கொடுத்துப் புருஷனை நியமித்துக் கொள்வதாயிருந்தாலும் பெண்கள் பொதுவாக உண்மை விடுதலை அடைந்துவிட முடியாது என்றே சொல்லுவோம்.

இம்மாதிரி இதுவரை வேறு யாரும் சொன்னதாகக் காணப்படாவிட்டாலும்—நாம் இதைச் சொல்லுவது பெரிதும் முட்டாள்தனம் என்பதாகப் பொதுமக்கள் கருதுவார்கள் என்று இருந்தாலும் —இந்த மார்க்கத்தைத் தவிர—அதாவது பெண்கள் பிள்ளை பெறும் தொல்லையிலிருந்து விடுதலையாக வேண்டும் என்கிற மார்க்கத்தைத் தவிர—வேறு எந்த வகையிலும் அவர்களுக்கு விடுதலை இல்லை என்கின்ற முடிவு நமக்குக் கல்லுப் போன்ற உறுதியுடையதாக இருக்கின்றது. சிலர் இதை இயற்கைக்கு விரோதம் என்றும் சொலலலாம்.

உலகத்தில் மற்றெல்லாத் தாவரங்கள், ஜீவப்பிராணிகள் முதலியவை இயற்கை வாழ்வு நடத்தும் போது—மானிட வாழ்க்கையில் மாத்திரம் இயற்கைக்கு விரோதமாகவே, அதாவது பெரும்பாலும் செயற்கைத் தன்மையாகவே வாழ்வு நடத்தி வருகின்றபோது, இந்த விஷயத்தில் இயற்கைக்கு விரோதமாய் நடைபெறுவதில் ஒன்றும் முழுகிப் போய்விடாது.

தவிர, 'பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்திவிட்டால் உலகம் விருத்தியாகாது; மானிடவர்க்கம் விருத்தியாகாது' என்று தர்ம நியாயம் பேசச் சிலர் வருவார்கள். உலகம் விருத்தியாகாவிட்டால் பெண்களுக்கு என்ன நஷ்டம்? மானிட வர்க்கம் பெருகாவிட்டால் பெண்களுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டுவிடக் கூடும்? அல்லது இந்த தர்ம நியாயம் பேசுபவர்களுக்குத்தான் என்ன நஷ்டம் உண்டாகிவிடும்? என்பது நமக்குப் புரியவில்லை. இதுவரை பெருகி வந்த மானிட வர்க்கத்தால் மானிட வர்க்கத்திற்கு ஏற்பட்ட நன்மைதான் என்ன என்பதும் நமக்குப் புரியவில்லை.

—['குடி அரசு' தலையங்கம் 12—8—1928]

இறுதியில் சில வார்த்தைகள்:

1. இக்கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ள மேற்கோள்கள் 27, 28 & 32 தவிர அனைத்தும் திரு. ஆனைமுத்து அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 'சிந்தனையாளர் கழகம், திருச்சிராப்பள்ளி, வெளியிட்ட 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்' என்ற நூலின் மூன்று தொகுப்புகளிலிருந்து எடுக்கப்பட்டவையே. அது மட்டுமின்றி அவை கூற்றிடத்திலிருந்து (Context) பிய்த்தெடுக்கப்பட்டுள்ளன என்பதும் கவனிக்கப் படவேண்டும். முன்னமே சொன்னபடி எதையும் வலிந்து நிரூபிப்பது இதன் நோக்கமன்று. ஆர்வமுள்ள தோழர்கள் அத்தொகுப்புகளை ஆழமாகப் படிக்க வேண்டும். மேற்கோள்கள் இருக்கும் பக்க எண்களும் தரப்படவில்லை, முழுத் தொகுப்பையுமே படிப்பதுதான் பொறுத்தம்.

2. இக்கட்டுரையின் முன் அநுமானங்களை ஏற்றுக்கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் தமிழகத்தில் அறிவார்த்தமாகவும், சமூக ரீதியாகவும் செயல்படுபவர்கள் பெரியாருக்கு உரியகவனத்தை அளிக்காமலிருந்தால் அது குருட்டுதனமென்பதையும், மாற்றத்துக்காக செயல்படுபவர்கள் பொதுக்கருத்தியலில் அவர் ஏற்படுத்திய உடைப்பை பயன்படுத்திக் கொள்ளாமலிருப்பது கைகளை வெட்டிக்கொண்டு வேலை செய்வதென்பதையும் துணிச்சலாகக் கூறலாமென்றே தோன்றுகிறது.

O

படிப்பகம்

www.padippakam.com

கள ஆய்வு:

வேதாரண்யத்தில் நடந்த சாதி மோதல்

—தொகுத்தவர் **க. ரவி**

கள ஆய்வுக்குழு:-
ஜெயராமன், ரவி, வடிவேலு, லெனின், பிரபாகரன், ஜீவா, கார்த்திகேயன், தசரதன், கணேசன், உத்திராபதி, முருகையன். இத்தகவல்கள் 23—3—92 மற்றும் 4—4—92 ஆகிய தேதிகளில் சென்று திரட்டப்பட்டன.

வேதாரண்யம்:-
கீழத் தஞ்சையின் கடத்தல் தலைநகரம். குறிப்பாக கடந்த ஏழெட்டு ஆண்டுகளில் இது ஒரு மிகப் பெரிய கடத்தல் மையமாக வளர்ந்திருக்கிறது. பல்வேறு பெரிய அரசியல் கட்சிகளையும் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் பலரும் இதில் ஈடுபட்டுள்ளனர். ஊராட்சிமன்றம் தொடங்கி சட்டமன்றம் வரைக்கும் இதன் பிரதிநிதிகள் உள்ளனர். அரசியல் செல்வாக்கு தொழிலுக்கு உதவுகிறது. அருகிலுள்ள கோடியக்கரை (10கி மீ) ஆற்காட்டுத்துறை (5கி. மீ) ஆகியவையும் முக்கிய கடத்தல் மையங்களாக உள்ளன. இதில் அதிகம் ஈடுபட்டுள்ளவர்கள் தேவர், வன்னியர் சாதியை சார்ந்தவர்களாக உள்ளனர்.

வேதாரண்யம் நகரை ஒட்டி சுமார் 2 கி.மீ வடகிழக்கில் அமைந்திருக்கும் கொள்ளித்தீவு, ராமகிருஷ்ணபுரம், நாகத்தோப்பு ஆகிய பகுதிகளில் தாழ்த்தப்பட்டவர்கள் வசிக்கின்றனர். இவர்கள் பறையர், பள்ளர் சாதிகளைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்குள் அதிகம் முரண்பாடின்றி ஒற்றுமையாய் வாழ்கின்றனர். சுமார் 5 ஆயிரம் பேர் சனத்தொகை கொண்ட இவர்களில் பலர் உப்பள வேலையிலும், விவசாயக் கூலிகளாகவும் இருந்தவர்கள். வளர்ச்சியடைந்த கடத்தல் தொழில் இவர்களில் ஒரு பகுதியை ஈர்த்துக் கொண்டுள்ளது. அதனால் இவர்களில் ஒருசிலர் பொருளாதார ரீதியாக வளர்ந்துள்ளனர். கடத்தலில் ஈடுபட்டாலும் தலைமை இவர்களுக்கில்லை. தோணிகளில் வந்திறங்கும் சரக்கை நகரத்திலிருக்கும் கிடங்குகளுக்கு தூக்கிவருதல் நகரத்திலிருந்து தோணிகளுக்கு பொருட்களை சுமந்து சென்று ஏற்றுதல், வேதாரண்யத்திலிருந்து நாகப்பட்டினம், திருச்சி முதலிய ஊர்களுக்கு சரக்கை கொண்டு செல்லுதல் போன்ற பணிகளில் தான் இவர்கள் பெரும் பாலும் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இதில் தினசரி வருமானம் சராசரி சுமார் 40 ரூபாய் இவர்களுக்குக் கிடைக்கிறது. உப்பள வேலையும், விவசாய வேலையும் இவ்வளவு கூலிதருவதில்லை. எனவே கடத்தல் தொழிலில் ஈடுபட்டவர்கள் மீண்டும் பிற வேலைகளுக்குப் போவதில்லை. படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு இந்தத் தொழிலில் மாணவர்கள் சிலரும் ஈடுபட்டுள்ளனர். அதிக கூலி மட்டுமின்றி இந்தத் தொழிலின் உள்ளீடாக உள்ள சாகச உணர்வும் கூட இந்த கவர்ச்சிக்குக் காரணமாக உள்ளது.

கடத்தல் தொழில் மூலம் வளர்ச்சியடைந்த தாழ்த்தப்பட்டவர்களில் சிலர் உயர்சாதி கடத்தல் வணிகர்களின் நம்பிக்கைக்குரிய அடியாட்களாகவும் உள்ளனர். திருமணம் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளின் போது கடத்தல் வணிகர்களின் பிரதிநிதிகளாகச் சென்று கலந்து கொள்ளும் அளவுக்கு இவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கடத்தல் வணிகர்களுக்கு அடியாட்கள் ''சப்ளை'' முதல் கொண்டு, தேர்தலில் அவர்கள் நிற்கும் போது அவர்களுக்காக சகலவிதமான வேலைகளையும் இவர்கள்தான் செய்கிறார்கள்.

தேவர்களுக்கு நிகராக பொருளாதார ரீதியில் செல்வாக்குள்ள வன்னியர்கள் வேதாரண்யத்தைச்சுற்றியுள்ள கிராமங்களில வசிக்கின்றனர். கவுண்டர்கள் என அழைக்கப்படும் இந்த சமூகத்தினரில் சுப்ரமணிய கவுண்டர், மாரிமுத்துக் கவுண்டர், கைலாசக் கவுண்டர், கார்த்திகேசு கவுண்டர் என ஒன்பது கவுண்டர்கள் முக்கியமானவர்களாக உள்ளனர். இவர்களில் சிலர் பஸ் லாரி, லாட்ஜ், ஜவுளிக்கடை போன்றவற்றின் உரிமையாளர்களாக உள்ளனர். இதில் பெரும்பாலோர் காங்கிரஸ், தி மு.க கட்சிகளிலும், ஒரு சிலர் பா.ம.க விலும் உள்ளனர்.

கடத்தல் தொழில் அடிப்படையில் அதில் ஈடுபட்டுள்ள தேவர், வன்னியர். தாழ்த்தப்பட்டோர் ஆகியோரிடையே ஒற்றுமைநிலவுகிறது. இருந்தபோதிலும் இந்தத் தொழிலில் இவர்கள் ஈடுபட்டிருப்பதும்கூட சாதிய படிநிலை ரீதியில்தான் அமைந்துள்ளது. தாழ்த்தப்பட்டோர் இந்தப்படிநிலையில் கீழே வைக்கப்பட்டு கடத்தலில் கிடைக்கும் கொள்ளை லாபத்தில் மிகச் சிறிய பங்கே தரப்படுகிறது. ஆனால் அவர்களது உழைப்புதான் அதிகம். அதில் வரும் ஆபத்துக்களில் பெரும்பான்மையும் கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கே வந்துசேர்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

ஆற்காட்டுத்துறை:-

கொள்ளித்தீவிலிருந்து இரண்டு கி.மீ. தொலைவிலுள்ள கடற்கரை கிராமம். இங்கு வசிப்பவர்கள் பெரும்பாலோர் படையாட்சி சமூகத்தைச் சேர்ந்தவர்கள். சுமார் 250 குடும்பங்கள். மீன் பிடித்தலும், கடத்தலும் முக்கிய தொழில்கள், இங்கிருக்கும் படையாட்சிகள் சிலருக்கு கொள்ளி தீவில் நிலம் சொந்தமாயிருக்கிறது.

இந்த கிராமத்தின் முன்னாள் தலைவர் சேதுபதி படையாட்சி ஐந்து வேலி நிலமுடையவர். இதில் பாதிநிலம் கொள்ளித்தீவில் உள்ளது. அங்கே ஒரு லேத் பட்டறையும் இருக்கிறது.

வரலாறு:-

நீண்ட நாட்களாகவே கொள்ளித்தீவு, ராம கிருஷ்ணாபுரம், நாகத்தோப்பு ஆகிய கிராமங்களிலுள்ள தாழ்த்தப்பட்டமக்கள் சுற்றியுள்ள வன்னியர், தேவர் சாதியினரின் கொடுமைகளுக்கு ஆளாகி வருகின்றனர். குறிப்பாக பெண்கள் பாலியல் ரீதியில் சுரண்டப்படுகின்றனர். ராமகிருஷ்ணாபுரத்தை சிவப்பு விளக்குப் பகுதி என்றும் சொல்வதுண்டு. கூலி வேலைக்கு வரும் பெண்களும் இத்தகைய பாலியல் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுவது வாடிக்கையாக உள்ளது.

கடத்தல் தொழில் மூலம் தாழ்த்தப்பட்டோரில் சொல்வாக்கு பெற்று உயர்ந்தவர்களில் ஒருவர் ரவி. இவர் அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினருக்கும், சேதுபதி படையாட்சிக்கும் நெருக்கமானவராகவும், நம்பிக்கைக்குரியவராகவும் இருந்திருக்கிறார். இப்போது அந்தப் பகுதியின் முக்கியமான சாராய வியாபாரியாக மாறியுள்ளார். பெரிய அளவில் சாராய உற்பத்தி, வினியோகம், விற்பனை என இவரது தொழில் நடக்கிறது. வெளியூரிலிருந்து ஆட்கள் தருவிக்கப்பட்டு தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். போலீசாரது துணை இதற்கு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. உள்ளூரில் ரௌடித்தனமான பலம் வாய்ந்த ஆதிக்க சக்தியாக ரவியும், அவரைச் சேர்ந்த ஒரு சிலரும் உருவான பின்பு, அவர்கள், தாழ்த்தப்பட்ட சாதி பெண்கள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தியுள்ளனர். கேலி செய்யும் மற்ற சாதி இளைஞர்களைக் கடுமையாகத் தண்டிப்பது, (குறிகளில் மிளகாய்ப் பொடியைத் தடவுவது உட்பட) பிற்பட்ட சாதி இளைஞர்கள் சிலருக்கு தாழ்த்தப்பட்ட சாதி பெண்களைத் திருமணம் செய்வித்து தங்கள் கிராமத்திலேயே குடியமர்த்தியிருப்பது என பல காரியங்களைச் செய்துள்ளனர். இது தவிர உயர் சாதிக்காரர்கள் செய்கிற தவறுகளுக்காக அவர்களை விசாரித்து தண்டிக்கும் அளவுக்கு அதிகாரமுடையவர்களாகவும் உள்ளனர். திருப்பிக் கொடுக்காத கடனுக்காக வேற்று சாதிக்காரர்களை கடுமையாகத் தண்டிப்பதும் நடந்திருக்கிறது. ஆண்களை நடவு நடச் செய்தல் (நடவு வேலை பெண்கள் மட்டுமே செய்வது, அதை ஆண்செய்வது அவமானம் என நினைக்கப்படுகிறது) தலைகீழாகக் கட்டித் தொங்க விடுதல் போன்றவை சில தண்டனை முறைகள்.

சொந்த சாதியினர் மீதும் வன்முறையைப் பிரயோகிக்க ரவி தயங்குவதில்லை. சொத்துத் தகராறில் தனது சித்தியை வெட்டியவர் அவர். கொலை, கொலைமுயற்சி என பல வழக்குகள் அவர் மீது உள்ளன. கடத்தல் மூலம் பொருளாதார ரீதியில் முன்னேறியதைத் தொடர்ந்து இவர்கள் கொள்ளித்தீவில் வன்னியர்களிடமிருந்து நிலங்களை அடகுமீட்கவும், வாங்கவும் தொடங்கியுள்ளனர். ரவி குடும்பத்துக்கு சுமார் 15 வேலி நிலம் இருக்கிறது. மேலே சொன்னவை யாவுமே தாழ்த்தப்பட்டோர்மீது பிற சாதியினர் கோபம் கொள்ளக் காரணமாயிருக்கின்றன.

கடற்கரைப் பகுதியாகிய கொள்ளித் தீவில் குடிநீர் இல்லாததால் சுமார் 2 கி.மீ தொலைவிலுள்ள ரயில் நிலையம் அருகில் வந்து 'தாழ்த்தப்பட்ட பெண்கள் நீர் பிடித்துச் செல்வது வழக்கம். 3—3—92 அன்று ரவியின் சகோதரி ராணி (வயது 20; 3 குழந்தைகள்) ரயில் நிலையம் அருகிலிருந்து தண்ணீர் தூக்கி வருகையில் ஆற்காட்டுத்துறையைச் சேர்ந்த செல்வம் (எ) வயித்துக் குட்டி என்கிற படையாட்சி இளைஞன் (வயது26) ராணியை ஆபாச வார்த்தைகளால் கேலி செய்துள்ளான். இதனைக் கேள்விப்பட்டதும் ரவி செல்வத்தை தாக்கியுள்ளார். செல்வம் ஓடிச்சென்று தனது சாதியைச் சேர்ந்த நான்கைந்து இளைஞர்களுடன் திரும்பி வந்து தாக்க முயற்சித்துள்ளான். ஆனால் அவர்களை ரவியும் வேறு சிலரும் கடுமையாக அடித்து அவமானப்படுத்தி அனுப்பியுள்ளனர்.

செல்வம் அவமானப் படுத்தப்பட்டதை அறிந்த S. கைலாசக்கவுண்டர் மற்றும் ஆட்கள் தாழ்த்தப்பட்டோரை பழிவாங்கத் திட்டமிட்டுள்ளனர். அருகிலுள்ள தேத்தாக்குடி கோடியக்கரை போன்ற ஊர்களிலிருந்து படையாட்சி சாதியைச் சேர்ந்தவர்கள் திரட்டப்பட்டு ஆற்காட்டுத்துறைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். பெட்ரோல், தடி, கத்தி போன்ற ஆயுதங்களுடன் சுமார் 200 பேர் 4ந்தேதி காலை 11 மணிவாக்கில் கொள்ளித் தீவை நோக்கிப் புறப்பட்டுள்ளனர். வரும்வழியில் அந்த ஊர் சட்டமன்ற உறுப்பினரைப்பார்த்து ஒப்புதல் பெற்றதாகவும் சொல்லப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

பெரும்பாலான ஆண்கள் வேலைக்கு சென்றிருந்த நிலையில் வயதானவர்களும், பெண்களும், குழந்தைகளும் மட்டுமே கொள்ளித் தீவில் இருந்துள்ளனர். திடீர்த் தாக்குதலுக்குப் பயந்து அவர்கள் ஓடியுள்ளனர். ஊருக்குள் நுழைந்த கும்பல் சாதியின் பெயரால் கடுமை யாக திட்டியபடி ஒரு வீட்டுக்குத் தீவைத் துள்ளது. 22 மூட்டை நெல்லுடன் அந்த வீடு எரிந்தது. பல வீடுகளிலும் புகுந்து நகைகளும், தானியங்களும் சூறையாடப்பட்டன. இவை தவிர மாணவர்கள் சிலரின் கல்விச்சான்றிதழ் களும் கிழித்துக் கொளுத்தப்பட்டன. ஒரு குழந்தையை நெருப்பில் வீசியுள்ளனர். ஆனால் அதை அதன் தாய காப்பாற்றி விட்டார். இந்த கொடூர சம்பவங்களைப் பார்த்ததால் முருகேஷ் என்கிற 12 வயது சிறுவன் மனநிலை பாதிக்கப் பட்டிருக்கிறான். அதனை இந்தக் கள ஆய்வுக் குழுவினர் நேரில் பார்த்தோம். சுமார் 4 மணி நேரம் தாக்குதல் நடந்துள்ளது. வீடுகள் தள்ளித் தள்ளி இருந்ததால் அதிக வீடுகள் எரியாமல் தப்பின. எரிந்த வீடுகள் யாவுமே தனித் தனியாக கொளுத்தப்பட்டவை. வீடுகள் கொளுத்தப்படுவதை அந்தத் தொகுதி எம். எல். ஏ தனது வீட்டு மாடியில் நின்று பார்த்ததாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் ஓடிச் சென்று முறையிட்டபின் கீழே இறங்கி வந்த தாகவும் சொல்கிறார்கள். 1 கி. மீ தூரத்திலிருக் கும் போலீஸ் ஸ்டேஷனுக்கு பலமுறை முறை யிட்டும் எவ்வித நடவடிக்கையும் இல்லையாம்.

சம்பவம் நடந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு (5-3-92) மாலை 3 மணிக்கு வேதாரண்யம் யூனியன் அலுவலகத்தில் அமைதிக்குழு கூட்டத்தை RDO கூட்டியிருக்கிறார். அவரைத் தவிர, காவல்துறைக் கண்காணிப்பாளர், துணை ஆய்வாளர் மற்றும் பல அரசியல் கட்சித் தலைவர்கள் அழைக்கப் பட்டுள்ளனர். கொள்ளித்தீவு மக்களின் சார்பாக காங்கிரஸ் கட்சியின் அரிசனபிரிவு தலைவர் அஞ்சப்பன், பக்கிரிசாமி, குமார், மற்றும் சிலர் போயிருக் கின்றனர். ஆற்காட்டுத்துறை ஊரின் சார்பில் சேதுபதி செல்வம் போன்றோர் கலந்து கொண்டனர். பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு நேர்ந்த கொடுமைகள் பற்றிப்பேச வாய்ப்பு தரப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக தேவர் சாதியைச் சேர்ந்த முன்னாள் எம். எல். ஏ மீனாட்சிசுந்தரம் (தி. மு. க) ஷாகுல் ஹமீது (தி. மு. க) அஞ்சப்பன் (காங்) ஆகியோரும்; வன்னியர்கள் சார்பில் பி. வி. ராசேந்திரன் (காங். எம். எல். ஏ) யூசுப் (தி. மு. க) எஸ், கே (காங்) ஆகியோரும் பேச வேண்டுமென முடிவு செய்யப்பட்டு பேசினர். இந்தக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் நேரத்திலேயே ஒரு வீடு கொளுத்தப்பட்டுள்ளது. காங்கிரஸ் மற்றும் தி. மு. க வைச் சேர்ந்த வர்களே இரு அணியிலும் நின்று பேசியது இந்தக் கட்சிகளின் சந்தர்ப்பவாதத்துக்கு சாட்சியமாக உள்ளது. கூட்ட முடிவில் கொள்ளித்தீவு மக்கள் (தாழ்த்தப்பட்டோர்) ஆற்காட்டுத்துறை மக்களிடம் (வன்னியர்) எவ்வித பிரச்சனையும் வைத்துக் கொள்ள மாட்டோம் என்று உறுதிமொழி எழுதிவாங்கப் பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் 18 பேரும் வன்னியர்களில் 60 பேரும், கைது செய்யப்பட்டு பெரும்பாலும் ஜாமீனில் விடப்பட்டுள்ளனர், வன்னியர்களுக்காக பா. ம க மாவட்ட துணைத் தலைவர் மாரிமுத்துக் கவுண்டர்மகன் கே. எம். சுப்பிரமணியன் என்னும் வழக்கறிஞர் வழக்காடுகிறார். தாக்குதலைத் தலைமை தாங்கி நடத்திய படையாட்சி சாதி தலைவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை அதில் ராமச்சந்திரன், சேதுபதி ஆகியோருக்குப் பதிலாக பினாமியாக வேறு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமைதிக்குழு கூட்டத்துக்குப் பிறகு அஞ்சப்பன் (காங்-அரிசனப்பிரிவு தலைவர்) கொள்ளித்தீவு மக்களைக் கூட்டிப் பேசியிருக்கிறார். ரவியின் அடாவடி தனத்தால்தான் தாழ்த்தப்பட்டமக்கள் அனைவருக்கும் மதிப்பு ஏற்பட்டு விட்டதெனக் கூறி ரவியின் நடவடிக்கைகளுக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லையென மக்களிடம் ஒப்புதல் பெற்றுள்ளார். இதன்மூலம் ரவி மக்களிடமிருந்து தனிமைப் பட்டுள்ளார் சாகசத்தையும், கிரிமினல் நடவடிக்கைகளையும் மட்டுமே நம்பியிருக்கும் ரவி அஞ்சப்னின் சூழ்ச்சிக்கு எளிதாக பலியாகி யுள்ளார் நாங்கள் நேரில் சந்தித்துப் பேசிய போது ரவியை சேர்ந்தவர்களும், சாகசச்செயல் களில் ஈடுபாடு உடையவாகளாகப் பேசினர். இத்தகைய நடவடிக்கை இல்லாமல் சாதி இழிவு களை போக்க முடியாதென றுக் கூறினர்.

பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்த போது, அவர் கள் கடுமையான மனநிலை பாதிப்பில் இருந்தது தெரிந்தது. வீட்டைக் கொளுத்துவதால் தாழ்த் தப்பட்ட மக்களின் மனநிலையில் உண்டான பாதிப்பு எங்களுக்குப் புரிந்தது. தாழ்த்தப்பட்ட மக்களின் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல் கள் யாவும்மே முக்கியமாக அவர்களது வீடு களைக் கொளுந்துவதாக அமைந்திருப்பதை இந்த சமயத்தில் நாம் நினைவு படுத்திப்பார்க்க வேண்டும். திருமணத்திற்காக சேகரித்த நகை நகைகளும், தானியங்களும், பணமும் பறிபோன நிலையில் பெண்கள் அழுது புலம்பினர். இருபது நாட்கள் கழித்து 23—3—92 அன்று நாங்கள் போன போதிலும் கூட அப்போதும் பாதிக்கப் பட்ட இடத்தில் சிறு பந்தல்களை அமைத்துக் கொண்டு பகலில் பொங்கி சாப்பிட்டுவிட்டு இர வில் அப்படியே கவிழ்த்துவிட்டு பாதுகாப்பான இடம் தேடி ஓடுவதாகவே அவர்களது நிலை இருந்தது.

படிப்பகம்

www.padippakam.com

பார்வைகள் :

1. வழக்கம் போலவே பெண்களைக்கேலி செய்வதில் தொடங்கி தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகள் கொளுத்தப்படுவதிலும், பொருட்களைக் கொள்ளையடிப்பதிலும் கலவரம் முடிந்திருக்கிறது.

2. மேல் சாதியினர் தேவர், வன்னியர் எனப் பிரிந்திருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக இணைந்து நின்றுள்ளனர்.

3. தாழ்த்தப்பட்ட மக்களின் பொருட்கள் சேதமடைந்திருந்தாலும் உயிர் சேதமும், பாலியல் ரீதியான பலாத்காரமும் இங்கே நிகழவில்லை. ஒரு சிறிய அளவு எதிர்த்தாக்குதல் இங்கே சாத்தியமாகியிருக்கிறது. (5—3—92 அன்று இரவு கொள்ளித்தீவில் உள்ள வன்னியர்களின் சுமார் 50 தென்னைமரங்களும், பல வைக்கோல் போர்களும் கொளுத்தப்பட்டன) ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களின் எதிர்த் தாக்குதல் ஊரின் மீது நடக்காமல் ஒதுக்குப்புறமாக உள்ள தோப்பு, களம், என நடந்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

4. சமூகரீதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் மேல் நோக்கிய இயக்கம் நடைபெறும் போது சாதிய ரீதியான பிரச்சனைகள் முன்னுக்கு வருகின்றன.

5. தாழ்த்தப்பட்ட மக்களின் மேல்நோக்கிய இயக்கம் அடியாள் தன்மையோடும், ஆயுத பலத்தோடும் இணைந்திருந்ததன் விளைவாக இந்த இழிவுகளை தற்காலிகமாக ஒரு முடிவுக்கு கொண்டுவர இவர்களுக்கு முடிந்திருக்கிறது. இந்த இழிவுகளுக்குக் காரணமான உயர் சாதியினர் சிலருக்குத் தண்டனை கொடுக்கவும் முடிந்திருக்கிறது.

6. இங்கும் பொருளாதார ரீதியான சுரண்டலை விடவும் பாலியல் ரீதியான பிரச்சனை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. பெண் என்பவள் பிரதானமான உடமையாக கருதப்படுவதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

7. உயர்சாதிக்காரர்கள் சாதிஉட்பிரிவுகளையும் அரசியல் கட்சி வேறுபாட்டையும் மறந்து ஒன்றுபட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர். பஞ்சாயத்து முதலியவற்றில் தாழ்த்தப்பட்ட மக்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளனர். பொருளாதார பலத்திலும், தாக்கும் திறனிலும் அவர்கள் உயர்ந்திருந்தாலும் கூட அரசியல் ரீதியில் விழிப்படையாததும், அமைப்பு ரீதியில் ஒருங்கு திரளாததும், சந்தர்ப்பவாத தலைமைகளை நம்பியிருந்ததும் அவர்களது பலவீனங்களாக அமைந்து விட்டன.

8. இத்தகைய சாதி மோதல்களில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இரு தரப்புகளிலும் நிற்பது அம்பலப்படுத்தப்பட வேண்டும். கட்சிகளின் நிலை என்ன என்பதை முன்வைக்கும்படி வற்புறுத்த வேண்டும். அந்த நிலைப்பாட்டை மீறி செயல்படுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அக்கட்சிகளை நிர்ப்பந்திக்க வேண்டும்.

9. ரவியின் வன்முறைசார்ந்த செயல்பாடு தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு ஓரளவு உரிமைகளை மீட்டுத்தர உதவியுள்ளது என்ற போதிலும், ''ரௌடி'' ''கிரிமினல்'' போன்ற ஒழுக்க நியதிகளின் அடிப்படையிலான குற்றச்சாட்டுகளால் அவரைஅந்நியப்படுத்த முடிந்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களிடையே இப்படியான ஒழுக்க நியதிகள் எப்படி அடிமைத்தனத்துக்கு உதவுகின்றன என்பதைவிளக்கியாக வேண்டும்.

10. மேற்கண்டவற்றைக் கணக்கிலெடுத்துக் கொண்டு தாக்குதலுக்கு தயாரான போர்க்குணத்தை அரசியல் விழிப்புணர்வுடன் ஒன்றிணைத்து அமைப்பு ரீதியான செயல்பாடுகளில் கவனம் குவிக்கப்பட்டால் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களது உரிமைகளை மீட்டுக்கொள்வது சாத்தியமாகலாம்.

சென்ற இதழில் குடிதாங்கி பற்றிய கள ஆய்வு படித்திருப்பீர்கள். அக்கட்டுரை பிரசுரமாகும்முன்பே பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் அவர்கள் கட்சியின் செயற்குழுவில் (17—10—92) ''இனி குடிதாங்கி சேரிப் பகுதியில் பிணம் விழுந்தால் நானே தலைமைதாங்கி பிணத்தைச் சுடுகாட்டிற்கு முக்கிய சாலை வழியாக எடுத்துச்செல்வேன்'' என அறிவித்துள்ளார். தொடர்ந்து சென்ற நவம்பர் 13ந் தேதி அன்று டாக்டரும் தோழர் பா. கல்யாணியும் குடிதாங்கி சென்று தாழ்த்தப்பட்ட மக்களை மட்டும் சந்தித்து இந்த அறிவிப்பைச் செய்து விட்டு வந்துள்ளனர். இது தொடர்பாக அணைக்கரையில் (குடந்தை) ஒரு பத்திரிகையாளர் சந்திப்பும் ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழ் நாட்டில் மக்கள் ஆதரவே இல்லாத மாபியா கூட்டத்தைச் சேர்ந்த சுப்பிரமணியசாமி குசு விட்டால் கூட பீரங்கி வெடித்ததாகச் செய்தி வெளியிடும் தமிழ் நாட்டு இதழ்கள் டாக்டரின்இந்த முக்கியத்துவம் மிக்க அறிவிப்பை வெளியிட முன் வராதது கவனிக்கத் தக்கது.

படிப்பகம்

www.padippakam.com

பன்னாட்டு நிறுவனங்களும்; நாம் புரிந்துகொண்டிருக்கும் மார்க்சியமும்

—கெய்ல் ஓம்வெத்

ஒரு ''முன்னேறிய முதலாளித்துவ நாடு'' கூட எவ்வாறு பன்னாட்டு நிறுவனங்களின் பிடியிலும், அந்நியக்கடன்களின் பிடியிலும் மாட்டிக் கொள்ளக்கூடும் என்பது பற்றிய விளக்கத்தைக் கீழே காண்போம்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியினுடைய நான்காவது பரிமாணமாக நாட்டின் உற்பத்திப் பிரிவுகளை ரியல் எஸ்டேட்களை, பெருமளவில் அந்நிய நாட்டினர் கையகப்படுத்திக்கொண்டதையும் Treasury Notes உரிமையாக்கிக் கொண்டதையும் கூறலாம். அதிகரித்துவரும் அந்நியக் கடன்களுக்காகவும், வட்டி கட்டுவதற்காகவும் லாபத்தின் பங்கை செலுத்துவதற்காகவும் மேலும் அந்நியக் கடன்களைப் பெறுவதானது. மேலும், மேலும் வருவாயை வெளி நாடுகளுக்கு தாரை வார்ப்பதாக அமைகிறது. 1987 வாக்கில் இந்நாட்டில் 1.54 ட்ரில்லியன் டாலர்கள் அந்நிய நாட்டினரின் கட்டுப்பாட்டில் இருந்தன. இங்கிருந்து 1.17 ட்ரில்லியன் டாலர்கள் வெளிநாடுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 1988 வாக்கில் நாட்டின் Treasury Securitiesல் 17 சதவீதமும் உற்பத்திச் சொத்துகளில் 12 சதவீதமும் அந்நிய மூலதனத்தின் கட்டுப்பாட்டில் இருந்தன என நிபுணர்கள் கணித்தனர். நாட்டின் பொருளாதாரத்தின் மீதும், மூலதன மார்க்கெட்டின் அரசின் கட்டுப்பாடு குறைந்து கொண்டே வந்தது. ஒரு பொருளாதார, நிபுணரின் வார்த்தைகளில் கூறினால்,

''அந்நிய முதலீட்டாளர்களின் ஆசைப்படி ஆட வேண்டிய ஒரு பிணைக்கைதிபோல நாடு ஆகிவிட்டது. அந்நிய கட்டுப்பாட்டின் விளைவுகள் ஏற்கனவே வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்துவிட்டன. அந்நிய நாட்டினர்கள் சொந்தமாக்கிக்கொண்டுள்ள கம்பெனிகளின் லாபத்தில் 80 சதவீதம் அவர்களது நாட்டிலுள்ள தாய் நிறுவனத்திற்கு சென்று சேர்கின்றன...'' (The World Market: Battle—ground for the 1990s''. Journal of Contemporary Asia 20-2-1990. P. 148)

மேலே காண்பது முற்போக்கான அரசியல் விஞ்ஞானி ஒருவர் 1990ல் எழுதிய கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது. அவர் குறிப்பிட்டுள்ள நாடு அமெரிக்கா.

இந்தியாவில் பலருக்கும் இது நம்புவதற்கு கடினமான ஒன்றாக இருக்கும். இங்கே நம்ப முடியாத அளவுக்கு இருக்கும் ஏழ்மை நிலையை பார்க்கும் போது நியூயார்க் போன்ற நகரங்களின் தெருக்களில் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. என்ற உண்மை நம்பமுடியாத ஒன்றாகவே இருக்கும். பிச்சைக்காரர்கள் இப்போது ரயில் நிலையங்களில் மட்டுமில்லை நகரங்களின் மத்தியிலும் இருக்கிறார்கள். முன்பு போல வயதானவர்கள் மட்டும் பிச்சையெடுக்கவில்லை, இளைஞர்கள், வெள்ளையர், கருப்பர், ஆண்கள், பெண்கள் யாவருமே ''சில்லரை இருக்கிறதா'' எனக் கையேந்துகிறார்கள். யாருமே தப்பிக்கமுடியாத பொருளாதார நெருக்கடி இன்னும் முழுமையான அளவில் ஏற்படாத நிலையிலும் அதன் அறிகுறிகள் பாதுகாப்புத்துறை மற்றும் பலதுறைகளில் பெருமளவில் வேலையிழப்பு ஏற்பட்டு வருவதிலும் பல் கலைக்கழகங்கள் கூட மூடப்பட்டுவிடும் என்றும் வதந்திகளும், மிரட்டல்களும் பரவிவருவதிலும் தெரிகின்றன. எஃகுத்தொழில் மற்றும் மோட்டார் வாகனத் தொழிற்சாலை போன்றமுக்கியத்துவம் வாய்ந்த தொழிற்பிரிவுகளில் காணப்படும் காலாவதியான மூலதன கையிருப்பில் இது இன்னும் தெளிவாகத் தெரிகிறது.

இதன் சுமை ஏழைகளின் மீது அதிலும் குறிப்பாக கறுப்பின ஏழைகளின்மீது அதிக அளவில் தாக்குகிறது. வெள்ளையின மக்களும் அவதிப்படுகிறார்கள் என்ற போதிலும் கறுப்பினத்தவரே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். நாட்டின் ஒட்டுமொத்தமான பொருளாதார பலம் மேலும் மேலும் சரிந்து வருவது தெளிவாகத் தெரிகிறது அமெரிக்கத் தொழிலதிபர்களுடன் புஷ் ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டு வேலைக்காகவும் முதலீடு செய்யக்கோரியும் வேண்டிக் கொள்கின்ற நிலையும்; லாஸ் ஏஞ்சல்ஸ் கலவரத்துக்கு பிறகு மறுநிர்மாணத்துக்கு ஜப்பான்உதவவேண்டும் என புஷ் வேண்டுகோள் விட்ட உண்மையும், தென் கொரியாவின் எதிர்கட்சித் தலைவர் ஒருவர் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டு அங்கே உள்ள தென்கொரியர்களின் பாதுகாப்பு பற்றி கவலை தெரிவித்த உண்மையும் (இவ்விதமாக அவர் கடன் பட்ட நாடான அமெரிக்காவின் உள் விவகாரத்தில் தலையீடு செய்தார்) இவை யாவுமே மாறிவரும் அமெரிக்காவின் முகத்தைக் காட்டுவதாகவும் உலக விவகாரங்களில்

படிப்பகம்

www.padippakam.com

தலையிட்டு நாட்டாண்மை செய்ய முயலும் அதன் பதற்றத்துக்கான காரணத்தை வெளிப் படுத்துவதாகவும் உள்ளன.

''ஏகாதிபத்தியம் பொருளாதார முன்னேற்றத்தை தடை செய்கிறது. சோசலிசஅமைப்பின் கீழ் மட்டுமே உண்மையான தேசிய முன்னேற்றம் சாத்தியம்'' என நாம் சொல்லிக்கொண்டிருந்த போது நினைத்த மாதிரி ''ஏகாதிபத்தியம்'', ''பன்னாட்டு நிறுவனங்கள்'' ஆகியவற்றை ஆராய்ந்தறிவது அவ்வளவு எளிமையான ஒரு காரியமாக இல்லை. ஏகாதிபத்தியம் இப்போது இல்லை. பன்னாட்டு நிறுவனங்கள் ஒரு பிரச்சனையே இல்லை எனக் கூறிவிடுவதன் மூலம் இந்தப் பிரச்சனையிலிருந்து எளிதாக நழுவிவிடலாம். ஏகாதிபத்தியமும் அதன் தாக்கங்களும் இருக்கின்றன; பன்னாட்டு நிறுவனங்கள் நிச்சயமாக பிரச்சனையாக உள்ளன. ஆனால், இது வரை மார்க்சியர்கள் அவற்றை விளங்கிக் கொண்டதைவிட இன்னும் ஆழமான விதத்தில் விளங்கிக் கொண்டாக வேண்டும்.

ஆக, முன்பே தீர்மானித்துக் கொண்ட பதில்களை விடுத்து நாம் இந்தக் கேள்வியைக் கேட்டாக வேண்டும், இன்றுள்ள யதார்த்த நிலை என்ன?

கடந்த 15 ஆண்டுகளில் உலக அளவிலான, உள்நாட்டு மொத்த உற்பத்தியின் (GDP) பங்கில் நடந்துள்ள மாற்றங்களைக் கவனிப்பதன் மூலம் நாம் அமெரிக்காவின் வீழ்ச்சியை (சில மூன்றாம் உலக நாடுகளின் எழுச்சியை மற்றும் பெரும்பான்மையானவற்றின் தேக்கத்தை) அறிய முடியும். **(பார்க்க: அட்டவணை 1)** அமெரிக்கா இன்னமும் ஒரு மிகப் பெரும் நாடாக, தனித்த அளவில் மேலாதிக்கம் செய்யும் பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக உள்ள போதிலும், 1965ல் உலக GDPல் 39./· ஆக மிகப் பெரும் சக்தியாக இருந்த அது 1988 ல் 28./· ஆக வீழ்ச்சியடைந்தது. இதில் மிகப்பெரும் அளவில் லாபம் அடைந்தது ஜப்பான்தான், அது 3 ./· இருந்து $16\frac{1}{2}$./· ஆக அதேகாலகட்டத்தில் வளர்ச்சி பெற்றுள்ளது. அமெரிக்காவை விட இப்போது ஜப்பான் மேம்பட்ட வாழ்க்கை நிலைமையையும், தனி நபர் வருமானத்தையும் கொண்டுள்ளது. உலக GDPல் ஐரோப்பாவின் பங்கு $35\frac{1}{2}$./· ஆக நீடிக்கிறது. அதாவது, அது இப்போது அமெரிக்காவைவிட அதிக பங்கு வகிக்கிறது. ஐரோப்பாவை ஒரேநாடாக வைத்துப் பார்த்தோமானால் பொது சந்தையில் அது ஒரு இணைப்பாக விளங்குவதைக் காணலாம்.

இதுதான் கொள்கைத் திட்டங்களை வகுக்கும் பல்வேறு முக்கியமான நபர்களால் தற்போது பேசப்பட்டுவரும், மூன்று துருவ **(Tripolar)** உலகின் பொருளாதார அடிப்படை. இந்தப் புள்ளிவிவரங்கள் யாவுமே, ''அமெரிக்கப் பொருளாதார வீழ்ச்சி'' கட்டத்துக்கு முந்தியவையாக இருந்த போதிலும் தனது ராணுவ பலம், வலிமையாயிருந்தாலும் கூட அமெரிக்கா, முன்பு போல உலகை ஆளுகை செய்ய முடிய வில்லை என்பதையும் முன்பு போல ஒரு வல்லரசாக இப்போது இல்லைஎன்கிற கருத்தையும்தான் வலிவுபடுத்துகின்றன.

பன்னாட்டு நிறுவனங்களை எடுத்துக் கொண்டால் இப்போதும் அமெரிக்காதான் அதிக பன்னாட்டு நிறுவனங்களைக் கொண்டுள்ளது. ஆனால், 1960ல் முக்கியமான 200முன்னணி பன்னாட்டு நிறுவனங்களில் 127 அமெரிக்காவைச் சேர்ந்தவையாகவும், மொத்த விற்பனையில் 72.7./· பெறுவதாகவும் இருந்தது. ஆனால் 1980 ல் அமெரிக்காவுக்கு 91 பன்னாட்டு நிறுவனங்கள் மட்டுமே இருந்தன (முதல் 200 ல்) விற்பனையிலும் கூட 50./· மட்டுமே பெற்றிருந்தது.

(பார்க்க: அட்டவணை-2) மீண்டும் இதிலும் ஜப்பானே லாபம் பெற்றுள்ளது. இருபது வருடங்களில் அதன் நிறுவனங்களின் எண்ணிக்கை 5 ல் இருந்து 20 ஆக உயர்ந்துள்ளது. மொத்த விற்பனையில் ஜப்பானின் பங்கு 1.5 ./· ல் இருந்து 7.2 ./· ஆக கூடியுள்ளது.

மூன்றாம் உலக நாடுகளின் நிலவரம் என்ன? அவைஏகாதிபத்தியத்தின்கீழ் வளர்ச்சிபெறுமா? அல்லது அவை எப்போதுமே ஏகாதிபத்தியங்களைச் சார்ந்துதான் இருந்து வருமா? இவை, பதில் சொல்வதற்கு எளிய கேள்விகளல்ல. உலக அளவிலான மொத்த உற்பத்தியில் 1965 முதல் 1988 வரையிலான காலகட்டத்தில் மூன்றாம் உலக நாடுகளின் பங்கு 16./.ல் இருந்து 13./. ஆக வீழச்சி அடைந்துள்ளது. (மத்தியகிழக்கு நாடுகளையும், வட ஆப்ரிக்க நாடுகளையும், ஏழ்மையான ஐரோப்பிய நாடுகளையும் விலக்கி விட்டுப்பார்த்தால் இந்த நிலவரம்) ஆனால், இந்தப் புள்ளிவிவரம் மூன்றாம் உலக நாடுகளில் செயல்படும் பல்வேறு போக்குகளையும் மறைத்துவிடுகிறதா? மூன்றாம் உலக நாடுகளில் பெரியவையான இந்தியாவும், சீனாவும்; ஆப்ரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளும், தென்னாசியாவின் மீதமுள்ள நாடுகளும் இப்படி வீழ்ச்சியடைந்துள்ளன. (சீனா 3.75./. ல் இருந்து 2.15./. ஆகவும்; இந்தியா 2 83./ ல் இருந்து 1 38./. ஆகவும் வீழ்ச்சிடைந்தன) ஆனால்,

படிப்பகம்

www.padippakam.com

அட்டவணை : 1

உலகப் பொருளாதார வலிமையில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள் (உலக GDPல் நாடுவாரியாக பங்கு சதவீதத்தில்)

	1965	1988
மொத்த நாடுகள்	100./· (1783 பில்லியன் டாலர்கள்)	100./· (17,267 பில்லியன் டாலர்கள்)
சப்-சஹாரன் ஆபிரிக்கா	1.63./·	0.93./·
கிழக்கு ஆசியா	5.21./·	5.15./·
தென் ஆசியா	3.87./·	2·12./·
லத்தீன் அமெரிக்கா & கரீபிய நாடுகள்	5.55./·	4.93./·
ஐரோப்பா, மத்தியகிழக்கு நாடுகள் & வட ஆப்ரிக்க நாடுகள்	4.09./·	—
OECD நாடுகள்	78.01./·	80.13./.
அமெரிக்கா	39.31./·	28.07./·
ஜப்பான்	3.01./·	16.47./·
ஐரோப்பா(OECD, அமெரிக்கா/ஜப்பான்)	25.69./·	35.59./·
மூன்றாம் உலக நாடுகள் (ஐரோப்பா, மத்திய கிழக்கு வடஆப்ரிக்கா நீங்கலாக)	16.28./·	13.13./·
சீனா	3.75./.	2.15./·
இந்தியா	2.83./·	1.38./·
மலேசியா	0.10./·	0.20./·
தாய்லாந்து	0.14./	0.33./·
தென்கொரியா	0.17./·	0.99./·
ஹாங்காங்	0.12./·	0.26./·
சிங்கப்பூர்	0.05./·	0.14./.
இந்தோனேசியா	0.12./·	0.48./.
பிலிப்பைன்ஸ்	0.20./·	0.23./·
சீனா நீங்கலாக கிழக்கு ஆசியா	1.46./·	3.00./
இந்தியா நீங்லாக தென் ஆசியா	1.04./·	0.74./·

ஆதாரம்: World Development Report, 1990 (World Bank) OXFORD UNIV. Press 1990

OECD: க்ரீஸ், போர்த்துகல், துருக்கி ஆகிய நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் தவிர பிற நாடுகள் யாவும்.

சப்-சஹாரன் ஆப்ரிக்கா: தென்னாப்பிரிக்கா நீங்கலாக சஹாராவுக்குத் தெற்கே உள்ள அனைத்து நாடுகளும்.

கிழக்கு ஆசியா: இதில், கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளும் பசிபிக் நாடுகளும் சீனா தாய்லாந்து உட்பட அடங்கும்.

தென் ஆசியா : பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியான்மார், நேப்பாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகியவை.

மத்தியகிழக்கு & வட ஆப்பிரிக்கா : இதில் சைப்ரஸ், க்ரீஸ், ஹங்கேரி, மால்டா, போலந்து, போர்த்துகல், ருமேனியா, யூகோஸ்லேவியா ஆகிய எட்டு ஐரோப்பிய நாடுகளும், வட ஆப்பிரிக்கா மற்றும் மத்தியகிழக்கு நாடுகள்யாவும் அடங்கும், ஆப்கானிஸ்தான் உட்பட.

அட்டவணை: 2

தற்போதுள்ள பன்னாட்டு நிறுவனங்கள், நாடுகள் வாரியாக

	1960 எண்ணிக்கை	மொத்த விற்பனையில்./·	1980 எண்ணிக்கை	மொத்தவிற்பனையில்./·
அமெரிக்கா	127	72.7./·	91	50 1./·
ஜெர்மனி (FRG)	20	6.8./·	21	9.7./
இங்கிலாந்து	24	9.9./·	$16\frac{1}{2}$	9. 2./·
பிரான்ஸ்	7	1.8./·	25	7.5./·

படிப்பகம்

www.padippakam.com

ஜப்பான்	5	1.5./·	20	7.2./·
நெதர்லாந்து	3	3.2./·	5	4.2./·
இத்தாலி	3	0.9./.	$4\frac{1}{2}$	3.2./·
கனடா	5	1.3/·	5	1.5./·
பெல்ஜியம்	1	0.2./·	2	0·7./.
ஸ்வீடன்	1	0.2./·	2	0.5./·
கொரியா குடியரசு	0	0	2	0.5./.
மற்றவை	2	0.5./·	12	4.2./·
உலக GDPல்பன்னாட்டு நிறுவனங்களில் முதல் 200ன் பங்கு		17.7./·	—	28. 6./-

ஆதாரம்: Frederick Clairmonte & John Cavanagh, ''Transnational Corporationsand The Struggle For The Global Market'' —Journal of Contemporary Asia, 13, 4, 1983

கிழக்கு ஆசிய நாடுகளோ தாய்லாந்து, மலேசியா, தென்கொரியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, ஹாங்காங், சிங்கப்பூர் யாவும் உலக மொத்த உற்பத்தியில் தமது பங்கை அதிகரித்துள்ளன. சீனாவை நீக்கிவிட்டுப் பார்த்தால் மீதமுள்ள கிழக்கு ஆசிய நாடுகள் மொத்த உலக அளவிலான GDPல் 3./· பங்கு வகிக்கின்றன. இது ஜப்பான் 1965ல் இருந்த இடமாகும். கிழக்கு ஆசிய நாடுகளில் 'நட்சத்திரமாக'' விளங்கும் தென்கொரியா ஒரு சமயம் இந்தியாவின் நிலைக்கொப்ப இருந்தது, இப்போது அதன் மொத்த தேசிய உற்பத்தி (GNP) போர்த்துகலுக்கு இணையாகவும்; யூகோஸ்லோவியா, பல்கேரியா மற்றும் போலந்தை விட அதிமாகவும், உள்ளது. 1980 வாக்கில் உலகின் முக்கிமான முதல் 200 பன்னாட்டு நிறுவனங்களில் **இரண்டு**, தென் கொரியாவுக்கு சொந்தமகா இருந்தது.

எப்படி இது சாத்தியமானது? இப்போது தென் கொரியாவைப் பற்றி ஏகப்பட்ட விவாதங்கள் நடக்கின்றன. அரசாங்க சார்பான பொருளாதார நிபுணர்களோ தென்கொரியாவின் பொருளாதாரத்தை தாராளமயமாக்கியதுதான் காரணம் என்கின்றனர்; முற்போக்கு வாதிகளோ எப்போதுமே இதில் அரசு குறுக்கீடு இருந்து வந்ததையும் தொழிலாளர்களும் விவசாயிகளும் கடுமையாக சுரண்டப்படுவதால் தான் இது சாத்தியமாகியுள்ளது என்பதையும் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த வாதங்கள் யாவுமே உண்மையானவை தான். இவை தென்கொரியாவுக்கு மட்டுமல்ல, மலேசியா, தாய்லாந்து இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கும் பொருந்தக் கூடியவை. உண்மை என்னவென்றால் இந்த வளர்ச்சி என்பது மார்க்சிய அனுமானங்களைப் பொய்யாக்கிவிட்டது. எல்லாவிதமான மார்க்சிய அனுமானங்களுக்கும் மாறாக இந்த வளர்ச்சி, ''தேசிய முதலாளித்துவம்'' என வர்ணிக்கப்பட்டவையும், வலிமைமிக்க அரசுத் துறைகளையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு; இறக்குமதிக்கு எதிரான கொள்கை ஆகியவற்றைக் கொண்டிருப்பவை எனவும் வர்ணிக்கப்பட்ட ''சோசலிச'' நாடுகளைவிட அதிகமான அளவில், சந்தைப் பொருளாதாரத்தையும், அரசுத் தலையீட்டையும் ஏதோ ஒரு விகிதத்தில் கலந்து பின்பற்றிவரும் நாடுகளிலேயே ஏற்பட்டது. இந்த நாடுகளில் செய்யப்பட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடு இந்த நாடுகளின் வளர்ச்சியைத் தடுத்துவிடவில்லை, மாறாக, இந்த நாடுகளில் உற்பத்தியாகும் நுகர் பொருட்கள் கொஞ்சம் கொஞ்சமாக அமெரிக்க சந்தைக்குள் ஊடுருவ ஆரம்பித்தது. (இது, நியூயார்க்கில் அல்லது அமெரிக்காவிலேயே தயாரிக்கப்பட்ட ''நியூயார்க் பற்றிய தகவல் புத்தகம்'' ஒன்றை நியூயார்க்கில் பார்க்கவே முடியவில்லை என்ற அளவுக்கு ஆகிவிட்டது) இப்போது, அமெரிக்காதான் ''வேலை வாய்ப்பைக் காப்பாற்றுகிறேன்'' என்றபெயரில் இறக்குமதி மீதான தடைகளையும், வரிவிதிப்புகளையும் மேற்கொள்ளவேண்டி ஆகிவிட்டது.

ஏகாதிபத்தியத்துக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் என்ன ஆகிவிட்டது!

நிறைய ஆகிவிட்டது.

—அவை, இன்னமும் தொழிலாளர்களையும் உலகம் முழுதுமிருக்கிற விவசாயிகளையும் சுரண்டுவதில்தான் உயிர் வாழ்கின்றன;

—வெள்ளையரல்லாத மக்களும், அவர்களது நாடுகளும் இன்னமும் சுரண்டலின் கீழ்தான் வைக்கப்பட்டுள்ளன;

—இவை எல்லாவற்றிலும் முக்கியமாக மோசமான முறையில் பெண்கள் சுரண்டப் படுகின்றனர்,

செலவிடப்படும் சக்தி, இயற்கை வளங்கள் மீதான சுரண்டல் இவற்றின், அடிப்படையில் பார்த்தால் பன்னாட்டு நிறுவனங்கள் உண்டாக்கியிருக்கிற வளர்ச்சி என்பது நிரந்தரமானதல்ல என்பதும், மேலும் அழிவைத்தான் உண்டாக்கும் என்பதும் புரிகிறது.

படிப்பகம்

www.padippakam.com

ஆனால், இந்த விமர்சனங்கள் யாவுமே தங்களை, ''சோசலிச நாடுகள்'' என அழைத்துக் கொள்ளும் நாடுகளுக்கும் பொருந்தக் கூடியவைதான்.

இன்று, ஏகாதிபத்தியத்தை விமர்சிப்பதென்பது இடது சாரிகளாலும், வலது சாரிகளாலும் ''வளர்ச்சி'' எனப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிற கருத்தாக்கத்தை விமர்சிக்காமல் நடக்காது. இத்தகைய **''பசுமை விமர்சனத்தோடு'' ''சிவப்பு விமர்சனம்''** இணையும் போதுதான் விடுதலைக்கான பாதையைக் கண்டடைய முடியும்.

1992 தொடக்கத்தில் நிறப்பிரிகைக்காக தோழர். கெய்ல் ஓம்வெத் அனுப்பி வைத்த இந்தக் கட்டுரை இடமின்மையால், சென்ற இதழில் பிரசுரமாகவில்லை. பின்னர் இது Frontier (ஜூன்27, 92) இதழில் வெளியிடப் பட்டது. மைய நாடுகளில் வெகுசன இயக்கங்களாக வலுப்பெற்றுவரும் ''க்ரீன் பீஸ்'' போன்ற சுற்றுச்சூழல் இயக்கங்கள் பல புதிய கேள்விகளையும், தீர்வுகளையும் முன்வைத்துள்ளதை நாம் அறிவோம். மைய நாடுகளின் கதிரியக்கக் கழிவுகளைப் புதைப்பதற்கான கழிப்பிடங்களாக விளிம்பு நாடுகள் மாற்றப் பட்டுவருவதும்; பொருளியல் சுரண்டலோடு விளிம்பு நாடுகளின் இயற்கை வளங்களும் சூறையாடப்பட்டு இன்று பட்டினிச்சாவுகள் உலகின் பெரும்பகுதி நாடுகளில் அன்றாட நிகழ்வுகளாக ஆக்கப்பட்டிருப்பதையும்; இந்தியாவும் அந்தப் பட்டியலில் வேகமாக சேர்ந்து கொண்டிருப்பதையும் பார்க்கும்போது தோழர் கெய்ல் ஓம்வெத்தின் கட்டுரையின் முக்கியத்துவம் நமக்குப் புலப்படும் **ஆனால், சுற்றுச் சூழல் கேடு பற்றிப் பேசத் தொடங்கி உயர் தொழில்நுட்ப எதிர்ப்பு—▷ அறிவியல் எதிர்ப்பு—▷ இந்துமத ஆதரவு என விரியும் குரலோடு ஓம்வெத் உடன் படுவதில்லை என்பதை அவர் சாதிப்பிரச்சனைக்கு தரும் முக்கியத்துவத்திலிருந்தும் இன்று இந்துமத அடித்தளமாயிருக்கும் பார்ப்பனீயக் கருத்தியல் மீது வைத்துவரும் விமர்சனங்களிலிருந்தும் நாம் கண்டு கொள்ளலாம். The clutches of multinationals என்ற தலைப்பிலான ஆங்கில கட்டுரையைத் தமிழில் தருவது: ரவிக்குமார்.**

பாவ்லோ பிரேயர், தகவலியம் கட்டுரைகளின் தொடர்ச்சியாய்...

மாற்றுச் சிந்தனை-மாற்றுஇதழ்கள்-மாற்றுக் கல்வி: சில வெளிநாட்டு அனுபவங்கள்

அ. மார்க்ஸ்

எதிர் அரசியல் நடவடிக்கைகள், மாற்றுக் கலாச் சாரச் செயற்பாடுகள் ஆகியவற்றில் நம்பிக்கை யுடையவர்கள் 1960 களின் பிற்பகுதியை முக்கியமான கால கட்டமாகக் கருதுகின்றனர். உலகெங்கிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வியட்நாம் ஆக்ரமிப்பிற்கு எதிரான எதிர்ப்பியக் கங்கள், லத்தீன் அமெரிக்க நாட்டுப் புரட்சிகள், ரசிய ஆதிக்கத்திற்கு எதிராகக் கிழக்கு அய்ரோப்பிய நாடுகளில் தோன்றிய எதிர்ப்புகள் முதலியன உலகெங்கிலும் மாணவர்கள் இளைஞர்கள் மத்தியில் நம்பிக்கை நட்சத்திரங் களை விதைத்தன. வியட்நாம் ஆக்ரமிப்பு எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் பங்கு குறிப்பிடத் தக்கதாய் இருந்தது. இவை அமெரிக்க எதிர்ப்பாக மட்டு மின்றி உள்நாட்டுச் சனநாயகத்திற்கான போராட்டங்களாகவும் இருந்தன. பிரெஞ்சு மாணவர் போராட்டம் (1968) பல்வேறு சன நாயக உரிமைகளை ஈட்டித் தந்ததோடன்றி தொடர்ச்சியாயத் தோன்றிய தொழிலாளர் போராட்டத்திற்கு வழிகாட்டியாகவும் அமைந்தது. இந்தப் போராட்டங்களில் ஜன நாயகச் சக்திகளும் இடது சாரிச் சிந்தனையாளர் களும் முக்கிய பங்கேற்றனர். உலகெங்கிலு முள்ள மைய நீரோட்டப் பொதுவுடைமைக் கட்சிகள் இப்போராட்டங்களில் பட்டும் படா மலும், சமயங்களில் எதிராகவும் இருந்தன. பல்வேறு அம்சங்களில் இப்போராட்டங்களி லிருந்து வேறுபட்டு நின்றாலும் கூட தமிழக த்தில் ஒரு ஆட்சி மாற்றத்திற்கு வழி வகுத்த இந்தி எதிர்ப்புப் போராட்டமும் இந்தியச் சூழலின் மீது மாவோயிச வெளிச்சத்தை வீசிய நக்சல்பாரி இயக்கத் தோற்றமும் கிட்டதட்ட இதே கால கட்டத்தில் தான் நிகழ்ந்தன.

இந்தப் போராட்டங்களின் ஒரு மிக முக்கியமான பங்களிப்பு; எல்லாத் துறைகளிலும் நிலவிய மாற்றுச் சிந்தனைகளின்பால் ஒரு கவனத்தை யும் அவற்றிற்கு ஒரு அங்கீகாரத்தையும் இவை ஏற்படுத்தியது தான் இம் மாற்றுச்

படிப்பகம்

www.padippakam.com

சிந்தனைகள் மார்க்சியத்தின் சில முக்கியமான கூறுகளை உள்வாங்கிக் கொண்டும் பல அறியப்பட்ட மார்க்சிய அணுகல் முறைகளிலிருந்து விலகியும் அமைந்தன. பொதுவுடைமையாளர்களால் வசைச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்ட 'anarchysts' (அராஜகவாதிகள்) என்கிற பெயரை இவர்கள் விரும்பி ஏற்றுக் கொண்டனர். பொதுவில் இவர்கள் 'Libertarians' என அழைக்கப் பட்டனர். 'எல்லாவிதமான கட்டுத் தளைகளையும் ஒதுக்குகிற சுதந்திரவாதிகள்' என இச் சொல்லை மொழியாக்கலாம். வேறு நல்ல சொல் கிடைக்கும்வரை 'தளையுடைப்பாளர்கள்' மற்றும் 'ஒழுங்கவிழ்ப்பாளர்கள்' அல்லது 'முழு விடுதலையாளர்கள்' என்கிற சொற்களை நாம் பயன்படுத்தலாம். ஒன்றைச் சொல்லிவிடுவது முக்கியம். அறுபதுகளின் பிற்பகுதியில் தோன்றிய போராட்டங்கள் எல்லாம் இத்தகைய தளையுடைப்பாளர்களால் நடத்தப்பட்டது என நான் சொல்ல வரவில்லை. இத்தகைய தளையுடைப்புச் சிந்தனைகளின் பால் கவனம் ஈர்க்கப் படுவதற்கு இப் போராட்டங்கள் வழி வகுத்தன என்பது தான்.

இந்தப் போராட்டங்களில் உயர் கல்வி மாணவர்களின் பங்கு அதிகம் இருந்ததற்குக் காரணமாக இக் கால கட்டத்தில் உலகெங்கிலும் உயர் கல்வியில் ஒரு திடீர்ப் பெருக்கம் ஏற்பட்டதைச் சொல்லலாம். எடுத்துக்காட்டாக பிரான்சில் இரண்டாம் உலகப்போர் முடியும் தறுவாயில் சனத்தொகை : 42 மில்லியன், மாணவர்களின் எண்ணிக்கை : அறுபதாயிரம். 1968ல் சனத்தொகை: 50 மில்லியன்; மாணவர்கள்: ஆறு இலட்சம் ! தமிழகத்தில் கூட அறுபதுகளின் பிற்பகுதியில்தான் ஏராளமாக அரசு கல்லூரிகளெல்லாம் திறக்கப்பட்டு உயர் கல்வியில் ஒரு பெருக்கம் ஏற்பட்டது நினைவிருக்கலாம். இத்தத் திடீர்ப் பெருக்கமானது வெளிநாடுகளைப் பொறுத்த மட்டில் பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கின கட்டிடங்கள், ஆசிரியர்கள் பற்றாக்குறையிலிருந்து கல்வித் திட்டம், ஆசிரியர்-மாணவர் உறவு எனப் பல அம்சங்கள் பிரச்சினைகளாக்கப்பட்டன. பல சிந்தனைத் துறைகளிலும் ஏற்பட்ட மாற்றுச் சிந்தனைகள் கல்வித் துறையில் பெரிய அளவில் பிரதி பலித்தன.

இதே காலகட்டத்தில் ஏற்பட்ட இன்னொரு மாற்றமும் முக்கியமானது. அச்சுத் தொழில் நுட்பம் நவீனமாகியது. பல்வேறு வகையான பிரதி செய்யும் எந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டதோடு அன்றாட வாழ்வில் பயனுக்கும் வந்தன. எலக்ட்ரானிக் தட்டச்சு, லித்தோ, ஆப்செட் முதலியவை அச்சுத் தொழிலில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின. இதனை ''லித்தோ புரட்சி'' என்கிறார்கள். மிகப் பெரிய மூலதனங்களில்லாமல் அச்சகங்களை ஏற்படுத்துவது, அச்சுக் கோர்க்காமல் தட்டச்சுசெய்து அப்படியே பிரதி எடுப்பது ஓவியங்கள், புகைப் படங்கள், வரை படங்கள் போன்றவற்றை 'பிளாக்' செய்யாமலே அச்சிடுவது என்பதெல்லாம் சிறிய அளவில் சில ஆயிரங்கள் அளவில்—இதழ் நடத்துகிற வாய்ப்பை அதிகமாக்கின. சகல துறைகளிலும் வெடித்துக் கிளம்பிய மாற்றுச் சிந்தனைகள் இந்த சூழலைப் பயன்படுத்திக் கொண்டு ஒவ்வொரு துறைகளிலும் மாற்றுச் சிந்தனைக்கான இதழ்கள் வெளி வருவதற்குக் காரணமாயின. அவற்றில் சில:

தத்துவம்—Radical philosophy.
உளவியல்—Humpty Dumpty, Red Rat.
சமூகப் பணி—Case-Con.
கல்வி—Libertarian Education, Radical Education, Anti Student, Hard cheese, Black bored.

மைய நீரோட்டப்பத்திரிகைகளிருந்து (அதாவது வெகு சனப்பத்திரிகைகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் அறிவுத் துறை நிறுவனங்கள் துறை வாரியாக வெளியிடும் இதழ்கள் முதலியன) எல்லாவகைகளிலும் வேறுபட்டு நிற்கும் இவற்றுக்கிடையே சில பொதுத் தன்மைகளும் உண்டு. நமது அனுபவங்களிலிருந்து நாம் எதிர்பார்ப்பது போல இப் பத்திரிகைகள் எதுவும் முறையான கால ஒழுங்குடன் வெளிவருவதில்லை. நடைமுறைச் சிக்கல்கள் தான் இதற்குப் பிரதான காரணமென்ற போதிலும் கால ஒழுங்கின் முக்கியத்துவத்தை இவர்கள் அங்கீகரிக்காததும் கூட ஒரு காரணந்தான் மற்றவர்களையும் இதே போன்ற முயற்சிகளில் ஊக்குவிக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு இவை தாங்கள் பயன் படுத்தும் தொழில்நுட்ப விவரங்களைத் தம்இதழ்களிலேயே அச்சிட்டன/அச்சிடுகின்றன. 'Anti student' இதழ் தன் பின்னட்டையை இதற்காகவே ஒதுக்கியது. தத்தம் துறை சார்ந்த மாற்றுச் சிந்தனை இதழ்களை அறிமுகம் செய்வது. மாற்றுச் சிந்தனை நூற் பட்டியல்களை வெளியிடுவது, மாற்று இதழ்கள் கிடைக்கும் முகவரிகளை அச்சிடுவது போன்றவற்றிற்கு ஒவ்வொரு இதழிலும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக ''அச்சின் அதிகாரத்தை'' உடைப்பதில் இவை கவனம் செலுத்துகின்றன. மைய நீரோட்டப் பத்திரிகைத் துறையைப்பொருத்தமட்டில் யார்வேண்டுமானாலும் தங்கள் கருத்துக்களை அச்சில் கொண்டு வந்துவிட முடியாது. பத்திரிகை ஆசிரியர், வெளியீட்டாளர், தணிக்கைக் கொள்கை போன்ற அதிகார அமைப்புகளின் தேர்வுகள், வடி கட்டல்கள் எல்லாவற்றையும் தாண்டித் தான் ஒருவர் தம் கருத்தை அச்சில் ஏற்ற முடியும். லித்தோ புரட்சியின் சன நாயகமயமாதலை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட மாற்றுப் பத்திரிகையாளர்கள் யார் வேண்டுமானாலும் தங்கள் கருத்துக்களைச் சொல்ல முடியும் என்கிற நிலைமையும் எல்லோரிடமும் சொல்வ

படிப்பகம்

www.padippakam.com

தற்குச் செய்திகள் உள்ளன என்கிற நம்பிக்கையையும் ஏற்படுத்தினர். எழுத்தாளருக்கும் வாசகருக்குமான எல்லைக் கோட்டைத் தகர்த்தெறிந்தனர். இதனால் அச்சில் கண்டவற்றையெல்லாம் வேதமாகப் பார்க்கும் நம்பிக்கை போய் எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்கும் விமர்சனப் பார்வை ஊக்குவிக்கப்பட்டது. 'Libertarian Education' என்கிற மாற்றுக் கல்வி இதழ் தனது ஆசிரியர் குழு கூட்டத்தையே திறந்த அரங்கில் யார் வேண்டுமானாலும் பங்கேற்கலாம் என்கிற அறிவிப்போடு நடத்தியது.

மாற்று இதழ்கள் எதிர்கொள்ளும் பெரிய சிக்கல்-வழக்கம் போல-விநியோகம்தான். மாணவர் போராட்டங்களைத் தொடர்ந்து அங்கே ஏற்பட்ட விழிப்புணர்வின் விளைவாக கல்வி நிறுவனங்களில், அந்நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர் சங்கங்கள் புத்தகக் கடைகளை நடத்தின. மாற்று இதழ்கள் பெரும்பாலும் இக் கடைகளில் கிடைத்தன. இவை தவிர ஒவ்வொரு முக்கிய நகரத்திலும் ஏதேனும் ஒரு கடைக்குச் சென்றால் அங்கே மாற்று இதழ்கள் கிடைக்கும் எனப் பரவலாகத் தெரிந்திருந்தது. ஒரு புத்தகமொன்றில் கண்டுள்ள இத்தகைய கடைப் பட்டியலில் லண்டன் நகரில் மட்டும் ஒன்பது கடை முகவரி உள்ளன. தவிர லண்டனிலிருந்த ''Rising fire'' என்கிற புத்தகக் கடை மாற்று இதழ்கள் மாற்று வெளியீடுகள் ஆகியவற்றின் பொது மையமாகவும் செயல்பட்டது.

இவ்விதழ்களின் உள்ளடக்கங்களின் அடிப்படையிலும் சில பொதுத் தன்மைகளைச் சொல்ல முடியும். கோட்பாட்டு விவாதங்களுக்கு இவை முக்கியமளித்தன. மாற்றாக வரும் சிந்தனைகளை காயடித்து உள்வாங்கும் (Co-option) முயற்சியை மைய நீரோட்டம் எப்போதும் மேற்கொள்ளும். எது உண்மையான மாற்று எனத் தீர்மானிப்பதும், கண்டறிவதும் மிகவும் முக்கியம். கல்வியை எடுத்துக் கொண்டோமானால் அவ்வப்போது கல்விக் கொள்கைகளை 'மாற்று' வதையும், தேர்வுமுறை மாற்றங்கள், பாடத்திட்ட வளர்ச்சி (Curriculam Development), பயிற்சிமுறை மாற்றங்கள், வகுப்பறை சீர்திருத்தங்கள்(Classroom inn0vation)போன்றவை குறித்து அடிக்கடி பேசுவதையும் இந்தத் தலைப்புகளில் ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்துவதையும் காணலாம். இந்த அடிப்படையில் சில மாற்றங்கள் நிகழ்வதையும் காணலாம். மாற்றுக் கல்விச் சிந்தனைகள் இவ்வாறு மாறிக் கொண்டிருப்பவற்றை தனது கவனத்தில் கொள்வதில்லை. மாறாக, இத்தனை மாற்றங்களுக்கிடையேயும் எது மாறாமல் இருக்கிறதோ அதனைக் கவனத்தில் எடுத்துக் கொள்கிறது. கல்வி அமைப்பிற்குள் நிலவும் உறவுகள் (எ.டு: ஆசிரிய-மாணவர் உறவு), தங்களையறியாமலேயே ஆசிரியர்கள் கல்வி அமைப்பிற்குள் கொண்டுவரும் அணுகல் முறைச் சட்டகங்கள் (Premises) கல்வியமைப்பின் வடிவத்தின் மூலமாகவே (பாடங்களின் வழியாக மட்டுமின்றி) மாணவர்களுக்குச் சென்றடையும் செய்திகள் போன்றவற்றிற்கு இவர்கள் முக்கியமளிக்கின்றனர். சுருங்கச் சொன்னால் வெளிப்படையான பாட திட்டத்தைக் காட்டிலும் மறைமுகமான பாடத்திட்டமே(Hidden Curriculam) மாற்றுக் கல்வியாளர்களின் கரிசனமாக அமைகிறது. எனவே இம்மாற்று இதழ்கள் அனைத்தும் அடிப்படை அணுகல் முறைகள், ஆய்வுச் சட்டகங்கள் குறித்த விவாதங்களுக்கு முக்கியத்துவமளிக்கின்றன. ஆய்வுச் சட்டகங்களுக்கிடையேயான உரையாடல்கள் அதிக இடத்தை நிரப்பிவிடுகின்றன. மைய நீரோட்ட அறிவுத்துறைகள் தத்தம் அணுகல் முறைகளைக் களத்திற்கே கொண்டு வருவதில்லை என்பது கவனிக்கத்தக்கது.

மைய நீரோட்டம் களத்திற்குக் கொண்டு வராமல் மறைக்க முயலும் இன்னொன்று ஒவ்வொன்றின் பின்னாலுமுள்ள அரசியல். கல்வி, மருத்துவம், உளவியல்... இவற்றையெல்லாம் அரசியலாக்கக் கூடாது என்பது அதன் வாதம். மாற்றுச் சிந்தனைகளோ ஒவ்வொன்றின் பின்னாலுமுள்ள அரசியலையும் தோலுரிக்கின்றன. குறிப்பாக இரு தரப்பினருக்கிடையேயான உறவுகள் (உ.ம்: ஆசிரியர்×மாணவர்; ஆண்× பெண்; வெள்ளை இனம் × கருப்பினம்; உயர் சாதி × தாழ்ந்த சாதி), நிறுவனங்கள் (உ.ம்: பள்ளிக்கூடம், குடும்பம், மருத்துவமனை, சிறைச்சாலை ஆகியவற்றின் அரசியலை களத்திற்குக் கொண்டு வந்துவிடுகின்றன.

மாற்றுச் சிந்தனைகளின் இன்னொரு முக்கிய பண்பு அதன் சர்வதேசத் தன்மை. நாட்டுக்கு நாடு, சூழலுக்குச் சூழல் வேறுபாடுகள் இருந்த போதிலும் ஒட்டுமொத்தமாய் மைய நீரோட்டங்களுக்குச் சில பொதுவான பண்புகள் இருப்பது போலவே அதனை எதிர்க்கு முகமாகத் தோன்றும் மாற்றுச் சிந்தனைகளுக்கும் சில பொதுவான பண்புகள் சர்வதேச அளவிலானதாகி விடுகின்றன. எனவே இவ்விதழ்களின் மேற்கோள் பட்டியல்களில் பெரும்பான்மை அமெரிக்க, அய்ரோப்பிய நாட்டு எழுத்துக்களாக அமைந்துவிடுகின்றன. பத்திரிகைகளுக்கிடையேயான பரிமாற்றமும் சர்வதேச அளவிலாகி விடுகின்றன. கியூபா, சிலி, வியட்நாம், தென்ஆப்ரிகா போன்ற வெளிநாட்டு அனுபவங்களை அறிமுகப்படுத்துவது அவசியமாகி விடுகின்றது.

மைய நீரோட்டத்தின் மிக முக்கியமான பண்பு சமூகத்தில் எல்லாவற்றைப் பற்றியும் பொதுக் கருத்து நிலவுவதாகக் கருதுவது: சொல்வது. எந்த ஒரு பிரச்சனைக்குரிய விசயமானாலும் அதனைத் தனது மொழிக்குள் கொண்டுவந்து (அம்மொழியை அது 'பொது' மொழி எனச்சொல்லும்) விவாதிக்கும். அதாவது அந்தப் பிரச்சினை

படிப்பகம்

www.padippakam.com

குறித்து சமூகத்தில் நிலவும் பொதுவான கருத்து என ஒன்றை முன் வைத்து அந்த அடிப்படையில் அணுகும். எடுத்துக் காட்டாக பஞ்சாபியர் அல்லது காஷ்மீரிகள் தனி நாடு கேட்கிறார்கள் என்றால் அகில இந்திய ஒருமைப்பாடு, பிரிவினை, சீக்கியர்கள் / இசுலாமியர், வன்முறை என்பன பற்றியெல்லாம் பொது அர்த்தங்கள் மக்கள் மத்தியில் நிலவுவதாக வைத்துக்கொண்டு போராளிகளின் கோரிக்கைகள் எத்தனை 'தவறானவை' என்பதை 'நிறுவும்'. சாத்தியமானால் 'தனிநாடு' என்கிற கோரிக்கையை 'மாநில சுயாட்சி' 'அதிகாரப் பரவல்' (devolution of Power) போன்ற மொழியில் அணுகி அத்தகைய அணுகல் முறைக்குள் (Premises) போராளிகளைக் கொண்டு வந்து ''உரையாடலுக்குத்'' தயாராகும். (அதனால் தான் மாற்றுச் சிந்தனைகளைப் பொறுத்த மட்டில் ஆய்வுச் சட்டகத்திற்குள் உரையாடல் என்பதைத் தவிர்த்து ஆய்வுச் சட்டகங்களுக்கிடையே உரையாடல் என்பதை முன் வைக்கின்றன). எனவே சமூகத்தில் அடிப்படைக் கருத்தொருமிப்பு இருக்கிறது என்கிற கற்பிதத்தைத் தகர்ப்பது மாற்றுச் சிந்தனைகளின் மிகமுக்கியமான பணியாக இருக்கின்றது. பொதுக் கருத்து என்றால் யாருடைய பொதுக் கருத்து ? எனக் கேள்வியை எழுப்பும் மாற்றுச் சிந்தனை சமூகம் என்பது ஒற்றைப் பரிமாணமானதல்ல, பன்மைத் தன்மையானது; பன்மைக் கலாச்சாரமுடையது, பன்முகப்பட்டக் கருத்தோட்டங்களைக் கொண்டது என்பதை நிலை நிறுத்துவதில் தனது ஆற்றலைச் செலவழிக்கும் மோதல்களை மூடி மறைக்காமல் அவற்றை அங்கீகரிக்கும். தனது இதழையும் பன்மைக் கருத்துக்களின் களமாக ஆக்கிக் கொள்ளும். மாற்றுச் சிந்தனைகளைச் செயலில் வடிக்கும் போது ஏற்படும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் களமாகவும் மாற்று இதழ்கள் பயன்படுகின்றன.

O O O

இனி மாற்றுக் கல்வி இதழ்களைப் பற்றிச் சிறிது விரிவாகப் பார்க்கலாம்.

கல்வியைப் பொறுத்த மட்டில் மாற்றுச் சிந்தனைக்கு ஒரு நீண்ட பாரம்பரியம் உண்டு. Libertarian Education-9,10, 13 இதழ்களில் **காலின் வார்ட், ஜோல் ஸ்ப்ரிங்** ஆகியோரின் இது தொடர்பான கட்டுரைகள் வந்துள்ளன. 1793ம் ஆண்டிலேயே **வில்லியம் காட்வின்** பொதுக் கல்வியை எதிர்த்துள்ளார். கிட்டத் தட்ட இன்றைய பள்ளி நீக்கச் சிந்தனையாளர்களின் (de-schoolers) கருத்துக்களை ஒத்து அவர் சிந்தித்துள்ளார். அறிதலும், பயிற்சியளித்தலும் தன்னெழுச்சியாக நிகழ வேண்டியவை. அரசியலதிகாரம் பயிற்சியளிக்கும் உரிமையை எடுத்துக் கொள்வதென்பது அவனவனுக்கு ஒரு இடம் ஒதுக்கப்படுவதையே குறிக்கிறது. அரசு தனது நிறுவனங்களை நிலை நிறுத்தவே பொதுக் கல்வியைப் பயன்படுத்தும். அரசுடன் இணைந்திருக்கும் ஒரே காரணத்திற்காகவே அதனை நம்மால் ஊக்குவிக்க முடியாது என்றார் கோட்வின். தனது காலத்தில் ஒழுங்கவிழ்ப்புச்சிந்தனையாளர்களாகிய **'மாக்ஸ் ஸ்டிர்னர்'** போன்றோரின் கல்வி குறித்த சிந்தனைகளை **கார்ல் மார்க்ஸ்** தான் ஆசிரியராக இருந்த (1842) 'ரீனிஷ் ஸிதுஸ்' இதழில் வெளியிட்டுள்ளார். ஒவ்வொருவரும் தங்கள் கல்வியைத் தாங்களே தீர்மானிப்பது தான் சரி என்றார் ஸ்டிர்னர். ''தன்னைப் போலவே மற்றவனையும் ஆக்கும் போக்கைத்தான் கல்வி என்கிறார்கள்'' எனச் சாடினார் **டால்ஸ்டாய்.** கட்டாய வருகைப்பதிவு (attendance) உட்படக் கல்வித் திணிப்பின் சகல அம்சங்களையும் அவர் எதிர்த்தார். ஸ்பெயின் அரசால் புரட்சியாளர் என மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட (1909) **பிரான்சிஸ்கோ ஃபெர்ரர்** இன்னொரு மாற்றுக் கல்விச் சிந்தனையாளர். சமூகத்தைத் திருத்துவதோ, புனரமைப்பதோ கல்வியின் நோக்கமல்ல. தொழிற்புரட்சியைத் தொடர்ந்து நாடுகளின் பொருளியல் உற்பத்தியை நிறைவேற்றுவதற்குப் பயிற்சியளிக்கப்பட்ட தனி நபர்கள் தேவைப்பட்டனர். சமூகமும் அதற்கேற்ப ஒழுங்கமைக்கப்பட வேண்டியிருந்தது. இந்தப் பணியை நிறைவேற்ற கல்வி உருவாக்கப்பட்டது. அரசதிகாரத்தின் பிரக்ஞையற்ற கருவிகளே ஆசிரியர்கள். ''அரசின் அதிகாரம் பள்ளியிலிருந்து பிறக்கிறது'' என்றார் ஃபெர்ரர்

புகழ் பெற்ற ஒழுங்கவிழ்ப்பாளரும் பெண்ணியச் சிந்தனையாளருமான **எம்மா கோல்ட்மான்** 1919 ல் ரசியா சென்று வந்து புரட்சிக்குப் பிந்திய கல்வி முறையைக் கண்டித்து எழுதியுள்ள குறிப்புகள் முக்கியமானவை. போல்செவிக் அரசு தலையுடைப்புக் குறிக்கோள்கள் எதையும் நிறைவேற்றவில்லை. எல்லாவற்றையும் ஒடுக்கியுள்ளது. சோவியத் அரசில் கல்வி வாய்ப்புகள் பெருகியுள்ளன என்பது உண்மைதான். ஆனால் இதர (முதலாளிய) அரசுகளைக் காட்டிலும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார அரசு சுதந்திரச் சிந்தனையையும் விமர்சனப் பார்வையையும் ஒடுக்குவதில் அதிக அளவில் வெற்றி பெற்றுள்ளது என மனம் நொந்து கூறினார் எம்மா. மக்களைத் தகவமைப்பதற்குக் கல்வியைக் கருவியாகக் கையாண்டதில் குறிப்பிடத்தக்கவை சோவியத் யூனியனும் நாஜி செர்மனியும் என்கிறார் **ஜோயல் ஸ்ப்ரீங்.** அமெரிக்கக் கல்விக் கூடங்களின் இனவாத, ஆணாதிக்கத் தன்மைகளைத் தோலுரிக்கும் ஏராளமான வெளியிடுகள் வந்துள்ளன. நம் காலத்திய இன்னொரு முக்கிய மாற்றுக் கல்விச் சிந்தனையாளர் **பாவ்லோ பிரேயர்** பற்றிய அறிமுகம் நிறப்பிரிகை-4ல் வந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

மாற்றுக் கல்வி அல்லது தளையுடைப்புக் கல்வி (Libertarian Education) அணுகல் முறை, கல்வி குறித்த மார்க்சிய அணுகல் முறையுடன் இணைகிற/வேறுபடுகிற அம்சங்களைக் கண்டு கொள்வது நல்லது. மார்க்சியத்திற்குள்ளேயே பல்வேறு போக்குகள் இருப்பது போலவே மாற்றுக் கல்வி அணுகல் முறைக்குள்ளும் பல்வேறு போக்குகள் உள்ளன என்கிற புரிதலோடு இதனை நாம் மேற்கொள்ள வேண்டும். மைய நீரோட்ட அணுகல் முறைகள் 'கல்வி சார்ந்த பிரச்சினைகளை குறிப்பான ஒன்றாகவும் தனி நபர் சார்ந்த ஒன்றாகவும் அணுகும். மாற்றுக் கல்வியும் மார்க்சிய அணுகல் முறையும் கல்விப் பிரச்சினைகளை குறிப்பான நிலையிலிருந்து பொதுவான நிலைக்கு கொண்டு செல்கின்றன. பிரச்சினையைத் தனிநபர் சார்ந்ததாகப் பார்க்காமல் அமைப்பைப் பரிசீலிக்கின்றன. இது இந்த இரண்டிற்குமுள்ள ஒற்றுமை எனலாம். எனினும் 'பள்ளிநீக்க' (deschooling) கொள்கைக்கு மாற்றுக் கல்வியாளர்கள் காட்டும் அனுதாபத்தை மார்க்சியர்கள் காட்டுவதில்லை. கற்பனா வாதத் தன்மையானது என அதனை ஒதுக்குவர். எத்தகைய அதிகார அமைப்பையும் மாற்றுக் கல்வியாளர்கள் நம்புவதில்லை. மார்க்சியர்களோ அதிகார அமைப்பு புரட்சிக்குப் பின்னும் கூட தவிர்க்க இயலாது, பொதுவுடைமைச் சமுதாயத்தில்தான் அது மறையும் என்பர். நிறுவனங்கள் ஒடுக்கு முறைத் தன்மையுடன் விளங்குவதற்குக் காரணம் அவை முதலாளிய அல்லது நிலப் பிரபுத்துவக் கருத்தியலை நடைமுறைப்படுத்துவதால்தான் என்பர் மார்க்சியர். சமூக ஒழுங்கமைப்பின் படிநிலை அதிகார உறவுகள் அப்படியே எதிரொளிக்கப்படுவதால் தான் நிறுவனங்கள் ஒடுக்குமுறைச் செயல்பாட்டைக்கொண்டுள்ளன என்பர் மாற்றுக் கல்வியாளர். எல்லாவற்றையும் விட முக்கியமாக மார்க்சியர் போல சாதாரணர்களை விடுப்பதிலும் விழிப்புணர்வூட்டுவதிலும் முன்னணிப்படை அல்லது கட்சியின் பங்கை மாற்றுக் கல்வியாளர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. எனவே 'கற்பிப்பதில்' ஆசிரியரின் பங்கை மதிப்பிடுவதில் மார்க்சியரும் மாற்றுக்கல்வியாளரும் பெரிதும்வேறுபடுவதால் கல்வி பற்றிய அடிப்படைக் கண்ணோட்டமே வேறுபடுகின்றது. பிரச்சினைகளை அங்கீகரிக்கும் மார்க்சியர் அமைப்பை மாற்றாமல் கல்விப் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது என்பர். மாற்றுக் கல்வியாளரோ கல்வி போன்ற நுண் தளங்களிலிருந்து மாற்றத்தை நோக்கிய செயற்பாடுகள் தொடங்க வேண்டுமென்பர். எனவே கல்விக் களத்தில் நடத்தப்பட வேண்டிய போராட்டங்களுக்கான முக்கியத்துவத்தை மதிப்பிடுவதிலும் இருவரும் வேறுபடுகின்றனர்.

O O O

இனி மாற்றுக் கல்விஇதழ்களில் மேற்கொள்ளப் பட்ட சில விவாதங்களைக் காண்போம்.

மைய நீரோட்டக் கல்வியால் உயர்த்திப்பிடிக்கப் பட்ட **ஆர் எஸ். பீட்டர்ஸ்** என்பவரின் '' அறவியலும் கல்வியும் '' (Ethics and Education) என்கிற நூலை விமர்சித்து **கீத் பேடன்** என்கிற மாற்றுக் கல்வியாளர் '' மாபெரும் மூளைக் கொள்ளை '' (The Great Brain Robbery) என்கிற கட்டுரையை (67 பக்கங்கள்) சிறு வெளியீடாக வெளியிட்டு உள்ளார். பீட்டர்சின் வரையறைப்படி ''கல்வி என்பது பயனுள்ள வேலைகளுக்கு ஒருவனைத் தகுதியாக்குவது.'' இதனைக் கடுமையாய் விமர்சிக்கிறார் பேட்டன். கல்வியை விளக்குவதற்கு மூன்று உருவக மாதிரிகள் முன்வைக்கப் படுகின்றன. 1) குயவன்-பாண்டம் மாதிரி 2) தோட்டக்காரன்-செடி மாதிரி 3) நடத்தைப் பயிற்சி மாதிரி (Behaviorist Model) பாண்டத்தைப் போல விருப்பம்போல் மாணவனை உருவாக்கும் முதல் மாதிரியை பீட்டர்ஸ் கூட ஏற்றுக்கொள்வதில்லை. தன்னிச்சையாக வளாக்கூடிய செடி-வளர்ப்பு மாதிரியையும் கூட பீட்டர்சும் மறுக்கிறார். அடிப்படையில் ஆசிரியருக்கும்-மாணவருக்கும் இடையே ஒரு சமத்துவமற்ற தன்மையை இம் மாதிரி முன் வைக்கிறது. குழந்தை தோட்டக்காரனாகக் கூட வளர்ந்துவிடும். ஆனால் செடி எப்போதும் தோட்டக் காரனாக முடியாது. தவிரவும் செடிகள் குழந்தைகளைப் போலத் தங்களுக்குள் கற்றுக் கொள்வது கிடையாது. மூன்றாவதாகக் குழந்தைகள் செடிகளைப் போல செயலூக்க மற்றவையல்ல. தோட்டக்காரனின் கருணை செடிகளுக்குத் தேவைப்படலாம்;குழந்தைகளுக்கல்ல என்கிறார் பேட்டன். குழந்தைகள் விரும்பினால் உங்கள் விளக்கங்களிலிருந்து மட்டுமல்ல உங்கள் கருணையிலிருந்தும் தப்பித்துக் கொள்ளும் சுதந்திரம் அவர்களுக்கு வேண்டும். சொல்லிக் கொடுப்பதை ஏற்றுக் கொள்வது மட்டுமல்ல மறுக்கிற சுதந்திரமும் மாணவர்களுக்கு வேண்டும் என்கின்றனர் மாற்றுக் கல்வியாளர்கள்.

கற்பவனின் நடத்தைகளில் (Behaviors) ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் கல்வியை மூன்றாம் மாதிரி வரையறுக்கிறது. மிருகங்களின் நடத்தைகளின் மீது செய்யப்பட்ட சோதனைகளின் அடிப்படையில் இது வடிவமைக்கப்படுகிறது. ஸ்இன்னேரியன் உளவியல் இதற்கு அடிப்படையாகிறது. பேட்டன் இதனை கடுமையாக விமர்சிக்கிறார். கற்றுக்கொள்பவரின் செயலூக்கமான பங்கை இம்மாதிரியும் நிராகரிக்கிறது. முன்னிரு மாதிரிகளிலும் கற்பவர்கள் பாண்டங்களாகவும் செடிகளாகவும் கருதப்பட்டால் இம் மூன்றாவது மாதிரி அவர்களை கூண்டிலடைக்கப் பட்ட புறாக்களாகவும் எலிகளாகவும் கருதுகிறது. தவிரவும் இரு செயல்கள் நடத்தைகள் என்கிற வகையில் ஒன்றாயிருக்கலாம். குறிக்கோளுடன்

படிப்பகம்

www.padippakam.com

அவை இணையும் போது அர்த்தங்கள் மாறுபடலாம். சாலையில் நிற்கும் ஒருவன் தெருவில் வருகிற போலீஸ்காரனைப் பார்த்துவிட்டு இருமுகிறான். போலீஸ்காரனுக்கு அதுஇருமல். அருகிலுள்ள பூட்டிய வீட்டிற்குள் திருடிக் கொண்டிருக்கும் இருமியவனின் கூட்டாளிக்கு அது போலீஸ்காரன் வருகைபற்றியஎச்சரிக்கை. முன்னது ஒரு வெறும் மனித நடத்தை. இரண்டாவதோ ஒரு நடவடிக்கை-Praxis எனவே நடத்தைப் பயிற்சி மாதிரி என்பது நடவடிக்கையின் சாத்தியப்பாட்டை மறுப்பதன் மூலம் கற்பவரை வெறும் 'பொருளாக'க் குறுக்கிவிடுகிறது.

''உருப்படியான காரியங்களுக்கு ஒருவனைத் **தகுதிப்படுத்துதல்**'' என்கிற பீட்டர்சின் வரையறை ஆசிரியர்-மாணவருக்கிடையேயான மேற்குறித்த நீக்கப்படவேண்டிய வேறுபாடுகள் அனைத்தையும் அங்கீகரித்து ஏற்றுக் கொள்கிறது. மீண்டும் இது ஒரு சமத்துவமற்ற ஏற்றத்தாழ்வான (மதகுரு-சாதா மனிதன்-தீட்சை வழங்குதல்) மாதிரியாகவே அமைகிறது. அறிவு, கற்றல் ஆகியவற்றை ஆசிரியன் வரையறுக்கிறான். யாரொருவன் சூழலை வரையறுக்கிறானோ அவனே சூழலைக் கட்டுப்படுத்துகிறான். சூழலின் மீது அதிகாரம் செலுத்துகிறான்.

அப்படியானால் பேட்டன் முன்வைக்கும்சரியான மாதிரி என்ன? உரையாடல் மாதிரிதான். உரையாடல் தனது இருமுனைகளில் இருப்பவர்களையும் மனிதர்களாக அங்கீகரிக்கிறது; சமமாகக் கருதுகிறது மாணவனுக்குச் சில உரிமைகள் வழங்கப்படுகின்றன. அவை: மறுக்கும் உரிமை; தனது கருத்தை அல்லது முடிவை ஒத்திவைக்கும் உரிமை; தகவலை உறுதி செய்துகொள்ள வேறிடத்தை நாடும் உரிமை. கற்பது என்பது மாணவர்களின் வேலை. மாணவர்களுக்காக ஆசிரியர்கள் இந்த வேலையைச் செய்ய முடியாது. உரையாடல் மட்டுமே மற்றவர்களின் நடத்தைகளை நடவடிக்கையாக அங்கீகரிக்கிறது.

கல்வி மாதிரிகளின் வேறுசில குறைபாடுகளாகப் பேட்டன் கருதுபவை: கற்கிற எல்லோரையுமே குழந்தைகளாகப் பார்ப்பது. வயது வந்த மாணவர்களை வேறு படுத்திப் பார்க்காதது. மனிதரை எதுவரை குழந்தையாக வரையறுப்பது என்பதெல்லாம் இப்போது மாறி வருவதை நாம் அறிவோம். இன்னொரு த்வறு வகுப்பறையை மட்டுமே கல்விக் களமாகக் கருதுவது. ஒரு மனிதர் கற்றுக் கொள்வதில் பெரும் பகுதி தற்செயலாக incidental நடைபெறுகிறது. குடும்பம், விளையாட்டரங்கம், திரையரங்கு, தாசி வீடு, கோயில், கட்சி மேடைஇவை எல்லாவற்றிலுமே கல்வி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்கிறார் **பால்குட்மான்** (Anarchy, Jan 70):

பிட்டர்சின் வரையரையில்''தகுதிப்படுத்துதல்'' என்கிற அம்சத்தைப் பேட்டன் நொறுக்கித் தூளாக்கினார் என்றால் ''உருப்படியான காரியங்கள்'' என்கிற கருத்தாக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கினார் **டேவிட் அட்டஸ் டெய்ன்**. பீட்டர்ஸ் பற்றிய இவரது விமர்சனத்தை லண்டனில் உள்ள கல்வியல் கல்லூரியின் மாணவர் சங்கம் வெளியிட்டது. மாற்றுக் கல்வியாளர்கள் கல்வியின் 'அறிதல்' பங்கை cognitive side of Education புறக்கணிப்பவர்களல்ல. ஒரு சமூகம் எத்தகைய நடவடிக்கைகளை உருப்படியானவை எனக் கணிக்கிறது? யார் இதனைத் தீர்மானிக்கிறார்கள்? எந்த அடிப்படையில் உருப்படியானவை தீர்மானிக்கப்படுகின்றன? எவை எவை உருப்படியானவை என்பதில் சமூக முழுமைக்கும் ஒரே கருத்துண்டா? இது குறித்து சமூகக்குழுக்களுள்ளே கருத்துமாறுபாடு உருவாகுமெனில் என்ன செய்வது? இந்தக்கேள்விகளை மாற்றுக் கல்வியாளர்கள் முன் வைக்கின்றனர். உருப்படியான வற்றைச் சமூக முழுமைக்குமாய் தீர்மானிக்கும்பணியை தத்துவவியலாளர் களிடமும் வல்லுனர்களிடமும் வழங்குகிறது மைய நீரோட்டம். நிலவும் சமூக நடைமுறைகளின் அடிப்படையில் இவர்கள் இதனைத் தீர்மானிக்கின்றனர். சமூக நடை முறைகள் (social Practices) சமூக நிறுவனங்களால் கட்டமைக்கப்படுகின்றன. இவ்வாறு நிலவும் சமூக அமைப்பை நியாயப்படுத்தும் பணியாளர்களாகத் தத்துவவியலாளர்கள் மாறிவிடுகின்றனர்.

தவிரவும் சமூக அறிவு என்பது மனிதனுக்கு அப்பால் திரண்டிருக்கும் ஒரு பொருளல்ல. (பார்க்க : தகவலியம், நி. பி. 5). அறிவுஎன்பது ஒரு செயல் முறை (Process) ; விளைபொருள் (Product) அல்ல. சமூக அறிவிற்குள் ஒரு மனிதன் பிறக்கிறான்; சமூக நடைமுறையில் அதனைக் கற்றுக் கொள்கிறான்; உருவாக்குகிறான். எடுகோள்கள், பரிசோதனைகள், விமர்சனங்கள், ஒதுக்குதல்கள், பதிலீடுகள் ஆகியவற்றின் மூலம் அது வளர்கிறது. அறிவு என்பது நீ ஒத்துப் போகிற ஒன்றல்ல; மாறாக ஒத்துப் போகாத ஒன்று. ஒன்றை மறுக்கும் போதுதான் அடுத்ததாக அது வளர்கிறது. கூட்டல்கள் மூலம் அது வளர்வதில்லை; திருத்தல்கள் மூலமாகத்தான் வளர்கின்றது. இவ்வாறு அறிதலின் செயலூக்கமான பங்கை அங்கீகரிக்கும் மாற்றுக் கல்வி அறிவை பல்வேறு கருத்துக்களின் போர்க்களமாய்க் கருதுகிறது. சரி. இத்தகைய மாற்றுக் கருத்துக்களை மைய நீரோட்டக்காரார்கள் எவ்வாறு எதிர் கொள்கின்றனர்?-''நடைமுறையில் சாத்தியமில்லை'

படிப்பகம்

www.padippakam.com

மற்றவர்களின் நடைமுறைகளை அங்கீகரிக்கா தவர்கள் எப்போதும் சொல்வதுதான் இது. எதையும் ஆராயாமலேயே தூக்கி எறியும் வழிகளில் இதுவும் ஒன்று. சண்டை போடாம லேயே தான் வென்றுவிட்டதாக அறிவிக்கும் அறிவிப்பு இது. கொஞ்சம் நெருக்கிப் பிடித்தால் சில கற்பிதங்களை இத்தோடு சேர்த்துக் கொள் வார்கள். ''இன்றைய சூழலில் இது நடை முறையில் சாத்தியமில்லை என்பார்கள். அது என்ன இன்றைய சூழல்? 'இன்றைய சூழலே' மாற்றியமைக்கப்பட வேண்டிய ஒன்றா இல்லையா? எனக் கேட்கும்போதுவிழி பிதுங்கு வார்கள்.

Libertarian Education-13 வது இதழ், மாணவர்கள் எவ்வாறு ஒடுக்கப்படும் பெரும் பான்மையினராக, சிவில் உரிமைகள் பறிக்கப் பட்டவர்களாக இருக்கின்றனர் என்பதை விரி வாக ஆராய்கிறது. மாணவர்கள் மிகவும் இழிவாகக் கருதப்படுகின்றனர். அமெரிக்கச் சூழலில் நீக்ரோக்களைப் போல அவர்கள் நடத்தப்படுகின்றனர். இங்கே தாழ்த்தப்பட்ட வர்கள் போல எனக் கொள்ளலாம். மாண வர்களே தாழ்த்தப்பட்டவர்கள் என்றால் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ...கேட்கவே வேண்டாம் ஒவ்வொரு சிறு விஷயங்களும் கற்றுத் தரப்பட வேண்டியவர்களாக மாண வர்கள் கருதப்படுகின்றனர். கழிப்பறைகளுக்குச் செல்வதற்குக் கூட சில உயர்ந்த பள்ளிகளில் பயிற்சியளிக்கப்படுகிறது. மாணவனுக்கு என்ன தெரியும்.அவன் என்ன நினைக்கிறான், எதைக் கண்டு அஞ்சுகிறான், எதை விரும்புகிறான் என்பதெல்லாம் முக்கியமல்ல. நிறுவனம் என்ன தெரிய வேண்டுமென நினைக்கிறது, என்ன விரும்புகிறது என்பது தான் முக்கியம், இத்தகைய நிறுவனத்திற்குள் எதேச் சாதிகார மான ஒரு பாத்திரம் ஆசிரியனுக்கு வழங்கப் படுகிறது. இத்தகைய நிறுவனத்திற்குள் மாற்றுக் கல்வியை நடைமுறைப்படுத்த முயலும் ஆசிரியனின் கதி என்ன? ரொம்பச் சிரமந்தான். இத்தகையசிரமங்களையும் பகிர்ந்து கொள்கின் றன மாற்றுக்கல்வி இதழ்கள் இத்தகைய ஆசிரி யர்களுக்கு இரண்டு வகை அழுத்தங்கள், ஒரு பக்கம் நிறுவனம் இந்த நடைமுறைகளுக்கு எதிராகச் செலுத்தும் அழுத்தம். இன்னொரு பக்கம் இத்தகைய ஒடுக்கு முறையான சமூகத்திற்குள், நிறுவனத்திற்குள் இந்த ஆசிரியரின் வகுப்பறையில் மாத்திரம் அளிக்கப் படும் சுதந்திரம் ஏற்படுத்தும் ''ஒழுங்குப்'' பிரச்சினைகள். இறுக்கமான ஒழுங்கமை விலிருந்து சுதந்திரத்திற்கு மாறிச் செல்லும் இடைக் காலம் குழப்பமாகத்தான் இருக்கும். ஆனால் இறுதியில் ஒரு இயற்கை ஒழுங்கு உருவாகத்தான் செய்யும். இயற்கை ஒழுங்கு என்பது குழப்பம் அல்ல. தன்னெழுச்சியான பங்கேற்பின் மூலமான ஒழுங்கு. இது மோதலற்ற அமைதியான ஒழுங்கு அல்ல; மாறாக மோதல்களை அங்கீகரிக்கும் ஒழுங்கு.

ஆனால் நிறுவன அமைப்புகள் இத்தகைய இயற்கை ஒழுங்கு உருவாவதைத் தடுத்து, இடைப்பட்ட குழப்பத்தை பயன் படுத்தி மாற்றுக் கல்வியை முயற்சிக்கும் ஆசிரியனைத் தனிமைப்படுத்தும். மாணவர்கள் மூலமாகவே, '' எங்களை ஒழுங்கு படுத்துங்கள் அமைதியை நிலைநாட்டுங்கள்; உரையாடல் வேண்டாம், சொல்லிக் கொடுங்கள் '' எனக் குரல் எழுப்ப வைக்கும். கல்வி பற்றிய சரியான புரிதலுடன் உருவாக்கப்படும் சுதந்திரப் பள்ளிக் கூடங்களில் (Free schools) இந்தப் பிரச்சினைகளைச் சமாளித்து விடலாம். இத்தகைய பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களை 'ஒழுங்கவிழ்ப்பு ஆசிரியர்கள்' எனலாமா? இல்லை, 'ஒழுங்கவிழ்ப்பு×ஆசிரியர்கள்' என்கிற முரண்கள் இணைய முடியாது. ஆசிரியர்கள் என்கிற பாத்திரமே— அதன் வழக்கமான பொருளில்—ஒழிக்கப்பட்டுவிடும். புகழ்பெற்ற ஒழுங்கவிழ்ப்புச் சிந்தனையாளர் பக்கூனின் சொல்வார்.

'' நான் பெறுகிறேன்; நான் கொடுக்கிறேன். இதுதான் மனித வாழ்க்கை. ஒவ்வொருவரும் இயக்குகிறார்கள்; இயக்கப்படுகிறார்கள். நிலையான, மாறாத அதிகார மையமென்று ஒன்றுமில்லை. பரஸ்பரம் மாறிக் கொண் டுள்ள தற்காலிகமான, தன்னிச்சையான அதிகாரமும் ஆட்படுதலுமே சாத்தியம் ''

மனிதன் என்பவன் ஒரு கற்கும் மிருகம். நாம் தூண்ட வேண்டியதில்லை என்பார் ஜான் ஹோல்ட். தன்னெழுச்சியான கற்கும் விருப்பம் குறித்துப் பேசுவார் பெர்ட்ரன்ட் ரஸ்ஸல். கற்பதற்கு ஒரு உயிரியல் பரிமாணம் உண்டு. பசி, குறிப்பிட்ட உணவுக்குப்பின் பசி ஆறுதல் என்பது போல தனது தேவைகளுக்கும் புற உலக எதார்த்தங்களுக்குமான இடைவெளியை மனிதன் தன்னெழுச்சியான கற்றலின் மூலம் நிரப்பிக் கொள்வான். மாறாக அவன் மீது விருப்புகள் சுமத்தப்படும்போது கல்வி சுமை யாகிறது. தேர்வுகள், மதிப்பீடுகள் போன்ற வற்றின் மூலம் அவனைக் கற்றலை நோக்கித் தள்ள வேண்டியிருக்கிறது. இந்தக் காரணத்தி னாலேயே கட்டாய வருகைப் பதிவையும் (compulsory attendance) மாற்றுக் கல்வி யாளர்கள் எதிர்க்கின்றனர். இதன்மூலம் மாண வனின் சனநாயக உரிமை பறிக்கப்படுகிறது. பள்ளிக்கு வராததைக் குற்றமாக வரை யறுத்துத் தண்டனை வழங்குவதன் மூலம் நிலைமை இன்னும் மோசமாகிறது.

வருகை கட்டாயமில்லை என்றால் அதனால் பாதிக்கப்படுவது அடித்தட்டு பிள்ளைகள்தானே,

படிப்பகம்

www.padippakam.com

மேலேயிருப்பவர்கள் தானாகவே வந்துவிடுவார்களல்லவா என்கிற கேள்விக்கு (Libertarian Education') பத்தாவது இதழில் **ஆர்தர் ஹம்ப்ரே** பதில் அளிக்கிறார். பள்ளிக்கு வராமல் போவதால் ஏற்படும் இழப்புகளை பற்றிப் பேசுகிறீர்களே, பள்ளிக்கு வருவதால் ஏற்படும் இழப்புகளை யோசித்தீர்களா என்கிறார் அவர். இன்றய கல்விமுறை, தேர்வு முறை ஆகியவற்றால் பயனடையும் மத்திய தர, மேல்தட்டு மாணவர்களுக்கு வேண்டுமானால் கட்டாய வருகைப் பதிவு பயன்தருமே யொழிய இதனால் எவ்விதப் பயனுமடையாத அடித்தட்டு மாணவனைப் பொறுத்த மட்டில் இது அவர்கள் மீது அதிகாரம் செலுத்தப் படுவதற்கான இன்னொரு கருவியாக மட்டுந் தானே இருக்கும்.?

'Hard Cheese' இதழில் வெளிவந்துள்ள **கிம் ஜான்சனின்** 'வகுப்பறை எதிர்பார்ப்புகள்' குறித்த கள ஆய்வு மாணவர்களில் ஒரு குழுவினர் நன்றாகப் படிப்பதற்கும், இன்னொரு குழுவினர் நன்றாகப் படிக்காமற் போவதற்குமான காரணங்களை ஆராய்கிறது. மேலைச் சூழலில் வெள்ளை இன மாணவர்கள் நன்றாகப் படிப்பவர்களாகவும் கறுப்பின மாணவர்கள் நன்றகாப் படிக்காதவர்களாகவும் முரட்டுத்தனமானவர்களாகவும் உள்ளனர். நமது சூழலில் வெள்ளை இன மாணவர்களுக்குப்பதிலாக உயர்சாதிமாணவர்களையும் கறுப்பின மாணவர்களின் இடத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களையும் வைத்துப் பார்க்கலாம். இத்தகைய தர வேறுபாட்டிற்கு சமூகவியலாளர்கள் இரண்டு காரணங்களை முன் வைப்பர். முதலாவது வர்க்கம், குடும்ப அளவு, நகர்புறம் அல்லது கிராமப் புறம் போன்ற காரணிகள். இரண்டாவது பள்ளி அமைப்பிற்குள் உள்ள அமைப்பு ரீதியான காரணிகள். மாற்றுக் கல்வியாளர்கள் இரண்டாவது காரணத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர். வகுப்பறையில் மாணவர் குறித்த ஆசிரிய எதிர்பார்ப்புகள் என்பன மாணவர்களின் கல்வித் தரத்தைப் பெரிய அளவில் பாதிக்கின்றன என நிறுவுகிறார் கிம் ஜான்சன். சரியாகப் படிக்காத மாணவர்கள் பற்றிய பல்வேறு ஆசிரியர்களின் கருத்துக்களும் கள ஆய்வில் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருக்கின்றன. '' இந்த மாணவர்கள் நல்ல நடத்தை இல்லாதவர்கள், ஆர்வமற்றவர்கள், நன்றியற்றவர்கள், நல்ல பண்பற்றவர்கள், அசந்தால் வகுப்பறையிலேயே கையடிப்பார்கள், கறுப்பு மாணவர்களே இப்படித்தான், இவர்களை எப்போதும் கண்காணிக்க வேண்டும், இவர்களது குடும்பங்களும் இப்படித்தான், நிறைய பசங்களுக்கு அப்பன் பேர் தெரியாது'' இத்தகைய கண்ணோட்டம் கிராமப்புற. தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பற்றி இங்கும் நிலவுகிறது என்பதை ஒரு ஆசிரியன் என்ற முறையில் நான் அறிவேன். '' நீயா, நீ ஒழுங்காப் படிக்க மாட்டியே, என்ன திரு திருன்னு முழிக்கிறே உன் மூஞ்சியைப் பார்த்தாலே தெரியுதே, நீ இன்னைக்கி ஒழுங்கா 'பிராக்டிகல்' செய்துட்டுப் போக மாட்டேன்னு எனக்கு அப்பவே தெரியும் '' என மாணவர்களை வாழ்த்தும் ஆசிரியர்கள் பலரை நான் அறிவேன். இவ்வாறு ஆசிரிய எதிர்பார்ப்பு என்பது மாணவர்களை அவர்களுக்கான இடம் ஒன்றை நிர்ணயித்து அதற்குள் அவர்களை நிரப்பி விடுகிறது. அதற்குப் பின் அந்த மாணவன் அப்படித்தான் நடக்க முடியும். இந்த முன்னூகிக்கப்பட்ட எதிர்பார்ப்பைத் தாண்டி அவன் ஓரடி எடுத்து வைக்க முடியாது. **ஆக நடத்தை முறைகள் வாழ்க்கைப் பின்னணி, உருவத்தோற்றம் ஆகியவற்றினடிப்படையில் 'நல்ல மாணவன்' குறித்த ஒரு கருத்தாக்கம் ஆசிரியர்களிடம் இருக்கிறது** ஒவ்வொரு மாணவனையும் இந்த கருத்தாக்கத்துடன் ஒப்பிட்டு அவர் தனக்குள் மதிப்பிட்டுக் கொள்கிறார். இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் வெவ்வேறு மாணவர்கள் வெவ்வேறு விதமாய் நடத்தப் படுகிறார்கள். இவ்வாறு நடத்தப்படும் மாணவர்கள் பெரும்பாலும் ஆசிரியர் அல்லது நிறுவனம் ஏதிர்பார்த்தபடியே அமைந்து விடுகின்றனர். இதனை '' எதிர்பார்ப்புகளின் மூலம் உயர்வு தாழ்வுகளை உருவாக்குதல் '' (Discrimination By Expectation) என்கின்றனர் மாற்றுக் கல்வியாளர்கள்.

தரங்குறைந்த மாணவர்களுக்கான (Educationaly sub Normal) பள்ளிகள் எனத் தனி நிறுவனங்கள் அமெரிக்காவில் உள்ளன. பெரும்பாலும் கறுப்பின மாணவர்களே இவற்றில் உள்ளனர். ஐ. கியூ. சோதனை (I. Q. Test) உளவியல் சோதனை ஆகியவற்றின் மூலம் மாணவர்கள் தரம் பிரிக்கப்படுகின்றனர். இந்த அடிப்படையில் சரியாகப் படிக்காதவர்கள், முரடர்கள், சமூகப் பொருத்த மற்றவர்கள் (Socially inadequat) என மாணவர்கள் பாகுபாடு செய்யப்படுகின்றனர். (நமது சூழலில் சட்ட பூர்வமாய் இந்நிலைமை இல்லாத போதும் நடை முறையில் இத்தகைய மாதிரியில் மாணவர்களுக்கான வெவ்வேறு பள்ளிகள் இருப்பதை நாம் அறிவோம்). இத்தகைய சோதனைகள் குறித்த கடுமையான விமர்சனங்கள் Humpty Dumpty மூன்றாவது இதழிலும் Libertarian Education 12 வது இதழிலும் வந்துள்ளன. இத்தகைய சோதனைகளில் மூன்று வகையான சார்புகள் வெளிப்படுகின்றன. **முதலில்** கலாச்சாரச் சார்பு; மாணவன் பேசும் மொழியும் பள்ளியில் ஆசிரியர் அல்லது சோதனை செய்யும் உளவியலாளர் பேசும் மொழியும் வேறு வேறு. நமது சூழலில் சேரியிலிருந்து வரும் ஒரு தாழ்த்தப்பட்ட மாணவன் பள்ளியில் சந்திக்கும் பார்ப்பன ஆசிரியரின் தோற்றம், பேச்சு ஆகியவற்றைக்

படிப்பகம்

www.padippakam.com

கண்டு எத்தகைய குற்ற உணர்ச்சி அடைவான் என்பதை நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம். **இரண்டாவது** மத்திய தர வர்க்கச் சார்பு. கேட்கப்படும் கேள்விகளெல்லாம் மத்திய தர வாழ்க்கைச் சூழலுடன் இயைந்ததாக இருக்கும். நமது சூழலில் 'இண்டர்வியூக்களில்' கிரிக்கெட் பற்றியும், கர்நாடக சங்கீதம் —காஞ்சி ஆச்சாரியார் பற்றியும் கேள்விகள் கேட்கிறார்களல்லவா அப்படி **மூன்றாவது** சார்பு உளவியல் ரீதியான பாதிப்பால் ஏற்படும் சார்பு. தங்களது குடும்ப வாழ்வின் அவலம் அதிலிருந்து மிகவும் அந்நியமான பள்ளிச் சூழல் இவற்றின் விளைவாக அடித்தட்டுப் பிள்ளைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இவை பள்ளிகளில் பிள்ளைகளின் தரத்தைப் பாதித்து விடுகின்றன. போதாக் குறைக்குப் பாட புத்தகங்களும் ஒட்டு மொத்தமான சமூக மதிப்பீடுகள் இனவாதத் தன்மையுடையதாகவும், ஆணாதிக்கத் தன்மையுடைய தாகவும் அமைந்து விடுவது கண் கூடு. நமது சூழலில் சாதி ஆதிக்கத் தன்மையையும் சேர்த்து கொள்ளவேண்டும் இந்த அடிப்படையில் பாட நூற்களின் இனவாதச் சார்பையும், ஆணாதிக்கச் சார்பையும் தோலுரித்து மாற்றுக் கல்வி இதழ்களில் ஏராளமான கட்டுரைகளும், சிறு வெளியீடுகளும் வந்துள்ளன சுருக்கம் கருதி இங்கு அவற்றைத் தவிர்க்கின்றேன். பாட நூற்களில் ஆணாதிக்கச் சார்பு, மதச் சார்பு ஆகியவை குறித்து மக்கள் கல்வி இயக்கம் இங்கே சில சிறு வெளியீடுகளைக் கொண்டு வந்துள்ளது. பாட நூற்களிலும், கல்வி நிறுவனங்களிலும் செயற்படும் கலாச்சாரச் சார்பு என்பது எப்படித் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மாணவர்கள் மத்தியில் குற்ற உணர்வையும் தாழ்வுணர்வையும் ஏற்படுத்துகின்றன என விரிவான ஆய்வுகள் செய்யப்படவேண்டும். கள ஆய்வுகளுடன் இவை இணைக்கப்பட வேண்டும். இத்தகையகள ஆய்வுகளின்போது படம் வரையச் சொன்னால் கறுப்பினப் பிள்ளைகள் கூடத் தங்களை வெள்ளையாகத் தீட்டிக் கொள்வதையும், பல வண்ணப் பொம்மைகளை. விளையாடக் கொடுத்தால் கறுப்பு வண்ணப் பொம்மைகளை மட்டும் அவர்கள் புறக்கணித்து விடுவதையும் மாற்றுக் கல்வி இதழ்கள் சுட்டிக் காட்டி 'எதிர்பார்ப்புகளின் மூலம் தர வேறுபடுத்தல்! என்பது எந்த அளவிற்குப் பச்சைப் பிள்ளைகளின் பிஞ்சு மனங்களையும் பாதித்துள்ளன என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளன.

இத்தகைய தோலுரிப்புகள் மூலமாகவும் இதர சிவில் உரிமை சட்ட உரிமைக்கான நடவடிக்கைகள் மூலமாகவும் சில மாற்றங்களை மாற்றுக் கல்வியாளர்கள் சாதிக்கவும் முடிந்துள்ளது. நியூயார்க் நகரில் IQ மதிப்பெண்களைச் சான்றிதழ்களில் பதிவுசெய்வது குற்றம். சான்பிரான்சிஸ் கோவில் IQ மதிப்பெண்களின் அடிப்படையில் கறுப்பினப்பிள்ளைகள் தனிப்பள்ளிக்கூடங்களில் ஒதுக்கப்படுவது இப்போது தடைசெய்யப்பட்டுள்ளது. கலிபோர்னியாவில் குழந்தைகளை உளவியல் பரிசோதனை செய்யும்போது அவர்களின் பேச்சு மொழியில், அந்த மொழியை நன்கறிந்த ஒருவர்தான் அதைச் செய்ய வேண்டுமென்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாய் தேர்வு முறை குறித்தும் கடுமையான விமர்சனங்களை மாற்றுக் கல்வியாளர் முன்வைக்கின்றனர் அவற்றில் ஒன்று; தேர்வு முறை உள்ள வரை உரையாடல் சாத்தியமில்லை. உரையாடலில் ஒரு முனையில் இருப்போர் மற்றவரை மதிப்பீடு செய்வதன் மூலம் அவர்களின் எதிர் காலத்தையே நிர்ணயிக்கலாம் என்கிற போது உரையாடல் எப்படி சாத்தியம்? இதர கருத்துக்களை சுருக்கம் கருதி இங்கே தவிர்க்கிறேன். இதே போல குழந்தை உளவியல், அறிவியல் கல்வி ஆகியவை குறித்த மைய நீரோட்டக் கருத்துக்களுக்கெதிரான மாற்றுக்கல்வி விமர்சனங்களும் இங்கே தவிர்க்கப்படுகின்றது.

மாற்றுச் சிந்தனைகள் என்பன இன்றைய உலகின் குறைபாடுகளிலிருந்து எழுகின்றன. எந்த எதார்த்தத்தை அது எதிர்கிறதோ அந்த எதார்த்தத்திலிருந்தே நாளை உலகின் மாதிரியை அது உருவாக்குகிறது. இது ஒரு குறைபாடாக இருந்த போதிலும் இத்தகைய விமர்சனங்களின்றி, இந்த விமர்சனங்களினடிப்படையிலான பொது விவாதமுமின்றி இன்றைய நிறுவனங்களின் உச்சியிலுள்ள பெரியமனிதர்களால் எதிர்காலம் திட்டமிடப்படுவதைக் காட்டிலும் இது எத்தனையோ வகைகளில் உயர்ந்தது விரும்பத் தக்கது. இத்தகைய பொது விவாதங்களில் மாற்று இதழ்களின் பங்கு முதன்மையானது. இத்தகைய மாற்றுச் சிந்தனைகள் மாணவர்களிடம் கொண்டு செல்லப்படாவிட்டால் நிறுவனங்களில் (சார்பு) எதிர்பார்ப்புகளுக்கு அவர்கள் பலியாகும் போக்கு தொடர்வதை எப்படி நிறுத்துவது? நாம் செய்யாவிட்டால் இதனை நிறுவனங்களா செய்யும்?

O O O

கடைசியாய் ஒன்று:

''மாணவர் சங்க நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதை குற்றவாளிகள் மறுக்கவில்லை. பத்தாயிரம் சிறு வெளியீடுகளுக்கான செலவுத் தொகையாக 1500 டாலரை அவர்கள் சங்க நிதியிலிருந்து எடுத்துள்ளனர். இந்த வெளியீடுகள் வெளிப்படுத்தும் கருத்துகளுக்கும் மாணவர் சங்கக் குறிக்கோள்களுக்கும் எந்தத் தொடர்பு மில்லை. இந்த மாணவர் அய்வரும் விடலைப் பருவத்தினர்; வாழ்க்கையனுபவங்கள் இல்லாதவர்கள்; அரை குறையாய்ச் தெரிந்துக்கொண்ட தத்துவ, சமூக,பொருளாதார, அரசியல் கொள்கைகளால் மனம் குழம்பிப்போனவர்கள்; தினசரி வாழ்க்கையின் அவலங்களால் வெறுப்புற்றவர்கள். தமது சகமாணவர்கள், ஆசிரியர்கள், கடவுள், மதம், மத குருமார்கள், அரசு, உலகம் முழுமையிலுள்ள அரசியலமைப்புகள் அனைத்

படிப்பகம்

www.padippakam.com

தின் மீதும் அவதூறுகள் நிரம்பிய உறுதியான தீர்ப்பை தாம் வழங்க முடியும் என அரக்கத்தன மாக, அர்த்தமற்ற முறையில், பரிதாபகரமாக இவர்கள் நம்புகின்றனர் என்பது அவர்களது எழுத்துக்களைப் படிக்கும்போது விளங்குகிறது. எல்லாவிதமான ஒழுக்கங்களையும், கட்டுப்பாடு களையும் மறுக்கும் இவர்கள் திருட்டையும், அறிவு அழிக்கப்படுதலையும், முழுமையான கவிழ்ப்பையும், கட்டுத்தளைகளற்ற சுகத்தையும் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு உலகந் தழு விய பாட்டாளி வர்க்கப் புரட்சியையும் வரவேற் கத் தயங்க மாட்டார்கள். இவற்றில் வெளிப் படும் அடிப்படையான அராஜகப் பண்புகளின் விளைவாக இந்தப் பிரச்சாரங்கள் மிகவும் ஆபத் தானவை. மாணவர்கள் மத்தியிலும், பொது மக்கள் மத்தியிலும், உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகைகள் மூலமாகவும் இக்கருத்துக்கள் பரப்பப்படுவதென்பது ஸ்டாஸ்பர்க் பல்கலைக் கழகத்தின் நல்ல பெயருக்கும், ஒழுக்கத்திற்கும் கல்விக்கும். ஒட்டு மொத்தமாய் மாணவர்களின் எதிர்காலத்திற்கும் ஆபத்தை விளைவிக்கும்''.

—ஸ்ட்ராஸ்போர்க் நீதிமன்றத் தீர்ப்பின் ஒரு பகுதி (1966) நிறுவனங்களும், அதிகார மும், ஆதிக்க சக்திகளும், சனாதனமும் எப்போதும் எல்லா நாடுகளிலும் மாற்றுச் சிந்தனைகளை இப்படித்தான் அணுகி யுள்ளன!

குறிப்பு: இக்கட்டுரை மாற்றுக்கல்வி இதழ் களை ஆய்வு செய்து எழுதப்பட்டதல்ல. MIKE SMITH எழுதிய ''The Underground and Education — A guide to Alternative Press'' என்கிற நூலிலிருந்து (Metheun, 1977) தகவல்கள் எடுக்கப்பட்டுள்ளன. 1977க் குப் பின்னுள்ள நிலைமைகள் தெரியவில்லை. நமது வெளிநாட்டு வாசகர்கள் இன்றையநிலை குறித்து எழுதினால் பயனுடையதாய் இருக்கும் Mike Smithன் நூலை நிறப்பிரிகைக்காக வாங்கி அனுப்பியவர் தோழர் ஆர். சீனிவாசன், சென்னை.

O

மாற்றுக் கலாச்சாரம் - விவாதத்திற்குரிய சில குறிப்புகள்

அ. மார்க்ஸ்

1. இன்றைய வெகு மக்கள் கலாச்சாரம் அல்லது மைய நீரோட்டக் கலாச்சாரத்தைப் பலரும் விமர்சிக்கின்றனர். இப்படி விமர்சிப் பவர்களிடையே பல நுண்மையானவர்க்க/அரசி யல் வேறுபாடுகள் உண்டு. இவர்கள் ஒரு படித் தானவர்களல்ல. இன்றைய வெகுசனக் கலாச் சாரத்தை விமர்சிப்பதன் மூலம் இவர்கள் ஏதோ ஓர் வகையில் மாற்றுக் கலாச்சாரம் வேண்டு மென்கின்றனர். உண்மையான மாற்றுக் கலாச்சாரம் எப்படி இருக்க வேண்டும் என்று யோசிப்பதற்கு முதன்படியாக இவர்களை வரும் கலாச்சாரத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்தும் என்னவிதமான பார்வைகள் கொண்டுள்ளனர் எனப் பார்த்துவிடுதல் நல்லது.

பார்க்க:- அட்டவணை

2. வியக்கத்தக்க அளவிற்கு இவர்களிடையே அடிப்படை அம்சங்கள் ஒற்றுமை நிலவுகிறது என்பதும் வேறுபாடுகள் மிகவும் மேலோட்ட மானவை என்பதும் வெளிப்படை. வேறுபாடு களும்கூட ஒரு சில உள்ளடக்க அம்சங்களை மாற்றினால் போதும் என்கிற அளவில்தான் உள்ளது. எ.கா: எதார்த்தவாதம் என்கிற முத லாளிய காலகட்ட வடிவத்தைப் பொதுவுடைமை யாளர் ஏற்றுக்கொள்கின்றனர். உள்ளடக்கம் சோசலிசமாக இருந்தால் போதும் என்பதே சோசலிச எதார்த்த வாதம்.

3. இந்து மீட்பு வாதிகளும், காந்தீயர்களும், மார்க்சியர்களும் கலாச்சார விசயத்தில் பெரும் பாலும் ஒத்தக் கருத்துக்களைக் கொண்டிருக்கிற கசப்பான உண்மை, புரட்சிக்குப் பிந்திய ரசியா வின் இதர நடவடிக்கைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய ஒன்று. கலாச்சார/தொழில் நிர்வாக அரசு எந்திர/போலீஸ் கண்காணிப்பு அணுகல் முறைகள் எதுவும் முதலாளிய நாடு களிலிருந்து பெரிதும் வேறுபடவில்லை. பாரிஸ் கம்யூன் அனுபவத்தின் மீதான மார்க்சின் கருத் துக்கள் செயலாக்கப்படவில்லை. போல்செவிக் அரசு ஒரு மாற்று அதிகாரத்தை நிலை நிறுத்த வே பயன்பட்டது. அதிகாரத்தையை இல்லா மற் செய்கிற இறுதி நோக்கம் பற்றிய பிரக்ஞை இல்லை. இந்தக்குரலை ஒலித்தவர்கள் 'அரா ஜகவாதிகள்' என முத்திரை குத்தப்பட்டு ஒதுக் கப்பட்டனர். நிறுவனங்களின் முதலாளிய உள்ளடக்கத்தை மாற்றினால் போதும் என போல்செவிக்குகள் நம்பினர். சமூகத்திலிருக்கும் அதிகாரத்துவத்தை நிறுவனங்கள் அமைப்பளவி லேயே பிரதிபலிப்பதால்தான் அவை அதிகாரத் துவமாயிருக்கின்றன என்கிற அராஜவாதிகளின் கருத்துக்கள் தூக்கி எறியப்பட்டு அவதூறுக்குள் ளாயின. இந்த அனுபவங்களையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு கொஞ்சம் வர லாற்று ரீதியாய் பிரச்சினையை அணுகுதல் நலம்.

படிப்பகம்

www.padippakam.com

4. மனிதன் தோன்றிய (சுமார்) அய்ம்பதாயிரம் ஆண்டுகளில் கிட்டத்தட்ட முதல் 45,000 ஆண்டுகளைப் புராதனச் சமூகம் என்கிறோம். அதிகாரமற்ற ஏற்றத்தாழ்வற்ற சமூகம். சொத்துடைமை கிடையாது. தொழில், நம்பிக்கைகள், கலாச்சார நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் சமத்துவம். பாலியல் ஒடுக்கு முறை இல்லை. தந்தை வழிச் சமூக மதிப்பீடுகள் கிடையாது. அரசு இல்லை. குடும்பம் இல்லை. பிள்ளைகளுக்குத் தந்தை பெயர் கிடையாது.

5. **எங்கல்ஸ்:** அரசு, தனிச் சொத்து, குடும்பம் ஆகிய மூன்று ஒடுக்குமுறை நிறுவனங்களையும் ஒரே நிலையில் வைக்கிறார். தொழில் நுட்ப வளர்ச்சி வர்க்க வேறுபாடுகளுக்கும், தனிச் சொத்திற்கும் இட்டுச்செல்கிறது. வாரிசு தேவையாகிறது. குடும்பம், கற்பு, தந்தை வழி மதிப்பீடுகள் தோன்றுகின்றன. அரசு உருவாகிறது.

6. ஒரு பரந்த அளவில் மேலாண்மைத்திரள் X மக்கள் திரள் எனச் சமூகம் பிளவுறுகின்றது. உற்பத்தி பன்முகப்படுகிறது. மேலாண்மைத் திரளும் சரி, மக்கள் திரளும் சரி ஒரு படித்தானதாக இல்லாமல் தமக்குள் எண்ணற்ற கூறுகள் (Fractions) ஆகின்றன. அரசுருவாக்கம் என்பதோடு சிவில் சமூகம் பரவலாக வளர்ந்து இறுக்கமடைகிறது. அரசையும் மக்களின் பொருளாயத வாழ்வையும் இணைக்கும் வலைப்பின்னலாக சிவில் சமூகம் நிலை பெறுகிறது.

7. மேலாண்மைத் திரளின் கருத்தியல்—ஆகும் கருத்தியல்—என்பது மேலாண்மைத் திரளுக்குள் உள்ள பல்வேறு குழுக்களுக்கிடையேயான உறவால் கட்டமைக்கப்படுகிறது. இதனை மக்கள் திரளின் பொது அறிவுடன் (Common Sense) செயலூக்கத்துடன் ஒருங்கிணைக்கும் (articulate) பணியில் சிவில் சமூகத்தின் அங்கங்கள் —(மதம், பள்ளி, குடும்பம், etc.,) முக்கிய பங்கு வகிக்கின்றன. இதன் மூலம் மேலாண்மைத் திரளின் ஆதிக்கத்தை விரும்பி ஏற்கும் உள நிலை மக்கள் திரளுக்கு ஏற்படுகிறது. இந் நிலையை மேலாண்மை (Hegemony) என்கிறோம். மேலாண்மை வெற்றிகரமாக நிலவும் போது அரசின் அடக்கு முறைக் கருவிகள் வன்மையாய்ப் பயன்படுத்தப்படுவதில்லை.

8. சாதாரண மக்களின் பொது அறிவு என்பது மேலாண்மையை ஏற்றுக்கொள்ளும்போது அதனுள் மாற்றுக் கருத்துக்கள், எதிர்ப்புக்கூறுகள் முதலியன முற்றாக மறைந்துவிடுவதில்லை. பொது அறிவு என்பது மிகவும் பரவலானதாய் (eclectic) துண்டு துண்டானதாய், வரலாற்றுணர்வு இல்லாததாய், மேலாண்மையிலிருந்து தப்பித்துச் செல்லும் இயல்புடையதாய் அமைகின்றது. (நெருக்கடிகளில் எதிர்ப்புக் கூறுகள் வலுப்பெறுகின்றன. மேலாண்மை பலவீனமடைகிறது. இப்போது அரசின் அடக்கு முறைக் கருவிகளின் செயல்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது). (உ.ம்.) பார்ப்பனிய மயமாக்களுக்கு எதிரான மத வழிபாடுகள், சடங்குகள்; பாலியல் ஒடுக்குமுறைக்கு எதிராக பெண்கள்/குழந்தைகள் தங்கள் விடுபடல்களை வெளிப்படுத்துதல் (பாலியல் கதைகள் முதலியன).

9. சிவில் சமூகம் ஒழுங்கமைவுகளின் களனாக அமைகிறது. சட்டம், அறவியல் மதிப்பீடுகள் மற்றும் நூல்கள், செயல்படுத்தும் நிறுவனங்கள் அமைக்கப்படுகின்றன அறம் என்பது எதிர்மறையாகவும், தூலமான நிலையிலிருந்து கருத்துருவமான நிலை உடையதாகவும் மாற்றப்படுகின்றது. மக்களின் இயல்பான பழக்கங்கள் குற்றங்களாக வரையறுக்கப்படுகின்றன. குற்ற உணர்ச்சி உருவாக்கப்படுகிறது. இதன் மூலம் மக்களைக் கண்காணிக்கும் உரிமையை அரசு எடுத்துக் கொள்கிறது. உடல் கூச்சத்திற்குரிய பொருளாக உணரவைக்கப்படுகிறது. உடல் மீதான கண்காணிப்பு பெற்றோர், ஆசிரியர் மருத்துவர், அரசு மூலமாக மேற்கொள்ளப்படுகிற, பேசுகிற மொழியும்கூட அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படுகிறது. ''ஒழுங்கின்மை பற்றிய அச்சம்'' (Fear of Anarchy) வலிமையாய் பதிக்கப்படுகிறது. ''பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது...''

10. குறியீடுகள், புனைவுகள், பிம்பங்கள் முதலியவை கட்டமைக்கப்பட்டு மக்கள் மீது திணிக்கப்படுகின்றன. சிவில் சமூக நிறுவனங்கள், இவற்றின் அறிவு ஜீவிகள் (இவர்களை மரபு அறிவு ஜீவிகள் என்பார் கிராம்ஸி.) ஆகியோரின் பங்கு இதில் மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது.

11. முதலாளியம் நுண் அதிகார வலைப் பின்னல்களை மேலும் பரவலானதாயும், வலிமையானதாயும், நுண்மையானதாயும் மாற்றுகிறது, தொழில் நுட்பங்கள் இதில் பெரிதும் கைகொடுக்கின்றன. நீதிமன்றம், கல்வி, மொழிவழிச்சாதனங்கள் (Communications) மருத்துவம் முதலிய நிறுவனங்கள் நுண்மையாய் இந்நோக்கில் செயல்படுகின்றன. இவற்றின் மூலம் மனித உடல்கள் அதிகாரம் செயல்படும் களனாகவும், கண்காணிப்பிற்குட்பட்டதாகவும் மாற்றியமைக்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட சிவில் சமூக நிறுவனங்கள், நுண் அதிகார மையங்கள், இவை கட்டமைக்கும் குறியீடுகள், புனைவுகள், மர்மப்படுத்தல்கள் முதலியன மேலாண்மையை உறுதி செய்கின்றன.

12. மக்கள் திரளின் பொது அறிவின் எதிர்ப்புக் கூறுகளை ஆளும் கருத்தியலிலிருந்து பிரித்து

படிப்பகம்

www.padippakam.com

எடுத்து (disartiCulate) மேலாண்மையைத் தகர்ப்பது இத்தகைய பல்வேறு களங்களிலும் மேற்கொள்ளப்படுதல் அவசியம். இதில் பாட்டாளிவர்க்க அறிவு ஜீவிகள் (Organic Intelectuals) மற்றும் மாற்றுக் கலாச்சாரச் செயற்பாடுகளின் பங்கு முதன்மையானது.

13. மேலாண்மையில் ஒரு சிதைவு (Rupture) ஏற்படுத்துவது, மாற்றுக் கலாச்சாரத்தின் முக்கிய பணியாக இருக்கிறது. சிவில் சமூக நிறுவனங்களே பல்வேறு மாற்றுக்களை முன் வைக்கின்றன; மாற்றங்களைச் செய்து வருகின்றன. (உ.ம். கல்விச் சீர்த்திருத்தங்கள்) இந்த 'மாற்றங்களை'யெல்லாம் தாண்டி எந்தெந்த அம்சங்கள் மாற்றப்படாமல் காக்கப்படவேண்டும் எனச் சிவில் சமூகம் விரும்புகிறது எனப் பார்க்க வேண்டிருக்கிறது. (உ.ம். அறிவு மற்றும் ஆசிரிய—மாணவர் உறவு பற்றிய பள்ளியின் கருத்தாக்கம்). அந்த மாறாத அம்சங்களை (Hidden curriculum) மாற்றுக் கலாச்சாரம் கேள்விக்குள்ளாக்க வேண்டியிருக்கிறது. எனவே விவாதம் என்பது சிவில் சமூக நிறுவனங்கள் அனுமதித்துள்ள ஆய்வு சட்டகங்களுக்குள் நடத்தப்படாமல் மாற்றுச் சிந்தனை என்பது ஆய்வுச் சட்டகத்தையே கேள்விக்குள்ளாக்குகிறது. சமூகத்தில் எல்லாவற்றைப் பற்றியும் ஒரு பொதுக் கருத்து (Consensus) நிலவுவதாக சிவில் சமூகம் நிலவுகிறது. இந்த மாயையைச் சிதைத்து சமூகத்தில் நிலவும் பல்வேறுவிதமான சிந்தனைகளையும் களத்திற்குக் கொண்டு வந்து அதற்கொரு ஏற்பை ஏற்படுத்துவது மாற்றுக் கலாச்சாரத்தின் பணியாகிறது. மக்கள் குழுக்களுக்கிடையேயான உறவுகள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பாக நுண் நிறுவனங்களின் பின்னாலுள்ள அரசியலை மறைப்பது சிவில் சமூகத்தின்/மையக் கலாச்சாரத்தின் முக்கிய பணியாக இருக்கிறது. இதற்கு நேரெதிராக எல்லாவற்றிக்கும் பின்னாலுள்ள அரசியலைத்தோலுரித்துக்காட்டுவதை முதன்மைப் பணியாகக் கொள்ளவேண்டிய அவசியம் மாற்றுக் கலாச்சாரத்திற்கு இருக்கிறது. 'அழகியல்' என்கிற கூப்பாட்டை மறுத்து 'அரசியல்' என்கிற குரலை மா.க.முன் வைக்கிறது. சட்டமன்றம் போன்ற அரசியல் நிறுவனங்களெல்லாம் கேலிக்கூத்துகளாகஆகிப் போன இன்றைய சூழலில் கேலிக் கூத்துக்களையெல்லாம் நாம் அரசியலாக்க வேண்டியிருக்கிறது.

14. நிறுவனங்களை எதிர்த்த கலகம் என்பது மா க.வின் முக்கிய பணியாக இருக்கிறது. கலகம் என்பதைத் தூலமாகத்தான் பார்க்க வேண்டும். ஓரிடத்தில் கலகமாக இருப்பது இன்னொரு இடத்தில் கலகமாக இல்லாமற் போகலாம். ஆளும் கருத்தியல் முன் வைக்கும் அனைத்தையும் மறுப்பது (Negate) அவசியமாகிறது. மேலாண்மைத் திரள் முன் வைக்கும் அழகியலை மட்டுமல்ல, அதன் மொழி, இலக்கணம் வடிவம் எல்லாவற்றையும் சிதைத்தல் மா.கவின் பணியாகிறது.

15. பிம்பங்களையும், குறியீடுகளையும் சிதைத்தல் முதன்மைத் தேவை. பெரியாரிடம் இதற்கு எடுத்துக்காட்டுகள்: தேசப் படத்தை எரித்தல், கடவுள் உருவங்களைச் செருப்பால் அடித்தல், இன்னொரு (உ.ம்): எம்.டி.வி-யில் மடோனா சிலுவையைப் போகப் பொருளாய் பயன்படுத்துதல்.

16. பார்ப்பனியக் கலாச்சாரத்திற்கு மாற்று திராவிட இயக்கம் முன்வைத்த கலாச்சாரமல்ல. திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் (பார்ப்பனர் எதிர்ப்பு இயக்கம்)—நீதிக்கட்சி, தனித்தமிழ் இயக்கம் — திராவிட இயக்கம்—தி. மு. க.—அ.தி.மு.க.—ஜெயலலிதா). பெரியார் மட்டும் ஒருதறிதலை; விதிவிலக்கு. மாற்றுக்கலாச்சாரம் பெரியாரைத் தனியாகத் துண்டித்து எடுத்து அவரில்தன் கூறுகளைத் தேடவேண்டும்.

17. தங்கள் வாழ்க்கை முறை, அறிவு, ஒழுக்கம், நடை, உடை, பாவனை உணவு போன்றவை குறித்த மக்கள் திரளின் — (Subaltern Class) குற்ற உணர்வை நீக்கும்படியாகவும், மேலாண்மைத் திரளின் வாழ்க்கை முறைகளே வெட்கப்படத் தக்கவை என்கிற மதிப்பீட்டை முன் வைப்பதாகவும் மா. க. நடவடிக்கைகள் அமையும்.

18. மக்கள் திரளிடம் மௌனத்தை உடைத்து **உரையாடலை** —அதன் மூலம் விமர்சனப்பார்வையை உருவாக்குவது மா. க.வின் பணி. மக்கள் திரளை வழி நடத்தப்படக்கூடிய மந்தைகளாகக்கருதும் முன்னணிப்படைக்(Vanguard) கருத்தாக்கத்தை மா.க. மறுக்கிறது. ஏனெனில் இக்கருத்தாக்கம் அடிப்படையில் அசமத்துவமானது, (Inegalitarian); உரையாடலை மறுப்பது. **இதன் பொருள் அமைப்பு வடிவத்தையே மறுப்பதல்ல.**

19. மாற்றுக் கலாச்சாரத்திற்கு எதிரான வாதங்கள்: மதம் பதித்துள்ள ''ஒழுங்கின்மை பற்றிய அச்சம்'' மா.க-விற்கு எதிராகப் பயன்படுத்தப்படும். மேலிருந்து திணிக்கப்படாது மனித சமூகம் தன் னெழுச்சியாய் உருவாக்கிக் கொள்ளும் இயற்கை ஒழுங்கை (Natural Order) மா.க. மறுப்பதில்லை. இயற்கை ஒழுங்கு மனிதனுக்கில்லை என்பது மனிதனையே அவமதிப்பது. மதத்தின் குறிக்கோள் மனிதனை அவமதிப்பதுதான் இந்த வகையில் மைய நீரோட்டப் பொதுவுடைமையருக்கும், மதவாதிகளுக்கும்வேறுபாடில்லை. கொடூரமான ஒழுங்கமைவிலிருந்து இயற்கை ஒழுங்குக்கு மாறும் இடைக் கட்டத்தின் குழப்பமான நிலையைக் கண்டு நாம் அஞ்ச வேண்டியதில்லை.

படிப்பகம்

www.padippakam.com

20. 'நடைமுறைச் சாத்தியமில்லை' என்பது மா.க-விற்கு எதிரான இன்னொரு வாதம். ''எந்த நடைமுறை?'' என நாம் கேட்டால் ''இன்றைய நடைமுறை'' என்று பதில் வரும். இன்றைய நடைமுறை என்பதே மாற்றப்பட வேண்டிய ஒன்றா இல்லையா என்பதே நம் கேள்வி.

21. மா.க பற்றிய ஒரு முழுமையான Blue Print இப்போது தந்துவிட முடியாது. இன்றைய சமூகக் குறைகளின் அடிப்படையிலேயே நாம் மா.க. பற்றி பேசுகிறோம். இந்த அடிப்படையிலிருந்து முன் வைக்கப்படும் மாற்றுக்கள் என்பன தவிர்க்க இயலாமல் சில Resemplance ஐக் கொண்டிருக்கலாம். இது ஒரு குறைபாடு தான். காலப் போக்கில் இக் குறைபாடுகள் உதிரும். மாற்று பற்றிய அவசியத்தை உரையாடலாக்குவதே முதற்கட்டத் தேவையாகிறது.

22. இன்றைய வெகுசன கலாச்சாரம் = ஏகாதிபத்தியக் கலாச்சாரம் + இந்திய சமூகப் பார்ப்பனியப்பிற்போக்குக் கலாச்சாரம் என்பது உண்மைதான். ஆனால் மேலாண்மைத் திரள் போலவே நாமும் ஏகாதிபத்தியக் கலாச்சாரத்தையும் சரி, உள்நாட்டுக் கலாச்சாரத்தையும் சரி ஒற்றைப் பரிமாணமாய் (Monolith) பார்க்க வேண்டியதில்லை. சர்வ தேச அளவிலான எதிர்ப்புக் கூறுகளும் நம்முடைய Subaltern கூறுகளும் இணைந்த இன்னொரு வகையான Synthetic Culture ஆகவே நம்முடையதும் அமையும்.

23. வெகுசனக் கலாச்சாரச் செயற்பாடுகளுக்கு மாற்றாகவே இவ் எதிர்க் கலாச்சாரச் செயற்பாடுகளை முன்வைக்கிறோம். மேலாண்மையில் சிவில் சமூகம், மரபு அறிவு ஜீவுகள் ஆகியோரின் பங்கை முன்பே குறிப்பிட்டோம். மேலாண்மையில் சிதைவை ஏற்படுத்த மா.க செயல்பாடுகள் பயன்படுகின்றன. மிகவும் அடிப்படையான பிரச்சனைகள் உடைய மிகவும் அடிநிலை மக்கள் மத்தியில் மா.க பற்றிய 'போதனைகள்' தேவையில்லை. அவர்களின் அன்றாடக் கலாச்சாரத்தில் மிகுந்துள்ள எதிர்ப்புக் கூறுகளை வளப்படுத்துவதும், மிகச்சில ஆதிக்கக் கூறுகளைக் கண்டறியும் விமர்சனப் பார்வையை உருவாக்கிக் கொள்தலும், அங்கே மா.கவின் பணியாகிறது.

24. வடிவங்கள்:

1. மாற்று இதழ்கள், வெளியீடுகள்: புனைவுகளைத் தோலுரித்தல், பன்முகப்பட்ட பார்வைகளை முன்வைத்தல், ஒழுக்க மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்குதல்.

2. உரையாடலை உருவாக்கும் (Conscientisation) நடவடிக்கைகள்.

3. சுதந்திரப் பள்ளிகள் போன்ற மாற்று நிறுவனங்களை உருவாக்குதல்.

4. அகஸ்டோ போல் போன்றோரின் தெரு நாடகங்கள்.

5. அரசியல் திரைப்படங்கள், வீடியோக்கள்.

6. மாற்று வினியோக அமைப்புகளை உருவாக்குதல்.

7. சிவில் சமூக நிறுவனங்களின் Discriminative நடவடிக்கைகளை எதிர்த்து எதிர்ப்பியக்கங்கள் மேற்கொள்ளுதல்.

O O O

படிப்பகம்

www.padippakam.com

அட்டவணை: தமிழகத்திலுள்ள பல்வேறு இயக்கப் போக்கினரும் கலாச்சாரம் பற்றிய அம்சங்கள் பற்றி கொண்டுள்ள அணுகல் முறைகள்

	மைய நீரோட்டக் கலாச்சாரம்.	சமூக நிறுவனங்கள் ஒழுங்குகள், மதிப்பீடுகள்.	பாரம் பரிய மரபுகள்	ஏகாபத்திய கலாச்சாரம்	நலினத்துவம்	முழுச் சுதந்திரம் (Anarchism)	உயர்த்திப் பிடித்தல்	முன்னணிப் படை (Vanguard)
1. இந்து மீட்பு வாதிகள்	தர இழப்பு, ஆபாசம், அற மதிப்பீடுகள் இல்லை, வன்முறை.	அறஒழுங்குகள், நிறுவனங்கள் மேலும் இறுக்க மாக்கப்பட வேண்டும்	அப்படியே பின்பற்றப் படவேண்டும்.	முற்றிலும் ஒதுக்கப்பட வேண்டும்.	எதார்த்த வாதம் போதும்.	முழுச்சுதந்திரம் பற்றிய அச்சம் (Fear of anarchy)	அறம், சுயக் கட்டுப்பாடு, காந்தியம், கீழை மரபு, வருணா சிரமம்.	தேவை
2.காந்தியர்	,, ,,	அறஒழுங்குகள், தூய்மையான நிறுவனங்கள் இறுக்கமாய்த் தேவை.	கலந்து போன மோசமான கூறு களை நீக்கி பழைய மரபுகள் உயர்த்திப் பிடிக் கப்படவேண்டும்	,, ,,	எதார்த்த வாதம் போதும். சில நவீனத் துவக் கூறு களைப் பயன் படுத்தலாம்.	,, ,,	அறம், சுயக் கட்டுப்பாடு, எளிய வாழ்க் கை விஞ்ஞான மறுப்பு கீழை மரபு, லட்சிய வருணா சிரமம், தரும கர்த்தாமுறை.	லட்சிய வடிவில் தேவை.
3. கீழை மரபை உயர்த்திப் பிடிக்கும் மனிதாபி மான மார்க்சியர்	,, ,,	,, ,,	,, ,,	,, ,,	,, ,,	,, ,,	,, ,,	,, ,,
4. மைய நீரோட்ட மார்க்சியர்	,, ,,	அறஒழுங்குகள் இறுக்கமாய்த் தேவை. உள்ள டக்கம் மட்டும் மாறிய நிறுவனம் தேவை.	மரபுத் தொடர்ச்சி யை புறக்க ணிக்க முடி யாது.	,, ,,	எதார்த்தவாதம் போதும். உள்ள டக்கம், சோஷ லிசம்.	,, ,,	ஒழுக்கம், மனிதாபி மானம் பா.வ. ஒற்றுமை சவத்துவம்.	தேவை
5. மாவோ யிஸ்டுகள்	,, ,,	,, ,,	,, ,,	,, ,,	,, ,,	,, ,,	,, ,,	,, ,,
6. தமிழ் தேசிய விடுதலை யாளர்	,, மற்றும் ஆரிய/பார்ப்பனிய மதிப்பீடுகள்	,, ,,	பார்ப்பனியம் நீக்கப் பட்ட தமிழ் மரபு தேவை	—	எதார்த்த வாதம் போதும்	,,	ஒழுக்கம் தமிழின ஒற்றுமை தமிழ் பண்பாடு.	தேவை

படிப்பகம்

www.padippakam.com

தகவல் தொடர்பு

விவரம்: தொகுப்புக் கேள்விகளுக்கு நிறப்பிரிகை-5. பக்.123 ஐக் காண்க. கூட்டு விவாதம் சென்ற நவம்பர் 8 ந்தேதி காலை சரியாக 10-30 மணிக்கு திருச்சி தமிழ் இலக்கியக் கழகத்திற்குப் பின் புறமுள்ள ஜான் பால் உரையாடல் மையத்தில் தொடங்கியது. சென்னை, கோவை, பாண்டி, கல்பாக்கம், மதுரை, தஞ்சை என்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அய்ம்பத்திரெண்டு தோழர்கள்கலந்து கொண்ட விவாதம் மாலை 6 மணிக்கு முடிந்து போனது. பெண்கள் ஏழு பேர். சாதியம், தேசிய இனப் பிரச்சினை போன்ற தலைப்புகளில் கூட்டு விவாதம் நடைபெறும்போது இருந்த பரந்த அளவுப் பங்கேற்பு தகவலியம் தொடர்பான விவாதத்தில் இல்லாமற்போனது குறிப்பிடத் தக்கது. வந்திருந்தவர்களிலும்கூட ஒரு சிலரே விவாதத்தில் முழுமையாகப் பங்கேற்றனர். இனி விவாதம்:

நிறப்பிரிகை: சமூகத்தில் அக்கறையுள்ள யாவரும் கவனங்கொள்ள வேண்டிய மிக முக்கியமான துறை தகவல் தொடர்பு, எலக்ட்ரானியல், கணிப்பொறி, துணைக்கோள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள நவீன முன்னேற்றங்கள் தொலைத் தொடர்பிலும் வெகுசனத் தொடர்பு ஊடகங்களிலும் கடந்த சில பத்தாண்டுகளில் ஏராளமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இந்தியா போன்ற மூன்றாம் உலக விளிம்பு நாடுகள்கூட தொலைத்தொடர்பின் நவீன சாதனைகளையெல்லாம் உடனுக்குடன் நடைமுறைபடுத்துவதில் காட்டுகிற ஆர்வத்தின் முக்கியத்துவத்தை, அரசைப் பல்வேறு முனைகளிலும் எதிர்கொள்ள நேர்கிற சக்திகள்கூட உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. இந்நிலையில் தகவல் தொடர்பின் மீது கவனம் குவிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் ஒரு ஆரம்ப முயற்சியை நி.பி. மேற்கொண்டுள்ளது. தகவல் தொடர்பின் சகல பரிமாணங்களையும் முழுமையாகக் கொண்டு வந்துவிட இயலவில்லையாயினும் தொடக்கமாய்ச் சில அம்சங்கள் மீது நி.பி. கட்டுரைகள் கவனத்தை ஈர்த்துள்ளன. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நம் மீது இக்கண்டுபிடிப்புகள் திணிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து விலகிப் போகும்—தப்பித்துக்கொள்ளும்—வாய்ப்பு நமக்கில்லை. எனவே இத் தகவல் தொடர்பு வலைப் பின்னலின் உண்மையான பரிமாணம் என்ன, இதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது நம் கரிசனமாய் இருக்க வேண்டியிருக்கிறது. அச்சு, எழுத்தறிவு, தகவல் தொடர்பு என்பதெல்லாம் சமூகம் சனநாயகமாவதுடன் இணைந்த விசயங்கள் என்பார்கள். மூலதன மற்றும் அதிகார பலத்துடன் கூடிய மையப்படுத்தப்பட்ட உற்பத்தி, தனித்தனியான நுகர்வு என்கிற முதலாளிய நடைமுறை இந்தச் சனநாயகத்தைக் கேலிக்குரியதாக்கிவிடுவது என்பதைத் தகவல் தொடர்பிலும் நாம் அப்படியே நீட்டிக் கொள்ளலாம். தொலைத் தொடர்பின் நவீன சாதனைகளை அரசு தன் பக்கம் ஏகபோகமாய்க் குவித்துக் கொள்வதன் மூலம் மக்கள் மீதான அதன் அதிகாரம் பன்மடங்கு அதிகரித்துவிடுகிறது. எஸ்.டி.டி., ஃபாக்ஸ், செராக்ஸ் போன்ற வசதிகள் வீதிக்கு வீதி பெருத்துப் போனாலும், இவை மூலமான சாத்தியங்களைப் புரட்சிகர சக்திகளும் கூட பயன்படுத்திக் கொள்ள முடியுமென்றாலும் சராசரியாகச் சமூகத்தில் எத்தனை சதம் மக்களுக்கு இவை எட்டக் கூடியவையாக இருக்கின்றன. பயன்படுகின்றன எனப் பார்த்தால் மிகவும் மேல்தட்டில் இருப்பவர்களுக்கு இவை பயன்படுகின்றன என விளங்கும் அதிகார வர்க்கம், காவல்துறை உட்பட்ட அரசதிகார அமைப்பு, வணிகர்கள் மற்றும் இதரமேல் தட்டினரிடம் அதிகாரம் குவிவதற்கே இவை பயன்படுகின்றன. சர்வதேச அளவில் அதுவும் சமீபமாய் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் பின்னணியில் இவை மைய நாடுகளிடம் அதிகாரம் குவிவதற்குப் பயன்படுகின்றன. இது மிகவும் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றென்றாலும் இது குறித்து தேவைக்கதிகமான அச்சம் தேவையில்லை என்கிற அம்சத்தின் மீதும் நி.பி. கட்டுரைகள் கவனத்தைக் குவித்துள்ளன. பெரும்பான்மையான கிராமப்புற மக்கள் தொலைத் தொடர்புகளிலிருந்து மட்டுமல்ல வெகுசன ஊடகங்களிலிருந்தும் அந்நியப்பட்டே உள்ளனர். பெரும்பான்மையான கிராம மக்கள் தொலைக்காட்சி பார்ப்பதில்லை. பார்த்தாலும் திரைப்படம் தொடர்புடைய காட்சிகளை மட்டுமே பார்க்கின்றனர். எழுதப்படிக்கத் தெரியாத 65 சதம் மக்கள் பத்திரிகைகளை நேரடியாகப் படிப்பதில்லை. பத்திரிக்கை படிக்கக் கூடியவர்களிடமிருந்து வாய்மொழிப் பரவலாகவே செய்திகள், தகவல்கள் போய்ச்சேருகின்றன இன்னும்கூட இந்தியாவைப் பொறுத்த மட்டில் ஒப்பீட்டளவில் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தும் சாதனமாய் திரைப்படம்தான் விளங்குகிறது. வணிக திரைப்படங்களை வெறுமனே கலாச்சார சீரழிவுகள் என்றெல்லாம் ஒதுக்கிவிட்டுப் போய்

படிப்பகம்

www.padippakam.com

விட முடியாது. ஆதிக்கக் கருத்தியலை மக்கள் மீது திணிப்பதற்கு வெகுசனத் தொடர்பு சாதனங்கள் பெரிய அளவில் பயன்படுத்தப்பட்ட போதிலும் பார்வையாளர்கள்/வாசகர்கள் அப்படியே அவற்றை ஏற்றுக்கொள்வதில்லை. தங்களுக்குரிய வகையில் அதனை வெவ்வேறு வகைகளில் அவர்கள் அர்த்தப்படுத்திக் கொள்கின்றனர். இதனை பேரவாசிப்பு (Negotiated Reading) என்கிறோம். மக்கள் மத்தியில் விமர்சனப் பார்வையை உருவாக்கும் முயற்சியில் இன்றைய நிலவுகிற வெகுசனத்தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்துவதென்பது பத்திரிகைகள் அளவில் மட்டுமே, அதுவும் ஓரளவு மட்டுமே, சாத்தியம். இப்படிப் பயன்படுத்த முயற்சிப்பது என்பதோடு இன்றைய வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் மக்களுக்கு எதிராக நிற்கும்போது அவற்றுக்கு எதிராக வலிமை வாய்ந்த போராட்டங்களை எடுப்பதும் முக்கியம் இதுதவிர மாற்றுப் பத்திரிகைகள், மாற்று நாடகங்கள், அரசியல் திரைப்படங்கள் ஆகியவற்றிலும் நாம் கவனம் குவிக்க வேண்டியது அவசியம். மா-லெ. குழுக்களால் நடத்தப்படுகிற பத்திரிகைகள் அனைத்து மைய நீரோட்ட அரசியலுக்கெதிராக குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்திருந்தாலும், கலாச்சார மதிப்பீடுகளிலும், ஒற்றைக் கருத்துக்களை மேலிருந்து திணிப்பது என்கிற வகையில் விமர்சனப் பார்வையை மழுங்கடிப்பதிலும் மைய நீரோட்டப் பத்திரிகைகளையே பின்பற்றியுள்ளன.

இன்றைய விவாதத்தில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் பற்றிய ஆய்வு நடத்தும் நிறுவனங்களிலிருந்து பலரும் வந்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது தங்களின் அனுபவங்களை அவர்கள் எங்களோடு பகிர்ந்து கொள்வார்கள் என நம்புகிறோம். எல்லோரும் அவரவர் கருத்துக்களை எழுதித் தந்து விடுவது நல்லது என்பதை வழக்கம் போல வற்புறுத்துகிறோம்.

கடைசியாக என்று . மைய நீரோட்டத் தொடர்பு சாதனங்களில் (அனுமதிக்கப்படும் வரை) நாம் ஊடுருவுதல் என்பதற்குரிய முக்கியத்துவம் பற்றி சிந்திக்கவேண்டும். அரசின் அடக்குமுறைகள் சில தோழர்கள் மீது ஏவப்படும்போது பத்திரிகைகளில் செய்தி கொண்டு வருவது என்பதில் நாம் செய்கிற முயற்சிகள் சில சமயங்களில் பயன் விளைவித்துள்ளன. அதேபோல் 'டாக்குமென்ட்ரி' திரைப்படங்கள், வீடியோ படங்கள் முதலியவற்றையும் நாம் பயன்படுத்தல் அவசியம்

வாசுதேவன் (கரீம் நகர்) :தொடர்புச் சாதனங்களின் வலைப்பின்னலுக்குள் மொத்த மக்கள் தொகையும் ஏதாவதொரு விதத்தில் சிக்குண்டு தான் இருக்கிறார்கள். ரொட்டித்துண்டு கிடைக்காதவர்கள் கூட தெருவில் காட்டப்படும் இலவச சினிமாவையும், வானொலியில் பரப்படும் செய்திகளையும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். கருத்தியல் ரீதியாக வன்மையாக திணிக்கப்படும் உண்மைகளை அதிகாரத்திற்கு ஆதரவாக அதிகாரத்தை நியாயப்படுத்தும், அதிகாரத்தைப் பரப்பும் சாதனங்களாக மக்களை ஆக்குகிறது தமிழ் பார்ப்பனிய கலாச்சாரத்தை எதிர்க்கும் நாம் ஸ்டார் TV. ஸீ TV போன்றவற்றையும் எதிர்த்தே ஆக வேண்டும் பார்ப்பனிய கலாச்சாரத்திற்கு இவை மாற்றுக் கலாச்சாரமாகாது. ஸ்டார் TV முதலாளிய மதிப்பீடுகளைத்தான் மூன்றாம் உலக நாடுகள் மீது திணிக்கிறது இந்த நவீன தொழில் நுட்பங்கள் எப்படி பயன்படுகிறது என்பதை ஒரு உதாரணம் மூலம் விளக்கலாம். சமீபத்திய பங்கு மார்கெட் ஊழலில் அமெரிக்க வங்கியும் சிட்டி வங்கியும் சிக்கியது நாம் அறிந்ததே. சிட்டி வங்கியில் சோதனை நடைபெறுவதற்கு சில மணி நேரங்கள்

கண்டனம்

'சரிநிகர்' (கொழும்பு) இதழ் மீது தாக்குதல்

இலங்கை அரசபயங்கரவாதம், போராளி இயக்கங்களின் பயங்கரவாதம் என இரண்டையும் கண்டித்து மனிதஉரிமைகளுக்காகப் போராடும் அமைப்பு. **'இனங்களுக்கிடையேயான நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம்'** தமிழ் சிங்கள அறிவு ஜீவிகளும் செயல்வீரர்களும் இணைந்து செயல்படும் இவ்வியக்கம் **'சரிநிகர்'** என்கிற தமிழ் இதழையும் **'யுத்திய'** என்கிற சிங்கள பத்திரிகையையும் நடத்தி வருகின்றது. பெண்ணுரிமை, மனித உரிமை, தேசிய இனச்சிக்கல், கலாச்சார அரசியல் ஆகியவை இவ்விதழ்களின் கரிசனங்கள். 'நிறப்பிரிகை' இதழில் வெளியான கட்டுரைகள் 'சரிநிகரில்' மறுபிரசுரம் செய்யப்பட்டு விவாதங்களும் நடத்தப்பட்டுள்ளன. சென்ற அக்டோபர் 17ந் தேதியன்று **'நுவரெலியா'**வில் பத்திரிகைகள் விற்றுக் கெண்டிருந்தபோது 'சரிநிகர்' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த **சிவக்குமார்**, இயக்கச் செயலாளர் பால**கிருஷ்ணன்** சிங்கள இதழாசிரியர் **செனிவரத்தினா** ஆகியோர் குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளனர். கருத்துரிமைக்கெதிரான இத்தாக்குதலை நிறப்பிரிகை வன்மையாகக் கண்டிக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

முன்னால் அந்த ஊழலில் சம்பந்தப்பட்ட எல்லா விவரங்களும் அடங்கிய தரவுப் பதிவுத் தகடு (Floppy disc) களில் அடங்கிய செய்திகளை அழித்து துணைக்கோள் தொடர்பு மூலம் நியூயார்க் தலைமை அலுவலகத்திற்குச் செய்தி அனுப்பப்பட்டது. சிட்டி வங்கி மட்டுந்தான் இந்தியாவில் துணைக்கோள் தொடர்புடைய வங்கி என்பது முக்கியமான விசயம். தற்போது செய்தித் தாள்களில் எந்தச் செய்தி அதிகம் அடிபடுகிறது?

1. சோமாலியாவின் பஞ்சம், பட்டினி.

2. கிளின்டன்Xபுஷ் போட்டி.

திரைப்படம் மற்றும் கதையாடல்கள் மூலமாக ஒடுக்குமுறை ஒரு சாதாரண நிகழ்ச்சியாக மக்கள் மீது திணிக்கப்படுகிறது. (உம்) அண்ணாமலை நகர் பத்மினி கற்பழிப்பு, விளம்பரங்கள், தொலைக்காட்சி மற்றும் திரைப்படம் மூலம் பரப்பப்படும் 'உண்மைகள்' அதிகாரத்திற்கு ஆதரவான சீரான ஒழுங்கமைப்புகளையும், புனைவுகளையும், பிம்பங்களையும் உருவாக்குகின்றன. (உ-ம்) ஒலியும் ஒளியும், ஞாயிறுமாலை திரைப்படம் .... இவற்றில் ஆணுக்கும் பெண்ணுக்குமான பிம்பங்கள், புனைவுகள் ஆகியவற்றுக்கு அதிக விளக்கம் தேவையில்லை இவை யாவும் மக்களை நுகர்வோனாகத்தான் ஆக்குகிறது. '' மக்களுக்கு நல்லதா, கெட்டதா எனப்பார்க்கும் அறிவிருக்கிறது. அதனால்தான் என் படம் நல்லா ஓடுது'' என்கிறார் மணிரத்னம். ஒரு செய்தியை அமுக்குதல் அல்லது நீக்குதல் எப்படிச் செயல்படுகிறது எனப் பார்ப்போம். பங்குச் சந்தை ஊழலில் மத்திய அமைச்சர்களுக்குச் சம்பந்தம் இருக்கும் என பாராளுமன்றத்தில் ஜார்ஜ் பெர்னான்டஸ் சொல்லிய அடுத்த சில தினங்களில் அயோத்தியா விவகாரத்தைப் பூதாகரமாகக் கிளப்பி விஸ்வ இந்து பரிசத் சாமியான்கள் பிரதமரை ஒரு மணி நேரம் தனியாகச் சந்தித்து மகிழ்ச்சியுடன் திரும்பி வந்ததையும் (இதைப் பிரதமரின் ராஜ தந்திரம் எனப் பத்திரிக்கைகள் கூறுவதைக் கவனிக்கவும்) இதற்குப் பின் பங்குச் சந்தை ஊழலின் முக்கியத்துவம் மறைந்ததையும் பார்க்க வேண்டும். எவ்வளவு கோடி ஊழல், எவனுக்குச் சம்பந்தம் என்றுதான் பேசப்படுகிறதே யொழிய பங்குச் சந்தை எதற்கு என்கிற அடிப்படையான நிறுவனத்தை நோக்கிய கேள்வியை யாரும் முன் வைக்கவில்லை. மக்களை விழிப்புணர்வூட்டுவதும் இப்போது சிக்கல்தான். நாம் ஆறு மாதம் பண்ணக்கூடிய வேலையை அவன் டிஷ் ஆண்டெனா மூலம் ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறான். ஆககாலங்காலமாக இதிகாசங்கள் புனைவுகள், பிம்பங்கள் மூலம் மக்களைக் காயடித்துக் கொண்டு இருக்கிறார்கள். இப்போது நானூறு பக்கத்திலிருந்து சூழ்ந்து தாக்கும் குறிகளை உடைக்கும் கட்டாயத்தில் இருக்கிறோம் உடைப்பதுதான் இப்போது முக்கியம் **ரவிசீனிவாஸ் (கோவை)** மேலை நாடுகளின் கலாச்சார ஏற்றுமதி என்பது வெறும் கருத்துத் திணிப்பு மூலமான தாக்குதல் மட்டுமல்ல! பொருளாதார நலன்களும் அதில் அடங்கியுள்ளன. 'காட்' மற்றும் 'உருகுவே' பேச்சு வார்த்தைகள் போன்றவற்றின் மூலம் இன்றைய புதிய பொருளாதாரச் சூழலில் இத்தகைய திணிப்புகள் மேலும் அதிகமாகப் போகின்றன என்கிற விவரங்களைப் புள்ளி விவரங்களோடு இவர் முன் வைத்தார். மாற்று முயற்சிகள் குறித்துச் சொல்கையில் சில நாடுகளில் எடுத்துக்காட்டாய் நமீபியா போன்றவற்றில் வானொலி முதலியவற்றில் மக்கள் பங்கேற்புக்கு வழிகள் செய்யப்பட்டுள்ளதையும் வட இந்தியாவில் சோதனை முயற்சியாகச் சில கிராமங்களில் மக்களிடமே வீடியோ திரைப்படக் கருவிகளைக் கொடுத்து அவர்கள் விருப்பப்படி திரைப்படம் தயாரிக்க அனுமதித்த தன் மூலம் அவர்களை நுகர்வோர்கள் என்கிற மட்டத்திலிருந்து தயாரிப்பாளர்கள் என்கிற மட்டத்திற்கு உயர்த்த முயற்சித்ததையும் சீனிவாஸ் சுட்டிக் காட்டினார். பின்னர் இவ்விவரங்களை அவர் எழுதி அனுப்புவதாய்ச் சொல்லிச் சென்றுள்ளார். அனுப்பினால் எதிர்வினை பகுதியில் பிரசுரிக்கப்படும்.

ரவிக்குமார் (நி. பி.) மாலத்தீவில் 'பிளாட், போராளிகளைப் பயன்படுத்தி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது தொலைக்காட்சி நிலையங்கள் முதலியவற்றைக் கவிழ்ப்பாளர்கள் கைப்பற்றியபோதும் அமெச்சூர் ரேடியோ—ஹாம் மூலம்தான் வெளியுலகிற்குச் செய்தி அனுப்பப்பட்டு கவிழ்ப்பு முயற்சி முறியடிக்கப் பட்டது என அறிகிறோம் அமெச்சூர் ரேடியோ தொடர்புகளின் முக்கியத்துவத்தைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

ராஜன் குறை : ஏகாதிபத்தியக் கலாச்சாரத் தாக்கம் பற்றி ரவி சீனிவாஸ் கூறினார். ஒரு சமூகம் தனக்குரிய மரபைப் பாதுக்காக்கிறது. வெளியிலிருந்து மேற்கொள்ளப்படும் கலாச்சாரப் பரவல் இந்த மரபை உடைத்து ஆதிக்கத்தை ஏற்படுத்துகிறது. என்கிற ரீதியில் இத்தகைய விவாதம் செல்வது வழக்கம். இந்தியாவின் சுய மரபு மிகவும் கொடூரமானது என்பதை எண்ணும் போது இதன் மீது ஒரு தாக்கம் தேவை என்றே தோன்றுகிறது. புதிய கலாச்சாரம், பாரதிய ஜனதா, சுஜாதா போன்றோர் எம்—டி—வி (ஸ்டார் டிவியின் ஓரங்கமான Music டி. வி) வேண்டாம் எனக் கடுமையாய்த் தாக்குகின்றனர். திருச்சி 'பெல்' குடியிருப்பில் ஸ்டார் TVயில் 'ஸ்போர்ட்ஸ்'

படிப்பகம்

www.padippakam.com

முதலியவை போடலாம் ஆனால் எம். டி. வி போடக் கூடாது எனத் தீர்மானித்துள்ளனர். நிலவும் அதிகார அமைப்பிற்கெதிரான ஒரு சில எதிர்ப்புக் குரல்களுக்கு வழி வகுக்கின்றன எனகிற வகையில் எம். டி. வி வேண்டும் என்று தான் நமக்குத் தோன்றுகிறது. 'பாபுலா நியூ கினியா' தீவுகளின் மரபு வழிக்குழுக்கள் மீதான ஏகாதிபத்தியத் தாக்கம் பற்றி டென்னிஸ்-ஓரூர்க்கின் 'SHARK callers of Kontu' என்ற அரசியல் திரைப்படம் பார்த்திருப்பீர்கள் மரபை அப்படியே விடுதல் என்பது இன்றைய சூழலில் சாத்தியமா? நாம் கிராமங்களுக்குச் செல்லுதல் என்பதே லண்டனிலிருந்து ஒரு மூன்றாம் உலக நாட்டிற்குச் செல்வது போலத்தான் இருக்கிறது ஒரு காலனிக்குச் செல்வது போல சினிமா போகாத கிராமங்கள் கூட உள்ளன. அவர்களுக்கு விஜய்காந்த் சினிமா போவதற்கு முன் நாம் நமது சினிமாக்களைக் கொண்டு போக வேண்டுமா ? இல்லை விஜய்காந்த் சினிமாவாவது போயிருக்கிற ஒருசூழலில் போய் அரசியல் வேலை செய்வது எளிதா ?

ரவிக்குமார் லெவி ஸ்ட்ராஸ் இது குறித்துப் பேசுகிறார். குழப்பமான ஒரு கேள்வியோடு முடிக்கிறார். ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் எந்த ஒரு கலாச்சாரமும் தன்னை உயர்வாகத் தான் கருதிக்கொள்கிறது. தகவல் தொடர்பு மூலம் உலகமே ஒரு கிராமமாய்ச் சுருங்கிவிட்ட நிலையில் இது எப்படிச் சாத்தியம் என்பது அவர் எழுப்பும் கேள்வி. ஆப்பிரிக்க விடுதலைப் போராட்டங்களில் ஏகாதிபத்திய கலாச்சார எதிர்ப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. சுய மரபு அங்கே முற்போக்கானதாய் இருக்கிறது, இந்தியாவில் முன் நிறுத்தப்படும் சுய மதிப்பீடுகள் என்பன இங்கேயுள்ள ஆதிக்கக் கலாச்சாரத்தின் மதிப்பீடுகள் தான், இங்கே ஆதிக்கக் கலாச்சாரம், ஏகாதிபத்தியக் கலாச்சாரம் இரண்டையும் எதிர்த்து போராட வேண்டியிருக்கிறது, மார்க்ஸ் கூட பிரிட்டிஷ் ஆட்சி சில வரவேற்கத்தக்க மாற்றங்களைச் செய்யும் என எதிர்பார்த்தார். இங்கே ஆதிக்கக் கலாச்சாரத்திற்கு மாற்றாக இன்னொரு கலாச்சாரமும் இழையோடி வந்திருக்கிறது, பதிவு செய்யப்படாத வரலாற்றில் அதைத் தேட வேண்டும். அடித்தட்டு 'சபால்டர்ன்' மக்களின் போராட்டவரலாற்றிலிருந்து அதைத் தேட வேண்டும். இன்னொன்றும் இங்கு சிந்திக்கத்தக்கது. களப்பிரர் காலத்தை இருண்ட காலம் என்கின்றனர். இது பார்ப்பனிய மேல்சாதிக் கலாச்சாரத்தை உள்வாங்காத மேல்நில மக்களின் கலாச்சாரம் இது வரலாற்றில் நிலைக்க முடியவில்லை. ஆனால் மேல்சாதிக் கலாச்சாரத்தை உள் வாங்கிக் கொண்ட ஹொய்சள ஆட்சி நிலைத்து நிற்க முடிந்திருக்கிறது.

வேல்சாமி : ஒய்சள கலாச்சாரம் பின்னால் வருகிறது. முகலாயர் படையெடுப்புடன் இதை இணைத்துப் பார்க்க வேண்டும் இதை மேல் நிலக் கலாச்சாரம் எனப் பார்ப்பதைக் காட்டிலும் ஒரு வகையான சத்திரியக் கலாச்சாரம் எனப் பார்க்கலாம். முகலாயரை எதிர்த்தவர்கள் இவர்கள். சுதந்திரப் போராட்ட காலத்தில் ஒரு பிரிவு மக்கள் குறிப்பாகத் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நீதிக் கட்சி, அம்பேத்கர் முதலியோர் ஆங்கிலேயரை ஆதரித்து தேசிய வாதிகளை எதிர்க்கின்றனர். உள்நாட்டு ஆதிக்கக் கலாச்சாரத்திற்கு எதிராக ஏகாதிபத்தியத்தைப் பாதுகாவலராய்ப் பார்க்கும் பார்வை ஏற்பட்டு விடுகிறது.

ரவிசீனிவாஸ் : எம். டி. வியைப் பார்க்காமல் இருப்பதாகவே வைத்துக் கொள்வோம். ஆனால் விரைவில் தமிழ் சினிமா மூலம் அது இங்கு வரத்தான் போகிறது, மடோனா' பற்றிய மாற்றுப் பார்வை வெளி நாடுகளில் வருகிறது. ஆதிக்கக் கலாச்சாரம் எம். டி.வியை ஏற்றுக் கொண்டாலும் அதனை எதிர்ப்புப் பார்வைக்கும் பயன்படுத்தாமல் ஆதிக்கத்திற்கே பயன்படுத்தும் தூர்தர்ஷன் மூலம் புகழ்பெற்ற 'தீபீகா' வைப் பயன்படுத்தியது பாரதிய ஜனதாதானே ?

ராஜன்குறை: எம்.டி. வியை ஆதிக்ககலாச்சாரம் எடுத்துக்கொண்டாலும் தொழில் நுட்பத்தைத் தான் எடுத்துக் கொள்ளுமே யொழிய எல்லா வற்றையும் எடுத்துக் கொள்ளாது. மடோனா, சிலுவையை வைத்து Masturbate பண்ணுவதாக ஒரு காட்சி. இதை தமிழ் ஆதிக்கக் கலாச்சாரம் அனுமதிக்குமா? ஆங்கிலப் படத்தில் முத்தம் கொடுக்கலாம். ஆங்கிலப் பத்திரிகையில் நிர்வாணப்படம் போடலாம். தமிழ் சிணிமாவில் தமிழ் பத்திரிகையில் கூடாது என்பதுதானே இங்கே நிலைமை.

ரவிக்குமார் : மாற்றுக் கலாச்சார வடிவத்தில் ஏகாதிபத்திய தொழில் நுட்பங்களை எந்த அளவிற்குப் பயன்படுத்துவது சாத்தியம் என்று யோசிக்க வேண்டியிருக்கிறது, சீன மாணவர் போராட்டத்தில் ஃபேக்ஸ் (Fax) மூலம் செய்திகள் வெளியே அனுப்பப்பட்டது சரிதான். ஆனால் உயர் தொழில் நுட்பம் வளர்ந்து வரும் வேகத்தைப் பார்க்கும்போது அதை எப்படி கைப்பற்ற முடியும் என்கிற கேள்வி எழுகிறது. எம். டி. வி கூட ஒரே மாதிரி விளைவை எல்லாப் பார்வையாளருக்கும் ஏற்படுத்தும் எனச் சொல்ல முடியாது. சிலருக்கு அது வெறும் போர்னோ' வாக செக்ஸாக மட்டுமே இருக்கலாம். நீங்கள் பார்க்கும் விதம் வேறு மாதிரியாக இருக்கலாம் விமர்சனப் பார்வையை உருவாக்குவது பற்றித் தான் நாம் முக்கியத்துவம் கொடுத்து யோசிக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

சாரு நிவேதிதா : எம். டி. வி என்றெல்லாம் ரொம்பவும் 'குறிப்பாக' இல்லாமல் சினிமா, பத்திரிகைகள் எனப் பொதுவாகப் பார்த்தால் நல்லது. தென்னிந்தியாவைப் பொறுத்தமட்டில் இவை இம்மக்களை 20ம் நூற்றாண்டுக்கு நகர்த்தியுள்ளன. தினத்தந்தியை ஒரு ரிக்‌ஷாக்காரர் கூடப் படிக்கிறார். பீகார், மத்தியப்பிரதேசம் போன்ற வட இந்திய மாநிலங்கள் இன்றும் 19ம் நூற்றாண்டிலேயே தேங்கியுள்ளன. நிலப் பிரபுத்துவ மதிப்பீடுகள் தான் கோலோச்சுகின்றன. தென்னிந்தியா முதலாளித்துவ மதிப்பீடுகளை நோக்கி நகர்ந்துள்ளது 'மண்டலை' எதிர்த்து 'திகாய்த்' போராடுகிறார். அப்போது ஒரு பெண் அவரைக் கேள்வி கேட்கிறார். 'திகாய்த்' சொல்கிறார், ''முதலில் புடவை கட்டிக் கொண்டு வா'' பெரியார் இங்குபுடவை வேண்டாமென்றல்லவா சொன்னார், அலகாபாத் போன்ற இடங்களில் 'டவுன் பஸ்' கூடக் கிடையாது. தினத்தந்தி, வெகுசன சினிமா இவை எல்லாம் தமிழ்நாட்டில் நிறைய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

சுந்தர் (மதுரை): வட இந்தியாவிற்கும் தென் இந்தியாவிற்கும் இடையே வேறு வகையான மாற்றங்கள் நிறைய உண்டு. தமிழ்நாட்டில் பெண் எடுப்பது சுற்றியுள்ள 25 கிராமத்திற்குள் தான் வடஇந்தியாவில் திருமணத் தொடர்புகள் ரொம்பப் பரவலாகியுள்ளன. தென் இந்தியாவில் பூப்புச் சடங்குகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் வட இந்தியாவில் கிடையாது. சாருவும் ராஜனும் முன் வைக்கும் கருத்து காலாவதியாகிப் போன ஒன்று. Evolutionism (பரிணாமவாதம்) இது Structural Marxism—(மார்க்சிய அமைப்பியல்) த்தில் பரிணாம வாதத்திற்கு இடமில்லை. 19ம் நூற்றாண்டு பிற்போக்கு, 20ம் நூற்றாண்டு முற்போக்கு எனப் பேசுவது ஏகாதிபத்தியங்களுக்குத்தான் பயன்படும். evolutionism த்தில் இருந்து நாம் வெளிவந்தாக வேண்டும். தினத்தந்திக்கு ஒரு மாற்று இருக்கமுடியும் என்பதே மாவோயிசச் சிந்தனை. இருப்பதெல்லாம் சரி என நான் சொல்ல வரவில்லை. நமக்கு இருக்கிற பண்பாடுகள், கருத்தியல் எல்லாம் பன்முகத் தன்மையானது poly cultural என்பதை கணக்கிலெடுக்க வேண்டும். எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. தமிழ் சினிமா வரலாற்றைக் கூட இந்த நோக்கில்தான் பார்க்க வேண்டும். சுத்த வாதக் கண்ணோட்டத்துடன் எல்லாவற்றையும் தள்ளிவிட முடியாது. 1987க்குப் பின்புதானே இங்கு popular cinema (வெகுஜனசினிமா) பற்றிப் பேசும் வாய்ப்பே ஏற்பட்டுள்ளது. ஒற்றைப் பரிமாணமாகப் பார்ப்பது சரியா?

சாரு: indigenous (சுயமான) கலாச்சாரமா, ஏகாதிபத்தியக் கலாச்சாரமா, என விவாதம் போகிறது. நான் சொல்ல வந்தது அதுவல்ல. பீகாரில் ஒரு ஆதித்தன் கூட இல்லாமல் போனதற்குக் காரணம்? மண்டல் எதிர்ப்பு தமிழ் நாட்டில் மட்டும் இல்லாமல் போனதேன்?

அ. மா : இதற்குத் தினத்தந்தியா காரணம் என்கிறீர்கள்? பார்ப்பனரல்லாதோர் இயக்க மரபு, பெரியாரின் பணி போன்றவற்றைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டாமா?

சிவக்குமார் (எதிர்வு) : கலாச்சார இறக்குமதிக்கு உள்நாட்டு தயாரிப்பாளர்களிடமிருந்து எதிர்ப்பு வரும். வெளி நாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் (NRI) படம் இங்கு வந்தாலும் கூட அது 'சென்சார்' செய்யப்பட்டே வெளியிடப்படும். தங்கள் தொழில் பாதிக்கப்படுவதற்கு இங்கேயுள்ளவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். எம். டி வியை தூர்தர்ஷன் ஒரு 'சேனலில்' உள் வாங்குவது பற்றி பேச்சுக்கள் தொடங்கி விட்டன.

அ.மா : ஆனால் 'காட்'(GATT) உருகுவே சுற்றுப் பேச்சுகள் போன்றவற்றின் மூலம் இந்த நிபந்தனைகள், சென்சார் ஆகியவற்றிற்குத் தடைவரலாமே?

ரவிக் குமார் : கோதாரின் (GODARD) மிகச் சிறந்த படங்கள் பல இங்கேயுள்ள வீடியோ கடைகளில் 'X' முத்திரையோடு— செக்ஸ்படம் என-வினியோகிக்கப்படுகிறது. content லேயே அர்த்தங்கள் மாறிப் போய் விடுகின்றன. எம். டி' வியில் போலிசைக் கொளுத்து எனப் பாடுகிறார்கள். இங்கே அது அனுமதிக்கப்படுமா? அனுமதித்தாலும் அதே விளைவு இங்கே ஏற்படுமா? ஏகாதிபத்தியத் தொழில் நுட்பத்திற்கெதிரான மாற்றுத் தொழில் நுட்பம் என்றெல்லாம் பார்க்காமல் விமர்சனப் பார்வையை உருவாக்குதல் குறித்து நாம் யோசிக்க வேண்டும்.

வாசுதேவன்: விமர்சனப்பார்வையை இன்றைய சூழலில் உருவாக்குவது சாத்தியமில்லை. ஏன் மக்கள் யுத்தக் குழு கரீம் நகரில் அடி வாங்குகிறது?

ராஜன்குறை: அரசாங்கம் சென்சார் செய்கிறது. ஆனால் அரசாங்கத்தின் மிக முக்கியமான அங்கங்கள்-அமைச்சர்கள், அதிகாரவர்க்கங்கள் துணையோடு அவர்கள் முதலீடு செய்துள்ள பல சினிமா அரங்குகளில் சென்சார் பண்ணப்பட்ட பலவற்றைச் சேர்த்துப் போட்டு தினசரி 10 காட்சிகள், ஆறு மாதம் வரை ஓட்டும் நிலையும் இங்குதான் உள்ளது.

குமார்: நடைமுறையில் சாத்தியமாகச்செய்யக் கூடியது என்ன?

படிப்பகம்

www.padippakam.com

வாசுதேவன்: எல்லாவற்றையும் உடைப்பது தான்.

அ.மா: உடைப்பதற்குக்கூட முதலில் மக்கள் அரசியல்மயமாக வேண்டியது அவசியமல்லவா? மக்கள் விழிப்புணர்வடைவதே சாத்தியமில்லை என்றல்லவா நீங்கள் சொல்கிறீர்கள்?

ராஜன்குறை: Closed door policy (கதவை மூடிக்கொள்ளும் கொள்கை) சாத்தியமில்லை என்பதைத்தான் சொல்ல வந்தேன்.

ரவிக்குமார்: Restrict பண்ணிவிட முடியும் தடுத்துவிட முடியும் என்கிற நம்பிக்கை உள்ளவர்கள் இங்கு அதிகமில்லை. எம்.டி.வி. போன்றவை ஒருவிதமாக மட்டுமே-முற்போக்காக மட்டுமே-செயல்படுகிறது எனச் சொல்ல முடியுமா என்பதுதான் கேள்வி. நாட்டுப்புற அம்சங்கள் 'செக்சாக' பயன்படுத்தப்படுவது இல்லையா? ஒன்றைமட்டும் தொடர்பறுத்துவிட முடியாது. நடைமுறையில் de-link பண்ணுவது சாத்தியமேயில்லை. உணர்வு பூர்வமாய் வேண்டுமானால் அவரவர்கள் தங்களை de-link பண்ணிக் கொள்ளலாம். இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். தொழில் நுட்பம் இல்லாமலேயே வாய்மொழி மூலமாகவே தேவையான போது மக்கள் மத்தியில் செய்தி பரவுகிறதே. அரசியல் தலைவர்கள் கைதாகும்போது எவ்வளவு விரைவாகச் செய்திகள் பரவி விடுகின்றன!

கண்ணன் (சென்னை) இந்தகைய வாய்மொழிப் பரவல்களில் கதையாடல்களின் பங்கு முக்கியமானது. காமராஜருக்கு 'ஆங்கிலம்' தெரியாது சிவாஜி 'கஞ்சன்' என்றெல்லாம் 'செய்தி' பரப்புவதற்கு தமிழ்நாட்டில் எத்தனை கதைகள்!

சாரு:- திராவிட இயக்கம் ரொம்ப dramatic (நாடகத் தன்மையோடு) ஆகச் செயல்பட்டது. அண்ணாவின் பேச்சு ஒருperfoi mance(நிகழ்த்துவடிவம்) தான். விழிப்புணர்வடைதல் என்பது எழுத்து மூலம் சாத்தியமில்லை. எழுத்து என்பதே ஒருmale oriented (ஆண்மையமான) செயல்பாடுதான்-male orgasmத்தின் (ஆண் உணர்வு உச்சம்) வடிவிலானதுதான் எழுத்து. ஒரு தொடக்கம், உச்சம், வீழ்ச்சி என்று. பெண் orgasm பன்மைத் தன்மையானது. (நாடகத்தில் தான்) Theatre ல் நிறைய சாத்தியங்கள் உண்டு. அ.மா எழுதியுள்ளாரே Two way channel— இருவழி—உரையாடல் இதெல்லாம் Theatreல் தான் சாத்தியம். பெரியாரின் பேச்சு எல்லாமே நாடகந்தான். எங்களின் இரண்டாம் ஆட்டம் நாடகத்தை எல்லாரும் திட்டினார்கள். ஆனால் 'தினமலர்' விவகாரத்தில் நிறப்பிரிகைக்குப் பரிந்து கொண்டு எல்லோரும் வந்தனர். 'வெளி' இதழை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு பக்கம் நி. பிக்கு ஆதரவு. இன்னொரு பக்கம் இரண்டாம் ஆட்டம் நாடகத்திற்கு எதிர்ப்பு. 'அறிவு'—Knowledge என்கிற வகையில் புதியதைச் சொன்னால் ஆதரவு. அதையே கலாச்சார தளத்தில் சொன்னால் எதிர்ப்பு. 'அகஸ்டோ போவாலின் Invisible Theatre (கண்ணுக்குப் புலனாகாத அரங்கு) நமது சூழலுக்கு முழுமையாகப் பயன்படும். ஒரு சில உதாரணங்கள்: பீச்சில் ஒருவன் குழிதோண்டிக்கொண்டிருக்கிறான். கொஞ்ச நேரத்தில் பீச்சுக்கு வந்திருந்தவர்களின் கவனம் அவன் பக்கம் திரும்புகிறது—எதற்காகக் குழி—என்கிறார்கள். அணுமின் நிலையம் கட்டுகிறார்களில்லையா. அஞ்சு லட்சம் சவக் குழிகள் தேவைப்படுகின்றன; வாங்க நீங்களும் ஒரு குழி தோண்டுங்கள்-என்கிறான். அவ்வளவு தான். இன்னொரு நாடகம், ஒரு சூப்பர் மார்கெட். முட்டை, ரொட்டி போன்ற உணவுப் பொருட்களை ஒருவன் எடுத்து வருகிறான். பில் கொடுக்கிறார்கள்—காசு இல்லிங்க. ஆனா பசிக்குது. இதுக்குள்ள வேலையை நான் செய்திடறேன்—என்கிறான். கல்லாவில் இருந்தவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. பிரச்சினையாகிறது. மக்கள் கூடுகிறார்கள். ஒருவர் சொல்கிறார் நாம் செய்ததை இவர் தலைகீழாய்ச் செய்கிறார் அவ்வளவுதான். வேலைக்குப் போய் விட்டு வந்து நாம் உணவு வாங்குகிறோம். இவர் உணவை வாங்கிக்கொண்டு வேலை செய்கிறேன் என்கிறார்—சுமார் இரண்டு மணி நேரம் பார்வையாளர்கள் எல்லோரும் பாத்திரமாகிப் போகிறார்கள். போலிஸ் வருகிறது. அங்கும் நாடகம் தொடர்கிறது. தூரத்தில் ஒரு வீடியோ காமிரா எல்லாவற்றையும் படம் பிடிக்கிறது. எடிட் பண்ணினால் அற்புதமாய் ஒரு படம். விழிப்புணர்வு பெறுவதற்கு எழுத்தை விட இது சக்தி வாய்ந்த சாதனமாக உள்ளது.

அ. மா: இதெல்லாம் எங்கே நடைபெறுகின்றன? இங்கு இவை சாத்தியமா?

சாரு: இங்கே கஷ்டம்தான். போவால் சொல்வதெல்லாம், செய்ததெல்லாம் மேலை நாடுகளில் தான்.

பூர்ணம்: (லயோலா கல்லூரி) இந்தியா மாதிரி நாடுகளில் வாய்மொழி மூலமான தாக்கம் அதிகம்தான். கல்லூரி மாணவர்கள் 52 பேர் கொண்ட குழு ஒன்றின் மூலம் சென்னையில் குடிசை மக்கள் மத்தியில் சில ஆய்வுகளைச் செய்தோம். திரைப்படத்தின் தாக்கம் அதிகம் என்பது தெரிந்தது. ரஜினி மாதிரி சிவப்புசட்டை மஞ்சள் பாண்ட், வெள்ளை பாண்ட் எல்லாம் போடுகிறார்கள். இவர்களில் பலர் ரஜினி படம் பார்த்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சக்கிலியத் தம்பதியர் இருவர். எம். ஜி. ஆருக்குத்தான் ஓட்டுப் போட்டோம் என்றார்கள் அப்புறம் ஜெயலலிதாவுக்கு. ஆனால் இவர்கள்

படிப்பகம்

www.padippakam.com

நடித்த படம் எதையும் இவர்கள் பார்க்கவில்லை படம் பார்க்காமலேயே இத் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். வாய்மொழியாகத் தான் தாக்கம் பரவுகிறது. எம். டி. வியெல்லாம் நகர்ப்புறத்தில் தான் தாக்கம் ஏற்படுத்த முடியும் அங்கும் 30 சத சேரி மக்களுக்கும் இதற்கும் தொடர்பில்லை. கல்வி, மதம் போன்ற சமூக நிறுவனங்கள் நாட்டுப்புறப்பாடல்கள், கதைகள் ஆகியவற்றை Status Quo வைக் காப்பாற்றுவதற்குப் பயன்படுத்துகின்றன. இவை இருக்கிற அமைப்புகளை இயல்பானதாகக் காட்டுகின்றன, ஒட்டு மொத்தத்தில் ஆதிக்கச் சக்திகள் தொடர்புச்சாதனங்கள்மூலம் தங்களின் அர்த்தங்களைப் பரப்புகின்றனர் இந்தப் பின்னணியில் பொதுப்படையாகப் பார்க்கும்போது மூன்று அணுகல் முறைகள் தேவை எனப்படுகிறது. அவை: முதலில்: Folk மற்றும் நாட்டுப்புறத் தொடர்புச் சாதனங்கள் உட்பட சகலவிதமான பொதுத்தொடர்புச் சாதனங்கள் குறித்த விமர்சனக் கண்ணோட்டத்தை உருவாக்குதல். வடிவம், உள்ளடக்கம் இரண்டையும் விமர்சனமாய்ப் பார்க்க வைக்க வேண்டும். எடுத்துக்காட்டாக High Angle Shot என்றால் அதற்கொரு அர்த்தம் இருக்கிறது. அர்த்தம் எப்படி உற்பத்தியாகிறது என்பதைச் சொல்ல வேண்டும். சாதிப் பெயரில் படங்கள் வருவதையெல்லாம் விமர்சனமாய்ப் பார்க்க வைக்க வேண்டும். இரண்டு தலித் பையன்கள்—நான் தேவன்டா, நான் கவுண்டர்டா — எனச் சண்டை போடுவதைப் பார்த்தேன். கும்பகோணம் அருகில் 'வாசகப்பா' என்றொரு கிறிஸ்தவதியேட்டர், இதில் பறையன்-பறைச்சி காட்சி என்று ஒன்று. தாழ்த்தப்பட்டவர்கள் இதை அதிகம் விரும்பிப் பார்க்கின்றனர். இந்த காட்சியில் பறையர்கள் மிகவும் இழிவு செய்யப்படுவார்கள்—ஆண்டை வீட்டு மாடு செத்துப் போச்சு, புழு புழுத்துக் கிடக்கு. எடுத்துப் போய் சாப்பிடலாம்—என்றொரு பறையர் சொல்வதாகவெல்லாம் காட்சி வரும். கர்னாடகத்தில் நடைபெறும் யக்ஷ கானத்தில் வில்லன் வேடங்களில் தலித் மக்கள்தான் கட்டாயம் நடிக்க வேண்டும். யூதாஸ், சாத்தான் எல்லாம் தலித்கள்தான். இதற்கிணையாக கிராமப் புறங்களில் பறையனையும் பனைமர நிழலையும் நம்பக்கூடாது— என்றெல்லாம் பழமொழிகள் உள்ளன. இவற்றை எதிர்கொள்ளும் விமர்சனப் பார்வை வளர்க்கப்பட வேண்டும். இரண்டாவதாக: Media Structure—யார் உரிமையாளர், யார் நலனுக்காக அது பயன் படுத்தப்படுகிறது, எப்படி வினியோகிக்கப் படுகிறது என்பதெல்லாம் விளக்கப்பட வேண்டும். இருக்கிற தொடர்புச் சாதன அமைப்பில் குறைந்த பட்சம் எந்த அளவிற்கு சனநாயகச் சாத்தியங்கள் உள்ளனவோ அவ்வளவும் முழுமையாகப் பயன்படுத்தப்படவேண்டும் இறுதியாக: மாற்றுத் தொடர்புச் சாதனங்கள் தொழில்நுட்பங்கள் மட்டுமல்ல மாற்றுப்பார்வையாளர்களும் உருவாக்கப்படவேண்டும். சின்னச் சாதனங்களையும் கூட நாம் வலிமையாய் பயன்படுத்தலாம். 'கோர்ப்பசேவை' எதிர்த்துHardliners புரட்சி செய்தபோது 'எல்ட்சினிடம்' இருந்தது ஒரு 'சைக்ளோஸ்டைல்' எந்திரம் மட்டுந்தான். அதை வைத்துக்கொண்டுதான் அந்த எதிர்புரட்சியை அவர் தகர்த்தார். சின்னச்சின்ன பத்திரிகைகள் தெருக்கூத்துஎல்லாம் பயன்படும்.

ரவிக்குமார்: தங்களைத் தாங்களே கேவலப்படுத்திப் பார்ப்பது என்பது பாலியலுடன் (Sexuality) இணைந்தது. கூத்து முழுவதும் அலுப்பூட்டுகிறது (Bore). நடுவில் நாடகம் பற்றிய ஒரு விமர்சனமாகவும் இது செயல்படுகிறது. திரைப்படத்திலும் இதைப் பார்க்கலாம், ஆடை குறைந்த பெண்களின் நடனங்களாக.

அ. மா: Sexuality என்றாலும் கூட இதிலும் குறிப்பாக பள்ளு-குறவன் குறத்தி போன்ற நாடகங்களில் தாழ்த்தப்பட்ட பெண்கள் கூடுதலாய் இழிவு செய்யப்படுவதில்லையா?

ரவி: ஆம். டானியல் கூட தனது கதைகளில் இதற்கு நேரெதிராக உயர்சாதிப் பெண்களை இழிவாகச் சித்திரிப்பது என்கிற ஒரு Strategyயை எடுப்பார்.

கண்ணன்: தினமலர் இப்படிச் செய்வதைப் பார்க்கலாம். லஷ்மி போன்ற நடிகையை ஒரு மாதிரியாகவும் மற்ற நடிகைகளை இழிவாகவும் எழுதுவதைப் பார்க்கலாம்.

ராஜன் குறை: வாய்மொழி செய்திப் பரவலும் கூட மற்ற தொடர்புச் சாதனங்களோடு இணைந்து அவற்றின் நீட்சியாகச் செயல்படுகிறது என்பதைக் கவனிக்கவேண்டும். பூர்ணம் சொல்வதைப் பார்த்தால் அதிலும் சினிமாவின் நீட்சி என்பது பிறவற்றின் நீட்சியைவிட அதிகமானதாக இருக்குமா எனத்தோன்றுகிறது. ஒப்பீட்டளவில் print Media வில் வாய்மொழித் தாக்கம் குறைவா எனப்பரிசீலிக்க வேண்டும்.

அலெக்ஸ் (மாணவர்) முற்போக்கு மாணவர்கள் வீதி நாடகங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர் ராமனாதபுரத்திற்கருகில் ஒரு கிராமம். சனத்தொகை : 300. ஒரே ஒரு டி. வி. தான் அந்தக் கிராமத்தில். தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனி டீகிளாஸ்; தனி கிணறு. அங்கே போய் symbolic ஆக சிறு நாடகங்கள் நடத்தினோம். இரண்டே நாட்களில் அங்கே ஒரு அம்பேத்கர் இயக்கம் தொடங்கியது. பள்ளிப் பாடப் புத்தகங்கள் சாதி, இன மத வெறுப்பை ஊட்டக் கூடியதாக உள்ளதையும் நாம் எதிர்க்க வேண்டும்.

அரங்க சுப்பையா: (கரந்தை): தெருக்கூத்து பற்றி சொல்லப்பட்டது. வெட்டியான் வெட்டிச்சிமயானகாண்டத்தில் வெட்டியானிடம்

படிப்பகம்

www.padippakam.com

உரிய தொகை கொடுக்காமல் யாரும் பிணம் எரிக்க முடியாது. இதன் மூலம் கீழே உள்ளவர்கள் ஒரு அதிகாரத்தை உணர்கிறார்கள். தெருக்கூத்து போன்றவை கோயில் கலாச்சார நிகழ்ச்சிகளுடன் இணைந்து நிற்கிறது. தனது வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் கிடைப்பதாக அடித்தட்டு மக்கள் உணர்கிறார்கள். தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சில ஆண்டுகள் முன் 'சிபி'ச் சக்கரவர்த்தி பற்றி ஒரு நாடகம் போட்டார்கள். அதில் ''பறையா, கன்னுகுட்டி செத்துப்போச்சு, தூக்கிப்போ'' என்றொரு வசனம். இது பறையர்களை இழிவு செய்வதில்லையா? Mass communication ஐப் பொருத்த மட்டில் சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பயன்படும் படியாக அதனை எவ்வாறு செய்வது எனப் பார்க்க வேண்டும்.

வாசுதேவன் : நாம் பேசுகிற சொல்லாடல்கள் எல்லாமே இப்படித்தான். அரசன் அன்று கொல்லும்; தெய்வம் நின்று கொல்லும் உப்பிட்டவரை உள்ளளவும் நினை—இப்படி. எல்லாவற்றையும் உடைக்க வேண்டும்.

ரமணன் : பெண்கள் இருப்பதால் சில விசயங்களை இங்கே சொல்ல முடியவில்லை. சரி எப்போது இந்த அதிகார அமைப்பை உடைக்கப் போகிறீர்கள்?

பூர்ணம் : தாழ்த்தப்பட்டவர்களைக் கேலி செய்யும் கதைகள் நிறைய மேல்மாசி, கீழ்மாசி கதை என்றொன்று. இரண்டு தாழ்த்தப்பட்டவர்கள் மேல்சாதிக்காரரிடம் குத்தகை எடுக்கிறார்கள்-மேலே விளைவது வேண்டுமா, கீழே விளைவது—வேண்டுமா என்கிறார் நிலச் சொந்தக்காரர்— கீழே விளைவது—என்கிறார் நண்பர்களில் ஒருவர். சொந்தக்காரர் நெல் விதைக்கிறார். தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. நண்பர்களுக்குள் சண்டை. இரண்டாம் முறை நிலச் சொந்தக்காரர் அதே கேள்வியை கேட்கும்போது இரண்டாம் நண்பர் 'புத்திசாலித்தனமாய்' மேலே விளைவதைத் தரவேண்டும்-என்கிறார். இப்போது மேல் சாதிக்காரர் கடலை போடுகிறார். மறுபடியும் தாழ்த்தப்பட்டவர்கள் ஏமாறுகின்றனர். இப்படி ஒரு கதை இதனை நாங்கள் கொஞ்சம் மாற்றி கொஞ்சம் Mythical dimension ஐ எல்லாம் புகுத்திப் பரப்பினோம். அதன்படி மீண்டும் நண்பர்கள் சண்டை போடுகின்றனர். இறுதியில் தெளிவு வந்து நிலச் சொந்தக் காரரை அடித்துக் கொல்கிறார்கள். இந்தக் கதை படு வேகமாகக் கிராமங்களில் பரவியது. இப்படி எதிர் கதைகளை Counter Stories உருவாக்கிப் பரப்பலாம்.

விஜி : பெண்களின் விருப்பத்தை மீறிய அவர்கள் மீது தொடர்புச் சாதனங்கள் மூலம் பிம்பங்கள் திணிக்கப்படுகின்றன. இங்கே கூட ஒரு நண்பர் சொன்னார். பெண்கள் இருப்பதால் எதையோ சொல்லவில்லை என்று; எங்களுக்கு இது பிடிக்காது அல்லது நாங்கள் இருந்தால் இதைச் சொல்லக் கூடாது என நாங்கள் யாராவது சொன்னோமா? ஆணாதிக்க மதிப்பீடுகள் தானே இப்படி உங்களைச் சொல்ல வைக்கிறது. பெண்கள் உண்மையில் அப்படி இல்லை. கி. ரா எழுதிய பாலியல் கதைகளின் தொகுப்பை கல்லூரிக்கு எடுத்துச் சென்றேன். என்னுடன் பணிபுரியும், பெரும்பாலான ஆசிரியைகள் அக்கதைகளையெல்லாம் மிகவும் ரசித்துப் படித்து விவாதித்தார்கள், ஒரு ஆசிரியை மட்டும் சொன்னார்-இவையெல்லாம் கீழ் சாதிக்காரர்களின் மத்தியில் பேசப்படுவது அதற்கு இன்னொருவர் நறுக்கென்று பதில் சொன்னார்—எங்கள்ஊர்ப்பெண்கள் மத்தியிலும் இவைகளெல்லாம் பேசப்படுவதுண்டு

அலெக்ஸ்: ஆபாசச் சுவரொட்டிகளை எதிர்த்துப் போஸ்டர் ஒட்ட வேண்டும்.

ராஜன் குறை : பலவகையானச் செயல்பாடுகள் வேண்டுமென்பதற்காக, ஆபாசச் சுவரொட்டிக்கு தார்பூசுவது போன்றவற்றையெல்லாம் பேச முடியாது. இச் செயல்பாடுகள் மிக விரயமானவை எந்த அடிப்படையில் நாம் குறுக்கீடு செய்ய முடியும் என்பதற்கான புரிதல் மிக நுணுக்கமாக இருக்கவேண்டும் பிரச்சினைகள் மிகச் சிக்கலானவை உதாரணமாக ஜுனியர் விகடனில் ஒரு REPORT குளித்தலை பக்கமுள்ள கிராமம் ஒன்றில் திருவிழாவில் நிர்வாண நடனம், ரிக்கார்ட் Dance போல வழக்கமாக நடைபெறுகிறது. அதை அங்குள்ள குடும்பங்கள் அனைத்தும் ஆண், பெண் அனைவரும் சேர்ந்து பார்க்கிறார்கள். இதைக் கண்டு வியப்படைந்த நிருபர் அந்த கிராமப் பெண்களை இதை எப்படி அனுமதிக்கிறீர்கள் என்று கேட்டபோது எங்கள் வாழ்க்கை முழுமையும் கஷ்டங்கள். எங்கள் ஆண்கள் மிகக் கடுமையாக உழைக்கிறார்கள். இதையாவது ரசித்துவிட்டுப் போகிறோம் என்கிறார்கள். நிருபர் அதிர்ச்சி அடைகிறார் போலீஸ் கலெக்டர் ஆகியோரிடம் புகார் செய்து அங்கு அத்தகைய நடனம் தடை செய்யப்படுகிறது. எதில் மதிப்பீட்டு அடிப்படையில் கிராமத்து நடைமுறையில் ஜுனியர் விகடன் குறுக்கிடுகிறது என்பது கேள்வி. அதேபோல புனைவுகளில் பிரதிநிதித்துவம் Representation என்பதும் மிகவும் சிக்கலான பிரச்சினை உள்ளபடியே வன்முறையைப் பதிப்பது என்பது தேவையானதும் ஆனால் எச்சரிக்கையுடன் செய்யப்பட வேண்டியது ஆகும் சாதியின் பெயரைச் சொன்னாலே இழிவு என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பது அபத்தம்

சுந்தர் : கீழ் நிலையில் உள்ளவர்கள் கேலி செய்யப்பட்ட போதும் இறுதியில் அவர்கள்

படிப்பகம்

www.padippakam.com

மேலேயுள்ளவர்களை out wit (தோற்கடிப்பது) செய்வது போல முடிகிற பிரதிகளும் உண்டு.

பூர்ணம்: பிரதியல் செயல்பாடுகளில் definition of Situation கவனிக்கப்படவேண்டும். நீண்ட நாசி, மெல்லிய உதடு, சிவப்பு இவைதான் அழகு என்பது போன்ற வரையறைகள் உருவாக்கப்படுவதை கவனிக்க வேண்டும்.

வாசு: 'காமிக்ஸ்' புத்தகங்களிலும் இப்படித் தான்.

கண்ணன்: எம். ஜி. ஆர். படங்களிலும் இதைப்பார்க்கலாம்.

ராஜன்குறை: இன்று காலை TV நிகழ்ச்சியில்- சங்கர்லால் தொடரில் கொள்ளைக்கூட்டத்திற்கு 'Black Panthers' என்று பெயர். அது ஒரு தலித் இயக்கத்தின் பெயர்என்று நினைக்கிறேன்

அலெக்ஸ்.வீ (மதுரை): வீட்டு வேலை செய்யும் பெண்கள் திராவிடச் சாயலுடையவர்களாய் காட்டப்படுவதையும் கவனிக்கலாம்.

வாசுதேவன்: டிக்ஜாம் துணி விளம்பரத்தில்- நான் பெண்களை விரும்புகிறேன், அவர்களிடம் பெண்மை இருக்கும்வரை-என்கிறான் ஒரு ஆண்

வேல்சாமி; நீங்கள் சொல்வதெல்லாம் ஏதோ இப்போது மட்டும் உருவானவை அல்ல. வரலாறு பூராவும் இப்படித்தான் நடந்து வந்து இருக்கிறது. தலைவன்/தலைவி, மற்ற சாதாரண ஆட்கள் இவர்கள் விவரிக்கப்படும் விதம், பேசுகிற மொழி எல்லாம் வேறு வேறுதான். இந்தத் தமிழ்க்கலாச்சாரத்தின் தொடர்ச்சிதான் நாம் இப்போது பேசிக்கொண்டிருப்பது. 92 வரை கலாச்சாரம் என்றால் பூர்ஷ்வாக்கள், மார்க்சிஸ்ட்டுகள் எல்லாருமே ஒன்றாய்த்தான் நிற்கிறார்கள். மாற்றுச் சிந்தனைகளுக்கான நியாயங்களையே நாம் முதலில் பதிய வைக்க வேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட உலக மெங்கிலும் ஆளும் வர்க்கக் கலாச்சாரங்கள் அப்படித்தான் உள்ளன. சீனா, ஜப்பான் போன்ற கிழக்கு நாடுகள் சற்று வித்தியாசமாய் உள்ளது. ஏன் என்று சிந்திக்க வேண்டும். கிறிஸ்தவ மதம் இங்கே வரும்போது மட்டும் சாதிக்குள் மாட்டி விடுகிறது. ஆனால் புத்த மதம் வெளிநாட்டுக்குப் போகும்போது இந்திய கலாச்சாரம் அங்கே போய்விடவில்லை. இது ஏன்? இந்தியாவில் Counter Culture ஏன் வரவில்லை? நம்முடைய சிந்தனைகள் ஏன் கிழக்கு நாடுகள் பக்கம் போகவில்லை? பாரம் பரியங்கள் என்றால் கிரேக்க-அய்ரோப்பியப் பாரம்பரியம்தானா?

கண்ணன்: தென் கொரியா?

சாரு: சாதி கிழக்கு நாடுகள் பலவற்றில் இருக்கத்தான் செய்கிறது.

ரவிக்குமார்: நமது சினிமாக்களில் சில மாற்றங்கள் ஏற்பட்டுத்தான் இருக்கின்றன Hierarchy -படிநிலையாக்கம்-உருவாக்கப் படுவதில் சில மாற்றங்களை கவனிக்கலாம். வில்லன் இயல்பான ஆளாக மாறியுள்ளான். கதாநாயகன் துல்லியமான ஆளாக இருப்பது இல்லை AntiHeroக்கள் படைக்கப்படுகின்றனர் ஆனால் இப்போது வேறொரு படிநிலையாக்கம் உருவாக்கப்படுகிறது. இது அறிவின் அடிப்படையிலான படிநிலையாக்கம். ஹீரோ தனது புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தி வெல்கிறான்.

(ஒரு மணி நேர உணவு இடைவேளைக்குப் பின் மாலை 3-30 மணிக்கு மீண்டும் விவாதம் தொடர்கிறது.)

அ.மா: காலையில் நடைபெற்ற விவாதத்தின் பிற்பகுதி Textual analysis ஆக மாறிவிட்டது குறிப்பான கேள்விகளுக்கு சாத்தியமான ஒருமித்த கருத்துக்களை உருவாக்குவதில் நாம் எஞ்சிய நேரத்தைச் செலவிடவேண்டும். மாறி வரும் உலகச் சூழலில் தகவல் தொடர்பில் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கம் குறித்து காலை விவாதம் கவனத்தை ஈர்த்தது. MTV போன்ற வற்றை முழுமையான கலாச்சார சீரழிவின் அடையாளம் என ஒதுக்கும் ஒழுக்க வாதம் இங்கு கிட்டத்தட்ட எல்லோராலும் மறுக்கப் பட்டது. அதே போல தினத்தந்தி, வணிக சினிமா போன்றவை தமிழனின் விமர்சனப் பார்வையை வளர்க்கப் பயன்பட்டது என்கிற கருத்தை எல்லோரும் ஏற்காவிட்டாலும் அவற்றை வெறுமனே கலாச்சாரச் சீரழிவு எனப் புறந்தள்ளுவதையும் காலை விவாதம் மறுத்து உள்ளது. நமது பாரம்பரியக் கலாச்சாரம் முற்றிலும் கொடூரமானது என்பதால் சனாதன மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்கும் MTV போன்றவற்றை நாம் வரவேற்க வேண்டும் என்கிற கருத்து காலையில் அதிகம் விவாதிக் கப்பட்டது. நமது பாரம்பரியம் என்றால் இந்து பார்ப்பனிய பாரம்பரியம்தான் என Mono culture ஆக, (ஒற்றைப் பரிமாணமாக) ஆளும் வர்க்கம் இங்கே முன் வைக்கிறது. மாறாக நமது கலாச்சாரம் பன்முகத்தன்மை கொண்டது Polyculture—முற்றிலும் வேறுபட்ட எண் ணற்ற கலாச்சாரங்கள் இங்கே அருகருகே இருந்து வந்துள்ளன. பார்ப்பன மேட்டுக்குடி கலாச்சாரத்திற்கு முற்றிலும் எதிரான அடித் தட்டு'சபால்டர்ன்'(SUBALTERN) கலாச்சாரங் களில் விவசாய மக்களின், பழங்குடிகளின், தலித்களின் பண்பாடுகளிலிருந்தும்,போராட்டப் பாரம்பரியங்களிலிருந்தும் நம்மால் இங்கு ஒரு மாற்றுக் கலாச்சாரத்திற்கான வேர்களைத் தேட முடியும். இதனைப் புறக்கணித்துவிட்டு

படிப்பகம்

www.padippakam.com

நமது பாரம்பரியம் என்றாலே கொடூரமான பார்ப்பனப் பாரம்பாரியம்தான் எனச் சொல்லுவது நம்மையறியாமலேயே நாமும் monoculture வாதத்திற்குப் பலியாவதிலேயே முடியும் தவிரவும் பாரம்பரிய மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்குவதாலேயே MTV போன்றவற்றை முழுமையாக முற்போக்கு அம்சங்கள் கொண்டதாகவும் பார்த்துவிட முடியாது. MTV பாடல்கள் நூலுருவில் வந்துள்ளன என (உணவு இடைவேளையில்) குறிப்பிட்டார் கண்ணன். வளைகுடாப் போரின் போது ஈராக்கை ஆக்ரமிப்பதை நியாயப்படுத்தி அமெரிக்க விரர்களை உற்சாக மூட்டும் பாடல்களும் அவற்றில் அடங்கியுள்ளன என்பதையெல்லாம் நாம் மாற்றுக் கலாச்சாரம் பற்றிப் பேசும்போது கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். காலை விவாவதம் குறித்த இந்தப் பின்னணியோடு இனி குறிப்பான கேள்விகளுக்குள் செல்வோம். வெகுசனத் தொடர்புச் சாதனங்களில் சினிமா மக்கள் மீது ஏற்படுத்தும் தாக்கம் அதிகம் என்கிற கருத்து காலையில் வந்தது இதனை ஏற்றுக்கொள்கிறோமோ? TV முதலியவை சினிமாவின் நீட்சியாக, துணையாகச் செயல்படுகிறது எனலாமா ?

மதிவாணன் (கரந்தை) : TV யின் தாக்கமும் பெருகி வருகிறது. சோபனா ரவி புடவை என்றெல்லாம் வரத் தொடங்கியிருக்கிறது.

சாரு : திராவிட இயக்கம் முழுமையாக மேடைப் பேச்சைத்தான் நம்பியிருந்தது. லத்தீன் அமெரிக்க நாட்டுப் போராட்டங்களிலும் கிழக்கு அய்ரோப்பிய எழுச்சிகளிலும் நாடகங்கள் முக்கிய பங்கு வகித்துள்ளன.

மதிவாணன்: சினிமாவிலும் மேடைப் பேச்சுத் தான்.........

பூர்ணம் : இந்தியக் கலாச்சாரம் ஒரு வகையில் narative culture. காலம்பற்றிய புரிதல் oriental mindக்கு—கீழைத்தேய அறிவுக்கு கிடையாது மேலைத் தேயச் சிந்தனை தர்க்க பூர்வமானது. நம்முடையது mosaic Thinking கதையாடலுக்கான கவர்ச்சி இங்கே அதிகம். ஒலி-ஒளி ஊடகங்கள் இங்கே அதிகம் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அ.மா oriental x Westeren என Mutually Exclusive ஆன ஒன்றையொன்று முற்றிலுமாய் விலக்குகிற எதிர்வு ஒன்றைக் கட்டமைத்ததே ஒரு ஏகாதிபத்திய அறிவுத் துறைச் செயல்பாடல்லவா ?

ரவிக்குமார் : இந்திய உளவியலில் தாக்கம் செயல்படாமல் செய்ததில் பார்ப்பனியத்தின் பங்கு முக்கியமானது. வாய்மொழிக் கலாச்சாரம் இங்கே ஆழமாய் வேரூன்றி இருப்பதை பாசிசக் கூறுக்கான காரணமாகவும் சொல்லலாம். பேச்சுக்கு இட்லர் அதிக முக்கியத்துவம் அளித்தான். விரலை அசைப்பது முதல் கூட்டம் ஏற்பாடு செய்வது வரை மிகவும் திட்டமிட்ட செயல்பாடுகள் அவனுடையவை.

சாரு : ஒரு Film unit கூட அவன் வைத்திருந்தான்.

சிவக்குமார் : மேலைச் சமூகத்தில் வாய்மொழி, அச்சு, மின்சாரம், எலக்ட்ரானியல் எனத் தொழில் நுட்பத்தில்ஒரு தொடர்ச்சி இருக்கிறது நமக்கு அச்சு முதல் எலக்ட்ரானியல் வரை ஒரே சமயத்தில் புகுத்தப்படுகிறது.

சுந்தர் : மேலைச் சமூகத்தில் சினிமாவுக்கு முன் ஓவியம், புகைபடம் ஆகியவற்றின் மூலம் உலகத்தைப் பார்ப்பது பற்றிய பார்வை ஒன்று இயல்பாக வளர்ந்தது. சினிமா பின் அப்பார்வையை சுவீகரித்துக் கொண்டது. இவ்வாறு உருவான சினிமா இங்கே வந்த போது நமக்கே உரித்தான முறையில் அது இங்கே உள்வாங்கப்பட்டது. இந்தியா சினிமா எப்படி, எங்கே விலகிப்போயிருக்கிறது என்கிற விசயம் முக்கியமானது. இது பார்க்கப்பட வேண்டும்.

பூர்ணம் : எத்தகைய பாதிப்பை இது ஏற்படுத்துகிறது என்கிற கேள்வியோடு இதை இணைத்துப் பார்க்க வேண்டும்.

வேல்சாமி : வளைகுடாப் போரில் வெற்றியைக் குவித்த 'புஷ்' நம் நாடாக இருந்திருந்தால் இன்னும் பத்து வருஷத்திற்குத் தோற்றிருக்க மாட்டான். அங்கேயும் Media இருக்கத் தானே செய்கிறது ?

ரவி சீனிவாஸ்: இந்த அடிப்படையில் அமெரிக்க சனநாயகம் உயர்வெனச்சொல்லிவிடமுடியாது?

ராஜன் குறை: Print Media வின் பரப்பு அதிகமாகி வருவதையும் கவனிக்க வேண்டும். ஏராளமான பத்திரிகைகள் வரத் தொடங்கியுள்ளன. பெரு நகரப் பத்திரிகைகள், local பத்திரிகைகள் என்றெல்லாம் பிரித்துப் பார்க்கும் வகையில் இப் பெருக்கம் நடந்துள்ளது. Popular சினிமா போலவே இவையும் போலீஸ், எம். எல். ஏ ஆகியோரை வில்லன்களாகச் சித்திரிப்பது நடைபெறுகிறது.

பிரேம் : oral culture என்பதல்ல, Demonstrative culture தான் இங்கிருப்பது. இங்கே கதைநிகழ்த்தப்பட்டது. வாழ்க்கையை மறுமதிப்பீடுசெய்வதாய் அது இருந்தது. வாழ்க்கையும் கதையும் இங்கே ஒன்று. மேலை கலாச்சாரத்தில் carnival, Entertainment முக்கியம். தொழில் நுட்பங்கள் உடல்களைப் பிரிக்கவே பயன்

படிப்பகம்

www.padippakam.com

பட்டன. Body distanceஐக் குறைப்பதில்தான் உண்மையான Communicotion உள்ளது. Group sex தான் இதைச் சாத்தியமாக்க முடியும். நமது மரபில் எல்லாமே குறியீடுகளாக முத்திரைகளாக நம்மை அழுத்திவைத்துள்ளன. உட்கார்ந்தால் பத்மாசனம் தலைகீழாக நின்றால் சிரசாசனம் இவை மக்களை அழுத்தி மௌனமாக்கியுள்ளன இங்கே மௌனத்தை எதிர்ப்பாகப் பார்க்க முடியாது. நமது வேலை மௌனமாய் இருக்கச் செய்வதல்ல உளற வைப்பதுதான். இந்தக் கருத்துக்கள் இந்த விவாதப் போக்கில் ஒரு அடிக்குறிப்பாய் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

அ மா : இப்போது இரண்டாவது கேள்விக்கு வரலாம்.

ரவிசீனிவாஸ் : கேள்வியை மாற்றிப் போட வேண்டும். வெகு சனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் கொடுக்கப்படுவதெல்லாம் தகவல்களா? தவிரவும் சிதைந்த துண்டு துண்டுகளாய்த்தான் இங்கே தகவல்கள் தரப்படுகின்றன. ஒட்டு மொத்தமாய்ப் பார்க்கும் வாய்ப்பு பார்வையாள னுக்குத் தரப்படுவதில்லை.

ராஜன்குறை : கிராமங்களில் தொலைக்காட்சி போவதென்பதெல்லாம் சனநாயகப் படுத்தப் பயன்படும் என்பதே என் கருத்து.

அ. மா : அப்படியானால் கிராமந்தோறும் தொலைக் காட்சி வைக்க வேண்டும் என நாம் போராட்டம் தொடங்கலாமா? ஆனால் அரசாங்கம் அதைத்தான் சொல்கிறது, செய்கிறது. அடிப்படை எழுத்தறிவு சமூகத்தை சனநாயகப்படுத்தும். எனவே அடிப்படை எழுத் தறிவைத் தரும் பள்ளி அமைப்பின் குறைகள் நீக்கப்படவேண்டும் என்பதை மட்டும் எப்படித் தவறு எனச் சொல்லி de-schooling கருத்தை முன்வைக்கமுடிகிறது?

ராஜன்குறை : கல்வி அளவிற்கு தொலைக் காட்சியை ஒடுக்குமுறை வடிவமாய்ப் பார்க்க முடியுமா?

ரவிக்குமார் : நிச்சயமாய் கல்வியை விட சக்தி வாய்ந்த menipulation system— தகவமைப்புக் கருவியாகத்தான் டி.வி.யைப் பார்க்க வேண்டும்.
(அடுத்த கேள்வி)?

சுந்தர் : வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் பற்றிய முக்கியமான இடதுசாரிப் பார்வைகளை இரண்டாகப் பிரிக்கலாம். முதலாவது பிராங்க்-பர்ட் பள்ளி சார்ந்தது. வெளியிலிருந்து திணிக்கப்படக் கூடிய கருத்தியலால் மக்கள் செயலூக்கமற்ற மந்தைகளாக்கப் படுகின்றனர். இரண்டாவது பர்மிங்ஹாம் கலாச்சாரக் கழகத்தின் பார்வை அ. மா. வின் தகவலியம் கட்டுரையில் சொல்லியிருப்பது போல பார்வை யாளருக்கு முக்கியத்துவம் அளித்துnegotiated Reading மீது இது கவனத்தை ஈர்த்தது. மூன்றாவதான ஒரு பார்வை எனக்கு முக்கிய மானதாகப் படுகிறது. ரோலான் பார்த்ஸ் ஒரு புத்தகத்தில் இதற்கான கருவை முன் வைக் கிறார். ஒரு பொருளை Excussive ஆக நுகர் வதன் மூலம் அதனைக் கடக்க முடியுமா? அளவுக்கதிமான repcation என்பதன் மூலம் குறிப்பான் empty ஆகும் வாய்ப்பிருக்கிறதா? இதிலிருந்து மூன்றாவது பார்வை ஒன்றை வளர்த்தெடுக்க முடியுமா? திணிப்பை எப்படிப் புறக்கணிக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள இது பயன்படும். ஜெயலலிதா பிம்பம் கட்டமைக்கப்படுவது நமது சூழலில் துல்லிய மாய்த் தெரிகிறது. ஒரு பக்கம் ஆதிபராசக்தி, இன்னொரு பக்கம் வைப்பாட்டி, நடிகை. இவற்றிற்கு இடையிலான ஒரு negotiation இருந்து கொண்டேதான் இருக்கிறது. குணா படத்தில் உள்ள—மனிதர் புரிந்து கொள்ள இது மனிதக் காதலல்ல அதையும் தாண்டி புனித மானது— என்கிற வரிகள் எப்படியெல்லாம் பயன்படுத்தப்படுகிறது தெரியுமா? நான் பார்த்த ஒரு நாடகத்தில் இந்தப் பாடல் வரிகள் பாடப்படும்போது ஒருவன் குனிந்துகொள்ள இன்னொருவர் அவரைத் தாண்டினார். Excussiveஆகப் பயன்படுத்தும்போது அர்த்தம் கவிழ்ந்து போகுமல்லவா? திணிக்கப்படும் போது எதிர்ப்பு என்பது பல மட்டங்களில் அமையும். முதலில் ஏற்றுக் கொள்வது, கொஞ்சம் விலகுவது, எதிர்ப்பு என்றெல்லாம் அமையலாம். இதற்கிடையில் தான் negotiated reding சாத்தியம்.

குடந்தை மாணிக்கம் : பஞ்சாயத்து ரேடியோக் களை யாரும் கேட்பதில்லை. அதுவும் கூட ஒரு எதிர்ப்புத்தான்.

பிரிட்டோ: (திருச்சி) நாடகங்கள்போட்டு விழிப் புணர்வூட்டுவது மட்டும் போதாது. தொடர்ந்து அங்கே—Follow up அரசியல்—செயல்பாடு முக்கியம்.
(அடுத்த கேள்வி)

ராஜன் குறை : ' ஒடெஸ்சா ' உதாரணம் முக்கியம். படத்தைப் போடுதல். பின் விவாதித்தல்— எதிர்ப்புணர்வை articulate பண்ண இது உதவலாம். ' வீடியோபுரஜக்ஷன் ஒரு நல்ல பதிவியாக பயன்படும் ரவி சீனிவாஸ் சொல்வது போல மக்களிடமே காமிராவைக் கொடுத்து படம் எடுக்கச் சொல்லலாம். குடிதாங்கி மக்களிடம் காமிராவைக் கொடுத்து அடுத்த சாவு நிகழும்போது படம் எடுங்கள் எனச் சொல்லலாம்.

சாரு: ஹிப்பிகள் செய்வதுபோல சிலஎதிர்ப்புவடி வங்களை மேற்கொள்ளலாம். கலாச்சாரா நிகழ்ச் சிகளில் போய் அவர்கள் ' காண்டோம் ' வினி யோகித்தார்கள் ' அண்ணாமலை ' பட வெற்றி விழாவில் ' குஷ்பூ ' போல உடை அணிந்து கொண்டு நாம் போய் நிற்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com

ரவிக்குமார் : குறுக்கீடு, negotiation எனச் சாத்தியமான எல்லாவற்றையும் செய்ய வேண்டியதுதான்.

பன்னீர் செல்வம் : தினமலர் போன்ற பத்திரிகைகளைப் புறக்கணிக்கலாம்.

பூர்ணம்: ஏற்கனவே இருக்கும் பழங்கதைகள், பழமொழிகள் ஆகியவற்றிற்குப் புதிய திருப்பங்கள் கொடுத்துப் பரப்பலாம். எ.டு: மண்ணானாலும் மனைவி, துரும்பானாலும் துணைவி.

ராஜன்குறை: மாற்றுத் திரைப் படங்களை உருவாக்கும்போது படங்கள் பற்றிய நமது கண்ணோட்டத்தையே மாற்றியாக வேண்டும். பிரச்சாரமாகப் படங்களைப் பயன்படுத்துவது என்பதோடு நமது படங்கள் Carnival aspects (குதூகலமாய்)உடன்இணக்கப்படவேண்டும். ஒரு கெட்டிக்காரத்தனமான montage ஆக அதை மாற்ற வேண்டும்.

(அடுத்த கேள்வி)

ரவிக்குமார் : சிட்டி வங்கி உதாரணத்தின் மூலம் உயர் தொழில் நுட்பம் எவ்வாறு மக்களின் எதிரிகளால் பயன் படுத்தப்படுகிறது என்பதை வாசு சொன்னார். பங்குச் சந்தை ஊழலை அமுக்குவதற்கு அயோத்தியா பிரச்சினை பயன்படுத்தப்படுகிறது. அரசுக்கெதிரான இயக்கங்களுக்கு, அரசியல் கட்சிகளுக்கு இது சிக்கல்தான். தொடர்ச்சியான போராட்டங்கள் நடத்த முடிவதில்லை. இதற்குஎதிர்வினையாகப் போராட்டங்கள் Localise (உள்ளூர் அளவில் மாற்றப்படுவது) ஆவதைப் பார்க்கலாம்.

அ.மா: NICNET மூலம் மாவட்டங்களெல்லாம் நேரடியாய் டெல்லியோடு இணைக்கப்படுகிறது அதிகாரங்கள் மையப்படுத்தப்படுவதற்கும் மக்களிடமிருந்து அதிகாரங்கள் பறித்தெடுக்கப்படுவதற்கும் நவீன தொலைத் தொடர்புத் தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப் படுவதைப்பார்க்-கலாம்.

ரவி சீனிவாஸ்: ஒரு நாட்டின் மூல வளங்களை எல்லாம் கண்டறிவதற்கு துணைக் கோள்களை ஏகாதிபத்தியங்கள் பயன்படுத்துகின்றன.

ரவிக்குமார்: பொருளாதாரம் இவ்வளவு மோசமாய்ச் சீரழியும் போது கூட ஒரு ஒட்டு மொத்தமான போராட்டம் உருப்பெறாமல் போவதைக் கவனிக்க வேண்டும். அடிக்கடி சோமாலியா பஞ்சத்தில் மக்கள் செத்து மடிவதைத் தொலைக் காட்சிகளில் காட்டுவது கூட— நாம் எவ்வளவோ பரவாயில்லை— என்கிற உணர்வை ஏற்படுத்தி விடலாம். இப்படி செத்து மடிய முக்கிய காரணம் அமெரிக்கா அங்கு தலையிட்டதுதான் என்பது மறக்கடிக்கப் பட்டு இன்று அமெரிக்காவின் தலையீடு தர்ம காரியமாக மாறிவிட்டது.

கோவிந்தராஜ் (திருச்சி) : தொலைபேசியில் எலக்ட்ரானிக் தொடர்புகள் கொடுக்கப்பட்ட பின்பு எத்தனை ஆண்டுகள் ஆன பின்பும் தேவைப்பட்டால் குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட நேரத்தில் யார், யாருடன் பேசினார்கள் என்பதைக் கண்டுபிடித்து விட முடியும். Secrecy போய்விடுகிறது.

ரவிக்குமார்: நவீன தொலைத்தொடர்பு என்பது Surveilance —கண்காணிப்பின் —கருவியாகப் பயன்படுகிறது என்பதோடு நவீன எலக்ட்ரானிக் தொலைத் தொடர்புகள் தானியங்கிகளாகச் செயல்படுவதால் வேலை நிறுவனங்களும் சாத்தியமற்றுப் போய்விடுகிறன. எனவே வேலை நிறுத்தம் செய்ய வேண்டு மெனில் உள்ளே இருந்துக் கொண்டு அவற்றை இயங்காமல் செய்வது Sabotage அல்லது செய்வது என்பதாக மாறிவிடுகிறது.

பூர்ணம்: மாற்று முயற்சிகளில் எளிய சாதனங்களின் பங்கை நாம் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. கிராமங்களில்கரும்பலகைகள்வைத்து தினசரி செய்தி விமர்சனங்கள் எழுதலாம். இது விமர்சனப் பார்வையை ஊக்குவிக்கும்.

ரவி: 'T-சர்ட்' களைக்கூட பிரசார சாதனங்களாகப் பயன்படுத்தலாம். முழக்கங்கள் எழுதப் பட்ட சட்டைகள் அணியலாம்.

அ.மா: இறுதிக்கேள்விக்கு வரலாமென நினைக்கிறேன். சிறுபத்திரிக்கைகள் Elitist-மேட்டிமைத் தன்மையோடு — செயல்பட்டாலும், பெரும்பாலான விசயங்களில் பெரும் பத்திரிகைகளின் கருத்தியலையே பிரிதிபலித்தாலும் வணிக நோக்கிலான பத்திரிகைகளின் நிறுவனமயப் படுத்தப்பட்ட குரலுக்கு எதிர்க்குரலை ஒலிப்பதாகவும் மாற்றுச் சிந்தனைகளை அறிமுகப்படுத்தக்கூடியதாகவும் அவை உள்ளன.

ரவிக்குமார்: அதே போலத்தான் 'புதிய கலாச்சாரம்' போன்ற இதழ்களும், மேலிருந்து ஒற்றைக்குரலைத் திணிப்பதன் மூலம் விமர்சனப் பார்வையை மழுங்கடித்த போதும் பொதுமக்கள் உளவியலில் ஒரு Rupture ஐ அதிர்ச்சியை ஏற்படுத்துவதும் வகையில் ராஜிவ் மரணம் போன்ற விசயங்களில் செயல் பட்டுள்ளன.

பூர்ணம்: இந்தப்பத்திரிகைகள்தங்கள்மொழியை எளிமைப்படுத்த வேண்டும். பல்வேறு வடிவங்களைப் பயன்படுத்த வேண்டும்.

அ மா: 'இருண்ட காலம்' —கேசட், 'போலிஸ் கொடுமைகள் பற்றிய புகைப்படத் தொகுப்பு போன்றவற்றில் இந்த முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டுள்ளனர். பாண்டித் தோழர்கள் வெளியிட்ட அண்ணாமலை நகர் பத்மினி வாக்கு மூலம் கேசட்டும் இவ்வகையில் முக்கியமானது.

ராஜன் குறை: யாரையும் ஒரேயடியாய் புறக் கணித்து விட முடியாது. எல்லா சிறு பத்திரிகை

படிப்பகம்

www.padippakam.com

களையும் ஒரே தரத்தில் வைத்துப் பார்த்துவிட முடியாது. மாற்றுத் தேடுதலுக்கான உந்துதல் களை இவை உருவாக்குகின்றன. 'ஜுனியர் போஸ்ட்' பத்திரிகை 'காஷ்மிர்' பற்றி ஒரு நல்ல கட்டுரையை வெளியிட்டுள்ளது. மைய நீரோட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட குரலுக்கு சிறு பத்திரிகைகள் தான்களம்அமைத்துக்கொடுக்கின்றன.

அ.மா: வேறு யாரும் இதுவரையில் விவாதத்தில் வராத எதையும் பதிவு செய்ய விரும்பினால் செய்யலாம்.

சுந்தர்ராஜி (கல்பாக்கம்): தொலைத்தொடர்புக்கும் அறிவியல் தொழில் நுட்பத்திற்கும் உள்ள முக்கிய இணைவு கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. தரவு வங்கிகள் உருவாக்கப்பட்டு சேகரிக்கப்படும் அறிவனைத்தையும் ஏகாதிபத்தியங்களில் குவிகின்றன. மூன்றாம் உலக நாடுகள் பற்றியஏராளமான தரவுகளும் கூட அங்கேதான் குவிக்கப்பட்டுள்ளன. நாம் என்ன செய்யப் போகிறோம். அந்த data bose ஐச்சார்ந்திருக்கப் போகிறோமா? அப்படியானால் ஏகாதிபத்தியம் உற்பத்தி செய்வதை நாம் சார்ந்திருப்பது என்கிற நிலைசரிதானா? அறிவியல் தொழில் நுட்பத்தில் அடிப்படை மாற்றங்கள் பற்றி நாம் பேசவேண்டும். இன்றைய விவாதம் அந்தத் திசையில் போகவில்லை.

பன்னீர் செல்வம்: பூர்ஷ்வா பத்திரிகைகளை எதிர் கொள்வது பற்றியும் இன்றைய விவாதம் கவனம் குவிக்க வில்லை.

கூட்டுக்குரல்.

விவாதங்களின் இறுதியில் ஓரளவு கூட்டுக்குரலாய் இறுதி பெற்ற கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்.

1. நமது நாட்டில் தகவல் பரவலில் வாய்மொழிப்பரவல். நிகழ்த்து கலை, சடங்குகள் ஆகியவை முக்கியபங்கு வகிக்கின்றன, நிறுவனமயமாக்கப்பட்ட வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் என்கிற வகையில் மேற்குறித்த பரவல் களோடு இணைந்து நிற்பதில் அவற்றின் நீட்சியாய்ச்செயல்பட்டுத் தாக்கங்கள் விளைவிப்பதில் திரைப்படம் முக்கிய பங்கு வகிக்கிறது.

2. அதிகத் தகவல் பரவலாக்கப்படுவது சனநாயகப் பாட்டிற்கு வழிவகுக்கக் கூடியது தான் என்றாலும் நிறுவனமாக்கப்பட்ட தொடர்புச் சாதனங்கள் மூலம் வினியோகிக்கப் படக் கூடியவை ஆளும் வர்க்க நலன் நோக்கில் தேர்வு செய்யப்பட்டவையே. தொலைத் தொடர்பில் நவீன தொழில் நுட்பங்கள் என்பன ஆளும் வர்க்கங்களிடம் அதிகாரம் குவியவே பெரிதும் பயன்படுகின்றன.

3. வெகுசனத் தொடர்புச் சாதனங்களை மக்களைத் தகவமைக்கும் கருவியாய் ஆளும் வர்க்கம் பயன்படுத்தினாலும் மக்கள் அக் கருத்தியல் திணிப்பிற்கு அப்படியே ஆட்பட்டு சமூக மயப்படுத்தப்படுகின்றனர் என்கிற கருத்து பார்வையாளரின் அதாவது மக்களின் செயலுக்கமான பங்கைப் புறகணிக்கும் மேட்டிமைத் தன்மையான பார்வையேயாகும். பார்வையாளரின் உணர்வு நிலைக்கும் ஏற்ப பன்முகப்பட்ட வாசிப்புகள் சாத்தியம். பேர வாசிப்பு —(Negotiated Reading) என்பதே நடைமுறையாக இருக்கிறது.

4. இன்றைய வெகுசனத் தொடர்புச் சாதனங்களில் சாத்தியமாகக் கூடிய மிகக் குறைந்த சன நாயக இடைவெளிகளையும் பயன்படுத்துதல், திணிப்பில் குறுக்கீடுசெய்துவிமர்சன பார்வையை உருவாக்கிக் கொள்ளுதல் முதலிய நடைமுறைகள் தேவை. பன்முகப்பட்ட பார்வைகளை வளர்க்கும் பரந்த அளவில் செல்லக் கூடிய மாற்றுப் பத்திரிகைகள் தேவை. நிகழ்த்து வடிவங்களுக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இந்த வகையில் நாடகங்கள் எதிர்ப்பு திரைபடங்கள் ஆகியவற்றின் பங்கு மூக்கியமானது. நமது தயாரிப்புகள் பிரச்சாரத் தோடு கொண்டாட்ட carnival தன்மையையும் இணைக்கவேண்டும். எளிய பிரச்சார சாதனங்கள், மாற்றுக் கதைகள், பழமொழிகள் ஆகியவற்றை உருவாக்கிப் பரப்புதல் என்பதும் முக்கியமானது.

5. நமது பாரம்பரியக் கலாச்சாரமா? ஏகாதிபத்தியக் கலாச்சாரத்தின் முற்போக்கு அம்சங்களை வரித்துக் கொள்வதா? என்கிற ரீதியில் பிரச்சினையை அணுக கூடாது. வெறும் ஒழுக்கவாதக் (moralism) கண்ணோட்டத்தில் 'ஸ்டார்' டி. வி. போன்றவற்றை மதிப்பிடாமல் அரசியல் நோக்கில் மதிப்பிட வேண்டும். நமது பண்பாட்டின் பன்மைத் தன்மையை ஏற்றுக் கொண்டு அதிலுள்ள அடித்தட்டு எதிர்ப்புக் கலாச்சார இழைகளில் மாற்றுக் கலாச்சாரக் கூறுகளைத் தேடவேண்டும்.

6. தொலைத் தொடர்பில் நவின தொழில் நுன்பங்களை அரசும் ஏகாதிபத்தியங்களும் சுவீகரித்துக் கொண்டுள்ள தென்பது மக்கள் மீதான அதிகாரக் குவிப்பிற்கு வழி ஏற்படுத்தியுள்ளது. தொடர்ச்சியான பெரும் போராட்டங்களைக் கட்டமைப்பதற்கும் இவை எதிராக உள்ளன. மக்கள் மிதான, விளிம்பு நாடுகள் மிதான கண்காணிப்பிற்கும் இவை பயன் படுத்தப் படுகின்றன. எனினும் இத்தனைக்கும் மத்தியில் கிழக்குஅய்ரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட கலகங்கள், சென்ற ஆண்டு லாஸ் ஏஞ்சல்கல் ஏற்பட்ட கருப்பின மக்களின் எழுச்சி போன்றவை மக்கள் சக்தி மீதான நம்பிக்கையை அழித்துவிடவில்லை. நமது சூழலில் கூட தல அளவுப் போராட்டங்கள் பரவலாக அதிகரிப்பது, எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப்படும்போது நிறுவன மயமான தகவல் தொடர்புச சாதனங்களில்

படிப்பகம்

www.padippakam.com

தயவின்றியே சில மணி நேரங்களில் செய்தி பரவி எதிர்ப்பியக்கம் தோன்றுவது போன்றவை கவனிக்கத் தக்கவை.

7. சிறு பத்திரிகைகள் பல கருதியல் அடிப்படையில் பெரும் பத்திரிகைகளோடு இணைந்து நின்றாலும் மைய நீரோட்டத்தில்விலக்கப்பட்ட மாற்றுக் குரல்களுக்கான களங்களாகவும் அவை செயல்படுகின்றன. அரசியல் தளத்தில் முன் வைக்கப்பட்ட சிலமாற்றுப்பத்திரிகைகள் நிறுவனமயமான ஒழுக்க/கலாச்சார மதிப்பீடுகளை உயர்த்திப் பிடிப்பதிலும் ஒற்றைப் பரிமாணமாய் கருத்துக்களைத் திணித்து விமர்சனப் பார்வையை மழுங்கடிப்பதிலும் மைய நீரோட்டப் பத்திரிகைகளுக்குச் சளைத்தவையாக இல்லாத போதும் வெகு மக்களின் அரசியல் பிரக்ஞையில் ஒரு கிழிசலை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றியுள்ளன.

குறிப்பு : 1. பேசியவர்களின் கருத்துக்கள் தொகுப்பாளரின் சொற்களில் தரப்பட்டுள்ளன. மாற்றங்கள் இருப்பின் கடிதப் பகுதியில் பதிவு செய்து கொள்ளலாம்.

2. வழக்கமாய்ச் செய்வது போல கூட்டுக் குரல் முடிவுகள் விவாதத்தின் இறுதியில் வாசிக்கப் பட்டு ஒப்புதல் பெறப்படவில்லை. இதிலும் கருத்து மாறுபடுகிற தோழர்கள் கடிதப் பகுதியிலோ, எதிர்வினைப் பகுதியிலோ தங்களின் கருத்துக்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

தொகுப்பு: நிறப்பிரிகை 0

அஞ்சலி

தோழர் 'சண்' மரணம்

இலங்கைப் பொதுவுடைமைக் கட்சியின் செயலாளர் தோழர் **நா. சண்முகதாசன்** சென்ற பிப்ரவரி 8ம் தேதி லண்டனில் காலமானார் என்கிற செய்தி கிடைத்துள்ளது.

1960 களின் பிற்பகுதியில் இலங்கை அரசியலில் பிரதான சக்திகளில் ஒன்றாய் விளங்கின சண்முக தாசன் முன் நின்று செயல்பட்ட இயக்கங்கள். சர்வதேச அரங்கில் பொதுவுடமை இயக்கம் பிளவுபட்டபோது மாவோவின் பக்கம் நின்றவர் சண். 1964ல் இலங்கையில் பொதுவுடமைக் கட்சி பிளவுபட்டபோது 'சீனப் பாதை'யைத் தேர்ந்தார், 'துப்பாக்கிக் குழலிலிருந்து அரசியலதிகாரம் பிறக்கிறது' என்கிற மாவோவின் சிந்தனையை அடியொட்டி புரட்சியில் வன்முறையின் பங்கை யாழ்ப்பாண பகுதிகளில் மூலை முடுக்குகளெல்லாம் பிரச்சாரம் செய்தார். பின்னணியில் தமிழ் இளைஞர்கள் தங்கள் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு இப்பிரச்சாரம் ஆணி வேராக அமைந்தது எனக் கூறுவர். **ஜே வி.பியின் ரோகண விஜயவீரா என்.எல்.எப்.டியின் விசுவானந்த தேவா** ஆகியோர் இவரது அணியிலிருந்து பிரிந்து சென்றவர்தான். 1971 ஜே.வி.பி கிளர்ச்சியின்போது 'சண்'ணும் **கே. டானியலும்** 10 மாதங்கள் சிறையிலிடப்பெற்றனர். அரசியலில் **ஜீஜி பொன்னம்பலத்தையும்** தொழிற்சங்க இயக்கத்தில் **தொண்டமானையும்** வெற்றிகரமாய் எதிர்கொண்ட பொதுவுடைமை அணியைச் சேர்ந்த தமிழராக 'சண்' விளங்கினார். எள்ளளவும் சமரசத்திற்கிடங்கொடாது அரசையும், முதலாளிகளையும் ஒருசேர எதிர்கொண்ட ஒரு மாதிரி இயக்கமாக சண்ணின் 'செங்கொடிச் சிங்கம்' செயற்பட்டது. யாழ்குடா நாட்டில் 'சாதி அமைப்பு தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்கிற முழக்கத்தோடு இவரது எழுத்தாளர் **கே. டானியல்** போன்றோரின் தலைமையில் உருவாக்கப்பட்ட **தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்** போர்க்குணத்தோடு தேனீர்க்கடை ஆலயப் பிரவேசப் போராட்டங்களை நடத்தின. அவ்வியக்கம் பல்வேறு இழப்புகளை எதிர்கொண்டபோதிலும் யாழ் பகுதியில் சாதி இயக்கம் தகர்வதற்குக் காரணமாகியது.

1980 களில் தேசிய இன எழுச்சி உச்சத்தை அடைந்தபோது மரபு வழிப்பட்ட மார்க்சிய அணுகல் முறையை வரட்டுத் தனமாகப் பற்றிக்கொண்டிருந்ததன் விளைவாக ஓரத்திற்கு ஒதுக்கப்பட்ட பொதுவுடமையாளரில் ஒருவராகிப்போன சண்முகதாசன் இறுதிவரை பாராளுமன்றச்சாக்கடையில் விழாததாலும், மாவோக்குப் பிந்திய சீனப் பாதையையும் புறக்கணித்ததாலும் நேர்மையான அரசியலுக்கு ஒரு எடுத்துக்காட்டாக நினைவு கொள்ளப்படுகிறார். 1983 இறுதியில் சென்னையில் தமிழர் மீதான கொடுமை குறித்து அவர் ஒரு சிறிய நண்பர்கள் சந்திப்பில் பேசியதும் கூட்ட முடிவில் சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத் தலைவர்களை கவர ரசிய, சீன அரசுகள் மேற்கொள்ளும் இழிவான தந்திரங்களைப் பற்றிக் குறிப்பிட்டதும் நினைவுக்கு வருகிறது. மார்க்சிய நோக்கில் எழுதப்பட்ட இலங்கை வரலாறும், அரசியல் சுயசரிதை ஒன்றும் அவர் எழுதிய முக்கிய நூற்கள். 'சண்'ணின் நினைவுக்கு நிறப்பிரிகை அஞ்சலி செலுத்துகிறது.

படிப்பகம்

www.padippakam.com

பெண்ணியம் விவாதம்

பிரவாஹன்

எதிர்வினை-3

நிறப்பிரிகை-5ல் வெளியான பெண்ணியம் குறித்த விஷயங்கள் அனைத்தும் படித்தேன். அவை குறித்த என் கருத்துக்களை முன் வைக்கிறேன்.

முதலில் பெண் விடுதலைக்கான அடுத்தகட்ட நிகழ்ச்சியாக நாம் என்ன செய்யவேண்டும்? என்ன செய்யப்போகிறோம்? என்பதற்கான வழிமுறை பற்றி சிந்தித்ததாகத் தெரியவில்லை. பெண்ணியம் பற்றிய விவாதங்கள் எதிர்வினை 1-ன் மூலம், ஆண்-பெண் உறவு முறைக்கான ஓர் மாற்றை நோக்கிய தேடலாய் அறிகிறேன். இதுபோன்று மையப் படுத்தப்படும் விவாத மானது பாலுறவின் அடிப்படையிலேயே சமூகம் இயங்குவதாகவும், பெண்ணடிமைத்தனம் இங்குதான் தோன்றுவது போன்ற கற்பனையில் இருந்து உதிக்கக் கூடியதாகும், சமூகத்தில் இன்றைக்கு அனைத்து முரண்பாடுகளும் நீங்கி ஆண்—பெண் இடையிலான உறவு- பெண் இடையிலான உறவு—(பெண் விடுதலை எனும் போர்வையில்) —மற்றும் வேலைப் பிரிவினை கேள்விக்குள்ளாக்கப்பட்டிருத்தல் ஒரு Utopian நிலையே

அடுத்து உடலுறவு இன்பம் ஏதோ ஆணுக்கு மட்டுமானது, அதில் பெண்களுக்கு சிறிதும் சம்மந்தமில்லை ; ஆண்களுக்கான போகப் பொருளாக—தன்னுடைய காம இச்சையை தீர்த்துக் கொள்வதற்கான ஒரு கருவியாக— பெண்கள் உள்ளனர்; எனவே இதற்கு ஒரு மாற்று முறை தேர்வு செய்யப்படவேண்டும்; அதிலும் குறிப்பாக யோனிப்புணர்ச்சி என்பதி லிருந்து விடுபடுதல் என்பதாக பெண்ணிய விவாதங்களின் ஒட்டு மொத்த கருத்தாக்கம் அமைந்துள்ளது.

'ஆணுக்குப் பெண் ஒரு போகப்பொருள்' என் பதன் மீதான விவாதமே இம் முதலாளித்துவ கருத்துருவாக்கத்தின் மாயைக்குள் நாம் சிக்கி யுள்ளதை வெளிப்படுத்துகிறது. இது ஆண் ஆதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடாகும். ஆகவே ஆண் பெண் புணர்ச்சிக்கு— யோனிப் புணர்விற்கு—பதிலியாக வைக்கப்படும் மாற்று —வாய், குதம், வைப்ரேட்டர் போன்ற— ஆலோசனைகள், மனித உடலியல் இன்பத் திற்கு எதிரானதாகவும், இன விருத்திக்கு குந்தகம் விளைவிக்க கூடியதுமாகும். மேலும் யோனிப் புணர்ச்சிக்கு மாற்று என்பது— மனித சமூகத்தின் இருத்தலுக்கான அடிப்படை புணர்ச்சி என்பதாகவும், பெண்ணடிமைத் தனத் திற்கும் அதுவே காரணம் போலவும் சித்தரிக்கப் படுதல்— மனித நேயத்தையே கேவலப்படுத்து வதாகும்— மனிதர்களுக்கிடையிலான உறவை ஒரு இயந்திர கதிக்கும், ஆண்—பெண்ணுக்கு இடையில் Sexual Relation என்பதையே பெண்களின் மீதான ஒரு ஒடுக்கு முறைக்கருவி என்பதான வர்ணிப்பு, இதன் Logical extension ஆக மனிதர்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றிடம் அவர்களை இட்டுச் செல்லுவதாக உள்ளது. உடனடியாக சிலர் இப்படிக் கேட் கலாம் பெண்கள் இனவிருத்தி செய்வதற்கான கருவியா ? என்று. இன உற்பத்தி என்பது ஆண், பெண் இருவரும் சம்மந்தப்பட்டதே. குழந்தை பெறுகிறார்கள் என்பதனால் அதை பெண் சம்மந்தப்பட்ட விஷயமாகப் பார்ப்பதும், ஆணுக்கு இன்பம் மட்டும்தான் என்று பார்ப் பதும்—இயற்கையின் வேலைப் பிரிவினைக்கு எதிராக - குழந்தை பெறுதல் என்பது மிக இழிவான செயல் போல கருதுவது போலுள்ளது இது ஆண் ஆதிக்க மனோபாவத்தின் வெளிப் பாடாகும். இது முதலாளித்துவச் சமூகத்தின் (ஆணாதிக்கச் சமூகத்தின்) கருத்துருவாக்கமே.

பெண்ணியம் விவாதம், எதிர்வினை-2
ராஜ்கௌதமன்: 76ம் பக்கத்தில்

> ''பெண், முதலாளியச் சமூக உற்பத்தி முறையில் நுழையும் போது அவருடைய விடுதலை சாத்தியமாகும்' என **'எங்கல்ஸ்'** கூறியுள்ளதாகவும் அது பொய்த்து விட்டதாகவும் கூறுகிறார்.

''குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்'' எனும் நூலில் பெண் விடுதலைக் கான முன் தேவையை **'எங்கல்ஸ்'** பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> ''பெண்ணினம் முழுவதையும் சமூக உற்பத்தியில் **மீண்டும்** புகுத்துவதுதான் பெண்களின் விடுதலைக்குரிய **முதல்** நிபந்தனை என்பது அப்பொழுதுதான் தெளிவாகும். தனிப்பட்ட குடும்பம் சமூகத்தின் பொருளாதார அலகு எனும் தன்மை ஒழிக்க வேண்டும என்பதை இது **மீண்டும்** கோருகிறது.''

முதலாவதாக **'எங்கல்ஸ்'** முதலாளியச் சமூகம் என்று கூறவில்லை, என்பதை நாம் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும். பெண்களை **மீண்டும் முழுவதுமாகச்** சமூக உற்பத்தியில் ஈடுபடுத்துவது என்பது முதலாளியச் சமூகத்தில் சாத்தியமில்லை. இது பாட்டாளிவர்க்கப்

படிப்பகம்

www.padippakam.com

புரட்சிக்குப் பின்னரே சாத்தியம். ஆண்-பெண் இடையிலேயான **உண்மையான சமத்துவத்தின்** அடிப்படைதெளிவாக புலனாவதற்குசட்டத்தின் **முன்பு இருவருக்கும் சமநிலை** கிட்ட வேண்டும் எனக் கூறுகிறார். அதாவது பொருளாதாரக் காரணி பற்றி **'எங்கல்ஸ்'** கூறுகிறார்.

> 'பெண் தனது ஸௌகீக வாழ்விற்குரிய பொருளாதார தற் சுதந்திரத்தைப் பெற்று விட்டால், ஆணைச் சார்ந்து வாழும் சார்பு வாழ்வு அகலுமல்லவா? என்றும்; ஆயின் அப்படி நடக்கவில்லை' என்பதையும் பூர்ஷ்வா மற்றும் சோசலிச சமூக அமைப்பையும் - **'நேற்று வரை நிலவியதை'** - பார்த்துவிட்டு ராஜ்கௌதமன் கேட்கிறார்.

'எங்கல்ஸ்' கூறியபடி **'மீண்டும் பெண்கள் முழுவதுமாக சமூக உற்பத்தியில் ஈடுபடுத்தப் படுதல்'** என்பது முதலாளியச் சமூகத்தில் சாத்தியமில்லை. மேலும் பூர்ஷ்வா சமூகம் குடும்பம் என்பதை சமூகத்தின் தனிப்பட்ட பொருளாதார அலகாகப் பார்க்கிறது. குடும்பம் என்பது ஒரு கட்டுமானத்தைக் கொண்டுள்ளது. அதற்கென்று சில தளர்த்தப்படாத விதிமுறைகள் இன்றுவரை நிலவுகிறது. சொத்துடைமையை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய ஒருதார மணம் மற்றும் குடும்பம் என்பது கணவனுக்கு ஆதிக்கம் செய்யக் கூடிய நிலையை ஏற்படுத்துகிறது. அதாவது குடும்பத்திற்கு பொருளாதார ரீதியாக உதவி செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படும் போது அவன் அங்கே மேலாண்மை பெருகிறான் குடும்பத்தின் 'முதலாளி' எனும் நிலைக்கு வருகிறான்.

இதையே 'எங்கல்ஸ்' பின்வருமாறு கூறுகிறார்.

> '.........மிகப் பெரும்பாலான சமயங்களில் ஆண் குடும்பத்திற்கு சம்பாதிப்பவனாக, உணவளிப்பவனாகஇருக்கவேண்டியுள்ளது ....இது அவனுக்கு ஆதிக்க நிலையைத் தருகிறது. இதற்குச் சட்ட ரீதியான சலுகைகள் அவசியமில்லை. குடும்பத்தில் அவன்தான் முதலாளி; அவன் **மனைவி பாட்டாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவம்** செய்கிறாள்.'

எனவேதான் பெண் விடுதலை, பாட்டாளி வர்க்கப்புரட்சிக்குப் பின்னால் சாத்தியம் என்றும் பாட்டாளிகளின் விடுதலையுடன் சம்பந்தப் பட்டுள்ளது எனவும் கூறுகிறோம்.

அடுத்ததாக சோஷலிச சமூக அமைப்பிலும் முற்றுமான பெண் விடுதலை ஏற்படவில்லை? சோசலிச சமூகம் என்பதற்கு உதாரணமாக ரஷ்யா மற்றும் சீனாவை நாம் பார்க்கிறோம். ரஷ்யாவிலும், சீனத்திலும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப்பின்னர் பெண்களின் நிலையில்-மற்ற நாடுகளைக் காட்டிலும்-கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது நிச்சயம் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். ருஷ்யாவிலோ அல்லது சீனத்திலோ முற்றூடான சோசலிசம் நிலவியதா எனில், இல்லை. சோசலிசப் பொருளாதார மாற்றத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது - அல்லது சோசலிசத்தை நோக்கிசென்று கொண்டிருந்தது என்பதே பொருத்தமானதாக இருக்கும். அந்நாடுகளில் ஏற்பட்டுக் கொண்டிருந்த பொருளாதார மாற்றமானது தன் மேற்கட்டுமான பண்பாட்டின் மீது ஒரு **தீர்மானகரமான** தாக்குதலை ஏற்படுத்துமளவிற்குஇல்லை. மேலும், அந்நாடுகளில்மக்களை கருத்தியல்ரீதியானமாற்றத்திற்கு idealogical change தயார் படுத்த அரசு தவறிவிட்டதுஎன்பதுமிகமுக்கியமானஒருவிஷயமாகும் ஆகவே இந்நாடுகளை உதாரணமாகக் கொண்டு நாம் முடிவுகள் செய்வதுசரியானதாகஇருக்காது.

சோசலிச சமூகத்தில் பெண்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்று 'எங்கல்ஸ்' மிகத் தெளிவாக விளக்குகிறார்.

> ''...எல்லாப் பெண்களின் நிலமை முக்கியமான மாற்றங்களுக்கு உள்ளாகிறது. உற்பத்திச்சாதனங்கள் பொதுச்சொத்தாக மாற்றப்படும் பொழுது தனிப்பட்ட குடும்பம் சமூகத்தின் பொருளாதார அலகாக இருப்பதும் முடிவடைகிறது. தனிப்பட்ட வீட்டு நிர்வாகம் சமூகத் தொழிலாக மாற்றப் படுகிறது. குழந்தைகளின் பராமரிப்பும் கல்வியும் பொது விவகாரம் ஆகி விடுகின்றன. எல்லாக் குழந்தைகளையும்-அவர்கள் மண உறவில் பிறந்தவர்கள் ஆயினும் சரி, மண உறவிற்கு வெளியே பிறந்தவர்களாயினும் சரி-சமுதாயம் சமமாக கவனித்துக்கொள்கிறது. எனவே 'விளைவுகளைப்' பற்றிய கவலை-இதுவே பெண் தான் காதலிக்கின்ற ஒருவனுக்கு தன்னைச் சுதந்திரமாகக் கொடுப்பதைத் தடுக்கின்ற தார்மீக பொருளாதார ரீதியான மிகவும் முக்கியமான சமூகக் காரணியாகும் -மறைந்து வடும்..''

எனவே தற்போது நமக்கு முன்னால் உள்ள பிரச்சினை என்பது குழந்தைப் பெற்றுக் கொள்வதுதான்.

''ஆண் பெண் வேறுபாட்டிற்கான மூல முதற் காரணமாக 'எங்கல்ஸ்' பாலியல் வேலைப்பாகுபாட்டை சுட்டிக்காட்டினார். இவ்வேலைப் பாகுபாடு 'புராதனமானது' இயற்கையானது என்று பார்த்தாரே தவிர சமூக வயமானதாகப் பார்க்கவில்லை என்பது பெண்ணியவாதிகளின் முக்கிய குற்றச்சாட்டு. உடல் அமைப்பிலேயே இயற்கையாகவே ஆணும் பெண்ணும் வேறு வேறு வேலைப் பிரிவுக்கு லாயக்கானவர்கள்

படிப்பகம்

www.padippakam.com

என்ற naturalistic கருத்தை 'எங்கல்ஸ்' முன்வைத்தார். இந்தப் பாலியல் அடிப்படையிலான வேலைப்பிரிவு என்பது இயற்கையானது அல்ல, சமூகரீதியில் கூட்டமைக்கப் பட்டதே ஆகும் என்கிறது பெண்ணியம்' - என ராஜ் கௌதமன் கூறுகிறார். இயற்கையிலேயே அமைந்துள்ள வேறுபாட்டை இயற்கையானதாக மட்டுமே பார்க்கமுடியும். இவ் வேலைப் பாகுபாட்டை சமூகம் கட்டமைத்துள்ளதாக பார்ப்பது ஒரு முரணான பார்வையாகும். எப்படி தற்போதய சமூகத்தில் மூளை உழைப்பிற்கும், உடலுழைப்பிற்கும் இடையில் பெரியதொரு பள்ளம் நிலவுகிறதோ, அதுபோன்றே குழந்தை பெறுதல் என்பது இழிவான ஒன்றாகக் கருதப் பட்டு-அதாவது இப்படி உழைப்பு தரம் பிரிக்கப் படுவதனால் மட்டுமே அது சமூக ரீதியில் கட்டமைக்கப்பட்ட ஓர் பாலியல் அடிப்படையில் ஆன வேலைப்பிரிவு என்பதாக தோன்றுகிறது. எந்தவித உழைப்பிற்கு இடையிலான தரப்பாகுபாடும் நம்மை முதலாளியாகக் கருத்தியலுக்குள் ஆழ்த்தவே செய்யும். மேலும் இவ்வேலைப் பாகுபாடு சமூக ரீதியில் கட்டமைக்கப்பட்டுள்ளது எனக் கூறுபவர்கள் முடிந்தால், ஆண்களை குழந்தை பெற வைக்கட்டும். அதிலும் நமக்கு மகிழ்ச்சியே. மாதவிடாய் குழந்தை பெறுவதற்கான ஒரு முன் தேவை; குழந்தை பெறுவது சமூக ரீதியில் ஒரு அத்தியாவசமான பணி; அது மற்ற எந்தவகை உழைப்பையும்விட குறைந்ததல்ல என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்

> ''மாதவிடாயும், தாய்மையும் neutral நிகழ்வுகள் எனவும் இவற்றை சமூகத்தின் பண்பாடு நிஜமான தடைகளாக (handi caps) மாற்றியுள்ளது. சமூக ரீதியில் இவைகள் natural ஆக்கப்பட்டுள்ளது. இயல்பான ரத்தப்போக்கு, பண்பாட்டுக் கட்டமைப்பினால் அசிங்கம், தீட்டு, அவமானம் என கருத்தியல் விளக்கம் பெற்று அதுவேnaturalஎன பெண்ணிடம் உள்வாங்கப்பட்டுள்ளது. இது இயற்கை ஆனது என பெண்கள் அவற்றை ஏற்று தனது விடுதலையைவிட சமூகம் போதித்து உள்ள தடைகளை ஆபரணமாக ஏற்பதால் மரியாதை, கௌரவம் என்றும் இதுவே தனக்குரிய உயர்குணமாகவும் பெண்கள் என்ன வைக்கப்பட்டுள்ளார்கள்'' -என ராஜ் கௌதமன் கூறுகிறார்.

சமூகத்தில் எந்தப் பொண்ணும் இது போன்ற தடைகளை உயர்குணமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை முதலில் கூறிக் கொள்கிறேன் மாதவிடாய் மற்றும் தாய்மையை neutral என்று எப்படி குறிப்பிடுகிறீர்களோ தெரியவில்லை? அவை natural- லானவையே. ஆனால் அதன் காரணமாக பெண்கள் எவ்விதத்திலும் தாழ்ந்தவளில்லை. புராதான சமூக வரலாறு தெரிந்தவர்களுக்கு அவர்களின் உடல் ரீதியிலான seebelow ஆதிக்கத்தை ஆண் கொண்டுள்ளதனால் மேற்கூறிய தடைகளை அவர்கள் ஏற்றுள்ளது போல சிலருக்குத் தோன்றலாம். இது அவர்களின் அகவயமான கருத்தேயன்றி புறவயப்பட்டதில்லை

> மேலும் இதற்காக சிலரால் கூறப்பட்டுள்ள மாற்று ஏற்பாடு என்பது அவர்களின் ஆண் மையத்தன்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது. எல்லாக் காலங்களிலுமே ஆண் பெண் இருவரும் தனது பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வதே சரியான வேலைப் பிரிவினையாகும்.

Sex appeal பெண்களுக்கு மட்டுமல்ல. அது ஆண்களுக்கும்தான் என்பதையும், ஆணாதிக்க சமூகமாக உள்ள காரணத்தினால் அது பெண்களுக்கு மட்டுமானதாகத் தெரிகிறது. இதுபோன்ற ஆணாதிக்க மனோபாவத்தில் இருந்து விடுபட்டவர்கள் மட்டுமே உண்மையில் பெண் விடுதலைக்கான அடுத்த கட்ட பணிகளில் இறங்க முடியும்.

மற்றும் மனரீதியிலான வலிமை புரியும். பொருளாதார ரீதியிலான

> ''ஆண் உடலில் லிங்கத்தைச் சுற்றி பாலுணர்வுமையம் இருப்பதாகவும் பெண்ணுக்கு உடலெங்கும் erotic மையங்கள் உள்ளதை சாதகமாக தீவிர பெமினிங்குகள் ஆக்கிக் கொள்ளுவதாக'' ராஜ்கௌதமன் கூறுகிறார்.

இது போன்ற ஒரு கருத்து அப்பட்டமான ஆண் ஆதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடாகும். ஆண் ஆதிக்க சமூகத்தில் பெண்ணுடைய ஒவ்வொரு அங்கங்களும் வர்ணிக்கப்படுவது அவர்களை இழிவு படுத்துவதாகும். அதிலும் குறிப்பாக mamalliangland ஒரு erotic மையமாக பெரும்பாலான ஆண்களால் நினைக் கப்படுவது மிகக் கேவலமானதாகும். ஆண் பெண்ணைப் பார்த்து கவரப்படுவதும் பெண் ஆணைப் பார்த்து கவரப்படுவதும் இயற்கை ஆனது. ஆணைப் பொருத்த வரையில் எப்படி பெண்ணுடைய ஒவ்வொரு அங்கமும் erotic மையமாகப் பார்க்கப்படுகிறதோ அதுபோன்றே பெண்களுக்கும். இவை இருப்பினும் கூட idealogical unity என்பதற்கும் ஒரு முக்கியமான பங்கு இருப்பதை யாரும் மறுக்க முடியாது மேற் கூறியது போன்ற ஒரு அப்பட்டமான ஆணாதிக்கக் கருத்துள்ளவர்களை எப்படி தீவிர பெமினிஸ்டுகள் என்றுவரையறுக்கமுடிகிறதோ?

> ''இரு பாலரிடையேயும் உழைப்புப் பிரிவினையை நிர்ணயிப்பதற்குரிய காரணங்கள் வேறு, சமுதாயத்தில் இரு பாலருடைய அந்தஸ்தை நிர்ணயிப்பதற்கு உரிய காரணங்கள் வேறு''

என 'எங்கள்ஸ்' கூறியுள்ளதை முற்றுமாகப் புரிந்து கொள்ளும் எவருக்கும் பெண் விடுதலை என்பது தீர்க்க முடியாத சிக்கலாக இருக்க முடியாது.

படிப்பகம்

www.padippakam.com

பெண்ணியம் விவாதம்

எதிர்வினை-4

''பாரதி சுட்டும் விழிச்சுடர்'' இதழ்

நிறப்பிரிகை பத்திரிகை பற்றியோ, அதில் வெளிவந்த பெண்ணியம் கட்டுரை பற்றியோ அறியாத வாசகர்களுக்கு ஒரு சிறு அறிமுகம் ....இக்கட்டுரை தமிழ் நாட்டிலுள்ள சிந்தனையாளர்கள் 64 பேரின் கூட்டு முயற்சியாக வெளிவந்தது. பெண் விடுதலைபற்றி புதிய கோணத்தில் அணுக முயற்சித்திருந்த இந்தக் கட்டுரையைப்பற்றி பெண்கள் பேச வேண்டியது அவசியம் என்று கருதினோம் தமிழ்ப் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் சில உறுப்பினர்கள் சந்தித்தபோது, இக் கட்டுரைக்கான பதில் கூட்டுக் கட்டுரையாக இருப்பதே பொருத்தம் என்று முடிவு செய்தோம் இதன்படி பல்வேறு துறையிலுள்ள 15பெண்கள் கலந்துகொண்ட உரையாடலின் தொகுப்பாக கீழ்கண்ட கட்டுரை வெளிவருகிறது. (ஆ-ர்)

பெண்ணியம் என்றால் வரதட்சிணைக் கொடுமை/ சிசுக் கொலை'ஆபாச எதிர்ப்பு என்று எண்ணி செயல்படும் பெண்ணிலை வாதிகளுக்கு (எங்களுக்கு) சில 'அறிவுரை'களைக் கூற முன் வந்துள்ளது நிறப்பிரிகை, வரதட்சிணை-சிசுக் கொலை-ஆபாச எதிர்ப்பு என்று எங்களது போராட்டங்களை அலட்சியத்துடனும் வெகு எளிதாகவும், அ. மார்க்ஸும் அவரது தோழர்களும் நிராகரித்துவிட்டு, நாங்களும் எங்களைப் போன்றவர்களும் 'சொல்லத்தவறிய'வற்றை தாங்கள் கூற வந்துள்ளனர்; மேலும், ஒருவித அதிகார தொனியில்,எங்களுக்கு செயல் திட்டங்களை வேறு வகுத்தளிக்க முற்பட்டுள்ளனர்.

வரலாறுதோறும் ஆண்களின் அதட்டும் குரலையும் ஆண் போதகர்களின் அறிவுரைகளையும் கேட்டுக் கேட்டுப் பழகிப்போன எங்களுக்கு நிறப்பிரிகையின் முயற்சியில் புதுமைகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. பெண்கள் தங்களுக்கான அறிவைத் தாங்களே உற்பத்தி **செய்யவேண்டும்.** தங்களை அடிமைப்படுத்தும் சித்தாந்தங்களைத் **தகர்த்தெறிய வேண்டும்.** பெண்மை குறித்தான மரபான வரையறைகளை **மீறவேண்டும்**...என்று நாங்கள் இனி மேற்கொள்ளவேண்டிய **கடமைகளை** பட்டியலிட்டுக் காட்டியுள்ளனர் நிறப்பிரிகை கட்டுரையாசிரியர்கள். இவர்களுக்கும் காலங் காலமாக எங்களது வாழ்வு, சிந்தனை, சித்தம் ஆகிய அனைத்தையும் குறிப்பிட்ட எல்லைக்குள் முடங்கச் செய்து, அவற்றைத் தங்களது வரையறைகளின் அடிப்படையில் செயல்படுத்திவரும் ஆணாதிக்க சிந்தனையாளர்களுக்கும், உண்மையில் என்ன வேறுபாடு இருக்க முடியும்?

பெண்ணியம் கட்டுரையில் எங்களால் எங்கள் முகத்தை அடையாளங் கண்டு கொள்ள முடியாததை உணர்ந்த நாங்கள், எங்களது வரலாறு, அனுபவங்கள், நாங்கள் கூறுபவை, வெளிப்படுத்தியவை ஆகியவற்றுக்கும் இக்கட்டுரையில் இடம் இல்லை என்பதையும் உணர்ந்தோம். பெண்ணடிமைத்தனத்தைப் பற்றிய கட்டுரை ஆசிரியர்களின் அடிப்படை புரிதலையே நாங்கள் கேள்விக்கு உட்படுத்த விரும்புகிறோம்: பெண்ணை ஒடுக்கும் அமைப்புகளான குடும்பம், மதம், பொருளாதார கட்டமைப்பு, சாதி, இந்த ஒடுக்குமுறையை நியாயப்படுத்தி செயல்படும் சித்தாந்தங்கள் ஆகியன ஆண்களையும் அடிமைப்படுத்துகின்றன என்ற கருத்து இங்கு சொல்லப்படுகிறது. பொதுவாக எந்தவொரு கட்டமைப்பும் சிந்தாந்தமும் ஆண்,பெண் ஆகிய இருபாலாரின் அடையாளத்தையும் குறிப்பிட்ட வகையில் வார்த்தெடுக்கக் கூடியவைதான். என்றாலும் கூட்டமைப்புகளும் சித்தாந்தங்களும் குறிப்பிட்ட வரலாற்று காலகட்டத்திலேயே உருப்பெறுகின்றன. அவ்வரலாறு என்பது பெரும்பாலும் ஆண்களால் புனையப்பட்ட ஆண்களின் சிந்தனை,செயல்பாடு ஆகியவற்றை மையமாகக் கொண்ட வரலாறாகவே இதுவரையிலும் இருந்து வந்துள்ளது. நிலைமை இதுவாக இருக்க வரலாறும் சமூகமும் எங்களையும் கட்டுப்படுத்துகின்றன. எங்களது வாழ்வையும் குறிப்பிட்ட வடிகால்களிலேயே செலுத்துகின்றன'' என்று ஆண்கள் அழுகுரலிடுவதில் எவ்வித நியாயமும் இருக்க முடியாது. ஆணாதிக்கம் என்பது சமுதாயம் முழுவதையும் ஆட்கொண்டுள்ள சித்தாந்தம்தான். ஆனால் இச்சித்தாந்தத்தை குறிப்பிட்ட ஆண்கள்தான் செயல்படுத்துகின்றனர். குடும்பம் என்ற அமைப்பு ஆண், பெண் ஆகிய இருவருக்கும் வரையறுக்கப்பட்ட பாத்திரங்களையும் அடையாளங்களையும் வழங்குகிறது. ஆனாலும் ஆண்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாத்திரம் அவர்களது ஆதிக்கத்தை உறுதி செய்து அவ்வாதிக்கத்தின் அடிப்படையில் ஆண்களின் பொருளாதார அதிகாரம், சமூக மேலாண்மை, பண்பாட்டு மேலாதிக்கம் முதலியவற்றை சாத்தியப்படுத்துகிறது. பெண்ணடிமைத்தனத்திற்கு தார்மீக பொறுப்பு ஏற்க மறுக்கும் ஆண்கள், அவ்வடிமைத்தனத்தைப் பற்றி அருவமான வகையிலும் 'அறிவார்ந்த' மேதாவித்தனத்துடனும் பேசினாலே புரட்சிகர பெண் நிலைவாத அரசியலை உருவாக்கிவிடலாம் என்று நினைக்கின்றனர் போலும்! பெண்ணடிமைத் தனத்தின் வரலாற்றிலிருந்து விலகி நின்று, பொதுப்படையாகவும், நமது

படிப்பகம்

www.padippakam.com

வரலாற்று-சமூகச்சூழலுக்கு சிறிதும் பொருந்திப் போகாத ஒருசில மேற்கத்திய சிந்தனைகளைக் கொண்டும் பெண்ணியம் பேசும் ஆண்கள் தங்களது நிலைப்பாட்டில் இருக்கக்கூடிய பார்வைக் கோளாறுகளையும் காழ்ப்புணர்வுகளையும் காணத் தவறுகின்றனர், காண மறுக்கின்றனர். இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் தெளிவற்றவையாகவும் கோர்வையற்ற நிலையிலும் காணப்படுகின்றன. இக்கருத்துகளில் ஒரு சிலவற்றை நாங்கள் சிரமப்பட்டு அடையாளங்கண்டுள்ளதால் அவற்றை விமர்சிக்கத் தலைப்படுகிறோம்.

1. பாலுறவு முறைகள் மாறியமைந்தாலே ஆண் பெண் உளவியல் வேறுபாடுகள் மறைந்து விடும்; மரபான பாலுறவு செயல்பாடுகளில் பெண் ஒடுக்கப்படுவது போல மரபு மீறிய பாலுறவு செயல்பாடுகளில் அவள் ஒடுக்கப்படமாட்டாள்; மாறாக அவள் தன்னைத்தானே அறியவும் தனது சுயத்தை உறுதிப்படுத்தவும் இம்மரபு மீறிய முறைகள் அனுமதிக்கும் என்ற கருத்துக்கள் இங்கு கூறப்பட்டுள்ளன.

எல்லாச் சமுதாயங்களிலும் எல்லா காலகட்டங்களிலும் ஆண்-பெண் உறவினை வடிவமைப்பது பெண்ணை அடிமைப்படுத்தும் வனமுறைச் செயல்தான். இவ்வன்முறைச்செயல் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே இறுக்கமான, திட்டவட்டமான உழைப்பின் பிரிவினையை புகுத்தியும், பெண்ணை போகப்பொருளாகவும் பயன்பாட்டுப் பொருளாகவும் ஆக்கியும் செயல்படுகிறது. இவ்வன்முறைச் செயலின் வக்கிரமான வெளிப்பாடுகள் ஆண்-பெண் பாலுறவினூடாகவும், பாலுறவில் நிலைநிறுத்தப்படும் ஆணின் அதிகாரத்தினூடாகவும் தம்மைக் காட்டிக்கொள்கின்றன. பாலுறவு முறைகளை மாற்றியமைப்பதன் மூலம் இந்த அடிப்படையான வன்முறையை எதிர்கொள்ள முடியுமா, என்ற கேள்வி எங்களிடையே எழுகிறது. ஏனெனில் இப்புதிய மரபு மீறிய பாலுறவு முறைகளை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு தமது ஆளுமையை உறுதிப்படுத்த அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள ஆண்கள் தயங்க மாட்டார்.

ஓரினப் புணர்ச்சியை பற்றியும் இங்கு சில கருத்துகள் முன் வைக்கப்பட்டுள்ளன. ஓரினப் புணர்ச்சி என்பதை குறிப்பிட்ட நபர்களின் பாலியல் தன்மை, விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒன்றாகவும், ஓரினப் புணர்ச்சியை நாடுவோரின் அடிப்படை உரிமைகளுடன் சம்பந்தப்பட்ட விஷயமாகவும் நாங்கள் காண்கிறோம். பெண் விடுதலைக்கும் ஓரினப் புணர்ச்சிக்கும் இடையே உள்ள உறவைப் பற்றி நமது பெண்களிடையே ஒரு உரையாடலின் சாயலே இன்று காணப்படுகிறது. இந்த உரையாடல் தொடர்ந்து நடைபெறும் என்றே நாங்கள் நினைக்கிறோம். ஆனால் இவ்வுரையாடலில் ஆண்கள் குறுக்கிட்டு அறிவுரை கூறுவதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

பாலுறவு பற்றிய விவாதத்தில் பாலுறவு என்ற பதம் ஒரு சில தனிப்பட்ட உடலுறுப்புகள் இணைவதைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது. தங்களது பாலியல் அடையாளத்தை உடலின் ஒரு உறுப்பின் மூலம் மட்டும் உறுதிப்படுத்தி வந்துள்ள ஆண்கள் பெண்களின் உடலை கூறு படுத்தி, அவ்வுடலை பொருளாகப் பாவித்து வந்துள்ளனர். நிறப்பிரிகையினர் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்கக்கூடும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. சராசரி ஆணைக்காட்டிலும் பெண்ணியம் பேசும் ஆணை நாங்கள் அதிகமாக சந்தேகிக்கிறோம்.

2. ஓரினப்புணர்ச்சி, சல்லாபம் பற்றியெல்லாம் ஒரு பெண் ஆவேசத்துடன் பேசியுள்ளார். ஆனால் அவரது சிந்தனையில்தான் எத்தனை முரண்பாடுகள்: ஒருபுறம் ஆணிடமிருந்து சுகத்தைப் பெறும் நிலையை பெண்கள் ஒழிக்கவேண்டும் என்கிறார். ஆனால் மறுபுறமோ இனப்பெருக்கத்தின் பொருட்டு ஆண்களுடன் உறவு கொள்ளலாம் என்கிறார். ஆணை ஒரு பயன்பாட்டுப் பொருளாகக்காண விழையும் இவர் ஒரு அருவமான 'தேவை'யின் பொருட்டு (இனப்பெருக்கம் என்பது ஆணாதிக்க அகராதியில் ஒரு 'தேவை'யாக வரையறுக்கப் பட்டுள்ளது) தானும் ஒரு பொருளாக சரிந்துவிடக்கூடிய அபாயத்தை உணர்ந்ததாகத் தெரியவில்லை. இது நாள் வரையிலும் 'இனப்பெருக்க'த்தின் பொருட்டுதானே நம்மை ஆண்கள் அடிமைப்படுத்தி வந்துள்ளனர். இனப்பெருக்கச் செயல்பாடுகளிலிருந்து விடுதலை யடையாமல் வேறு சில விடுதலைகளை நாம் பெற்றுதான் என்னபயன்!

அடுத்து, பெண்ணின் சுயம், இருப்பு ஆகியவற்றைப்பற்றி மேலதிக கவலையும் அக்கறையும் கொண்டுள்ள இவர் 'கருக்கலைப்பை'ச் சாதாரண நிகழ்வாகக் காண்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. குழந்தை பெற்றுக் கொள்வதும் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதும் பெண்களுக்குரிய அடிப்படை உரிமைகளில் ஒன்று என்பதை நாங்களும் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் இந்நாட்டு ஏழைப் பெண்கள் மீது திணிக்கப்படும் கருக்கலைப்பை எங்களால் ஏற்றுக்கொள்ளவும் முடியாது; சகித்துக்கொள்ளவும் முடியாது.

மேலும், கருக்கலைப்பு வழிமுறைகள், கருத்தடைச் சாதனங்கள்—இவை ஆண்களால் உருவாக்கப்பட்ட மருத்துவத்தின் விளைவுகள்; பெண்ணின் உடலை சோதனைக்களமாகவும், பிள்ளை பெறும் இயந்திரமாகவும் காணும் ஆண் நோக்கின் வெளிப்பாடுகளே. தனது உடலுடன் ஒவ்வொரு பெண்ணும் கொண்டுள்ள உறவு, தனது உடலை ஒரு முழுமையாக உணரும் மனோ

படிப்பகம்

www.padippakam.com

நிலை ஆசியவற்றைப்பற்றி பெண் நிலை வாதிகள் பக்கம் பக்கமாக எழுதியுள்ளபோதிலும், ஆண் நோக்கிலிருந்து பெண்ணியம் பேசும் போக்கு இங்கு வெளிப்பட்டுள்ளது மிகவும் வருந்துவதற்குரிய விஷயம்தான்.

3. குடும்பம் அழிய வேண்டும், சிதறடிக்கப்பட வேண்டும் .. ஆண்களின் இந்த ஆவேசத்தைக் கண்டு எங்களால் முறுவலிக்காமல் இருக்க முடிய வில்லை. குடும்பம் என்ற அதிகார மையத்தின் ஒடுக்குமுறையை எங்களைவிட வேறு யாரும் அதிகமாக அறிந்திருக்க, உணர்ந்திருக்க முடியாது. நான்கு சுவர்களுக்குள் நாள்தோறும் அச்சுறுத்தப்படுகிறோம். பலாத்காரப் படுத்தப் படுகிறோம். 'குடும்ப விளக்கு' 'தாய்' 'மனைவி' போன்ற பட்டங்களை சுமக்க இயலாது மீண்டும் மீண்டும் இறக்கிறோம். இன்று நாங்கள் குடும்ப எல்லைகளைக் கடந்து வெளியே வந்து ஓரளவிற்கு சமமாக சிந்திக்கவும் செயல்படவும் தொடங்கியுள்ள இந்த காலகட்டத்தில், எங்களை மீண்டும் அடிமைப்படுத்த, 'குடும்ப அழிப்பு' என்ற பதாகையை சுமந்து கொண்டு ஆண்கள் முன்வந்துள்ளதை நாங்கள் எப்படி புரிந்துகொள்வது? பெண்கள் போராடிப் பெற்றுள்ள சுதந்திரத்தை விலைபேச ஆண்கள் இன்று தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதைப் பார்க்கையில், உண்மையில், இவர்கள் என்ன நினைத்து, எதன் அடிப்படையில் செயல்படுகின்றனர் என்பது எங்களுக்கு விளங்கவில்லை. ''ஆண்-பெண் உறவுகள் தற்காலிகமானவை... இன்று இங்கே, நாளை அங்கே.. ''என்று சிறிதும் பொறுப்பின்றி பேசும் ஆண்கள் தங்களது 'வரலாற்று ரீதியான இச்சைக்கு புதிய தத்துவ நியாயங்களை கற்பிக்கத் தொடங்கியுள்ளனர் என்பது மட்டும் எங்களுக்கு தெளிவாகப் புரிகிறது.

குடும்பத்தை 'அழிக்க' வேண்டுமானால் ஆண்கள் முதலில் வீட்டிலும் வீட்டிற்கு வெளியேயும் தாங்கள் வகித்துவரும் பாத்திரங்களை விமர்சனத்திற்குட்படுத்த தயாராக இருக்கவேண்டும்; தங்களது ஒவ்வொரு அன்றாட செயலையும் விமர்சனம் செய்ய முன்வரவேண்டும். 'வீட்டுப் பணிகளை சமூக மயப்படுத்தலாம்.'' என்றுகூறி தப்பித்துக் கொள்ளாது, இந்த ''சமூக மயப்படுத்தலின்'' முதல் கட்டமாக வீட்டுப் பணிகளை பகிர்ந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும் ஒவ்வொரு ஆணும் தனது தாய், மனைவி, தங்கை, தமக்கை, காதலி ஆகியோருடன் சமமாக உரையாடவும், அப்பெண்களது கருத்துக்களை அறியவும் முற்பட வேண்டுமேயன்றி பெண்களின் 'ரட்சகர்களாக' (தத்துவ ரட்சகர்களாகக்கூட) தங்களை காட்டிக் கொள்ளக் கூடாது.

கம்யூன்கள், கூட்டு வாழ்வு முறைகள்-இவற்றில் ஆண்-பெண் பாத்திரங்கள் மாறியமைந்திருந்தனவா என்று பேசும் ஆண்கள் எதற்கும் ரோஸ் மண்ட் கான்டோரின் ''கம்யூன்ஸ்'' என்ற நூலை படித்து அந்நூலில் தரப்பட்டுள்ள செய்திகளை அறிந்துகொள்வது நல்லது.

4. பெண்கள்தான் தங்களைப்பற்றி சரியான சித்தாந்தங்களை உருவாக்கிக் கொள்ள முன்வர வேண்டும். ஆண்கள் உதவலாம் (உதவக் கூடாது என்பது சரியாகாது, ஆனால் பெண்கள் தான் முன்முயற்சி எடுக்க வேண்டும்...)

வரலாறு தோறும் ஆணாதிக்கத்தை எதிர்த்துப் பெண்கள் பேசியும், தங்களது ஆளுமை, சிந்தனைதிறன், உணர்ச்சிகளின் அழுத்தம் ஆகியவற்றை வெளிப்படுத்தியும் வந்துள்ளனர். பெண்களின் வெளிப்பாடுகளும், குமுறல்களும், அவர்களுக்கு இன்பம் அளித்தலையும் அவர்களது (எங்களது) அனுபவங்களை - மகப்பேறு, தனிமை, வெறுமை, அடிமைப் படுத்தப்படல், பலாத்காரப் படுத்தப்படல் என்பன போன்ற தனிச்சிறப்பான அலுவல்களை சார்ந்தவையாகவே இருந்து வருகின்றன. 'பெண் நிலை நோக்கு' ஆண் வாசகர் கூட்டத்தை மனத்தில் கொண்டு தனது நிலைபாடுகளை வெளிபடுத்துவதில்லை. ஆண்களின் தேவைகள், கட்டளைகள் மதிப்பீடுகள் முதலியவற்றால் (அவை 'முற்போக்கு'த் தனமானதாக இருந்தாலும் கூட) பெண்நிலை நோக்கு என்பது தீர்மானிக்கப்படுவதில்லை. நிறப்பிரிகை கட்டுரையாசிரியர்கள் இந்த எளிய உண்மையை அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. எரிக்கா யோங்...ஜெர்மேன் க்ரீயர்... என்ற 'பெண் நிலைவாத' எழுத்தாளர்களின் பெயர்களைக் காட்டி பெண்களை அச்சுறுத்த முயலும் போக்கே இங்கு காணப்படுகிறது. எரிக்கா யோங் என்றுமே மேற்கத்திய பெண் நிலை வாதிகளால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதையும் இன்று தாய்மையின் அருமை பெருமைகளை பெண் நிலைவாத சித்தாந்தமாக வரையறுக்கும் ஜெர்மேன்க்ரீயரின் சிந்தனையை கடந்து பெண் நிலைவாத சிந்தனை முன்னேறியுள்ளதையும் நிறப்பிரிகைக்கு நாங்கள் நினைவு படுத்த விரும்புகிறோம். பெண்கள், நாங்கள் எங்கள் போராட்டத்தின் தன்மையை, படைப்புகளின் உள்ளடக்கத்தை எங்களது அன்றாட போராட்ட அனுபவங்கள், நாங்கள் கடும்முயற்சிக்குப் பிறகு உருவாக்கியுள்ள சிந்தனை மரபு முதலியவற்றினைக் கொண்டு, எங்களது வாழ்வுக்கும் சித்தத்திற்கும் உகந்த வகையில், வடிவமைப்போம்.

முடிவாக, பெண்ணியம் கூட்டுக் கட்டுரையில் பெண்களின் குரல் மழுங்கடிக்கப்பட்டுள்ளதை நாங்கள் சுட்டிகாட்ட விரும்புகிறோம். கூட்டத்தில் பங்கேற்ற பெண்களில் பலர் இந்த நாட்டின் பெண் விடுதலை இயக்கங்களின் செயல்பாட்டிலிருந்து விலகி நிற்பவர்களாகவே எங்களுக்குப் படுகிறது. 'பெண்ணியம்' என்றவொரு அறிவு

படிப்பகம்

www.padippakam.com

வகையே பெண் விடுதலை செயல்பாட்டுடன் மிக நெருக்கமாக பிணைக்கப்பட்ட நிலையில் தான் இங்கும்சரி, உலகின் பிறபகுதிகளிலும்சரி, தன்னை சிந்தனை உலகிற்கு அறிமுகப்படுத்திக் கொண்டது. பெண்ணியம் பற்றிய நமது புரிதலை ஆழப்படுத்த நமது அரசியல் செயல் பாடும் அச்செயல்பாட்டிலுமாகவும், அதைச் சார்ந்தும் நாம் உருவாக்கிக் கொள்ளும்அறிவுமே உதவக் கூடியவை. ஏனைய 'கருத்துக்கள்' பிரச்சனையை குழப்பவும் ஆணாதிக்க சிந்தனையை வலுப்படுத்தவுமே உதவும்.

—இதழ் 8, மே, ஜுன் 92

ஒரு இடையீடு...

'எதிர்வினை' பகுதியில் முன்வைக்கப்படும் மாற்றுக் கருத்துக்கள் மீது உடனடியாக எங்கள் 'நிலைபாட்டை'ச் சொல்லி 'முடித்துவிடும்' வழக்கம் நிறப்பிரிகைக்குக் கிடையாது என்பதைத் தொடர்ந்து வாசித்து வரும் தோழர்கள் அறிவர். கூட்டுக் கட்டுரை போலவே பல்வேறு கருத்துக்களும் மோதும் களமாக எதிர்வினை பகுதி அமைகிறது. இறுதியாக Sum up செய்வது கூடக் கிடையாது. எனினும் மேற்கண்ட ''பாரதி சுட்டும் விழிச் சுடர்'' இதழைச் சேர்ந்த பதினைந்து பெண்விடுதலைக் 'களப்பணியாளர்களின்' கூட்டுக் கட்டுரை எழுதப்பட்டுள்ள தொனி, செய்திகளைத் திரித்தல் ஆகியவை குறித்து ஒரு சிலவற்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

1. பெண் விடுதலை கூட்டுக் கட்டுரை விவாதத்தில் பங்கேற்றவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் நேரடியாக அன்றாட அரசியல்/சமூகக் களப் பணிகளில் ஈடுபட்டுள்ளோர். நிறப்பிரிகைக்கும் மற்ற சிறு பத்திரிகைகளுக்கு முள்ள முக்கியமான வேறுபாடுகளில் ஒன்று அதன் வாசகர்களில் பெரும்பாலோர் களப்பணியாளர்கள் என்பதுதான். '64 சிந்தனையாளர்' 'அறிவார்ந்த மேதாவித்தனம்' என்றெல்லாம் அடிக்கடி அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் இதைச் சொல்ல வேண்டியுள்ளது.

2. கூட்டு விவாதத்தில் யார் வேண்டுமானாலும் கலந்து கொண்டு தம் கருத்துக்களை முன் வைக்கலாம் என்பது நடைமுறை. நி.பியில் வெளியிட்ட அழைப்பு தவிர சுட்டும் விழிச்சுடர் ஆசிரியர் குழுவிற்கும் கூட கூட்டு விவாத அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டது. இந்தக் கூட்டு விவாதத்தில் நிறப்பிரிகையின் பங்கு என்பது கருத்துக்களைத் தொகுப்பது மட்டுந்தான் (இதையும் கூட யார் வேண்டுமானாலும் செய்யலாம் என அறிவித்துள்ளோம். பெண்ணியம் கட்டுரையை பாண்டி பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ராமசாமி தொகுத்தார்.) இது தவிர விவாதத்திற்கு வந்துள்ள யார் ஒருவரையும் போல நிறப்பிரிகை தனது கருத்துக்களையும் முன் வைக்கிறது அவ்வளவுதான். மற்றபடி யாரையும் அதட்டிக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளச் செய்யும் நோக்கம் நி.பிக்குக் கிடையாது.

3. 'வரதட்சினை எதிர்ப்பு' போன்ற உடனடி நடவடிக்கைகளை நி. பி. ஆசிரியர் குழுவோ விவாத முடிவில் ஒலித்த கூட்டுக் குரலோ மறுக்கவில்லை. விவாதத்தை அடுத்த தளத்திற்கு உயர்த்துவதென்பது 'இதர ஒடுக்குமுறைகளுக்கெதிரான நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கிக் கொள்வதற்கு வாய்ப்பாகி விடக் கூடாது' என்கிற கருத்தை நி. பி. ஆசிரியர்களே விவாதத்தில் முன் வைத்துள்ளனர்.

4. சுட்டும் விழிச்சுடரின் 15 களப்பணியாளர்களின் மிகப் பெரிய மோசடி, கூட்டுக் கட்டுரையில் ஒலித்த பலகுரல்களை ஒற்றைக் குரல்போல முன்வைத்து அதற்குப் 'பதிலளிக்க' முனைந்திருப்பதுதான். பெண்கள்தான் குழந்தைகளை வளர்க்க முடியும் என்கிற கருத்து முதல் ஓரினப் புணர்ச்சி வரை பல்வேறு விதமான கருத்துக்கள் அங்கே முன் வைக்கப் பட்டுள்ளன. இவற்றில் ஒரு சிலவற்றைத் தேர்வு செய்து அதனை நி.பி. யைச் சேர்ந்த ஆண்களின் கருத்தாக முன் வைத்திருப்பது என்ன நியாயம்? ஒன்று கூட்டுக் குரலாக ஒலித்த கருத்துக்களை எடுத்துக் கொண்டிருக்கலாம். அல்லது கருத்துரைத்தவரின் பெயரைக் குறிப்பிட்டு மறுத்திருக்கலாம். மாறாக என்ன காரணத்திற்காக எல்லாக் கருத்துக்களையும் நி. பி. கருத்தாக முன் வைத்துள்ளீர்கள்?

5. மறுப்பதற்காக எடுத்துக்கொண்ட கருத்துக்களையும் கூட நீங்கள் முழுமையாக மறுக்கவில்லை. 'இந்தக் கேள்வி எங்களிடையேயும் எழுகிறது' 'ஓரினப் புணர்ச்சியை அடிப்படை உரிமை சம்பந்தமான பிரச்சினையாகக் கருதுகிறோம்' 'குடும்பத்தின் ஒடுக்குமுறையை எங்களைவிட யாரும் உணர்ந்திருக்க முடியாது'— என்கிற ரீதியில்தான் 'மறுப்புகள்' சொல்லப்பட்டுள்ளன. பின் சு. வி. சு. காரர்கள் என்னதான் சொல்கின்றனர்? 'இவற்றையெல்லாம் நாங்கள் பேசிக் கொள்கிறோம் நீங்கள் யார் இதைப் பேச?' என்பதுதான். ஆக பெண்ணியம் தொடர்பான கருத்துக்களை ஆண்கள் பேச முடியுமா முடியாதா என்கிற ஒரு உருப்படியான கேள்வியை மட்டுமே சு. வி. சு. வின் பதில் கூட்டுக் கட்டுரை முன் வைத்துள்ளது. இத்தகைய விவாதங்கள் வரவேற்கப்பட வேண்டியவையே. நி. பி. கூட்டு விவாதத்திலேயே கூட அஸ்வகோஷ் இதனைத் தொட்டுள்ளார். கோ. ராஜாராமும் (நி. பி. 5) இது குறித்துப் பேசுகிறார். இந்த விவாதம் தொடர்வதை நாங்கள் வரவேற்கிறோம்.

6. நாங்களும்தான் இந்தக் கருத்துக்களையெல்லாம் வைத்திருக்கிறோம் எனச் சொல்

படிப்பகம்

www.padippakam.com

கிறீர்கள். ஆனால் இவற்றை விவாதமாகவாவது கொண்டு வந்திருக்கலாமே. களப்பணி என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளக் கூடாது. நாங்கள் விசாரித்தவரை அப்படி ஒன்றும் பெரிய களப்பணிகளில் நீங்கள் ஆழ்ந்து போனதாய்த் தெரியவில்லை. ஒருவேளை இத்தகைய கருத்துக்கள் உடனடிக் களப்பணிகளைப் பாதிக்கும் என நீங்கள் அனுபவ பூர்வமாய் அறிந்திருந்தால் அவற்றையெல்லாம் நீங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது முக்கியம் எனத் தோன்றவில்லையா? அந்த நோக்கில் உங்கள் கட்டுரை இருந்திருந்தால் எவ்வளவு பயனுடையதாய் இருந்திருக்கும்?

7. 'எரிகாயோங்' என்றெல்லாம் பெயர்களைக் காட்டி அச்சுறுத்த வேண்டாம் என எங்களைச் சொல்லிவிட்டு 'ரோஸ்மண்ட் காண்டோரை'த் தெரியுமா என மிரட்டி களப்பணிக்கும் மேலான உங்கள் அறிவு ஜிவித் தன்மையையும் நிருபித்து விட்டீர்கள். போகட்டும் 'கம்யூன்' பற்றிய அவரின் அல்லது உங்களின் விமர்சனங்களை நீங்கள் நி. பி. யில் எழுதாவிட்டாலும் சு. வி. சு. விலாவது எழுத வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

8. சில விசயங்களை நீங்கள் விளக்கி எழுதலாம்—(நீ யார் ஆண் எனக்கு அறிவுரை சொல்வது எனச் சீறாதீர்கள் சும்மா வேண்டுகோள் தான்)—அவற்றில் ஒன்று ''சராசரி ஆணைக் காட்டிலும் பெண்ணியம் பேசும் ஆணை நாங்கள் அதிகமாக சந்தேகிக்கிறோம்'' என்பது. நீங்கள் எல்லோரையும் சந்தேகிப்பது மட்டும் தான் புரிகிறது. அதற்குமேல் புரியவில்லை.

9. கடைசியாக ஒன்று. சரி சு. வி. சு. வின் 15 களப்பணியாளர் CUM அறிவு ஜீவிகளின் பெயர்களை வெளியிட்டிருக்கலாமே ஒரு வேளை 15 பேருக்காகக் கட்டுரை எழுதியவர் (விவாதித்து தான்) தனது பெயர் வருவதை விரும்பவில்லையா? இந்த ஆணாதிக்கச் சமூகம்தான் பெண்களை முகமற்றவர்களாகவும் பெயர்களில்லாதவர்களாகவும் ஆக்கிவிடுகிறது. நீங்களுமா இப்படி?

O —நிறப்பிரிகை.

பெண்ணியம் விவாதம்

எதிர்வினை-5

ஜி. கே. ராமசாமி பெங்களூர்

நிறப்பிரிகை-4ல் உள்ள பெண்ணியம் பற்றிய கூட்டுக்கட்டுரை ஒரு சிலரின் தவறானகருத்துக்களுக்கும், அரை வேக்காட்டு சிந்தனைகளுக்கும் அங்கீகாரம் தேடும் முயற்சியோ என எண்ணத் தோன்றுகிறது.

பெண்-ஆண் என்ற பாகுபாடு உயிரியல் (Biolegical) அடிப்படையில் உள்ளது. ஆண்பால்-பெண்பால் (male sex and female sex) என்று பிரிக்கிறோம். உலகில் எலலா சமுதாயங்களில் உள்ள ஆண்களும்-பெண்களும் ஒரே மாதிரியான பால் அம்சங்களை (sex characteristics) கொண்டுள்ளனர் எனலாம். பெண்மை (feminine gender) என்பது சமூகத்தால் காட்டப்படுகிறது (Gender is Socialy constructed) எனவே பெண்மை-ஆண்மை எனும் இரண்டு எதிர்மறைகளை அந்தந்த சமூக கலாச்சாரங்களில் வைத்தே புரிந்து கொள்ளவேண்டும். எல்லாச் சமுதாயங்களிலும் பெண்மை என்பது ஒரே மாதிரி இல்லை. முற்றிலும் வேறானபண்புகளைக் கொண்டுள்ள பெண்மைகள் உண்டு. அதேபோல் ஆண்மை என்பதும் பெண்மை என்ற நோக்கில் பேசும் போது இந்து பெண்கள் பற்றிய பிரச்சனை, முஸ்லீம் பெண்கன்பற்றிய பிரச்சனை, என பார்த்தாக வேண்டும்; அந்தந்த கலாச்சாரம் சார்ந்தது என்பதால்.

பெண்மை என்று அருபமாக பார்ப்பது தவறான வழியாகிறது. பெண்களின் பிரச்சனை என்பது அச்சமுதாயத்தின் அடிப்படையுடன் சேர்ந்தப் பிரச்சனை. ஒரு சமுதாயத்தில் ஆண்-பெண்என்ற இரண்டு பிரிவினருக்கும் சமூகம் கொடுத்துள்ள பாத்திரங்கள் (social roles) அவைகளின் அந்தஸ்து (statuds) மற்றும் பலம் (power) ஆகியவற்றுடன் ஒன்றோடொன்று தொடர்புகொண்ட பிரச்சினை. இவைகளே சமூக அமைப்பாகின்றன. எனவேதான் பெண் பிரச்சனை என்பது ஒரு சமுதாயத்தின் அடிப்படையுடன் இணைந்தது என்கிறோம்.

ஒரு சமுதாயத்தின் அடிப்படையிலிருந்து எழும் ஒரு பிரச்சினையை விவாதிக்கும்போது நாம் கட்டாயமாக சில தகவல்களை வைத்துக் கொண்டு பேச வேண்டும். அல்லது அவைகள் அவசியமாகிறது என்ற உணர்வாவது வெளிப்படவேண்டும். ஒரு சமூக கலாச்சார அமைப்பின் care-லிருந்து எழும் பிரச்சனையைப்பற்றிப் பேசும்போது மானுடவியல், சமூகவியல், மனோவியல், உடற்கூறியல் என பல அறிவியல்களை நாம் சிறிதேனும் அறிந்திருந்தால் விவாதம் வேறுவிதமாக இருந்திருக்கும்; மாந்தனை எந்திரத்தனமாக பார்க்கும் நிலை விவாதத்தில் தூக்கலாக இருந்திருக்காது; குடும்பம் எனும் நிறுவனத்தைப் பற்றிய அரைகுறை கருத்துக்கள் முன் வந்திருக்காது.

இறுதியாக, பெண் நம் சமூக அமைப்பில் முகமற்ற அடையாளம் கிடைக்காத மனித ஜீவி இந்தநிலையை மாற்றவேண்டும். அப்படியான மாற்றம் ஆண்-பெண் இருவருக்கும் நல்லதே.

படிப்பகம்

www.padippakam.com

பெரியார், பூலே வழியில் பெண்ணுரிமை

—விஜி

[illegible] அறிகுறி [illegible] இந்த [illegible] வியல் [illegible] வியல், [illegible] அறிதல் என்று [illegible] [illegible] முடியும். [illegible] என்று கிட்டும்.

மக்கள் தொகையில் சரிபாதி உறுப்பினர்களாகிய பெண்களை ஏங்கல்ஸ் தொழிலாளி வர்க்கத்தின் தொழிலாளி என்று குறிப்பிட்டுள்ளார். ஆம் அவர்கள் சுரண்டப்படுபவர்களாலும் சுரண்டப் படுபவர்கள் பெண்கள். பெண்களின் உரிமைகள் மீட்கப்பட்டால்தான் இச்சமூகம் சமத்துவ சனநாயக சமூகமாகக் கொள்ளப்படும் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது இதனை எவ்வாறு நடைமுறையில் சாத்தியப் படுத்தப் போகிறோம். என்பதுதான் இன்று நமக்கு முன்னுள்ள பிரச்சினை. மாமேதை லெனின் தலைமையிலான சோவியத் யூனியனிலும், மாமேதை மாவோவின் தலைமை யிலான சீனத்திலும் உருவான புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களிலும் கூட பெண்ணுரிமை என்பது தோல்வி கண்ட பிரச்சினை. நாளை நாம் உருவாக்கப்போகும் வாழ்வுரிமைப் பெற்ற தமிழ்ச் சமூகம் தீண்டாமைக் கொடுமை, சாதிக் கொடுமை மற்றும் பாலியல் ஒடுக்குமுறைகளற்ற ஒரு சமூகமாக மலர வேண்டுமென்றால் இன்று வரை உலகில் கற்றுக் கொண்ட அனைத்துப் படிப்பினைகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு செயலில் இறங்கவேண்டும். தீண்டாமைக் கொடுமைகளும், பெண்ணடிமைத் தனமும் அறுபதுஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போல இப்போது இல்லாவிட்டாலும், புதிய வடிவங்களில் நிலவத்தான் செய்கின்றன. சமூகத்தின் சரிபாதி உறுப்பினர்களாகிய பெண்களையும், ஆறில் ஒருபங்கு தாழ்த்தப்பட்ட வர்களையும், சிறுபான்மையினரையும் உள்ள டக்கிய ஒரு தேசிய விடுதலைதான் சரியான சமத்துவ சனநாயக அமைப்பை உருவாக்க முடியும்.

பார்ப்பனீயத்தின் பரிசு!

மனுதர்ம விதிப்படி மனைவியைக் கணவன் அடிக்கலாம். அவனுக்கு அதற்கு உரிமை உண்டு. மீறி உச்சரித்துவிட்டாலோ அந்த நாக்கை அறுக்க வேண்டும், கேட்டுவிட்டாலோ காதை அறுத்துவிட வேண்டும். தந்தை அல்லது சகோதரன் யாரிடம் ஒப்படைக்கிறார்களோ சாகும்வரை அவனுக்குக் கீழ்படிந்து களங்கம் கற்பிக்காமல் கற்போடு வாழ வேண்டும். வீட்டு வேலைகள் செய்யும் போது மகிழ்ச்சியோடும், பாத்திரங்களைச் சுத்தம் செய்யும்போது கவனத் துடனும் செலவினங்களைச் சிக்கனமாகவும் செய்ய வேண்டும். இதுவே பெண்களின் உன்னத லட்சியங்களாக உருவாக்கப்பட்டுள்ளது. பெண்களைச் சிந்திக்கவே விடக்கூடாது. சிந்திக்க நேரமின்றி வீட்டு வேலைகள் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று கூட இச்சமூகத்தில் பேசப்படுகிறது. இதனடிப்படையில் உருவான இந்தியச் சமூகத்தில்தான் பெண்ணின் மீது எத்தனை விதமான பாலியல் ஒடுக்குமுறைகள்! வரதட்சணைக் கொடுமை, கருவிலேயே கல்லரைக் கட்டப்படுதல், தப்பிப்பிழைத்தால் சிசுவிலேயே கொன்றுவிடுதல், அப்படியும் பிழைத்து வளர்ந்தால் ஒவ்வொரு கட்டத்திலும் இரண்டாம் தரமான வாழ்க்கை முறை! குடும்பத்திற் குள், சமூகத்தில் பள்ளிக் கூடத்திற்குள், அலுவலகத்திற்குள் ஏன் படுக்கையறையிலும் கூட பெண் இரண்டாம் தரமானவள். அவள் உணர்வுகள் மதிக்கப்படுவதில்லை.

அவள் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதில்லை. அவள் உழைப்பு தந்தை, கணவன், சகோதரன் மற்றும் சமூகத்தால் சுரண்டப்படும். அவள் உடல் வணிகச் சந்தையில் விற்கப்படும். வாய்ப்புக் கிடைத்தாலும், வாய்ப்புக் கிடைக்கா விட்டாலும், வாய்ப்பை உருவாக்கிக் கொண்டு பாலியல் ரீதியாக பலாத்காரம் செய்யலாம். இதனை இச்சமூகம் மற்றும் அரசு கண்டுகொள் ளாது. விழித்துக் கொண்ட பெண்கள் தங்களது சக்தியை திரட்டி அதை ஒரு பிரச்சினையாக்கி னாலும் கூட பாதகம் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்காது தொடர்ந்து போராடினால் நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்யும். உச்சநீதிமன்ற நீதிபதி ரெத்தினவேல் பாண்டியன் சுமன் ராணி என்கிற பெண் காவல் துறையால் கற்பழிக்கப்பட்ட வழக்கில் 'ஒருமாதிரியானவள் ஒழுக்கக் கேடானவள்' எனச் சொல்லி கற்பழிக்கப்பட்டவர்களின் தண்டனையை குறைத்தார். இதைத்தான் இன்று காவல்துறை அதிகாரிகள் அண்ணாமலை நகர் பத்மினி வழக்கிலும் சொல்லுகின்றனர்.

காங்கிரஸ் ஆட்சியிலே...

முன்னாள் உள்துறை அமைச்சர் சுபோத்கான் சகாய் பாராளுமன்றத்தில் ஒரு புள்ளிவிபரம் சமர்பித்தார். அதில் 1987-ஆம் ஆண்டிலிருந்த கற்பழிப்புகள் பாலியல் பலாத்காரங்கள் மற்றும் வரதட்சணை சாவுகள் ஒவ்வொரு வருடமும் அதிகமாகிக் கொண்டே வருவதாய் கூறியுள் ளார். வேறு எந்தத் துறையில் முன்னேற்றம் காணப்படுகிறதோ இல்லையோ மேற்கூறிய கொடுமைகளில் எத்தனை முன்னேற்றம் பாருங் கள்! தஞ்சை மருத்துவக் கல்லூரி விடுதி மற்றும் சேலம் மருத்துவக் கல்லூரி விடுதியிலும் மாணவி யர்கள் கொல்லப்பட்டார்களே.

குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்களா? ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளை துருவித்துருவி கண்டுபிடித்த காவல் துறையின்

படிப்பகம்

www.padippakam.com

திறமை இந்த விஷயத்தில் எங்கே போனது? அமைச்சரே ஒருபுள்ளி விபரம் கொடுக்கிறார். 10 சதவிகித வழக்குகளில் தான் குற்றவாளிகள் தண்டிக்கப் படுகின்றனராம். பத்து ஆண்டுகளுக்கு முன்பு பாக்பாட்டில் **மாயாதியாகி** என்ற பெண்ணின் கணவரைக் கொன்று அவரைத் தெருவில் நிர்வாணமாக அழைத்துச் சென்றார்களே! அதற்கு காரணமான காவல்துறை ரவுடிகளுக்கு உரிய தண்டனை ஏன் வழங்கப்படவில்லை' சட்டமும் சட்டத்தை விளக்குபவர்களும் ஆணாதிக்கச் சமூகப் பிரதிநிதிகளாக அமைந்து விட்டதுதானே இதற்கெல்லாம் காரணம்.

நீதித்துறை என்ன சொல்கிறது?

பாலியல் வன்முறைகள் என்பது பொது இடங்களைக் காட்டிலும் அந்தரங்கமான சூழல்களிலும், அலுவலக அறைகளிலும், மற்றும் லாக்கப் ரூம்களிலும் தான் அதிகம் நடைபெறுகின்றன. இதனை நிரூபிப்பதற்கு சாட்சிகள் கொண்டுவா என்றால் பாதிக்கப்பட்ட பெண் எங்கே போவாள்? பாதிக்கப்பட்ட பெண்ணின் கடந்த கால வாழ்க்கையில் தனியாக இருந்தாளா? இல்லை, திருமணத்திற்கு அப்பால் உறவு கொண்டவளாக இருந்தாளா?என்பதை எல்லாம் தீவிரமாக ஆராய்ச்சி செய்து இவர்களின் ஒழுக்க மதிப்பீடுகளின்படி அவள் ''ஒரு மாதிரியானவள்'' என்றால் கற்பழிப்பது நியாயம்தான் என்று சொல்லும் சமூகம் இது. இவர்கள் செய்யும் இன்னொரு ஆராய்ச்சி: கற்பழிக்கும்போது இணங்கினாளா? இல்லையா? இதெல்லாம் எவ்வளவு ஆபாசமான மனிதத்தன்மையற்ற ஆராய்ச்சி! நான்கு பேர்கள் சேர்ந்து கொண்டு கற்பழிக்க வரும்போது, உடலையும் உயிரையும் காப்பாற்றிக் கொள்ள 'இணங்கிப் போ' என்கின்றனர் மருத்துவர்களும் காவல்துறை அதிகாரிகளும் ஆனால் வேலியே பயிரை மேயும் போதும் குற்றவாளிகளைக் காக்கத் துடிக்கும் போதும் இணங்கினாளா? இல்லையா? என ஆராய்ச்சி செய்கிறது காவல்துறை.

மாயாதியாகி விஷயத்திலும் சரி, சுமன்ராணி விஷயத்திலும் சரி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனைகள் இல்லாமல் போய் விட்டது. ஆனால் ஐதிராபாத்தில் **ரமீரா பீவி** என்கிற பெண் காவல்துறையால் கற்பழிக்கப்பட்டு கணவரும் கொல்லப்பட்டபோது குற்றவாளிகள் தப்ப முடியவில்லை. இதற்குக் காரணம் **ஸ்திரீ சக்தி** சங்காதனா (பெண்கள் சக்தி சங்கம்) என்கிற சுயேச்சையான பெண்கள் அமைப்பு இப்பிரச்சினையை எடுத்துப் போராடியும் வழக்காடியும் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத் தந்தது.

அமைப்பு !

மற்றொரு அமைப்பான **ஷேக்தாரி சங்காதனா** என்ற பெண்கள் அமைப்பு மராட்டியத்தில் செயல்பட்டு வருகிறது. இரண்டாண்டுகளுக்கு முன் 2000 பெண் பிரதிநிதிகள் அடங்கிய மாநாடு ஒன்றை அது நடத்தியது. கிராமப் புறங்களில் பெண் அடிமை எதிர்ப்பு மற்றும் பெண்களுக்கான சொத்துரிமைகளுக்காகப் போராடுவது என்பது அவர்களின் தீர்மானம். இவர்கள் செயல்படக் கூடிய கிராமங்களில் பெண் பற்றியப் பொய்மையான நம்பிக்கைகளை (புனைவுகளை) விளக்கி, அவர்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கூறி குடும்பச் சுரண்டல், கணவன் அதிகாரம், மனைவியை அடித்தல் மற்றும் சொத்துரிமையை மறுத்தல் ஆகியவற்றிற்கு எதிராகப் பிரச்சாரம் செய்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மாதிரி கிராமங்களை உருவாக்குகின்றனர். இதற்கு **'ஜோதிபா கிராமம்'** எனப் பெயரிடுகின்றனர். மக்கள் நம்பிக்கையைப் பெற்று மூன்றாவது அணி ஒன்று தமிழகத்தில் உருவாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நாம் செல்வாக்காக இருக்கும் பகுதிகளிலேனும் இத்தகைய மாதிரி கிராமங்களை உருவாக்க முயற்சிக்க வேண்டும். இதற்கு அடிப்படை தேவைகள் இரண்டு.

ஒன்று: பெண் விடுதலையின் முக்கியத்துவத்தைக் கட்சி அங்கீகரிக்க வேண்டும். பெண்ணுரிமைக்காக உருவாக்கக் கூடிய அமைப்பு முற்றும் முழுதாக பெண்களின் அமைப்பாக சுயேச்சையுடன் செயல்படக் கூடியதாக அமைய வேண்டும். அவை ஷேக்தாரி சங்காதனா, ஸ்திரீ சக்தி சங்காதனா போலச் சுயேச்சையாக செயல்பட வேண்டும். மற்ற கட்சிகளின் மாதர் அமைப்புகள் போல கட்சிகளின் தொங்கு சதையாக கட்சிகாரர்களின் மனைவிமார்களின் மனமகிழ் மன்றங்களாக இல்லாமல் பெண்களின் பிரச்சினைகளை எடுத்துப் போராடக் கூடிய போர்க்குணமிக்க, முற்றிலும் சுயேச்சையாக செயல்படக்கூடிய நிறுவனமாக இருக்க வேண்டும்.

இரண்டு: பெண் விடுதலைப் பற்றி சரியான கருத்துக்கள், பார்வைகள் குறித்த தெளிவுகள் வேண்டும். இது மிகவும் அவசியம். ஏனெனில் பெண் விடுதலை என்றால் வரதட்சணைக் கொடுமை பெண் சிசுக்கொலை, ஆபாச சுவரொட்டி மற்றும் லாக்கப் கற்பழிப்புகள் ஆகிய இவைகளைப் பற்றி பேசுவது என்பதாக மட்டுமே தமிழ் சூழலில் இயங்கி வரும் மாதர் அமைப்புகள் பார்க்கின்றன. இந்தக் கொடுமைகளுக்கு எல்லாம் அடிப்படையான தந்தைவழி ஆணாதிக்கச் சமூக மதிப்பீடுகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது குறித்த பார்வைத் தெளிவு கிடையாது. நல்ல வேளையாக சமீப கால தமிழ்ச் சூழலில் பல வரவேற்கத்தக்க மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. தமிழ் சிந்தனைச் சூழலில் முக்கிய தடம் பதித்துள்ள ''நிறப்பிரிகை'' என்னும் சிற்றிதழில் நடைபெறும் விவாதங்கள் இதற்கு ஒரு சாட்சி. இந்த இரண்டாவது அம்சத்தைச் சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

படிப்பகம்

www.padippakam.com

பெண் விடுதலை இயக்கம்

வளர்ச்சியடைந்த ஐரோப்பியாவில் உள்ளது போல தொழில் புரட்சி, சனநாயகமாதல், பெண் விடுதலை போன்றவை இந்தியாவில் இல்லை என்பது நாமறிந்த ஒன்று. இது தவிரவும் வேறு எங்கைக் காட்டிலும் பார்ப்பனியமும் இந்துமதமும் பெண்களை அதிகமாக இழிவு செய்து அடிமைப்படுத்தி குடும்பச் சிறைக்குள் இங்கு பூட்டிவைத்துள்ளன. இந்தியாவிற்கே உரியதான சாதியத்திற்கும் பெண்ணடிமைத் தனத்திற்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. பெண்களுக்கே உரிய உடல் நிகழ்வான மாதவிடாய்ப் பிரச்சினையை தீண்டப்படாதப் பிரச்சினையாக்கி ஒதுக்கி வைக்கும்மரபு உலகில் வேறு எங்கும் இல்லை. மாதவிடாய்க்கு தீட்டு என்ற சொல் நாம் பெருமை கொள்ளும் தமிழைத் தவிர வேறு எந்த மொழியிலும் இல்லை. இத்தகைய சூழலில் இங்கு பெண் விடுதலைக் கருத்துக்கள் ஆங்கிலேயர்களின் இந்திய வருகைக்குப் பிறகு கல்வி பெறும் வாய்ப்பை பலரும் அடைந்தவுடன் தான் தோன்றியது பெண் விடுதலைக் கருத்துக்கள் தோன்றிய இவ்வரலாற்றை இரு போக்குகளாகப் பிரிக்கலாம்,

முதல் போக்கு: ராஜாராம் மோகன் ராயர், வித்தியாசாகர், ரனடே போன்றோர் பேசிய கருத்துக்களையும் கொண்டு வந்த சீர்திருத்தங்களையும் இந்த வகையில் அடக்கலாம். இவர்கள் அனைவரும் உயர்சாதிக் கல்வியாளர்கள். இன்னும் வெளிப்படையாகக் கூறினால் பார்ப்பனர்கள். உடன் கட்டை ஏறுதல் எதிர்ப்பு, விதவைத் திருமணம் இளமைத் திருமணத் தடை, பெண்கல்வி, சொத்துரிமை ஆகியவை தொடர்பாக மிக இடர்பாடுகளுக்கு இடையில் போராடி முற்போக்கான சட்ட திருத்தங்களையும், மன மாற்றங்களையும் இவர்கள் கொண்டு வந்தனர். இவர்கள் அனைவரும் இந்தியச் சமூகம், பார்ப்பனியம் மற்றும் இந்துமதம் ஆகியவை குறித்து உயர்வான கருத்துக்களைக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்து மதத்தைச் சீர்த்திருத்தி மீண்டும் புனிதமாக்க வேண்டுமென பாடுபட்டவர்கள், ஆரிய சமாஜம், பிரும்ம சமாஜம் போன்ற அமைப்புகளை உருவாக்கியவர்கள். **''மாறிவரும் சமூகச் சூழலில் இளமைத் திருமணம் விதவை மறுமணத் தடை ஆகியவை இந்து சமூக அமைப்பையும் குடும்ப நிறுவன அமைப்பையும் சிதைத்து விடக் கூடாது என்பதுதான்** எங்கள் நோக்கம்'' என வெளிப்படையாகக் கூறியவர்கள். உயர் சாதிப் பெண்கள் விதவை மறுமணத் தடையால் தாசிகள் ஆகிவிடக் கூடாது. அதனால் குடும்ப நிறுவனம் சீர்குலைந்து விடக்கூடாது என்பது தான் அவர்கள் கவலை.

இரண்டாவது போக்கு: மராட்டியத்தில் **ஜோதி பாபூலேயும்** தமிழகத்தில் **தந்தை** பெரியாரும் பெண் விடுதலைப்பற்றி தீவிரமாகப் பேசினார்கள். இவர்கள் இருவரும் பார்ப்பனர்கள் அல்லாதவர்கள் மட்டுமல்ல. சாதீயம் மற்றும் தீண்டாமையைக் கடுமையாக எதிர்த்தவர்கள். பூலேதான் முதன் முதலில் சாதியத்திற்கும் பெண்ணடிமைத் தனத்திற்கும் உள்ள உறவை வெளிப்படுத்தியவர். இன்று நிறப்பிரிகை விவாதங்கள் போன்ற வற்றில்வெளிப்படும் தீவிரமான கருத்துக்கள் எல்லாம் மிகச் சாதாரணமாகவே மகாத்மா பூலேயிடமும் தந்தை பெரியாரிடமும் காணப்பட்டுள்ளது, சாதியத்திற்கும் பெண்ணடிமை தனத்திற்கும் மட்டுமல்ல **பெண்ணடிமைத் தனத்திற்கும் குடும்ப அமைப்பிற்கும். பெண்ணடிமைத் தனத்திற்கும் கற்புக்கும். பெண்ணடிமைத் தனத்திற்கும் ஒழுக்க மதிப்பீடுகளுக்கும்** உள்ள உறவுகளை முதல் முதலில் இவர்கள் வெளிப்படுத்தினர். பாரதி கூட கற்பை ஆண்/பெண் இருவருக்குமாய் ஆக்கினான். ஆனால் இவர்களோ கற்பெனும் கருத்தாக்கத்தையே முற்றிலுமாக தகர்த் தெரிந்தனர். பூலே தனது இறுதிக்கால எழுத்துக்களில் பாலாதிக்கம் சார்ந்த மொழியைத் தவிர்த்தார் எனவும் ''சர்வஜனிக் சத்திய தர்மா'' என்ற புத்தகத்தில் பால்சாரா மொழி நடையைப் (அவன், அவள் என்கிற பால் வித்தியாசமின்றி) பயன்படுத்தினார் எனவும் **கெயில் ஓம்வெத்** குறிப்பிடுகின்றார்.

இன்று தமிழ்ச் சூழலில் பேசப்படும் பெண விடுதலைத் தொடர்பான கருத்துக்களை இந்த இரு போக்கிற்குள் உட்படுத்தலாம்.

ஒன்று: **ஒழுக்க மதிப்பீடுகள், குடும்பம், கற்பு போன்ற நிறுவனங்கள்தான் பெண்ணடிமைத் தனத்திற்கு மூலாதாரமாய் இருக்கிறது என்பதைக் கண்டு கொள்ளாமல் வரதட்சணைக் கொடுமை பெண் சிசுக்கொலை மற்றும் ஆபாச சுவரொட்டி ஆகியவற்றை மட்டும் எதிர்க்கும் போக்கு.**

இரண்டு: பெண்ணடிமைத் தனத்திற்கு மூலாதாரமான ஒழுக்க மதிப்பீடுகள், மற்றும் அவற்றின் குறியியல் செயல்பாடுகளை (புடவை கட்டுதல், தாலி அணிதல், தாய்மை) ஆகியவற்றை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதோடு மேற்கூறிய உடனடிக் கொடுமைகளையும் எதிர்த்துப் போராடுதல், குறிப்பாக நிலவும் தந்தை வழிச் சமூக ஒழுக்க மதிப்பீடுகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தல் மற்றும் போராடுதல்.

பெண் விடுதலையைச் சரியாக பெரியார் பூலே வழியில் முன்னெடுக்கும் போது அதனைச் சனாதனிகள் ''அதிதீவிரம் அராஜகம், ஒழுக்கக் கேடு'' என்றெல்லாம் பிரச்சாரம் செய்யலாம், வாழ்வுரிமை பேசினால் ''வன்முறையாளர்கள். பிரிவினைச் சக்திகள்'' என காழ்ப்பைக் கக்குகிறார்கள் அல்லவா? அப்படித்தான் இதுவும்.

படிப்பகம்

www.padippakam.com

எனவே உண்மையில் தந்தை பெரியார், மகாத்மா பூலே வழியான இரண்டாவது போக்கையே நாம் உயர்த்திப்பிடிக்க வேண்டியப் போக்கு. இரத்தினவேல் பாண்டியன் போன்ற நீதிபதிகளிடமும், காவல்துறை அதிகாரிகளிடமும் ஆழ்ந்துக் கிடக்கும் ஆணாதிக்க தந்தைவழிச் சமூக கருத்துக்களைக் கண்டறிந்து தோலுரிப்பதோடு நம் தோழியர்கள் பத்மினிக்கும், சுமன் ராணிக்கும் நீதி கிடைக்க வழி செய்யும் முயற்சிகளை இணைக்க வேண்டும் வலிமைமிக்க மூன்றாவது அணியாய் வளர்ந்துவரும் இயக்கம் பெண் விடுதலைக் கருத்துக்களை ஏற்று கொள்வதிலும், பெண்களின் பிரச்சினைகளுக்காக சுயேச்சையான அமைப்புக்களைக் கட்டமைப்பதிலும் பழைய படிப்பினைகளை கணக்கிலெடுத்துக் கொண்டு பெரியார் பூலே வழியில் பெண் விடுதலைச் சிந்தனைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

பார்ப்பனீய சீர்த்திருத்த பெண் உரிமை வாதத்தைத் தூக்கி எறிந்து பெரியார் பூலே வழி புரட்சிகர பெண்ணுரிமையைப் பேசுவோம். பாலியல் வன்முறைகளுக்கு எதிரான போராடும் சுயேச்சை பெண்ணுரிமை இயக்கங்கள் அமைப்போம்!யான பெண்ணுரிமைப் போராட்டங்களை அரசியல் போராட்டங்களோடு இணைப்போம்! ○

எதிர்வினை

தேசிய இனப்பிரச்சினை கூட்டு விவாதம்

சி. சிவநாதன் டன்மார்க்

தேசிய இனப்பிரச்சினை குறித்த கட்டுரை மீதான விவாதத்தில் தோழர்-அறிவுறுவோன் (11) எழுப்பிய கேள்வி தொடர்பாக:

கரையார்களின் இயக்கமாக மட்டுமே இருப்பதால் தான் புலிகள் இயக்கம் பாசிசத் தன்மையோடு இருக்கின்றதா?

கரையார்:- அறிவுறுவோன் அவர்கள் குறிப்பிடும் ஈழத்தின் கரையார் எனப்படும் சாதியினர் தமிழ்க்கரையோரப் பகுதிகளில் குடியேறிய மக்களாவர். இவர்களின் வாழ்வோ தினம் தினம் வாழ்க்கைக்காக கடலையே எதிர்கொண்டு போராடி வாழ்பவர்கள். இவர்களின் வாழ்க்கையும் போராட்டக் குணாம்சம் நிறைந்தது என்பது மறுக்க முடியாதது.

இந்தச்சமூக மக்கள் கறிமீனை (சமையலுக்கான மீனைத்தவிர) வாழ்க்கைக்குத் தேவையான எல்லா அத்தியாவசியப் பொருட்களையும் கடலின் வருமானம் கொண்டே எதிர்கொள்பவர்கள். 1983இல் இலங்கை சிங்களப் பௌத்த அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட 'கடல் வலையத் தடைச் சட்டம்' (கடலில் குறிப்பிட்ட தூரத்துக்கப்பால் மீன்பிடிக்கத் தடை) கொண்டு வரப்பட்டதால் இவர்களின் வாழ்வே ஒடுக்குமுறையாக்கப்பட்டது. இதனால் தமிழ் இயக்கங்களில் இந்த சமூகப் பிரிவின் கூடிய இளைஞர்கள் உள்வாங்கப்பட்டனர்.

கரையார் சமூகத்தின் உதவியன்றி எந்தவொரு தமிழ் இயக்கமும் வளர்ந்ததும் இல்லை, வாழ்ந்ததும் இல்லை (வேகப் படகோட்டிகள்) இந்த மக்களின் இயற்கையான போராட்டக் குணம் குறியும் தமிழ்த் தேசியத்தின் தேவையும் இணைவது சமூகவளர்ச்சிப் போக்கின் நியதி இது தொடர்பாக இலங்கையில் புரட்சியைப் பேசிய மாக்சியர்களிடம் (1976ன் பின்பு) போராட்டக் குணம் குறி தொடர்பான ஆய்வின் மைக்கு கரையார சமூகமோ, வேறெந்தச் சமூகமோ பொறுப்பல்ல.

புலிகளின் இயக்கத்தில் கரையார் சமூகத்தில் இருந்து வந்த அங்கத்தவர்களும், தலைவர்களும் கூடுதலாக உள்ளார்கள் என்பது உண்மைதான் அப்படியிருந்தாலும் புலிகள்இயக்கம் + அரசியல் மரபு தொடர்பான பிரச்சினையாக கேள்வியை எழுப்பிஇருப்பின் இவ்வாதம் தொடர்பாக புதிய கருத்துக்களை வந்தடைய உதவியாகஇருக்கும். இதைவிடுத்து சாதி தொடர்பான கேள்வியை எழுப்புவது பார்ப்பானிய வர்ணாச்சிரம சிந்தனையின் தாக்கம் தான் காரணமாகின்றது ஈழத்தில் 60 பதுகளில் தீண்டாமை ஒழிப்பு போராட்டங்களில் கூட கரையோரச் சமூக இளைஞர்கள். அறிவுஜீவிகள் (கா.சிவத்தம்பி) இருந்தது இங்கு குறிப்பிட்டாக வேண்டும். கரையார் மட்டுமல்ல வெள்ளாளர், கோவியர், என் சாதியப் பாதிப்பே இல்லாத முஸ்லீம் இளைஞர்களும், புத்திஜீவிகளும் பங்கு கொண்டனர். (பங்கு என்பது வெவ்வேறு அளவுகளில்) தனித்து 'பஞ்சமர்' தான் போராடினார்கள் என்பது தவறு.

கரையார் சமூகத்தினருக்கு ஆலயம் தொடர்பாக பிரச்சினைகள் இருக்கவில்லை. இவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் கொண்டு இருந்தது ஒரு காரணம். ஆறுமுக நாவலர் வசன நடையாக கொண்டிருந்த சிவபுராணத்திலிருந்து வலைவீசிப் புராணத்தை அகற்றியது இங்கு குறிப்பிடவேண்டும். இருந்தும் அச்சகமும் சுயமான குணாம்சம் உடையது. எவர் தயவிலும் தங்கி நிற்காத சமூகம் 'கடலைத்தவிர' கோவில்த் திருவிழாக்களில் தனியாக உற்சவ நாட்களைக்கூடப் பெற்றிருந்தது (வடமராட்சிப் பகுதிகளில்) மற்றைய சாதியினரின் திருவிழாக்களைக் கூட மிஞ்சும் அளவிற்கு செலவும் செய்வார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

தமிழ் நாட்டுச் சூழலில் 'மீனவ குப்பங்கள்' என ஒரு தாழ்வு நிலையில் பார்க்கப்படுவது ஈழத்தில் கிடையாது. சாதி தொடர்பாக எழும் பிரச்சினை களைத் தீர்ப்பதற்காக பிரச்சினைகளிலும், தமிழ்த்தேசிய இனப்பிரச்சினைகளிலும், எந்தச் சாதியினருக்கும் முன்னுரிமை சலுகைகள் வழங்கப்படக் கூடாது. இது தொடர்பான பிரச்சினைகள் விவாதத்தினூடாக தீர்வுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

அறிவுருவோன் அவர்கள் நடைமுறை தொடர்பு ஆன பிரச்சினையை மறந்துவிடக் கூடாது. ஈழத்தின் பாராள மன்றத்தில் ஈடுபடாத கம்யூனிஸ்ற்றுக்கள் ஸ்ராலினின் நான்குவரை யறைகளில் ஒன்றான பொருளாதாரம் ஈழத் தமிழர்களுக்குக் கிடையாது என்பதற்காக தமிழ் இனத்தை தேசிய இனம் இல்லை என்ற முடிவுக்கு வந்ததும், போராட்டம் சாத்தியம் இல்லை என்ற முடிவுக்கும் வந்ததும் தெரிந்ததே இருந்தும் தமிழர்களின் போராட்டம் இன்று பதினைந்து வருடப் போராட்டப் பாரம்பரியம் கொண்டதாக வளர்ந்து வந்துள்ளதும் எல்லோரும் அறிந்ததே.

ஆனால் புலிகள் இயக்கத்தின் அரசியலில் பாசிசக்கூறுகள் தொடர்பாக இன்று ஐரோப்பிய சூழல்களில் (சஞ்சிகைகள்மத்தியில்)விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டுள்ளதும் இவ்விவாதங் களிலும் மலட்டு இடதுகளின் அடைப்பு விவா தங்களும் கருத்துரீதியில் வெளிப்படுவதையும் காணமுடிகின்றது. கரையோர சமூகத்துக்கோ, அல்லது எந்த ஒரு சாதியினருக்கோ பாசிசம் ஒருவரையறையாக இருக்க முடியாது

திராவிட இசம் பேசிக்கொண்டு ஆட்சிக்கு வந்த பிராமணியம் அம்பலப்பட்டுள்ளதும், திராவிடர் கழகங்களின் தமிழனத் துரோகங்களும் அம்பலப் பட்டுள்ளது. பாரம்பரிய பூமியிலிருந்து முஸ்லீம் மக்களை வெளியேற்றியது, முஸ்லீம், சிங்கள, தமிழ் அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவிப்பது போன்ற நடவடிக்கைகளில் இலங்கை அரசும் புலிகளும் ஒருவருக்கொருவர் சளைத் தவர்களல்ல. இது மட்டுமின்றி இலங்கை இந்திய அரசுகளிடம் சோரம் போகாத சிறு அமைப்புகளை அழைத்ததன் மூலம் தமது வர்க்க நிலைபாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். திராவிட இயக்கம் தமிழகத்தில் அம்பலப்பட்டு உள்ளது போல புலிகளும் ஈழத்தில் அம்பலப் பட்டுப் போயுள்ளனர். இவ்வேளை புரட்சிகர சக்திகள் தங்களை மீளாய்வு செய்துகொள்ள வேண்டும் அவ்வாறு செய்வதன் மூலமே எதிர் காலம் புரட்சியாளர்களின் காலமாய் இருக்கும். இவ்வேளை நிறப்பிரிகை போன்ற இதழ்கள் புரட்சிகர சக்திகளின் மத்தியில் பொது நிலை நின்று நிறைய எழுத வேண்டுமென்று எதிர்ப் பார்க்கின்றோம். ○

அறிவியலும் அதிகாரமும்

மிஷேல் பகூனின்

அறிவியல் முறை என்றால் என்ன? யாதார்த்த மான அணுகுமுறையின் உச்சம் என்பதாக அதைக்கூறலாம். அது, விவரங்களிலிருந்து முழுமையை நோக்கியும், உண்மைகளை ஆராய்ந்து உறுதிசெய்வதிலிருந்து அவற்றைப் பற்றிய புரிதலை, கருத்துக்களை நோக்கியும் செல்கிறது, அந்தப் புரிதலும் கருத்தும் உண்மையான பொருட்கள் மற்றும் அவற்றின் தன்மைகளுக்கிடையில்மெய்யாகவேஇருக்கின்ற தொடர்ச்சியான உறவு; அந்தப்பொருட்கள் ஒன்றுடனொன்று ஆற்றும் பரஸ்பரவினை; அதன் காரியத்தொடர்பு என்பவை பற்றிய உண்மையான விவரிப்பு என்பவையே ஆகும். அறிவியலின் தர்க்கம் என்பது பொருட்களின் தர்க்கம் என்பது தவிர வேறொன்றுமில்லை, மனிதமனத்தின் வரலாற்றுரீதியான வளர்ச்சிப் போக்கில் இறையியலையும் (theology) அபௌதீகத்தத்துவங்களையும் (metaphysics தொடர்ந்து, பாசிட்டிவிச விஞ்ஞானமானது (positivist science) வருவதால் மனித உயிரியானது இறையியலாலும், அபௌதீகத் தத்துவங்களாலும் உருவாக்கப்பட்ட அத்தனை விதமான அருவமான கருத்துக்களையும், கல்வியையும் உள்வாங்கி தீர்ந்துக்கெட்டு அப்புறம்தான் அறிவியலிடம் வருகிறது. இது, கண்மூடித்தனமான நம்பிக்கையாக இறையிய லிலும், அறிவெல்லை கடந்த யூகப் பொருளாக ஏறக்குறைய புனைவுத்திறன்மிக்க வார்த்தை விளையாட்டாக அபௌதீகத் தத்துவங்களிலும் நிறைந்திருக்கும். இவற்றின் விளக்கங்களும், செய்முறைகளும் உண்மையில் எதையும் விளக்க வோ செய்து காட்டவோ முடிவதில்லை. ஏனெனில் அவற்றுக்கு சோதித்தறியும் சட்டகம் (frame work) எதுவும் கிடையாது. ஏனென்றால், அபௌதீகத் தத்துவமானது தனது பேசுபொருளை உத்தரவாதப் படுத்து வதற்கு இறையியலின் வாக்குறுதியையும், உத்தரவாதத்தையும் தவிர வேறெதையும் வைத்திருக்கவில்லை.

முன்னாளில் இறையியலாளனாக, அபௌதீக வாதியாக இருந்தவனும், ஆனால் அவற்றின் கோட்பாட்டு மலட்டுத்தனத்திலும், அதன் காரணமான மிகவும் சேதம் விளைவிக்கும் நடை

படிப்பகம்

www.padippakam.com

முறையிலும் அலுப்படைந்து விட்டவனுமான மனிதன் இயல்பாக இந்தக் கருத்துக்கள் யாவற்றையும் அறிவியலுக்குள்ளும் சுமந்து கொண்டு வருகிறான். ஆனால் அவற்றை மேலே தொடர்ந்து செல்கின்ற வழியைக் காட்டி தரும் நிலையான கொள்கையாகக் கருதாமல அறிவியலினால் தீர்க்கவேண்டிய கேள்விகளாக மட்டுமே இப்போது அவன் கருதுகிறான். மனிதன் சநதேகிக்கத் தொடங்கியதன் விளை வாகவே அறிவியலுக்குள் வந்தான். இறை யியலும், அபௌதீகத்தத்துவங்களும் அவனது பிரச்சனைகள் குறித்து எவ்வித தீர்வுகளையோ உறுதிமொழிகளையோ தரமுடியாது போன சூழலில் தான் அவனுக்கு சந்தேகம் என்பதும் தோன்றியது. அவன் சந்தேகித்ததும் ஒதுக்கித் தள்ளியதும் இந்தத் தத்துவங்களால் உருவான கருத்துக்களையல்ல, மாறாக, இந்தக் கருத்துக் களை உருவாக்க இறையியலும், அபௌதீகத் தத்துவங்களும் கையாண்ட வழிகளையும், முறைகளையும் தான் அவன் நிராகரித்தான். அவன், இறையியலாளர்களின் திருவெளிப் பாட்டு அமைப்பையும் (revelating system) அபத்தங்களின் மீதான நம்பிக்கைகளையும் நிராகரித்தான். ஏனெனில் அவை அபத்தங்கள் தான் என்பது அவனுக்குத் தெரிந்துவிட்டது, அதற்குப்பிறகு பாதிரிமார்களின் சர்வாதிகாரத் தையும், தேவாலயத் தண்டனை அமைப்பின் ஒடுக்குமுறைகளையும் அவன் பொறுத்துக் கொண்டிருப்பது இயலாமல் போனது. இறை யியலின் அடிப்படைக் கருத்துக்களை, அதன் உலகு பற்றிய கண்ணோட்டத்தை, கடவுள் பற்றிய கோட்பாடுகளை பொருளிலிருந்து பிரித்து ஆன்மாவைத்தனியே பார்க்கும் அதன் தத்துவத்தை எவ்விதவிமர்சனமின்றி அபௌதீக தத்துவமானது ஏற்றுக்கொண்டிருப்பதால் தான் அதை அவன் நிராகரிக்க நேர்ந்தது. அது மட்டுமின்றி அபௌதீகத் தத்துவமானது இத்தகைய அனுமானங்களின் மீதுதான் தனது அடிப்படைகளை நிறுவியிருக்கிறது. அபத்தங் களிலிருந்து வெளிப்பாடு கொள்ளும் அது அபத்தம் என்பதைத்தான் தனது தொடக்கப் புள்ளியாகவும் கொண்டுள்ளது. ஆகஇறையியல் மற்றும் அபௌதீகத் தத்துவங்களிலிருந்து விடுபட்ட மனிதன் இப்போது. தனது அறிவுக்கு புலப்படும் பொருட்கள் பற்றிய முழுமையான தெளிவை உண்டாக்கக்கூடிய ஒரு அறிவியல் பூர்வமான அணுகு முறையைத்தான் விரும்பு கிறான்.

ஒரு பருண்மையான பொருளை. நிகழ்வை, உண்மையை அறிந்துகொள்ள வேண்டுமெனில் அதை உண்மையிலேயே எதிர்கொள்வதைத் தவிர-அதாவது அதீககற்பனைகளினாலோ, ஆன்மீகக் கூறுகளினாலோ அதுசிதிலமடைந்து விடாதபடி சரியாகப்புரிந்து கொள்வது தவிர- வேறுவழி கிடையாது. இப்படியாக, அனுபவம் என்பதே அறிவியலின் அடிப்படையாக அமைந் திருக்கிறது. அனுபவம் என்றால் அதுஒரு தனிமனிதனின் அனுபவமல்ல-எல்லா விசயங் களையும் எதிர்கொண்டு, சோதித்து அறிந்த ஒரு மனிதன் என்பதாக எவனும் கிடையாது. எவ்வளவுதான் அறிவாளியாக இருந்தாலும் இது சாத்தியமில்லை. ஒவ்வொரு மனிதனதும் தனிப்பட்ட அனுபவங்கள் என்பதே அவனுக் கான அறிவியல் எனக்கொண்டால் உலகில் எத்தனை மனிதர்கள் இருக்கிறார்களோ அத் தனை அறிவியல் இருந்தாக வேண்டும், அது போலவே ஒரு மனிதன் சாகும்போது அவனது அறிவியலும் அழிந்து போய்விடும். இப்படிப் பார்த்தால் அறிவியல் என எதுவுமிருக்காது.

ஆக அறிவியலின் அடிப்படை என்பது கூட்டு அனுபவம்தான். இது சமகால மனிதர்கள் அனைவரதும் கூட்டு அனுபவம் மட்டுமின்றி கடந்துபோன சந்ததியினரின் அனுபவத் திரட்சி யாகவும் இருக்கிறது. இப்படிச் சொல்லும்போது அது எந்தவொரு ஆதாரத்தையும் சோதிக்காமல் ஏற்றுக்கொள்வதுமில்லை. சமகால மனிதனோ இறந்து போனவனோ யாரொருத்தனின் ஆதா ரத்தையும் ஏற்றுக் கொள்ளும் முன்பாக, நாம் ஏமாந்துவிடாமல் இருக்க வேண்டுமெனில் அந்த மனிதனின் குணாதிசயங்களை அவனது தன் மையை அதாவது அவனது அறிதல் முறையை நாம் கேள்விக்குட்படுத்த வேண்டும். அவன் ஒரு யோக்கியமான மனிதனா, தீமையை எதிர்த்து உண்மையை அறிந்து கொள்ளும் பேராவல் உள்ளவனா; ஒரு பகல் கனவு காண் பவனாகவோ, கவிஞனாகவோ, அபௌத்தவா தியாகவோ, இறையியலாளனாகவோ சுய நலம் கொண்ட அரசியல் வாதியாகவோ, நீதிபதியா கவோ இல்லாமல் இருக்கிறானா என்பதை நாம் கவனிக்கவேண்டும. இத்தகைய தகுதி கள் அவனது சமகாலத்தைச் சேர்ந்த பிறருக்கும் இருக்கிறதா எப்னபார்க்க வேண்டும். சிலபேர் இருக்கிறார்கள், அவர்கள் சிறந்த அறிவாளி களாகவும், எவ்வித பகற்கனவுகளும், பகையு ணர்வுகளும் இல்லாதவர்களாகவும், யதார்த்த மான மனநிலை கொண்டவர்களாக இருப்பார் கள், ஆனால் உண்மைகளின் நிஜத்தை நிருப ணம் செய்வதற்கோ, அவற்றைக் கண்டறிவதற் கோ முனைப்புகாட்டாமல் சோம்பேறிகளாக அவர்கள் இருக்கிறார்கள். இப்படித்தான் ரஷ் யாவில் புள்ளிவிவரங்கள் உற்பத்தி செய்யப்படு கின்றன, இத்தகைய மனிதர்களின் சான்றுகள் எவ்விதப் பயனும் அற்றவை. இன்னும் சில பேர் இருக்கிறார்கள் அவர்களும் இதே அளவு அறிவாளிகளாகவும், நேர்மையானவர்களாக வும் இருந்த போதிலும் அவர்களது மூளை முழுக்க அபௌதீகத் தத்துவங்களாலும், மத நம்பிக்கைகளாலும், கருத்துமுதல் வாதத்தா லும் நிரம்பியிருக்கிறது. அவர்களது சான்று களும் நிராகரிக்கப்பட வேண்டியவைதான்.

படிப்பகம்

www.padippakam.com

ஆனால் ஒரு மனிதன் அறிவியலால் உருவாக்கப்பட்டு நன்கு வளர்த்தெடுக்கப்பட்ட யதார்த்தம் பற்றிய சிறந்த அறிவை, பொருட்களின் யதார்த்தம் பற்றிய தெளிவை உண்டாக்கிக் கொள்ள வேண்டிய இடைவிடா போராட்டத்துடன் ஒன்றிணைத்தால் அவன் தரும் ஆதாரம் எல்லையில்லா மதிப்பு கொண்டதாக இருக்கும்.

ஆனால், இப்போதும்கூட விமர்சனமின்றி அதை அப்படியே நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அவன் சொல்கின்றவற்றோடு எனது சொந்த அனுபவங்களை நான் ஒப்பிட்டுப் பார்ப்பேன். இரண்டும் ஒத்துப்போனால் அவனது கண்டுபிடிப்புகளை எனது சொந்தக் கண்டுபிடிப்புகள் போல மகிழ்வோடு நான் ஏற்றுக் கொள்வேன். அவனது கண்டுபிடிப்பு என் அனுபவத்தோடு முரண்பட்டால், எது சரிஎன்று ஆராய்ந்து பார்க்காமல் அதை நிராகரித்துவிடுவேனோ? அப்படிச் செய்யமாட்டேன். ஏனெனில் பொருட்கள் குறித்த எனது அனுபவங்கள் தவறானவையாக இருக்கக்கூடும் என்பதை நான் நன்றாக அறிவேன். எனவே அவனது கண்டுபிடிப்புகளை, விவரங்களை நான் என்னுடையவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்து அவற்றை மேலும் சோதனைகளுக்கு உட்படுத்துவேன். தேவையெனில் இன்னும் சில அறிவியல் பூர்வமான நபர்களின் அனுபவத்தையும், தீர்ப்பையும் நான் கோருவேன். சிலசமயம் எவ்வித சிரமமும் இன்றி என்னுடையதையோ அவனுடையதையோ முழுவதிலுமாக நிராகரித்துவிடாமல் ஒரு பொது முடிவுக்கும் கூட நான் வரக்கூடும். ஆனால், ஒரு மனிதனின் அனுபவம் என்பது என்ன? அறிவினால் வழிநடத்தப்படும் அவனது புலன்கள் தரும் ஆதாரங்கள்தான் அவனது அனுபவம். என்னைப் பொறுத்தவரை நான் எனது புலன்களால் எதிர்கொள்ளாத எதையுமே ஏற்றுக் கொள்வதில்லை. இதுவே ஒரு பொருளின் யதார்த்தம் பற்றி உணர்ந்து கொள்ள மிகவும் சரியான வழி. இந்த வழியில் செயல்படுபவர்களின் அனுபவங்கள் மட்டுமே நான் நம்புகின்ற சான்றுகளாக உள்ளன.

இதன்படி பார்த்தால் அறிவியல் என்பதை, இருந்த/இருக்கின்ற மனிதர்களின் தனிப்பட்ட அனுபவங்களின் திரளை தொடர்ந்து தீவிரமான பரஸ்பர சோதித்தலுக்கு உட்படுத்திப் பெறப்படுவது எனக் கூறலாம். இதைவிட சனநாயக பூர்வமான அடிப்படை எதையும் நாம் கற்பனையிலும் பார்க்க முடியாது. இதுவே அடிப்படையானதும், தீர்மானகரமானதுமாகும். இதை ஏற்காத மனித அறிவு எதையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இப்போதும்கூட அறிவியலானது பல்வேறுபட்ட உண்மைகளின் தொகுப்பாகக் கிடக்கும் இந்த இடத்திலேயே நின்றுவிட முடியாது, இவையும் கூட சோதித்து உறுதி செய்யப்பட வேண்டும். உண்மையான அறிவியல் பொருட்களை, உண்மைகளை, விசயங்களைப்பற்றிய தெளிவிலிருந்துதான் ஆரம்பமாகிறது. பொருட்களின் யதார்த்தத்தை சோதித்தறியும் இந்த வழிமுறை—அதாவது, இறையியலாளர்கள் மற்றும் அபௌதீகவாதிகளால் புறக்கணிக்கப்பட்ட இந்த வழிமுறை-என்பது அந்தப் பொருளின் இருப்பை நிருபிக்க கையாளப்பட்டது போலவே அதனைக் கண்டறியவும், பிற பொருட்களோடு நேரடியாகவும், மறைமுகமாகவும் அது கொண்டிருக்கும் உறவுகளை, அதன் கூறுகளை வெளிப்படுத்தவும் கையாளப்பட வேண்டும், இதுவே புரிதல் என்பதாகும். ஒரு உண்மையையோ, விசயத்தையோ புரிந்து கொள்வது என்பது அதன் அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிகளைக் கண்டுபிடிப்பதாகும், அதாவது அதன் இயற்கை விதியைக் கண்டறிவதாகும்.

இப்படி, பொருட்களின் கூறுகளை அதன் இயற்கை விதிகளைக் கண்டறிந்து உறுதி செய்ய ஒரே வழிதான் உள்ளது. சிலர் அல்லது பலர் ஒன்றிணைந்து தொடர்ந்து அவதானிப்பதும், சோதனைகளை மேற்கொள்வதும்தான் அந்தவழி. அவர்கள் எத்தனைபோராக இருந்தாலும் எவ்வளவு அறிவாளிகளாக இருந்தாலும் சரி அறிவியலுக்கு அது ஒரு பொருட்டல்ல அவர்கள் தங்களது கண்டுபிடிப்புகளை வெளியிடும் அதே நேரத்தில் தாங்கள் கையாண்ட வழிமுறைகள் பற்றியும் தங்களது அவதானிப்புகள், சோதனைகள் பற்றியும் அவர்கள் விலக்கியாகவேண்டும் ஏனெனில் இதன்மூலமே ஆர்வம் கொண்ட வேறுஎவரும் இதே வழிமுறைகளைக் கையாண்டு அந்த அவதானிப்புகளையும், சோதனைகளையும் மறு உற்பத்தி செய்ய முடியும், இதைத்தான் அறிவியல் ஏற்கும். இப்படி ஒவ்வொரு புதியகண்டுபிடிப்பும் பலபேர்களால் சோதித்து அறியப்பட்ட பின்பே பொதுவான விஞ்ஞான அறிவின் பகுதியாக அது ஏற்கப்படும். பின்னாளில் வேறுவிதமான முறைகளை மேற்கொண்டு நடத்தப்பட்ட சோதனைகளின் காரணமாக தொடக்கத்தில் பெறப்பட்ட கண்டுபிடிப்பின் முடிவு, வேறுபடுவதும், முற்றிலுமாக மாறிவிடுவதும் கூட சிலசமயம் நேரலாம். ''கேள்வி கேட்காத நம்பிக்கை'' என்பதைப்போல அறிவியலுக்கு அன்னியமானது வேறு எதுவுமில்லை, அது போலவே அங்குவிமர்சனம் என்பது ஒருபோதும் நிறுத்தப்படுவதுமில்லை. கலகத்தின் கொள்கைக்கு பிரதிநிதிபோல இருக்கும் 'விமர்சனம்' என்பதுதான் அறிவியல்பூர்வமான உண்மைக்கு மாறாத துணையாக இருக்கிறது.

இவ்விதமாகத்தான், பலநூற்றாண்டு காலமாக மேற்கொள்ளப்பட்ட பணிகள், உலகம் ஏற்றுக் கொண்ட உண்மைகளின் அமைப்பாக மாறியது இப்படி அது நிறுவப்பட்டால் அது இப்போது அறிவியலின் இரண்டாவது அடிப்படையாக மாறிவிடுகிறது. மேற்கொண்டு ஆராய அதுஒரு தொடக்கப் புள்ளியாக அமைந்து வெவ்வேறு

படிப்பகம்

www.padippakam.com

வழிமுறைகளால், ஆய்வுகளால் தன்னை மென் மேலும் காத்திரமானதாக ஆக்கிக் கொள்கிறது. முடிவற்ற வேறுபாடுகள் கொண்ட மனித உயிரிகளால் ஆனபோதிலும் உலகம் என்பது ஒன்றுதான். எண்ணற்ற அளவிற்கு கடந்து போனதும் வாழ்ந்திருப்பதுமான மனித உயிரி களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்ற இந்த உலகைக் கூர்ந்து நோக்கி அதனைக்கண்டறிய, புரிந்துகொள்ள முற்படுகின்ற மனித ஆன்மா என்பதும் பிளவுபடுத்த முடியாத ஒன்றுதான். ஒரு மனிதனின் பின்னணி அவனது இயல்பு, அவனது இனம், தரம், அறிவுத்திறன் எதுவாக இருப்பினும்சரி, அவன் முட்டாள்தனமாக உளறினாலும் சரி, அவன் சிந்திக்கத்தொடங்கு வானேயானால் அந்த சிந்தனையானது மேலே சொன்ன விதிகளின்படிதான் வளர்ந்துசெல்லும் இதுவே மனிதஇனம் என்பது ஒன்றுதான் என்பதை நிறுவுவதற்கான அடையாளமாகவும் இருக்கிறது. இதன்படி இந்த உலகு பற்றிய மனித ஆன்மாவின் அறிவு மற்றும் புரிதல் என்பதாக இருக்கும் அறிவியல் என்பதும் ஒன்றே ஒன்றாகத்தான் இருக்க முடியும்.

மிஷேல் பகூனின்: (1814-76) ''எங்கே அரசு இருக்கிறதோ அங்கே ஆதிக்கம் இருப்பது உறுதி; ஆகவே 'அடிமைத்தனமும்' இருக்கும். பகிரங்கமாகவோ அல்லது மறைமுகமாகவோ அடிமைத்தனமில்லாத ஆதிக்கத்தை நினைத்து பார்க்க முடியாது; அதனால்தான் நாங்கள் 'அரசு'க்கு எதிரிகளாக இருக்கிறோம்'' என்ற பகூனின் பாட்டாளிவர்க்க அரசு, அதிகாரம் என்பவை பற்றி எழுப்பியகேள்விகள் மார்க்ஸ், எங்கெல்ஸால் சரியானபடி பரிசீலிக்கப்பட்டிருந் தால் லெனினுக்கும், மாவோவுக்கும் மட்டுமின்றி நமக்கும்கூட வேறுபல சாத்தியக் கூறுகள் தென் பட்டிருக்கலாம். டூரிங் போலவோ, ஜெர்மா னியத் தத்துவவியல் போலவோ பகூனினின் கேள்விகளை முக்கியமாக அவர்கள் நினைக்கா ததால்தான் நமக்கு சிலகுறிப்புகள் மட்டுமே எஞ் சிக் கிடைக்கின்றன. ''கீழேயிருந்து மேலே கட் டப்படுகின்ற பகூனினுடைய அமைப்பில் எல் லோருமே உச்சியில் இருப்பார்களா? ''எனக் கிண்டலடித்தார் மார்க்ஸ். சமூகப் புரட்சியைப் பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது'' என நிரா கரித்துவிட முடிந்தது அவரால். ''பாட்டாளி வர்க்க அரசு உண்மையிலேயே மக்கள் அரசாக இருந்தால் அது ஏன் ஒழிக்கப்பட வேண்டும்? அதை ஒழிப்பது மக்களுடைய உண்மையான விடுதலைக்கு அவசியமென்றால் அதை மக்கள் அரசு என்று ஏன் கூறவேண்டும்?'' என்று கேட் டார் பகூனின். பழைய சமூகத்தை அடிப்படை யாகக் கொண்டு ஆகவே அனேகமாக அந்த சமூகத்துக்குச் சொந்தமான அரசியல் வடிவங்க ளுக்குள் இயங்கிக் கொண்டிருப்பதால் அது— இந்தப் போராட்டக் கட்டத்தின்போது — இன் னும் தன்னுடைய இறுதியான கட்டமைப்பை அடையவில்லை; எனவே தன்னுடைய விடுத லையில் பெறுவதற்கு விடுதலைக்குப் பிறகு கைவிடப்படும் சாதனங்களை அது உபயோகிக் கிறது'' என மார்க்சிடமிருந்து பதில் வந்தது. ஆனால் நடந்தவையோ வேறுவிதமாக அமைந் துவிட்டன. மார்க்சுக்கும் பகூனினுக்கும் இடை யே நடந்த கருத்துப் போராட்டங்கள், அவை முதல் அகிலத்தில் (First International) ஏற் படுத்திய தாக்கங்கள் என்பவை விரிவாக ஆரா யப்பட வேண்டியவை. அரசு, புரட்சி, சோச லிசம், சர்வாதிகாரம், புரட்சிக்கான யுத்த தந்திரம், செயல் தந்திரம் என்பவை குறித்து இதுவரை நாம் அறிந்திருந்த கோட்பாடுகள் நாறுங்கிப்போய்விட்ட நிலையில் பகூனின் எழுப்பிய பிரச்சனைகளின் முக்கியத்துவம் நமக்குப் புலப்படுகிறது. இவை பற்றிய தெளிவினை உண்டாக்கிக்கொள்ள பகூனின் எழுத்துக்கள் மட்டுமின்றி அமைப்பியல் மார்க்சியம், குறியியல், ஃபூக்கோவின் கருத்தாக் கங்கள் என் எண்ணற்ற உபகரணங்கள் நமக்கு இப்போது கிடைக்கின்றன. பகூனின் எழுத்துக் களை முதன்முதலாக தமிழில் அறிமுகம் செய்கின்ற நாம் அவரது ஆதார குணமாக இருந்த மத எதிர்ப்பை, அறிவியல்மீதான நம்பிக்கையை முதன்மைப்படுத்த வேண்டி உள்ளது.

இந்தக்கட்டுரை L' Empire knoutogermanique. (PAIRS, 1908) என்ற ஃப்ரெஞ்ச் நூலிலிருந்து ஸ்டீபன் காக்ஸ் என்பவரால் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளது. பார்க்க: MICHAEL BAKUNIN, SELECTED WRITINGS. Ed-ARTHURLEHNING, JONATHAN CAPE, LONDON 1973.

இதனை இந்தக் குறிப்போடு தமிழில் தருவது: லெஸ்பியா 25-12-'92

O O O

படிப்பகம்

www.padippakam.com

அறிவியலும் தொன்மமும்

க்ளோத் லெவிஸ்த்ராஸ்

''என்னுடைய சொந்த அடையாளம் பற்றிய புலன் உணர்வை நான் எப்போதுமே அடைந்த தில்லை. என்னைப் பொறுத்தவரை நான் ஒருஇடம், சில விசயங்கள் நிகழ்கிற ஒரு இடம். ஆனால், 'நான்' என்று எதுவுமில்லை. நாம் ஒவ்வொருவருமே ஒரு முச்சந்தி போலத்தான் நிகழ்ச்சிகள் நடக்கும் ஒரு முச்சந்தி. முச்சந்தி ஆனது வெறுமெனே இருக்கிறது, சிலது அங்கே நிகழ்கிறது; வேறுபட்ட ஒரு நிகழ்வு வேறு எங்கேனும் நிகழலாம். அதுவும் இதே அளவு முக்கியத்துவம் வாய்ந்ததுதான். இதில் நமக்கான தேர்வு எதுவுமில்லை, அது முற்றிலும் ஒரு சந்தர்ப்ப வசமான யதேச்சை நிகழ்வு அவ்வளவுதான்''

எனக்குறிப்பிடும் லெவிஸ்த்ராஸ் 1977ல் சி.பி.சி. (CBC) ரேடியோவுக்காக 'Ideas' என்ற தலைப்பில் நிகழ்த்திய ஐந்து சொற்பொழிவுகளில் ஒன்றான The meeting of mytn and scienceஎன்பதே இங்கே மொழி ஆக்கப்பட்டுள்ளது. பிறவற்றையும் ஆங்கிலத்தில் படிக்க: **Myth and meaning, claude levistras, routledge & kegan paul, london-1978.**

இக்கட்டுரையின் தமிழ்ஆக்கம்: **ரவிக்குமார்**
05-10-92

என்னுடைய சொந்த ஒப்புதல் வாக்கு மூலத்திலிருந்து தொடங்கலாமென நினைக்கிறேன். ஒவ்வொரு மாதமும், முதல் வரியிலிருந்து கடைசி வரி வரைக்கும் ஒன்றுவிடாமல் நான் படிக்கிற பத்திரிக்கை ஒன்று இருக்கிறது. அதில் எல்லாவற்றையும் நான் புரிந்து கொள்ள முடியவில்லை என்றபோதிலும் நான் அதை விடாமல் கவனமாகப் படிக்கிறேன். சைன்ட்டிஃபிக் அமெரிக்கன் (Scientific American) என்பதுதான் அந்தப் பத்திரிக்கை. நவீன அறிவியலில் நடைபெறும் மாற்றங்களைப் பற்றி முன்னேற்றங்களைப்பற்றி எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு அறிந்து கொள்ள வேண்டுமென்று எனக்கு அளவற்ற விருப்பம். ஆக, எனக்கும் அறிவியலுக்குமான உறவு எதிர்மறையானது அல்ல.

அடுத்தது, நாம் சிலவற்றை இழந்துவிட்டோம் எனவும் அதை மீட்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டுமெனவும் எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் நாம் இப்போது வாழும் இந்தவிதமான உலகத்தில், நாம் பின்பற்றும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள இந்த விதமான விஞ்ஞான சிந்தனைகளினிடையே, நாம் எதையும் இழக்கவேயில்லை எனச் சொல்லுமளவுக்கு துல்லியமாக அவற்றை மீட்டுவிட முடியுமென என்னால் உறுதியாகக் கூற முடியவில்லை, ஆனால் நாம் அவற்றின் இருப்பைப் பற்றி அறிந்துகொள்ளவும் அவற்றின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவும் முயலவேண்டும்.

மூன்றாவதாக, நவீன அறிவியலானது நாம் இழந்துவிட்ட இந்த விசயங்களிலிருந்து தூரமாக விலகிச் செல்லவில்லை, ஆனால் அது மேலும் மேலும் அறிவியல் பூர்வமான விளக்கமென்கிற தளத்தில் இவற்றை மறுபடியும் ஒன்றிணைக்க முயன்று கொண்டிருக்கிறது என்பது என் எண்ணம். அறிவியலுக்கும் தொன்மவகைப்பட்ட சிந்தனைக்கும் (இது ஒரு சரியான பெயர் இல்லையென்றாலும் கூட ஒருவசதிக்காக உபயோகித்துக் கொள்வோம்) இடையே உண்மையான ஒரு இடைவெளி, ஒரு பிளவு உண்டானது பதினேழாவது மற்றும் பதினெட்டாவது நூற்றாண்டுகளில்தான் பேகன், தெகார்த், நியூட்டன் இன்னும் பலரும் இருந்த அந்த காலத்தில் தான் தொன்மமும் புதிருமான பழைய தலைமுறையினரின் சிந்தனைக்கு எதிராகத் தன்னை கூட்டமைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் அறிவியலுக்கு உண்டானது. மேலும், புலன்களின் உலகுக்கு எதிராகத் திரும்புவதன் மூலமாகவே, அதாவது நாம் பார்க்கிற, முகர்கிற, சுவைக்கிற புரிந்து கொள்கிற உலகுக்கு எதிராகத் திரும்புவதன் மூலமாகவே அறிவியல் நிலை பெற முடியும் என அப்போது எண்ணப்பட்டது. அதுமட்டுமின்றி புலன் சார்ந்த உணர்வு என்பது ஏமாற்றக் கூடியது, உண்மையான உலகென்பது கணிதரீதியான பொருட்களால் ஆனது எனவும் அதை அறிவினால் மட்டுமே உள்வாங்கிக் கொள்ள முடியுமென்றும் கருதப்பட்டது. இது புலன்களின் ''தவறான புரிதலுக்கு'' மாறானது என்றும் கருதப்பட்டது. இது ஒரு விதத்தில் தேவையானதொரு செயலும் ஆகும், நமது அனுபவங்கள் நமக்கு நிருபணம் செய்துள்ள விதத்தில் இந்தப் பிரிவு ஏற்பட்டதற்கு நாம் நன்றிசொல்ல வேண்டும். இதனால்தான் அறிவியல் சிந்தனையானது தன்னைத் தனியாகக் கட்டமைத்துக் கொள்ள முடிந்தது.

நமது சமகால அறிவியலானது இந்த இடைவெளியைக் கடக்க முயல்கிறது, மேலும் மேலும் புலன்கள் தரும் விவரங்கள் என்பவை அர்த்தமுள்ளவை யென்றும், அவையும் ஒரு உண்மையைக் கொண்டுள்ளன அவற்றையும் விளக்க முடியும் என்றும் சொல்லப்பட்டு அறிவியல் பூர்வமான வியாக்யானங்களுக்குள் மறுபடியும்

படிப்பகம்

www.padippakam.com

அவை ஒன்றிணைக்கப் படுகின்றன என்பதே தற்போதைய அபிப்ராயம்.

உதாரணமாக வாசனைகளை எடுத்துக் கொள்வோம், இது அறிவியலுக்கு அப்பாற் பட்டது, அகவயமானது என நாம் வழக்காக நினைத்து வந்தோம். இன்று ஒவ்வொரு வாசனையும் அல்லது ஒவ்வொரு ருசியும் ஒருவிதமான ரசாயன சேர்க்கையைக் கொண்டு உள்ளது என்பதை வேதியியலாளர்கள் நமக்குக் கூறியுள்ளனர். மேலும். அகவயமாக ஏன் ஒரு சில ருசிகள் பொதுவான குணாம்சங்களைக் கொண்டிருப்பதாகவும் சில மாறுபடுவதாகவும் நமக்குத் தோன்றுகின்றன என்பதற்கான காரணங்களையும் நமக்குத் தெளிவாக்கி உள்ளனர்.

நாம் இன்னுமொரு உதாரணத்தையும் பார்க்க லாம். தத்துவ தளத்தில் கிரேக்கர்களின் காலம் முதற்கொண்டு பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை; ஏன் இன்னமும் கூட ஒரு மிகப்பெரிய சர்ச்சை கணிதவியல் கருத்துக்களின் தோற்றம் பற்றிய சர்ச்சை-அதாவது, ஒருகோடு வட்டம், முக்கோணம் என்பவை பற்றிய கருத்துக்களின் தோற்றம் குறித்த சர்ச்சை நடந்துகொண்டிருக்கிறது. இது பற்றி முக்கிய மாக இரண்டு விதமான மரபுவகைப்பட்ட கோட் பாடுகள் உள்ளன. மனம் என்பது ஏதுமற்றது துவக்கத்தில் அது ஏதுமற்றதாகவே இருந்தது, எல்லாமே அனுபவத்திலிருந்துதான் அதற்குள் வந்தது என்பது ஒன்று. நாம் பலவிதமான வட்ட வடிவிலான பொருட்களைப் பார்க்கும் போது-அவற்றில் எதுவுமே துல்லியமாக வட்ட வடிவில் இல்லாத போதிலும்-வட்டம் என்ற கருத்தை உருவாக்கிக்கொள்ள முடிகிறது என்பதிலிருந்து இந்தக் கோட்பாடு வருகிறது. இரண்டாவது கோட்பாடு பிளாட்டோ கூறியது யதார்த்தம் நமக்கு துல்லியமானதொரு வட்டத் தையே, முக்கோணத்தையோ ஒருபோதும் வழங்காது என்ற போதிலும் வட்டம், முக்கோணம், கோடு ஆகியவை பற்றிய இத்தகைய கருத்துக்கள் நமது மனத்தில் உள்ளார்ந்து துல்லியமாக அமைந்துள்ளன, இதனால்தான் நாம் இவற்றை வெளிப்படுத்த முடிகிறது என்று அவர் கூறினார்.

இப்போது, பார்வைகுறித்த நரம்பு மண்டல அமைப்புபற்றிய நம் கால 'ஆய்வாளர்கள்' 'ரெட்டினா' (Retina) மற்றும் அதன் பின்புற முள்ளபகுதியின் நரம்பு செல்கள் விசேசமானவை என்று நமக்குத்தெரிவித்துள்ளனர். சிலசெல்கள் நேர்த்திசையில், செங்குத்து நிலையில் மட்டுமே கூர்மையாக இருக்கும்; சில செல்கள் இடை நிலையிலும், சில செல்கள் சாய்வான நிலையிலும் சில செல்கள் மையமாக உள்ள பொருளுக்கும் அதற்குப்பின்னால் உள்ளதற்கு இடையிலும் இன்னமாதிரி பல வகைகளில் கூர்மையாக செயல்படும் என்று கூறுகின்றனர். ஆக, அனுபவம் × மனம் என்ற மொத்தப் பிரச்சனைக்கான தீர்வு நரம்பு மண்டல அமைப்பில் உளளதாகத் தோன்றுகிறது. அது மன அமைப்பிலோ அனுபவத்திலோ இல்லை, ஆனால் மனத்துக்கும் அனுபவத்துக்கும் இடை பட்ட ஒரு பகுதியில் நமது நரம்பு மண்டலம் கட்டமைக்கப்பட்டுள்ள விதத்தில், மனத்துக்கும் அனுபவத்துக்கும் இடையே அது தொடர்பு படுத்தும் விதத்தில் அமைந்திருக்கிறது. (நான் இதை மிகவும் எளிமைப்படுத்திவிட்டேன், ஏனெனில் இந்த விசயத்தை ஆங்கிலத்தில் விளக்கிக்கூறுவது எனக்கு மிகவும் சிக்கலான தாக உள்ளது.)

என் மனத்தின் ஆழத்தில் ஏதோ ஒன்று இருந்து அதை வடிவமைத்து வருகிறது. அதுதான் இன்றைக்கு அமைப்பியல் வாதி என நான் அழைக்கப்படுவதற்கும் எப்போதுமே நான் அப்படி இருந்து வந்திருக்கிறேன் என்பதற்கும் ஒருவிதத்தில் காரணமாக உள்ளது. நான் சுமார் இரண்டு வயதில் இருந்தபோது உண்மையில் எனக்கு அப்போது படிக்கத் தெரியாது என்ற போதிலும்-என்னால் படிக்க முடியும் என்று சொல்லிக் கொள்வேனாம். இதை என் அம்மா கூறியிருக்கிறார். எப்படி? என்று என்னிடம் கேட்கப்பட்டபோது கடை களின் முன்புள்ள விளம்பர போர்டுகளைப் பார்க் கும்போது என்னால் ஏதோ ஒன்றைப் படிக்க முடிகிறது, சொல்வேனாம். உதாரணத்துக்கு **Boulanger** (ரொட்டிக் கடைக்காரர்) அல்லது **Boucher** (கசாப்புக் கடைக்காரர்) என்ற போர் டுகளைப் பார்க்கும்போது எனக்கு ஏதோ ஒன் றைப் படிக்க முடிகிறது ஏனென்றால் எழுதியி ருக்கும் எழுத்துக்களின் வடிவ அமைப்பை வைத்து நோக்கும்போது ஒன்றுபோலவே தோன் றும் அந்த வார்த்தைகள் ''Bou'' என்பதைத் தவிர—அதாவது Boucher, Boulanger என்ற இருவார்த்தைகளுக்கும் முதல் அசையாக வரும் Bou என்பதைத் தவிர வேறு எந்த அர்த்தத் தையும் தரவில்லை. அமைப்பியல்வாத அணு குமுறையில் ஏறக்குறைய அதைத்தவிர அதிக மாக வேறு எதுவுமில்லை, அது வேறுபடாத அம்சங்களைப் பற்றிய தேடல், அல்லது மேலெ ழுந்தவாரியாகத் தென்படும் வேற்றுமைகளுக் குள் ஒப்புமையுடைய கூறுகளைப் பற்றிய தேடல் எனக் கூறலாம்.

என் வாழ்நாள் முழுக்க இத்தகைய தேடலே ஏறக்குறைய எனது முக்கியமான ஆர்வமாக இருந்தது எனக் கூறலாம். சிறுவனாக இருந்த போது கொஞ்ச காலத்துக்கு மண்ணியல் (Geology) பற்றியே நான் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தேன். மண்ணியலின் பிரச்சனை யும் கூட இது தான், ஏராளமான வேற்றுமை களைக் கொண்ட நிலத்தோற்றக் காட்சிகளுக்கு இடையே உள்ள ஒன்றுபடும் அம்சங்கள் குறித்

படிப்பகம்

www.padippakam.com

துப் புரிந்து கொள்வதுதான்—அதாவது ஒரு நிலத்தோற்றக் காட்சியை மண்ணியல் ரீதியாக ஒரு சில முழுமையுற்ற எண்ணிக்கையிலான படிவுகளாகவும், பண்ணியல் ரீதியான செயல் பாடுகளாகவும் சுருக்கிப்பார்க்கவே மண்ணியல் முயல்கிறது. கொஞ்சம் வளர்ந்த பையனாக இருந்தபோது எனது ஓய்வு நேரத்தின் பெரும் பகுதியை இசை நாடகங்களுக்கான அரங்கு மற்றும் உடைகளை வடிவமைப்பதில் செலவிட்டேன். அங்கேயும் பிரச்சனை இதுவேதான்—ஒரே மொழியில் — அதாவது எழுத்துக்களின் சித்திர அமைப்பு மற்றும் ஓவியத்தின் மூலமாக இடை மற்றும் இசைக்கான பிரதியில் இருக்கும் ஏதோ ஒன்றை வெளிப்படுத்தும் முயற்சி—அதாவது, இசை, இலக்கியம், ஓவியம் என்ற அந்நசிக்கலான விதியமைப்புகளுக்கிடையே ஒன்றுபடும் கூறுகளை அடைவதற்கான முயற்சி அவற்றுக்கு இடையேயுள்ள பொதுவான அம்சம் என்ன என்பதுதான் பிரச்சனை. இது ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழி பெயர்ப்பு செய்வதிலான பிரச்சனை என ஒருவர் கூறக்கூடும் — அதாவது ஒரு மொழியில் வெளிப்படுத்தப்பட்ட ஒன்றை (ஒரு விதியமைப்புக்குள் வெளிப்படுத்தப்பட்ட ஒன்று எனவும் கூறலாம், ஆனால் மொழி எனக் கூறுவதே போதுமானது) இன்னொரு வேறுபட்ட மொழியில் வெளிப்படுத்த முயற்சிப்பது எனக் கூறலாம்

அமைப்பியல் என்பது புதுமையான ஒன்றாகவும், புரட்சிகரமான ஒன்றாகவும் கருதப்படுகிறது. இது இரண்டு வகையில் தவறானது. முதலில், மனிதப் பண்பு பற்றிய கோட்பாட்டுத் (Humanites) துறையிலும் நாம் இத்தகைய சிந்தனா முறையை மறுமலர்ச்சிக்காலம் தொடங்கி பத்தொன்பதாம் நூற்றாண்டு வழியாக இன்று வரையிலும் காணமுடியும். இன்னொரு வகையில், நாம் மொழியியல் அல்லது மானுடவியல் ஆகிய துறைகளில் அமைப்பியல் என அழைப்பது Hard Sciences என ஆங்கிலத்தில் அழைக்கப்படுபவை பலகாலமாக செய்து வருவதன் வெளிறிப்போன நகல் தான்,

அறிவியல் இரண்டு பாதைகளில் மட்டும்தான் போகமுடியும். ஒன்று — கொச்சைப்படுத்தும் அணுகுமுறை மற்றது அமைப்பியல் முறை — ஒரு தளத்தில் சிக்கலான விசயமாக இருக்கும் ஒன்றை வேறு தளங்களில் எளிமையான விசயமாக சுருக்கிவிட முடியும் என்றால் அது தான் கொச்சைப்படுத்தும் முறை. உதாரணமாக, பௌதீக வேதி செயல்பாடுகளாக மட்டும் சுருக்கிவிடக் கூடிய பல விசயங்கள் வாழ்க்கையில் உள்ளன. ஆனால் அது ஒரு பகுதியை மட்டுமே விளக்க முடியும், எல்லாவற்றையும் அல்ல.

எளிமையாக சுருக்கிவிட முடியாத மிகவும் சிக்கலான விசயமொன்றை நாம் எதிர்கொள்ளும் போது, அவற்றின் உறவு நிலைகளைக் கவனிப்பதன் வழியாகவே அவற்றை அணுக முடியும், அதாவது, அவை என்னவிதமான ஆதார அமைப்பை உருவாக்குகின்றன என்பதைப் புரிந்து கொள்ள முயற்சிப்பதன் வாயிலாகவே அதை அணுக முடியும், இதுவேதான் மொழியியல், மானுடவியல், மற்றும் பல்வேறு துறைகளில் நாம் செய்ய முயற்சிப்பது.

இயற்கையானது வரையறைக்குட்பட்ட சில வழிமுறைகளை மட்டும் தான் தன்னிடம் வைத்துள்ளது என்பது உண்மைதான், ஒரு தளத்தில் அது உபயோகிக்கும் வழிமுறையானது பிற தளங்களில் மீண்டும் மீண்டும் தோன்றுவது தவிர்க்க முடியாததாகும். மரபியல் குறியீது (Gentic Code) என்பது இதற்கான ஒரு நல்ல உதாரணம், உயிரியலாளர்களோ, மரபியல் விஞ்ஞானிகளோ தாங்கள் கண்டுபிடித்த ஒன்றைப் பற்றிக் கூற வேண்டிய பிரச்சனை வரும் போது அவர்கள் மொழியியலின் மொழியைத் தான் கடன் வாங்கிக் கொள்கிறார்கள் வார்த்தைகள் வாக்கியங்கள், உச்சரிப்புகள், நிறுத்தக் குறியீடுகள் இன்னபிற போன்றவற்றை உபயோகித்துத்தான் பேசுகிறார்கள். நான், இவை இரண்டும் ஒன்றுதான் என அர்த்தப்படுத்த விரும்பவில்லை அவை இரண்டும் ஒருவிதத்தில் வேறுபாடு கொண்டவை ஆனால் யதார்த்தத்தின் இருவேறுபட்ட தளங்களில் எழும்பும் ஒரே விதமான பிரச்சனைதான் அது எனச் சொல்லலாம்.

மானுடவியலில் வார்த்தைகளில் சொன்னால் கலாச்சாரத்தை (Culture) இயற்கையாக (Nature) சுருக்கி விடுவது எனது மனசுக்கு ஒவ்வாததாகவே இருக்கிறது, ஆனால் வழக்கமான அணுகுமுறையின்படி பார்த்தால் கலாச்சாரம் என்ற தளத்தில் நாம் பார்ப்பதும் அதுவும் ஒரே விதமானதல்ல. நாம் இயற்கை என்ற தளத்தில் கவனிக்கும் இதேவிதமான பிரச்சனையின் வேரை மனம் என்பதிலும் கண்டுபிடிக்க முடியும், கலாச்சரரம் என்பது மிகவும் சிக்கலான பல்வேறுபட்ட வேற்றுமைகளைக் கொண்டிருந்த போதிலும் கூட.

ஒரு தத்துவத்தை உருவாக்கவே, ஒரு கோட்பாட்டை அமைக்கவோ நான் முயற்சிக்கவில்லை நான் குழந்தையாக இருந்த நாளிலிருந்து நமக்குத் தரப்பட்டுள்ள ஒழுங்கற்றவைகளின் பின்னாலுள்ள ஒழுங்கைக் கண்டுபிடிப்பது பற்றியே கவலை கொண்டிருந்தேன். (இதை, நாம் ஒரு பகுத்தறிவற்ற செயலாகக் கூட சொல்லலாம்) இவ்விதமாக நிகழ்ந்ததில்தான் நான் மானுடவியலாளன் ஆனேன், உண்மையில் மானுடவியலில் எனக்கிருந்த ஆர்வத்தின் காரணமாக நான் இப்படி ஆகவில்லை, தத்துவத்திலிருந்து விடுபட வேண்டும் என நான் முயற்சித்ததன் விளைவாகவே இப்படி ஆனேன்.

படிப்பகம்

www.padippakam.com

ஃப்ரெஞ்ச் கல்வித்துறை சட்டகத்திற்குள் தத்துவத்தில் பயிற்சிபெற்ற, தத்துவத்தை பயிற்றுவிக்கக் கூடிய ஒரு சிலருக்கு மானுடவியலுக்குள் தப்பித்துச் செல்லக்கூடிய வாய்ப்பு இருந்தது. அந்த சமயத்தில் பல்கலைக்கழகங்களில் மானுடவியல் ஒரு பாடப்பிரிவாக போதிக்கப்படவில்லை. நான் மானுடவியலுக்குத் தப்பித்துச் சென்றேன். சென்றவுடன் உடனடியாக ஒரு பிரச்சனையை எதிர் கொண்டேன் — உலகம் முழுக்க திருமணத்துக்கென ஏராளமான விதிகள் உள்ளன, அவை யாவுமே முழுக்க முழுக்க அர்த்தமற்றவைகளாகவே உள்ளன, இதை விடவும் எனக்கு எரிச்சல் உண்டாக்கிய விசயம், அவை அர்த்தமற்றவையாக இருக்கும்பட்சத்தில் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதிகள் இருக்க வேண்டுமே, ஏன் அப்படி இல்லை? மேலும் அந்த விதிகளின் எண்ணிக்கை ஏறக்குறைய முடிந்துவிட்டதாக இருப்பதும் தான் எனக்கு எரிச்சலை உண்டாக்கியது. ஆக, இந்த ஒரேவிதமான அபத்தம் மீண்டும் மீண்டும் தோன்றும்போது வேறுவிதமான அபத்தமும் கூட மீண்டும் தோன்றும்; எனவே; இது முழுவதும் அபத்தமான ஒன்றல்ல; ஏனென்றால் அபத்தமானதாக இருக்குமானால் அது மறுபடியும் தோன்றாதே!

இப்படித்தான் என்னுடைய முதல் அறிதல் நிலை இருந்தது. அதாவது வெளியில் தெரியும் இந்த ஒழுங்கின்மைக்குப்பின் உள்ள ஒழுங்கைக் கண்டுபிடிக்க முயல்வதாக அது இருந்தது, ரத்த உறவு அமைப்புகள், திருமண விதிகள் ஆகியனபற்றிய ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்பு, நான் எனது கவனத்தைத் தொன்மங்களை நோக்கித் திருப்பினேன். இதுவும்கூட யதேச்சை நிகழ்வாகத்தான் அமைந்ததேயொழிய திட்டமிட்ட நோக்கத்தின் அடிப்படையில் அல்ல. இதிலும் பிரச்சனை அதேதான், தொன்மக்கதைகள் தன்னிச்சையானவையாகவும் அர்த்த மற்றவையாகவும், அபத்தமாகவும் தெரியும், இருந்தபோதிலும் உலகம் முழுக்க அவை மீண்டும் மீண்டும் தோன்றுகின்றன. ஒரு இடத்தில் தோன்றும் விசித்திரமான மனோநிலை வித்தியாசமானது-நீங்கள் வேறு ஒரு இடத்தில் அதே நிலையைக் காண முடியாது. என்னுடைய பிரச்சனை என்னவெனில், இப்படியாகத் தோன்றும் ஒழுங்கின்மைக்குப் பின்னே ஏதேனும் ஒழுங்கு உள்ளதா என்பதைக் கண்டறிவது, இதுதான்! வேறு எதுவுமில்லை. இதிலிருந்து முடிவுகளுக்கு வந்துவிடலாமென நான் கூறிக்கொள்ளவில்லை.

ஒழுங்கு இல்லாமல் ஒரு அர்த்தத்தை நாம் உருவாக்கிக்கொள்ள முடியாது என நான் எண்ணுகிறேன். சொற்பொருள் ஆய்வியலில் (Semantics) அரியதொரு விசயம் என்னவெனில் மொத்த மொழியிலுமே அர்த்தம் கண்டுபிடிக்க மிகவும் கடினமான ஒரு வார்த்தை 'அர்த்தம்' என்ற வார்த்தைதான். 'அர்த்தம்' என்றால் என்ன அர்த்தம்? எந்தவிதமான தகவலையும் வேறு ஒரு மொழியில் மாற்றக் கூடிய தன்மையைத்தான் அர்த்தம் என நாம் குறிப்பிடுகிறோம். இதுதான் இதற்கான ஒரே அர்த்தம் என எனக்குப்படுகிறது. நான் வேறொரு மொழி எனக்குறிப்பிடுவது ஃப்ரெஞ்ச் அல்லது ஜெர்மனை அல்ல, வேறுவார்த்தைகளில் வேறொரு தளத்தில் மாற்றுவதைத்தான் குறிப்பிடுகிறேன். இந்தவிதமான அர்த்தத்தை-அதாவது ஒரு சொல்லின் பொருளை பல்வேறு சொற்களில் விளக்குவதை-உங்களுக்குத் தருவதற்குத்தான் அகராதி இருக்கிறது. விதிகளற்ற ஒரு மொழிபெயர்ப்பு என்னவாக இருக்கும்? அது முழுக்க முழுக்க புரிந்து கொள்ளவே முடியாதபடி இருக்கும். ஏனெனில் நீங்கள் ஒருவார்த்தையை இன்னொரு வார்த்தையாலோ, ஒரு வாக்கியத்தை இன்னொரு வாக்கியத்தாலோ பதிலீடு செய்ய முடியாது. நீங்கள் மொழிபெயர்ப்பின் விதிகளைப் பின்பற்றியாகவேண்டும். விதிகளைப் பற்றிப் பேசுவது, அர்த்தத்தைப் பற்றிப்பேசுவது என்பது அதே விசயத்தைப் பற்றிப்பேசுவது என்பதுதான்; மனிதகுலத்தின் அனைத்து வகையான அறிவார்த்தமான முயற்சிகளுக்கும் பொதுவான குறிப்படையாளமாக இருப்பது ஒருவிதமான ஒழுங்கைக் கொண்டுவந்து புகுத்துவது என்பதுதான் மனித மனத்தில் ஒழுங்குபற்றிய அவசியத்தைப் பிரதிபலிப்பதாக இது இருக்குமெனில் அதற்கான காரணம் இந்த பிரபஞ்சத்தில் ஏதோ ஒரு ஒழுங்கு உள்ளது, மேலும், இந்த பிரபஞ்சம் வெறும் குழப்பம் என்பதும் அல்ல.

நான் இங்கே சொல்ல முற்படுவது என்னவென்றால் விஞ்ஞானபூர்வமான சிந்தனைக்கும் ஸ்தூலமானதின் தர்க்கத்துக்கும் இடையே நடந்துவிட்ட பிரிவுபற்றியதுதான். இந்தப்பிரிவு ஒரு அவசியமான ஒன்று. நான்ஸ்தூலமானது எனக் குறிப்பிடுவது உருவங்களுக்கும், குறியீடுகளுக்கும் மற்றும் அவை போன்றவற்றுக்கும் புலன்களினுடைய விபரங்களின் உபயோகம் பற்றிய மரியாதைக்குமான முரண்பாடு. இந்தப் பிரிவு கடக்கப்பட்டு வருவதை அல்லது மீண்டும் பழையநிலைக்கு வருவதை நாம் இப்போது பார்க்கிறோம். ஏனெனில் நவீன விஞ்ஞானமானது அதனுடைய சொந்தப் பாதையில், அதாவது குறுகலமான அதன் பாதையில் உந்தி உந்தி முன்னேறுவது மட்டுமின்றி அந்தப் பாதையை அதே வேளையில் அகலப்படுத்தியும் முன்னர் விடப்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளை உள்ளடக்கியும் வருகிறது.

இந்த விதத்தில், அறிவியலானது எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்துவிடும் எனக் கண்மூடித்தனமாக நம்புகின்ற ஒருவனாக நாம் குறிக்கப்படலாம். நல்லது, நான் அப்படியான

படிப்பகம்

www.padippakam.com

நம்பிக்கை கொண்டவனல்ல. ஏனெனில், அறிவியல் முழுமையடைந்து எல்லாவற்றையும் அடைந்துவிடும் நாள் வரும் என நான் நம்பவில்லை. எப்போதுமே, புதிய பிரச்சனைகள்வரும், அதே வேளையில் ஒரு டஜன் வருடங்களுக்கு முன்போ அல்லது ஒரு நூற்றாண்டுக்கு முன்போ தத்துவார்த்தமானது என நம்பப்பட்ட பிரச்சனைகளை அறிவியல் தீர்த்துவைக்கும். ஆக, புதிய பிரச்சனைகள், அதுவரையிலும் பிரச்சனை என நினைக்கப் படாத பிரச்சனைகள் வரும். அறிவியல் நமக்கு தருகின்ற விடைகளுக்கும் அந்த விடைகள் புதிதாக எழுப்புகின்ற கேள்விகளுக்கும் இடையில் ஒரு இடைவெளி எப்போதுமே இருந்துவரும். ஆக, இந்தவிதத்தில் நான் 'அறிவியல்வாதி' அல்ல. அறிவியல் நமக்கு எந்தக்காலத்திலும் எல்லா விடைகளையும் தந்துவிடாது. நாம் செய்ய முயற்சிப்பது என்ன எனில் நாம் தருகின்ற விடைகளின் எண்ணிக் கையையும், தரத்தையும் மிக மெதுவாக உயர்த்தும் வேலையைத்தான். நான் நினைக் கிறேன், இந்த வேலையை அறிவியலின் மூலமாக மட்டும்தான் நாம் செய்ய முடியும். O

அரசியல் கண்காணிப்பும் கண்காணிப்பின் அரசியலும்

ஆதவன்: கண்காணிப்பைப் பற்றிப்பேசும் போது வெளியிலிருந்து நம்மைக் கண்காணிக்கிற நிறு வனங்களைப்பற்றிப் பேசுவதைவிடவும் நம்மை நாமே கண்காணித்துக் கொள்ளும்படி செய்யப் பட்டிருக்கிறோமே அதைப்பற்றி முதலில் பேச வேண்டுமென நான் நினைக்கிறேன். இன்றைக் குள்ள சமூக இயக்கத்தின் ஒழுங்கை நம்மில் யார் ஒருத்தர் மீறினாலும் அதனால் மற்ற எல் லோருக்குமே பாதிப்பு ஏற்படும் என சித்தரிக்கப் பட்டிருப்பதால் நம்முடைய இருப்பின் பாது காப்பு கருதி நாமே ஒருவரையொருவர் வேவு பார்த்துக்கொள்கிறோம் இதன் மூலம் ஆளப்படு கின்ற தன்னிலைகளாக (Subjects) நாம் இருக் கிற அதே நேரத்தில் அரசின் கிளைகளாகவும் நாம் இயங்கிக் கொண்டிருக்கிறோம். இதனை நாம் உணர்ந்து கொண்டாக வேண்டும். அதி காரத்தினுடைய நுண் அரசியல் செயல்பாடு களை (Micro Political Activities) புரிந்து கொள்வதும் அதன் வழியே நமது சூழலைப் பற்றிய அறிவைப் பெறுவதும் இப்படியாக நாம் இழந்துவிட்ட நமது அதிகாரத்தை மீட்டெடுப் பதும் .... இதுதான் நம்முடைய விடுதலைக் கான யத்தனிப்பின் துவக்கப்புள்ளியாக இருக் கிறது என எனக்குப்படுகிறது.

மதி: நீங்கள் சொல்வது சரிதான். சமூக ஒழுங்கு—அதை மீறுவது—என நீங்கள் சொன் னீர்கள் நமக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைக ளைத் தவறாமல் கடைபிடிப்பதே நமது வாழ் வின் இயக்கம் என்பதை மிக எளிமையாகப் புலப்படுத்தும் கதை ஒன்று எனக்கு நினைவிற்கு வருகிறது. ஒருமுறை கங்கையில் நீராட வேண்டுமென்று மன்னன் ஒருவன் பரிவாரங்க ளோடு சென்றானாம். திடீரென்று அவனுக்கு ஒரு எண்ணம் உதித்தது. கங்கை நதியின் நீரோட்டத்தை யாராவது எதிர் திசையில் மாற்ற முடியுமா? மந்திரவலிமை கொண்டதாகக் கூறப்பட்ட பலரும் முயற்சித்தார்கள் முடிய வில்லை அப்போது அங்கே ஒரு தாசி வந்தா ளாம். கங்கையைப் பார்த்து அவள் ஆணை யிட்டதும் வெள்ளம் எதிர்த் திசையில் ஓடத் துவங்கி விட்டது எல்லோருக்குமே ஆச்சர்யம். இவளுக்கு எப்படி இத்தனை மந்திரவலிமை வந்தது என யாவரும் வியப்பில் வாயடைத்து நின்றபோது அவள் சொன்னாளாம், நான் என்னுடைய குலத்தின் தர்மங்களை தவறாமல் கடைபிடிக்கிறேன் மன்னனோ, சாதாரணகுடி மகனோ யாராயிருந்தாலும் சமமாகபாவித்து இன்பம் தருகிறேன். இதனாலேயே எனக்கு இப்படியான சக்தி கூடியது. இந்தக் கதையை நீங்களும் கூட அறிந்திருப்பீர்கள். இது புலப் படுத்தும் நீதி என்ன? வரையறைகளை மீறா மல் கடைப்பிடித்து வந்தால் நமக்கு வலிமை கிடைக்கும்........

குமாரகுப்பன்: கீதையில் கூட நாம் இதே விதமான குரலைக்கேட்க முடிகிறது. ''செய லற்றிருப்பதைவிட செயலே சிறந்தது எனவே வாழ்வில் உங்களது கடமைகளைச் செய்யுங் கள்'' என்கிறது கீதை செயல் என்றால் என்ன என்கிற சந்தேகம் நமக்குவரும் இதற்கும் கீதை யே பதிலளிக்கிறது, ''தியாகமே புனிதமான செயல்'' உங்கள் கடமைகளை எனக்காக அர்ப் பணியுங்கள் என உபதேசிக்கும் கண்ணன் அப் படிக் கடமையில் சிறப்பதே வாழ்வது என்கிறான்.

ஆதவன்: ஆக நம்முடைய வாழ்தலின் அர்த் தம் நமக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்வது, நம் உழைப்பை மகிழ்ச்சியை கடவு ளருக்காகவும், அவர்களின் வடிவங்களாக முன் வைக்கப்பட்ட அரசர்களுக்காகவும், பிராமணர்

படிப்பகம்

www.padippakam.com

களுக்காகவும் தியாகம் செய்வது, அர்ப்பணிப்பது என சொல்லப்பட்டுள்ளது.

குமாரகுப்பன்: ஆமாம்! நமக்கான கடமைகளை வேதசாஸ்திரங்கள் நிர்ணயித்துள்ளன. அவற்றை தவறாமல் கடைபிடித்தால் கங்கையைத் திசைதிருப்பிய தாசியைப்போல நாமும் வலிமை கொண்டவர்களாக இருக்கலாம், அதைக் கடைபிடிக்கத் தவறினாலோ மரணம் தான்......

ஆதவன்: கீதை உபதேசிக்கப்பட்ட காலம் முதற்கொண்டு இன்றையவரைக்கும் குற்றத்துக்கான தண்டனை என்ற மிரட்டலினால் மட்டுமின்றி இப்படியான உபதேசங்களாலும், அறநியதிகளாலும் தான் நாம் ஆளப்படுகிறோம். தண்டனைகளால் மட்டுமின்றி பரிசுகளாலும் மட்டுமல்லாது வரங்களாலும்தான் நமது வாழ்க்கை நிர்ணயிக்கப்படுகிறது.

மதி: இந்த நிர்ணயிப்புகளை யாவரும் கடைபிடிக்கிறார்களா எனப் பார்ப்பதற்கான அதிகாரத்தை, அதில் யாரேனும் தவறினால் அவரைத் தண்டிக்கின்ற உரிமையை மதம் அரசனுக்கு அளித்தது. இந்த தண்டிக்கும் உரிமையை அவன் சரியானபடி பிரயோகிக்காவிட்டால் மேல் கீழாகும், கீழ் மேலாகும் எல்லாமே தலைகீழாகி விடும் பேரழிவு உண்டாகும் என எச்சரித்தான் மனு.

ஆதவன்: ஒருவரையொருவர் வேவு பார்த்து கொள்கிறோம் எனக் குறிப்பிட்டேனே அதைக் கொஞ்சம் விளக்கலாமென நினைக்கிறேன். சமூகஒழுங்கு குலைந்து பேரழிவு உண்டானால் எல்லோருக்கும் சாவுதான் ஆகவே சமூக ஒழுங்கைக் காப்பாற்றும் பொறுப்பு அதன்மூலம் தனது சாவைத்தள்ளிப்போட்டுக் கொள்ளும் ஒரு செயல்பாடு- இதற்காக மற்றவரைக் கண்காணிக்க வேண்டிய நிர்பந்தம் நமக்கு உண்டாகிறது என்பதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

குமாரகுப்பன்: இப்படியான கண்காணிப்புப் பணியை நாம் உருவாக்கி வைத்துள்ள மதம், குடும்பம் போன்ற நிறுவனங்களும் செயல்படுத்துகின்றன என்பதும் உண்மைதானே!

ஆதவன்: ஆமாம், அவை மட்டுமின்றி மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள், சிறைகூடங்கள், தொடர்பு சாதனங்கள் யாவுமே இப்படியான கண்காணிப்பைச் செய்துகொண்டு தான் உள்ளன.

மேகநாதன்: அப்படியென்றால் போலீஸ் என்ற அமைப்பின் தேவை எதற்காக உண்டானது. அதன் செயல்பாட்டை நாம் எவ்வாறு வகைப்படுத்துகிறோம். கண்காணிப்பு பணியில் போலீசின் பாத்திரத்தை நாம் நிராகரிக்கிறோமா? நுண் அரசியல் செயல்பாடுகளைப் பற்றிப் புரிந்துகொள்வது என்பது Marco levelல் நிறுவனங்களின் ஒடுக்குமுறைகளைப் பார்க்காமல் தவிர்ப்பது என அர்த்தமாகி விடக்கூடாது.

ஆதவன்: அப்படியல்ல... நான் நுண்அரசியல் செயல்பாடுகள் பற்றிகவனம் செலுத்தவேண்டும் எனக்குறிப்பிடுவது இவ்வளவு காலமாக அவை பற்றி அதிகம் கவனிக்கப்படவில்லை என்பதை வலியுறுத்துவதற்காகவும்தான்...

மதி: ஆமாம், போலீஸ் அமைப்பு நம்மை ஒடுக்குவதற்காக இருக்கிறது என நமக்கு வெளிப்படையாகத் தெரிகிறது. ஒருசி. ஐ. டியின் வேலை கண்காணிப்பதுதான் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியும், ஆனால் ஒரு பள்ளிக்கூடமும்கூட இப்படியான கண்காணிப்பை மேற்கொள்கிறது அதுவும் சிறைச்சாலை போல அங்குவரும் குழந்தைகளின் உடல்களை ஒழுங்குபடுத்துகிறது அவர்களைக் கண்காணிக்கிறது என நமக்கு வெளிப்படையாகத் தெரிவதில்லையே!

மேகநாதன்: நீங்கள் சொல்வது உண்மை தான் ஆனாலும் போலீஸ் ஒரு ஒடுக்குமுறை நிறுவனம் என்பதால் மட்டும்தானா அறியப்பட்டுள்ளது? அது குற்றங்களைத் தவிர்த்து சமூகத்தை- அதன்மூலம் சமூக உறுப்பினர்களாக நம்மைக் காப்பாற்றுகிறது என்றல்லவா நம்ப வைக்கப்பட்டிருக்கிறோம். அதன் பலமே இதுதானே!

குமாரகுப்பன்: நமது சூழலை நாம் கணக்கில் எடுத்துக்கொண்டாக வேண்டும். போலீஸ் என்ற நிறுவனத்தின் செயல்பாடுகளேகூட நமக்கு இன்னும் வெளிப்படாமல்தான் உள்ளது நமக்கு இதுபற்றியெல்லாம் தெரியும் என முடிவு செய்து கொண்டு நம்மை நாமே ஏமாற்றி கொள்ள தேவையில்லையென நினைக்கிறேன்.

ஆதவன்: போலீஸ் என்ற கருத்தாக்கத்தின் தோற்றத்தை இந்தியாவைப் பொறுத்தமட்டில் நாம் பிரிட்டிஷாரின் வருகைக்குப் பின்புதான் காணமுடிகிறது. இந்தியாவின் பல பகுதிகள் அவர்களது ஆளுகையின் கீழ் வந்ததன் பின்னால் அவற்றை நிர்வகிக்க முற்றிலும் ராணுவத்தையே சார்ந்திருப்பது இருவிதங்களில் அவர்களுக்கு சிரமத்தை தந்தது. 1. ராணுவம் யுத்தகளங்களில் மட்டுமே பழக்கபட்டிருந்தது. அதைக்கொண்டு மக்களை நிர்வகிப்பது அரசிடமிருந்து மக்களை அந்நியப் படுத்திவிடும். 2. ராணுவத்தை சிவில்வேலைகளுக்குப் பயன்படுத்துவது செலவு பிடிக்கிற சமாச்சாரம் என்பதும் ஒரு காரணம் இதன் இடையில் பிரிட்டிஷ் அரசுக்கு ஏற்பட்ட எதிர்ப்புகளையும், அவர்கள் அதற்கு முன் இருந்த தலையாரி காவல்காரர்கள் என்போரையே சார்ந்திருக்க வேண்டியிருந்ததால் உண்டான

படிப்பகம்

www.padippakam.com

சிக்கல்களையும் கூட நாம் இங்கே கவனத்தில் கொள்ளவேண்டும்.

மதி: 1855ல் மலபார் பகுதியில் மாஜிஸ்ட்ரேட் ஒருவரை மக்கள் கொன்றது இப்படியாக வலுப்பட்டுவந்த எதிர்ப்பின் வெளிப்பாடுதான்

மேகநாதன்: போலீஸ் அமைப்பு உருவாக்கப் பட்ட பின்னரும்கூட தலையாரி, கிராம மணியக் காரர் ஆகிய பிரிவினரும் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறார்களே, இவர்களுக்குப் பதிலான ஒரு நிறுவனமாக போலீஸ் அமைப்பு உண்டாக்கப்பட்டது என நாம் கூறிவிட முடியாது.

ஆதவன்: ஆமாம், கிராமப்பகுதிகளைப் பொறுத்தமட்டில் போலீஸ் நேரடியாகக் கண்காணிப்பது என்பது இப்போதும்கூட ஒப்பீட்டளவில் குறைவாகத்தானே உள்ளது. இதற்கு நாம் கிராமங்களில் நிலவும் நமது திருவிழாக்கலாச்சாரத்திலும், ஒழுக்க மதிப்பீடு களிலும் காரணத்தைத் தேடவேண்டும்.

மேகநாதன்: முக்கியமான ஒன்றைத் தவற விட்டுவிட்டீர்கள். சாதிய அமைப்பு-அதனடிப் படையில் படிநிலைப் படுத்தப் பட்டிருக்கும் இந்திய சமூகத்தில் சாதியத்தின் ஆதிக்கக் கருத்தியல் ஒரு வலுவான இணைப்பு சத்தியாக Cementing force ஆக செயல்பட்டு சமூக ஒழுங்கைக் கட்டிக் காப்பாற்றுவருவதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒழுக்க மதிப் பீடுகளைப் பொறுத்தவரை கிராமப்பகுதிகளில் பெரும்பகுதி மக்களாயிருக்கும் விளிம்புநிலை மக்களிடம் (Subaltern Sector) ஒழுக்க மதிப்பீடுகள் அதிகம் ஆதிக்கம் செலுத்துவது இல்லை அவர்களைப் பொருத்தவரை அடிமை தனம் என்பது வாழ்வின் உள்ளீடாக மாற்றப் பட்டிருக்கிறது நீங்கள் குறிப்பிட்ட திருவிழாக் கலாச்சாரம் என்பதில் அந்தமக்கள் தங்களை வருத்திக்கொண்டு சந்தோஷப்படும் வாதையுறு தலித (Masochist) உணர்வின் வெளிப்பா டாக அமைந்திருப்பதை நாம் காணவேண்டும்.

ஆதவன்: திருவிழா என்பது அவர்களின் ஒடுக்கப்பட்ட உணர்வுகளின் பீறிட்டெழும் வெளிப்பாடாக விளங்குவதையும் நாம் கவனத்தில்கொள்ளவேண்டும். குறிப்பாக பலி போன்றவற்றில்...

குமாரகுப்பன்: உண்மைதான். போலீசை எடுத்துக்கொண்டால் அவர்கள் கிராமங்களுக்கு எப்போது சென்றாலும் அந்த மக்களை கடுமையாகத் தாக்குவது, சூறையாடுவது என மிகுந்த வன்முறையை ஒடுக்குமுறையே எவு வதை ஒரு மரபாகவே பின்பற்றி வருகிறார்கள். போலீசின் ஒடுக்குமுறைகள் கிராம மக்களின் மனதில் ஒரு கொடுங்கனவாகப் (Nightmare) பதிந்து எப்போதும் மிரட்டலைத்தந்தது...

மதி: சமீபமாக பொன்பரப்பியிலும், வாச்சாத்தி யிலும் போலீஸ் வன்முறை பற்றி ஆய்வு செய்த பி.யு.சி.எல். அமைப்பு இதுபோலவே கிராம மக்களின் உடைமைகள் சூறையாடப் பட்டதையும், குடிநீர்க் கிணறுகள் பாழடிக்கப் பட்டதையும், சேமிப்புகள் கொள்ளையிடப் பட்டதையும் குறிப்பிட்டுள்ளது. காலனிய போலீஸ் அமைப்பின் தொடர்ச்சிக்கு இதையும் ஒரு உதாரணமாக நாம் எடுத்துக் கொள்ளலாம்

குமாரகுப்பன்: நான் கூறுவதும்கூட இன்றைக்கும் பொருந்துவதுதான். தம்மைத் தண்டிக்கும் ஆற்றல் வாய்ந்ததாகக் கருதப்பட்ட தெய்வங்களின் உருவகக் குறியீடுகளைவணங்கி அவற்றின் எதிரில் தமது உடலை வருத்தி நேர்த்திக் கடன் செய்துகொள்ளும் திருவிழாக் கலாச்சாரத்தில் மூழ்கித்திளைக்கும் கிராம மக்கள் போலீஸ்காரர்களையும் சிறு தெய்வங் களாக்கி வழிபடத் தொடங்கினார்கள். கிராமங்களின் காவல் தெய்வங்கள் போலீஸ் உடையணிந்து முறுக்கிய மீசையுடன் கையில் துப்பாக்கியுடன் நிற்கும் கோலத்தை இன்றும் பல்வேறு அய்யனார்க் கோயில்களில் நாம் காணமுடியும்.

மதி: அய்யனார் வழிபாடு என்றதும் ஒருசில விசயங்களை சொல்லத் தோன்றுகிறது. பிரிட் டிஷார் வருகைக்குப் பின்புதான் அய்யனார் வழிபாடு பிரபலமடைந்திருக்கிறது. குறிப்பாக தென்னார்க்காடு அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் தான் அய்யனார் வழிபாடு காணப்படுகிறது. இந்தப்பகுதிகளிலும் கூட பெரும்பாலும் பிற் படுத்தப்பட்ட மக்களின் தெய்வமாகவே அய்ய னார் இருக்கிறார். வன்னிய மக்கள் குற்றப் பரம்பரையினராக ஆக்கப்பட்டது, போலீஸ் அவர்கள் மீது செலுத்திய தொடர்ச்சியான வன் முறை இவைகளும் கூட நீங்கள் சொன்ன மா திரி அய்யனார்க் கோயில்களில் போலீஸ் பொம் மைகள் உருவாகக் காரணங்களாக இருக்கலா மோ என நினைக்கிறேன்.

ஆதவன்: போலீஸ் நிலையங்கள் கோயில்க ளின் இடத்தில் வைத்து கருதப்படுவதையும் நாம் கவனிக்க வேண்டும். குற்றங்களைத் தடுத்து சமூகத்தைக் காக்கிற இடமாக போலீஸ் நிலையம் விளங்குகிறது என நம்பப்படுவதால் அது கோயிலின் நிலையில் வைத்து கருதப்படு கிறது.

மதி: கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதன் அடிப்படையில் குடியிருப் புகள் தோறும் கோயில் அவசியமாகப்பட்டது போல, இன்று போலீஸ் ஸ்டேஷன்களும் அவசி யமாக்கப்பட்டுள்ளன.

ஆதவன்: இடத்தையும், அமைப்பையும் கூட நாம் கவனிக்க வேண்டும். ஊரைக் கண்கா ணிக்க ஏற்றபடி கோயில் அமைக்கப்பட்டது

படிப்பகம்

www.padippakam.com

போலவேதான் வருவோர் போவோரையும் சேர்த்துக் கண்காணிக்கும் வசதியோடு போலீஸ் நிலையங்கள் கட்டப்படுகின்றன.

மதி: அங்கும் மூலஸ்தானத்தில் ஆயுதபாணியாக மூலவர் இங்கும் ஆயுதபாணியாக அதிகாரி மதத்தின் இடத்தை போலீஸ் வழிமுறைகள் எடுத்துக்கொண்டு விட்டன......

ஆதவன்: மதத்தின் இடத்தை அது எடுத்துக் கொண்டு பதிலீடு செய்கிறது என்பதைவிடவும் மதத்தின் உபபிரிவாக அது சேர்ந்து கொண்டு விட்டது மதத்தின் நீட்சியாக அது செயல்படுகிறது எனக் குறிப்பிடலாம். இப்படியாக நாம் நமது வழிபாட்டு மனோநிலையினுள் ஒரு அங்கமாக போலீசை அதன் வன்முறையை உட்செரித்துக் கொணடிருக்கிறோம்.

மேகநாதன்: கண்காணிப்பின் அரசியல் பற்றியே நாம் இதுவரைப் பேசிக்கொண்டிருந்தோம். அரசியல் கண்காணிப்பு பற்றி நாம் கொஞ்சம் பார்க்கலாம். இது பற்றிய சில குறிப்புகளை நான் டேவிட் அர்னால்ட் என்பவரின் நூலிலிருந்து இங்கே வாசிக்கிறேன். ''போலீஸ் துறை உருவாக்கப்பட்ட பின்பும் கூட அரசியல் கண்காணிப்புக்கென தனிப்பிரிவு ஏதும் உடனடியாக அமைக்கப்படவில்லை 1860ல் வெளியிடப்பட்ட போலீஸ் கமிஷனின் அறிக்கையிலும்கூட இதற்கான தேவை இல்லை என்றே கூறப்பட்டது, ஏனெனில், அரசாங்கத்தைப்பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கண்டறிவதும் போலீஸ் துறை பணிகளில் ஒன்றாகவே இருந்தது. 1885ல் காங்கிரஸ் கட்சி துவக்கப்பட்டதன் பின்னரே போலீசில் 1887ல் உளவுப்பிரிவு உருவாக்கப்பட்டது. அரசியல் இயக்கங்களைக் கண்காணிப்பது, அவை வெளியிடும் பிரசுரங்களைக் கண்காணிப்பது பொது அமைதியைக் குலைக்கும் செய்திகளையும் வெளியீடுகளையும், ஆயுதக்கடத்தல் தொடர்பான செய்திகளையும் சேகரிப்பது, அரசியல் முக்கியத்துவம் கொண்ட மதரீதியான இயக்கங்களைக் கண்காணிப்பது என 1888-ல் துவங்கப்பட்ட சென்னை மாகாண விசேசப் பிரிவு (Special Branch) போலீசின் பணிகள் குறிப்பிடப்பட்டன. இதன் பிறகு 1906ல் சென்னையில் சி. ஐ. டி. பிரிவு அமைக்கப்பட்டது. அது நான்கு உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது அவை 1. குற்றப்பிரிவு 2. கைரேகைபிரிவு 3. செய்தித்தாள் பிரிவு 4. விசேசப்பிரிவு.''

மதி: அரசியல் போலிசின் துவக்க நிலையிலேயே அதற்கும் செய்தித்தாளுக்குமான தொடர்பு ஆச்சர்யமான ஒன்றுதான். போலீசின் துவக்கத்தை காங்கிரஸின் தோற்றத்தோடு மட்டும் இணைத்துப்பார்ப்பது சரியல்ல அந்த காலகட்டத்தில் தான் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக கொடும் பஞ்சங்கள் தாக்கின அதில் கோடிக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இதனால் மக்களிடையே ஏற்பட்ட கொந்தளிப்புடன் கூடவே நாம் காங்கிரஸின் தோற்றத்தை இணைத்துப் பார்க்க வேண்டும் என நினைக்கிறேன்.

ஆதவன்: செய்தித்தாள்பிரிவு என சி. ஐ. டி. போலீசில் தனிப்பிரிவு இருந்ததைக் கூறினீர்கள். மக்களுக்கிடையே நிகழும் செய்தித் தொடர்பைக் கண்காணிப்பதென்பது உளவு பார்ப்பதன் முக்கிய அங்கமாக அர்த்த சாஸ்திர காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது. மக்களிடையே உலவும் வதந்திகளையும்கூட சேகரித்து வந்து அரசனிடம் தெரிவிக்க வேண்டுமென கௌடில்யன் எழுதினான். பிரிட்டிஷ் ஆட்சியின் போது அதை எதிர்த்த தலைவர்களின் பேச்சுக்களை பதிவு செய்வது, கூட்டங்களைக் கண்காணிப்பது என்பவற்றோடு கூடவே உள்ளூர் மற்றும் வெளியூர் தபால்களையும்கூட சி. ஐ. டி. போலீசார் கண்காணித்து சோதனையிட்டு வந்துள்ளனர். இது போலவே மக்கள் கூடும் இடங்களிலெல்லாம் சி. ஐ. டி, போலீசாரின் கண்காணிப்பு அதிகமாகியது.

மேகநாதன்: ''ஒரு சி. ஐ. டி. போலீஸ் உட்கார்ந்திருப்பதே கூட அந்த இடத்தில் ஒழுங்கை நிலைநாட்ட போதுமானது'' என்று சென்னை மாகாண இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்த சர் ஹரால்ட் ஸ்டுவர்ட் கூறினான். என டேவிட் அர்னால்டின் நூலில் வருகிறது.1919ல் ரௌலட் சட்டம் பற்றிவிவாதிக்க மதுரையில் கூட்டப்பட்ட ஒரு கூட்டம் அங்கே ஒரு சி. ஐ. டி. போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வந்திருந்ததால் ரத்து செய்யப்பட்ட நிகழ்ச்சியையும் அர்னால்ட் குறிப்பிடுகிறார். இங்கே போலீஸ் என்ற குறியீடு அதுவரையிலான அதன் வன்முறை முழுவதையும் ஞாபகப்படுத்தி நிற்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும், போலீசாரின் சிகை அலங்கார முறையான ஒட்ட வெட்டிக் கொள்ளும் ஸ்டைலும் கூட நம்மைப் பயமுறுத்துவதாக அமைந்திருப்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

மதி: அவர்கள் கையில் வைத்திருக்கும் தடியைப் பற்றியும் குறிப்பிடவேண்டும். இது அவர்களின் அதிகாரத்தின் சின்னமாக விளங்குகிறது. அதிகாரம் என்பது நமது பாலாதிக்க சமூகத்தில் ஆண்மையின் குறியீடாக அர்த்தப்படுகிறது. அவர்கள் வைத்திருக்கும் தடி அவர்களது ஆண்குறியின் நீட்சியாகவே செயல்படுகிறது. உதாரணமாக அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பத்மினியின் பிறப்புறுப்பில் ஒரு போலீஸ்காரர் 'லத்தி'யை நுழைத்திருக்கிறார். அதுபோலவே வாச்சாத்தியிலிருந்து கைதுசெய்யப்பட்டு ஏற்றிச் செல்லப்பட்டவர்களில் 18 பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட போது அவர்களின் பிறப்புறுப்புகளிலும் லத்தியால் குத்தியுள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com

குமாரகுப்பன்: பெண் போலீசாரின் கையில் தடி கிடைத்ததும் அவர்களும் தங்களை ஆண்களாக பாவித்துக் கொள்வதை கவனிக்க வேண்டும். பெண்ணியல்வாதிகள் சிலர் கூறுவது போல பெண்களின் அடி மனத்தில் பதிந்திருக்கும் ''ஆண் உறுப்பு தனக்கு இல்லையே என்ற ஏக்கம்'' இங்கே நீங்கிவிடுகிறது போலும். இத னால்தான் அவர்கள் தங்கள்மீது செலுத்தப்படும் வன்முறையைக் கூட உணர முடியாமல் எப்போ தும் ஒரு இன்ப உச்சத்தில்(Orgasm) லயித்துக் கிடக்கிறார்கள் போல.

மேகநாதன்: இப்படி போலீஸ் என்ற நிறுவனம் குறியீடுகளின் மூலம் செயல்படும்போது உண் டாக்கப்படும் மக்களுக்கும் அவர்களுக்குமிடை யிலான இடைவெளி அதிகமாகிறது. இங்கே இதன் செயல்பாடு நேரடியான ஒடுக்குமுறை அரசு நிறுவனமாக (Repressive State Appa ratus) மட்டுமே உள்ளது. இதை மாற்றுவதற் காகவே புயல், வெள்ளம் போன்ற காலங்களில் மீட்புப்பணியில் போலீஸ் ஈடுபடுவது திருவிழாக் காலங்களில் கூட்டத்தை ஒழுங்கமைத்து காணா மல் போனவர்களைக் கண்டுபிடித்துத்தரும் பணி முதலானவற்றில் ஈடுபடுவது என கருத்தியல் பிரச்சார வேலைகளிலும் கவனம் செலுத்தப்படு கிறது. அண்ணாமலை நகர் பத்மினி வழக்கு தொடர்பாக விசாரணை நடைபெற்ற நாளில் சிதம்பரத்தில், களவுபோய் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களை உரியவர்களிடம் ஒப்படைக்க ஒரு விழாவை போலீசார் பெரிய விளம்பரத்தோடு நடத்தினார்கள். அதன் மூலம் பத்மினி பற்றிய பேச்சு துடைக்கப் பட்டுஉரையாடல் களத்தில் போலீசாரின் ''நேர்மை'' ''திறமை'' பற்றிய சொல்லாடல்கள் திணிக்கப்பட்டன. இத் துடன் கூடவே மக்களைக் கண்காணிப்பதற் கென மக்களிடையில் பணம் கொடுத்து சில உளவாளிகளை நியமிக்கும் வேலையிலும் போ லீஸ் ஈடுபடுகிறது. பாண்டிச்சேரியில் தலைம றைவாக இருந்தவர்களைப்பற்றிய தகவல்க ளைச் சேகரிக்க இப்படியான உளவாளிகள் நிய மிக்கப்பட்டிருந்ததை நாம் அறிகிறோம். 1923ல் சென்னை மாகாண சி. ஐ. டி. போலீசாருக்கு ரூ. 2500/- ரகசிய நிதியாக ஒதுக்கப்பட்டது. 1933ல் ஐ. ஜி.யாக இருந்த ரௌலண்ட்சன் இப்படியான உளவாளிகளின் மூலமாகத்தான் அரசியல் கண்காணிப்பைத் திறம்படச் செய்ய முடியுமெனக் கூறி ரகசியநிதி ஒதுக்கீட்டை அதி கரிக்கும்படி வலியுறுத்தினான்.

ஆதவன்: கண்காணிப்பில் தொழில்நுட்ப வளர்ச்சி எவ்விதம் பொருந்துகிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். உதாரணத்துக்கு சுருக்கெழுத்து முறை என்ற தொழில் நுட்பத் தை எடுத்துக் கொள்வோம். 1907 வரையில் வங்காள மொழி மட்டுமே சுருக்கெழுத்தில் பயன் படுத்தப்பட்டு வந்தது. சாமிக்கண்ணு பிள்ளை என்பவரால் தென்னிந்திய மொழிகளுக்கான சுருக்கெழுத்து முறை உருவாக்கப்பட்டதற்குப் பின் 1919ல் சென்னை மாகாண அரசு 24 சப்-இன்ஸ்பெக்டர்களை சுருக்கெழுத்து பயிற்சிக் காக அனுப்பியது. அதன்பின் உருது மொழி சுருக்கெழுத்துப் பயிற்சிபெற இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள் லக்னோவுக்கு அனுப்பப்பட் டனர். இன்று ராணுவத்தில் பயன்படுத்தப்படு வதைப் போல இரவில் இலக்கை சரியாகப் பார்க்க உதவும் கண்ணாடிகள் தமிழக போலீசா ருக்கு வழங்கப்படுவதையும், கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்படுவதையும் இத்துடன் நாம் இணைத்துப் பார்க்கலாம். தொழில்நுட்ப வளர்ச்சிகள் மருத்துவம் போன்ற பிற துறைக ளில் பயன்படுத்தப் படுவதைவிடவும் நம்மை

வேவுபார்க்கவும், ஒடுக்கவுமே அதிகம் பயன் படுத்தப்படுகின்றன. ரேடியோ, தந்தி, தொ லைபேசி, தொலைக்காட்சி என எல்லா தொழில் நுட்ப வசதிகளுமே நம்மை வேவு பார்ப்பதற்கு ஏற்றபடியாகவும் அமைக்கப்படுவதை நாம் பார்க்கிறோம்.

மதி: உடலை அழித்து விடுவது என்பதிலிருந்து மாறி உடலை ஆதிக்கத்துக்கு ஏற்றபடி ஒழுங்க மைத்து அடிமைப்படுத்திக் கண்காணிப்பின் கீழ் வைப்பதாக தண்டனை முறையில் மாற்றம் நிகழ்ந்ததை நாம் அறிந்திருக்கிறோம். இதற் காகவே போலீஸ் அமைப்பு உருவாக்கப்பட்ட தையும் பார்த்தோம். ஆனால் இதில் இப்போது மீண்டும் ஒரு மாற்றம் நிகழ்ந்திருப்பதாக எனக் குத் தோன்றுகிறது அதாவது மீண்டும் உடல் களை அழிக்கின்ற வேலையில் அரசு ஈடுபடு கிறது. நாள்தோறும் பத்துக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்படுவதாக நமக்கு செய்திகளில் சொல்லப்படுகிறது. தண் டனை முறையில் நிகழ்ந்துள்ள இம்மாற்றத்தை நாம் எப்படி விளங்கிக்கொள்வது?

ஆதவன்: இந்தியாவைப் பொறுத்தவரையில் உடலை அழித்துவிடும் தண்டனையான மரண தண்டனை என்பது எப்போதுமே கடைப்பிடிக்க பட்டுதான் வரப்படுகிறது. சிறைப்படுத்துதல் என்ற ஒரு தண்டனை வடிவம் முன்னாளில் இல்லை என்பது உண்மைதான். இந்த தண்டனை வடிவங்களை அவ்வப்போது நிலவிய அரசு வடிவங்களோடு இணைத்துப் பார்க்கலாமோ எனத் தோன்றுகிறது.

மதி: அரசு எந்த அளவுக்கு வெகுமக்களிடம் இருந்து அன்னியப்பட்டுப்போகிறதோ, எந்த அளவுக்கு மக்கள் எதிர்ப்புகள் வலுப்பெற்று வருகிறதோ அந்த அளவுக்கு அது நேரடியாக ஒடுக்குமுறையைச் செலுத்த தனது மேலாண் மையைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. சிவில் சமூகத்தில் தனது கருத்தியல் மேலாண்மையின் அடிப்படைத் தகரும்போது எழும் நெருக்கடியே இத்தகைய

படிப்பகம்

www.padippakam.com

நேரடியான ஒடுக்குமுறை வடிவத்தை மேற் கொள்ளும்படி அரசைத் தூண்டுகிறது என நாம் பார்க்கலாமா?......

குமாரகுப்பன்: இப்படி நேரடியான ஒடுக்கு முறையை அது மேற்கொள்ளும் போது அதை நியாயப்படுத்துவதற்கான கருத்தியல் நடவடிக்கை அவசியமாகிறது. ஆனால் இந்தக் கருத்தியல் பிரச்சாரம் எப்போதும் போல எளிதாக மேலாண்மை பெற்றுவிடுவதில்லை இதற்கு விதிவிலக்கான பிரத்யேகமான பல நுட்பங்களைக் கையாள வேண்டியாகிறது. இன்றைய நிலையை எடுத்துக்கொண்டால் ''தேசஒற்றுமை' என்கிற கருத்தியல் பிரச்சாரம் ஆனது நாடெங்கும் நடத்தப்படும் மிகக்கொடூர மான ஒடுக்கு முறைகளை நியாயப்படுத்த கையாளப்படுவதை பார்க்கிறோம். இதற்காக தேசியவெறி ஊட்டப்படுகிறது, அண்டை நாடுகளின் பால்கசப்புனர்வு வளர்க்கப்படுகிறது இத்துடன் இணைந்து இந்து மதவெறிப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. பிரிட்டிஷாரை எதிர்த்த போராட்டத்தில் பரந்த அணி திரட்டலுக்கு எளிதான உபாயமாகப் பயன்பட்ட இந்து மீட்புவாதம் இன்றும் கையாளப்படுகிறது அன்று அன்னிய ஆட்சியை எதிர்த்த தேசிய வாதம், இன்று தேசிய இனப்போராட்டங்களை எதிர்த்து முன்வைக்கப்படும் தேசியவாதம்...

மதி: விநாயகசதுர்த்தி விழா செய்தியில் நரசிம்மராவ் 'சுதந்திர போராட்ட' காலத்தை நினைவுபடுத்துகிறார். கோகலே இந்த விழாவை எதற்காகக் கொண்டாடச்சொன்னார். என்பதைக்குறிப்பிடுகிறார். அன்றும் இந்த விழாக்கள் அடித்தட்டு மக்களுக்குப் பயன்பட்ட தில்லை இன்றும் பயன்படுவதில்லை.

ஆதவன்: பிரிட்டிஷாரின் காலத்திலும் சரி இன்றும் சரி மிகக் கொடூரமான ஒடுக்குமுறைகள் அடித்தட்டு மக்கள் மீதே ஏவப்படுகின்றன. உதாரணத்துக்கு குற்ற பரம்பரையினர் சட்டத்தை (Criminal tribes Act) எடுத்துக் கொள்வோம். இந்த சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட சாதியைச் சேர்ந்த மக்கள் தினசரி இரவு 11 மணிக்கும் விடியற்காலை 4 மணிக்கும் போலீஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என விதிக்கப்பட்டிருந்தது பல மைல்கள் கடந்து இரவு 11 மணிக்கு போலீஸ் நிலையம் சென்று கையெழுத்துப் போட்டுவிட்டு இரவு முழுக்க அங்கேயே படுத்திருந்து விடியற் காலையில் கையெழுத்து போட்டுவிட்டு மீண்டும் பலமைல்தூரம் கடந்து வேலைக்குப் போக வேண்டும் இத்தகையகுரூர தண்டனை வேறு எங்கும் நடந்ததுண்டா? இத்தகைய தண்டனை முறையை பிரிட்டிஷார் தானாகவே உருவாக்கி விடவில்லை. இங்கு நிலவிவந்த சாதீயப் பிரிவினைகளே அவர்களுக்கு இத்தகைய கருவி களை உண்டாக்கித்தந்தன. இதனால் பலன் அடைந்தவர்கள் காங்கிரஸ் கட்சியினர்தான். 1934 - 37 ஆண்டுகளுக்கிடையில் இந்த சட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்தன குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தில் மறவர்களும் தென்னார்க்காடு மாவட்டத்தில் வன்னியர்களும் இந்தப் போராட்டத்தில் மிகத் தீவிரமாக ஈடு பட்டனர். இந்த சட்டத்தை ரத்து செய்வதாகக் கூறியே காங்கிரஸ் தேர்தல்பிரச்சாரம் செய்தது முத்துராமலிங்கத் தேவர் போன்றவர்கள் காங்கிரசில் சேர இதுவே காரணமானது.

மேகநாதன்: போலீஸ் ஒடுக்குமுறைக்கு அதிகம் ஆளானதால் அடித்தட்டு மக்கள்தான் போலீசை எதிர்த்துக் குரல் எழுப்பியுள்ளனர், போராடியுள்ளனர், கமுதியில் வைக்கப்பட்டு இருந்த போலீஸ் படையை விலக்கும்படி சௌந்தரபாண்டிய நாடார்; மறவர் இனத் தலைவரான ராமநாதபுரத்து ராஜா போன்ற வர்கள் குரலெழுப்பினர். இரட்டை ஆட்சி முறையின் போதும் போலீசை எதிர்த்து நிறைய குரல்கள் எழுந்திருப்பதை நாம் காணமுடிகிறது 1946ல் அப்போதிருந்த போலீஸ் படையைக் கலைத்துவிட்டு 'கிராம இளைஞர் அணியை' அமைக்க வேண்டுமென்றும், அதற்கு இந்திய தேசிய ராணுவத்தினரின் (INA) உதவியைப் பெறலாம் எனவும் ஆலோசனைகள் சட்ட சபையில் வைக்கப்பட்டன. ஆனால் இந்தக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. போலீசை எதிர்த்தவர்கள் அடிதட்டு சாதியினராக இருக்கும் அதே நேரத்தில் போலீஸ்துறைக்கும் சட்டத்துறைக்கும் பொறுப்பாக இருந்தவர்கள் எல்லாம் பிராமணர்களாயிருந்ததும் கவனிக்க வேண்டிய விசயமாகப் படுகிறது. குறிப்பாக ராஜாஜி போலீசை ஆதரித்துப்பேசியதும் செயல் பட்டதும் பிரிட்டிஷ் அரசே பரவாயில்லை என்று நினைக்கும் அளவுக்கு உள்ளது. அன்றும் சரி இன்றும் சரி அரசியல் போலீசின் நடவடிக்கை கள் பற்றி கேள்வி எழுப்பப்பட்டால் 'நாட்டின் பாதுகாப்பைக் கருதி அதை வெளியிடுவதற்கு இல்லை, என்றே பதில் வருகிறது. பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து வேறுபடாத அம்சங்களில் இதுவும் ஒன்று எனக்கூறலாம்.

ஆதவன்: இன்றைய அரசு வடிவம் பற்றி சற்று முன் பேசினோம். இதுபற்றி பவுலன்ட்சாஸ் குறிப்பிடும் கருத்துக்கள் இங்கே பொருத்தம் ஆனவையாக இருக்கும் பாசிச மயமாக்கலை நிலைப்படுத்துவதற்கான வழிமுறைகளின் போது அரசு நிறுவனத்தை மேலாதிக்கம்செய்ய அதன் மற்ற பிரிவுகளை அதற்கு ஏற்றபடி சீரமைக்க வேண்டியது அவசியமாகிறது எனக் குறிப்பிடுகிறார். அவர் ஒடுக்குமுறை அரசு நிறுவனங்களான ராணுவம், போலீஸ் போன்ற வற்றுள் ஒரு பிரிவானது மற்ற எல்லா வற்றையும் மேலாண்மை செய்து அதன்மூலம் மொத்த அரசு அமைப்பையே - அதாவது

படிப்பகம்

www.padippakam.com

கருத்தியல் அரசு நிறுவனங்களான கல்வி, மதம் குடும்பம் போன்றவற்றையும் கூட மேலாண்மை செய்வதாக மாறுகிறது. குறிப்பிட்ட அந்தபிரிவு 'அரசியல் போலீஸ்' என்பதுதான் என்கிறார் அவர்-அரசியல் போலீஸ் மேலாண்மை செலுத்துவது என்றால் மற்ற பிரிவுகள் அதிகாரம் கொண்டதாக இல்லை என அர்த்தம் ஆகாது.

மேகநாதன்: தேர்ந்த அரசியல் நடவடிக்கை களுக்கு இதுவரை நாம் சி ஐ.ஏ.வையும், கே.ஜி.பி. யையும் தான் உதாரணம் காட்டிக் கொண்டிருந்தோம். இந்தியாவின் 'ரா' உளவு நிறுவனம் இன்று அவற்றின் அளவுக்கு ஆபத் தானதாக மாறியுள்ளது. சமீபமாக நடந்த பங்களாதேஷ் தேர்தலின்போது அங்குள்ள ஒரு அரசியல் கட்சிக்கு B.M. நந்தி என்ற ஒரு 'ரா' உளவு அதிகாரி மூலமாக 4 1/2 கோடி ரூபாய் அனுப்பப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி பர்மாவின் கச்சின் பகுதியில் செயல்படும் ஒரு கொரில்லா குழுவுக்கு உதவும் பொருட்டு வைரக்கற்களை ஹாங்காங்குக்கு ஏற்றுமதி செய்யும் ஒரு கம்பெனியை 'ரா' நடத்தி வருகிறது. உண்மையில் இந்தக்கற்கள் பர்மா விலிருந்து கடத்தி வரப்பட்டு விற்கப்பட்டு ஆயுதங்களாக அவர்களுக்குத் திருப்பித்தரப் படுகின்றன. இந்தத் தகவல்கள் 28-4-92 இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் வந்துள்ளன. ஈழப்பிரச்சனையில் இவர்கள் செய்துவரும் குழப்படிகள் உலகப் பிரசித்தமானவை.

மதி: இன்று அரசியல் போலீஸ் என்பது அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது மாறி அரசியல் போலீசின் கட்டுப்பாட்டில் அரசு வந்துகொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் கொள்கைகள் பெரும்பாலும் அரசியல் போலீசின் அறிக்கைகளின் அடிப்படையிலேயே வகுக்கப்படுகின்றன. உதாரணமாக, தமிழ் நாட்டில் இருந்த தி.மு.க. அரசு கலைக்கப் பட்டதற்கு பின்னணியாக ஒரு ஐ.பி. உளவு நிறுவன அதிகாரி அளித்த பொய்த்தகவல்களே செயல்பட்டுள்ளன என்பதை நாம் படித்தோம். (Sunday 26-4-92)

ஆதவன்: இந்த இடத்தில்தான் அரசியல் போலீசுக்கும் புனைவு உருவாக்கத்துக்கும் (Myth Making) இடையே உள்ள உறவை நாம் புரிந்து கொள்ளவேண்டும். புனைவு என்பதற்கும் பொய் என்பதற்கும் வேறுபாடுகள் உள்ளன, புனைவு எதையும் மறைப்பதில்லை அதன் செயல்பாடு ஒன்றைத்திரித்துக் காட்டு வதுதானே தவிர இல்லாமல் ஆக்கிவிடுவது அல்ல. புனைவு என்பதற்கு உள்நோக்கம் என் பது அவசியம். ரொலாண்ட் பார்த்ஸின் வார்த் தைகளில் கூறினால் ''புனைவின் செயல்பாடு யதார்த்தத்தைக் காலி செய்வது தான்...புனைவு என்பது அரசியல் நீக்கப்பட்ட ஒரு பேச்சு என் கிறார் அவர். அரசர்களின் காலத்தில் அவர்க ளைப்பற்றிய புனைவுகள் மதத்தினால் உண் டாக்கிப் பரப்பப்பட்டன. இன்று இதை அரசியல் போலீஸ் செய்கிறது. இன்னுமொரு முக்கிய மான விசயம் ஆள்வோர்களைப்பற்றிய புனைவு களை உருவாக்கும் அரசியல் போலீசுக்கு ஆள் வோரைப் பற்றிய எவ்வித மதிப்பும் அற்றுப்போ கிறது. எம். ஜி. ஆர் பற்றிய புனைவுகள் எப் படி உருவாக்கப்பட்டன என்பதை ஒரு முன் னாள் உளவுத்துறை அதிகாரி நூலாக எழுதி வெளியிட்டிருப்பதை நாம் பார்த்தோம்.

மேகநாதன்: இப்படி புனைவுகளை உருவாக்கும் வேலையில் அரசியல் போலீசுக்கு பத்திரிக்கை கள் உடந்தையாக உள்ளன. உதாரணமாக சமீபத்தில் பொன்பரப்பியில் நடந்தவற்றைப் பார்க்கலாம். பாட்டாளி மக்கள் கட்சி அறிவித்த தூக்குகயிறு போராட்டத்தின்போது பொன்பரப் பியல் காவல் துறையினர் புகுந்து சூறையாடி யுள்ளனர். இதைக் கண்டித்து கண்டனப் பொ துக் கூட்டமொன்றை அக்கட்சி ஏற்பாடு செய் தது. போலீசின் அச்சுறுத்தலை மீறி அந்தக் கூட்டம் நடந்துவிட்டது. இதற்குப் பழிவாங்க திட்டமிட்ட போலீஸ் அரசியல் போலீசுடன் கூட்டு சேர்ந்து கொண்டு சில புனைவுகளை பத் திரிக்கைகளில் இறக்கி விடுகிறது. பொன்பரப் பியையொட்டிய முந்திரிக் காடுகளில் தீவிரவா திகள் முகாமிட்டிருப்பதாகவும் அவர்கள் ஆகஸ்டு 15ல் தாக்குதல் நடத்தவிருப்பதாகவும் செய்திகள் வெளியிடப்படுகின்றன. அந்தப்ப குதி முழுவதும் போலீஸ் குவிக்கப்பட்டு பீதியூட் டப்பட்டு ஒருவார காலம் சொல்லமுடியா அள வில் ஒடுக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படு கிறது.

மதி: அரசியல் போலீசின் நடவடிக்கைகளிலும் அதற்கு உடந்தையாகவும், அதன் நீட்சியாக வும் செயல்படும் பத்திரிக்கைகளின் நடவடிக்கை களிலும் பின்னணியாக செயல்படுவது பார்ப்ப னீயம் என்பதை நாம் குறிப்பிட்டாக வேண்டும். இந்தியாவில் பாசிசம்நிலை நாட்டப்படுவதற் கான உபாயமாக பெரும் தேசியவெறி, இந்து மதவெறி ஆகியவை பரப்பப்படுகின்றன. இதற்கு பின்னணியில் உந்து சக்தியாக இருப் பது பார்ப்பனீயம்தான். அரசியல் போலீசில் பெரும்பாலானோர் பார்ப்பனர்களாயிருப்பதும் கவனிக்கத்தக்கது.

ஆதவன்: இன்று அரசியல் போலீசின் நடவடிக் கைகள் விளிம்பு நிலை மக்களுக்கு எதிராகவும், சிறுபான்மை மதத்தினருக்கு எதிராகவும், ஒடுக் கப்பட்ட தேசிய இனங்களுக்கு எதிராகவும், இருப்பதற்கான கருத்தியல் பின்னணி பார்ப்ப னீயம்தான் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்திய சூழலில் ஆதிக்கக் கருத்தி யலாக விளங்கிவரும் பார்ப்பனீயத்துக்கு எதி ரான போராட்டங்களை நாம் பரந்த அளவிலும்

படிப்பகம்

www.padippakam.com

(Macro level) நுண் அளவிலும் (Micro level) மேற்கொண்டாக வேண்டும். நாம் முதலில் பேசிய மாதிரி நம்மை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் அதிகார நுண் அமைவுகளைப் பற்றிய ஆய்வு தவிர்க்க முடியாதபடி பார்ப்பனீயத்திற்கு எதிரான, இந்து மதத்திற்கு எதிரான போராட்டங்களோடு இரண்டறக் கலந்திருக்கிறது, பார்ப்பனீயத்துக்கும் இந்து மதத்துக்கும் எதிரான இந்தப் போராட்டத்தில் ஒரு ''தலித்'' தாக நம்மை உணர்வதே இதற்கான முதல் நிபந்தனையாக இருக்குமென நினைக்கிறேன்...

1—9—92 அன்று இரவு நிகழ்த்தப்பட்ட இந்த உரையாடலை தொகுத்து எழுதியவர் ஆதவன். இதில் பேசப்பட்டுள்ள செய்திகள் மற்றும் கருத்தாக்கங்களுடன் விரிவான பரிச்சயம் விரும்புவோர் படிக்க.

1. Fascism and Dictatorship— Nicos Poulantzas Verso 1979.
2. Foucault Reader— Ed. Paulrabinow Penguin 1984.
3. Police Power and Colonial Rule— Madras 1859—1947—David Arnold, Oxford Univ. Press 1986.
4. Barthes: Selected Writings —Ed. Susan Sontag, Fontana/Collins 1982.
5. The Bhagavad Gita—Tr. Juan Mascaro Penguin Books 1984.

இந்த கலந்துரையாடலின் ஒரு பகுதி **பாட்டாளி மக்கள் கட்சியினரால்** வெளியிடப்பட்டுள்ள **தமிழர் வாழ்வுரிமை மாநாட்டு** மலரில் இடம் பெற்றுள்ளது, O

பெரியார் பார்வையில் மொழி

பொ. வேல்சாமி - அ. மார்க்ஸ்

ஒரு மக்கள் தொகுதியின் மீது ஆதிக்கம் செய்ய விழையும் இரண்டு குழுக்கள் மொழி ரீதியில் தங்களை வேறுபடுத்தி அடையாளம் காண முடியுமெனில் அவ்விரு குழுக்களிடையேயான ஆதிக்கப் போராட்டம் நடைபெறும் களங்களில் பிரதானமாய் மொழி அமைவது தவிர்க்க இயலாது. இந்த ஆதிக்கப் போராட்டத்தில் வேற்று மொழி பேசும் ஆதிக்க சாதிகளை ஓரங்கட்டுவதில் 'மொழி உணர்வு' உள்ளூர் ஆதிக்க சக்திகளுக்குப் பெரிதுங் கைகொடுக்கும் இவ்வாறு அறிவியலாக்கப்படும் மொழிஉணர்வு என்பது கட்டமைக்கப்படுவதுதானே யொழிய இயற்கையான ஒன்றல்ல என்பதைக் கொஞ்சம் சிந்தித்தாலே விளங்கிக் கொள்ள முடியும். தமிழக வரலாற்றை எடுத்துக்கொள்வோமே. கடந்த இரண்டாயிரமாண்டு தமிழகவரலாற்றின் மையச் சரடாக வடமொழி ஆதிக்கத்திற்கு எதிராகக் கட்டமைக்கப்படும் தமிழுணர்வு விளங்குவதைக் காணமுடியும். இந்தத் தமிழ் உணர்வு அரசியல் ரீதியாய் கட்டமைக்கப் பட்டதாலேயொழிய இயற்கையானதல்ல என்பதைப் புரிந்துகொள்ள தொல்காப்பியம் தொடங்கி தமிழிலக்கியங்களையும் தமிழக வரலாற்றையும் மறுவாசிப்புச் செய்யவேண்டும். இத்தகைய மறுவாசிப்பின்போது நம் கவனத்தில்படும் சில முக்கிய புள்ளிகள்:

அ) விளிம்பிலிருந்த அடிநிலை மக்களின் மொழி **'கொடுந்தமிழாக'**ப் புறக்கணிக்கப்பட்டு அரசுருவாக்க மையங்களின் மொழியே—அதாவது ஆற்றங்கரை ஆதிக்க சக்திகள் பேசியமொழியே— **'செந்தமிழாய்'** கட்டமைக்கப்பட்டது.

ஆ) இந்தச் 'செந்தமிழ்' ஆதிக்க சக்திகளுக்கும் வடமொழி ஆதிக்க சக்திகளுக்குமிடையேயான உறவு இயங்கியல் தன்மையிலானது. அவற்றுக்கு இடையே ஆதிக்கப் போட்டியினைப் படையில் முரண்களிலும், கீழேயுள்ள மக்கட் பிரிவை ஆதிக்கம் செய்வதில் ஒருமையும் செயல்பட்டு வந்ததை வரலாறு பூராவும் காண முடியும். மத்திய காலத்தில் பார்ப்பன-வேளாள ஒருமையாய் வெளிப்பட்ட இது **'ஆரியங் கண்டாய் தமிழுங் கண்டாய்'** என முழக்கியது. இந்த ஒருமை வடமொழிக் கலாச்சாரக் கூறுகளும் பார்ப்பனீயத்திலிருந்து பெரிதும் வேறுபடாத சைவக் கூறுகளும் பிரிக்க இயலாது செந்தமிழை ஊடுருவிக் கழுவித் தூய்மை செய்ய இயலாத அளவிற்குக் கறை சேர்த்தது.

இ) மத்திய காலத்திற்குப் பின் படிப் படியாய் வளர்ந்த பார்ப்பன வேளாள முரண் காலனியச் சூழலில் (19ம்நூ) உச்சத்தை அடைந்தது மொழிக் களத்தில் வடமொழிக் கலப்பற்ற தனித்தமிழ் முழக்கமாய் இது வெளிப்பட்டது. வடமொழிக் கூறுகளைக் களைந்துகொள்ளத் தயாரான தனித்தமிழ் அரசியல் எள்ளளவும் தன்னில் கலந்து போயிருந்த சைவக் கூறுகளைக் களைந்துகொள்ளத் தயாராக இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. **'பழந்தமிழர் நாகரீகம்**

படிப்பகம்

www.padippakam.com

(சைவ) வேளாள நாகரீகமே' என இது வெளிப்பட்டது.

இந்தச் சிக்கலான சூழலில் இயங்க நேர்ந்தவர் பெரியார். சைவ வடிவில் தமிழில் கலந்துபோனவை பார்ப்பனீயமே என்பதை மிகத் தெளிவாக உணர்ந்து கொண்டு செயல்பட்ட ஒரே நபராக நாம் பெரியாரைச் சொல்ல முடியும். இந்த இரு வேறு ஆதிக்க சக்திகளையும் அடிப்படையில் பார்ப்பனீயமாகவே கண்டுணர்ந்த பெரியார் இரு சாரரையும் எதிர்த்துச் செயல்படும் ஒரு சிக்கலான அரசியற் பாதையைத் தேர்ந்து கொண்டார். இந்த நோக்கத்தை அவர் எவ்வளவு சரியாய்ச் செயல்படுத்தினார், எந்த அளவிற்கு வெற்றி பெற்றார் என்கிற கேள்விகளுக்குள் நுழையாமல் இந்தச் சிக்கலென்பது அவரது மொழிப் பார்வையில் எவ்வாறு வெளிப்பட்டது என்பதை மட்டும் இங்கே பார்ப்போம்.

மற்ற பல்வேறு அம்சங்களில் மைய நீரோட்டத்திற்கெதிரான மாற்றுக் கருத்துக்களை அறிவியல் பூர்வமாய் முன் வைத்து நம்மை அசர வைப்பது போலவே பெரியார் மொழி பற்றியும் மிகவும் நவீனமான சிந்தனைகளை சுமார் நாற்பது ஆண்டுகட்கு முன்பே வைத்துள்ளார். அமைப்பியல், மொழியியல் சிந்தனைகளெல்லாம் தமிழ்ச் சூழலில் அறிமுகமேயாகாத காலத்திலேயே மொழி என்பது கலாச்சாரத்தால் கட்டமைக்கப்பட்டது தானேயொழிய ''இயற்கையானதல்ல'' (986, 1000) எனக் கூறினார். மொழிகள் தனித்தனியாகப் பிரிவதும், மொழிக்குள்ளேயே வழக்கு வேறுபாடுகள் ஏற்படுவதும் தட்பவெட்பச் சூழல், போக்குவரத்தின்மை, பிறமொழிக் கலப்பு ஆகியவற்றின் விளைவுதான் என்றார். (965, 966, 981, 983). காலந்தோறும் மொழி அமைப்பிலும் வரி வடிவத்திலும் சொற்களஞ்சியத்திலும், உச்சரிப்பிலும் மாற்றம் ஏற்படுவது இயல்பு. (954, 960) எனவே மொழியில் மாற்றங்கள் செய்யக் கூடாது என்பது மடமை (961); கலந்துபோன புதிய சொற்களை இனி விலக்கவும் முடியாது (960).

மொழி என்பது வெறும் கருத்துப் பரிமாற்றச் சாதனம்தான் (965) என்பதை வலியுறுத்திய பெரியார் எனினும் மொழிக்களத்தில் மேற்கொள்ளப்படும் அரசியல் செயல்பாடானது அம்மொழி பேசும் மக்களின் உளவியலையும், சுயமரியாதையையும், பொருளாயாதச் சூழலையுமே மாற்றியமைத்துவிடும் வல்லமையுடையது என்பதை முழுமையாக உணர்ந்திருந்தார். (968, 969, 970, 971, 987). ஒரு மொழி பேசும் மக்கள் மீது.

1. ''எந்தத் துறையில் நமது நாட்டிற்குள் இந்தி புகுந்தாலும், சமஸ்கிருதத்தினால் தமிழர்களும், தமிழ்நாடும் இன்று என்ன நிலைமைக்கு வந்து தொல்லையும், மடமையும் இழிவும் அனுபவிக்கிறார்களோ—சற்றேறக் குறைய அந்த நிலைமைக்குத்தான் கொண்டுபோய் விடும் என்பது எனது துணிவு. இந்தி, தமிழ்நாட்டையும் தமிழனையும் வட நாட்டானுக்கு—பார்ப்பனருக்கு அடிமைப்படுத்துவதல்லாமல் வேறு எந்தக் காரியத்திற்கும் பயன்படாது'' (987) இன்னொரு ஆதிக்க மொழியைத் திணிப்பதை மட்டும் மொழிக் களத்திலான அரசியற் செயற்பாடாக அவர் பார்க்கவில்லை. மொழிக்குள் மதமும், பிற கலாச்சாரக் கூறுகளும் ஊடுருவதும் இதே அளவிற்குத் தீங்கானது என்பதைச் சுட்டிக் காட்டிய பெரியார் இந்த அடிப்படையில் தமிழானது எந்த அளவிற்கு வடமொழிக் கலப்பாலும், இந்து மதத்தாலும், சைவ சமயத்தாலும் கழுவ இயலாத அளவிற்குக் கறைபட்டுக் கிடக்கிறது. என்பதைத் தோலுரித்தார்.

2, தமிழைக் காட்டு மிராண்டி காலத்து மொழி எனச் சொன்ன (985) தமிழ் மொழியின் வடமொழித் தொடர்பால் நமக்கேற்பட்டுள்ள, ஏற்படப் போகும் கெடுதிகளைப் பார்ப்போம். நம்மிடையேயுள்ள சாதிப் பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். 'சாதி' என்ற வடமொழிச் சொல்லைத் தமிழிலிருந்து எடுத்து விட்டால் அதற்குச் சரியான தமிழ்ச் சொல் ஒன்று கூறுங்களேன்! பண்டிதர்கள் கூறட்டுமே. வார்த்தை இல்லையே! ஆதலால், நம் மக்களிடையே ஆதியில் சாதிப் பிரிவினை இல்லை என்பதும், இது வடநாட்டுத் தொடர்பால்தான் ஏற்பட்டது என்பதும் தெரிகிறதா இல்லையா? அந்த வார்த்தையே இல்லாவிட்டால் சாதி பேத உணர்ச்சி அற்றுப் போகுமா, இல்லையா? கூறுங்களேன், இதே போல் திவசம், திதி, கலியாணம், வைகுந்தம்

சொர்க்கம், மோட்சம், நரகம்; சாலோக, சாரூப. சாமீப, சாயுச்சிய என்ற இவ் வார்த்தைகள்—வடமொழியா? தமிழா? இவ்வார்த்தைகளின் தொடர்பால் நாம் புத்தி தெளிந்ததா? இருந்த புத்தியும் போனதா? சிந்தித்துப் பாருங்கள்.

தாரா முகூர்த்தம், கன்னிகாதானம் என்ற பேர்கள் வந்த பிறகுதானே நம் பெண்கள் கணவனின் கைப்பொம்மை ஆனார்கள்? அதன் பிறகுதானே சிறிது சச்சரவு நேர்ந்து தன் வீட்டுக்கு வந்த தன் மகளைப் பார்த்து. 'ஆமாம்மா' உன்னைக் கன்னிகாதானம் செய்தாயிற்றே! உன்னை உன் புருஷனுக்குக் கொடுத்துவிட்டோம்; தானம் செய்து விட்டோமே! இனி உனக்கு இடம் அவன் இருப்பிடம் தானம்மா' என்று கூறும் தகப்பன்மார் தோன்றினார்கள்! கன்னிகாதானம் என்பதற்குத் தமிழ் வார்த்தை ஒன்று கண்டு பிடியுங்களேன். திருவள்ளுவர் 'வாழ்க்கைத் துணை' என்றுதானே கூறிகிறார். அதாவது புருஷனும் மனைவியும் சினேகிதர்கள். நண்பர்கள் என்றுதானே அதற்குப் பொருள்

படிப்பகம்

www.padippakam.com

எவ்வளவு கருத்துவேறுபாடு பாருங்கள்' 'மோட்சம்' என்பதற்குத் தமிழ் வார்த்தை ஏது? மோட்சத்தை நாடி எத்தனை தமிழர் காலத்தையும், கருத்தையும், பொருளையும் வீணாக்குகிறார்கள்? கவனியுங்கள், மதம் என்பதற்குத் தமிழில் மொழி யேது? மதம் என்ற வார்த்தையால் ஏற்பட்டதுதானே மதவெறி? நெறி, கோள் என்றால்—வெறி ஏது? பெரியார் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தமிழ் மொழி, பொருள், எழுத்து என எந்த வகையிலும் முன்னேறவில்லை (988). எனவே நாகரீக காலத்திற்கு அதுஏற்றதல்ல (985) என்றார்.

'பதவிரதாத் தன்மை' என்பதற்காவது தமிழில் வார்த்தையுண்டா? 'பதிவிரதம்' என்ற வார்த்தை இருந்தால்—சதி விரதம்' அல்லது 'மனைவி விரதம்' என்கின்ற வார்த்தையும் இருக்க வேண்டுமே! இதுவும் வடமொழித் தொடர்பால் ஏற்ற வினைதான். 'ஆத்மா' என்ற வார்த்தைக்குத் தமிழில் மொழி ஏது? ஆத்மாவால் எவ்வளவு மூட நம்பிக்கைக் களஞ்சியங்கள் நம் புலவர்கள், அறிஞர்களிடையேயும் புகுந்துவிட்டன?. தமிழ்நாட்டு மக்களின் வழக்கங்கள் யாவும் பெரிதும் ஆண், பெண் இரு பாலார்க்கும் சம உரிமை என்ற அடிப்படையின் மீதும், பகுத்தறிவு என்கிற அடிப்படைமீதும் அமைந்திருக்கக் காண்கிறோம்' —(969,970)

'தமிழும் ஒரு காலத்தில் உயர்ந்த மொழியாகத்தான் இருந்தது. இன்று அது வடமொழிக் கலப்பால் இடது கைபோல் பிற்படுத்தப்பட்டு விட்டது. இந்நோய்க்கு முக்கிய காரணம், மதச் சார்புடையோரிடம் தமிழ்மொழி சிக்கிக் கொண்டதுதான். தமிழ் சைவ மொழி ஆக்கப்பட்டதால்தான் சைவத்திற்காக வேண்டி வடமொழியும் வடமொழிக் கலைகளும் அதிகமாகத் தமிழ்நாட்டில் புகத் தொடங்கின'.

'மதச்சார்பற்ற ஒருவனுக்கு தமிழில் இலக்கியம் என்பது மிக (971) அரிதாகவே இருக்கிறது. தமிழ் இலக்கணங்கூட மதத்தோடு பொருத்தப் பட்டே இருக்கிறது. உதாரணமாக 'மக்கள்' தேவர். நரகர் உயர்திணை என்றால் என்ன? நரகர்கள் யார்? தேவர்கள் யார் இலக்கணத்திலேயே மதத்தைப் போதிக்கும் சூழ்ச்சிதானே இது?'—(976)

'இனி பள்ளிக்கூடங்களில் தமிழ் இலக்கியங்களுக்குப் புத்தகங்கள் எவை? கம்ப ராமாயணம் பாரதம், பாகவதம், பெரியபுராணம்,தேவாரம், திருவாய்மொழி போன்ற மதத் தத்துவங்களும், ஆரிய மதத் தத்துவம் என்றும் ஒரு தனிப்பட்ட வகுப்பின் உயர்வைப் போதித்து மக்களை மானமற்றவர்களாக்கும் ஆபாசக் களஞ்சியங்களும் அல்லாமல்-வேறு இலக்கியங்கள் மிதந்து காணப்படுகின்றனவா? இன்றையப் பண்டிதர்களுக்கு உலக ஞானத்தைவிடப் புராண ஞானங்கள்தானே அதிகமாய் இருக்கின்றன?' (976, 977).

3) தமிழ் காட்டுமிராண்டி காலத்து மொழி, நாகரீக காலத்திற்கு, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற காலத்திற்கு, யாயும் யாயும் யாராயினரோ' என்ற காலத்திற்குத் தமிழ் பயன்படுமா?' (985)

எனவே தமிழில் இரண்டுவிதமான சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்றார்.

முதலில் சுலபமாய் கற்றுக்கொள்ளத்தக்க வகையில் தமிழில் எழுத்துச் சீர்த்திருத்தங்கள் செய்யபடவேண்டும். உயிர் 10(ஐ,ஔ நீக்கி) மெய் 15 (ன்+த = ந, ன்+க = ங, ன்+ச = ஞ),ஆயுதம்1 மெய்குறிப்பு1, (க| = க், ங| = ங்) என மொத்தம் 27 எழுத்துக்களாகத் தமிழ்எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறுக்கிவிடலாம்(976)

4) 'ஆ'வுக்குப் பதிலாக 'ா'வையும் 'எ','ஏ' வுக்குப் பதிலாக 'ெ' 'ே' என்ற குறிப்புகளையும் இ,ஈ,உ, ஊ,எ, ஒ,ஓ ஆகிய எழுத்துக்களுக்குப் புதிய குறிப்புகளை உற்பத்தி செய்து கொண்டு இவற்றையே உயிர் மெய்யாக்க மெய்யோடு சேர்த்துப் படித்தால் போதும் (976) இதுதவிர ஆங்கில எழுத்துக்களையே அப்படியே பயன் படுத்தலாம் என்கிற கருத்தையும் பெரியார் கூறியுள்ளார். (988) வடமொழி நீக்கிய நல்ல தமிழில் கலைச் சொல்லாக்கும் செய்யப்பட வேண்டும் (972) என்றும் கூறியுள்ளார்.

இரண்டாவது சீர்திருத்தம் மொழியில் கலந்து உள்ள மத, சைவக் கூறுகளைக் களைதல்

5) தனது சமகாலப் பார்ப்பன எதிர்ப்பாளர்கள் இடமிருந்து பெரியார் வேறுபட்ட மையமான இடம் இது. இந்த வகையில் மறைமலையடிகள் போன்ற இதர தனித்தமிழ்வாதிகளிடமிருந்து வேறுபட்டு நின்றதோடு திரு.வி.க. முதல் மு. வரதராசனார் வரையிலான தமிழ்ப் பண்டிதர்கள் அனைவரையும் கடுமையாய்ச் சாடினார். (1002)

ஆனாலும் தமிழில் கலந்துபோன இந்து மதத்தையும், சைவத்தையும் பிரித்தெடுத்துத் தமிழை தூய்மை செய்திட முடியும் என அவர் நம்பவில்லை என்பதை ஒட்டுமொத்தமாய் அவரது கருத்துக்களைப் படிக்கும்போது.

''தமிழ் முன்னேற்றமடைந்து உலக பாஷை வரிசையில் அதுவும் ஒரு பாஷையாக இருக்க வேண்டுமானால் தமிழையும் மதத்தையும் பிரித்துவிட வேண்டும்; தமிழுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் கொஞ்சமாவது தள்ளி வைக்க வேண்டும்'' (976)

படிப்பகம்

www.padippakam.com

'தமிழிலிருந்து சைவத்தையும் ஆரியத்தையும் போக்கிவிட்டால் நம்மை அறியாமலே நமக்குப் பழந்தமிழ் கிடைத்துவிடும்' (971)

'தமிழைக் கெடுத்தவர்கள், தமிழன் அறிவுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் இந்தத் தமிழ்ப் பண்டிதர்களும் அவர்களின் சைவமும்தான் (972) விளங்கிக் கொள்ள முடிகிறது. இதன் விளைவாக அவர் முன் வைத்த தீர்வு நமது ஆழ்ந்த பரிசீலனைக்குரியதாகிறது, தமிழ் நாட்டில் தமிழ்தான் ஆட்சி மொழியாகவும் போதனை மொழியாகவும் இருக்கவேண்டும் என்பது நியாயந்தானென்றாலும் இந்தி, தமிழ் இரண்டையும் நீக்கிவிட்டு **ஆங்கிலத்தை நமது ஆட்சி மொழியாகவும், போதனை மொழி ஆகவும் வைத்துக்கொள்ள வேண்டும் என்றார்.**

6) 'தமிழ் நாட்டில் இருந்து கொண்டு- தமிழ் நாட்டைப்பற்றி நினைத்துக்கொண்டு தமிழ் நாட்டுக்கு அரசியலுக்கானாலும், இலக்கியத் துக்கானாலும், போதனைக்கானாலும் ஒரு மொழி வேண்டுமானால் நாம் தேர்ந்தெடுக்க வேண்டியது தமிழ்மொழி என்பதாகத்தான் தோன்றும். அது ஓரளவிற்கு நியாயமாகும்' (986)

'என்னைப் பொறுத்த வரையில் இந்த இரண்டு (தமிழ், இந்தி) மொழிகள் பற்றியும் கவலை இல்லை; பிடிவாதமில்லை. இவற்றுள் இந்தி எந்த வகையிலும் நமக்குத் தேவையில்லை என்பதோடு கண்டிப்பாக நம் நாட்டிற்குள் இந்தியைப் புகவே விடக் கூடாது என்பது என் கருத்தாகும்' (987)

'தமிழ் மொழி வேண்டுமானால் ஆரியத்திற்கு முந்தியது என ஒப்புக்கொள்ளலாம். அதுவும் தமிழனுக்கு இன்றளவும் என்ன பலனைக் கொடுத்திருக்கிறது? விஞ்ஞானத்திற்குச் சிறிதும் பயன்படத் தக்கதாய் இல்லை அறிவுக் குத்தக்கபடி பலனளிக்க முடியவில்லை. தமிழ் மொழி ஏற்பட்டுப் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகியும் அதை தாய்மொழியாக்க கொண்ட தமிழன் இன்னும் இந்த விஞ்ஞானப் பரவல் காலத்திலும் உலகில் எங்கும் இல்லாத அளவுக்கு மூட நம்பிக்கை உடையவனாகவும், மான உணர்ச்சி என்பது 100க்கு 75பாகம் இல்லாதவனாகவும் இருந்து வருகிறான்' (987)

'தமிழ் வடமொழியைவிட, இந்தி மொழியை விடச் சிறந்தது என்பதிலும், பயன்படத் தக்கது என்பதிலும் எனக்கு அய்யமில்லை என்றாலும். நாம் இன்றைய நிலைமையைவிட வேகமாக முன்னேற வேண்டுமானால்-ஆங்கிலந்தான் சிறந்த சாதனம் என்றும் ஆங்கிலமே அரசியல் மொழியாகவும், போதனா மொழியாகவும் இருந்தாக வேண்டுமென்றும், ஆங்கிலமே நம் பேச்சு மொழியாவது நலம் பயக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்' (989)

'ஆகையால் தமிழர் தோழர்களே! உங்கள் வீட்டில் மனைவியுடன், குழந்தைகளுடன் வேலைக்காரிகளுடன் ஆங்கிலத்திலேயே பேசுங்கள்; பேசப் பழகுங்கள்; பேசமுயலுங்கள். தமிழ்ப் பைத்தியத்தை விட்டொழியுங்கள். என்னை வையாதீர்கள்; மனிதனாக வாழ முயலுங்கள்' (989)

இவ்வாறு ஆங்கிலத்தைத் தேர்ந்தெடுப்பதற் கான காரணங்களாகப் பெரியார் மூன்றைச் சொல்கிறார் (996) அவை.

1) ஒருவர் ஆங்கில மொழியைச் சுலபமாகக் கற்றுக் கொள்ள முடியும்.

2) ஆங்கில மொழியை அறிந்தவன் உலகத் தின் எந்தக் கோடிக்கும் சென்று அறிவைப் பெற்றுத் திரும்பி வர இயலும்.

3) ஆங்கில மொழியானது அறிவைத் தூண் டும் உணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறதே தவிர, அது சுதந்திரமாகச் சிந்திக்கின்ற தன்மைக்கு விலங்கிட்டதாக ஒரு போதும் கிடையாது''

நமது 'சீதோஷ்ண நிலைக்குத் தமிழ்தான் ஏற்ற மொழி' எனச் சொன்ன பெரியாரின் இக் கருத்துக்களை அவர் காலத்திய தனித் தமிழ் அரசியலிருந்து பிரித்துப் புரிந்து கொள்ள இய லாது. தமிழ் மொழிப் பற்று சமயப் பற்றுபோல ஆகிவிட்டது (986) என்ற சூழலில்தான் அவர் ஆங்கிலத்தை முன்மொழிகிறார். இவையனைத் தும் உண்மை தானென்றாலும் மொழி அரசிய லின் இன்னொரு பரிமாணத்தைப் பெரியார் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை யென்றே தோன்றுகிறது. ''காலனிய நீக்கம்'' (Decalonialisation) என்கிற முழக்கம் உலகெங்கிலும் எடுக்கப்பட்ட மக்களால் எழுப்பப்படும் ஒரு கால கட்டத்தில் உள் நாட்டு ஆதிக்கத்திற் கெதிராக வெளிநாட்டு ஆதிக்கத்தைத் தந்திர அடிப்படை யில் கூட ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது சந்தேகமே. உள்நாட்டு ஆதிக்கத்தின் வெளிப் பாடு வடமொழிக் கலாச்சார மெனில், உலக அளவிலான ஆதிக்கத்தின் வெளிப்பாடு அய் ரோப்பிய/அமெரிக்கக் கலாச்சாரம். தாய்மொ ழியை விடுத்து ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்வ தென்பது கூட ஒரு பார்ப்பனனுக்கும் ஒரு பறை யருக்கும் ஒரே அளவு சுலபமான நடைமுறை யல்ல. ஆங்கில மொழியை ஏற்றுக் கொள்வதில் பெரியாரின் கருத்து இராஜாஜியுடன் ஒத்துப் போவதை கவனிக்க: (988) உலகின் எந்தக் கோடியிலும் ஆங்கிலத்தின் மூலம்தான் அறிவு சேகரமாகிறது என்பதும் தவறு. இன்று ஒவ்வொரு நாட்டிலும் அவரவர்கள் மொழிகளில்தான் அறிவு சேகரம் நடைபெறுகிறது ஆங்கில மொழியில் சமத்துவ சனநாயகக் கருத்துக்கள் கூடுதலாய் உள்ளன -வென்றாலும் இனவெறி, பாலாதிக்கம், கிறிஸ்

படிப்பகம்

www.padippakam.com

தவ மதம் ஆகியவற்றால் கறைபட்ட மொழி தான் ஆங்கிலம். தமிழைத் தள்ளி ஆங்கிலத்தை ஏற்றல் என்பது ஒரு வகையில் பார்ப்பன ஆதிக் கத்திலிருந்து விடுபட்டு சுயமரியாதை உணர்வு பெற உதவும் என்பதில் அய்யமில்லை பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் சில முற்போக்கான மாற்றங்களை விளைவித்துவிட முடியும் என்ற கா. மார்க்சின் நம்பிக்கையோடு பெரியாரின் ஆங்கிலம் பற்றிய கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஆங் கிலம் பற்றிய அவரது பார்வை ஒரு அதிர்ச்சிய ளிக்கும் எதிர் கலாச்சாரச் செயற்பாடாக முன் வைக்கப்பட்டதா என்பதையும் சிந்திக்கலாம். (பார்க்க: இதே இதழில் 46ம் பக்கத்திலுள்ள 34ம் மேற்கோள்) என்ற போதிலும் நமது மான உணர்ச்சிக்குப் பங்கம் விளைவிக்கும், அடிமைத் தனத்திற்கு வழி வகுக்கும்.

எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கும்போது மொழி குறித்த பெரியாரின் பார்வையிலிருந்து இன்றைய அரசியலுக்கான வழி காட்டல்களா கக் கீழ்க் கண்டவற்றை நாம் அடைய முடிகிறது.

1) மொழி உணர்வு என்பது இயற்கையான தல்ல; அரசியல் ரீதியாய் கட்டமைக்கப் படுவதே என்பதை விளங்கிக் கொள்வதும் பிரச்சாரம் செய்வதும்.

2) இன்று தமிழ் மொழி, தமிழ்க் கலாச்சாரம் என்றெல்லாம் முன் வைக்கப்படுபவை இந்து மதத்தாலும், சைவத்தாலும் கறை பட்டவைகளே. ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு அவை பயன்பட வேண்டு மானால் இந்து மதமும் சைவமும் நீக்கப் பட்ட மதம் சாராத, பால் சாராத தமிழ் மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும் முன்வைக்க வேண்டும்; நடைமுறையில் பயன்படுத்த வேண்டும்.

3) பெரியார் முன் வைத்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்களாகப் போராதல். காட்டு மிராண்டித் தமிழை நவீனமாக்குதல்.

4) இந்தி மொழி ஆதிக்கத்தையும் இந்துக் கலாச்சாரத் திணிப்பையும் எதிர்த்தல்.

5) தமிழே ஆட்சி மொழி, கல்வி மொழி, தொடர்பு மொழி என்கிற ஒரு மொழிக் கொள்கையை முன் வைத்துப் போராடுதல்.

இந்த அய்ந்து அம்சங்களையும் முன் வைத்து செயல்படுதலே பெரியார் வழி நிற்றலாகும். மாறாக முதல் மூன்று அம்சங்களையும் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டு கடைசி இரண்டு அம் சங்களை மட்டும் உரத்து முழக்குவதற்கும் பெரியாருக்கும் எவ்விதத் தொடர்பு மில்லை என்பது கருதத் தக்கது. பெரியார் வழி நிற்பவர் களாகச் சொல்லிக் கொள்பவர்கள் பலரும் இதைத்தான் செய்து வருகின்றனர் என்பது சிந்திக்கத் தக்கது.

குறிப்பு: கட்டுரையிலும் அடிச் குறிப்புகளிலும் அடைப்புக் குறிக்குள் உள்ள எண்கள் திரு. **வே. ஆனைமுத்து** தொகுத்த 'பெரியார் ஈவேரா சிந்தனைகள்'— தொகுதி 2 ல் உள்ள பக்கஎண்களாகும்.

○

பெரியாரியம்: கூட்டு விவாத அழைப்பு

பெரியாரியம் குறித்த கூட்டு விவாதமென்பது உணர்ச்சிகரமானதாகவும் பழைய, புதிய சச்சர வுகளுக்கான சந்தர்ப்பமாகவும் மாறிவிடக் கூடிய அபாயமிருக்கிறது. இந்த இதழில் பெரி யாரை சாதி ஒழிப்பு அரசியல் போராளியாக அனுமானிக்கும் கட்டுரையும், பெரியாரியத் திற்கு அத்தகையதொரு வரையறை முயற்சி யும் அத்துடன் மரபு வழி மார்க்சிய நோக்கி லிருந்து பெரியாரையும் பெரியாரியத்தையும் விமர்சன பூர்வமாக அணுகும் கட்டுரையும் வெளியாகியுள்ளதே கடுமையான கருத்து மாறு பாடுகளை விவாதிக்கும் சந்தர்ப்பமாக இவ்வி வாதம் அமையக் கூடியதை எடுத்துக் காட்டு கிறது. எனவே கீழே தொகுக்கப்பட்டுள்ள மையப் புள்ளிகளை ஒட்டியே அனைவரும் கருத் துக்களைத் தொகுத்துத் தருவது அவசியம். பெரியாரின் சிந்தனைகள் மற்றும் செயல்பாடு களிலிருந்து இன்றைய சூழலுக்குத் தேவையான பல அரசியல் வழிகாட்டல்களையும் படிப்பினை களையும் பெற முடியும் என்கிற நம்பிக்கை யோடு இப் புள்ளிகள் தொகுக்கப்படுகின்றன. இவற்றைத் தவிர வேறு புள்ளிகளை விவா திக்க விரும்புபவர்கள் அதைத் தெளிவு படுத்தி விட்டுக் கூறுவது தேவை. அனைவருமே கருத் துக்களை எழுதிக் கொண்டு வந்து வாசிப்பது விவாதிக்கவும், பின்னர் தொகுக்கவும் இன்றி யமையாத உதவி என்பதைக் கருத்தில் கொள் ளவும். அனைவரது கருத்துக்களும் வாசிக்கப் பட்ட பிறகு ஒவ்வொரு புள்ளியாக விவாதத் திற்கு எடுத்துக் கொள்ளலாம்.

பரிந்துரைக்கப்படும் விவாதப் புள்ளிகள்:

1) பெரியாரியத்தின் முக்கிய கூறுகளாக எவ் வெவற்றைக் குறிப்பிடலாம்?(சாதி ஒழிப்பு, பார்ப்பன எதிர்ப்பு என்பது போல குறிப்பு களாகச் சொன்னால் போதும்)

படிப்பகம்

www.padippakam.com

2) இவற்றில் எவ்வெவற்றை இன்றைய சூழலில் உயர்த்திப் பிடித்தல் வேண்டும்? எவ்வெவற்றை ஏற்றுக் கொள்ள இயலாது? எவ்வெவற்றை இணைத்துக் கொள்ளல் வேண்டும்? (இவற்றையும் குறிப்புகளாய்ச் சொன்னால் போதும்)

3. பெரியாரின் பெயரும் பிம்பமும் பெரும் அங்கீகாரமும், மரியாதையும் பெற்றுள்ள அதே நேரத்தில் அவர் தகர்க்க விரும்பிய சாதியப் படிநிலை அமைப்பும், பார்ப்பனீயக் கருத்தியலும் அனைத்தையும் பாதுகாக்கும் ஆற்றலுடன் மதக் குறியீடுகள், கடவுளர்கள் பெருக்கமும், நின்று நிலவுவதை அவரது இயக்கத்தின் தோல்வியாகக் கருத முடியுமா? அப்படியானால் அதற்கான காரணங்களாக எவற்றைச் சொல்ல முடியும்?

4. அவரது சிந்தனைகளைக் கோட்பாட்டு ரீதியிலான, சீராகக் கட்டமைக்கப்பட்ட சொல்லாடல்களாக வெளிப்படுத்தாததே இன்று அவர் பெயர் பொத்தாம் பொதுவாகப் பலவற்றிற்குப் பயன்படவும், அவரது பெயரையும் படத்தையும் பயன்படுத்திக் கொண்டே அவரது சிந்தனைகளை நீர்த்துப் போன நிலையில் (பல இயக்கங்கள்) உச்சரிப்பதற்கும் காரணங்கள் எனக் கொள்ள முடியுமா? தனது சிந்தனைகளை அவர் கோட்பாட்டு ருவாக்கம் செய்யாததற்குப் புறரீதியான காரணங்களாக எவற்றையும் சொல்ல முடியுமா?

5. தனது சிந்தனைகளை முழுவதும் உள்வாங்கிக் கொண்டு, தன்னுடைய குரலில், தன்னுடைய தீவிரத்துடன் பிரச்சாரம் செய்யக் கூடிய ஒரு அணியினரை அவரால் ஏன் உருவாக்க இயலாமற் போயிற்று? தேவையிருந்தும் அத்தகைய தலைவர்கள் உருவாகாமற் போனதற்கும் இயக்கம் தொடராமற் போனதற்கும் காரணம் என்ன? [இதற்கான பதில் தனி நபர் விமர்சனங்களாக அல்லாமல் சமூகவியல், பொருளியல் அடிப்படையில் அமைய வேண்டுகிறோம்].

6. மக்கள் திரள் அமைப்புகள், கட்சி அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதல் ஆகியவற்றில் அவருக்கு ஈடுபாட்டின்மை அல்லது அவநம்பிக்கை இருந்தது எனச் சொல்ல முடியுமா? சாதியம் ஆதிக்கம் செலுத்தும் ஒரு சிவில் சமூகத்தில் பார்ப்பனீய மேலாண்மையைத்தகர்க்கும் நிலைபாடுக்கு முன்னுரிமை கொடுத்துப் பார்க்கும் போது கிராம்சி சொல்வது போல பெரியாரின் செயல்பாடுகளை ஒரு War of Positions எனச் சொல்லலாமா?

7. தமிழில் உயர்கல்வி கற்ற, உலக வளர்ச்சியில் பரிச்சயம் கொண்ட இலக்கிய வாதிகள், கலைஞர்கள், அறிவு ஜீவிகள் சிறுபத்திரிகைக்காரர்கள் பெரியாரிடம் போதிய ஈடுபாடு கொள்ளாததும் அவரை விரிவாக விவாதிக்கவும் ஆராயவும் செய்யாதது ஏன்? தமிழ் அறிவியக்கம் மறைவான பார்ப்பனீயச் சட்டகத்தினுள் முடங்குவது உண்மையென்றால் அதனை மாற்றுவது எப்படி.

8. பெரியாரின் உலகப் பார்வை சாராம்சத்தில் கருத்துமுதல் வாதமாக உள்ள இயந்திர வகைப்பட்ட பொருள் முதலியம் அவர் பிரதியிருத்துப்படுத்தியது தமிழ்ப் பிரதேசத்திலுள்ள பார்ப்பனரல்லாத (தெலுங்கு, கன்னட, மலையாளர் உள்ளிட்ட)தரகு முதலாளியரைத் தான் என்கிற கருத்துக்களின் மீது உங்கள் பதிவு என்ன?

9. தலித் குரல்கள் முனைப்பு பெற்று வரும் இன்றைய சூழலில் அம்பேத்கரின் சிந்தனைகளோடு பெரியாரின் சிந்தனைகளை இணைத்து நடைமுறைப் படுத்தும் வாய்ப்பு உள்ளதா, அதற்கான மையப்புள்ளிகள் எவை எனக் கருதுகிறீர்கள்.

விவாத விவரம்:

நாள்: 02—05—1993

இடம்: வீரமணி பள்ளி
4, பனகல் தெரு,
பாண்டியன் நகர்,
மதுரை-625 009.

(பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து அனுப்பானடி செல்லும் 4-A எண்ணிட்ட நகரப் பேருந்தில் ஏறி பாண்டியன் நகர் நிறுத்தத்தில் இறங்க வேண்டும்)

கள ஆய்வு

மீண்டும் குடிதாங்கி

குடிதாங்கியில் தாழ்த்தப்பட்டவர் பிணம் ஒன்றை பா.ம.க, நிறுவனர் **டாக்டர். ராமதாஸ்** அவர்கள் தலைமையேற்று தடுக்கப்பட்ட சுடுகாட்டுப் பாதையில் எடுத்துச் சென்ற செய்தி பிப்ரவரி 19ந் தேதி தினசரிப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்ததைத் தொடர்ந்து இரு தரப்பு மக்களின் மனநிலையையும் நேரில் கண்டு வர பிப்ரவரி 27ந் தேதி அன்று நானும் எனது மாணவர் **க. ரவியும்** அங்கு சென்றோம். வழக்கம்போல தாழ்த்தப்பட்டவர்கள் பகுதிக்கு முதலில் சென்றோம். 'சாலையில் சம உரிமை கேட்டு 60ஆண்டுகளாகப் போராடி வருகிறோம் சம பந்தி போஜனம் ஒரு கேடா?' என்கிற கையெழுத்து சுவரொட்டி எங்களை வரவேற்றது திருவாளர்கள் **சங்கர், அர்ஜீன், ஆறுமுகம், பஞ்சு, ரவிச்சந்திரன்** ஆகிய தோழர்கள் எங்களை வரவேற்று செய்திகளைச் சொன்னார்கள், அவை:

படிப்பகம்

www.padippakam.com

'பிப்ரவரி 17 மாலை 3 மணி அளவில் நல்லான் மகன் **சேட்** (48) மரணமடைந்தார். இரவு காவல்துறை துணை கண்காணிப்பாளர் **கந்தசாமி** ஆர்.டி.ஓ. **பழனிக்குமார்** ஆகியோர் வந்துவிட்டனர். டாக்டருக்குச் செய்தி அனுப்பினோம், அடுத்த நாள் காலை 8 மணிக்கு அவர் வந்தார். 10 மணிக்கு **டி எம் பழனி** வந்தார். டாக்டருடன் எட்டு ஜீப்களில் சுமார் அறுபது பா.ம.க.வினர் வந்திருந்தனர். பா ம.க.முக்கிய பிரமுகர்களான **பு. தா. இளங்கோவன் பாப்பா சுப்பிரமணியம்** ஆகியோர் டாக்டர் சார்பில் வன்னியர்களைச் சென்று சந்தித்தனர். மணி தலைமையில் வேண்டுமானால் பிணத்தை எடுத்துச் செல்லட்டும். டாக்டர் வந்தால் மறியல் செய்வோம் என்று, அவர்கள் சொல்லிவிட்டனர் விருந்தினராக வந்துள்ள டாக்டரை விட்டுவிட்டு செல்ல முடியாது' என மணி சொன்னபிறகு டாக்டர் தலைமையில் பிண ஊர்வலம் சாலை வழியே தொடங்கியது. வன்னியப் பகுதியில் பல ஆடவர்கள் முன்கூட்டியே ஊரை விட்டுப் போய்விட்டனர். எஞ்சிய சிலரையும் காவல் துறையினர் கைது செய்த பிறகு சாலையில் ஊர்வலம் சென்றது. தங்கள் பகுதியில் வரும் போது வன்னியப் பெண்கள் டாக்டரை எதிர்த்து சத்தம் போட்டார்கள்.

'டாக்டர் சொன்னதைச் செய்துவிட்டார். அவரது நேர்மையில் எங்களுக்குத் துளியும் அய்யமில்லை. **டி. ர. ஜெயராமன** போன்ற உள்ளூர் பா.ம.க. தலைவர்கள்தான் யாரும் வரவில்லை. கைது செய்யப்பட்டவர்கள் அன்று மாலையே விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். வன்னியர் தரப்பில் 'ஸ்டே' வாங்கும் முயற்சி தோற்றுவிட்டது. அதிகாரிகள் நல்ல முறையில் ஒத்துழைத்தனர். இனி ஒரு முறை பிணம் விழுந்தால் எந்த எதிர்ப்பும் இல்லாமல் சுமுகமாய் எடுத்துச் செல்ல முடியும் என்று நம்புகிறோம்'

ஜனவரி 26 குடியரசு தினத்தன்று அதிகாரிகள் முன்னின்று நடத்திய 'சமபந்திபோஜனத்திற்கு' சுடுகாட்டுப் பிரச்சினை தீராமல் வரமாட்டோம் எனத் தாங்கள் புறக்கணித்துவிட்டதையும் குறிப்பிட்டனர். சென்ற இதழ் நிறப்பிரிகைகள ஆய்வு அறிக்கையைப் பற்றித் திருப்திகரமாய்க் குறிப்பிட்டார்கள். அப்போதுதான் வெளியாகியிருந்த 'நக்கீரன்' இதழில் டாக்டர் உடைய முயற்சியை மட்டும் வியந்து எழுதி இருந்ததைக் கண்டித்தனர். மணி தலைமையில் தாங்கள் நீண்ட நாட்களாகப் போராடியதால் தானே டாக்டர் கூட இங்கே வந்தார் என்றனர்.

வன்னியர் பகுதிக்குச் சென்றவுடன் எங்களைச் சுற்றி ஒரு சிறு கூட்டமே கூடிவிட்டது. திருவாளர்கள் **விசுவநாதன், முத்துராஜன், செல்வராஜ்** ஆகியோர் எல்லோர் சார்பிலும் பேசினார்கள். சென்ற முறையைக் காட்டிலும் இந்த முறை மிகவும் உணர்ச்சிவயப் பட்டிருந்தனர். பேட்டிக்குச் சென்ற நாங்கள் டாக்டரின் நண்பர்கள் எங்களிடம் சொன்னால் டாக்டருக்கு போய்ச்சேரும் என்ற ரீதியில் அவர்களின் பேச்சு அமைந்திருந்தது. அரசு, அதிகாரிகள் காவல்துறை, தங்களின் சொந்தத் தலைவர் ஆகிய அனைவராலும் கைவிடப்பட்டுப் பாதிப்பிற்குள்ளாகியுள்ள (!) 'Victims'ன் வாக்கு மூலங்களாக அப்பேச்சுக்கள் அமைந்தது குறிப்பிடத்தக்கது. அவற்றின் சுருக்கம்:

1. எங்களை எல்லோருமாய்ச் சேர்ந்து பழி வாங்கிவிட்டார்கள் எனினும் நாங்கள் சும்மா விடப் போவதில்லை. நீதி மன்றத்தை அணுகினோம். 'ஸ்டே' கிடைக்காவிட்டாலும் தாழ்த்தபட்டவர்களுக்குத் தனிச் சுடுகாடு அமைத்துத் தர வேண்டும் என்பது போல 'டைரக்ஷன்' கொடுக்கப்பட்டுள்ளது. இதனை அதிகாரிகள் மீறிவிட்டனர். 'நீதிமன்ற அவமதிப்பு' வழக்கு தொடர இருக்கிறோம். சட்டம் ஒழுங்கு அடிப்படையில் அடுத்த முறை நிச்சயமாய் 'ஸ்டே' வாங்கிவிடுவோம்.

2. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நீலத்த நல்லூருக்கு ராமதாஸ் வந்திருந்தார். அப்படியே எங்கள் ஊருக்கு அழைத்து வர ஏற்பாடு செய்தோம். குறுக்குப் பாதையில் கார் வரமுடியாது. ஆனாலும் அவர் பாதம் தரையில் பட்டுவிடக் கூடாது என்பதற்காக அய்ம்பது புல்டோசர்கள் செய்யக் கூடிய வேலையை எங்கள் ஊர் இளைஞர்கள் ஒரே நாளில் செய்து குறுக்குச் சாலை போட்டார்கள். தேர்தல் புறக்கணிப்புச் செய்ய வேண்டும் என்று அவர் சொன்னபோது தஞ்சை மாவட்டத்தில் நூறு சதம் புறக்கணிப்பு செய்த ஊர் எங்களுடையது தான் மண்டல் கமிஷன் என்றால் பெண்களுக்கு புரியுமா? மண்டல் கமிஷனுக்காக அவர் கும்பகோணத்திலும், ஈரோட்டிலும் மாநாடுகள் போட்ட போதெல்லாம் எங்கள்ஊர் படையாச்சி பெண்கள் லாரிகளில் சென்றிருக்கிறார்கள். இவ்வளவு செய்திருந்தும் எங்களிடம் வந்து அவர் ஒருவார்த்தை பேசியிருக்கக் கூடாதா? இரண்டுமுறை வந்தும் 'அவன்க' பகுதியில் மட்டுமே உட்கார்ந்து பேசிவிட்டுப் போனது என்ன நியாயம்? பெரியார் எவ்வளவு பெரிய தலைவர்! ஆனால் ஒரு பார்ப்பான் வந்தால்கூட அவர் எழுந்து நின்று வணக்கம் சொல்வாரே

3. இந்தப் பிரச்சினையை அரசியல் பள்ளி தலைவராகும் நோக்கம் அவருக்கு ஆனால் இதில் அவருக்குப் படுதோல்விதான். நாங்கள் ஒருவர்கூட இனி பா.ம.க.வுக்கு ஓட்டுப்போட மாட்டோம். கொடிகளை எல்லாம் இறக்கி விட்டோம். கட்சியைக் கலைத்துவிட்டோம்,

படிப்பகம்

www.padippakam.com

'அவன்க'ளும் இவரை நம்பப் போவதில்லை. அன்றைக்குக் கூட இவர் வந்தவுடன் அவர்கள் பிணத்தை எடுக்க ஒத்துக் கொள்ளவில்லை. மணி வர வேண்டும் என்று சொல்லிவிட்டனர். மணி வரும்வரை இவர் காத்திருந்தார்.

4. எங்கள் ஊரில் தி.மு.க. காரர்கள் ஓட்டு வாங்கியிருக்கிறார்கள். அ.தி.மு.க.வினர் ஓட்டு வாங்கியிருக்கின்றனர். காங்கிரஸ் வாங்கியிருக்கிறது. கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள். யாராவது இந்தக் காரியத்தில் தலையிட்டார்களா? இவருக்கு ஏன் இந்த வேலை? இவர் அரசியல் பண்ண எங்கள் கிராமந்தான் கிடைத்ததா? அரசியல் அடிப்படை அறிவுடைய யாராவது இந்தக் காரியத்தைச் செய்வார்களா? எந்தத் தரப்பு ஓட்டாவது இனி இவருக்கு விழுமா? இப்போது இந்தப் பிரச்சினை ஆதனூர் வாஸ்த கண்டம், திருப்புறம்பியம். அண்டக்குடி போன்ற இடங்களுக்கும் பரவுவதற்கு காரணம் ஆகி விட்டார்.

5. எங்களுக்கும் அவர்களுக்குமிடையில் வேறு எந்தவிதமான தீண்டாமைப் பிரச்சினைகளும் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்லுகிறோம். ஈமச் சடங்குகள் செய்ய முடியாது என்பத்தாண்டுகட்கு முன்பே அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதற்கு பிறகு நாங்களே செய்து கொள்கிறோம். வேறு எந்தச் சச்சரவும் இல்லை. அவர்கள் பிள்ளைகள் தினம் எங்கள் பகுதியிலுள்ள பள்ளியில் வந்து படிக்கிறார்கள். சத்துணவு சாப்பிடுகிறார்கள். பிரச்சினையில்லை அதோ சைக்கிளில் போகிறானே அவன் அப்பன்தான் முதலில் செத்துப் பிரச்சினை வந்தது. இருந்தும் அவர்கள் வந்து போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள். எல்லாவற்றையும் நாங்கள விட்டுக் கொடுக்கத் தயார் அதற்காக பறையனை வீட்டுக்குள் விடமுடியுமா சார்? நீங்களும் ஒரு அய்யர் வீட்டுக்குப் போனால் திண்ணையில் உட்கார்ந்து தானே பேசவேண்டியிருக்கிறது! 'பிரேசீஜ்' (Prestige கவுரவம்) சார் 'பிரசீஜ்!' இது ஒரு கொள்கைப் பிரச்சினை!

6. வன்னியர் சங்கம் என்று ஆரம்பித்தார். அப்புறம் கட்சி என்றார். தமிழர் என்றார். இப்போது தீண்டாமைதான் முக்கியப் பிரச்சினை என்கிறார். இவர் இழுத்த இழுப்புக்கெல்லாம் நாங்கள் போகணுமா?

'டாக்டர்' 'அய்யா' போன்ற மரியாதைகளை எல்லாம் விட்டுவிட்டு வெறுமனே 'ராமதாஸ்' என்று மட்டுமே குறிப்பிட்டனர். தாழ்த்தப்பட்டவர்களுடன் ஒப்பிடும்போது வாழ்க்கைத் தரத்திலோ, தூய்மையிலோ, தோற்றத்திலோ, அப்பாவித் தனத்திலோ, கல்வியிலோ, எந்த அளவிலும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க முன்னேற்றமில்லாத இவ்விவசாய மக்களின் பேச்சுக்கள் வெளிப்படையாக இருந்தன.

நாங்கள்: இனி ஒரு முறை டாக்டர் வந்து உங்களுடன் பேசினால் சுமூகமாக இப் பிரச்சினை தீருமா?

பதில்: அவரிடம் இனிமேல் பேசுவதற்கு என்ன இருக்கிறது?

நாங்கள்: 'டாக்டர்' வந்தால்தான் மறியல் செய்வோம். அவர்களே வேண்டுமானால் தூக்கிச் செல்லட்டும்' என்று நீங்கள் சொன்னதாகக் கேள்விப் பட்டோம். இனி ஒரு முறை சவ ஊர்வலம் வந்தால் சுமூகமாய் அனுமதித்து விடுவீர்களா?

பதில்: மாட்டோம். அதற்குள் 'ஸ்டே' கிடைத்துவிடும் என நம்புகிறோம். இதுவரை இந்தப் பிரச்சினையில் அமைதியாகவே இருந்திருக்கிறோம். எந்த அசம்பாவிதமும் நடந்ததில்லை. இனி ஒரு முறை பிரச்சினை வந்தால் அது கிரிமினல் நடவடிக்கையில்தான் போய் முடியும்.

நாங்கள்: டாக்டர் இரண்டு முறை உங்களை வந்து சந்திக்கிறார். மறுபடி மறுபடி உங்களை வந்து சந்திக்கவில்லை என்று சொல்வது என்ன நியாயம்? அவர் என்னதான் செய்திருக்க வேண்டும் என எதிர் பார்க்கிறீர்கள்?

பதில்: அவர்களிடம் அவர் நெளிவு சுளிவாய்ப் பேசியிருக்க வேண்டும்: அவர்களுக்குள்ள சுடுகாட்டை அவர்கள் ஏற்றுக் கொள்ளச் செய்திருக்க வேண்டும்.

நாங்கள்: பா.ம.க. தலைவர்கள் வேறு யாரையும் சந்தித்தீர்கள்?

பதில்: பண்ருட்டியார் சட்டசபையில் நன்றாகப் பேசியிருந்தார். அவரைச் சந்திக்க முயன்றோம். முடியவில்லை.

இந்த எளிய விவசாய மக்களின் மனத்தில் கவுரப் பிரச்சினையாய் உறையும் இந்தச் சாதியக் கருத்தியலின் வலிமை எங்களை அயர வைத்தது. எள்ளளவிற்கும் அவர்கள் சுடுகாட்டு பிரச்சினையில் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லாததும் புரிந்தது. பெரியார் உட்பட வேறு எந்தத் திராவிட இயக்கத் தலைவர்களும் தேர்தல் சார்ந்த அரசியற் கட்சித் தலைவர்களும் செய்யத் துணியாத ஒரு காரியத்தைச் செய்துள்ளார் டாக்டர் ராமதாஸ் அவர் அடிக்கடி கூறி வருவதுபோல 'வாக்குப் பொறுக்குவது இரண்டாம் பட்சந்தான்' என நிறுவிவிட்டார். ஆனால் அங்கே பிரச்சினை தீரவில்லை. மேலும் சிக்கலா

படிப்பகம்

www.padippakam.com

கியிருக்கிறது, எனினும் தாழ்த்தப்பட்டவர் மத்தியில் விழிப்புணர்வுடன் கூடிய செயற்பாடுகள் சுற்று வட்டாரங்களிலும் பரவுவது வரவேற்கத்தக்க ஒன்றுதான். பிரச்சினை நெளிவு சுளிவுடன் கையாளப்பட வேண்டிய ஒன்று. சுடுகாட்டுப் பாதைக்காகச் சமரசமின்றி போராடிக் கொண்டிருப்போம். மக்களுடன் தொடர்ந்... மேற்கொள்வது தவிர்க்க... உரையாடலில் பா. ம. க. ... களும் முக்கிய பங்கு வகிக்க...

—நிறப்பி...

தகவலியம்: கூட்டு விவாதத் தொடர்ச்சி

[தகவலியம் பற்றிய கூட்டு விவாதத்தில் பிரேம் பேசிய கருத்துக்களாக பின்னர் அவரால் தொகுக்கப்பட்டு அனுப்பப்பட்டவை]

பிரேம்:— 1. இந்திய சமூகங்களைப் பொறுத்தவரையில் செய்தித் தொடர்பு என்னும் கருத்துருவாக்கம் செயல் வரும் மொழி அடிப்படையில் இல்லாமல் வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவுகளிலும் அமையும் *Demonstration, Performance, Ritual* என்னும் தொடர் நிகழ்வுகளால் அமைகிறது,

2. இன்றைய செய்தித்தொடர்பின் வன்முறை என்பது முழுமையான உண்மை என்பதை நோக்கி அமைகிறது, அதனால் அதை எதிர்க்கும் செயல் என்பது, உண்மைகளை அறிதல் என்னும் செயலுக்கு எதிராக அமைய வேண்டியிருக்கிறது. அதனால் சாராம்சவாதம் (*Essentialistic view*) என்பதை எதிர்க்கக்கூடிய பன்முகத் தன்மையான ஒருமொழி அமைப்பு அதிகாரம் சார்ந்த செய்தித் தொடர்பின் செயல்பாட்டை எதிர்க்கக் கூடியதாக அமையும்.

3. ஒற்றை மையம் நோக்கிய வாழ்க்கை நோக்குக்கு எதிரான சொல்லாடல்களும் பயன்பாட்டு நோக்குக்கு எதிரான சொல்லாடல்களும் அதிகாரம் சார்ந்த செய்தித் தொடர்பின் இறுக்கத்தைக் குலைக்கக் கூடியதாக அமையலாம்,

4. மொழி சார்ந்து புனைவுகளால் உருவாகும் செய்தித் தொடர்பு என்பதின் வன்முறை, உடல்களுக்கிடையிலான இடைவெளிகளின்மூலமாக பெருக்கமடைகிறது. அதற்கு மாற்று என்று நாம் சிந்திக்கும்போது உடல்களுக்கிடையிலான உராய்வுகளைப் பற்றியும் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

5. பகுதிவாரியான வாழ்க்கை நோக்குகள், குழு சார்ந்த அறிவுருவாக்கம் என்பனவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கும்போது *Macro Power* அடிப்படையில் அமைந்த இன்றைய செய்தித் தொடர்பின் சொல்லாடல்களை எதிர்க்கும் சாத்தியம் உண்டு,

6. எந்த ஒருசெய்தியின் அர்த்த உருவாக்கச் செயல்பாடும் ஒரு *cultural pre-text* என்பதை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் செய்திப்பரவல் என்னும் செயலில் மட்டுமல்லாது கலாச்சாரத் தளத்திலும் ஒருஉடப்பை நிகழ்த்துவதற்கான *cultural subversive activities* அமைய வேண்டியது அரசியல் செயல்பாட்டுக்கான முன் நிபந்தனையாக அமையலாம்.

7. உடல் என்பதை தேவையற்றதாக நிர்ப்பந்திக்கும் ஒரு சமூக அமைப்பில் *Body without voice, 'wandering' voice* என்பவை வாழ்க்கையின் அர்த்தப்பாடுகளை அடைவதற்கான அருபமாதல் செயல்பாட்டை ஊக்குவிப்பதாக அமைகின்றன. அதனால் உடல் என்பதை பெரும்அளவில் பயன்படுத்தும் செய்தித் தொடர்பு வடிவங்களை இவற்றுக்கு எதிர் செயலாகப் பார்க்க வேண்டிய தேவையிருகிறது. மொழிஎன்பது மரணம்நோக்கிய அல்லது அருபமாதல் நோக்கிய ஒரு செயல்பாடு என்பதை இந்த இடத்தில் நிலை கூர வேண்டும்.

8. இன்றைய செய்தித் தொடர்பில் பயன்படுத்தப்படும் புலன்கள். பார்வை, கேள்வி (*vision and audio*) என்பவற்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டவை. இதில் விடுபட்டுப்போன புலன்களையும்

படிப்பகம்

www.padippakam.com

...கிய ஒரு செய்தித் தொடர்பே ...ா கலாச்சாரம் சார்ந்த செய்தித் தொடர்பு வடிவமாக, இன்னும் ஒரு வகையில் வாழ்க்கை வடிவமாக அமையக் கூடும்.

9. ஹிஸ்டிரியாவும் *Madness* உம் இன்றைய இறுகிய அதிகாரம் சார்ந்த கலாச்சார வடிவங்களை ஆற்றல் அழிக்கக் கூடியனவாக அமையும் பொழுது மாற்று வடிவங்களில் இவை சார்ந்த சொல்லாடல்களின் முக்கியத்துவம் கவனிக்கப்பட வேண்டும்.

10. உடல்களுக்கு இடையிலான இடைவெளிகளைக் குறைக்கும் கூட்டு இயக்கங்களை அதிகாரம் சார்ந்த செய்தித் தொடர்புக்கு எதிரானவையாக அடையாளம் காண வேண்டும். இன்றைய நிலையில் மனித ஆக்கம் சார்ந்த செய்தித் தொடர்பு என்பது *group sex* ஆக *(in a metaphoric sense). group dance* ஆக, *group song* ஆக, *group life* இருக்கலாம்.

O O O

கடிதங்கள் விமர்சனங்கள் கடிதங்கள்

சென்றஇதழில்வந்த ஃபூக்கோள கட்டுரை நாகார்ஜுனனின் மொழி பெயர்ப்பு, குறிப்புகள் ஆகியவற்றையும் கள ஆய்வுக் கட்டுரையையும் பலரும்நேரில் பாராட்டினார்கள். கடிதம் மூலம் சென்னையிலிருந்து சௌமியா நாராயணன் திண்டிவனத்திலிருந்து கலியாணி ஆகியோர் கடிதங்கள் மூலமும் பாராட்டினர். வந்துள்ள வேறுசில கடிதங்களிலிருந்து சில பகுதிகள் மட்டும்.

ஃபூக்கோ பற்றிஇட்டுக்கட்டப்பட்டுள்ள மாயைகள் பல தகர்க்கப்பட்டுவிட்டன. நிறப்பிரிகை இன்றைய சூழலில் ஒரு வரலாற்றுத்தேவையை நிறைவேற்றியுள்ளது நாகார்ஜுனனின் குறிப்புகள் சமூக இயக்கங்களின்பால் அவர் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துகிறது.

திருச்சி-16 அ. சு. அழகேசன்

நிறப்பிரிகை கண்டு மகிழ்ச்சியடைந்தேன். தமிழ்ச் சூழலில் இவ்விதழ் தவமிருந்தாவது காப்பாற்றப்பட வேண்டும்.

ஆத்தூர். சு. சேரன்

தேசிய இனப் பிரச்சினை பற்றிய நிறப்பிரிகை கட்டுரைகளைத் தனியே பிரதிகள் எடுத்து நிரையே மனிதம் (சுவிஸ்), தூண்டில் (ஜேர்மனி), சமர் (பிரான்ஸ்), சுமைகள் (நோர்வே), பனிமலர் (லண்டன்), உயிர்ப்பு (லண்டன்) ஆகிய பத்திரிகைகளுக்கு தவிர ஆங்காங்கேயுள்ள ஆர்வலர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளோம். அதன் பிரதி ஒன்று உங்கள் பார்வைக்கு அனுப்பி வைக்கிறோம்.

டன்மார்க் சிவா

நிறப்பிரிகை தொடர்ந்து வெளி வர வேண்டும் என்பதே என் ஆவல். ஏனெனில் தாங்கள் கூறுவதுபோல மார்க்சியம் பற்றி இன்னும் நிறைய விவாதிக்க வேண்டும் என்பதில் எனக்கும் உடன்பாடு உண்டு. நான் 'புதிய ஜனநாயகம்', புதிய கலாச்சாரம் இதழ்களை கடந்த 4 வருடமாக வாசித்து வருகிறேன். அவர்கள் எழுப்பாத பல கேள்விகளை நிறப்பிரிகை எழுப்பி விவாதிப்பது பாராட்டத்தக்கது.

டன்மார்க் த. சௌந்தர்

—இனி ஒரு சுவையான கடிதம் முழுமையாக—

எனக்கு நி.பி, வருவதில்லை—அடுத்து என் வாழ்வில் பொய், பித்தலாட்டம், மொத்து வித்தை — என்பவைகளை எக் காரணம் கொண்டும் பயன்படக்கூடிய, விடுவிக்க வல்ல—கருவியாக ஏற்றவனல்ல. இதற்காக என் வாழ்வில் 35 ஆண்டுகளைப் போராட்டத்தில் கழித்துள்ளேன், இனியும் அதுதான் என் உறுதியான கோட்பாடு இதை ஏற்காதவர்களை நான்கண்டு பயப்படுவதுமில்லை, மதிப்பதுமில்லை. இத்தகையவர்கள் கவைக்கு வொதவர்கள் இவர்கள் எந்த பெயரை சூட்டிக் கொண்டாலும் கவலையுமில்லை.

உண்மைக்கும் பொய்க்குமிடையில் சமரசம் கிடையாது. பொய்யை மெய்போல கூறலாம்-ஆனால் அதெல்லாம் வித்தை. மக்கள் ஊழியன் ஏற்கமாட்டான். மக்கள் ஏற்கமாட்டார்கள். மக்களை மடையர்களாகக் கருதுபவர்களும், மடையர்களாக்கத் துடிப்பவர்களும் பொய்யால் வெல்ல

படிப்பகம்

www.padippakam.com

லாமென கனவு காணலாம். அப்படி யானால் அந்த உலகம் எனக்குத் தேவை யில்லை, அது அடிமைகளின் உலக மாகவும், அயோக்கியர்களின் உலகமாக வும் தான் இருக்கும். பொய்யை மற்று மொரு பொய்யால் வெல்ல முடியும் என் பது அடிப்படையில் ஏற்பட்டுள்ள மூளைக் கோளாறின் வெளிப்பாடு இனி லெனினின் நான்கு கேள்விகளுக்கு விடை காண்டீர் களானால் போதும்.

In any issue we must ask (1) who gains? (2) At what cost? (3) At whose cost? (4) In what manner? This in the Quitessence of class approach.

இக்கடிதத்தை என் பெயரில் நிறப்பிரிகை யில் வெளியிடலாம் - நேர்மையும் துணிவு மிருந்தால்.

காட்பாடி. என். எஸ். நாகராசன்

O O O

பதிவுகள்

தாக்குதல்: 23-1-1993 தேதியிட்ட ''போலீஸ் செய்தி'' வார இதழ் தனது 'கவர் ஸ்டோரியில்' நிறப்பிரிகை குழு தனித் தமிழ்நாடு கோரிக்கையை வலி யுறுத்தி வருவதாகவும், ஆயுதம்ஏந்தி சிறு சிறு வன்முறைகளை நிகழ்த்தும் தீவிர வாத அமைப்புகளில் ஒன்று என்பது போலவும் செய்தி வெளியிட்டிருந்தது. இது தொடர்பாக எங்களது கண்டனத் தை தெரிவித்து அவர்களுக்குக் கடிதம் எழுதியதோடு தமிழகமெங்குமிருந்து பத் திரிக்கையாளர்கள்,எழுத்தாளர்கள்,களப் பணியாளர்கள் என சுமார் நூறு பேர்கள் கையெழுத்திட்ட கண்டன அறிக்கை ஒன் றும் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதனைத்தொடர்ந்து 6-2-93தேதியிட்ட இதழில் அவர்கள் அந்த மறுப்பு அறிக்கை யினை வெளியிட்டார்கள் இது தொடர் பாக நாங்கள் அனுப்பிய வேண்டுகோளின் அடிப்படையில் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கம் (*TASNA*) சார்பிலும், தாராமதி, கனவு. புறப்பாடு ஆகிய இதழ்கள் சார் பிலும், மதுரை மாவட்ட மனித உரிமை இயக்கசார்பிலும் கண்டனஅறிக்கைகளும் செய்திகளும் வெளியிடப்பட்டன. இவை தவிர நிறப்பிரிகையின் பணிகளில் ஆர்வ மோடு ஒத்துழைப்பு காட்டிவரும்தோழர் கரூர் பி. ஆர். குப்புசாமி, சகோதரி லூசினா போன்றவர்களும், ஈரோட்டி லிருந்து தோழர் குறிஞ்சியும் பிற தோழர் களும் கண்டனக் கடிதங்களை போலீஸ் செய்திக்கு அனுப்பினர். தினமலரைத் தொடர்ந்து போலீஸ் செய்தி வந்திருக் கிறது. இப்படி நிறப்பிரிகை மீது தொடர்ந்து நிகழ்த்தப்படும் தாக்குதல் களை, இணை அதிகார அமைப்புகளாகத் திடப்பட்டுவரும் வெகுசனப் பத்திரிக்கை களின் ஆபத்தான மற்றுமொரு பரிமாண மாக நாம் குறிப்பிட முடியும்.

கைது: நிறப்பிரிகையின் பணிகளில் தீவிர மாக ஈடுபாடு காட்டி வரும் பேராசிரியர் பா. கல்யாணி 27-1-93 அன்று திண்டி வனம் போலீசாரால் கைது செய்யப்பட்டு பின்னர் சொந்தப்பிணையில் விடுவிக்கப் பட்டதை அறிந்திருப்பீர்கள். மக்கள் கல்வி இயக்கம். திண்டிவனத்தின் நகரக் கல்விமேம்பாட்டுக்குழு ஆசியவை துவங்க முதன்மைக் காரணமாக இருந்தவர் அவர் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக கல்விப் பணிகளிலும், மக்கள் நலப்பணிகளிலும் அயராது ஈடுபட்டு வரு பவர், அவர்மீது பொய் வழக்குகளின் அடிப்படையில் தாக்குதல் கொடுத்த போலீஸ், திண்டிவனம் நகர மக்களும், பள்ளி கல்லூரி மாணவர்களும் மேற் கொண்ட கடுமையான போராட்டத் தால் அம்பலப்பட்டது. மக்களுக்கு அதி காரம் என்பதை நுண்ணளவில் நடை முறைப்படுத்த முயன்று வரும் தோழர் கல்யாணியின் செயல்பாடுகள் குறித்து விரிவாக எழுத வேண்டும். சிவில் சமூகத் தில் கருத்தியல் மேலாண்மைக்காக பிரச் சாரம் மேற்கொண்டால்கூட ஒடுக்கு முறை நிறுவனமான போலீசின் தாக்கு தலுக்கு உள்ளாக வேண்டி வரும் என்பது இங்கு மறுபடியும் நிருபணமாகியுள்ளது. கல்யாணியின்மீது பொய் வழக்குபோட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் அங்கிருந்து இப் போது மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நாடகம் பற்றிய நாடகம்: நாடகத்துறை யில் இயங்கிவருபவர்களும் கூட அதிகம்

படிப்பகம்

www.padippakam.com

அறிந்திராத பெயர் அகஸ்தோ போவால் பிரேஸில் நாட்டு நாடக கர்த்தாவான போவால் 'இன்விசிபிள் தியேட்டர்' என்ற ஒடுக்கப்பட்டோருக்கான நாடக வடிவம் ஒன்றை முன் வைத்துள்ளார். பார்வை யாளர்களின் பங்கேற்புக்கு அதிக அழுத் தம்தந்த ப்ரெக்டின் நாடகக் கோட்பாடு கள் நாம் அறிந்தவை. ப்ரெக்ட் கருத் தாக்கம் பற்றிய போவாலின் குறிப்பு மிக முக்கியமானது. அதை, விழிப்படைந்த முன்னணி அமைப்பின் நிலையில் போவால் பார்க்கிறார். ப்ரெக்ட்டின் நாடகத்தில் பார்வையாளர் தனது, சிந்திக்கும் அதி காரத்தை நிகழ்த்துபவரிடம் கொடுத்து விடுவதில்லை, பார்வையாளர் சிந்திப்பவ ராகமாறுகிறார் ஆனால் தனக்காக செயல்படும் அதிகாரத்தை அவர்நிகழ்த்து பவரிடமே விட்டுவிடுகிறார். மாறாக, போவாலின் ஒடுக்கப் பட்டோருக்கான அரங்கில், பார்வையாளர் தன்னை விடுத லை செய்துகொண்டு தானே சிந்திப்பவ ராகவும், தானே செயல்படுபவராகவும் மாறி விடுகிறார். அதாவது நாடகம் என் பது ஒரு நேரடி நடவடிக்கையாக மாறி விடுகிறது. ''நாடகம் என்பது தன்னளவில் புரட்சிகரமானதாக இல்லாமல் இருக்கக் கூடும், ஆனால் ஐயத்துக்கிடமின்றி அது புரட்சிக்கான ஒரு ஒத்திகை'' என்கிறார் போவால். பாவ்லோ ஃப்ரேயரின் நெருங் கிய நண்பரும் அவரோடு இணைந்து செயல்படுபவருமான போவாலின் ''இன் விசிபிள் தியேட்டர்'' என்ற கருத்தாக்கம் பற்றி 7-2-93ல் ஒரு விவாதத்தை நிறப் பிரிகை ஏற்பாடு செய்தது. இதில் சுமார் நாற்பது பேர்கள் கலந்து கொண்டனர். இந்த விவாதத்துக்கான அழைப்பில் இரண்டு முக்கியமான விசயங்களிருந்தன. ஒன்று, இந்த விவாதம் நாடகத்துடன் தொடர்பில்லாத நிறப்பிரிகையால் நாட கத்துக்கு தொடர்பில்லாத பேராசிரியர் கல்யாணி வீட்டில் ஏற்பாடு செய்யப்பட் டது. இரண்டு, ''பசு மாமிசத்துடன் பகல் உணவு வழங்கப்படும்'' என்றதொரு குறிப்பு அழைப்பில் இருந்தது. இவை இரண்டும் மிகுந்த விவாதங்களை எல்லா இடங்களிலும் கிளப்பியுள்ளன. சிறு பத்தி ரிக்கை, நவீன நாடகம் என்பவை மேட்டி மைத்தனதுடனான பார்ப்பனீய கருத்தி யல் சக்திக்குள் அமிழ்ந்து கிடப்பதுபற்றிய உரையாடலைக் கிளப்புவதே எங்களல் நோக்கமாக இருந்தது. அந்த விதத்தில் ''இன்விசிபிள் தியேட்டரின்'' அரங்கேற்ற மாக இந்த விவாதம் அமைந்து விட்டது. (போவாலின் கருத்தாக்கம் குறித்து 150 பக்கங் கள் கொண்ட நூலொன்று நிறப்பிரிகை வெளியீ டாக அச்சுக்குப் போகிறது. அதில் இந்த விவா தங்களும் இடம் பெறுகின்றன) ஃப்ரேயர், வெகு சன நீதி பற்றிய ஃபூக்கோவின் கருத்துக்கள் இவற்றின் தொடர்ச்சியாகபோவால் இருக்கிறார் இதுவே போவால் எங்களைக்கவரக் காரணம்.

கருத்து சுதந்திரம் பற்றிய ஒரு கடிதம்:

சிவசு (ஆசிரியர், மேலும்)

அன்புள்ள ராஜ்கௌதமனுக்கு, உங்களின் முந் தைய கடிதம் கிடைத்தது. உடனடியாக பதில் எழுத முடியவில்லை. வீட்டுவேலை, ரொஸைக் போட்டுக் கொண்டிருந்தேன். நிற்க. இத்துடன் உங்கள் கட்டுரை கம்போஸ் பண்ணிய எட்டுப் பக்கம். எதற்காகவெனில், இங்கு நிகழ்ந்து விட்டதை உங்களுக்கு தெரிவிக்கவே

மேலும், வழக்கமாக அச்சடிக்கும் பிரஸ்ஸில் பொங்கலுக்கு முந்தி கட்டுரையைக் கம்போஸ் செய்தார்கள். அன்று ஓட்டு லிஸ்ட் அடிப்பதற் காக வந்த அரசாங்க ஊழியர்கள், கம்போஸ் பண்ணிய காகிதங்களை மேசையில் கிடந்ததால் தற்செயலாக பார்த்திருக்கிறார்கள். உடனே பிரஸ் ஓனரைக் கூட்டிக்கொண்டு காவல் நிலை யத்திற்குச் சென்றுவிட்டார்கள். உடனே, பத்தி ரிக்கை ஆசிரியர் என்ற ரீதியில் பிரஸ்காரர் என் னையும் கூப்பிட்டு விட்டார். அயோத்தி பிரச் சனைக்கப்புறம் மதம், சாதி சம்பந்தமான எந்த விஷயங்களையும் (விமர்சிக்கக்கூடிய) நாங்கள் அடிக்க மாட்டோம் என்று நெல்லை பிரஸ்காரர் களிடம் கலெக்டர் எழுதி வாங்கியுள்ளார். எனவே, அடிப்பது சரியல்ல என்று என்னையும் பிரஸ்காரரையும் எச்சரித்து வெளியே அனுப்பி விட்டார்கள். எனவேதான் இங்கு அச்சடிக்க முடியாமல் லேட்டாகிவிட்டது. நானும் எனக்குத் தெரிந்த பிரஸ்காரர்களிடம் சென்று பார்த்தேன் முடியவில்லை. எனவே பாண்டிச்சேரியில் அச்ச டிக்க முடியுமா? அப்படி முடிந்தால், 'மேலுமின்' போனஸ் கட்டுரை போலத் தனியாகக் கூட வெளியிடலாம்- தாங்கள் என் நிலையைப் புரிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

கட்டுரையைப் பத்திரமாகத் திருப்பி வாங்கி வைத்திருக்கிறேன். அதனால்தான் பாண்டிச் சேரிக்குக்கூட வர முடியவில்லை. மன உளைச் சல்தான். எழுத்துரிமை இந்தியாவில் உள்ளதா என்ற ஐயப்பாடுதான்வருகிறது.வீட்டில் துணை வியார், குழந்தை நலம் கேட்டதாகக் கூறவும்.

அன்புடன்,

சிவசு.

படிப்பகம்

www.padippakam.com

மேலே தரப்பட்டுள்ள கடிதம் ராஜ்கௌதமன் அவர்களுக்கு வந்தது. பெரிய புராணத்தை தலித் நோக்கில் ஆய்வு செய்துள்ள அவரது கட்டுரைதான் தடை செய்யப்பட்ட அந்தக் கட்டுரை. சுமார் நாற்பது பக்கங்கள் கொண்ட அந்தக் கட்டுரை சிறு வெளியீடாக வரவுள்ளது.

சில அறிவிப்புகள்:

1) ''எண்பதுகளில் அரசியலும் பொருளாதாரமும்'' கட்டுரைகள் இப்போது நூலாக வர ஏற்பாடாகியுள்ளது. மே முதல் வாரத்தில் அது கிடைக்கும். மொத்த கட்டுரைகளையும் ஒரு சேர வெளியிடும் நிதி வசதி இல்லாததால் சில நண்பர்களிடம் கடனாகத் தொகை பெற்று முதல் தொகுதியாக ஒன்பது கட்டுரைகளை வெளியிடுகிறோம். மற்றவை அடுத்த தொகுதியில்.

2) தேவி பிரசாத் சட்டோபாத்யா பற்றிய ஆய்வரங்கு ஒன்றை ஜூன் மாதத்தில் நடத்த விரும்புகிறோம். யார் வேண்டுமானாலும் பங்கேற்கலாம். விரும்புகிறவர்கள் தலைப்பை எழுதி அனுப்ப வேண்டுகிறோம்.

3) வீணா தாஸ் எழுதியுள்ள கட்டுரையொன்றைத் தமிழில் சிறு நூலாக வெளியிட உள்ளோம். அவரும் ஒப்புதல் தந்துள்ளார், ஜூன் முதல் வாரத்தில் அது வெளியாகக்கூடும்.

4) உங்களுக்கு சிரிப்பு மூட்டும் ஒரு அறிவிப்பு: இனி, நிறப்பிரிகையை காலாண்டிதழ் என்பதற்கேற்ப மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கொண்டு வருவோம். ○

○ தனிச் சுற்றுக்கு ○ நன்கொடை ரூ. 20 ○ நிறுவனங்களுக்கு ரூ. 30

நிறப்பிரிகை

ஆசிரியர் குழு: ரவிக்குமார்—வேல்சாமி—அ.மா.

வெளியீடு: தோழமை 20, கோதண்டபாணித் தெரு, கும்பகோணம்-612 001.

நன்கொடைகள், கடிதங்கள், கட்டுரைகளுக்கு: தபால் பெட்டி எண்: 192, பாண்டிச்சேரி-605001

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

இரண்டிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கெதிரான கொடுமைகளுக்கு வன்னியர்கள் காரணமாக அமைந்துபோனது சந்தர்ப்பவசத்தால் மட்டுமே. தலித்துகள் மத்தியில் போர்க்குணத்தோடு எதிர்ப்புகள் ஏற்படும்போது அது எவ்வாறு எதிர்கொள்ளப் படுகிறது எத்தகைய விளைவுகளை உருவாக்குகிறது என்பதைப் புரிந்துகொள்ள இக்களஆய்வு உதவலாம். ஒருபகுதியில் தலித்துகள் போர்க்குணத்துடன் இருப்பதற்கு தற்சார்பை உருவாக்கும் விவசாய அமைப்பு, தொடர்ந்த கல்வி வயர்ச்சி, அம்பேத்கர் இயக்க செயல்பாடுகள் எனப்பல காரணங்கள் இருக்கலாம். பொதுவாக மத்திய மற்றும் தென் இந்தியாவில் பொதுவுடமையாளர்களால் அமைப்பு ரீதியாக திரட்டப் பட்ட தலித்துக்களைக்காட்டிலும், அம்பேத்கர் இயக்கங்கள் தோன்றிய மராட்டியம் குஜராத் போன்று மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் தலித்துகள் போர்க்குணத்துடன் இருந்துவருவதைக் கவனிக்கலாம். சமீபத்தில், மராவத்வாடா பகுதியில் இவ்வாறு போர்க்குணத்துடன் தலித் தலைவர் யாரேனும் உருவானால் அவருக்கு ''கிரிமினல்'' பட்டம் சூட்டிக் கல்லால் அடித்துக் கொலை செய்வது வழக்கமாகி வருகிறது. ஆகஸ்டு 16, 1991ல் அம்பாதாஸ் சாகேப்ராவ் சவானே(30)என்கிற இளைஞரும், செப்டம்பர் 7, 1991ல் மராட்டிய தலித் தலைவர் மோகன் காம்ளேயின் குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் இப்படிக் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர். [''நரமாமிசம் உண்பவர்களெனவும்,'' ''சூனியக்காரிகள்'' எனவும் தலித் மக்கள் பட்டம் சூட்டப் பட்டு அடித்துக்கொல்லப்படுவது பீகார், ஒரிசா மாநிலங்களில் வழக்கமாக உள்ளதை நாம் அறிவோம்] கிரிமினல் என்கிற முத்திரை, வரையறை ஆகியவற்றின்மூலம் ஆதிக்கத்தினர் தங்கள் அயோக்கியத்தனங்களை நியாயப்படுத்திக்கொள்ள முயல் வதை நாம் எச்சரிக்கையோடு அணுகவேண்டும். இந்த வகையிலும் இந்த இதழில் வந்துள்ள களஆய்வு முக்கியமானது. இதில் குறிப்பிடப்படும் ரவி என்கிற தலித் தலைவர் தற்போது குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகியிருப்பதாக அறிகிறோம். தென்மாவட்டங்களில் செல்வாக்கு பெற்றுவரும் திருமாவளவன் என்கிற தலித் தலைவர் சில பொய்யான குற்றச்சாட்டுகளின் கீழ் சமீபமாக கைது செய்யப் பட்டபோது கோபமுற்ற மக்கள் பேருந்துகளை எரித்தனர் என்பதாக பத்திரிக்கை களில் செய்திகள் வந்தன.

குடும்பம், தேர்தல் முறை, தொடர்பு சாதனங்கள், கல்வி என நிறுவனங்கள் குறித்த ஆய்வின் தொடர்ச்சியாக கண்கானிப்பின் அரசியல் பற்றிய கலந்துரையாடலொன்று வெளியாகியுள்ளது போலீஸ் அமைப்பு பற்றி குறிப்பாக அரசியல் போலீஸ் (*Political Police*) பற்றி இது தெளிவுதரக்கூடும். அரசுக்கு எதிர்ப்பு வலுக்கும் இடங்களில் எல்லாம் போராடும் மக்களிடையே பிளவு உண்டாக்கி எதிர், எதிர் குழுக்களை உருவாக்கி மோதவிடுவது அரசியல் போலீசின் முக்கிய பணியாக உள்ளது. ஈழம், பஞ்சாப் ஆகிய பகுதிகளில் இப்படி மேற்கொள்ளப்பட்ட உளவு நிறுவனங்களின் சதி வேலைகள் நாம் அறிந்ததே. தென் ஆப்ரிக்காவிலும் இதுவே நிலவரம். அங்கேயுள்ள ராணுவ அமைப்பால் தேடப்படும் முன்னாள் ராணுவ அதிகாரிகள் இருவர் பற்றிய தகவல்கள் சமீபமாக வெளியாகியுள்ளன.கொயட்ஸீ,ஹ்யூகோ என்ற அந்த இருவரும் ஆப்ரிக்காவின் ராணுவ உளவு அமைப்பு [*Military Intelligence*] எப்படி பல்வேறு தொடர் கொலைகளைச் செய்துவருகிறது என்பதை வெளிப்படுத்தியுள்ளனர். அதற்குள் செயல்படும் ஹேமர் யூனிட் [*Hammer Unit*] என்னும் பிரிவு கருப்பின மக்கள் கையில் அரசு அதிகாரம் வருகிற நிலை ஏற்பட்டால் ராணுவப் புரட்சியை நடத்தி ஆட்சியைப் பிடிக்கவும் திட்டமிட்டுள்ளதாம். இந்திய போலீஸ் அமைப்பின் தோற்றம் அது எவ்விதம் குறியீடுகளால் இயங்கி வருகிறது என்பவை போன்ற விசயங்களை இந்த கலந்துரையாடல் வெளிப்படுத்துகிறது. நான்கு பேர்கள் பங்கு பெற்றதாகக் குறிப்பிடப் பட்டிருந்த போதிலும் கலந்துரையாடல் வடிவத்தில் எழுத்தப்பட்ட கட்டுரையே இதுவென்றும் ஒரு தகவல். அப்படிப் பார்த்தால், புனை கதை (*Fiction*) கட்டுரை (*Non Fiction*) என்பவற்றுக்கு இடையிலான வித்தியாசத்தை இது உடைக்க முயற்சிக்கிறது எனவும் கூறலாம்.

இந்த இதழில் வெளியாகும் லெவிஸ்த்ராஸ் மற்றும் பகூனின் கட்டுரைகள் அறிவியல் குறித்துப் பேசுகின்றன. பகூனினின் கட்டுரையொன்று தமிழில் வருவது இதுவே முதல் தடவை எனத் தோன்றுகிறது. ராஜகத்தை (*State*) கடுமையாக எதிர்த்த அராஜக வாதியான பகூனின் பற்றித் தமிழில் அவ்வளவாக நமக்குப் பரிச்சயமில்லை. அவர்

படிப்பகம்

www.padippakam.com

எழுப்பிய கேள்விகள் ஐயங்கள் யாவும் சோசலிச நாடுகள் எனச்சொல்லப்பட்டவற்றின் தகர்வுக்குப்பின் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அறிவியல் பூர்வமான அறிவு (*Scientific Knowledge*) ஒருசிலருக்கு மட்டும் கிடைக்கும்போது அது புதியதொருபடி அமைப்பைத் தோற்றுவிக்கும் என அவர் அஞ்சினார். ஆனால் மதத்தை எதிர்த்து அறிவியல் சிந்தனையை அவர் வற்புறுத்தினார். பகூனின் பற்றிய கட்டுரையொன்று அடுத்த இதழில் வெளிவரலாம். லெவிஸ்த்ராஸ் அறிவியலைப் பார்க்கும்விதம் நமக்குத் தெளிவின் எல்லையை விசாலப்படுத்தும். உயர்தொழில் நுட்பத்தைத் தாக்குவதில் தொடங்கி மதத்தை சாதகமாகப் பார்க்கவேண்டும் என்பதாக முடியும் குரல்கள் கூக்குரல்களாக ஒலித்துக்கொண்டிருக்கும் தமிழ்ச் சூழலில் அறிவியல் அணுகுமுறை என்பது என்ன வென்பதை தெளிவுபடுத்துகிறது இந்தக்கட்டுரை. இந்திய மரபு என்பதை கடுமையாக எதிர்க்கும் சிலர் அதை ஒரு படித்தானதாகப் பார்த்து நிராகரிக்கும் போக்கும் இங்கே காணப்படுகிறது. [இதுபற்றிய விவாதங்களை தகவல் தொடர்பு பற்றிய கூட்டுவிவாதத்தில் காண்க] இந்நிலையில் லெவிஸ்த்ராஸின் பார்வை மரபுக்குள் பன்முகத் தன்மையைச் சுட்டிக்காட்டி அதை காலனிய ஆதிக்க எதிர்ப்புக்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்பதையும் தொட்டுக் காட்டுகிறது. மானுடவியல் ஆய்வுகளில் மட்டுமின்றி நேரடியான அரசியல், கலாச்சார நடவடிக்கைகளிலும் லெவிஸ்த்ராஸின் கருத்தாக்கங்கள் மிகவும் பயன்படக் கூடியவை, இதை நாம் உபயோகிக்கும்போது தெளிவாக உணரலாம்.

நிறப்பிரிகை துவக்கி வைத்த பெண்ணியம் பற்றிய விவாதம் தமிழ்ச் சூழலில் குறிக்கத் தக்க தாக்கத்தை உண்டாக்கியிருப்பதை நாம் அறிவோம். கூட்டு விவாதத்தில் வெளிப்பட்ட பல குரல்களில் தம்வசதிக்கு ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்துகொண்டு அதுவே நிறப்பிரிகையின் குரல் என்பதுபோல முன்வைக்கப்படும் வேலைகள் ஒருபுறம் நடந்தபோதிலும், பிரச்சனைகளின்பால் ஈடுபாட்டோடு எதிர்வினை புரிபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ப்ரவாஹனின் எதிர்வினை இதனை நமக்கு உணர்த்துகிறது. நிறப்பிரிகை கூட்டுவிவாதத்தைத் தொடர்ந்து அதைக் குறிப்பிட்டு "சுட்டும் விழிச்சுடர்", "தினப்புரட்சி" ஆகிய இதழ்களில் வெளியான இருகட்டுரைகள் இங்கே மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளன. நிறப்பிரிகை வாசர்களுக்கு எட்டும் பொருட்டே இந்த ஏற்பாடு.

இன்று நாட்டின் மொத்த உரையாடல்களும் அயோத்தியில் இருந்த பாபர் மசூதி டிசம்பர் 6ல் இடிக்கப்பட்டதை நோக்கியே திருப்பப்பட்டுள்ளன இந்து மதம் பற்றி ஆய்வு செய்த அம்பேத்கர் தலித்துகளுக்காக இந்துக்கள் யாரேனும் ஆதரவுக்குரல் கொடுக்க வேண்டுமெனில் அவர்கள் முதலில் இந்து மதத்தை தாக்கியாக வேண்டும் என்றார். இந்துவாகத் தன்னை உணர்ந்துகொண்டு அயோத்தி சம்பவத்தைக் கண்டிப்பதாகச் சொல்வது போலியான மதச்சார்பின்மை போக்கையே வலுப்படுத்தும். அயோத்தி சம்பவத்தின் எதிர்விளைவுகள் இனப்பிரச்சனை, மொழிப் பிரச்சனை, சாதிப்பிரச்சனை மாநிலங்களுக்கு அதிகாரம் எனப் பல்வேறாக வெளிப்படுகின்றன இந்தப்போக்கு ஓரிரு ஆண்டுகளில் மேலும் திடப்படும் என்பது நாம் அறிந்ததுதான். உலகெங்கும் பாசிசம் மீண்டும் எழும்பத் தொடங்கியுள்ளதை உணரும் நாம் அதன் இந்தியத் தன்மை எத்தகையது என்பதைப் புரிந்து கொண்டு அதற்கு எதிரான செயல் திட்டங்களை வடிவமைத்தாக வேண்டும். தலித் பிரச்சனையை முன்னெடுப்பது அப்படியான செயல் திட்டம் ஒன்றின் முக்கிய கூறாக இருக்கக்கூடும். அதே மீசையோடுதான் ஹிட்லர் வருவான் என நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் ரதங்களின் கீழே நமது பிணங்கள் மட்டுமே எஞ்சியிருக்கும்.

நிறப்பிரிகை வாசகர்தளம் விரிவடைந்து வருகிறது. இந்த இதழ் 800 பிரதிகள் அச்சிடப்படுகின்றன. பழைய பிரதிகள் மேலதிகமாக வைத்திருப்பவர். அனுப்பி வைக்கலாம். நிறப்பிரிகையில் வெளிவந்த அ.மா.வின் தேசிய இனப்பிரச்சனை பற்றிய கட்டுரை, கூட்டு விவாதம், பாலஸ்தீனம் பற்றிய மொழியாக்கம் ஆகியவற்றை டென்மார்க்கில் உள்ள தமிழர்கள் தனி நூலாக வெளியிட்டு உலகெங்கும் வினியோகித்துள்ளனர். கொழும்பிலிருந்து வெளிவரும் "சரிநிகர்" நி.பி.யில் வந்த கட்டுரைகளை மறுபிரசுரம் செய்ததைத் தெரிவித்திருந்தோம். இப்போது வெளிநாட்டில் வசிக்கும் தமிழர்களால் நடத்தப்படும் "சஞ்சீவி" என்ற இதழ் நிறப்பிரிகையை அறிமுகம் செய்து கட்டுரை யொன்றை வெளியிட்டுள்ளது. O O O

படிப்பகம்